**Test – 1**

**Modern India**

**வரலாறு**

| | | |
|---|---|---|
| **8th History** | **Unit 1.** | ஐரோப்பியர்களின் வருகை |
| | **Unit 2** | வர்த்தகத்திலிருந்து பேரரசு வரை |
| | **Unit 3** | கிராம சமூகமும் வாழ்க்கை முறையும் |
| | **Unit 4** | மக்களின் புரட்சி |
| | **Unit 5** | இந்தியாவில் கல்வி வளர்ச்சி |
| | **Unit 6** | இந்தியாவில் தொழிலகங்களின் வளர்ச்சி |
| | **Unit7** | ஆங்கிலேயர்கள் ஆட்சியில் நகர்ப்புற மாற்றங்கள் |
| | **Unit8** | காலங்கள்தோறும் இந்தியப் பெண்களின் நிலை |
| **10th History** | **Unit 2** | இரு உலகப்போர்களுக்கு இடையில் உலகம் (2.3)- ஆசியாவில் காலனிய எதிர்ப்பியக்கங்களும், காலனிய நீக்கச் செயல்பாடுகளும்: |
| | **Unit 3** | இரண்டாம் உலகப்போர் 3.3 - புதிய பன்னாட்டு ஒழுங்கமைவு: |
| | **Unit 5** | 19ஆம் நூற்றாண்டில் சமூக, சமய சீர்திருத்த இயக்கங்கள |
| | **Unit 6** | ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக தமிழகத்தில் நிகழ்ந்த தொடக்ககால கிளர்ச்சிகள் |
| | **Unit 7** | காலனியத்துக்கு எதிரான இயக்கங்களும் தேசியத்தின் தோற்றமும் |
| | **Unit 8** | தேசியம் காந்திய காலகட்டம் |
| | **Unit 9** | தமிழ்நாட்டில் விடுதலைப் போராட்டம் |
| | **Unit 10** | தமிழ்நாட்டில் சமூக மாற்றங்கள் |

**$8^{ம்}$ வகுப்பு**
**வரலாறு**
**தொகுதி–I**
**ஐரோப்பியர்களின் வருகை**

**அறிமுகம்:**

18 மற்றும் 19ம் நூற்றாண்டுகளில் இந்தியாவிற்கு வருகை புரிந்த பல வெளிநாட்டு பயணிகள், வர்த்தகர்கள், சமய பரப்பாளர்கள் மற்றும் பொதுப்பணி ஊழியர்கள், நாட்டின் பல்வேறு பகுதிகளில்

தாங்கள் பெற்ற அனுபவங்களையும், உணர்வுகளையும் விட்டுச்சென்றுள்ளனர். நவீன கால வரலாற்று நிகழ்வுகளை அறிய சர்வதேச, தேசிய மற்றும் வட்டார அளவில் நமக்கு ஏராளமான ஆதாரங்கள் கிடைக்கின்றன.

**நவீன இந்திய ஆதாரங்கள்:**

நவீன இந்தியாவின் வரலாற்று ஆதாரங்கள் நாட்டின் அரசியல், சமூக – பொருளாதார மற்றும் கலாச்சார முன்னேற்றங்களை பற்றி அறிய நமக்கு உதவுகின்றன. தொடக்க காலத்திலிருந்தே போர்ச்சுக்கீசியர்கள், டச்சுக்காரர்கள், பிரெஞ்சுக்காரர்கள், டேனியர்கள் மற்றும் ஆங்கிலேயர்கள் தங்களுடைய அலுவலக செயல்பாடுகளை தங்களது அரசாங்கப் பதிவேடுகளில் பதிவு செய்துள்ளனர். பராமரிக்கப்பட்ட அவர்களது பதிவுகள் இந்தியாவில் அவர்களது தொடர்பு பற்றி அறிய உதவும் மதிப்பு மிக்க ஆதாரங்களாக உள்ளன. லிஸ்பன், கோவா, பாண்டிச்சேரி மற்றும் சென்னை ஆகிய இடங்களில் உள்ள ஆவணக் காப்பகங்கள் விலை மதிப்பற்ற வரலாற்றுத் தகவல்களின் பெட்டகமாகும்.

**சான்றுகளின் வகைகள்:**

நாம் வரலாற்றை எழுதுவதற்கு எழுதப்பட்ட மற்றும் பயன்பாட்டு பொருள் ஆதாரங்கள் நமக்கு பெரிதும் உதவுகின்றன.

**எழுதப்பட்ட ஆதாரங்கள்:**

அச்சு இயந்திரம் கண்டுபிடிப்பிற்குப் பின் பல்வேறு மொழிகளில் எண்ணற்ற புத்தகங்கள் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டன. இதன் விளைவாக கலை, இலக்கியம், வரலாறு, அறிவியல் போன்ற துறைகளைப் பற்றி மக்கள் எளிதாக அறிய முடிந்தது. இந்தியாவின் ஏராளமான செல்வத்தைப் பற்றி மார்க்கோபோலோ மற்றும் சில வெளிநாட்டுப் பயணிகளின் பயணக் குறிப்புகளிலிருந்து ஐரோப்பியர்கள் அறிந்து கொண்டனர். இக்குறிப்புகள் ஐரோப்பியர்களை இந்தியாவை நோக்கி ஈர்த்தது. தமிழ் வரலாற்றுக் குறிப்பு ஆவணங்களில் முக்கியமாக இருக்க வேண்டிய ஒரு பெயர் ஆனந்தரங்கம்.

இவர் பாண்டிச்சேரி பிரெஞ்சு வர்த்தகத்தில் மொழி பெயர்ப்பாளராக (Dubash) இருந்தார். 1736 லிருந்து 1760 வரை அவர் எழுதிய பிரெஞ்சு இந்திய உறவு முறை பற்றிய அன்றாட நிகழ்வுகளின் குறிப்புகள் அக்காலத்தைப் பற்றி அறிய உதவும் ஒரே எழுதப்பட்ட, சமய சார்பற்ற மதிப்பு மிக்க பதிவாக நமக்குக் கிடைத்துள்ளன. அவரது குறிப்புகள் அரசியல் தீர்வுகளை வெளிப்படையாக விளக்கும் வரலாற்றாதாரமாக உள்ளன. எழுதப்பட்ட ஆதாரங்கள் என்பவை இலக்கியங்கள், பயணக்குறிப்புகள், நாட்குறிப்புகள், சுயசரிதை, துண்டு பிரசுரங்கள், அரசாங்க ஆவணங்கள் மற்றும் கையெழுத்துப் பிரதிகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

**ஆவணக்காப்பகங்கள்:**

வரலாற்று ஆவணங்கள் பாதுகாக்கப்படும் இடம் ஆவணக்காப்பகம் என்று அழைக்கப்படுகிறது. இந்திய தேசிய ஆவணக்காப்பகம் (NAI) புதுடெல்லியில் அமைந்துள்ளது. இது இந்திய அரசின் ஆவணங்களைப் பாதுகாக்கும் முதன்மைக் காப்பகமாகும். இது கடந்த கால நிர்வாக முறைகளைப் புரிந்து கொள்வதற்கான அனைத்துத் தகவல்களுடன் தற்கால மற்றும் எதிர்கால தலைமுறையினருக்கும் ஒரு வழிகாட்டியாக இது விளங்குகிறது. இந்தியாவின் அரசியல், சமூக, பொருளாதார, கலாச்சார மற்றும் அறிவியல் ரீதியான வாழ்க்கை மற்றும் மக்கள் நடவடிக்கைகள் குறித்து தெரிந்து கொள்வதற்கான உண்மையான சான்றுகள் இதில் அடங்கியுள்ளன. இது ஆசியாவில் உள்ள ஆவணக்காப்பகங்களிலேயே மிகவும் பெரியதாகும்.

| |
|---|
| ஜார்ஜ் வில்லியம் பாரஸ்ட் என்பவர் இந்திய தேசிய ஆவணக்காப்பகத்தின் தந்தை என அழைக்கப்படுகிறார். |

**தமிழ்நாடு ஆவணக்காப்பகம்:**

தற்போது தமிழ்நாடு ஆவணக்காப்பகம் என்று அழைக்கப்படும் “சென்னை பதிப்பாசனம்“ சென்னையில் அமைந்துள்ளது. இது தென்னிந்தியாவின் மிகப் பழமையான மற்றும் மிகப்பெரிய களஞ்சியங்களுள் ஒன்றாகும். அங்குள்ள பெரும்பாலான ஆவணங்கள் ஆங்கிலத்தில் உள்ளன. மேலும் அங்கு டச்சு, டேனிஷ், பாரசீக, மராத்திய நிர்வாக பதிவுகளின் தொகுப்புகள் பிரெஞ்சு, போர்ச்சுக்கீசிய, தமிழ், உருது போன்ற மொழிகளிள் உள்ன.

தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் 1642ம் ஆண்டு டச்சு பதிவுகளின் தொகுப்புகள் உள்ளன. இது கொச்சி மற்றும் சோழமண்டல கடற்கரையில் உள்ள இடங்களுடன் தொடர்புடையது. இந்த பதிவுகள் 1657 – 1845 காலப் பகுதியை உள்ளடக்கியது. டேனிஷ் பதிவுகள் 1777 – 1845 காலப்பகுதியை உள்ளடக்கியது. டாட்வெல் என்பவரின் பெரும் முயற்சியால் 1917 ஆம் ஆண்ட “சென்னை நாட்குறிப்பு பதிவுகள்“ வெளியிடப்பட்டது. வரலாற்று ஆராய்ச்சியை ஊக்குவிப்பதில் அவருக்கு இருந்த மிகுந்த ஆர்வத்தைக் இது காட்டுகிறது. தமிழ்நாடு ஆவணக்காப்பக வரலாற்றின் ஒரு புதிய அத்தியாயத்தை அவர் தொடங்கி வைத்தார்.

**பயன்பாட்டு பொருள் ஆதாரங்கள்:**

பல ஓவியங்கள் மற்றும் சிலைகள் நவீன இந்திய வரலாற்றின் முதன்மை ஆதாரங்களாக உள்ளன. அவை தேசியத் தலைவர்களின் சாதனைகளையும், வரலாற்றுப் பிரமுகர்கள் பற்றிய தகவல்களையும் நமக்கு நிறைய தருகின்றன. இந்தியக் கட்டடக் கலையின் கலை அம்சம் மற்றும் தொழில்நுட்பத்தின் சான்றாக புனித பிரான்சிஸ் ஆலயம் (கொச்சி), புனித லூயிஸ் கோட்டை (பாண்டிச்சேரி), புனித ஜார்ஜ் கோட்டை (சென்னை), புனித டேவிட் கோட்டை (கடலூர்), இந்தியா கேட், டெல்லி பாராளுமன்றம், குடியரசுத் தலைவர் மாளிகை ஆகியன உள்ளன. சமய, கலாச்சார, வரலாற்று மதிப்பு மிக்க மற்ற பொருள் மூலங்கள் சேகரிக்கப்பட்டு அவை அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்படுகின்றன. இந்த அருங்காட்சியகங்கள் நமது கலாச்சாரத்தைப் பாதுகாத்து மேம்படுத்த உதவுகின்றன. டெல்லியிலுள்ள மிகப்பெரிய அருங்காட்சியகம் இந்தியாவின் மிகப்பெரும் தேசிய அருங்காட்சியகமாகும். இது 1949 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

நிர்வாக வரலாற்றை அறிய ஒரு சிறந்த ஆதாரமாக நாணயங்கள் திகழ்கின்றன. நவீன இந்தியாவின் முதல் நாணயம் கி.பி. 1862 ஆம் ஆண்டில் ஆங்கிலேய ஆட்சியில் வெளியிடப்பட்டது. இராணி விக்டோரியாவுக்குப் பிறகு அரியணை ஏறிய மன்னர் ஏழாம் எட்வர்டு, தனது உருவம் தாங்கிய நாணயத்தை வெளியிட்டார். ரிசர்வ் வங்கி 1935 ல் முறையாக நிறுவப்பட்டு இந்திய அரசின் ரூபாய் நோட்டுக்களை வெளியிடும் அதிகாரத்தைப் பெற்றது. மன்னர் ஆறாம் ஜார்ஜ் உருவம் தாங்கிய இந்தியாவின் முதல் 5 ரூபாய் நோட்டு ஜனவரி, 1938 ல் ரிசர்வ் வங்கியால் வெளியிடப்பட்டது.

| |
|---|
| 1690 ல் புனித டேவிட் கோட்டை ஆங்கிலேயரால் கடலூரில் கட்டப்பட்து |

**ஐரோப்பியர்கள் வருகை:**

கி.பி. (பொ.ஆ) 1453 துருக்கியர்களால் கான்ஸ்டாண்டிநோபிள் என்ற பகுதி கைப்பற்றப்பட்ட பிறகு இந்தியாவிற்கும், ஐரோப்பாவிற்குமிடையிலான நிலவழி மூடப்பட்டது. துருக்கி வட ஆப்பிரிக்காவிலும், பால்கன் தீபகற்பத்திலும் நுழைந்தது. இது ஐரோப்பிய நாடுகளை கிழக்கு நாடுகளுக்குப் புதிய கடல் வழியைக் கண்டுபிடிக்கத் தூண்டியது.

**போர்ச்சுக்கல்:**

ஐரோப்பிய நாடுகள் அனைத்திலும், போர்ச்சுக்கல் மட்டும் இந்தியாவிற்கு புதிய கடல் வழியைக் கண்டுபிடிப்பதில் மிகவும் ஆர்வமாக இருந்தது. போர்ச்சுக்கீசிய இளவரசர் ஹென்றி பொதுவாக ”மாலுமி ஹென்றி” என அறியப்படுகிறார். அவர் உலகின் அறியப்படாத பகுதிகளை ஆராயவும், சாகச வாழ்க்கையை மேற்கொள்ளவும் தனது நாட்டு மக்களை ஊக்குவித்தார். 1487 ஆம் ஆண்டு போர்ச்சுக்கீசிய மாலுமியான பார்த்தலோமியோ டயஸ் தென்னாப்பிரிக்காவின் தெற்கு முனையை அடைந்தார். மன்னர் இரண்டாம் ஜான் அவரை ஆதரித்தார்.

**வாஸ்கோடகாமா:**

வாஸ்கோடகாமா தென்னாப்பிரிக்காவின் தெற்கு முனையை அடைந்து, அங்கிருந்து மொசாம்பிக் பகுதிக்குத் தனது பயணத்தைத் தொடர்ந்தார். பின்னர் இந்திய மாலுமி ஒருவரின் உதவியோடு கி.பி (பொ.ஆ) 1498 ல் வாஸ்கோடாகாமா கள்ளிக்கோட்டையை அடைந்தார். அவரை மன்னர் சாமரின் வரவேற்றார். இரண்டாவது போர்ச்சுகீசிய மாலுமி பெட்ரோ அல்வாரிஸ் காப்ரல் என்பவர் வாஸ்கோடகாமாவின் கடல் வழியைப் பின்பற்றி 13 கப்பல்களில் சில 100 வீரர்களுடன் 1500 ஆம் ஆண்டு கள்ளிக்கோட்டையை வந்தடைந்தார்.

வாஸ்கோடமாகா 1501 ல் இருபது கப்பல்களுடன் இரண்டாவது முறையாக இந்தியா வந்தடைந்தார். அப்பொழுது கண்ணுனூரில் ஒரு வர்த்தக மையத்தை நிறுவினார். பின்னர் கள்ளிக்கோட்டை, கொச்சின் பகுதிகளிலும் வர்த்தக மையத்தை நிறுவினார். இதனால் கோபங்கொண்ட மன்னர் சாமரின் போர்ச்சுக்கீசியரைத் தாக்கினார். ஆனால் அவர் போர்ச்சுக்கீசிரியரால் தோற்கடிக்கப்பட்டார். பின்னர் கொச்சின் போர்ச்சுக்கீசிய கிழக்கிந்திய கம்பெனியின் முதல் தலைநகரமாயிற்று. 1524 ல் வாஸ்கோடகாமா மூன்றாவது முறையாக இந்தியா வந்தபொழுது நோய்வாய்ப்பட்டு டிசம்பர் 1524ல் கொச்சியில் காலமானார்.

**பிரான்சிஸ்கோ-டி-அல்மெய்டா (1505 – 1509):**

பிரான்சிஸ்கோ-டி-அல்மெய்டா என்பவர் இந்தியாவிலிருந்து போர்ச்சுக்கீசிய பகுதிகளுக்கு 1505ல் அனுப்பப்பட்ட முதல் ஆளுநர் ஆவார். இந்தியாவில் போர்ச்சுக்கீசிய கப்பற்படையை பலப்படுத்துவதே அல்மெய்டாவின் நோக்கமாக இருந்தது. அதற்காக அவர் பின்பற்றிய கொள்கை "நீலநீர்க்கொள்கை" எனப்பட்டது. இந்தியப் பெருங்கடலில் அரேபிய ஏகபோக வர்த்தகத்தை போர்ச்சுகீசியர் தகர்க்க முன்றபோது அது எதிர்மறையாக துருக்கி மற்றும் எகிப்தை பாதித்தது. பிஜப்பூர் மற்றும் குஜராத் சுல்தான்கள் போர்ச்சுகீசியருக்கு எதிராக, எகிப்து மற்றும் துருக்கி சுல்தான்களுக்கு ஆதரவளித்தனர். இதனால் துறைமுகங்களின் கட்டுப்பாட்டை விரிவுபடுத்துவது குறித்தும் போர்ச்சுகீசியர் கவலை அடைந்தனர். இந்நிலையில் சாவலுக்கு அருகில் நடைபெற்ற கடற்படை போரில் முஸ்லீம் கூட்டுப்படைகள் போர்ச்சுகீசியரைத் தோற்கடித்தன. இப்போரில் அல்மெய்டாவின் மகன் கொல்லப்பட்டான். பின்னர் டையூவில் நடைபெற்ற கடற்போரில் அல்மெய்டா, முஸ்லீம் கூட்டுப் படைகளைத் தோற்கடித்தார். கி.பி. 1509ல் போர்ச்சுக்கீசியர் ஆசியாவில் கடற்படை மேலாண்மையைக் கோரினர்.

**அல்போன்சோ-டி-அல்புகர்க் (1509 – 1515)**

இந்தியாவில் போர்ச்சுக்கீசிய அதிகாரத்தை உண்மையில் நிறுவியவர் அல்போன்சோ-டி-அல்புகர்க் ஆவார். அவர் பீஜப்பூர் சுல்தானிடமிருந்து நவம்பர் 1510 ல் கோவாவைக் கைப்பற்றினார். 1515ல் பாரசீக வளைகுடாவில் உள்ள ஆர்மஸ் துறைமுகப் பகுதியில் போர்ச்சுக்கீசிய அதிகாரத்தை விரிவுபடுத்தினார். அல்போன்சோ-டி-அல்புகர்க் இந்தியப் பெண்களுடனான போர்ச்சுகீசிய திருமணங்களை ஊக்குவித்தார். மேலும் விஜயநகரப் பேரரசுடன் நட்புறவை மேற்கொண்டார்.

**நினோ-டி-குன்கா (1529-1538)**

அல்புகர்க்குவிற்குப் பிறகு கவர்னரான நினோ-டி-குன்கா 1530 ல் தலைநகரை கொச்சியிலிருந்து கோவாவிற்கு மாற்றினார். 1534ல் குஜராத்தின் பகதூர்ஷாவிடமிருந்து பசீன் பகுதியைக் கைப்பற்றினார். மேலும் 1537ல் டையூவைக் கைப்பற்றினார். பின்னர் குஜராத்தின் உள்ளூர்த் தலைவர்களிடமிருந்து டாமனைக் கைப்பற்றிய பின் சால்செட்டை 1548ல் ஆக்கிரமித்தார்.

இவ்வாறு போர்ச்சுக்கீசியர் 16ஆம் நூற்றாண்டில் இந்தியாவின் மேற்கு கடற்கரையில் கோவா, டையூ, டாமன், சால்செட், பசீன், சௌல் மற்றும் பம்பாய் போன்ற பகுதிகளைக் கைப்பற்றுவதில் வெற்றி பெற்றனர். வங்காள கடற்கரையில் ஹுக்ளி, சென்னை கடற்கரையில் சாந்தோம் போன்ற பகுதிகளைக் கைப்பற்றினர். போர்ச்சுக்கீசியர் இந்தியாவில் புகையிலை சாகுபடியை அறிமுகப்படுத்தினர். போர்ச்சுக்கீசியரின் செல்வாக்கினால் கத்தோலிக்க கிறித்துவம் இந்தியாவின் கிழக்கு, மேற்கு கடற்கரையோர சில பகுதிகளில் பரவியது. 1556ல் போர்ச்சுக்கீசியரால் கோவாவில் அச்சு இயந்திரம் அமைக்கப்பட்டது. அச்சு இயந்திரத்தின் உதவியால் ஓர் ஐரோப்பிய எழுத்தாளர் 1563 ல் கோவாவில் "இந்திய மருத்துவ தாவரங்கள்" என்ற நூலை அச்சிட்டு வெளியிட்டார். 17 ஆம்

நூற்றாண்டில் போர்ச்சுக்கீசிய அதிகாரம் படிப்படியாக டச்சுவிடம் வீழ்ச்சியடைந்தது. மேலும் 1739 ஆம் ஆண்டில் போர்ச்சுக்கீசிய அதிகாரம் கோவா, டையூ, டாமன் ஆகியவற்றோடு நின்று போனது.

**டச்சுக்காரர்கள்**

போர்ச்சுக்கீசியர்களைத் தொடர்ந்து டச்சுக்காரர்கள் இந்தியாவிற்கு வருகை புரிந்தனர். 1602 ல் நெதர்லாந்து ஐக்கிய கிழக்கிந்திய கம்பெனி என்ற நிறுவனம் தொடங்கப்பட்டு, கிழக்கிந்திய நாடுகளில் வர்த்தகம் செய்ய அரசிடமிருந்து அனுமதியும் பெற்றது. டச்சுக்காரர்கள் இந்தியாவிற்கு வந்த பிறகு அவர்களின் வர்த்தக மையத்தை மசூலிப்பட்டினம் என்ற இடத்தில் நிறுவினர். பின்னர் கி.பி. 1605ல் போர்ச்சுக்கீசியரிடமிருந்து அம்பாய்னாவை கைப்பற்றி இந்தோனேசியா தீவில் (Spice island) ஆதிக்கத்தை நிலை நிறுத்தினர். மேலும் போர்ச்சுக்கீசியரிடமிருந்து நாகப்பட்டினத்தைக் கைப்பற்றி, தென்னிந்தியாவில் தங்களை வலிமைப்படுத்திக் கொண்டனர். ஆரம்பத்தில் பழவேற்காடு (Pulicat) டச்சுக்காரர்களின் தலைநகராக இருந்தது. பின்னர் 1690ல் பழவேற்காட்டிலிருந்து தலைநகரை நாகப்பட்டினத்திற்கு மாற்றிக் கொண்டனர். இந்தியப் பொருட்களான பட்டு, பருத்தி, இண்டிகோ, அரிசி மற்றும் அபினி ஆகியவை டச்சுக்காரர்கள் வர்த்தகம் செய்த பொருட்களாகும். கருப்பு மிளகு மற்றும் மற்ற நறுமணப் பொருட்கள் மீதான வியாபாரத்தில் அவர்கள் ஏகபோக உரிமை பெற்றிருந்தனர். இந்தியாவில் பழவேற்காடு, சூரத், சின்சுரா, காசிம்பஜார், பாட்னா, நாகப்பட்டினம், பாலசோர் மற்றும் கொச்சின் போன்ற இடங்களில் அவர்களது முக்கிய வர்த்தக மையங்கள் இருந்தன.

ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி 17ஆம் நூற்றாண்டு முழுவதும், டச்சு மற்றும் போர்ச்சுக்கீசியர்களுக்குப் போட்டியாக இருந்தது. இந்நிலையில் 1623 ல் டச்சுக்காரர்கள் அம்பாய்னாவில் பத்து ஆங்கில வியாபாரிகள் மற்றும் ஒன்பது ஜப்பானியர்களை இரக்கமின்றி கொன்றனர். இந்நிகழ்வு டச்சு மற்றும் ஆங்கிலேயர்களிடையே மேலும் பகைமையை வளர்த்தது. 1759ல் நடைபெற்ற பெடரா போரில் ஆங்கிலேயர்கள், டச்சுக்காரர்களைத் தோற்கடித்தனர். தொடர்ந்து டச்சு இறுதி வீழ்ச்சியை எட்டியது. ஒன்றன் பின் ஒன்றாக தனது குடியேற்றங்களை ஆங்கிலேயரிடம் இழந்த டச்சு க1795ல் முழுமையாக ஆங்கிலேயரிடம் ஒப்படைத்தது.

**தமிழ்நாட்டில் டச்சுக்காரர்கள்:**

1502 முதல் பழவேற்காட்டின் மீது கட்டுப்பாட்டை ஏற்படுத்திய போர்ச்சுக்கீசியர்கள் டச்சுக்காரர்களால் தங்களின் ஆதிக்கத்தை இழந்தனர். பழவேற்காட்டில் டச்சுக்காரர்கள் 1613 ல் கெல்டிரியா கோட்டையைக் கட்டினர். இந்தக் கோட்டை ஒரு காலத்தில் டச்சு அதிகார மையத்தின் இருப்பிடமாக இருந்தது.

அக்காலத்தில் பழவேற்காட்டிலிருந்து வைரங்கள் மேற்கத்திய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. நாகப்பட்டினம், புன்னக்காயல், பரங்கிப்பேட்டை (Porto Novo) கடலூர் மற்றும் தேவனாம்பட்டினம் ஆகியன டச்சுக்காரர்களின் கோட்டைகள் மற்றும் கைப்பற்றிய பகுதிகளாகும்.

**ஆங்கிலேயர்கள்:**

இங்கிலாந்து இராணி எலிசபெத் கிழக்கிந்திய நாடுகளுடன் வர்த்தகம் செய்ய கவர்னர் மற்றும் லண்டன் வர்த்தகர்கள் நிறுவனத்திற:கு 1600 டிசம்பர் 31 அன்று ஒரு அனுமதிப் பட்டயம் வழங்கினார். அந்த நிறுவனம் (கம்பெனி) ஒரு கவர்னர் மற்றும் 24 இயக்குநர்களைக் கொண்டிருந்தது. 1608 ஆம் ஆண்டு ஜஹாங்கீர் அவைக்கு மாலுமி வில்லியம் ஹாக்கின்ஸ் சில சலுகைகளைப் பெற அனுப்பிவைக்கப்பட்டார். அவர் சூரத் நகரில் ஓர் வணிக மையத்தை அமைக்க அனுமதி கோரினார். ஆனால் போர்ச்சுக்கீசிய தலையீட்டால் ஜஹாங்கீர் அனுமதி வழங்கவில்லை. ஆகையால் வில்லியம் ஹாக்கின்ஸ் ஏமாற்றத்துடன் இங்கிலாந்து திரும்பினார். இந்நிலையில் சூரத்து அருகே நடைபெற்ற கடற்போரில் ஆங்கிலத் தளபதி தாமஸ் பெஸ்ட், போர்ச்சுக்கீசிய கடற்படையைத் தோற்கடித்தார். இதனால் மகிழ்ச்சியடைந்த பேரரசர் ஜஹாங்கீர், 1613 ல் சூரத்தில் ஆங்கில வர்த்தக மையத்தை அமைக்க அனுமதித்தார். இது ஆரம்பத்தில் ஆங்கிலேயரின் தலைமையகமாக இருந்தது. இந்நிலையில் 1614ல் கேப்டன் நிக்கோலஸ் டவுண்டன், போர்ச்சுக்கீசியரை வென்றார். இந்த சம்பவங்கள் முகலாயர் அவையில் ஆங்கிலேயரின் கௌரவத்தை அதிகரித்தன. 1615 ல் ஜஹாங்கீர்

அவைக்கு இங்கிலாந்து மன்னர் ஜேம்ஸ் அவர்களால் சர் தாமஸ் ரோ அனுப்பிவைக்கப்பட்டார். அவர் ஆக்ராவில் மூன்றாண்டுகள் தங்கி இருந்தார். மூன்றாம் ஆண்டு இறுதியில் பேரரசர் ஜஹாங்கீரிடம் இந்தியாவில் வணிகம் செய்யும் உரிமையைப் பெற்றார். உரிமையைப் பெற்ற சர் தாமஸ் ரோ புறப்படும் முன் ஆக்ரா, அகமதபாத் மற்றும் புரோச் ஆகிய இடங்களில் வணிக மையங்களை நிறுவினார்.

ஆங்கிலேயர்கள் தங்களது முதல் வணிக மையத்தை வங்காள விரிகுடா கடற்கரையில் உள்ள மசூலிப்பட்டினத்தில் 1611ல் நிறுவினர். இது கோல்கொண்டா அரசின் ஒரு முக்கிய துறைமுகமாகும். 1639ல் பிரான்சிஸ் டே என்ற ஆங்கில வணிகர், சந்திரகிரி மன்னரான சென்னப்ப நாயக்கர் என்பவரிடமிருந்து மெட்ராசை குத்தகைக்குப் பெற்றார். அங்கு ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி புனித ஜார்ஜ் கோட்டை என அழைக்கப்படும் தனது புகழ்வாய்ந்த வணிக மையத்தை நிறுவியது. இது ஆங்கிலேயரால் கட்டப்பட்ட முதல் கோட்டையாகவும், கிழக்குப் பகுதி முழுமைக்குமான தலைமையிடமாகவும் விளங்கியது.

இங்கிலாந்து மன்னர் இரண்டாம் சார்லஸ், போர்ச்சுக்கீசிய இளவரசி காதரினை திருமணம் செய்து கொண்டார். திருமண சீராக பம்பாய் தீவை போர்ச்சுக்கீசிய மன்னரிடமிருந்து பெற்றார். 1668 ல் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி ஆண்டுகள் 10 பவுண்டுகள் குத்தகை கொடுத்து பம்பாய் தீவை மன்னர் இரண்டாம் சார்லசிடமிருந்து பெற்றது.

1690 ஆம் ஆண்டு சுதாநுதி என்ற இடத்தில் ஜாப் சார்னாக் என்பவரால் ஒரு வர்த்தக மையம் நிறுவப்பட்டது. சுதாநுதி, காளிகட்டம் மற்றும் கோவிந்தபூர் ஆகிய மூன்று கிராமங்களின் ஜமீன்தாரி உரிமையை 1698 ல் கிழக்கிந்திய கம்பெனி பெற்றது. இந்த மூன்று கிராமங்கள் பின்னாளில் கல்கத்தா நகரமாக வளர்ச்சி பெற்றது. 1696 ல் சுதாநுதியில் வலுவான ஒரு கோட்டை கட்டப்பட்டது. அது 1700 ல் வில்லியம் கோட்டை என அழைக்கப்பட்டது.

1757 ல் பிளாசி போர் மற்றும் 1764 பக்சார் போருக்குப் பிறகு ஆங்கில கிழக்கிந்தியக் கம்பெனி ஓர் அரசியல் சக்தியாக மாறியது. இந்தியா 1858 வரை ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி ஆட்சியின் கீழ் இருந்தது. 1858 க்குப் பிறகு இந்தியா ஆங்கில அரசின் நேரடி கட்டுப்பாட்டின் கீழ் வந்தது.

**டேனியர்கள்:**

டென்மார்க் அரசர் நான்காம் கிரிஸ்டியன் 1616 மார்ச் 17ல் ஒரு பட்டயத்தை வெளியிட்டு டேனிஷ் கிழக்கிந்திய நிறுவனத்தை உருவாக்கினார். அவர்கள் 1620 ல் தரங்கம்பாடி (தமிழ்நாடு), 1676 ல் செராம்பூர் (வங்காளம்) ஆகிய இடங்களில் குடியேற்றங்களை நிறுவினர். செராம்பூர், டேனியர்களின் இந்தியத் தலைமையிடமாக இருந்தது. டேனியர்கள் இந்தியாவில் தங்களைப் பலப்படுத்திக் கொள்ளத் தவறி விட்டனர். எனவே 1845ல் டேனியர்கள் இந்தியாவிலிருந்த தங்கள் குடியேற்றங்கள் அனைத்தையும் ஆங்கில அரசுக்கு விற்றனர்.

| |
|---|
| தரங்கம்பாடியை டேனியர்கள் டானஸ்பெர்க் என அழைத்தனர். சீகன்பால்கு என்பவரை டென்மார்க்கின் அரசர் இந்தியாவிற்கு அனுப்பினார். அவர் தரங்கம்பாடியில் ஒரு அச்சுக் கூடத்தை நிறுவினார். |

**பிரெஞ்சு கால்பர்ட்**

பிரெஞ்சு கிழக்கிந்திய நிறுவனம், மன்னர் பதினான்காம் லூயியின் அமைச்சரான கால்பர்ட் என்பவரால் 1664ல் உருவாக்கப்பட்டது. 1667 ல் பிரான்காய்ஸ் கரோன் தலைமையின் கீழ் ஒரு குழு இந்தியாவிற்கு பயணம் மேற்கொண்டது. வியாபாரத்திற்காக இந்தியாவிற்கு வருகை தந்த ஐரோப்பிய நாடுகளுள் கடைசி ஐரோப்பிய நாடு பிரான்சு ஆகும். இந்தியாவில் முதல் பிரெஞ்சு வணிக மையத்தை கரோன் என்பவர் சூரத் நகரில் நிறுவினார். 1669-ல் மார்காரா என்பவர் கோல்கொண்டா சுல்தானில் அனுமதி பெற்று பிரான்சின் இரண்டாவது வர்த்தக மையத்தை மசூலிப்பட்டினத்தில் நிறுவினார்.

1673 ல் பிஜப்பூர் ஆட்சியாளர் ஷெர்கான் லோடிக்கு வழங்கப்பட்ட மானியத்தின் கீழ், மார்ட்டின் என்பவர் பாண்டிச்சேரியில் குடியேற்றத்தை நிறுவினார். பாண்டிச்சேரி இந்தியாவின் மிக முக்கியமான மற்றும் வளமான பிரெஞ்சு குடியேற்றமானது. பாண்டிச்சேரியில் செயின்ட் லூயிஸ் எனப்படும் கோட்டைய பிரான்காய்ஸ் மாட்டின் கட்டினார். வங்காளத்தின் முகலாய ஆளுநரான செயிஸ்டகானின் அனுமதி பெற்று 1673ல் பிரெஞ்சு கிழக்கிந்திய கம்பெனி கல்கத்தாவுக்கு அருகே சந்திரநாகூர் என்ற நகரை நிர்மாணித்தது. பிரெஞ்சு கிழக்கிந்திய நிறுவனம் இந்தியாவில் பல்வேறு இடங்களில் வர்த்தக மையங்களை நிறுவியது. குறிப்பாக கடலோரப் பகுதிகளான மாஹி, காரைக்கால், பாலசோர் மற்றும் காசிம் பசார் போன்ற இடங்கள் முக்கியமானவையாகும்.

1742 ல் பிரெஞ்சு கிழக்கிந்திய கம்பெனியின் ஆளுநராக ஜோசப் பிராங்காய்ஸ் டியூப்ளே என்பவர் நியமனம் செய்யப்பட்டார். அவரது நியமனத்தின் மூலம் பிரெஞ்சு அதிகாரம் மேலும் பலப்படுத்தப்பட்டது. அவருக்குப் பின் பாண்டிச்சேரியின் பிரெஞ்சு ஆளுநராக டூமாஸ் அனுப்பப்பட்டார்.

தூரக்கிழக்கு நாடுகளுடன் வணிகம் செய்யும் நோக்கில் 1731ல் ஜோதன்பர்க் என்பவர் சுவீடன் கிழக்கிந்திய கம்பெனியை நிறுவினார். டச்சு கிழக்கிந்திய கம்பெனி மற்றும் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியின் வெற்றி சுவீடன் கிழக்கிந்திய கம்பெனியின் தோற்றத்திற்கு ஊக்குவிப்பாக இருந்தது.

**முடிவுரை:**

போர்ச்சுக்கீசியர்கள் டச்சுக்காரர்களால் முறியடிக்கப்பட்ட பின்னர் ஆங்கிலேயரால் வெளியேற்றப்பட்டனர். அதன்பின் இந்தியாவில் பிரெஞ்சுக்காரர்கள், வர்த்தகம் மற்றும் அரசியல் ஆதிக்கப் போட்டியில் ஆங்கிலேயரை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. பிரெஞ்சுக்காரர்கள் வர்த்தகத்தைப் புறக்கணித்து இந்தியா மற்றும் பிற ஐரோப்பிய நாடுகளுடன் போரில் ஈடுபட்டனர். அதன் விளைவாக ஆங்கிலேயருடன் நடைபெற்ற மூன்று கர்நாடகப் போர்களும் பிரான்சை நலிவடையச் செய்தன. இது ஆங்கிலேயரின் பிராந்திய விரிவாக்கத்திற்கு புத்தெழுச்சியைக் கொடுத்தது. போர்ச்சுக்கீசியர்கள் டச்சு, டேனிஷ் மற்றும் பிரெஞ்சு ஆகியவற்றின் மீதான ஆங்கிலேயரின் வெற்றிக்கு ஆங்கிலேயரின் வணிக ரீதியான போட்டி, உயர்ந்த தியாகம், அரசின் ஆதரவு, கடற்படை மேலாதிக்கம், தேசிய தன்மை, மற்றும் ஐரோப்பாவில் அவர்களின் அதிகாரம் ஆகியன காரணமாயின.

அலகு – 2

## வர்த்தகத்திலிருந்து பேரரசு வரை

**அறிமுகம்:**

15ஆம் நூற்றாண்டில் நிலவழியாகவும், கடல் வழியாகவும் புதிய நிலவியல் கண்டுபிடிப்புகளின் சகாப்தமாக ஐரோப்பா விளங்கியது. 1498 ஆம் ஆண்டு போர்ச்சுகல் நாட்டைச் சேர்ந்த மாலுமி வாஸ்கோடகாமா ஐரோப்பாவிலிருந்து இந்தியா வருவதற்கான புதிய கடல் வழியை கண்டுபிடித்தார். இத்தகைய புதிய நிலவியல் கண்டுபிடிப்புகளின் முக்கிய நோக்கம் வணிகத்தின் மூலம் அதிக லாபம் பெறுவதும் மற்றும் அரசியல் ஆதிக்கத்தை ஏற்படுத்துவதும் ஆகும். வங்காளத்தின் வெற்றிக்குப் பின் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியின் ஆட்சி இந்தியாவில் வலுவடைந்தது. இதன் முக்கிய நோக்கம் வணிகம் மற்றும் ஆட்சி அதிகாரத்தை விரிவுபடுத்துவதே ஆகும்.

**ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியின் ஆட்சி நிறுவப்படுதல்:**

**பிளாசிப் போர் (1757)**

வங்காள நவாப் அலிவர்திகான் 1756ல் இறந்த பின்பு அவரது பேரன் சிராஜ்-உத்-தௌலா வங்காளத்தின் அரியணை ஏறினார். சிராஜ்-உத்-தௌலாவின் பலவீனத்தையும், புகழ்பெற்ற நிலையையும் தனக்கு சாதகமாக்கிய ஆங்கிலேயர்கள் அவரது அதிகாரத்தை கைப்பற்ற முனைந்தனர். ஆங்கிலேயரின் இவ்வெண்ணத்தை புரிந்துகொண்ட சிராஜ்-உத்-தௌலா அவர்களுக்கு பாடம் புகட்ட எண்ணினார். கல்கத்தாவிலுள்ள அவர்களது குடியேற்ற பகுதிகள் மீது தாக்குதல் நடத்தி, வங்காளத்தின் காசிம் பஜாரில் அமைந்துள்ள வணிக மையத்தை கைப்பற்றினார். 1756 ஜுன் 20 அன்று ஆங்கிலேயரின் வில்லியம் கோட்டை நவாப்பிடம் சரணடைந்தது. ஆனால் ஆங்கிலப் படைத்தளபதி ராபர்ட் கிளைவ் கல்கத்தாவை மீட்டார்.

**இருட்டறை துயரச் சம்பவம் (1756)**
சிராஜ்-உத்-தௌலாவின் படை வீரர்கள் 146 ஆங்கிலேயர்களை சிறைப்பிடித்து கல்கத்தாவின் வில்லியம் கோட்டையில் காற்று புகாத ஒரு சிறிய இருட்டறையில் ஓர் இரவு முழுவதும் அடைத்து வைத்திருந்தனர். மறுநாள் காலை அறையை திறந்தபோது அவர்களுள் 123 பேர் மூச்சு திணறி இறந்திருந்தனர். இது வரலாற்றில் “இருட்டறை துயரச் சம்பவம்“ என்றழைக்கப்படுகிறது.

இறுதியாக, 1757 பிப்ரவரி 9ஆம் நாள் நடைபெற்ற அலிநகர் உடன்படிக்கையின் படி சிராஜ்-உத்-தௌலா, இராபர்ட் கிளைவின் நிபந்தனைகள் அனைத்தையும் ஏற்றார். பின்னர் மார்ச் 1757ல் பிரெஞ்சுக் குடியேற்றமான சந்திர நாகூரை ஆங்கிலேயர் கைப்பற்றினர். பிளாசிப் போரானது சிராஜ்-உத்-தௌலா, பிரெஞ்சுக் கூட்டணிக்கும் மற்றும் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனிக்கும் இடையே 1757 ஜூன் 23 ஆம் நாள் நடைபெற்றது. இப்போரில் சிராஜ்-உத்-தௌலாவின் படைகளை இராபர்ட் கிளைவ் தலைமையிலான ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியின் படைகள் தோற்கடித்தன. இப்போரின் முடிவில் ஏற்பட்ட குழப்பத்தால் கம்பெனி வங்காள கருவூலத்தின் மூலம் கிடைக்க பெரும் செல்வத்தைக் கொண்டு இராணுவத்தை பலப்படுத்தியது. பிளாசிப் போர் வெற்றி ஆங்கிலேயரது அரசியல் அதிகாரத்தை இந்தியாவில் தொடங்கிவைத்தது மட்டுமல்லாமல் அடுத்த இரண்டு நூற்றாண்டுகளுக்கு அவர்களது ஆதிக்கத்தை நீடிக்கவும் செய்தது.

**பக்சார் போர் (1764)**

1757 ஆம் ஆண்டு பிளாசிப் போருக்குப் பின் வங்காளம், பீகார், ஒரிசா ஆகிய பகுதிகளில் ஆங்கிலேயர்கள் தடையில்லா வணிக உரிமை பெற்றனர். வங்காளத்தின் 24 பார்கானா எனும் பகுதியை அங்கிலேயர் பெற்றனர். பிளாசிப் போருக்கு பின் வங்காளத்தின் அரியணை ஏறிய மீர்ஜாபர் (1757 – 1760) ஆங்கிலேயர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற தவறியதால் அவரை கட்டாயப்படுத்தி பதவியிலிருந்து நீக்கி விட்டு அவரது மருமகன் மீர்காசிம் என்பவரை வங்காள நவாப் ஆக்கினர்.

மீர்காசிம் ஆங்கிலேயருக்கு பூர்த்வான், மிட்னாபூர், சிட்டகாங் ஆகிய பகுதிகளை வழங்கினார். அவர் வங்காளத்தின் தலைநகரை மூர்ஷிதாபாத்திலிருந்து மாங்கீர்க்கு மாற்றினார். தஸ்தக் என்றழைக்கப்படும் சுங்கவரி விலக்கு ஆணையை தவறாக பயன்படுத்திய ஆங்கிலேயர் மீது மீர்காசிம் கோபடைந்து கலகத்தில் ஈடுபட்டார். ஆங்கிலேயரால் தோற்கடிக்கப்பட்ட அவர் அயோத்திக்கு தப்பி ஓடி அடைக்கலம் புகுந்து அங்கு சுஜா-உத்-தௌலா மற்றும் இரண்டாம் ஷா ஆலம் ஆகியோருடன் சேர்ந்து ஆங்கிலேயருக்கு எதிராக ஒரு கூட்டமைப்பை உருவாக்கினார்.


பீகார் பகுதியின் பாட்னாவிற்கு மேற்கே 130 கி.மீ தொலைவில் கங்கை நதிக்கரையில் அமைந்துள்ள பாதுகாக்கப்பட்ட ஒரு சிறிய நகரமே பக்சார் ஆகும். 1764 ஆம் ஆண்டு அக்டோபர் 22ல் இங்கு நடைபெற்ற போரில் சுஜா-உத்-தௌலா, இரண்டாம் ஷா ஆலம், மீர்காசிம் ஆகியோர் ஆங்கிலப்படைத் தளபதி ஹெக்டர் மன்றோ-வால் தோற்கடிக்கப்பட்டனர். இது ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியின் தீர்க்கமான வெற்றியாக அமைந்தது. போரின் முடிவில மீண்டும் மீர்ஜாபர் வங்காள அரியணையில் அமர்த்தப்பட்டார்.

மீர்ஜாபரின் இறப்புக்கு பின் அவரது மகன் நிஜாம் உத்-தௌலா வங்காள நவாப் ஆனார், 1765 பிப்ரவரி 20ல் நடந்த அலகாபாத் உடன்படிக்கையின் படி பக்சார் போர் முடிவுக்கு வந்தது. அதன்படி வங்காள நாவாப் தன்னுடைய இராணுவத்தின் பெரும் பகுதியை கலைத்துவிட வேண்டும் எனவும், கம்பெனியால் நியமிக்கப்பட்ட துணை சுபேதார் மூலம் இனி வங்காளம் நிர்வகிக்கப்படும் எனவும் கூறப்பட்டது. இராபர்ட் கிளைவ் அயோத்தி நவாப் சுஜா-உத்-தௌலாவுடனும், முகாலயப் பேரரசர் இரண்டாம் ஷா ஆலத்துடனும் தனித்தனியாக ஒப்பந்தம் செய்து கொண்டார். இவ்வாறாக இராபர்ட் கிளைவ் வங்காளத்தில் இரட்டையாட்சி முறையை கொண்டு வந்தார்.

**கர்நாடகப் போர்கள்:**

18ஆம் நூற்றாண்டில் மூன்று கர்நாடகப் போர்கள் பல்வேறு இந்திய ஆட்சியாளர்களிடையே நடைபெற்றது. இதில் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியும் பிரெஞ்சு கிழக்கிந்திய கம்பெனியும் எதிர் எதிர் அணியில் இருந்தது. பாரம்பரியமாக, ஐரோப்பாவில் பிரிட்டனும், பிரான்சும் போட்டி நாடுகள் ஆகும்.

அந்நிலை இந்தியாவிலும் வணிகம் செய்வதிலும், ஆட்சி செய்வதிலும் தொடர்ந்தது. இதன் விளைவாக தொடர் இராணுவ போட்டி தென்னிந்தியாவின் கர்நாடக பகுதியில் நடைபெற்றது. அவை கர்நாடகப் போர்கள் எனப்படுகின்றன. இவை 1746 முதல் 1763 வரை நடைபெற்றது. இப்போரின் விளைவாக ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியின் அரசியல் அதிகாரம் வலுபெற்றது.




**முதல் கர்நாடகப் போர் (1746 – 1748)**

ஐரோப்பாவில் ஏற்பட்ட ஆஸ்திரிய வாரிசுரிமைப் போரில் பிரிட்டனும், பிரான்சும் எதிர் எதிர் அணிகளில் இருந்தன. இந்த பகைமை இந்தியாவிலும் எதிரொலித்தது.

**அடையாறு போர் (1746)**

சென்னையின் அடையாறு நதிக்கரையில் அமைந்துள்ள சாந்தோம் என்ற இடத்தில் கர்நாடக நவாப் அன்வாருதீனுக்கும் பிரெஞ்சுப் படைக்கும் இடையே இப்போர் நடைபெற்றது. அன்வாருதீன்

ஆங்கிலேயரின் உதவியை நாடினார். கேப்டன் பாரடைஸ் தலைமையிலான மிகச் சிறிய பிரெஞ்சுப் படை மாபூஸ்கான் தலைமையிலான மிக வலிமை வாய்ந்த நவாப் படையினை தோற்கடித்தது. நன்கு பயிற்சி பெற்ற ஐரோப்பிய படை இந்திய படையை வெற்றி பெற்று தங்கள் மேலாண்மையை நிலைநாட்டிய முதல் நிகழ்வு இதுவே ஆகும்.

**அய்-லா-சப்பேல் உடன்படிக்கை (1748)**

ஐரோப்பாவில் நடைபெற்ற ஆஸ்திரிய வாரிசுரிமைப் போரின் முடிவில் ஏற்பட்ட அய்-லா-சப்பேல் உடன்படிக்கையின் மூலம் முதல் கர்நாடகப் போர் முடிவுக்கு வந்தது. இதன் படி மதராஸ் (சென்னை) ஆங்கிலேயரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மாறாக வட அமெரிக்காவின் சில பகுதிகளை பிரான்சு பெற்றது.

**இரண்டாம் கர்நாடகப் போரி (1749 - 1754)**

கர்நாடகம் மற்றும் ஹைதராபாத் ஆகிய பகுதிகளில் எற்பட்ட வாரிசுரிமை பிரச்சனையே இப்போருக்கு முக்கிய காரணமாக அமைந்தது. கர்நாடக நவாப் பதவிக்கு அன்வாருதீனும், சந்தா சாகிப்பும் உரிமை கோரினார். அதே போல் ஹைதராபாத் நிசாம் பதவிக்கு நாசிர் ஜங்கு முசாபர் ஜங்-ம் உரிமை கோரினர். இதனால் தக்காண பகுதியில் பிரெஞ்சுக்காரர்கள் சந்தா சாகிப்பிற்கும், முசாபர் ஜங்-க்கும் உதவி செய்தனர். ஆங்கிலேயர்கள் அன்வாருதீனுக்கும், நாசீர்ஜங்-கும் உதவினர். இப்போர் மூலம் இந்தியாவில் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்ட ஆங்கிலேயர்களும், பிரெஞ்சுக்காரர்களும் எண்ணினர்.

**ஆம்பூர் போர் (1749)**

இதன் விளைவாக, ஆகஸ்ட் 3, 1749ல் ஆம்பூரில் நடைபெற்ற போரில் பிரெஞ்சு கவர்னர் டியூப்ளே, சந்தா சாகிப், முசாபர் ஜங் ஆகியோரின் கூட்டுப் படைகளால் கர்நாடக நவாப் அன்வாருதீன் தோற்கடிக்கப்பட்டு, கொல்லப்பட்டார். அன்வாருதீனின் மகன் முகமது அலி திருச்சிராப்பள்ளிக்கு தப்பி ஓடினார். சந்தாசாகிப்பை பிரெஞ்சுக்காரர்கள் கர்நாடக நவாப் ஆக்கினர். அதற்கு ஈடாக பாண்டிச்சேரியை சுற்றியுள்ள 80 கிராமங்களை வெகுமதியாக பிரெஞ்சுக்காரர்களுக்கு அவர் வழங்கினார்.

தக்காணத்திலும் பிரெஞ்சுக்காரர்களால் நாசிர் ஜங் தோற்கடிக்கப்பட்டு, கொல்லப்பட்டார். முசாபர் ஜங் ஐதராபாத்தின் நிசாம் ஆனார் புதிய நிசாம் பிரெஞ்சுக்காரர்களுக்கு போதிய வெகுமதி வழங்கினார். அவர் கிருஷ்ணா நதியின் தென் பகுதிகள் அனைத்திற்கும் டியூப்ளே-யை ஆளுநராக நியமித்தார். 1751ல் தன் மக்களால் முசாபர் ஜங் படுகொலை செய்யப்பட்டார். நாசிர் ஜங்-ன் சகோதரர் சலபத் ஜங் பிரெஞ்சுப் படைத் தளபதி புஸ்ஸியின் உதவியுடன் ஹைதராபாத் நிசாம் ஆனார். அவர் குண்டூர் மாவட்டத்தை தவிர வட சர்க்கார் முழுவதும் பிரெஞ்சுக்காரர்களுக்கு வழங்கினார். இதன் மூலம் டியூப்ளே-ன் அதிகாரம் உச்ச நிலையை அடைந்தது.

**ஆற்காட்டுப் போர் (1751)**

**இராபர்ட் கிளைவ்**

இத்தருணத்தில் டியூப்ளே, முகமது அலி தஞ்சம் புகுந்த திருச்சி கோட்டையை முற்றுகையிட ஒரு படையை அனுப்பினார். இம்முயற்சியில் சந்தா சாகிப்பும் (கர்நாடக நவாப்) தன்னை பிரெஞ்சுப் படைகளோடு இணைத்துக் கொண்டார். இச்சமயத்தில் ஆற்காட்டை தாக்க இராபர்ட் கிளைவ் கம்பெனியிடம் அனுமதி கோரினார். ஆங்கிலேய கவர்னர் சாண்டர்ஸ் இராபர்ட் கிளைவ்-ன் திட்டத்திற்கு அனுமதி வழங்கினார். 200 ஆங்கில படையினர், 300 இந்திய படை வீரர்களுடன் கிளைவ் ஆற்காட்டை தாக்கி கைப்பற்றினார். லாரன்ஸ் உதவியுடன் கிளைவ் ஆரணி, காவேரிபாக்கம் ஆகிய இடங்களில் பிரெஞ்சுப் படைகளை தோற்கடித்தார். அதேசமயத்தில், சந்தாசாகிப் திருச்சியில் கொலை செய்யப்பட்டார். அன்வாருதீனின் மகன் முகமது அலி ஆங்கிலேயரின் உதவியுடன் ஆற்காட்டு நவாப் ஆனார். இத்தோல்வியால் பிரான்சு நாட்டு அரசாங்கம் டியூப்ளே-வை பாரிசுக்கு திரும்ப அழைத்தது.

**பாண்டிச்சேரி உடன்படிக்கை (1755)**

டியூப்ளேவைத் தொடர்ந்து பிரெஞ்சு ஆளுநராக பதவியேற்ற கோதேயூ ஆங்கிலேயருடன் பாண்டிச்சேரி உடன்படிக்கையினை செய்து கொண்டார். இதன் படி இரு நாடுகளும் தங்கள் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடக் கூடாது எனவும், போருக்கு முன்னர் இருந்த பகுதிகள் அவரவரிடம் திரும்ப ஒப்படைக்கப்படும் எனவும் கூறப்பட்டது. மேலும் புதிய கோட்டைகளை கட்டக் கூடாது எனவும் கூறப்பட்டது. இவ்வுடன்படிக்கை மூலம் ஆங்கிலேயர் மேலும் வலிமை பெற்றனர்.

இரண்டாம் கர்நாடகப் போர் ஒரு முடிவுற்ற நிலையை உணர்த்தியது. முகமது அலியை கர்நாடக நவாப் ஆக நியமித்ததின் மூலம் ஆங்கிலேயர்கள் இந்தியாவில் தங்கள் மேலாண்மையை நிலைநாட்டினர். ஹைதராபாத்தில் பிரெஞ்சுக்காரர்கள் வலிமையுடன் காணப்பட்டாலும் இப்போர் அவர்கள் தக்காணப் பகுதியில் வலிமை குன்றியவர்கள் என்பதை நிரூபித்தது.

**மூன்றாம் கர்நாடகப் போர் (1756 – 1763)**

ஐரோப்பாவில் வெடித்த ஏழாண்டுப் போர் இந்தியாவில் மூன்றாம் கர்நாடகப் போருக்கு இட்டுச் சென்றது. இச்சமயத்தில் ஆங்கில படைத் தளபதி இராபர்ட் கிளைவ் பிளாசிப் போரின் மூலம் வங்காளத்தில் ஆங்கில ஆதிக்கத்தை நிறுவியதுடன் மூன்றாம் கர்நாடகப் போருக்கு தேவையான நிதியையும் வழங்கினார்.

இப்போரில் பிரெஞ்சு படைகளை வழிநடத்த கவுண்-டி-லாலியை பிரெஞ்சு அரசாங்கம் நியமித்தது அவர் கடலூரில் உள்ள செயிண்ட் டேவிட் கோட்டையை எளிதாக கைப்பற்றினார். கர்நாடகப் பகுதியிலிருந்து ஆங்கிலேயரை விரட்ட தன்னுடன் இணையுமாறு புஸ்ஸிக்கு, கவுண்-டி-லாலி உத்தரவிட்டார். புஸ்ஸி ஐதராபத்திலிருந்து புறப்பட்ட தருணத்தை பயன்படுத்த வட சார்க்கார் (ஆந்திர பிரதேசம், ஒடிசா) பகுதிகளை கைப்பற்ற கர்னல் போர்டை வங்கத்திலிருந்து இராபர் கிளைவ் அனுப்பினார்.

**வந்தவாசிப் போர் 1760**

1760 ஜனவரி 22ல் நடைப்பெற்ற இப்போரில் ஜெனரல் அயர் கூட் தலைமையிலான ஆங்கிலேயப் படை லாலி தலைமையிலான பிரெஞ்சுப் படையை முற்றிலும் தோற்கடித்து. பின்னர் ஓர் ஆண்டுகள் இந்தியாவிலிருந்த அனைத்துக் குடியேற்றங்களையும் பிரெஞ்சுக்காரர்கள் இழந்தனர். கவுண்டிலாலி பிரான்சு நாட்டுக்கு திரும்ப அழைக்கப்பட்டு சிறையிலிடப்பட்டு, பின்னர் தூக்கிலிடப்பட்டார்.

ஐரோப்பாவில் நடைபெற்ற ஏழாண்டுப் போர் பாரிசு உடன்படிக்கையின் படி முடிவுக்கு வந்தது. அதன்படி பாண்டிச்சேரி உட்பட இந்தியாவிலிருந்த பிரெஞ்சு குடியேற்றங்கள் அனைத்தும் பிரெஞ்சுக்காரர்கள் வசம் திரும்ப கொடுக்கப்பட்டது. ஆனால் அவர்கள் தங்கள் பகுதிகளை பலப்படுத்தவும், படைகளை பெருக்கவும் தடைவிதிக்கப்பட்டது. இதன் மூலம் பிரெஞ்சு ஆதிக்கம் இந்தியாவில் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.

**மைசூரும், ஆங்கிலேய ஆட்சி விரிவாக்கத்திற்கு எதிர்ப்பும்:**

ஹைதர் அலியின் தலைமையில் மைசூர் சமஸ்தானம் தென்னிந்திய வரலாற்றில் மிகப்பெரிய எழுச்சியை பெற்றது. இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சி விரிவாக்கத்திற்கு எதிராக ஹைதர் அலியும், அவரது மகன் திப்பு சுல்தானும் முக்கிய பங்காற்றினர். இருவரும் வீரதீரத்துடன் ஆங்கிலேயரை எதிர்த்தனர். 1761 ல் ஹதர் அலி மைசூர் சமஸ்தானத்தின் உண்மையான ஆட்சியாளரானார். மேலும் அவர் ஆங்கிலேயருக்கு வலிமைமிக்க எதிரியாகவும் திகழ்ந்தார்.

**முதல் ஆங்கிலேய – மைசூர் போர் 1767 – 1769):**

**காரணங்கள்:**

ஹைதர் அலியின் வளர்ச்சி, அவர் பிரெஞ்சுக்காரர்களிடம் கொண்டிருந்த நட்புறவு ஆகியன ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியின் எதிர்ப்புக்கு காரணமாகின.

ஹைதர் அலிக்கு எதிராக மராத்தியர்கள், ஹைதராபாத் நிசாம், ஆங்கிலேயர்கள் இணைந்து முக்கூட்டணியை ஏற்படுத்தினர்.

**போரின் போக்கு:**

தளபதி ஜோசப் ஸமித் தலைமையிலான ஆங்கிலப் படை உதவியுடன் ஹைதராபாத் நிசாம் 1767 ல் மைசூர் மீது படையெடுத்தார். ஆங்கிலப் படையை ஹைதர் அலி தோற்கடித்து மங்களூரை கைப்பற்றினார். 1769 மார்ச் மாதம் ஹைதர் அலி மதராஸ் மீது படையெடுத்தார். இதனால் ஆங்கிலேயர்கள் 1769 ஏப்ரல் 4ல் அவரிடம் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டனர்.

**மதராஸ் உடன்படிக்கை (1769):**

போரின் முடிவில் மதராஸ் உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டது. அதன்படி போருக்கு முன்னர் இருந்த பகுதிகளை இருதரப்பினரும் திரும்பப்பெற்றனர். மற்ற நாடு தாக்கும் பட்சத்தில் ஒருவருக்கொருவர் உதவி செய்வது என உறுதி செய்துகொள்ளப்பட்டது.


**இரண்டாம் ஆங்கிலேய மைசூர் போர் (1780 – 1784)**

**காரணங்கள்:**

- 1769 ல் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையை ஆங்கிலேயர்கள் நிறைவேற்றத் தவறினர்.
- 1771ல் மராத்தியர்கள் ஹைதர் அலி மீது படையெடுத்த போது மதராஸ் உடன்படிக்கையின் படி ஆங்கிலேயர்கள் ஹைதர் அலிக்கு உதவவில்லை.
- ஹைதர் அலியின் ஆட்சிக்குப்பட்ட பிரெஞ்சு குடியேற்ற பகுதியான மாஹியை ஆங்கிலேயர்கள் கைப்பற்றினர். இந்நிகழ்வு ஆங்கிலேயருக்கு எதிராக ஹைதர் அலி, ஹைதராபாத் நிசாம், மராத்தியர்களின் முக்கூட்டணியை உருவாக்கியது.

**போரின் போக்கு:**

1781ல் ஆங்கிலேய படைத் தளபதி சர் அயர்கூட் ஹைதர் அலியை பரங்கிப்பேட்டை (போர்டோ நோவா) என்ற இடத்தில் தோற்கடித்தார். மேலும் மைசூர் படைகள் சோளிங்கர் என்ற பகுதியிலும் தோல்வியை தழுவியது. போரின் போது புற்று நோயால் பாதிக்கப்பட்ட ஹைதர் அலி 1782 ல் இறந்தார். அவரின் இறப்புக்குப் பின் அவரது மகன் திப்பு சுல்தான் ஆங்கிலேயருக்கு எதிராக போரினைத் தொடந்தார். 1783 ல் திப்பு ஆங்கிலேய படைத்தளபதியான பிரிகேரியா மேத்யூஸ் மற்றும் அவரது படை வீரர்களையும் கைது செய்தார். இது பின்னாளில் திப்புவுக்கு பின்னடைவை ஏற்படுத்தியது.




**மங்களூர் உடன்படிக்கை (1784)**

- 1784 மார்ச் 7ல் ஆங்கிலேயருக்கும், திப்பு சுல்தானுக்கும் இடையே இப்வுடன்படிக்கை கையெழுத்தானது. இருபிரிவினரும் போரில் கைப்பற்றிய பகுதிகளை திரும்ப அளிப்பதும், போர்க் கைதிகளை ஒப்படைப்பதும் என உடன்பாடு ஏற்பட்டது.

- இதன் மூலம் கவர்னர் ஜெனரல் வாரன் ஹேஸ்டிங்ஸ் புதிதாக உருவாக்கப்பட்ட பிரிட்டிஷ் ஆதிக்கத்தை வலிமை மிக்க எதிரிகளான மராத்தியர்கள் மற்றும் ஹைதர் அலியிடம் இருந்து பாதுகாத்துக் கொண்டார். இச்சமயத்தில் அமெரிக்காவில் தங்கள் குடியேற்றங்களை பிரிட்டன் இழந்தபோதிலும், வாரன் ஹேஸ்டிங்ஸ் எதையும் இந்தியாவில் இழக்கவில்லை. மாறாக இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சிப் பகுதிகளை ஒருங்கிணைத்தார்.

**மூன்றாம் ஆங்கிலேய மைசூர் போர் 1790 – 1792)**
**காரணங்கள்:**

- மங்களூர் உடன்படிக்கைக்குபின் ஆங்கிலேயருக்கு எதிராக வெளிநாடுகளுடன் கூட்டணி அமைக்கும் பொருட்டு பிரான்சு, மற்றும் துருக்கி ஆகிய நாடுகளுக்கு திப்பு சுல்தான் தன்னுடைய தூதுவர்களை அனுப்பினார்.

- ஆங்கிலேய கூட்டணியில் இருந்த திருவிதாங்கூர் சமஸ்தானத்தை திப்பு சுல்தான் 1789 ல் தாக்கினார்.

- இச்சமயத்தில் திப்பு சுல்தானுக்கு எதிராக ஆங்கிலேயர்கள், ஹைதராபாத் நிசாம் மற்றும் மராத்தியர்களுடன் இணைந்து மூவர் கூட்டணியை உருவாக்கினர்.

**போரின் போக்கு:**

- இரண்டு ஆண்டுகள் நடைபெற்ற இப்போரில் திப்பு சுல்தான் தனியாக எதிர்த்து போராடினார். இப்போர் மூன்று கட்டங்களாக நடைபெற்றது. தளபதி மேடோஸ் தலைமையிலான தாக்குதல் தோல்வியில் முடிந்தது. ஆகையால் 1790ல் தலைமை ஆளுநர் காரன்வாலிஸ் தானாகவே படையை வழிநடத்தினார். ஸ்ரீரங்கப்பட்டினத்தை தாக்குவதற்கு தடையாக இருந்த அனைத்து மலைக் கோட்டைகளையும் அவர் கைப்பற்றினார். நம்பிக்கை இழந்த சுல்தான் ஆங்கிலேயரிடம் பேச்சுவார்த்தைக்கு உடன்பட்டார். அதனை ஏற்றுக்கொண்ட காரன்வாலிஸ் 1792ல் ஸ்ரீரங்கபட்டிண உடன்படிக்கையை திப்பு சுல்தானுடன் செய்து கொண்டார்.

**ஸ்ரீரங்கபட்டிண உடன்படிக்கை (1792)**

- இவ்வுடன் படிக்கையின்படி, திப்பு தன்னுடைய ஆட்சிப்பகுதியில் பாதி பகுதியை ஆங்கிலேயருக்கு ஒப்படைத்தார்.

- போர் இழப்பீட்டு தொகையாக 3.6 கோடி செலுத்த வேண்டும் என்றும், தன்னுடைய இரண்டு மகன்களை ஆங்கிலேயரிடம் பிணைக் கைதிகளாக ஒப்படைக்க வேண்டும் என திப்பு சுல்தான் கட்டாயப்படுத்தப்பட்டார்.

- இதன் மூலம் ஆங்கிலேயர்கள் மலபார், குடகு மலை, திண்டுக்கல் மற்றும் பாரமஹால் (கோயம்புத்தூர், சேலம்) ஆகிய பகுதிகளைப் பெற்றனர்.

**நான்காம் ஆங்கிலேய – மைசூர் போர் (1799):**

- திப்பு சுல்தான் 1792 ல் ஸ்ரீரங்கப்பட்டிண உடன்படிக்கையின் மூலம் காரன்வாலிஸ் பிரபுவால் அமெரியாதை செய்ததை மறக்கவில்லை.

**காரணங்கள்:**

- திப்பு சுல்தான் ஆங்கியேருக்கு எதிராக இம்முறையும் வெளிநாட்டு கூட்டணிக்காக அரேபியா, துருக்கி, ஆப்கானிஸ்தான் மற்றும் பிரான்சு ஆகிய நாடுகளுக்கு தன்னுடைய தூதர்களை அனுப்பினார்.

- அச்சமயத்தில் எகிப்து மீது படையெடுத்த நெப்போலியனுடன் திப்பு தொடர்பு வைத்திருந்தார்.

- பிரெஞ்சு அலுவலர்கள் ஸ்ரீரங்கப்பட்டிணத்திற்கு வருகை புரிந்து அவர்கள் ஜாக்கோபியன் கழகத்தை நிறுவினார்கள். மேலும் அங்கு சுதந்திர மரம் ஒன்றும் நட்டப்பட்டது.

**போரின் போக்கு:**

- 1799-ல் வெல்லெஸ்லி பிரபு திப்புவின் மீது போர் தொடுத்தார். இது குறுகிய காலத்தில் நடந்த, கடுமையான போராக இருந்தது. திட்டமிடப்படி மைசூரியின் மேற்கே பம்பாய் இராணுவம் தளபதி ஸ்டுவர்ட் தலைமையில் படையெடுத்தது. இச்சமயத்தில் மெட்ராஸ் இராணுவம் தலைமை ஆளுநரின் சகோதரர் ஆர்தர் வெல்லெஸ்லி தலைமையில் திப்பு சுல்தானை தாக்கியது. திப்பு தன்னுடைய தலைநகரம் ஸ்ரீரங்கப்பட்டிணத்திற்கு பின் வாங்கினார். 1799 மே 4ஆம் நாள் ஸ்ரீரங்கபட்டினம் கைப்பற்றப்பட்டது. திப்பு சுல்தான் வீரதீரமாக போரிட்டாலும் இறுதியில் கொல்லப்பட்டார். இவ்வாறாக நான்காம் மைசூர் போர் முடிவுக்கு வந்தது. மேலும் ஒட்டுமொத்த மைசூரும் ஆங்கிலேயர் முன்பாக சரணடைந்தது.

**போருக்கு பின் மைசூர்**


- கனரா, வயநாடு, கோயமுத்தூர், தாராபுரம் ஆகிய பகுதிகளை ஆங்கிலேயர் இணைத்து கொண்டனர்.

- மீண்டும் இந்து உயர் குடும்பத்தை சேர்ந்த மூன்றாம் கிருஷ்ண ராஜா உடையார் மைசூர் அரியணை ஏறினார்.

- திப்புவின் குடும்பத்தினர் வேலூர் கோட்டைக்கு அனுப்பப்பட்டனர்.

**ஆங்கிலேய மராத்திய போர்கள்:**

மூன்றாம் பானிபட் போர் தோல்வியால் ஏற்பட்ட நெருக்கடியை சமாளிக்க மராத்தியர்கள் முயற்சித்தனர். அதன் விளைவாக பத்தாண்டுகளுக்கு பிறகு தங்கள் மீதான டெல்லி முகலாயர்களின் கட்டுப்பாட்டை மீட்டனர். எனினும் பேஷ்வா கட்டுப்பாட்டில் இருந்த பழைய மராத்தாஸ் கூட்டமைப்பு கிட்டத்தட்ட ஐந்து சுதந்திரமான மாநிலங்களுக்கு வழிவகுத்தது. அவர்கள், புனாவில் பேஷ்வா, பரோடாவில் கெய்க்வாட், நாக்பூரில் போன்ஸ்லே, இந்தூரில் ஹோல்கர், மற்றும் குவாலியரில் சிந்தியா போன்றோர்களாவர். பேஷ்வா அரசாங்கம் உள்நாட்டு போட்டியாளர்களால் பலவீனப்படுத்தப்பட்டது. மற்ற நான்கு தலைவர்கள் ஒருவரையொருவர் அடிக்கடி விரோதமாக எதிர்த்தனர். இருந்தபோதிலும், மராத்தியர்கள் பலம் வாய்ந்த சக்தியாகவே இருந்தனர். மராட்டியர்களுக்கிடையிலிருந்த, இம்மோதல்களை பிரிட்டிஷார் அவர்களது விரிவாக்க கொள்கைக்கு சிறந்த முறையில் பயன்படுத்திக் கொண்டனர்.'




**முதல் ஆங்கிலேய மராத்தியப் போர் (1775 – 1782)**

மராத்தியர்களின் பேஷ்வா, நாராயணராவின் இறப்புக்குப் பிறகு அடுத்த பேஷ்வா யார் என்ற உரிமை பிரச்சரனையில் ஆங்கிலேயர்கள் முதன் முதலில் தலையிட வேண்டியிருந்தது. நராயண ராவ் இறந்த பிறகு, ரகுநாத ராவ் (ராகோபா) பேஷ்வா ஆனார். ஆனால் அவரது அதிகாரத்திற்கு

எதிராக பூனாவிலிருந்த ஒரு குழு நானா பட்னாவில் தலைமையில் எதிர்ப்பு தெரிவித்தது. அக்குழு நாராயண ராவின் மறைவுக்குப்பின் அவரது மனைவியான கங்கா பாய்க்கு பிறந்த குழந்தையை (இரண்டாம் பாதவ ராவ்) பேஷ்வாவாக அங்கீகரித்தது. மேலும் அவருடைய பெயரில் ஆட்சிக் குழுவொன்றும் அமைத்தது. அதிகாரத்தை கைப்பற்றும் முயற்சியில் தோல்வியடைந்த ரகுநாத ராவ் பிரிட்டிஷ் உதவியை அணுகினார். இதன்படி, 1775 ஆம் ஆண்டு ஆங்கிலேயருக்கும் ரகுநாத ராவுக்கும் இடையே சூரத் ஒப்பந்தம் கையெழுத்தானது. இருப்பினும், கல்கத்தா பிரிட்டிஷ் கவுன்சில் சூரத் உடன்படிக்கையை ஏற்றுக்கொள்ளவில்லை. இருப்பினும் தலைமை ஆளுநரான வாரன் ஹேஸ்டிங்ஸ் ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்வதற்கு எந்தவித ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை. பூனாவின் பாதுகாப்பரசுடன் ஒரு சமாதானப் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக கல்கத்தா பிரிட்டிஷ் கவுன்சில் பூனாவுக்கு கர்னல் அப்டனை அனுப்பியது. அதன்படி, அப்டன் 1776 ஆம் ஆண்டு பூனாவின் பாதுகாப்பரசுடன் புரந்தர் ஒப்பந்தத்தை செய்து கொண்டார். ஆயினும், பம்பாயில் ஆங்கில அரசாங்கத்தின் எதிர்ப்பு காரணமாக இந்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வரவில்லை.

1781 ஆம் ஆண்டில், வாரன் ஹேஸ்டிங்ஸ் கேப்டன் பாப்ஹாமின் தலைமையின் கீழ் பிரிட்டிஷ் துருப்புக்களை அனுப்பினார். அவர் மராத்தியத் தலைவரான மகாதாஜி சிந்தியாவை பல போர்களில் தோற்கடித்து குவாலியரைக் கைப்பற்றினார். 1782ஆம் ஆண்டு மே 17 ஆம் நாள், வாரன் ஹேஸ்டிங்ஸ் மற்றும் மகாதாஜி சிந்தியா இடையே சால்பை ஒப்பந்தம் கையெழுத்தானது.

**விளைவுகள்:**

- போரின் முடிவில் இரண்டாம் மாதவராவ் பெஷ்வாவாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, ரகுநாத ராவுக்கு ஒய்வூதியம் வழங்கப்பட்டது.
- பிரிட்டிஷ் அரசுக்கு சால்செட் பகுதி வழங்கப்பட்டது.
- இந்திய அரசியலில் சால்பை ஒப்பந்தம் பிரிட்டிஷாருக்கு செல்வாக்கை ஏற்படுத்தியது.
- பிரிட்டிஷாருக்கும் மராத்தியர்களுக்கும் இடையே அடுத்த இருபது ஆண்டுகளுக்கு சமாதான உறவு நீடித்தது.

**மராத்தியர்களின் உள்நாட்டு விவகாரம்**

- முதல் மராத்தியப் போரின் முடிவில் மராத்தியர்களின் உள்விவகார பிரச்சனை மேலும் மோசமடைந்தது. நானா பட்னாவிஸின் அதிகார வளர்ச்சியைக்கண்டு மகாதாஜி சிந்தியா பெறாமை கொண்டார். இதன் காரணமாக ஆங்கிலேயரின் ஆதரவை அவர் பெற முறப்பட்டார். இளம் பேஷ்வாவான இரண்டாம் மாதவ ராவ் மராத்தியர்களிடையே நல்லுறவை மேம்படுத்த முறன்றார், ஆனால் அவரால் மராத்தியத் தலைவர்களின் ஆதிக்கப் போட்டியை தடுக்க முடியவில்லை. இந்நிலையில், மகாதாஜி சிந்தியா 1794 ல் இறந்தபின் அவருடைய மருமகன் தௌலத் ராவ் சிந்தியா பதவியேற்றார். சிந்தியாவின் மரணம் பூனாவில் நானா பட்னாவிஸின் அதிகாரத்தை இழக்கச் செய்தது. மேலும் ஆங்கிலேயர்கள் தங்களது செல்வாக்கை வடஇந்தியாவில் விரிவுபடுத்த வலிகோலியது. பேஷ்வா இரண்டாம் மாதவ ராவ் 1795 ஆம் ஆண்டுல் தற்கொலை செய்து கொண்ட பிறகு, ரகுநாதராவின் வலிமையற்ற மகனான இரண்டாம் பாஜிராவ் பேஷ்வா ஆனார். இத்தருணத்தில் 1800ல் நானா பாட்னாவில் மரணம் பிரிட்டிஷாருக்கு மேலும் நன்மை அளிப்பதாக இருந்தது.
- ஜஸ்வந்த் ராவ் ஹோல்கர் மற்றும் தௌலத் ராவ் சிந்தியா ஆகியோர் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக்கொண்டிருந்த சூழ்நிலையில் பேஷ்வா ஹோல்கருக்கு எதிராக சிந்தியாவை ஆதிரிப்பதாகவும், பேஷ்வாவும் சந்தியாவும் ஒருவருக்கொருவர் உதவி செய்வதாகவும் ஒப்புக் கொண்டனர். இதன் விளைவாக 1802 ல் ஹோல்கர், பேஷ்வாவுக்கு எதிராக படையெடுத்து, சிந்தியா மற்றும் பேஷ்வாவின் கூட்டுப் படைகளை தோற்கடித்தார். முடிவில் பேஷ்வா இரண்டாம் பாஜிராவ் இந்தியாவின் தலைமை ஆளுநராக இருந்த வெல்லெஸ்லி பிரபுவை அணுகினார். பேஷ்வாவை வரவேற்ற வெல்லெஸ்லி பிரபு, அவரோடு 1802 பஸ்ஸீன் உடன்படிக்கையை செய்துகொண்டார். இவ்வுடன்படிக்கையின்படி துணைப்படை திட்டத்தை பேஷ்வா

ஏற்றுக்கொண்டார். மேலுமட் ஆங்கிலேயர்கள் ஆர்தர் வெல்லஸ்லியின் படையெடுத்துச் சென்று மராத்தியத் தலைவர் ஹோல்கரின் படைகளை தாக்கி அழித்தனர்.

**இரண்டாம் ஆங்கிலேய – மராத்தியப் போர் (1803 – 1805)**

- பேஷ்வா துணைபடைத் திட்டத்தை ஏற்றுக்கொண்ட பிறகு, தௌலத் ராவ் சிந்தியா மற்றும் ரகோஜி போன்ஸ்லே ஆகியோர் மராத்திய சுதந்திரத்தை காப்பாற்ற முயற்சித்தனர். ஆங்கிலேயரின் இராணுவம் ஆர்தர் வெல்லஸ்லியின் தலைமையில், அஸ்ஸே மற்றும் அரகான் பகுதியில் சிந்தியா மற்றும் போன்ஸ்லே ஆகியோரின் கூட்டுப் படைகளை தோற்கடித்து இவ்வெற்றிக்குப்பின் சிந்தியாவுடன் சுர்ஜீ-அர்ஜுகான் ஒப்பந்தத்தையும், போன்ஸ்லேவுடன் தியோகான் ஒப்பந்தத்தையும் 1803ல் ஆங்கிலேயர்கள் செய்துகொண்டனர். ஆனால் போரில் ஈடுபடாத யஸ்வந்த் ராவ் ஹோல்கர் (ஜஸ்வந்த் ராவ் ஹோல்கர் எனவும் அழைக்கப்படுகிறார்) இன்னும் ஆங்கிலேயர்களுக்கு அடிபணியவில்லை. பின்னர் 1804ல் ஜெய்ப்பூர் பிரதேசத்தை ஹோல்கர் சூறையாடும் போது ஆங்கிலேயர்கள் அவருக்கு எதிராக போர்தொடுத்தனர். ஆங்கிலேயருக்கு எதிராக யஷ்வந்த ராவ் ஹோல்கர் இந்திய ஆட்சியாளர்களை இணைத்து ஒரு கூட்டணியை உருவாக்க முயற்சித்தார். ஆனால் அவரது முயற்சி தோல்வியடைந்தது. இறுதியில் மராத்தியர்கள் தோற்கடிக்கப்பட்டு, ஆங்கிலேயர்களுக்கு கப்பம் செலுத்தும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். மேலும் மராத்திய தலைவர்கள் ஒருவருக்கொருவர் பிரிக்கப்பட்டு தனிமைப் படுத்தப்பட்டனர்.

**விளைவுகள்:**

- இப்போருக்கு பின் மராத்தியர்களின் வலிமை காலப்போக்கில் பலவீனமடைந்தது.

- இந்தியாவில் ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனி தலையாய சக்தியாக மாறத் தொடங்கியது.

**மூன்றாவது ஆங்கிலேய மராத்தியப் போர் (1817 – 1818)**

தங்களது மேலாண்மையை மீண்டும் பெற முயன்ற மராத்தியர்களோடு ஆங்கிலேயர்கள் மூன்றாவதாக ஒரு போரில் ஈடுபட்டனர். இப்போர், இந்தியாவில் பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனி மற்றும் மராத்திய சாம்ராஜ்யத்திற்கு இடையே இறுதி மற்றும் தீர்க்கமான மோதமாக அமைந்தது. இப்போர், ஆங்கில படைவீரர்கள் மராத்திய பகுதிகளை ஆக்கிரமிக்கும் போது தொடங்கியது. இந்த ஆக்கிரமிப்பில் தலைமை ஆளுநர் ஹேஸ்டிங்ஸ் பிரபுவுக்கு, ஜெனரல் தாமஸ் ஹிஸ்லாப் தலைமையின் கீழ் ஒரு படைப்பிரிவு உதவியது. பேஷ்வா இரண்டாம் பாஜி ராவின் படைகளை தொடர்ந்து, நாக்பூரின் இரண்டாம் மூதோஜி போன்ஸ்லேவும், இந்தூரின் மூன்றாம் மல்ஹர் ராவ் ஹோல்கரும் ஆங்கிலேயருக்கு எதிராக கிளர்ந்தெழுந்தனர். ஆனால் குவாலியரின் தௌலத் ராவ் சிந்தியா மட்டும் நடுநிலை வகித்தார். காட்கி, கோர்கான் ஆகிய இடங்களில் நடைபெற்ற போர்களில் பேஷ்வா தோற்கடிக்கப்பட்டார். பேஷ்வாவின் படைகள் பல இடங்களில் அவர் பிடிபடுவதைத் தடுத்து நிறுத்தின. இதனைத் தொடர்ந்து சித்தாபால்டி போரில் போன்ஸ்லேவும், மகித்பூர் போரில் ஹோல்கரும் ஆங்கிலேயர்களால் தோற்கடிக்கப்பட்டனர்.

**விளைவுகள்:**

- இப்போரின் முடிவில் மராத்திய கூட்டமைப்பு கலைக்கப்பட்டது மற்றும் பேஷ்வா பதவி ஒழிக்கப்பட்டது.

- பேஷ்வா இரண்டாம் பாஜிராவின் பெரும்பாலான பகுதிகள் பம்பாய் மாகாணத்தோடு இணைக்கப்பட்டன.

- தோற்கடிக்கப்பட்ட போன்ஸ்லே மற்றும் ஹோல்கரின், மராத்திய பகுதிகளான நாக்பூர், இந்தூர் ஆகியவை ஆங்கிலேயர்களால் கையகப்படுத்தப்பட்டன.

- மராத்தியரின் கடைசி பேஷ்வாவான இரண்டாம் பாஜிராவிற்கு வருடாந்திர ஒய்வூதியம் 8 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டது.

**இந்தியாவில் ஆங்கிலேயரின் நிர்வாக அமைப்பு:**

ஆங்கிலேயரின் இந்திய நிர்வாக அமைப்பு நான்கு முதன்மை நிறுவனங்களாக இயங்கியது. அவை குடிமைப்பணிகள், இராணுவம், காவல், மற்றும் நீதித்துறை ஆகும்.

**குடிமைப்பணிகள்**

சிவில் சர்வீஸ் (குடிமைப்பணிகள்) என்ற வார்த்தை முதன் முதலில் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியால் பயன்படுத்தப்பட்டது. இது குடிமைப் பணி ஊழியர்களை, இராணுவ அதிகாரிகளிடமிருந்து வேறுபடுத்தி காட்டியது. சட்டங்களை முறையாக செயல்படுத்துதல், வரி வசூலித்தல் ஆகியன குடிமைப் பணியின் முதன்மைப் பணியாக இருந்தது. ஆரம்பத்தில் வியாபார ரீதியாக இருந்த குடிமைப் பணிகள் பின்னர் பொதுப்பணியாக மாறியது. முதலில் பொதுப்பணியின் நியமனங்கள் அனைத்தும் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியின் இயக்குநர் அவையின் தனியுரிமையாக இருந்தது. ஆனால், நியமனம் செய்யப்பட்ட பொது பணியாளர்கள் லஞ்சம், ஊழல், சட்ட விரோத வணிகம் ஆகியவற்றில் ஈடுபட்டனர். அதனால் தலைமை ஆளுநராக காரன் வாலிசு 1786 ல் பதவியேற்ற போது தனியார் வணிகத்திற்கு எதிராக சட்டங்களை இயற்றினார். கம்பெனி ஊழியர்களின் சம்பளத்தை உயர்த்தி, உலகின் மிக உயர்ந்த ஊதியம் பெறும் அரசு ஊழியர்களாக அவர்களை மாற்றினார்.

1798ல் இந்திய கவர்னர் ஜெனரலாக பதவியேற்றுக் கொண்ட வெல்லெஸ்லி பிரபு, அரசு ஊழியர்களுக்கு தேவையான பயிற்சியை அறிமுகப்படுத்தினார். இவர் 1800 ல் கல்கத்தாவில் வில்லியம் கோட்டையில் மொழி, இலக்கியம், அறிவியல் ஆகிய துறையில் பயிற்சி வழங்குவதற்காக ஒரு கல்லூரியை நிறுவினார், அதே வேளையில் கம்பெனியின் இயக்குநர்கள் இதனை ஏற்க மறுத்து, 1806ல் இங்கிலாந்தில் உள்ள ஹெய்லிபரி என்ற இடத்தில் கிழக்கிந்திய கல்லூரியை நிறுவினர்.

போட்டி தேர்வு மூலம் அரசு ஊழியர் நியமனம் என்ற கருத்தை முதன் முதலில் 1833 ஆம் ஆண்டு பட்டயச் சட்டம் அறிமுகப்படுத்தியது. ஆனால் கம்பெனியின் இயக்குநர் அவையால் நியமனம் செய்யப்படாதவர்கள் போட்டித் தேர்வினை எழுத தகுதியற்றவர்கள் எனப்பட்டது. எனவே இந்த முறையானது, நியமனம் மற்றும் போட்டித் தேர்வு முறை என்றழைக்கப்பட்டது. திறந்த முறையிலான போட்டித் தேர்வு முறையில் கம்பெனி ஊழியர்களை தேர்ந்தெடுப்பது 1853 ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இம்முறை 1858 ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தால் உறுதி செய்யப்பட்டது. போட்டித் தேர்வுகளுக்கான அதிகபட்ச வயது 23 ஆக நிர்ணயிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து 1858 ஆம் ஆண்டு ஹெய்லிபரியில் இருந்த கிழக்கிந்திய கல்லூரி அகற்றப்பட்டது. மேலும் குடிமை பணிக்கு ஆட்களைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு குடிமைப்பணியாளர் தேர்வாணையம் வசமானது. 1860 ஆம் ஆண்டு ஒரு ஒழுங்கு முறை ஆணையின் மூலம் தேர்வெழுத அதிகபட்ச வயது 22 ஆக குறைக்கப்பட்டது. மேலும் 1866ல் 21 ஆகவும் 1876 ல் 19 ஆக குறைக்கப்பட்டது.

1861 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் பாராளுமன்றத்தால் இந்திய ஆட்சிப் பணி சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டம் சில உயர் நிர்வாக பதவிகள் மற்றும் நீதித்துறை பதவிகளை ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்ய ஒதுக்கீடு செய்திருந்தது. பின்னர் இப்பதவிகள் இந்திய ஆட்சிப் பணிகளாக மாற்றப்பட்டன. வயது வரம்பு குறைப்பு மற்றும் இலண்டனுக்கு சென்று தேர்வு எழுதுதல் ஆகிய காரணங்களால் வசதி படைத்த இந்தியர்கள் மட்டுமே ஐ.சி.எஸ் தேர்வை எழுதக் கூடிய சூழ்நிலை நிலவியது. 1869 ல் சுநேந்திரநாத் பானர்ஜி, ரமேஷ் சந்திர தத், மற்றும் பிகாரி லால் குப்தா ஆகிய மூன்று இந்தியர்கள் ஐசிஎஸ் தேர்வில் வெற்றி பெற்றனர்.

| |
|---|
| 1863 ல் ஐசிஎஸ் தேர்வில் தேர்ச்சி பெற்ற முதல் இந்தியர் சத்தியேந்திரநாத் தாகூர். இவர் கவிஞர் இரபீந்திரநாத் தாகூரின் மூத்த சகோதரர் ஆவார். |

பின்னர், ஐசிஎஸ் தேர்விற்கான வயது வரம்பை உயர்த்துவும் தேர்வினை இந்தியாவிலேயே நடத்தவும் கம்பெனியிடம் இந்தியர்கள் கோரிக்கை வைத்தனர். இதன்விளைவாக 1892ல் குறைந்தபட்ச வயதினை 21ல் இருந்து 23 ஆக உயர்த்தப்பட்டது. மேலும் 1912ல் அரசு பணியைப்பற்றி ஆராய்வதற்காக இஸ்லிங்டன் பிரபு என்பவரின் தலைமையில் ஒரு அரச ஆணையம் (ராயல் கமிஷன்) நிறுவப்பட்டது. இதன் உறுப்பினர்களாக இந்தியர்களான கோபால கிருஷ்ண கோகலே, சர் அப்துர் ரஹிம் மற்றும் நான்கு ஆங்கிலேயர்களும் இடம் பெற்றிருந்தனர். 1917 ல் இவ்வாணையம் தனது பரிந்துரையை வெளியிட்டது. அப்பரிந்துரைகள் இந்தியர்களின் கோரிக்கையை ஓரளவிற்கு பூர்த்தி செய்வதாக இருந்தது மட்டுமல்லாமல் குடிமை பணி தேர்வை இந்திய மயமாக்கியது.

1918 ல் இந்திய ஆட்சிப் பணியில் 33 சதவீதம் இந்தியர்கள் தேர்வு செய்ய வேண்டும் என்றும், படிப்படியாக இவற்றை அதிகரிக்கவும் மாண்டேகு மற்றும் செம்ஸ் போர்டு ஆகியோர் பரிந்துரைத்தனர். 1923ல் ஏற்படுத்தப்பட்ட மற்றொரு (ராயல் கமிஷன்) அரச ஆணையத்திற்கு லீ பிரபு இந்திய ஆட்சிப்பணி, இந்திய காவல் பணி, இந்திய காடுகள் பணி ஆகிய அனைத்து நியமனங்களும் இந்தியாவுக்கான அரசுச் செயலரின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும் என்று பரிந்துரைத்தது. அரசுப் பணியாளர் தேர்வாணையம் ஒன்றை உடனடியாக நிறுவுவதற்கும் லீ தலைமையிலான குழு பரிந்துரை செய்தது.

1935 ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டம் மத்தியில் கூட்டாட்சி அரசுப் பணியாளர் தேர்வாணையம் ஒன்றும், மாகாணங்களில் மாகாண அரசுப் பணியாளர் தேர்வாணையம் ஒன்றும் உருவாக வழிவகை செய்தது. அதேபோல் ஒரு சில மாகாணங்கள் ஒன்றிணைந்து மாகாண அரசுப் பணியாளர் தேர்வாணையம் உருவாக்கவும் வழிவகை செய்தது. ஆங்கிலேயருக்கு உதவி செய்யவே இந்த குடிமைப்பணி அமைப்பு உருவாக்கப்பட்டாலும், சுதந்திர இந்தியாவின் இந்திய ஆட்சிப் பணி அமைப்பு உருவாவதற்கு இந்த முறை அடித்தளமாக அமைந்தது.

**இராணுவம்:**

இது இந்தியாவின் பிரிட்டிஷ் நிர்வாகத்தின் இரண்டாவது முக்கிய தூணாக விளங்கியது. கிழக்கிந்திய கம்பெனி தன்னுடைய இராணுவத்திற்கு ஆட்களைச் சேர்த்தது. அதற்கு சிப்பாய் இராணுவம் என்று பெயர். இந்த இராணுவ வீரர்களுக்கு, ஐரோப்பிய அதிகாரிகளின் உத்தரவை போர்க்களத்தில் நிறைவேற்ற, ஐரோப்பிய இராணுவத்திற்கு இணையாக பயிற்சி அளிக்கப்பட்டது. ஆங்கிலேயர்கள் ஆரம்ப காலத்தில் வங்காளம், பம்பாய், மதராஸ் ஆகிய மூன்று மாகாணங்களிலும் தனித்தனியாக மூன்று படைப்பிரிவை ஏற்படுத்தியிருந்தனர். இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சியினை நிறுவுதிலும், விரிவுபடுத்துவதிலும் இராணுவத்தின் பங்களிப்பு சிறப்பானதாகும். ஆங்கில சிப்பாய்களை விட இந்திய சிப்பாய்களுக்கு குறைந்த சம்பளமும், தினப்படியும் வழங்கப்பட்டது. உதாரணமாக, 1856 ஆம் ஆண்டு மூன்று இந்திய படைவீரர்கள் மாத சம்பளமாக மொத்த ரூபாய் 300 மட்டுமே பெற்றனர். 1857 ஆம் ஆண்டு கம்பெனி இராணுவம் 86 சதவீதம் இந்தியர்களை கொண்டதாக இருந்தது. இருந்த போதிலும் இராணுவ உயர் பதவி அனைத்தும் ஆங்கிலேயர் வசமே இருந்தன. இந்தியர்களுக்கான உயர் பதவி சுபேதார் மட்டுமே ஆகும்.

**ஆங்கில இராணுவத்தின் வலிமை**:

பிளாசிப் போர் 1757 : ஐரோப்பிள காலாட்படை 1950, ஐரோப்பிய பீரங்கி படை – 100, ஆங்கிலேய மாலுமிகள் - 50, இந்திய சிப்பாய்கள் - 2100, வங்காளத்தில், இருந்த ஆங்கில இராணுவம் - 6000.

1857 ல் இந்திய இராணுவத்தில் 3,11,400 வீரர்களில் 2,65,900 வீரர்கள் இந்தியர்களாக இருந்தனர். உயர் பதவி அலுவலர்கள் அனைவரும் ஆங்கிலேயர்கள் ஆவர்.

**காவல் துறை:**

1765 ல் வங்காளத்தில் திவானி (வரிவசூல்) உரிமையை ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி பெற்ற போது “சர்க்கார்“ (கிராம மாவட்டங்கள்) என்ற ஆட்சிப் பிரிவுக்கு பொறுப்பு வகித்த பௌஜ்தார் வசம் முகலாய காவல்துறை சென்றது. அப்போது, நகரங்களை நிர்வகிக்கும் காவல் அலுவலர்களாக கொத்வால் இருந்தார். அதேவேளையில் கிராமங்கள் கிராம காவலாளிகளால்

பாதுகாக்கப்பட்டது. அவர்களை ஜமீன்தார்கள் சம்பளம் வழங்கி தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர்.

இந்தியாவில் முதன் முதலில் காவல் துறையை உருவாக்கியவர் காரன் வாலிஸ் பிரபு ஆவார். ஜமீன்தார்களை காவல் பணிகளிலிருந்து விடுவித்த காரன்வாலிஸ் 1791 ல் முறையான காவல் துறையை உருவாக்கினார். அவர் “தரோகா“ என்பவரை தலைவராகக் கொண்ட சரகங்கள் அல்லது “தானாக்கள்“ என்ற காவல் பகுதிகளை ஏற்படுத்தினார். அவர்கள் கிராமங்களிலும் காவல் பணி செய்ய அதிகாரம் வழங்கப்பட்டது. கிராமத்தை பரம்பரையாக நிர்வகித்து வந்த காவலர்கள் “சௌகிதார்கள்“ என்றழைக்கப்பட்டனர். பெரு நகரங்களில் பழைய முறையான கொத்வால் காவல் பணியே தொடந்தது. மேலும் ஒவ்வொரு வார்டுக்கும் ஒரு தரோகா நியமிக்கப்பட்டார். இந்த தரோகா முறை 1802 ல் மதராஸ் மாகாணத்திற்கும் விரிவுபடுத்தப்பட்டது.

மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பதவி உருவாக்குவதற்கு முன்னர், அனைத்து தானாக்களும் மாவட்ட நீதிபதியின் பொது மேற்பார்வையில் இருந்தது. அதன் பின் 1808 ல் ஒவ்வொரு தானாவிற்கும் ஒரு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் நியமிக்கப்பட்டார். பின்னர் காவல் துறையை நிர்வகிக்கும் பொறுப்பு மாவட்ட ஆட்சித் தலைவரிடம் ஒப்படைக்கப்பட்டது. காவல் துறையில் முக்கிய பணியானது ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக சதி செய்வதை தடுத்தலும். குற்றங்களை கையாள்வதும் ஆகும்.

**நீதித்துறை அமைப்பு:**

1772 ல் இரட்டை ஆட்சி முறை ஒழிக்கப்பட்டு வரிவசூல் செய்வதையும், நீதி வழங்கும் அதிகாரத்தையும் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி ஏற்றுக் கொண்டது. அதன் விளைவாக சிவில் நீதிமன்றம் என்றழைக்கப்பட்ட திவானி அதாலத் மற்றும் குற்றவியல் நீதிமன்றம் என்றழைக்கப்பட்ட பௌஜ்தாரி அதாலத் ஆகியன ஏற்படுத்தப்பட்டன. 1773 ஆம் ஆண்டு ஒழுங்கு முறைச் சட்டத்தின்படி கல்கத்தாவில் ஒரு உச்சநீதிமன்றம் அமைக்கப்பட்டது. இந்நீதிமன்றத்திற்கு ஒரு முதன்மை நீதிபதியும் மூன்று துணை நீதிபதிகளையும் பிரிட்டிஷ் மன்னர் நியமித்தார். இந்நீதிமன்றம் சிவில், குற்றவியல், திருச்சபை, மற்றும் பிரத்தியோக வழக்குகளை விசாரித்தது. கல்கத்தாவில் உள்ள உச்ச நீதிமன்றத்தின் மாதிரியில் 1801ல் மதராஸிலும், 1823 ல் பம்பாயிலும் உள்ள நீதிமன்றங்கள் நிறுவப்பட்டன. 1832 ல் வில்லியம் பெண்டிங் பிரபு ஜுரி முறையை வங்காளத்தில் கொண்டு வந்தார். சட்டங்களை தொகுக்க இந்திய சட்ட ஆணையம் ஒன்றும் அமைக்கப்பட்டது. நாடு முழுவதும் சட்டத்தின் ஆட்சி நடைமுறைப்படுத்தப்பட்டது. 1861 ஆம் ஆண்டு இந்திய உயர்நீதி மன்ற சட்டத்தின்படி கல்கத்தா, பம்பாய், மதராஸ் ஆகிய இடங்களில் பழைய உச்சநீதிமன்றங்களுக்கு பதிலாக மூன்று உயர் நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டன.

| |
|---|
| வங்காளத்தின், வில்லியம் கோட்டையில் முதல் உச்ச நீதிமன்ற நீதிபதி சர் எலிஜா இம்பே ஆவார்.<br>மதராஸ் உயர்நீதிமன்றத்தின் முதல் இந்திய தலைமை நீதிபதி சர் திருவாரூர் முத்துசாமி ஆவார். |

**துணைப்படைத் திட்டம் (1798):**

இந்தியாவில் இருந்த சுதேச அரசுகளை ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டில் கொண்டு வர வெல்லெஸ்லி பிரபுவால் அறிமுகப்படுத்தப்பட்ட திட்டமே துணைப்படைத்திட்டமாகும். இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சியை விரிவுபடுத்தவும் அரசியல் ஆதிக்கத்தை ஏற்படுத்தவும் இத்திட்டம் மிகச்சிறந்த கருவியாக பயன்படுத்தப்பட்டது. சுதேச அரசுகள் பாதுகாக்கப்பட்ட அரசுகள் என்றழைக்கப்பட்டது. அவ்வரசுகள் மீது “தலையாய அதிகாரம்“ செலுத்துபவராக ஆங்கிலேயர் இருந்தனர். படையெடுப்புகளிலிருந்து சுதேச அரசுகளை காப்பதும், உள்நாட்டு அமைதியை நிலைநாட்டுவதும் ஆங்கிலேயரின் கடமை என்ற நிலை உருவானது.

**துணைப்படைத் திட்டத்தின் முக்கிய அம்சங்கள்:**

- இத்திட்டத்தில் இணையும் இந்திய அரசர் தன்னுடைய படையை கலைத்துவிட்டு ஆங்கிலேயரின் படையை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

- சுதேச அரசின் தலைமையகத்தில் ஆங்கிலேயரின் பிரதிநிதி ஒருவர் இருப்பார்.

- ஆங்கிலேயரின் படையை பராமரிக்கவும், படை வீரர்களின் ஆண்டுச் சம்பளம் வழங்குவதற்காகவும், நிரந்தரமாக சில பகுதிகளை அந்நாட்டு அரசர் ஆங்கிலேயருக்கு வழங்க வேண்டும்.

- ஆங்கிலேயரைத் தவிர மற்ற ஐரோப்பிய அலுவலர்கள் அனைவரும் அந்நாட்டை விட்டு வெளியேற வேண்டும்.

- சுதேச நாட்டு அரசர் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியின் அனுமதி பெற்ற பின்னரே அயல் நாடுகளுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும்.

- அந்நிய அரசுகளின் தாக்குதல் மற்றும் உள்நாட்டு கலவரம் நடைபெறும்போது ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி அந்நாட்டை பாதுகாக்கும்.

**ஆங்கிலேயருக்கு கிடைத்த நன்மைகள்:**

- ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி, இந்திய சுதேச அரசர்களின் செலவிலேயே தன்னுடைய படையை பராமரித்தது.

- சுதேச அரசர்களிடம் பணியில் இருந்த அனைத்து பிரெஞ்சுக்காரர்களும் நீக்கப்பட்டனர். பிரெஞ்சுக்காரர்கள் இந்தியாவில் மீண்டும் எழுச்சி பெறும் அபாயம் முற்றிலும் நீங்கியது.

- கம்பெனி, சுதேச அரசுகளின் வெளியுறவுக் கொள்கையினை தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தது.

- வெல்லெஸ்லி பிரபுவின் இந்த இராஜதந்திர முயற்சி ஆங்கிலேயரை இந்தியாவில் தலையாய சக்தியாக மாற்றியது. இவர் “இந்தியாவில் ஆங்கிலேய பேரரசு“ என்பதை இந்தியாவின் ஆங்கிலேய பேரரசு“ என்று மாற்றினார்.

**சுதேச அரசுகளுக்கு ஏற்பட்ட இழப்புகள்:**

- துணைப்படைத் திட்டம் இந்திய சுதேச அரசர்களை பலவீனமானவர்களாகவும், பொறுப்பற்றவர்களாகவும் மாற்றியது.

- பிரிட்டிஷ் கம்பெனியால் பாதுகாக்கப்பட்ட அரசர்கள் தங்கள் குடிமக்களுக்கு ஆற்ற வேண்டிய கடமைகளை மறந்து, அவர்களை சுரண்டினர்.

| |
|---|
| துணைப்படைத் திட்டத்தை ஏற்றுக் கொண்ட முதல் நாடு ஹைதராபாத் (1798). அதனை தொடர்ந்து ஏற்றுக்கொண்ட இந்தியா அரசுகள் தஞ்சாவூர் (1799) அயோத்தி (1801), பேஷ்வா (1802), போன்ஸ்லே (1803), குவாலியர் (1804), இந்தூர் (1817) ஜெய்பூர், உதய்பூர் மற்றும் ஜோத்பூர் (1818). |

**வாரிசு இழப்புக் கொள்கை (1848)**

டல்ஹௌசி பிரபு இந்தியாவில் ஆங்கிலேயரின் ஆதிக்கத்தை உயர்த்துவதில் முதன்மை சிறப்பியாக இருந்தார். அவர் ஓர் ஏகாதிப்பத்தியவாதி ஆவார். ஆங்கிலேய பேரரசை விரிவுபடுத்துவதற்காக அவர் வாரிசு இழப்புக் கொள்கை என்ற புதிய கொள்கையை கொண்டு வந்தார். 1848 ஆம் ஆண்டு அவர் அறிவித்த இக்கொள்கையின் படி, சுதேச மன்னர்கள் ஆங்கிலேயரின் அனுமதி இன்றி வாரிசுகளை தத்தெடுக்க நேரிடும் போது, மன்னரின் சொத்துக்கள் தத்தெடுத்த பிள்ளைக்கும், மன்னரின் ஆட்சிப்பகுதி ஆங்கிலேயரின் தலையாய சக்திக்கும் செல்ல

நேரிடும் எனப்பட்டது. இக்கொள்கையினை இந்தியர்கள் கடுமையாக எதிர்த்தனர். 1857ஆம் ஆண்டு பெரும் புரட்சிக்கு இக்கொள்கை முக்கிய காரணமாக அமைந்தது.

| |
|---|
| வாரிசு இழப்புக் கொள்கையின் மூலம் டல்ஹௌசி பிரபு இணைத்துக் கொண்ட பகுதிகள்: சதாரா (1848), ஜெய்த்பூர், சம்பல்பூர் (1849), பகத் (1850), உதய்பூர் (1852), ஜான்சி (1853) மற்றும் நாக்பூர் (1854) |

**இந்தியா ஆங்கிலேயர்கள் வெற்றி பெற்றதற்கான காரணங்கள்:**

- மிகப்பெரிய கடல் வலிமை
- நெசவுத் தொழில் வளர்ச்சி
- அறிவியல் ரீதியாக பிரிக்கப்பட்ட தொழிலாளர்கள்
- பொருளாதார வளர்ச்சி மற்றும் ஆங்கிலேயரின் திறமைமிக்க இராஜதந்திரம்.
- இந்திய வணிகர்களிடையே நிலவிய பாதுகாப்பின்மை உணர்வுகள்
- இந்திய அரசர்களின் சமத்துவமின்மை மற்றும் அறியாமை

**முடிவுரை:**

பிளாசிப் போர் இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சிக்கு அடித்தளம் அமைத்தது. ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியின் நிர்வாகம் மக்களின் நலனில் அக்கறை செலுத்தவில்லை. இது ஏகாதிபத்திய, விரிவாக்க, மற்றும் சுரண்டல் கொள்கையை கொண்டிருந்தது. இக்கம்பெனி துணைப்படைத் திட்டத்தின் மூலமும், வாரிசு இழப்புக் கொள்கை மூலமும் இந்தியாவின் பெரும்பான்மையான பகுதிகளை ஆங்கிலேய ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தது. இக்கொள்கைகள் 1800 – 01 ஆம் ஆண்டு தென்னிந்திய கலகத்திற்கும், 1806 ஆம்ஆண்டு வேலூர் கலகத்திற்கும், 1857 ஆம் ஆண்டு பெருபுரட்சிக்கும் இட்டுச் சென்றது.

அலகு – 3


## கிராம சமூகமும் வாழ்க்கை முறையும்

**அறிமுகம்:**

காலனி ஆதிக்கத்திற்கு முன் இந்தியப் பொருளாதாரமானது, வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரமாக இருந்தது. இக்காலத்தில் வேளாண்மை மக்களின் முதல்நிலைத் தொழிலாக இருந்தது. நெசவுத்தொழில், சர்க்கரை தொழில், எண்ணெய் தொழில் இன்னும் பிற தொழில்கள் வேளாண்மையைச் சார்ந்தே நடைபெற்றன. ஆங்கில அரசானது இந்தியாவின் பழமையான வேளாண்மை முறையையும் மற்றும் நிலவருவாய் கொள்கையையும் ஏற்றுக் கொள்ளவில்லை. நிலையான நில வருவாய் திட்டம், மகல்வாரி திட்டம், இரயத்துவாரி திட்டம் என்னும் மூன்று பெரிய நிலவருவாய் மற்றும் நில உரிமை திட்டத்தை ஆங்கில அரசு இந்தியாவில் அறிமுகப்படுத்தியது. இத்திட்டங்களின் மூலம் விவசாயிகளுக்கெதிரான பொருளாதார சுரண்டல் முறை பிற்காலத்தில் அவர்களை ஆங்கிலேயருக்கு எதிராக புரட்சியில் ஈடுபட வைத்தது.

**ஆங்கிலேயர்களின் ஆட்சியின் கீழ் நிலவருவாய் கொள்கை:**
**நிலையான நிலவரி திட்டம்:**
**காரன்வாலிஸ் பிரபு**

1765 ல் இராபர்ட் கிளைவ் வங்காளம், பீகார் மற்றும் ஒரிசா ஆகிய பகுதிகளில் வரி வசூலிக்கும் உரிமையை பெற்ற பின்பு அங்கு அவர் ஓராண்டு நில வருவாய் திட்டத்தை நடைமுறைப்படுத்தினார். அதன் பிறகு வாரன் ஹேஸ்டிங்ஸ் தலைமை ஆளுநராக பதவியேற்ற பின்பு ஓராண்டு நிலவருவாய் திட்டத்தை ஐந்தாண்டு நில வருவாய் திட்டமாக மாற்றி பின்பு ஓராண்டு திட்டமாக மாற்றினார். ஆனால் காரன்வாலிஸ் பிரபு தலைமை ஆளுநரான பிறகு இத்திட்டத்தை பத்தாண்டு நில வருவாய் திட்டமாக 1793ல் மாற்றினார். இத்திட்டம் நிலையான நிலைவருவாய் திட்டம் என்றழைக்கப்படுகிறது.




இத்திட்டம் வங்காளம், பீகார், ஒரிசா, உத்திர பிரதேசத்தில் வாரணாசி பகுதி மற்றும் வடக்கு கர்நாடகம் ஆகிய பகுதிகளில் கொண்டுவரப்பட்டது. ஆங்கில இந்தியாவின் மொத்த நிலப்பரப்பில் 19மூ நிலப்பரப்பில் நடைமுறைப் படுத்தப்பட்டிருந்த இத்திட்டம் ஜமீன்தாரி, ஜாகீர்தாரி, மல்குஜாரி மற்றும் பிஸ்வேதாரி என்னும் பல பெயர்களால் அழைக்கப்பட்டது.

**நிலையான நிலவரி திட்டத்தின் சிறப்பு கூறுகள்:**

- ஆங்கில கிழக்கிந்திய கம்பெனிக்கு முறையாக வரி செலுத்தும் வரை ஜமீன்தார்கள் நில உடைமையாளர்களாக அங்கீகரிக்கப்பட்டனர்.

- விவசாயிகளிடமிருந்து வரியை வசூல் செய்யும் அரசின் முகவர்களாக ஜமீன்தார்கள் செயல்பட்டனர்.

- ஜமீன்தார்கள் வணிகக்குழுவிற்கு செலுத்தி வந்த வரி நிலையாக நிர்ணயிக்கப்பட்டு, எந்த சூழ்நிலையிலும் உயர்த்தப்படமாட்டாது. என உறுதியளிக்கப்பட்டது.

- விவசாயிகளிடமிருந்து வசூலித்த 10/11 பங்கு வரியினை ஜமீன்தார்கள் ஆங்கில அரசுக்கு செலுத்தினர்.

- ஜமீன்தார்கள், விவசாயிகளுக்கு பட்டா (எழுதப்பட்ட ஒப்பந்தம்) வழங்கினர். இதன் மூலம் விவசாயிகள் அந்நிலத்தை உழும் காலம் வரை குத்தகைதாரர்களாக கருதப்பட்டனர்.

- அனைத்து நீதித்துறை அதிகாரங்களும் ஜமீன்தாரர்களிடமிருந்து திரும்ப பெறப்பட்டது.

- ஆங்கில அரசுக்கு நிலையான வருவாயை கிடைப்பதை உறுதி செய்தது.

**குறைகள்:**

- ஆங்கிலேய அரசு விவசாயிகளுடன் நேரடியாக தொடர்பு கொள்ளவில்லை.

- விவசாயிகளின் உரிமைகள் மறுக்கப்பட்டதோடு, ஜமீன்தார்களின் பொறுப்பில் விடப்பட்டனர்.

**விவசாயிகள் பெரும்பாலும் அடிமைகளாகவே நடத்தப்பட்டனர்.**

- இந்த திட்டத்தினால் ஜமீன்தார்கள் சோம்பேறிகளாகவும், ஆடம்பரப் பிரியர்களாகவும் மாறினர்.

- வங்காளத்தின் பல கிராமப்புறங்களில் ஜமீன்தார்களுக்கும், விவசாயிகளுக்குமிடையே பல மோதல்கள் ஏற்பட்டன.

**இரயத்துவாரி முறை:**
**தாமஸ் மன்றோ**

இரயத்துவாரி முறை 1820ல் தாமஸ்மன்றோ மற்றும் கேப்டன் ரீட் என்பவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது. இம்முறை மதராஸ், பம்பாய், அசாம் பகுதிகள் மற்றும் கூர்க் ஆகிய இந்திய மாகாணங்களில் கொண்டுவரப்பட்டது. இம்முறையின் மூலம் நிலத்தின் உரிமையானது விவசாயிகளின் வசம் ஒப்படைக்கப்பட்டது. இதனால் விவசாயிகள் நிலத்தின் உரிமையாளராயினர். ஆங்கிலேய அரசு நேரடியாகவே விவசாயிகளிடமிருந்து வரிவசூலைப் பெற்றது. தொடக்கத்தில் நிலவருவாயனது விளைச்சலில் பாதி என நிர்ணயிக்கப்பட்டது. பின்னர் இது தாமஸ் மன்றோ அவர்களால் விளைச்சலில் மூன்றில் ஒரு பங்காக குறைக்கப்பட்டது. இம்முறையில் நில வருவாயானது மண் மற்றும் பயிரின் தன்மையின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டது.

பொதுவாக 20 அல்லது 30 ஆண்டுகளுக்கு ஒருமுறை நிலத்தின் மீதான குத்தகை மாற்றியமைக்கப்பட்டது. இத்திட்டத்தில் விவசாயிகளின் நிலைமை மிகவும் பாதுகாப்பானதாக இருந்தது. உண்மையில், அரசு விவசாயிகளிடமிருந்து நிலவருவாயை வரியாக அல்லாமல் குத்தகையாகவே பெற்றுக் கொண்டது.

**இயத்துவாரி முறையின் சிறப்பு கூறுகள்:**

- **வருவாய் ஒப்பந்தம் நேரடியாக விவசாயிகளுடன் செய்துகொள்ளப்பட்டது.**
- **நில அளவு மற்றும் விளைச்சலின் மதிப்பீடு கணக்கிடப்பட்டது.**
- **அரசு, விளைச்சலில் 45 லிருந்து 50 சதவீதம் வரை வரியாக நிர்ணயம் செய்தது.**

**இரயத்துவாரி முறையால் ஏற்பட்ட விளைவுகள்:**

- **பெரும்பாலா பகுதிகளில் நிலவருவாய் மிக அதிகமாக நிர்ணிக்கப்பட்டது. சிறப்பான பருவக் காலங்களில் கூட விவசாயிகள் நிலவரி செலுத்துவதற்கு மிகவும் சிரமப்பட்டனர்.**
- **அரசு ஜமீன்தார்களுக்குப் பதிலாக விவசாயிகளை சுரண்டியது.**

**மகல்வாரி முறை:**
**வில்லியம் பெண்டிங் பிரபு**

மகல்வாரி முறை, என்பது ஹோல்ட் மெகன்சி என்பவரது சிந்தனையில் உதித்த, ஜமீன்தாரி முறையின் மாற்றியமைக்கப்பட்ட வடிவமே ஆகும். கங்கைச் சமவெளி, வடமேற்கு மாகாணங்கள், மத்திய இந்தியாவின் சில பகுதிகள் மற்றும் பஞ்சாப் போன்ற பகுதிகளில் 1822ல் அறிமுகப்படுத்தப்பட்டது. இராபர்ட் மெர்தின்ஸ் பர்ட் என்பவரின் வழிகாட்டுதலின்படி 1833ல் வில்லியம் பெண்டிங் பிரபு இம்முறையில் சில அடிப்படை மாற்றங்களை கொண்டு வந்தார். மகல் அல்லது கிராம விளைச்சலின் அடிப்படையில் இம்முறையில் வருவாய் மதிப்பீடு செய்யப்பட்டது. மகல் பகுதியின் அனைத்து உரிமையாளர்களும் நிலவருவாய் செலுத்துவதற்கு கூட்டு பொறுப்புயவர்களாவர். தொடக்கத்தில், மொத்த விளைச்சலில் மூன்றில் இரண்டு பங்கு நிலவருவாய் அரசின் பங்காக நிர்ணயிக்கப்பட்டது. பின்னர் வில்லியம் பெண்டிங் பிரபு மொத்த விளைச்சலில் நிலவருவாய் 50 சதவீதும் எனக் குறைத்தார். இம்முறையில் நிலவருவாயை கிராமம் முழுவதும் வசூல் செய்து அரசுக்கு செலுத்த ஒரு கிராமத் தலைவர் (Lambardar) நியமிக்கப்பட்டிருந்தார். இந்த முறை முதலில் ஆக்ரா, அயோத்தி போன்ற இடங்களில் அமுல்படுத்தப்பட்டது. பின்னர், ஐக்கயி மாகாணங்களின் பிற பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. இத்திட்டத்திலும் அதிகமான வரிச்சுமைகள் அனைத்தும் விவசாயிகள் மீதே விழுந்தது.

**மகல்வாரி முறையின் சிறப்பு கூறுகள்**

- **கிராமத் தலைவர் அரசுக்கும், கிராம மக்களுக்குமிடையே இடைத் தரகராக செயல்பட்டார்.**
- **இத்திட்டம் கிராமவாரியான மதிப்பீடாக இருந்தது. ஒரே நபர் பல கிராமங்களை தன் வசம் வைத்திருந்தார்.**
- **கிராம நிலங்களுக்கு, கிராமத்தை சேர்ந்த சமுதாயத்தினரே உரிமையாளராக இருந்தனர்.**

**மகல்வாரி முறையால் ஏற்பட்ட விளைவுகள்:**

- **கிராமத் தலைவர், சலுகைகளை தமது சொந்த விருப்பங்களின் அடிப்படையில் தவறாகப் பயன்படுத்தினார்.**

- **இம்முறையானது விவசாயிகளுக்கு இலாபகரமானதாக இல்லை.**

- **இம்முறையானது ஜமீன்தாரி முறையின் திருத்தியமைக்கப்பட்ட வடிவமாக இருந்தது. மேலும் இது கிராமத்தின் உயர் வகுப்பினருக்கு இலாபகரமானதாக அமைந்தது.**

**விவசாயிகளின் மீது ஆங்கில நிலவருவாய் முறையின் தாக்கங்கள்:**

அனைத்து நிலவரி முறைகளும் பொதுவாக, நிலத்திலிருந்து அதிகபட்ச வருமானம் பெறுவதாகவே இருந்தது. இதனால் நில விற்பனை அதிகரிப்பு மற்றும் விவசாயத் தொழில் அழிவிற்கு வழிவகுத்தது.

விவசாயிகள் அதிக வரிவிதிப்பினால் பாதிக்கப்பட்டனர். அதிக வரிச்சுமை மற்றும் பஞ்சத்தினால் மக்கள் வறுமையாலும், கடன்சுமையாலும் அவதிப்பட்டனர். இதனால் விவசாயிகள் நிலத்தை விலைக்கு வாங்குவோர் மற்றும் வட்டிக்குப் பணம் தருபவர்களை தேடிச் சென்றனர். அவர்கள் விவசாயிகளிடமிருந்த நிலத்தை விலைக்கு வாங்கி பெரும் செல்வந்தர்களாயினர்.

ஜமீன்தார்கள், வட்டிக்காரர்கள், வழக்கறிஞர்கள் ஆகியோர்களால் ஏழை விவசாயிகள் சுரண்டப்பட்டனர்.

இந்திய கிராமங்களுக்கான நிலைப்புத் தன்மையும் தொடர்ச்சியான நிலையும் அசைக்கப்பட்டன.

ஆங்கிலேய இறக்குமதி பொருட்களால் இந்தியக் குடிசைத் தொழில்கள் மறைந்தன. விவசாயிகள் வருமானத்திற்கு வேறு வழியின்றி தவித்தனர்.

பழமையான பழக்க வழக்கங்கள் மாற்றப்பட்டு புதிய சட்ட அமைப்பு, நீதிமன்ற நடைமுறைகள் வழக்கத்திற்கு வந்தன.

நிலத்தின் உண்மையான உரிமையாளர்களாகவும், உற்பத்தியின் பெரும் பங்குதாரர்களாகவும் இருந்த விவசாயிகளுடைய உழைப்பின் பலனானது, ஆங்கிலேயரின் கொள்கையால், ஒரு குறிப்பிட்ட சலுகையை பெற்ற சமுதாயத்திற்கு மட்டுமே நன்மையளிப்பதாக இருந்தது.

**விவசாயிகளின் புரட்சிகள்:**

இந்தியாவில் ஆங்கில ஆட்சியானது வேளாண்மை முறையில் பல மாற்றங்களை கொண்டு வந்தது. புதிய வேளாண்மை யுக்திகளால் பழைய வேளாண் முறை மறைந்து போனது. ஜமீன்தார்கள் நில உரிமையாளர்களாக மாறினர், எந்தளவிற்கு முடியுமோ அந்தளவிற்கு, விவசாயிகளின் உழைப்பு ஜமீன்தார்களால் சுரண்டப்பட்டது. மேலும் விவசாயிகளின் வாழ்க்கை முறை மிகவும் துயரமானதாக இருந்தது. தாங்கள் எல்லையில்லா அளவில் சுரண்டப்படுவதை உணர்ந்த விவசாயிகள், இந்த சுரண்டலில் இருந்து பாதுகாத்து கொள்ள 19 மற்றும் 20 ஆம் நூற்றாண்டுகளில், ஆங்கிலேயர்களுக்கும் ஜமீன்தார்களுக்கும் எதிராக பல புரட்சி இயக்கங்களிலும், கலகங்களிலும் ஈடுபட்டனர்.

**சந்தால் கலகம் (1855- 56)**

1855 – 56 ல் விவசாயிகளின் எழுச்சியாகக் கருதப்பட்ட முதலாவது கலகம் சந்தால் கலகமாகும். பீகாரில் உள்ள ராஜ்மகால் குன்றுகளுக்கு அருகிலுள்ள பகுதிகளில் சந்தால் மக்கள் வேளாண்மை செய்து வந்தனர். சந்தால்களின் அறியாமையை சாதகமாக பயன்படுத்திக் கொண்ட, நகர்ப்புற நிலக்கிழார்கள் மற்றும் வட்டிக்குப் பணம் தருவோர் சந்தால்களின் நிலங்களை அபகரித்துக் கொள்ள ஆரம்பித்தனர். இது அவர்களிடையே கசப்பான உணர்வை ஏற்படுத்தி 1856ல் ஆயுதம் ஏந்திய புரட்சிக்கு இட்டுச் சென்றது. இதனைத் தொடர்ந்து, சந்தால்கள் தங்களை அன்னிய நாட்டு ஆக்கிரமிப்பு சக்திகளிலிருந்து விடுவித்து கொள்வது மட்டுமல்லாமல் தங்களுக்கென்று ஒரு அரசாங்கத்தை ஏற்படுத்திக் கொள்ள, சித்து மற்றும் கங்கு என்ற இரண்டு சந்தால் சகோதரர்களின் தலைமையின் கீழ் 10,000 வீரர்கள் ஒன்று கூடினர். இக்கூட்டத்தினரின் புரட்சி ஒரு மாதத்திற்குள் வலிமையான சக்தியினை பெற்றது. ஐரோப்பிய பண்ணையாளர்கள், ஆங்கிலேய அலுவலர்கள், இரயில்வே பொறியாளர்கள், ஜமீன்தார்கள் மற்றும் வட்டிக்குப் பணம் கொடுப்போர் ஆகிய அனைவரும் புரட்சியாளர்களால் தாக்கப்பட்டனர். புரட்சியானது பிப்ரவரி 1856 வரை தொடர்ந்தது. புரட்சியின் தலைவர்கள் கைது செய்யப்பட்டதை தொடர்ந்து, கலகமானது கடுமையாக அடக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து சந்தால்கள் வசித்த பகுதிகளை சந்தால் பர்கானா என அரசு அறிவித்தது. அதன்படி சந்தால்களின் நிலங்களும், அடையாளமும் அன்னிய ஆக்ரமிப்பாளர்களிடமிருந்து பாதுகாக்கப்பட்டன.

**இண்டிகோ கலகம் (அவுரி புரட்சி 1859 – 60)**

வங்காள அவுரி சாகுபடியாளர்களின் வேலை நிறுத்தம் அதிகளவில் பரவி தீவிர விவசாய புரட்சியாக மாறியது. ஐரோப்பிய இண்டிகோ தோட்டக்காரர்கள், விவசாயிகளுக்கு மிகவும் தீமை தரும் வகையில் இண்டிகோவை வளர்ப்பதற்கு குத்தகை விவசாயிகளை கட்டாயப்படுத்தினர். மேலும் குத்தகை விவசாயிகள், தாங்கள் விளைவிக்கும் அவுரியை தங்களுக்கு குறைந்த விலைக்கு

விற்கும்படியும், குத்தகை முன்பணத்தை பின்னாளில் அவர்களுக்கு பயன்படும் வகையில் முன்கூட்டியே பெற்று கொள்ளும்படியும் வற்புறுத்தப்பட்டனர். மேலும், ஆள் கடத்தல், கொள்ளையடித்தல், கசையடி கொடுத்தல், எரித்தல் போன்ற சம்பவங்களும் நடந்தன.

செப்டம்பர் 1859ல் திகம்பர் பிஸ்வாஸ் மற்றும் பிஸ்னு சரண் பிஸ்வாஸ் ஆகியோரால் நாதியா மாவட்டத்தில் நடைபெற்ற கலகங்கள் ஐரோப்பிய பண்ணையாளர்களின் கடுமையான அடக்குமுறைகளால் கைவிடப்பட்டன. அதன் பின்னர் ஐரோப்பிய தொழிற்சாலைகள் எரிக்கப்பட்டு, கலகமானது வேறு இடங்களுக்கு பரவியது. நிலைமையை கட்டுக்குள் கொண்டு வர அரசு 1860 ல் ஒரு அவுரி ஆணையத்தை அமைத்தது. அந்த ஆணையத்தின் பரிந்துரைப்படி 1862 சட்டம் பாகம் ஆறினை (VI) (Part ofthe Act of 1862) உருவாக்கியது. ஐரோப்பிய பண்ணையாளர்களின் அடக்கு முறைக்கு பயந்து வங்காளத்தின் அவுரி விவசாயிகள் பீகார் மற்றும் உத்திரப் பிரதேசத்தில் குடியேறினர். இந்து தேசபக்தன் என்ற செய்தித்தாள் சாகுபடியாளர்களின் துயரங்களை பலமுறை வெளிச்சத்திற்கு கொண்டு வந்தது. அதேபோல, தீனபந்து மித்ரா என்பவர், வங்காள அவுரி சாகுபடியாளர்களின் துயரங்களை மக்கள் மற்றும் அரசின் கவனத்திற்குக் கொண்டுவர நீல் தர்பன் (Nil Darpan) என்ற ஒரு நாடகத்தை எழுதினார்.

**பாப்னா கலகம் (1873 – 76)**

பாப்னா விவசாய எழுச்சி என்பது விவசாயிகளால் நடத்தப்பட்ட, ஜமீன்தார்களின் அடக்குமுறைக்கு எதிரான இயக்கமாகும். இக்கலகம் வங்காளத்தின் பாப்னாவில் உள்ள யூசுப்சாகி பர்கானாவில் கேசப் சந்திரா ராய் என்பவரால் ஆரம்பிக்கப்பட்டது. ஜமீன்தார்கள், விவசாயிகளிடமிருந்து, சட்டத்திற்கு புறம்பான முறையில், வற்புறுத்தி வரி வசூலித்தல், அதிகப்படியான வாரம் (வரி) வசூலித்தல், மற்ற பிற வரிகளையும் வழக்கமாக வசூல் செய்தனர். விவசாயிகள் வாடகை செலுத்தவில்லை என்ற போலி காரணங்களை கூறி அடிக்கடி நிலத்திலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

நாளடைவில் ஜமீன்தார்களால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் பெருங்கூட்டமாகக் கூடி கிராமங்கள் தோறும் சென்று ஜமீன்தார்களின் அச்சுறுத்தல்களை எடுத்துக்கூறி மற்ற விவசாயிகளும் தங்களுடன் இணையும்படி செய்தனர். போராட்ட செலவினங்களை கட்டுப்படுத்த விவசாயிகளிமிருந்து நிதி திரட்டப்பட்டது. போராட்டம் படிப்படியாக பாப்னா முழுவதும் பரவி, பின்னர் கிழக்கு வங்காளத்தின் மற்ற மாவட்டங்களுக்கும் பரவியது. அப்பகுதி எங்கும் விவசாய சங்கங்கள் அமைக்கப்பட்டன. போராட்டத்தின் முதன்மை நோக்கம் சட்டத்தை எதிர்ப்பதாக இருந்தது.

ஜமீன்தார்கள் விவசாயிகளை கட்டாயப்படுத்திய போது மட்டும் மிகச் சிறிய அளவில் வன்முறை நடைபெற்றது. போராட்டத்தில், ஜமீன்தாரர்களின் வீடுகளை, கொள்ளையடித்ததாக சில நிகழ்வுகளே இருந்தன. நீதிமன்ற ஆணைகளை காவல் நிலையங்கள் செயற்படுத்த முயன்ற போது அதனை எதிர்த்து விவசாயிகள், ஒரு சில தாக்குதல்களை காவல் நிலையங்கள் மீதும் தொடுத்தனர். ஜமீன்தார்களும் ஜமீன்தார்களின் முகவர்களும் மிகவும் அரிதாகவே கொல்லப்பட்டனர் அல்லது காயப்படுத்தப்பட்டனர். போராட்டத்தின் வாயிலாக விவசாயிகள் சட்ட விழிப்புணர்வு மற்றும் அவர்களது சட்ட உரிமைகளை மேம்படுத்தினர். மக்களை ஒருங்கிணைத்து சங்கங்களை உருவாக்கி அமைதியான முறையில் எதிர்க்கும் ஆற்றலையும், வலிமையையும், விழிப்புணர்வையும் வளர்த்துக் கொண்டனர்.

**தக்காண கலகம் (1875)**

1875 ஆம் ஆண்டு பூனா மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் ஒரு கலத்தில் ஈடுபட்டனர். அது தக்காண கலகம் என்றழைக்கப்பட்டது. அப்பகுதி விவசாயிகள், ஆரம்பத்தில் தொடர்ந்து தங்கள் நிலங்களை அபகரித்துக் கொண்டிருந்த உள்ளூர் வட்டிக்காரர்களின் அடக்குமுறையை எதிர்த்துப் புரட்சி செய்தனர். பூனா மாவட்டத்தின் ஒரு கிராமத்தில், ஒரு வட்டிக்காரரின் சொத்துக்களை கைப்பற்றி, அவரை கிராமத்திலிருந்து வெளியேற்றிய பொழுது புரட்சி தொடங்கியது. மேலும் இப்புரட்சி படிப்படியாக 33 கிராமங்களுக்குப் பரவியது. விவசாயிகள் மார்வாரி சகுகாரர்களின் சொத்துகளை கொள்ளையடித்தனர். சகுகாரர்கள், காவலர்களின் உதவியை நாடியபோது போராட்டம் வன்முறையாக மாறியது. இராணுவம் வரவழைக்கப்பட்டு அப்புரட்சி கட்டுப்படுத்தப்பட்டது.

இப்புரட்சியின் விளைவாக "தக்காண விவசாயிகள் மீட்பு சட்டம்" நிறைவேற்றப்பட்டு அதன் மூலம் விவசாயிகளின் குறைகள் களையப்பட்டது.

**பஞ்சாப் விவசாயிகள் இயக்கம் (1890 – 1900)**

நகர்ப்புற வட்டிக்காரர்களிடம் கடனைப் பெற்று, கடனை திருப்பி செலுத்தத் தவறிய விவசாயிகள், தங்கள் நிலத்தின் மீது வட்டிக்கடைக்காரர்கள் மேற்கொண்ட ஒடுக்கு முறைகளை விரைந்து தடுக்கும் பொருட்டு பஞ்சாப் விவசாயிகள் புரட்சியில் ஈடுபட்டனர். ஆங்கிலேய அரசு இப்பகுதியில் எந்த ஒரு புரட்சி நடைபெறுவதையும் விரும்பவில்லை, ஏனெனில் அப்பகுதியில் இருந்துதான் ஆங்கிலேய இராணுவத்திற்கு வீரர்கள் தேர்வு செய்யப்பட்டனர். பஞ்சாப் விவசாயிகளைப் பாதுகாப்பதற்காக 1900ல் "பஞ்சாப் நில உரிமை மாற்று சட்டம்" நிறைவேற்றப்பட்டு சோதனை முறையில் செயற்படுத்தப்பட்டது. பஞ்சாபில் இச்சட்டம் சிறப்பாக செயல்பட்டதால் இந்தியாவின் மற்ற பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. இச்சட்டத்தின் படி, பஞ்சாப் மக்கள் விவசாயிகள், சட்ட அங்கீகாரம் பெற்ற விவசாயிகள், வட்டிக்கடைக்காரர்கள் உட்பட இதர மக்கள் என்று மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டனர். முதல் பிரிவு மக்களிடமிருந்து மற்ற இரண்டு பிரிவு மக்களுக்கும் நிலத்தை விற்பது மற்றும் அடமானது வைப்பது மீதான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.

**சம்பரான் சத்தியாகிரகம் (1917 – 18)**

பீகார் மாநிலத்தில் உள்ள சம்பரான் என்ற இடத்தில் ஐரோப்பிய பண்ணையாளர்கள் சட்டத்திற்குப் புறம்பான மற்றும் மனிதத் தன்மையற்ற முறைகளில், மிகவும் நியாயமற்ற விலைக்கு அவுரி சாகுபடியை செய்தனர். சம்பரான் இந்திய விவசாயிகள் (அவுரி சாகுபடியாளர்கள்) தங்களது மொத்த நிலத்தில் 20ல் 3 பங்கில் மட்டும் அவுரியை சாகுபடி செய்து, அதனையும் ஐரோப்பிய தோட்டக்காரர்களுக்கு அவர்கள் நிர்ணயித்த விலைக்கே விற்க

சம்பரான் தீன்கதியா என்ற நடைமுறையின் கீழ் பிணைக்கப்பட்டிருந்தார்கள். மேலும் அவர்கள் ஐரோப்பிய பண்ணையாளர்களால் சட்டவிரோத பணம் பறிப்பு, மற்றும் அடக்கு முறை போன்ற நிகழ்வுகளுக்கு ஆளாகினர். இந்த விவசாயிகளின் பிரச்சினையை அறிந்து கொண்ட மகாத்மா காந்தி அவர்களுக்கு உதவ முன்வந்தார். அரசு ஒரு விசாரணைக் குழுவை அமைத்து, மகாத்மா காந்தியை அக்குழுவின் ஓர் உறுப்பினராக சேர்த்துக் கொண்டது. விவசாயிகளின் குறைகள் விசாரிக்கப்பட்டு இறுதியில், மே, 1918ல் "சம்பரான் விவசாயச் சட்டம்" நிறைவேற்றப்பட்டது.

**கோடா (கைரா) சத்தியாகிரகம் (1918)**

1918ல் குஜராத்தின் கேடா மாவட்டத்தில், இடையராத பஞ்சத்தின் காரணமாக விவசாயம் பொய்த்தது. ஆனால் நிலவரி முழுவதையும் செலுத்த விவசாயிகளை அரசு அறிவுறுத்தியது.

இதன் விளைவாக கேடா மாவட்டத்தில் உள்ளூர் விவசாயிகள் வரிகொடா இயக்கத்தை தொடங்கினர். அவ்வியக்கத்திற்கு காந்தியடிகள் தலைமை ஏற்றார்.

பஞ்சத்தின் நிலைகளை அரசுக்கு எடுத்துக்கூறி முழு பலத்துடன் சத்தியாகிரக முறையில் போராடும்படி காந்திஜி விவசாயிகளை ஆயத்தப்படுத்தினார். மேலும், விவசாயிகள் அச்சமின்றி எல்லா எதிர்ப்புகளையும் சந்திக்க ஊக்கமளித்தார். அவரது அழைப்புக்கு, முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு விவசாயிகளின் ஆதரவு இருந்தது. மற்றும் அரசாங்கம் விவசாயிகளுடன் ஒரு தீர்வுக்கு வரவேண்டியிருந்தது. இக்காலக் கட்டத்தில் சர்தார் வல்லபாய் பட்டேல் இந்திய சுதந்திரப் போராட்டத்தின் ஒரு முக்கியமான தலைவராக உருவானார்.

**மாப்ளா கிளர்ச்சி (1921)**

மாப்ளா என்று அழைக்கப்பட்ட முஸ்லீம் விவசாயிகள் (கேரளா), இந்து ஜமீன்தார்கள் (ஜென்மிஸ்) மற்றும் ஆங்கில அரசால் அடக்கப்பட்டு சுரண்டப்பட்டனர். இதுவே இப்புரட்சிக்கு முதன்மை காரணமாக இருந்தது.

ஏப்ரல் 1920ல் நடைபெற்ற மலபார் மாவட்ட மாநாட்டின் மூலம் மாப்ளா விவசாயிகள் உத்வேகம் அடைந்தனர். அம்மாநாடு குத்தகைதாரர்களுக்கு ஆதரவளித்து, நிலக்கிழார் - குத்தகைதாரர் இடையில் உள்ள உறவினை ஒழுங்குப்படுத்த சட்டம் இயற்ற கோரியது. ஆகஸ்ட் 1921ல் மாப்ளா விவசாயிகள், ஜமீன்தார்களின் அடக்குமுறைக்கு எதிராக கிளர்ச்சியில் ஈடுபட்டனர். கிளர்ச்சியின் ஆரம்பத்தில் மாப்ளா விவசாயிகள் காவல் நிலையங்கள், பொது அலுவலகங்கள், செய்தி தொடர்பு சாதனங்கள், அடக்கு முறையில் ஈடுபட்ட நிலக்கிழாரின் வீடுகள், வட்டிக்கடைக்காரர்கள் உட்பட அனைவரையும் தாக்கினர். ஆனால் 1921 டிசம்பர் வாக்கில் அரசு இரக்கமின்றி மாப்ளா கிளர்ச்சியை அடக்கியது. அரசின் அதிகாரப்பூர்வ மதிப்பீட்டின்படி, அரசு தலையீட்டின் விளைவாக 2337 மாப்ளா கிளர்ச்சியாளர்கள் கொல்லப்பட்டனர். 1650 பேர் காயமடைந்தனர் மற்றும் 45,000 க்கும் மேற்பட்டோர் சிறைபிடிக்கப்பட்டனர்.

**பர்தோலி சத்தியாகிரகம் (1929 – 30):**

1928 ல் 30 சதவீதம் அளவிற்கு அரசு நிலவருவாயை உயர்த்தியது. அதனால், பர்தோலி (குஜராத்) விவசாயிகள் சர்தார் வல்லபாய் பட்டேல் தலைமையில் தங்களது எதிர்ப்பினை தெரிவித்தனர். மேலும் விவசாயிகள், உயர்த்தப்பட்ட நிலவரியை செலுத்த மறுப்பு தெரிவித்து பிப்ரவரி 12, 1928 ல் வரிகொடா இயக்கத்தைத் தொடங்கினர். இதில் பல பெண்களும் கலந்து கொண்டனர்.

1930 ல் பர்தோலியில் வரி செலுத்த மறுப்பு தெரிவித்த விவசாயிகள் தங்கள் நிலங்களை குறைந்த ஏலத்தில் விற்று இழப்பதற்கு தயாராக இருந்தாலும், நிலத்தை அரசுக்குத் தர மறுத்துவிட்டனர். ஆனாலும் அரசு அவர்கள் நிலத்தை கையகப்படுத்தி செய்து ஏலத்தில் விற்றது. இருப்பினும், 1937ல் காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தபொழுது விவசாயிகளின் நிலம் அனைத்தும் அவர்களுக்கே திருப்பி தரப்பட்டது.

## அலகு – 4
## மக்களின் புரட்சி

**அறிமுகம்:**

1857 ஆம் ஆண்டு பிளாசிப் போருக்குப் பின் நாட்டின் அரசியல், சமூக – பொருளாதார நிலையைப் பாதிக்கும் வகையில் ஆங்கிலேயரால் நாட்டின் ல பகுதிகளில் அரசியல் மற்றும் பொருளாதார ஆதிக்கம் ஏற்படுத்தப்பட்டது. இது பல திறன்மிக்க நிலக்கிழார்கள் மற்றும் தலைவர்களிடையே அதிகார வேறுபாட்டிற்கு வழிகோலியது. இயற்கையாகவே அவர்களுள் பலர் ஆங்கிலேயர்களுக்கு எதிராக புரட்சியில் ஈடுபட்டனர். ஆங்கிலேயர்கள் பாளையக்காரர்களிடமிருந்து வருடாந்திர கப்பம் வசூலிக்கும் உரிமை பெற்றிருந்ததாகக் கருதப்படுகிறது. ஆங்கிலேயர்களுக்கு முதல் எதிர்ப்பு பூலித்தேவரால் எற்பட்டது. அவருக்குப்பின் மற்ற பாளையக்காரர்களான வீரபாண்டிய கட்டமொம்மன், ஊமைத்துரை, மருது சகோதரர்கள் மற்றும் தீரன் சின்னமலை ஆகியோரும் ஆங்கிலேயருக்கெதிரான எதிர்ப்பினைத் தெரிவித்தனர்.

**பாளையங்களின் தோற்றம்:**

விஜய நகர ஆட்சியாளர்கள் தங்கள் மாகாணங்களில் நாயக்கர்களை நியமித்தனர். இதையொட்டி மதுரை நாயக்கர் பாளையக்காரரை நியமித்தார். 1529 ல் விஸ்வநாதர் மதுரை நாயக்கரானார். இவரால் தனது மாகாணங்களில் அதிகாரங்களைப் பெற விரும்பிய சிறுகுடித் தலைவர்களை கட்டுப்படுத்த முடியவில்லை. அதனால் அவரது அமைச்சர் அரியநாதருடன் கலந்தாலோசித்து 1529ல் பாளையக்காரர் முறையை ஏற்படுத்தினார். அதன்மூலம் நாடு 72 பாளையங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பாளையமும் ஒரு பாளையக்காரரின் கீழ் கொண்டுவரப்பட்டது. ஒவ்வொரு பாளையக்காரரும் ஒரு பிரதேசத்தின் அல்லது பாளையத்தின் உரிமையாளராக கருதப்பட்டார். இந்த பாளையக்காரர்கள், நாயக்கர்களுக்கு தேவை ஏற்படும் போது இராணுவம் மற்றும் இதர உதவிகளை முழு மனதுடன் செய்தனர். பாளையக்காரர்கள் வரிகளை வசூலித்து, தாங்கள் வசூலித்த வரிப்பணத்தில் மூன்றில் ஒரு பங்கினை மதுரை நாயக்கர்களுக்கும், அடுத்த மூன்றில் ஒரு பங்கினை இராணுவ செலவிற்கும் கொடுத்துவிட்டு மீதியை அவர்கள் சொந்த செலவிற்கு வைத்துக் கொண்டனர்.

**தென்னிந்தியாவில் தொடக்ககால புரட்சிகள்:**

**பாளையக்காரர்களின் புரட்சி:**

17 மற்றும் 18 ஆம் நூற்றாண்டில் தமிழ்நாட்டில் அரசியல் பாளையக்காரர்கள் முக்கிய பங்கு வகித்தனர். அவர்கள் தங்களை சுதந்திரமானவர்களாகக் கருதிக்கொண்டனர். பாளையக்காரர்களிடையே இரண்டு பாளையங்கள் (முகாம்கள்) இருந்தன. அவை கிழக்கு பாளையம் (முகாம்), மேற்கு பாளையம் (முகாம்) என்பன ஆகும். கிழக்கு பாளைங்களில் இருந்த நாயக்கர்கள் கட்டபொம்மனின் கட்டுப்பாட்டின் கீழ் ஆட்சி செய்தனர். மேற்கு பாளையங்களில் இருந்த மறவர்கள் பூலித்தேவரின் கட்டுப்பாட்டின் கீழ் ஆட்சி செய்தனர். இந்த இரண்டு பாளையக்காரர்களும் ஆங்கிலேயருக்கு கப்பம் (kisk) கட்ட மறுத்துக் கிளர்ச்சியில் ஈடுபட்டனர்.

பாளையக்காரர்களுக்கும், கிழக்கிந்திய கம்பெனிக்குமிடையே ஆரம்ப கால போராட்டங்கள் அரசியலில் ஒரு வலிமையான பரிணாமத்தைப் பெற்றன. 1792 ஆம் ஆண்டு கர்நாடக உடன்படிக்கையால் ஒருங்கிணைக்கப்பட்ட ஆங்கிலேய அதிகாரம் பாளையக்காரர்களின் மீது செலுத்தப்பட்டது. இந்த உடன்படிக்கையின் படி ஆங்கிலேயர்கள் வரிவசூல் செய்யும் உரிமையையும் பெற்றனர்.

**பூலித்தேவர்:**

இந்தியாவில் ஆங்கில ஆட்சியை எதிர்ப்பதில் தமிழ்நாட்டில் முன்னோடியாக இருந்தவர் பூலித்தேவர் ஆவார். அவர் திருநெல்வேலியின் அருகிலிருந்த நெற்கட்டும் செவல் என்ற பாளையத்தின் பாளையக்காரர் ஆவார். அவரது ஆட்சிக் காலத்தில் ஆற்காட்டு நவாபான முகமது அலிக்கும் ஆங்கிலேயருக்கும் கப்பம் கட்ட மறுத்து அவர்களை எதிர்க்கத் தொடங்கினார். எனவே

ஆற்காட்டு நவாப் மற்றும் ஆங்கிலேயரின் கூட்டுப்படைகள் பூலித்தேவரைத் தாக்கின. ஆனால் அக்கூட்டுப் படைகள், திருநெல்வேலியில் பூலித்தேவரால் தோற்கடிக்கப்பட்டன. இந்தியாவில், ஆங்கிலேயருடன் போரிட்டு அவர்களைத் தோற்கடித்த முதல் இந்திய மன்னர் பூலித்தேவரே ஆவார். இந்த வெற்றிக்குப் பிறகு பூலித்தேவர் நவாப் மற்றும் ஆங்கிலேயரை எதிர்க்க பாளையக்காரர்களின் கூட்டமைப்பை உருவாக்க முயன்றார்.

1759 ல் யூசுப்கான் தலைமையிலான ஆற்காடு நவாப்பின் படைகள் நெற்கட்டும் செவலைத் தாக்கின. அந்தநல்லூரில் பூலித்தேவர் தோற்கடிக்கப்பட்டார். 1761ல் ஆற்காடு நவாப்பின் படைகள் நெற்கட்டும் செவ்வலைக் கைப்பற்றிது. பூலித்தேவர் தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்து 1764ல் நெற்கட்டு செவ்வலைக் மீண்டும் கைப்பற்றினார். பிறகு அவர் 1767 ல் கேப்டன் கேல்பெல் என்பவரால் தோற்கடிக்கப்பட்டார். பின்னாளில் பூலித்தேவர் தப்பித்து தலைமறைவாக வாழ்ந்து, தனது நோக்கம் நிறைவேறாமலேயே இறந்து போனார். இருந்தாலும் விடுதலைக்கான அவரது துணிச்சலான போராட்டம் தென்னிந்திய வரலாற்றில் நிலைத்து நிற்கிறது.

**வீரபாண்டிய கட்டபொம்மன்:**

கட்டபொம்மனின் முன்னோர்கள் ஆந்திராவைச் சேர்ந்தவர்கள். 11ஆம் நூற்றாண்டில் அவர்கள்

தமிழ்நாட்டிற்கு இடம் பெயர்ந்தனர். பாண்டியர்களின் கீழ் நிலமானிய அடிப்படையில் பாஞ்சாலங்குறிச்சியைத் தலைநகராகக் கொண்டு ஜெகவீரபாண்டிய கட்டபொம்மன், வீரபாண்டியபுரத்தை ஆட்சி செய்தார். பின்னர் நாயக்கர்களின் ஆட்சியில் பாளையக்காரரானார். ஜெகவீரபாண்டியனுக்குப்பின் அவரது மகன் வீரபாண்டிய கட்டபொம்மன் பாளையக்காரரானார். அவரது மனைவி ஜக்கம்மாள், சகோதரர்கள் ஊமைத்துரை மற்றும் செவத்தையா ஆவர்.

**ஆற்காடு நவாப்:**

விஜயநகரப் பேரரசின் வீழ்ச்சிக்குப்பின் முகலாயர்கள் தெற்கில் தங்கள் மேலாண்மையை நிறுவினர். கர்நாடகாவில் நவாப் முகலாயர்களின் பிரதிநிதியாக செயல்பட்டார். பஞ்சாலங்குறிச்சி பாளையமும் நவாப்பின் ஆளுகையின் கீழ் கொண்டுவரப்பட்டது. எனவே அது, நவாப்பிற்கு கப்பம் (வரி) கட்ட பணிக்கப்பட்டது. ஆனால் 1792 ல் ஏற்பட்ட கர்நாடக உடன்படிக்கை அரசியல் நிலைமைகளை முற்றிலும் மாற்றியது. கம்பெனி, பாஞ்சாலங்குறிச்சியிலிருந்து வரி வசூல் செய்யும் உரிமையையும் பெற்றது. கப்பம் வசூலித்ததே கட்டபொம்மனுக்கும், ஆங்கிலேயருக்குமிடையேயான மோதலுக்கான முதன்மை காரணமானது.

**கட்டபொம்மன் - ஜாக்சன் சந்திப்பு:**

இராமநாதபுர கலெக்டர் காலின் ஜாக்சன் 1798 ல் நிலுவைத் தொகையை செலுத்தச் சொல்லி கட்டபொம்மனுக்கு கடிதங்கள் எழுதினார். கட்டபொம்மனும் நாட்டின் பஞ்சத்தின் காரணமாக நிலுவையைச் செலுத்தும் சூழ்நிலையில் தான் இல்லை என்று பதில் எழுதினார். எனவே கோபமடைந்த ஜாக்சன் கட்டமொம்மனைத் தண்டிக்க ஒரு படையை அனுப்ப முடிவு செய்தார். இருப்பினும் சென்னை அரசாங்கம், கட்டபொம்மனுக்கு அழைப்பு அனுப்பி இராமநாதபுரத்தில் ஒரு கலந்துரையாடலுக்கு ஏற்பாடு செய்யும் படி கலெக்டருக்கு வழிகாட்டியத,

1798ல் கட்டபொம்மன் தனது அமைச்சர் சிவசுப்பிரமணியத்துடன் இராமநாதபுரத்தில் கலெக்டரை சந்தித்தார். 1080 பகோடா பாக்கியை தவிர பெரும்பாலான வரியை கட்டபொம்மன் செலுத்திவிட்டதை கணக்குகள் சரிபார்த்தலுக்குப் பின் அறிந்த ஜாக்சன் சமாதானமடைந்தார். இந்த சந்திப்பின் பொழுது கட்டபொம்மனும் அவரது அமைச்சர் சிவசுப்பிரமணியமும் ஜாக்சனின் முன் மூன்று மணி நேரம் நிற்கவைக்கப்பட்டனர். கலெக்டர், கட்டபொம்மனையும், அவரது அமைச்சரையும் அவமானப்படுத்தி கைது செய்ய முயற்சி செய்தார். கட்டபொம்மன் தனது அமைச்சருடன் தப்பிக்க முயன்றார். உடனே ஊமைத்துரை, தனது வீரர்களுடன் கோட்டைக்குள் நுழைந்து கட்டபொம்மன் தப்பிக்க உதவி செய்தார். ஆனால் துரதிஷ்டவசமாக சிவசுப்பிரமணியம் கைது செய்யப்பட்டார்.

**எட்வர்டு கிளைவ் மற்றும் கட்டபொம்மன்:**

பாஞ்சாலங்குறிச்சி திரும்பிய பின் கட்டபொம்மன் கலெக்டர் காலின் ஜாக்சன் அவரிடம் நடந்து கொண்டதை விவரித்து சென்னைக் கவுன்சிலுக்கு ஒரு கடிதம் எழுதினார். கடித்தைக் கண்ட சென்னை கவுன்சிலின் கவர்னர் எட்வர்டு கிளைவ் கட்டபொம்மனை சரணடைய ஆணையிட்டார். சென்னை கவுன்சில், கட்டபொம்மனை ஒரு குழுவின் முன்னிலையில் வர கோரியது. இதற்கிடையில் சிவசுப்பிரமணியம் விடுதலை செய்யப்பட்டதுடன், கலெக்டர் ஜாக்சன் அவருடைய தவறான அணுகுமுறைக்காக பதவி நீக்கமும் செய்யப்பட்டார். அவருக்குப்பின் கலெக்டராக S.R. லூஷிங்டன் நியமிக்கப்பட்டார்.

**பாளையக்காரர்களின் கூட்டமைப்பு:**

இச்சூழ்நிலையில் சிவகங்கையின் மருது பாண்டியர், அருகில் இருந்த பாளையக்காரர்களை ஒன்றிணைத்து ஆங்கிலேயர்களுக்கு எதிராக "தென்னிந்திய கிளர்ச்சியாளர்களின் கூட்டமைப்பு" ஒன்றை உருவாக்கினார். இந்த கூட்மைப்பு ஓர் பிரகடனத்தை வெளியிட்டது. அது "திருச்சிராப்பள்ளி அறிக்கை" என அழைக்கப்பட்டது. கட்டபொம்மன் இந்த கூட்டமைப்பின் மீது ஆர்வத்துடன் இருந்தார். இந்த கிளர்ச்சி கூட்டமைப்பில் இணைய மறுத்த சிவகிரி பாளையத்தின் மீது கட்டபொம்மன் தனது செல்வாக்கை செலுத்த முயன்றார். கட்டபொம்மன் சிவகிரியை நோக்கி முன்னேறினார். சிவகிரி பாளையக்காரர், கம்பெனிக்கு கப்பம் கட்டுபவராக இருந்ததால் கம்பெனி, கட்டபொம்மனின் சிவகிரி மீதான படையெடுப்பு தங்கள் அதிகாரத்திற்கு விடப்பட்ட சவாலாகக் கருதினர். எனவே கம்பெனியின் படைகள் பாஞ்சாலங்குறிச்சி நோக்கி செல்ல ஆணையிடப்பட்டது.

**பாஞ்சாலங்குறிச்சி வீழ்தல்:**

1799 செப்டம்பர் ஐந்தாம் நாள் மேஜர் பானர்மேன் தன்னுடைய படையை பாஞ்சாலங்குறிச்சியை நோக்கி நகர்த்தினார். ஆங்கிலேயப்படை பாஞ்சாலங்குறிச்சி கோட்டையின் அனைத்து செய்தித்தொடர்புகளையும் துண்டித்தது. கள்ளர்பட்டியில் நடந்த சண்டையில் சிவசுப்பிரமணியம் கைது செய்யப்பட்டார். கட்டபொம்மன் புதுக்கோட்டைக்கு தப்பிச்சென்றார். களப்பூர் காடுகளில் மறைந்திருந்த கட்டபொம்மனை புதுக்கோட்டை ராஜா விஜயரகுநாத தொண்டைமான் கைது செய்து கம்பெனியிடம் ஒப்படைத்தார். பாஞ்சாலங்குறிச்சி கோட்டை வீழ்ந்தபிறகு, பானர்மேன் கைதிகளை பாளையக்கரர்களின் அவைக்கு அழைத்து சென்று ஒரு விசாரணைக்குப் பிறகு அவர்களுக்கு மரணதண்டனை விதித்தார். நாகலாபுரத்தில் சிவசுப்பிரமணியம் சிரச்சேதம் செய்யப்பட்டார். அக்டோபர் 16 ஆம் நாள் பாளையக்காரர் அவையின் முன் கட்டபொம்மன் விசாரிக்கப்பட்டார். அடுத்த நாள் அக்டோபர் 17, 1799 அன்று கட்டபொம்மன் கயத்தாறு கோட்டையில் தூக்கிலிடப்பட்டார். இவ்வாறான கட்டபொம்மனின் வீரம் பற்றி பல நாட்டுப்புற கதைப்பாடல்கள் இன்றும் பெருமையாக கூறுகின்றன. அவை அவருடைய நினைவை மக்களிடையே நீங்காமல் வைத்திருக்கின்றன.

**வேலு நாச்சியார்:**



வேலுநாச்சியார்

சிவகங்கையின் இராணி வேலுநாச்சியார் ஆவார். இவர் 16 ஆம் வயதில் சிவகங்கையின் இராஜா முத்து வடுகநாதருக்கு திருமணம் செய்து வைக்கப்பட்டார். 1772ல் ஆற்காடு நவாப் மற்றும் பிரிட்டிஷ் படைகள் சிவகங்கையின் மீது போர் தொடுத்தன. அப்படை, முத்துவடுக நாதரை களையார்கோயில் போரில் கொன்றது. வேலுநாச்சியார் தனது மகள் வெள்ளச்சி நாச்சியாருடன் தப்பித்து, திண்டுக்கல்

அருகில் உள்ள விருப்பாச்சியில் கோபால நாயக்கர் பாதுகாப்பில் வாழ்ந்தார். இந்த காலகட்டத்தில் அவர் ஒரு படையை அமைத்து, ஆங்கிலேயர்கள் தங்கள் ஆயுதங்களை எங்கு சேமித்து வைத்திருக்கிறார்கள் என்பதை தனது நுண்ணறிவு படைப்பிரிவின் உதவியுடன் கண்டறிந்தார். பின்னர், தனது நம்பிக்கைக்குரிய படைத்தளபதி மற்றும் தொண்டர், குயிலி என்பவரால் ஒரு தற்கொலை தாக்குதலுக்கு ஏற்பாடு செய்தார். மருது சகோதரர்களின் உதவியுடன் சிவகங்கையைக் கைப்பற்றி மீண்டும் இராணியாக முடிசூட்டிக்கொண்டார். இந்தியாவில் பிரிட்டிஷ் காலனி ஆதிக்கத்தை எதிர்த்துப் போரிட்ட முதல் (இந்தியப்) பெண்ணரசி ஆவார். இவர் தமிழர்களால் "வீரமங்கை" எனவும் "தென்னிந்தியாவின் ஜான்சிராணி" எனவும் அறியப்படுகிறார்.

**மருது சகோதரர்கள்:**



மருது சகோதரர்கள்

மருது சகோதரர்கள் பொன்னாத்தாள் மற்றும் மூக்கைய்யா பழனியப்பன் ஆகியோரின் மகன்கள் ஆவர். மூத்த சகோதரர் பெரிய மருது (வெள்ளை மருது) எனவும், இளைய சகோதரர் சின்ன மருது எனவும் அழைக்கப்பட்டனர். இவற்றில் மருது பாண்டியன் என்றழைக்கப்பட்ட சின்ன மருது பிரபலமானவர். சின்ன மருது, சிவகங்கையின் மன்னர் முத்துவடுக நாத பெரிய உடையதேவரிடம் (1750 -1772) பணிபுரிந்தார். 1772 ல் ஆற்காடு நவாப்பின் படைகள் சிவகங்கையை முற்றுகையிட்டு அதனைக் கைப்பற்றியது. இப்போரின் போது முத்து வடுகநாத பெரிய உடையதேவர் போரில் இறந்தார். இருப்பினும் சில மாதங்களுக்குப் பிறகு, சிவகங்கை மருது சகோதரர்களால் மீண்டும் கைப்பற்றப்பட்டு பெரிய மருது, அரசராக பொறுப்பேற்றார். சின்னமருது அவரது ஆலோசகராக செயல்பட்டார். ஆங்கிலேயர்களுக்கெதிரான தீவிர நடவடிக்கைகளின் காரணமாக அவர் "சிவகங்கை சிங்கம்" என அழைக்கப்பட்டார். பதினெட்டாம்ட நூற்றாண்டின் பிற்பகுதியில் தென்னிந்தியாவில் மருதுசகோதரர்களால் ஆங்கிலேயர்களுக்கெதிரான கிளர்ச்சி நடைபெற்றது.

**மோதலுக்கான காரணங்கள்:**

கட்டபொம்மனின் இறப்பிற்கு பின், அவருடைய சகோதரர் ஊமைத்துரையும் மற்றவர்களும் சிவகங்கைக்குத் தப்பினர். அங்கு அவர்களுக்கு மருது சகோதரர்கள் பாதுகாப்பளித்தனர். மேலும் சிவகங்கை வியாபாரிகள், தங்களது உள்நாட்டு கொள்கையில் கம்பெனியின் தலையீட்டை விரும்பவில்லை. இந்த இரண்டு காரணங்களுக்காகவே, கம்பெனி சிவகங்கைக்கு எதிராக போர் புரிந்தது.

**தென்னிந்திய கிளர்ச்சி (1800 – 1801)**

பிப்ரவரி 1801ல் கட்டபொம்மனின் சகோதாரர்களான ஊமைத்துரையும் செவத்தையாவும் பாளையங்கோட்டை சிறையிலிருந்து தப்பித்து கமுதியை வந்தடைந்தனர். அங்கிருந்து தனது தலைநகர் சிறுவயலுக்கு அவர்களை சின்னமருது அழைத்து சென்றார். கட்டபொம்மனின் சகோதாரர்கள், மீண்டும் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையை புனரமைத்தனர். ஏப்ரலில் காலின் மெக்காலே தலைமையில் ஆங்கிலப் படைகள் மீண்டும் கோட்டையை தன் வசப்படுத்தியது. அத்துடன் பாளையக்காரச் சகோதரர்கள் சிவகங்கையில் தான் தஞ்சமடைந்திருக்க வேண்டும் என்று கருதியது. எனவே ஆங்கிலேயர்கள் மருது சகோதரர்களிடம் தப்பித்தவர்களை தங்களிடம் ஒப்படைக்கும்படி கோரிக்கை விடுத்தனர். ஆனால் இக்கோரிக்கை மருது சகோதரர்களால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. ஆகையால் கர்னல் அக்னியூ மற்றும் கர்னல் இன்ஸ் ஆகியோர் மருது சகோதரர்களுக்கெதிராக படை நடத்திச் சென்றனர்.

இப்பாளையக்காரர் போர், அதற்கு முன் நடந்த போர்களை விடவும் மிகவும் பெரிய அளவில் நடைபெற்றது. சிவகங்கையின் மருது சகோதரர்கள், திண்டுக்கல்லின் கோபால நாயக்கர், மலபாரின் கேரளவர்மன், மைசூரின் கிருஷ்ணப்பநாயக்கர் மற்றும் துண்டாஜி உள்ளிட்டோர் அடங்கிய கூட்டமைப்பால் போர் தொடங்கப்பட்டது. இக்கூட்டமைப்பிற்கு எதிராக ஆங்கிலேயர் போரை அறிவித்தனர்.

**திருச்சிராப்பள்ளி பிரகடனம் (1801)**

ஜீன் 1801ல் மருது சகோதரர்கள் "திருச்சிராப்பள்ளி பிரகடனம்" என்றழைக்கப்பட்ட "சுதந்திரப் பிரகடனம்" ஒன்றை வெளியிட்டனர். 1801 பிரகடனமே ஆங்கிலேயருக்கு எதிராக இந்தியர்களை ஒன்று சேர்க்கும் முதல் அழைப்பாக இருந்தது. இந்த அறிவிப்பின் ஒரு நகல் ஆற்காடு நவாபின் அரண்மனையான, திருச்சி கோட்டை சுவரிலும், மற்றொரு நகல் ஸ்ரீரங்கம் வைஷ்ணவ கோயில் சுவரிலும் ஒட்டப்பட்டது. இவ்வாறு மருது சகோதாரர்கள், ஆங்கிலேயர்களுக்கெதிரான எதிர்ப்புணர்ச்சியை நாடெங்கும் பரப்பினர். இதன் விளைவாக தமிழ்நாட்டின் பல பாளையக்காரர்கள் ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட ஓர் அணியாக சேர்ந்தனர். சின்னமருது, ஆங்கில படைக்கு சவாலாக கிட்டத்தட்ட 20,000 வீரர்களை திரட்டினார். ஆனால் ஆங்கிலேய படைகளுக்கு மேலும் வலுவூட்ட, வங்காளம், இலங்கை, மலாயா போன்ற இடங்களிலிருந்து படைகள் வரவழைக்கப்பட்டன. புதுக்கோட்டை, எட்டயபுரம் மற்றும் தஞ்சாவூர் மன்னர்களும் ஆங்கிலேயருக்கு ஆதரவளித்தனர். ஆங்கிலேயர்களின் பிரித்தாளும் கொள்கை பாளையக்காரர்களின் படைகளில் பிளவை ஏற்படுத்தியது.

**ஆங்கிலேயர் சிவகங்கையை இணைத்தல்:**

மே 1801ல் தஞ்சாவூர் மற்றும் திருச்சி பகுதிகளில் கிளர்ச்சியாளர்களை ஆங்கிலேயர் தாக்கினர். எனவே கிளர்ச்சியாளர்கள் பிரான்மலை மற்றும் காளையார் கோயில் பகுதிகளுக்குச் சென்றனர். அவர்கள் மீண்டும் ஆங்கிலேயப் படைகளால் தோற்கடிக்கப்பட்டனர். இறுதியில் சிறந்த இராணுவ வலிமை மற்றும் சிறந்த ஆங்கில இராணுவத் தளபதிகளால் ஆங்கிலேயர் வெற்றி பெற்றனர். கிளர்ச்சி தோல்வியுற்றதால், 1801ல் சிவகங்கையை ஆங்கிலேயர் இணைத்துக் கொண்டனர். 1801 அக்டோபர் 24 ஆம் நாள் மருது சகோதரர்கள், இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள திருப்பத்தூர் கோட்டையில் தூக்கிலிடப்பட்டனர். 1801 நவம்பர் 16 ஆம் நாள் ஊமைத்துரை மற்றும் செவத்தையா கைது செய்யப்பட்டு பாஞ்சாலங்குறிச்சியல் தூக்கிலிடப்பட்டனர்.
பினாங்கிற்கு (பின்னர் வேல்ஸ் இளவரசர் தீவு என அழைக்கப்பட்டது.) நாடு கடத்தப்பட்டனர். கிளர்ச்சியாளர்கள் ஆங்கிலேயரிடம் தோல்வியுற்றாலும் தமிழ் மண்ணில் தேசியம் என்ற விதையை விதைத்த முன்னோடிகளாகவர்.

1800 – 1801 ஆம் ஆண்டு கிளர்ச்சி ஆங்கில ஆவணங்களில் இரண்டாவது பாளையக்காரர் போர் என்று கூறப்பட்டாலும், இத்தென்னிந்திய புரட்சி தமிழக வரலாற்றில் ஓர் அடையாளமாகவே இருக்கிறது. 1801 ஜீலை 31ல் செய்துகொள்ளப்பட்ட கர்நாடக உடன்படிக்கைப்படி, தமிழ் நாட்டின் மீது ஆங்கிலேயர் நேரடி கட்டுப்பாட்டைப் பெற்றனர். இதனால் பாளையக்காரர் முறை நீக்கப்பட்டது.

**தீரன் சின்னமலை:**

தீரன் சின்னமலை ஈரோடு மாவட்டம் சென்னிலை அருகிலுள்ள மேலப்பாளையத்தில் பிறந்தார். அவரது இயற்பெயர் தீர்த்தகிரி. அவர், ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியை எதிர்த்த கொங்கு நாட்டு பாளையக்காரர் ஆவார். கொங்கு நாடு என்பது சேலம், கோயம்புத்தூர், கரூர் மற்றும் திண்டுக்கல் பகுதிகளை உள்ளடக்கிய மதுரை நாயக்க அரசின் ஒரு பகுதியாக உருவாக்கப்பட்டிருந்தது. ஆனால் இப்பகுதி மைசூர் உடையார்களால் இணைக்கப்பட்டது.

மைசூர் உடையார்கள் வீழ்ந்தபிறகு, இந்தப் பகுதிகள் மைசூர் சுல்தான்களால் கட்டுப்படுத்தப்பட்டது. மூன்று மற்றும் நான்காம் மைசூர் போர்களுக்குப் பிறகு கொங்குநாடு முழுவதும் ஆங்கிலேயரின் வசமானது.

தீரன் சின்னமலை, பிரெஞ்சு இராணுவத்தின் நவீன போர் முறை பயிற்சிப் பெற்றிருந்தார். இவர் திப்புசுல்தான் பக்கம் இருந்து ஆங்கிலேயருக்கெதிராக போராடி வெற்றிபெற்றார். திப்புசுல்தான் இறந்த பிறகு, இவர் ஓடாநிலையில் தங்கி ஆங்கிலேயரைத் தொடர்ந்து எதிர்த்துப் போராட, அங்கு ஒரு

கோட்டையைக் கட்டினார். 1800 ல் கோயம்புத்தூரில் ஆங்கிலேயரைத் தாக்க, அவர் மராத்தியர் மற்றும் மருது சகோதரர்களின் உதவியைப் பெற முயன்றார். ஆனால் ஆங்கிலப்படைகள் அக்கூட்டுப்படைகளைத் தடுத்து நிறுத்தியதால், தீரன் சின்னமலை மட்டும் கோயம்புத்தூரை தாக்கும் நிலைக்கு உள்ளானார். அதனால் அவரது படை தோற்கடிக்கப்பட்டது. அவர் ஆங்கில படைகளிடமிருந்து தப்பித்து சின்னலை காவேரி, ஓடாநிலை மற்றும் அரச்சலூர் போன்ற இடங்களில் நடைபெற்ற போர்களில் கொரில்லா போர் முறையில் ஆங்கிலப் படைகளைத் தோற்கடித்தார். இறுதி போரின் போது சின்னமலை தனது சமையற்காரர் நல்லப்பன் எனபவரால் காட்டிக்கொடுக்கப்பட்டதால் 1805ல் சங்ககிரி கோட்டையில் தூக்கிலிடப்பட்டார்.

**வேலூர் கலகம் (1806)**

நான்காம் மைசூர் போருக்குப் பிறகு திப்புவின் குடும்பத்தினர் வேலூர் கோட்டையில் சிறைவைக்கப்பட்டனர். மைசூரின் ஹைதர் அலி, திப்பு சுல்தான் ஆகியோரின் பணியாளர்கள் மற்றும் வீரர்கள் 3000 பேரின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டதால் அவர்கள் வேலூருக்கு அருகில் இடம் பெயர்ந்தனர்.
இதனால் அனைவரும் துயரமடைந்து ஆங்கிலேயரை வெறுக்கவும் செய்தனர்.

வேலூர் கோட்டையானது பெரும்பாலான இந்திய வீரர்களைக் கொண்டிருந்தது. அதன் ஒரு பகுதியினர் அப்பொழுதுதான் 1800 ல் நடைபெற்ற திருநெல்வேலி பாளையக்காரர் கிளர்ச்சியில் பங்கு பெற்றவர்களாகவும் இருந்தனர். மேலும் பல்வேறு பாளையங்களைச் சேர்ந்த பயிற்சி பெற்ற வீரர்கள் ஆங்கிலப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். எனவே வேலூர் கோட்டை தென்னிந்திய கிளர்ச்சியாளர்களின் சந்திப்பு மையமாக திகழ்ந்தது.

1803-ல் வில்லியம் காவெண்டிஷ் பெண்டிங் என்பவர் சென்னை மாகாண கவர்னரானார். அவரது காலத்தில் (1805 – 1806) ல் சிலகட்டுப்பாடுகள் இராணுவத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. அதனை பின்பற்ற வேண்டுமென இராணுவ வீரர்கள் சென்னை மாகாண படைத்தளபதி சர் ஜான் கிரடாக் என்பவரால் கட்டாயப்படுத்தப்பட்டனர். சிப்பாய்கள் அதனை தங்களை அவமானப்படுத்த ஆங்கிலேயரால் வடிவமைக்கப்பட்டது எனக்கருதினார்.

**கலகத்திற்கான காரணங்கள்:**

- **கடுமையான கட்டுப்பாடுகள் புதிய ஆயுதங்கள், புதிய முறைகள் மற்றும் சீருடைகள் என அனைத்தும் சிப்பாய்களுக்கு புதிதாக இருந்தன.**
- **தாடி, மற்றும் மீசையை மழித்து நேர்த்தியாக வைத்துக்கொள்ள சிப்பாய்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.**
- **சமய அடையாளத்தை நெற்றியில் அணிதல், காதுகளில் வளையம் (கடுக்கான்) அணிதல் ஆகியன தடைசெய்யப்பட்டன.**
- **ஆங்கிலேயர்கள், இந்திய சிப்பாய்க்ளை தாழ்வாக நடத்தியதோடு மட்டுமல்லாமல் சிப்பாய்களிடையே இனபாராபட்சமும் காட்டினர்.**

**உடனடிக் காரணம்:**

ஜீன் 1806ல் இராணுவத் தளபதி அக்னியூ, ஐரோப்பிய தொப்பியை ஒத்திருந்த சிலுவை சின்னத்துடன் கூடிய ஒரு புதிய தலைப்பாகையை அறிமுகப்படுத்தினார். அது பிரபலமான 'அக்னியூ தலைப்பாகை' என அழைக்கப்பட்டது. இந்து மற்றும் முஸ்லீம் வீரர்கள் ஒன்றாக இதனை எதிர்த்தனர். இதனால் வீரர்கள் ஆங்கிலேயர்களால் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர்.

**கலகத்தின் போக்கு:**

இந்திய வீரர்கள் ஆங்கில அலுவலர்களைத் தாக்குவதற்கு ஒரு வாய்ப்பினை எதிர்பார்த்து காத்திருந்தனர். திப்பு குடும்பத்தினரும் இதில் பங்கெடுத்துக் கொண்டனர். திப்புவின் மூத்த மகன் பதே ஹைதர் ஆங்கிலேயருக்கு எதிரான ஒரு கூட்டமைப்பை ஏற்படுத்த முயன்றார். இதற்கிடையில் ஜூலை 10 ஆம் நாள் விடியற்காலை, முதலாம் மற்றும் 23வது படைப்பிரிவுகளைச் சார்ந்த இந்திய

சிப்பாய்கள் கலகத்தை தொடங்கினர். படையை வழிநடத்திய கர்னல் பான்கோர்ட் கிளர்ச்சியாளர்களின் தாக்குதலுக்கு முதல் பலியானார். கோட்டையின் நுழைவாயில்கள் மூடப்பட்டன. அப்பொழுது கிளர்ச்சியாளர்கள் பதே ஹைதரை தங்களின் புதிய ஆட்சியாளராக அறிவித்தனர். வேலூர் கோட்டையில் ஆங்கிலக் கொடி இறக்கப்பட்டு புலி உருவம் பொறித்த திருப்புவின் கொடி ஏற்றப்பட்டது.

**கலகம் அடக்கப்படுதல்:**

கோட்டையின் வெளியே இருந்த மேஜர் கூட்ஸ் இராணிப்பேட்டைக்கு விரைந்து கர்னல் கில்லெஸ்பிக்கு தகவல் கொடுத்தார். கர்னல் கில்லெஸ்பி உடனடியாக வேலூர் கோட்டையை அடைந்தார். அவர் கிளர்ச்சி படைகளின் மீது தாக்குதல் நடத்தி கலகத்தை முழுமையாக அடக்கினார். வேலூரில் அமைதி ஏற்படுத்தப்பட்டது. கலகத்தில் மொத்தம் 113 ஐரோப்பியர்கள் மற்றும் சுமார் 350 சிப்பாய்கள் கொல்லப்பட்டனர். குறுகிய காலத்திற்குள் கலகம் அடக்கப்பட்டது. எனினும் தமிழக வரலாற்றின் குறிப்பிடத்தக்க நிகழ்வுகளுள் இதுவும் ஒன்றாக திகழ்ந்தது.

**வேலூர் கலகத்தின் விளைவுகள்:**

- **புதிய முறைகள் மற்றும் சீருடை ஒழுங்கு முறைகள் விலக்கிக் கொள்ளப்பட்டன.**
- **முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக திப்புவின் குடும்பத்தினர் வேலூரிலிருந்து கல்கத்தாவிற்கு அனுப்பப்பட்டனர்.**
- **வில்லியம் காவெண்டிஷ் பெண்டிங் பணி நீக்கம் செய்யப்பட்டார்.**

**கலகத்தின் தோல்விக்கான காரணங்கள்:**

- **இந்திய படை வீரர்களை வழிநடத்த சரியான தலைமையில்லை.**
- **கலகம் மிகச் சரியாக வடிவமைக்கப்படவில்லை.**
- **ஆங்கிலேயர்களின் பிரித்தாளும் கொள்கை இந்தியர்களின் ஒற்றுமையில் பிளைவ ஏற்படுத்தியது.**
- **1806 ல் நடந்த வேலூர் கலகத்தை, 1857 ல் நடைபெற்ற முதல் இந்திய சுதந்திரப் போரின் முன்னோடி என வி.டி சவார்க்கர் குறிப்பிடுகிறார்.**

**பெரும் புரட்சி (1857):**

இந்தியாவில் ஆங்கிலேயர்களை அச்சுறுத்தும் வகையில் நடைபெற்ற ஆரம்பகால கலகங்கள் வெற்றிபெறவில்லை. எனவே அது 1857 புரட்சிக்கு வழிகோலியது. அதன் மூலம் கம்பென் அதன் நாட்டிற்கு திரும்பிச் செல்லவும், ஆங்கிலேயர்களின் ஆட்சியை மக்களில் பெரும்பாலானோர் ஏற்கவில்லை என ஆங்கிலேயர்களை எண்ணவும் செய்தது. 1857 புரட்சியானது காலனி ஆட்சினுடைய பண்பு மற்றும் கொள்கையின் விளைவாக உருவானதாகும். ஆங்கிலேயரின் விரிவுபடுத்தப்பட்ட கொள்கைகள், பொருளாதார சுரண்டல், மற்றும் நிர்வாக புதுமைகள் ஆகியவற்றின் ஒட்டுமொத்த விளைவே இந்தியாவின் அனைத்து அரசர்களின் நிலைமையிலும் மோசமான பாதிப்புகளை ஏற்படுத்தின.

**புரட்சிக்கான காரணங்கள்:**

ஆங்கிலேயரின் பொருளாதார ரீதியான சுரண்டல் கொள்கையே, 1857 புரட்சிக்கு முக்கிய காரணமாக இருந்தது. இது சமுதாயத்தின் அனைத்து பிரிவினரையும் காயப்படுத்தியது. அதிகப்படியான வரிவிதிப்பு மற்றும் கடுமையான வரிவசூல் முறைகளால் விவசாயிகள் துன்புற்றனர்.

வாரிசு இழப்புக் கொள்கை, துணைப்படைத் திட்டம் மற்றும் பல கட்டுப்பாடுகள் ஆகியன மக்களிடையே அதிருப்பதியை ஏற்படுத்தியது. மேலும் முறையற்ற வகையில் அயோத்தியை இணைத்தும் கூட ஆங்கிலேயரின் பிரதேச விரிவாக்கக் கொள்கை திருப்தி அடையவில்லை.

கிறித்துவ சமய பரப்பு குழுவினரின் மதமாற்ற நடவடிக்கைகள் மக்களால் அச்சத்துடனும் சந்தேகத்துடனும் பார்க்கப்பட்டது. மேலும் சமய தலைவர்கள் மற்றும் இஸ்லாமிய சமய அறிஞர்கள் (Manlavis) ஆங்கில ஆட்சிக்கெதிராக அதிருப்தியை வெளிப்படுத்தினர்.

சதி ஒழிப்பு, பெண்சிசுக் கொலை ஒழிப்பு, விதவை மறுமணம் மற்றும் பெண் கல்விக்கான ஆதரவு போன்ற ஆங்கிலேயரின் நடவடிக்கைகள்

இந்தியர்கள் கலாச்சாரத்தில் ஐரோப்பியர்கள் தலையிடுவதாக கருதப்பட்டது.

இந்திய சிப்பாய்கள், ஆங்கில அதிகாரிகளால் தாழ்வாகவும் அவமரியாதையாகவும் நடத்தப்பட்டனர். ஆங்கில வீரர்களைக் காட்டிலும் இந்திய வீரர்கள் குறைவான ஊதியம் பெற்றனர். மேலும் இராணு பதவி உயர்வுகள் அனைத்தும் இந்திய வீரர்களுக்கு மறுக்கப்பட்டு ஆங்கில வீரர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டன.

**உடனடிக் காரணம்:**

இராணுவத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட என்பீல்டுரக துப்பாக்கியே உடனடிக்காரணமாக இருந்தது. இந்த வகைத் துப்பாக்கியில் குண்டுகளை நிரப்புவதற்கு முன் அதன் மேலுறையை பற்களால் கடித்து நீக்க வேண்டும். அதன் மேலுறையில் பசுவின் கொழுப்பு மற்றும் பன்றியின் கொழுப்பு தடவப்பட்டிருந்தது. எனவே இதனை இந்திய சிப்பாய்கள் (இந்து, முஸ்லீம்) தங்கள் மத உணர்வை புண்படுத்துவதாக கருதினர். ஏனெனில் இந்துக்கள் பசுமை புதிதமாகக் கருதுபவர்களாகவும் முஸ்லீம்கள் பன்றியை வெறுப்பவர்களாகவும் இருந்தனர். ஆகையால் இந்து முஸ்லீம் வீரர்கள் என்பீல்டு துப்பாக்கியைப் பயன்படுத்த மறுத்து புரட்சியில் ஈடுபட்டனர். இவ்வாறு கொழுப்பு தடவப்பட்ட தோட்டாக்கள் புரட்சிக்கு அடிப்படை மற்றும் உடனடிக் காரணமாயிற்று.

**கலகத்தின் தோற்றம்:**
**மங்கள் பாண்டே:**

1857 மார்ச் 29 ஆம் நாள் பாரக்பூரில் (கொல்கத்தா அருகில்) உள்ள வங்காள படைப்பிரிவைச் சேர்ந்த மங்கள் பாண்டே என்ற இளம் சிப்பாய் கொழுப்பு தடவப்பட்ட துப்பாக்கியைப் பயன்படுத்த மறுத்து தனது உயரதிகாரியைச் சுட்டுக் கொன்றார். அதனால் அவர் கைது செய்யப்பட்டு விசாரணைக்குப் பின் தூக்கிலிடப்பட்டார். இச்செய்தி பரவியதால், பல சிப்பாய்கள் புரட்சியில் ஈடுபட்டனர்.

**புரட்சியின் போக்கு:**

1857 மே 10 ஆம் நாள் மீரட்டில் மூன்றாம் குதிரைப் படையைச் சேர்ந்த சிப்பாய்கள் சிறைச்சாலையை உடைத்து, தங்களது சக படைவீரர்களை விடுவித்ததன் மூலம் வெளிப்படையாக புரட்சியில் ஈடுபட்டனர். அவர்கள் உடனே 11 ஆவது மற்றும் 20 ஆவது உள்ளூர் காலாட்படையினருடன் இணைந்தனர். மேலும், சிலர் ஆங்கில அலுவலர்களைக் கொலை செய்ததுடன், டெல்லிக்கும் விரைந்தனர். டெல்லிக்கு வந்த மீரர் சிப்பாயர்கள் மே 11 ஆம் நாள் இரண்டாம் பகதூர்ஷாவை இந்தியாவின் பேரரசராக அறிவித்தனர். அதன் மூலம் டெல்லி பெரும் புரட்சியின் மையமாகவும் பகதூர்ஷா அதன் அடையாளமாகவும் விளங்கினார்.

புரட்சி மிக வேகமாக பரவியது. லக்னோ, கான்பூர், ஜான்சி, பரெய்லி, பீகார் பைசாபாத் மற்றும் வட இந்தியாவின் பல பகுதிகளில் கலகங்கள் ஏற்பட்டன. புரட்சியாளர்களுள் பலர், நிழக்கிழார்களிடம் தாங்கள் கொடுத்த பத்திரங்களை எரிக்க இதனை ஒரு நல்வாய்ப்பாகக் கருதினர். ஆங்கில அரசு பலருடைய பட்டங்கள், ஒய்வூதியங்களை நீக்கியதால் ஆங்கில அரசை பழிவாங்குவதற்காக புரட்சியில் பலர் கலந்து கொண்டனர். ஆங்கிலேயர்கள் தங்களது.நாட்டிற்கு

சென்ற பிறகு இந்தியாவில் முஸ்லீம் ஆட்சியை நிறுவ வேண்டுமென எண்ணி முஸ்லீம் தலைவர்கள் மற்றும் முஸ்லீம் சமய அறிஞர்கள் புரட்சியில் கலந்து கொண்டனர்.

மத்திய இந்தியாவில் புரட்சி ஜன்சியின் இராணி இலட்சுமிபாய் அவர்களால் வழிநடத்தப்பட்டது. இந்தியாவின் மாபெரும் தேசபக்கதர்களுள் அவரும் ஒருவர். சர் ஹக்ரோஸ் ஜான்சியை ஆக்கிரமித்தார். ஜான்சியிலிருந்து தப்பிய இராணி லட்சுமிபாய், குவாலியரில் படையை தலைமையேற்று வழிநடத்திய தாந்தியா தோபேவுடன் இணைந்தார். ஆனால் ஆங்கிலப் படை ஜீன் 1858 ல் குவாலியரை கைப்பற்றியது. போரில் ராணி லட்சுமிபாய் கொல்லப்பட்டார். தப்பிய தாந்தியா தோபே கைது செய்யப்பட்டு தூக்கிலிடப்பட்டார். ஆங்கில வரலாற்றாசிரியர்களின் கூற்றுப்படி 1857 புரட்சியில் கலந்து கொண்ட தலைவர்களில் மிகவும் துணிச்சலானவர் இராணி லட்சுமிபாய் ஆவார்.

நாட்டிற்கு சென்ற பிறகு இந்தியாவில் முஸ்லீம் ஆட்சியை நிறுவ வேண்டுமென எண்ணி முஸ்லீம் தலைவர்கள் மற்றும் முஸ்லீம் சமய அறிஞர்கள் புரட்சியில் கலந்து கொண்டனர்.

**கலகம் அடக்கப்படுதல்:**

கவர்னர் ஜெனரல் கானிங் பிரபு புரட்சியை அடக்க உடனடியாக நடவடிக்கை எடுத்தார். அவர் சென்னை, பம்பாய், இலங்கை மற்றும் பர்மாவிலிருந்து படைகளை வரவழைத்தார். மேலும் அவரது சொந்த முயற்சியால் சீனாவிலிருந்த ஆங்கிலப் படைகளை கல்கத்தாவிற்கு வரவழைத்தார். விசுவாசமான சீக்கய படைகளை உடனடியாக டெல்லிக்கு விரைந்து செல்லுமாறு ஆணையிட்டார். இதன்மூலம் ஆங்கிலேயர் தாங்கள் இழந்த பகுதிகளை உடனே பகுதியை உடனே மீட்டனர்.

1857 செப்டம்பர் 20 ல் படைத்தளபதி நிக்கல்சனால் டெல்லி மீண்டும் கைப்பற்றப்பட்டது. எனவே, இரண்டாம் பகதூர்ஷா ரங்கூனுக்கு நாடு கடத்தப்பட்டார். அங்கு அவர் 1862 ல் இறந்தார்.

கான்பூர் மீட்பு இராணுவ நடவடிக்கைகள், லக்னோ மீட்பு நடவடிக்கைகளுடன் நெருங்கிய தொடர்புகொண்டிருந்தது. சர் காலின் கேம்பெல் கான்பூரை கைப்பற்றினார். கான்பூரில் புரட்சியை வழிநடத்திச் சென்ற நானாசாகிப் தோற்கடிக்கப்பட்டார். தோற்ற நானாசாகிப் நேப்பாளத்திற்கு தப்பியோடினார். அவரது நெருங்கிய நண்பர் தாந்தியா தோபெ மத்திய இந்தியாவுக்கு தப்பிச் சென்றார். தப்பிய அவர் தூங்கும் பொழுது கைது செய்யப்பட்டுக் கொல்லப்பட்டார். இராணி லட்சுமிபாய் போர்களத்தில் கொல்லப்பட்டார். கன்வர்சிங், மற்றும் கான் பகதூர் கான் ஆகிய இருவரும் போரில் இறந்தனர். அயோத்தியின் பேகம் ஹஸ்ரத் மகால் நேப்பாளத்தில் மறைந்து வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டார். இவ்வாறாக புரட்சி முழுவதும் அடக்கப்பட்டது. 1859 ஆம் ஆண்டின் இறுதியில் பிரிட்டிஷ் அதிகாரம் மீண்டும் இந்தியா முழுவதும் நிறுப்பட்டது.

**கலகத்தின் தோல்விக்கான காரணங்கள்:**

கலகத்தின் தோல்விக்கு பல நிகழ்வுகள் காரணமாக அமைந்தன. சரியான ஒருங்கிணைப்பு, ஒழுக்கம், கட்டுப்பாடு, பொதுவான திட்டம், மையப்படுத்தப்பட்ட தலைமை, நவீன ஆயுதங்கள் மற்றும் தொழில்நுட்பம் ஆகியவை புரட்சியாளர்களிடையே இல்லை.

கலகத்தில் ஈடுபட்டவர்கள், ஆங்கில படைத்தளபதிகளுக்கு இணையானவர்களாக இல்லை. மேலும் இராணி லட்சுமிபாய், நானாசாகிப் மற்றும் தாந்தியா தோபே ஆகியோர் தைரியமானவர்கள், ஆனால் சிறந்த தளபதிகளாக இல்லை. வங்காளம், பம்பாய், சென்னை, மேற்கு பஞ்சாப் மற்றும் இராஜபுதனம் ஆகிய பகுதிகள் புரட்சியில் கலந்து கொள்ளவில்லை.

நவீனக் கல்வி கற்ற இந்தியர்கள் ஆங்கில ஆட்சி மட்டுமே இந்திய சமுதாயத்தை சீர்திருத்தி நவீனப்படுத்த முடியும் என நம்பினர். எனவே அவர்கள் புரட்சியை ஆதரிக்கவில்லை. சீக்கியர்கள், ஆப்கானியர்கள் மற்றும் கூர்க்கா படைப்பிரிவினர் ஆகியோர்களின் விசுவாசத்தை ஆங்கிலேயர் பெற்றனர். புரட்சியை அடக்குவதில் கூர்க்காப் படையினர் ஆங்கிலேயருக்கு உதவினர்.

ஆங்கிலேயர்கள் சிறந்த ஆயுதங்கள், சிறந்த தளபதிகள் மற்றும் சிறந்த ஒருங்கிணைப்பைக் கொண்டிருந்தனர்.

| கலகம் நடைபெற்ற இடங்கள் | இந்திய தலைவர்கள் | கலகத்தை அடக்கிய ஆங்கிலேய அதிகாரிகள் |
|---|---|---|
| டெல்லி | இரண்டாம் பகதூர்ஷா | ஜான் நிக்கல்சன் |
| லக்னோ | பேகம் ஹஸ்ரத் மகால் | ஹென்றி லாரன்ஸ் |
| கான்பூர் | நானா சாகிப் | சர் காலின் கேம்பெல் |
| ஜான்சி & குவாலியர் | ராணிலட்சுமிபாய், தாந்தியா தோபே | ஜெனரல் ஹக்ரோஸ் |
| பரெய்லி | கான் பகதூர் கான் | சர் காலின் கேம்பெல் |
| பீகார் | கன்வர் சிங் | வில்லியம் டைலர் |

**கலகத்தின் விளைவுகள்:**

- **1857 ஆம் ஆண்டு கலகம் இந்திய வரலாற்றில் ஒரு திருப்பு முனையை ஏற்படுத்தியது. அது நிர்வாக முறை மற்றும் அரசின் கொள்கைகளில் மாற்றங்கள் ஏற்பட வழிகோலியது.**

- **1858 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட விக்டோரியா மகாராணியின் பேரறிக்கையின் மூலம் இந்தியாவின் நிர்வாகம் கிழக்கிந்திய கம்பெனியிடமிருந்து ஆங்கில (பாராளுமன்றத்திற்கு அரசுக்கு மாற்றப்பட்டது.**

- **கவர்னர் - ஜெனரல் அதன்பிறகு வைசிராய் என அழைக்கப்பட்டார்.**

- **இயக்குநர் குழு மற்றும் கட்டுப்பாட்டு, வாரியம் நீக்கப்பட்டு இந்திய விவகாரங்களை மேற்பார்வையிட செயலரின் தலைமையில் 15 உறுப்பினர்களைத் கொண்ட ஒரு சபை (கவுன்சில்) ஏற்படுத்தப்பட்டது,**

- **இந்திய இராணுவம் முற்றிலும் மாற்றியமைக்கப்பட்டது. அதிகப்படியான ஆங்கிலேயர்கள், இராணுவத்தில் பணியமர்த்தப்பட்டனர்.**

- **"பிரித்தல் மற்றும் எதிர் தாக்குதல்" என்ற கொள்கை ஆங்கில இராணுவக் கொள்கையில் ஆதிக்கம் செலுத்தியது.**

- **உண்மையில் 1857 புரட்சி இந்திய மக்கள் அனைவரையும் ஒருங்கிணைத்து இந்தியா ஒரே நாடு என்ற உணர்வை கொண்டு வருவதில் முக்கிய பங்கு வகித்தது. பெரும் புரட்சி நவீன தேசிய இயக்கம் தோன்ற வழிவகுத்தது. 1857 ஆம் ஆண்டு பெரும் புரட்சி இருபதாம் நூற்றாண்டின் தொடக்கமாக இருந்தது. வி.டி. சவார்க்கர் "முதல் இந்திய சுதந்திர போர்" என்ற தனது நூலில் 1857 ஆம் ஆண்டு பெரும் புரட்சியை ஒரு திட்டமிடப்பட்ட தேசிய சுதந்திரப் போர் என விவரிக்கிறார்.**

### வரலாறு

### அலகு-1 இந்தியாவில் கல்வி வளர்ச்சி

### "அறிவு என்பது மனிதனின் மூன்றாவது எண்"

**அறிமுகம்:**

கல்வி என்பது அறிவு, திறன்கள் மற்றும் மதிப்புகளைப் பெறுதலும், பகிர்தலுமான ஒரு தொடர்ச்சியான செயல்முறையாகும். கல்வி ஒரு முற்போக்கான சமுதாயத்தின் அடித்தளமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. பொறுப்புள்ள குடிமக்களை உருவாக்குவதில் கல்வி முக்கிய பங்கு வகிக்கிறது. நாம் வாழும் இந்த உலகமானது தொடர்ச்சியான மாற்றங்களையும், வளர்ச்சியையும் கண்டு வருகிறது. எனவே சவால்களை எதிர்கொள்ளவும் தடைகளை தகர்த்தெறியவும், நாம் நன்கு படித்தவர்களாக இருப்பதுடன் மனிதனை மேம்படுத்தும் செயலில் கல்வி எவ்வாறு பங்காற்றுகிறது. என்பதையும் அறிந்து கொள்ள வேண்டும். இந்தியாவில் பல்வேறு காலகட்டங்களில் ஏற்பட்ட கல்வி வளர்ச்சியைப் பற்றி இப்பாடத்தில் கற்றுக்கொள்கிறோம்.

**பண்டைய கால இந்தியாவின் கல்வி:**

தொடக்க காலத்திலிருந்தே பாரம்பரியமாக கற்றல் மற்றும் கற்பித்தல் இந்தியாவில் நடைமுறையில் இருந்ததாக, வரலாற்று ஆதாரங்கள் நமக்கு தகவல்களை வழங்குகின்றன. வேதம்(Veda) என்ற சமஸ்கிருத சொல்லிற்கு அறிவு என்ற பொருள். இச்சொல்லானது "வித்" என்ற சொல்லிலிருந்து பெறப்பட்டது. இதன் பொருள் 'அறிதல்' என்பதாகும். நமது பண்டைய கல்வி முறை பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே உருவானது. இது தனிநபரின் உள்ளார்ந்த மற்றும் மறைந்திருக்கும் திறன்களை வெளிக்கொணர்வதன் மூலம், அவரின் முழுமையான வளர்ச்சியில் கவனம் செலுத்தியது. இக்கல்வியானது பணிவு, உண்மை, ஒழுக்கம், சுயச்சார்பு மற்றும் அனைத்து படைப்புகளின் மீதும் மரியாதையுடன் இருத்தல் ஆகிய மதிப்புகளை வலியுறுத்தியது.

**கற்றலுக்கான ஆதாரங்கள்:**

பாணினி, ஆரியபட்டா, காத்யாயனா, மற்றும் பதாஞ்சலி ஆகிய பெயர்களை நீங்கள் கட்டாயம் கேள்விப்பட்டிருத்தல் வேண்டும். இவர்களின் எழுத்துக்களும் சரகர் மற்றும் சுஸ்ருதர் ஆகியோரின் மருத்துவ குறிப்புகளும் கற்றலுக்கான ஆதாரங்களாக இருந்தன. வரலாறு, தர்க்கம், பொருள் விளக்கம், கட்டிடக்கலை, அரசியல், விவசாயம், வர்த்தகம், வணிகம், கால்நடைவளர்ப்பு மற்றும் வில்வித்தை போன்ற பல்வேறு துறைகள் கற்பிக்கப்பட்டன. உடற்கல்வியும் ஒரு முக்கியமான பாடத்திட்டமாக இருந்தது. மாணவர்கள் குழு விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு செயல்பாடுகளில் பங்கேற்றனர். கற்றலின் அனைத்து அம்சங்களிலும் வல்லுநராவதற்கு குருக்களும், அவரது மாணவர்களும் மனசாட்சிக்குட்பட்டு இணைந்து பணியாற்றினர். மாணவர்களின் திறன்களை மதிப்பீடு செய்வதற்காக இலக்கிய விவாதங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன. கற்றலில் மேம்பட்ட நிலையிலுள்ள மாணவர்கள் இளைய மாணவர்களுக்கு வழிகாட்டினர். சக மாணவர்களுடனான கழுக் கற்றல் முறை நடைமுறையில் இருந்தது.

**பண்டைய கால இந்தியாவில் கல்வி முறை:**

**ஒரு வாழ்க்கை முறை:**

பண்டைய இந்தியாவில் முறையான மற்றும் முறைசாரா கல்வி இரண்டுமே இருந்தன. இல்லங்கள், கோயில்கள், பாடசாலைகள், குருகலங்கள் ஆகியவற்றில் அப்பகுதிக்கேற்றவாறு கல்வி வழங்கப்பட்டது. வீடுகள், கிராமங்கள் மற்றும் கோயில்களில் இருந்த மக்கள், சிறு குழந்தைகளுக்கு பக்தியுடன் நேர்மையான வாழ்க்கை முறைகளை வாழ ஊக்குவித்தனர். கல்வி அளிப்பதிலும், கற்றல் மையமாக செயல்படுவதிலும் கோயில்கள் முக்கிய பங்கு வகித்தன. மாணவர்கள் தங்கள் உயர்படிப்புக்காக விகாரங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களுக்குச் சென்றனர். வாய்வழியாகவே கற்பித்தல் இருந்தது. குருகுலங்கள் முனிவர்களின் பெயராலேய அழைக்கப்பட்டன. காட்டில்

அமைதியான சூழலில் அமைந்த குருகுலங்களில், நூற்றுக்கணக்கான மாணவர்கள் ஒன்றாகக் தங்கி கற்றுக் கொண்டனர். தொடக்க காலத்தில் ஆசிரியரால் (குரு/ஆச்சார்யா) தன்னை சுற்றி இருந்த மாணவர்களுக்கு கல்வி வழங்கப்பட்டது. மேலும் குருவின் வீட்டில் குடும்ப உறுப்பினர் போல வந்து தங்கி கல்வி வழங்கப்பட்டது. இதுவே குருகுலக் கல்விமுறை எனப்பட்டது. இந்த குருவின் குடும்பமானது வீட்டுப்பள்ளி (அ) ஆசிரமாக செயல்பட்டது.

அந்த காலக்கட்டத்தில், குருக்களும் அவர்களுடைய சீடர்களும் (மாணவர்கள்) ஒன்றாக வசித்து, அன்றாட வாழ்க்கையில் ஒருவருக்கொருவர் உதவி செய்தனர். அக்காலத்தில் முழுமையான கற்றல், ஒழுக்கமான வாழ்க்கையை வாழதல், ஒருவரின் உள்ளார்ந்த திறமையை உணர்ந்து கொள்ளச் செய்தல் போன்றவையே கல்வியின் முக்கிய நோக்கங்களாக இருந்தது. மாணவர்கள் தங்கள் இலக்குகளை அடையும் சில ஆண்டுகள் வரை தங்கள் வீடுகளை விட்டு விலகி குருகுலங்களில் வாழ்ந்தனர். குறிப்பிட்ட காலத்தில் குருவுக்கும் மாணவனுக்குமிடையேயான உறவு வலுப்பெறும் இடமாகவும் குருகுலம் திகழ்ந்தது.

இந்த காலகட்டத்தில் துறவிகள் பெண் துறவிகள் தியானம் செய்வதற்கும், விவாதிப்பதற்கும், அவர்களின் அறிவு தேடலுக்காக கற்ற அறிஞர்களிடம் கலந்து ஆலோசிப்பதற்காகவும் பல மடாலயங்கள் மற்றம் விகாரங்களைச் சுற்றிலும் உயர்கல்வி மையங்கள் ஏற்படுத்தப்பட்டன. இத்தகைய கல்வி மையங்கள் சீனா, கொரியா, திபெத், பர்மா, சிலோன், ஜாவா, நேபாளம் மற்றும் பிற தூரதேசத்து மாணவர்களையும் கவர்ந்திழுத்தது.

**பௌத்த சமய காலத்தில் விகாரங்களும் பல்கலைக்கழகங்களும்**

**பண்டைய இந்திய நகரமாக இருந்த தட்சசீலம் தற்போது வடமேற்கு பாகிஸ்தானில் உள்ளது. இது ஒரு முக்கியமான தொல்பொருள் ஆராய்ச்சிப் பகுதியாகும். இதனை 1980இல் யுனெஸ்கோ, உலக பாரம்பரியத் தளமாக அறிவித்தது. சாணக்கியர், தனது அர்த்தசாஸ்திரத்தை இப்பல்கலைக்கழகத்தல் தங்கியிருந்து தொகுத்ததாக கூறப்படுவது இதன் சிறப்பாகும். 19ஆம் நூற்றாண்டின் மத்தியில் இப்பல்கலைக்கழகத்தின் இடிப்பாடுகளை தொல்பொருள் ஆராய்ச்சியாளர் அலெக்சாண்டர் கன்னிங்காம் கண்டுபிடித்தார்.**

ஜாதகக் கதைகள், யுவான் சுவாங் மற்றும் இட்சிங்(சீன அறிஞர்கள்) ஆகியோரின் குறிப்புகள் மற்றும் பிற ஆதாரங்களும் அரசர்களும், சமுதாயமும் கல்வியை மேம்படுத்துவதில் அதிக ஆர்வம் செலுத்தியதாக நமக்கு கூறுகின்றன. மடாலங்கள் மற்றும் விகாரங்கள் மூலமாக பௌத்த சமய அறிஞர்கள் தங்கள் கல்விப் பணியை மேற்கொண்டனர். இதன் விளைவாக, பல புகழ்பெற்ற கல்வி மையங்கள் தோன்றின. அவைகளுள் தட்சசீலம், நாளந்தா, வல்லபி, விக்கிரமசீலா, ஓடண்டாபுரி மற்றும் ஜகத்தாலா ஆகிய இடங்களில் தோன்றிய பல்கலைக்கழகங்கள் மிகவும் குறிப்பிடத்தக்கவைகள் ஆகும். இந்தப் பல்கலைக்கழகங்கள் விவகாரங்களின் தொடர்புடன் மேம்படுத்தப்பட்டன. பனாரஸ் மற்றும் காஞ்சி ஆகிய இடங்களில் இருந்த பல்கலைக்கழகங்கள் கோயில்கள் தொடர்புடன் மேம்பாடு அடைந்தன. மேலும் அவைகள் அமைந்துள்ள இடங்கள் சமூக வாழ்க்கையின் மையங்களாக மாறின. அந்த நிறுவனங்கள் அறிவார்ந்த மாணவர்களின் தேவைகளை பூர்த்தி செய்தன. அந்த மாணவர்கள் உயர் கல்வி நிறுவனங்களில் இணைந்து, புகழ்பெற்ற அறிஞர்களிடம் பரஸ்பர கலந்துரையாடல்கள் மற்றும் விவாதங்கள் மூலம் தங்கள் அறிவை வளர்த்துக் கொண்டனர். அது மட்டுமல்லாமல், மன்னரால் கூட்டப்பட்ட சபையில் பல்வேறு விவகாரங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களைச் சார்ந்த அறிஞர்கள் சந்தித்து, விவாதித்து தங்கள் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர்.

**ஆசிரியரின் பங்கு:**

மாணவர்களைத் தேர்ந்தெடுப்பது முதல் அவர்களின் பாடத்திட்டங்களை வடிவமைப்பது வரை அனைத்து அம்சங்களிலும் ஆசிரியர்களின் பங்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது, மாணவர்களின் திறனில் ஆசிரியர் திருப்தி அடையும்போது மட்டும் அவர்களின் கல்வி நிறைவடைந்ததாக கருதப்பட்டது. அவரது விருப்பத்திற்கேற்ப பல மாணவர்களை சேர்த்துக் கொள்வதுடன், மாணவர்கள் எதை கற்க ஆர்வமாக இருந்தனரோ அதையே கற்றுக் கொடுத்தார்.

விவாதங்கள் மற்றும் கலந்தாலோசித்தல் ஆகியன கற்பித்தலின் அடிப்படையான வழிமுறைகளாகும். கல்வியில் மேம்பட்ட நிலையிலிருந்த மாணவர்கள் ஆசிரியர்களுக்கு உதவினர்.

**பண்டைய காலத்தில் நாளந்தா பல்கலைக்கழகம் கி.பி(பொ.ஆ) 5 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி(பொ.ஆ) 12 ஆம் நூற்றாண்டு வரை கற்றலின் மையமாக இருந்தது. தற்போதைய பீகாரில் உள்ள ராஜகிருகத்தில் அமைந்துள்ள நாளந்தா பல்கலைக்கழகம் உலகின் பழமையான பல்கலைக்கழகங்களில் ஒன்றாகும். நாளந்தா மகா விகாராவின் இடிபாடுகளை ஐ.நா.சபையின் யுனெஸ்கா(UNESCO) நிறுவனம் உலக பாரம்பரிய தளமாக அறிவித்துள்ளது. தற்போது புதுப்பிக்கப்பட்டுள்ள நாளந்தா பல்கலைக்கழகம் நாகரிகங்களுக்கிடையிலான தொடர்பு மையமாக கருதப்படுகிறது.**

**இடைக்கால இந்தியாவில் கல்வி:**

இந்தியத் துணைக்கண்டத்தில் இஸ்லாமிய கல்வியை அறிமுகப்படுத்தியதன் மூலம் இடைக்காலம் ஒரு மாற்றத்தைக் கண்டது. உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்த படையெடுப்பாளர்களாலும் வணிகர்களாலும் நாடு தாக்குதலுக்குள்ளானது. வணிகர்களும் படையெடுப்பாளர்களும் தங்களது கலாச்சாரங்களை இந்நாட்டு மக்களுடன் ஒன்றிணைத்தனர். அவற்றைத் தவிர சமயம், சமூகம், பண்பாடு மற்றும் கல்வி ஆகியவற்றில் இடைக்கால இந்தியா ஒரு புதிய கண்ணோட்டத்தை அடைந்தது. முஸ்லிம்களின் ஆட்சிக்காலத்தில் (இடைக்காலம்) அறிவின் ஒளியூட்டமும், விரிவாக்கமும் கல்வியின் நோக்கமாக இருந்தன. பதினொறாம் நூற்றாண்டில் முஸ்லிம் ஆட்சியாளர்கள் தொடக்க மற்றும் இடைநிலைப் பள்ளிகளை நிறுவினர். அக்காலத்தில் இந்திய இஸ்லாமிய பாரம்பரியங்களுக்கிடையே ஒரு சிறந்த தொடர்பு இருந்ததால் இறையியல், சமயம், தத்துவம், நுண்கலை, ஓவியம், கட்டடக்கலை, கணிதம், மருத்துவம் மற்றும் வானியல் ஆகிய துறைகள் ஒரு புதிய கோணத்தில் மேம்பாடு அடைந்தன.

இருப்பினும், முஸ்லிம்கள் வருகைக்கு முன்னரே இந்தியாவில் ஒரு மேம்பட்ட கல்விமுறை நடைமுறையில் இருந்தது. முஸ்லிம் ஆட்சியாளர்கள் நூலகங்கள் மற்றும் இலக்கிய சங்கங்களை ஏற்படுத்தி நகர்ப்புற கல்வியை ஊக்குவித்தனர். அவர்கள் நிறுவிய தொடக்கப் பள்ளிகள் மூலம் (மக்தப்-Maktab) மாணவர்கள் வாசித்தல், எழுதுதல் மற்றும் அடிப்படை இஸ்லாமிய வழிபாட்டு முறைகளை கற்றனர். மேம்பட்ட மொழித்திறன்களை கற்பிக்க இடைநிலைப் பள்ளிகள் (மதரசா-madrasa) நிறுவப்பட்டன. சுல்தான்கள் மறறும் பிரபுக்களால் பல மதரசாக்கள் அமைக்கப்பட்டன. மதரசாக்களின் முக்கிய நோக்கம், தகுதியான அறிஞர்களுக்கு குடிமைப் பணிக்கான பயிற்சி அளிப்பதும், கல்வி அளிப்பதுமே ஆகும். டெல்லியில் ஒரு மதரசாவை நிறுவிய முதல் ஆட்சியாளர் இல்துக்மிஷ் ஆவார். காலப்போக்கில் பல மதரசாக்கள் உருவாயின.

இடைக்கால இந்தியாவில் கல்விமுறையானது உலோமாவின் கட்டுப்பாட்டில் இருந்தது. அந்தக் காலங்களில், கல்வியானது சமயம் சார்ந்த பயிற்சியுடன் தொடர்புடையதாக இருந்தது. இருப்பினும், மருத்துவம், அரபு இலக்கியம், இலக்கணம் மற்றும் தத்துவம் போன்ற பல்வேறு வகையான பாடங்களும் கற்பிக்கப்பட்டன. இடைக்காலம் மற்றும் நவீன கால முற்பகுதியில் அரசு மற்றும் மத்திய ஆசிய மக்கள் இஸ்லாமிய அடிப்படையிலான கல்வி முறைகளைக் கொண்டு வந்ததாக வரலாறு கூறுகிறது. இடைக்கால இந்தியாவில் பெண் கல்வி பரவலாகக் காணப்பட்டது.

ஜெய்பூரைச் சேர்ந்த ராஜா ஜெய்சிங், அறிவியல் பாடங்களின் கற்றலை ஊக்குவித்தார். இதைத்தவிர மேலும், பல கல்வி நிறுசூவனங்கள் தனிநபர்களாலும் தொடங்கப்பட்டன. டெல்லியில் உள்ள கியாசுதீன் மதரசா மற்றும் ஷாஜகானாபாத்தில் உள்ள மௌலானா சத்ருதின் மதரசா ஆகியன இம்முறையில் உருவான நிறுவனங்களே ஆகும்.

இடைக்காலத்தில் பல சமய மடங்களும் மடாலயங்களும் கல்வி வளர்ச்சிக்காக நிறுவப்பட்டன. ஸ்ரீரங்கத்தில் உள்ள அஹோபில மடம் அவற்றுள் ஒன்றாகும். அங்கு ஸ்ரீராமானுஜர் கல்விக்காக தன்னுடைய குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியுள்ளார். மடாலயக் கல்வி தவிர, சணைப் பள்ளிகளும் மற்றும் பௌத்த விவகாரங்களும் மக்களுக்கு கல்வி வழங்குவதில் முக்கிய பங்காற்றின. அனைத்து துறைகளைச் சார்ந்த புத்தகங்கள் கொண்ட நூலகத்தினை அவைகள் பெற்றிருந்தன.

இடைக்காலத்தின் பிற்பகுதியில் ஆங்கிலேயர்கள், இந்தியாவில் ஆங்கிலக் கல்வியை அறிமுகப்படுத்தினர். ஐரோப்பிய சமயப்பரப்பு குழுவினரின் வருகையினால், இந்தியாவில் மேற்கத்திய கல்வி நிலையான முன்னேற்றத்தை அடைந்தது. எண்ணற்ற பல்கலைக்கழகங்களும் ஆயிரக்கணக்கான கல்லூரிகளும் அமைக்கப்பட்டதால், கல்வி வளர்ச்சியடைந்தது.

**நவீன கல்வி முறை:**

ஐரோப்பிய குடியேற்றத்தை தொடர்ந்து சமயப்பரப்பு குழுவினரின் வருகையால் இந்தியாவில் நவீன கல்வி முறை தொடங்கியது எனலாம். அவர்களது முயற்சியின் விளைவாக, இந்தியா முழுவதும் பல கல்வி நிறுவனங்கள் ஏற்படுத்தப்பட்டன. இந்நிறுவனங்கள் மேற்கத்திய கல்வியையும், இந்தியக் கல்வியையும் பயிற்றுவித்தன.

**கிறித்துவ சமயபரப்புக் குழுவின் பங்கு:**

வணிகம் செய்வதற்காக வந்த ஐரோப்பியர்கள், இந்தியாவில் வர்த்தக நிறுவனங்களை நிறுவினர். அவர்கள் நிலங்களை பெற்று, கோட்டைகளைக் கட்டினர். பின்னர், அவர்கள் தங்கள் கலாச்சாரத்தையும், சமயத்தையும் இந்திய மக்களிடையே பரப்ப விரும்பினர். உள்ளூர் மக்களுக்கேற்றவாறு கல்வி வழங்கினால் தான் நிர்வாகத்தையும், சமயக் கருத்துக்களையும் நன்கு புரிந்து கொள்வார்கள் என்று கருதி அவர்கள் கல்வி நிறுவனங்களைத் தொடங்கினர். இந்தியாவில் நவீன கல்வி முறையை தொடங்கிய முதல் ஐரோப்பியர் போர்ச்சுக்கீசியர்களேயாவர். இயேசு சங்கத்தின் உறுப்பினரான பிரான்சிஸ் சேவியர் கொச்சியில் ஒரு பல்கலைக்கழகத்தைத் தொடங்கினர். மேலும் பல தொடக்கப் பள்ளிகளும் தொடங்கினார். மேலும் பல தொடக்கப் பள்ளிகளும் தொடங்கப்பட்டது. 1575ஆம் ஆண்டு கோவாவில் தொடங்கப்பட்ட முதன் கல்லூரியில், கிறித்துவம், தர்க்கம், இலக்கணம், மற்றும் இசை ஆகியன கற்பிக்கப்பட்டு பட்டங்கள் வழங்கப்பட்டன. ஜான் கிர்னாண்டர் என்பவர் ஆர்வமுள்ள முன்னோடிகளில் ஒருவராக இருந்தார். அவரின் இவாஞ்சிலிஸ்டிக் அமைப்பானது கிறித்துவர் அல்லாத குழந்தைகளுக்கு கல்வியை அறிமுகப்படுத்திய முதல் சமயப்பரப்பு அமைப்பாகும். 1812ஆம் ஆண்டு டாக்டர் C.S. ஜான் என்பவர் தரங்கம்பாடியில் 20இலவச பள்ளிகளை நிறுவினார்.

போர்ச்சுகீசியர்களைத் தொடர்ந்து பிரெஞ்சுக்காரர்களும் இந்தியர்களுக்கான கல்வி நிறுவனங்களைத் துவங்கினர். அங்கு இந்திய ஆசியர்களைக் கொண்டு வட்டார மொழியில் கல்வி கற்பிக்கப்பட்டது. மேல்நிலைப் பள்ளிகள் துவங்கப்பட்டு, அங்கு பிரெஞ்சு மொழிகள் கற்பிக்கப்பட்டன. இரண்டு ஜெர்மன் பிஷப்புகளான சீகன்பால்கு மற்றும் புளுட்ச்சோ ஆகியோர் திருவிதாங்கூரில் பள்ளிகள் மற்றும் ஆசிரியர்களுக்கான பயிற்சி கல்லூரியைத் தொடங்கினார். கி.பி.1600இல் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியின் வருகைக்குப் பின்னர் ஆங்கிலக் கல்வி வழங்குவதற்காக கல்வி நிறுவனங்கள் ஏற்படுத்தப்பட்டன. படிப்படியாக மதராஸ் மற்றும் பனாரஸ் ஆகிய இடங்களில் சமஸ்கிருத கல்லூரிகள் துவங்கப்பட்டன. கல்கத்தாவின் தொடங்கினார். பின்னர் இது பிஷப் கல்லூரி என்று அழைக்கப்பட்டது. மவுண்ட்ஸ்டுவர்ட் எல்பின்ஸ்டன் என்பவர் தான் வட்டார மொழிக் கல்வியினை தீவிரமாக முன்மொழிந்தார். ஆனால் 1827இல் அவர் ஓய்வு பெற்ற பின், அவரது ஆர்வலர்கள் நிதி சேகரித்து ஆங்கில கல்வியை வழங்கும் கல்லூரியை பம்பாயில் நிறுவினர். அது பின்னர் எல்பின்ஸ்டன் கல்லூரி எனப் பெயரிடப்பட்டது. இந்தியாவில் கல்வி பரப்புவதற்கு, சமயப்பரப்பு குழுவினர் நன்கு முயன்றனர். அவர்களின் முயற்சியால் பல கல்வி நிறுவனங்கள் ஏற்படுத்தப்பட்டன. இந்நிறுவனங்கள் மேற்கத்திய கல்வியையும் இந்தியக் கல்வியையும் வழங்கின.

**ஆங்கிலேயரின் ஆட்சியில் கல்வி:**

ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் இந்திய கல்வியின் வரலாற்றை நாம் நான்கு கட்டங்களாகப் பிரிக்கலாம்.

ை. ஆங்கிலேயர் ஆட்சியின் ஆரம்பம் முதல் 1813 வரையிலான காலம்.
ைை. 1813 முதல் 1853 வரையிலான காலம்
ைைை. 1854 முதல் 1920 வரையிலான காலம்

ஐ.	1921 முதல் 1947 வரையிலான காலம்

தொடக்க காலங்களில், ஆங்கிலேய கிழக்கிந்தியக் கம்பெனி கல்வியில் அலட்சியம் மற்றும் குறுக்கீடு இன்மை என்ற கொள்கையைப் பின்பற்றியது. ஏனெனில் கல்வியானது அதன் திட்டத்தின் ஒரு பகுதியாக இல்லை. கிழக்கிந்திய கம்பெனியின் 1813ஆம் ஆண்டு புதுப்பிக்கப்பட்ட பட்டயச் சட்டம், இந்தியர்களின் கல்விக்கான பொறுப்பை மிகக் குறைந்த அளவில் ஏற்கும்படி கட்டாயப்படுத்தியது. சமயபரப்புக் குழுவினரைத் தவிர, வங்காளத்தைச் சேர்ந்த இராஜா ராம்மோகன்வாய், மதராஸின் பச்சையப்பர், டெல்லியைச் சேர்ந்த பிரேசர் போன்ற சமயப்பரப்புக் குழுவினரைத் தவிர, வங்காளத்தைச் சேர்ந்த இராஜா ராம்மோகன்ராய், மதராஸின் பச்சையப்பர், டெல்லியைச் சேர்ந்த பிரேசர் போன்ற சமயபரப்புக்குழு அல்லாதவர்களும் கல்விக்காக தங்களின் பங்களிப்பைச் செய்தனர்.

1813இல் கிழக்கிந்திய நிறுவனம் இந்தியர்களின் கல்விக்கான பொறுப்பை உறுதிப்படுத்த நிர்பந்திக்கப்பட்டது. 1813ஆம் ஆண்டின் பட்டயச் சட்டம், இந்தியாவில் கல்வியை மேம்படுத்துவதற்காக ஆண்டு தோறும் 1 இலட்சம் ரூபாய் தொகையை வழங்குவதற்கான ஏற்பாட்டைச் செய்தது.

இரண்டாவது கட்டமானது கல்விக் கொள்கை, பயிற்று மொழி, கல்வியைப் பரப்பும் முறை ஆகிய பிரச்சனைகளில் மிகப்பெரிய கருத்து வேறுபாடுகள் கொண்ட காலமாக கருதப்பட்டது. முதலாவது பிரிவினரான கீழ்திசைவாதிகள் கீழ்திசை மொழிகளைப் பாதுகாக்கவும், சமஸ்கிருதம் மற்றும் பாரசீக மொழிகளை பயிற்று மொழியாக்கவும் விரும்பினர். இரண்டாவது பிரிவினரான ஆங்கிலசார்பு கோட்பாட்டுவாதிகள் ஆங்கில மொழி மூலம் மேற்கத்திய அறிவை பரப்புவதை ஆதரித்தனர். அவர்கள் கீழ்திசைவாதிகளின் கொள்கைகளை எதிர்த்தனர். மூன்றாவது பிரிவினர், பயிற்று மொழியாக இந்திய மொழிகளைப் பயன்படுத்துவதில் நம்பிக்கை கொண்டவர்கள் ஆவர்.

இந்த கருத்து வேறுபாடுகள் 1835ஆம் ஆண்டின் மெக்காலே-வின் குறிப்பினால் ஓரளவு ஓய்ந்தது. உயர் கல்வியில் கீழ்த்திசை மொழியைத் தவிர்த்து, ஆங்கிலக் கல்வியானது உயர் வகுப்பினருக்காக ஊக்கப்படத்தப்பட்டது. ஒவ்வொரு மாகாணமும் அதற்கேற்ற கல்விக் கொள்கையைப் பின்பற்ற அனுமதிக்கப்பட்டன. இருந்தபோதிலும், 1854ஆம் ஆண்டு வரை இந்த கருத்து வேறுபாடுகள் தொடர்ந்தன.

ஆங்கிலேயரின் செல்வாக்கு மிக்க கல்வியின் மூன்றாம் கட்டத்தை அகில இந்தியக் கல்விக் கொள்கையின் காலம் என்று அழைக்கலாம். இது 1854ஆம் ஆண்டு சர் சார்லஸ் வுட் கல்வி அறிக்கையுடன் தொடங்குகிறது. 1882ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட ஹண்டர் கல்விக்குழு தொடக்கக் கல்விக்கு முக்கியத்துவம் அளித்தது.

**உட்ஸ் கல்வி அறிக்கை (1854)** இந்தியாவில் ஆங்கிலக் கல்வியின் “மகாசாசனம்” என்று அழைக்கப்படுகிறது. ஏனெனில் அனைத்து நிலைகளில் உள்ள மக்களுக்கும் கல்வியை வழங்கும், ஆங்கில கல்விக் கொள்கையின் முதல் அறிக்கை இதுவாகும். ஆனால் இது இந்தியர்களின் கொள்கைகளையும் கலாச்சாரத்தையும் விலக்கி வைத்து மாநிலக் கல்வியின் மீது முழுமையான கட்டுப்பாட்டை ஏற்படுத்தியது.

நான்காவது காலகட்டம் மாகாணங்களின் சுயாட்சிக் காலமாகும். 1935ஆம் ஆண்டுச் சட்டம் நாடு முழுவதும் கல்வியின் முன்னேற்றத்திற்கான புதிய சகாப்தத்தை உருவாக்கியது. 1929ஆம் ஆண்டின் உலகளாவிய பொருளாதார பெருமந்தத்தால் புதிய திட்டங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டன. 1935ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டம் முழுமையான மாகாண சுயாட்சியை அறிமுகப்படுத்தி, மாகாண கல்வி அமைச்சர்களின் நிலையை வலுப்படுத்தியது. இரண்டாம் உலகப் போருக்குப்பின் கல்வி மேம்பாட்டிற்கான மிக முக்கியமான திட்டமான சார்ஜண்ட் அறிக்கை(1944) தயாரிக்கப்பட்டது, இக்கல்விக் கொள்கை சமகால கல்வியின் சிந்தனை மற்றும் செயல்பாடுகளில் மீது மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தியது.

**வார்தா கல்வித் திட்டம்(1937)**

1937ஆம் ஆண்டு பிரபலமான அடிப்படைக் கல்வித் திட்டமான வார்தா கல்வித் திட்டத்தை காந்தியடிகள் உருவாக்கினார். காந்தியடிகளின் அடிப்படைக் கல்வித் திட்டத்தின் அச்சாணியாக அகிம்சை கொள்கை இருந்தது. அக்கல்வித் திட்டத்தின் மூலம் அகிம்சைத் கொள்கையை எதிர்கால குடிமக்களிடையே மேம்படுத்த அவர் விரும்பினார். அதன்மூலம் வன்முறையற்ற சமுதாயத்தை உருவாக்குவது அவசியமென கருதினார். காந்தியடிகள் இத்திட்டத்தின் மூலம் சுரண்டலையும், சமூக மையப்படுத்துதலையும் நீக்கிவிட்டு வன்முறையற்ற சமூகநிலையை உருவாக்க விரும்பினார்.

**சுதந்திர இந்தியாவின் கல்வி வளர்ச்சி:**

1947ஆம் ஆண்டு பெற்ற சுதந்திரமானது சுதந்திரா இந்தியக் கல்வி வரலாற்றில் ஒரு புதிய சகாப்தத்தை உருவாக்கியது. அது இந்தியர்களுக்கான ஒரு புதிய நம்பிக்கை, ஒரு புதிய பார்வை, ஒரு புதிய எதிர் காலத்தை கொண்டு வந்தது. பல்கலைக்கழக கல்வி குறித்த அறிக்கை தயாரிக்க 1948ஆம் ஆண்டு டாக்டர் இராதாகிருஷ்ணன் கல்விக்குழு நியமிக்கப்பட்டது. இக்கல்விக் குழுவின் பரிந்துரைகளைப் பின்பற்றி உயர்கல்வியின் தரத்தை நிர்ணயிக்க பல்கலைக்கழக மானியக் குழு அமைக்கப்பட்டது. 1952-53ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட இடைநிலைக் கல்விக்குழு, இடைநிலை கல்வித்துறையில் நிகழ்ந்த மிக முக்கியமான நிகழ்வு ஆகும். அது கல்வியில் புதிய அமைப்பு முறைகளையும், பாடப்புத்தகங்களின் தரம், பாடத்திட்டம், கற்பித்தல் முறைகளில் முன்னேற்றங்களையும் பரிந்துரைத்தது. 1964இல் இந்திய அரசு டாக்டர் D.S.கோத்தாரி தலைமையில் ஒரு கல்விக்குழுவை நியமித்தது. அக்குழு 14 வயது வரையிலான அனைத்து குழந்தைகளுக்கும் இலவச மற்றும் கட்டாய தொடக்க கல்வியையும் நாடு முழுவதும் ஒரே மாதிரியான 10+2+3 கல்வி அமைப்பையும் பரிந்துரை செய்தது.

**தெசியக் கல்விக் கொள்கை:**

சுதந்திரத்திற்கு பிறகு, 1968 ஆம் ஆணடின் முதல் தேசியக் கல்விக் கொள்கையானது இந்தியக் கல்வி வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை ஏற்படுத்தியது. இது தேசியத்தின் முன்னேற்றத்தை ஊக்குவிப்பதோடு, பொதுவான குடியுரிமை, கலாச்சாரம் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டினை வலுப்படுத்துதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டது. 1986ஆம் ஆண்டு இந்திய அரசு புதிய கல்விக் கொள்கையினை அறிமுகப்படுத்தியது. இதன் நோக்கம் ஒரு நிலையான சமுதாயத்தை, மேம்பாட்டுடன் கூடிய துடிப்பான சமுதாயமாக மாற்றுவதாகும். இக்கல்விக்கொள்கை நாட்டில் விளிம்பு நிலை மக்களுக்கான சமவாய்ப்புகள், உதவித் தொகைகள், வயது வந்தோர் கல்வி, திறந்தநிலைப் பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றின் மூலம் குறிப்பாக கிராமப்புற இந்தியாவில் ஏற்றத்தாழ்வுகளை நீக்குதலை வலியுறுத்தியது. புதிய கல்விக்கொள்கை தொடக்க கல்வியில் குழந்தைகளை மையமாகக் கொண்ட அணுகுமுறைக்கு அழைப்பு விடுத்ததுடன், தொடக்கப் பள்ளிகளை தேசிய அளவில் மேம்படுத்துவதற்காக கரும்பலகைத் திட்டத்தையும் அறிமுகப்படுத்தியது,

புதிய கல்விக் கொள்கையானது 1992ஆம் ஆண்டு மீண்டும் திருத்தியமைக்கப்பட்டது, இது தேசியக் கலைத்திட்டத்தை வடிவமைத்தல், பணியிடைக் கல்வியை வலியுறுத்துதல், வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் இடைநிலைக் கல்வி நிலையில் மதிப்பீட்டு முறைகளை ஒழுங்குபடுத்துதல் ஆகியவற்றைப் பரிந்துரைத்தது.

1976ஆம் ஆண்டு டிசம்பர் வரை கல்வித்துறை மாநிலப் பட்டியலில் இருந்தது. ஆனால் தற்போது கல்வித்துறை பொதுப்பட்டியலில் இடம் பெற்றுள்ளது.

**அனைவருக்கும் கல்வி இயக்கம்(SSA) மற்றும் அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம்(RMSA):**

அனைவருக்கும் கல்வி இயக்கம் என்பது இந்திய அரசின் முதன்மைத் திட்டமாகும். இது அனைத்து குழந்தைகளும் தொடக்கக் கல்வியை பெறுவதற்காக 2000-01ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. குழந்தைகளின் உரிமையான இலவச மற்றும் கட்டாய கல்வி (RTE -2009) சட்ட விதிகளை அமல்படுத்துவதற்கான முதன்மை அமைப்பாக இது தற்போது செயல்பட்டுவருகிறது. கல்வி உரிமைச் சட்டமானது(TRE) 6 முதல் 14 வயது வரை அனைத்து குழந்தைகளுக்கும் இலவச மற்றும் கட்டாயக் கல்வியை வழங்க வழிசெய்கிறது. அனைவருக்கும் கல்வி இயக்கம் (SSA), பள்ளிகள் தொடர்பான பல்வேறு வகையான புதுமைகளையும், செயல்பாடுகளையும் துவக்கி வைத்துள்ளது. சில முக்கிய செயல்பாடுகளான மதிய உணவு வழங்குதல், பள்ளி மேலாண்மைக் குழு அமைத்தல், வகுப்பறைக்கான கற்றல் - கற்பித்தல் உபகரணங்களை வழங்குதல் ஆகியவைகள் இவற்றுள் அடங்கும்.

அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம் (RMSA) பதினோறாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் செயல்படுத்தப்பட்ட திட்டமாகும். இது இடைநிலைக் கல்வியின் தரத்தினை மேம்படுத்தும், பொதுவான அணுகுமுறைக்கான மத்திய அரசின் நிதி உதவித் திட்டம் ஆகும். 15 முதல் 16 வயதுக்குட்பட்ட இளம் மாணவர்களுக்கு தரமான, எளிதில் கிடைக்கக் கூடிய, எளிய அணுகுமுறையுடன், அனைவருக்கும் வாய்ப்புகளை உருவாக்கும் இடைநிலைக் கல்வியை அளிப்பதே இதன்(RMSA) நோக்கம் ஆகும். RMSAதிட்டத்தின் மூலம் அறிவியல் ஆய்வகம், நூலகங்கள், ஆசிரியர்களுக்கான சோழர்களின் காலம் தமிழ் இலக்கிய வரலாற்றில் மிகவும் அறிவார்ந்த மற்றும் புதுமைகளைப் புகுத்திய காலம் எனலாம். தமிழ்வழிக் கல்வியானது கோயில் மற்றும் சமயத்துடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருந்தது. மக்களுக்கு இலவச கல்வி அளிக்கப்பட்டது. கலைத்திட்டமும் பாடத்திட்டமும் தத்துவத்தின் அடிப்படையைக் கொண்டிருந்தது. அக்கால கல்வெட்டிலிருந்து ஆசிரியர்களின் தகுதிகள், கற்பித்தல் முறைகள், ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட ஊதியம், மாணவர்களுக்கு வழங்கப்பட்ட உணவு மற்றும் பள்ளிகளுக்கு அளித்த நிலங்கள் குறித்த பல தகவல்களை அறிந்து கொள்ள முடிகிறது. இராஜராஜன் சதுர்வேதி மங்கலம் (எண்ணாயிரம் முந்தைய தென் ஆற்காடு மாவட்டத்தில் அமைந்திருந்தது) புகழ்பெற்ற வேதக் கல்லூரிக்கு இருப்பிடமாக இருந்தது. திருபுவனையில் (பாண்டிச்சேரியில் உள்ளது) ஒரு வேதக் கல்லூரி செழித்தோங்கியது. திருவிடைக்காளை கல்வெட்டு நூலகத்தைப் பற்றியும், வீரராஜேந்திர சோழனின் திருவாடுதுறைக் கல்வெட்டு மருத்துவப் பள்ளி பற்றியும் குறிப்பிடுகிறது,

ஆசிரியர்களுக்கு நிலங்கள் வழங்கப்பட்டன. அவ்வகை நிலங்கள் சாலபோகம் என்றழைக்கப்பட்டது. (உ.ம், கன்னியாகுமரியிலுள்ள வல்லப் பெருஞ்சாலை). பாண்டியர்கள் ஆட்சி காலத்தில் காந்தளூர் சாலையில் புகழ்பெற்ற கல்லூரி இருந்தது. கல்வியை மேம்படுத்துவதில் மடங்கள் முக்கியப் பங்கு வகித்தன. விஜய நகர ஆட்சியின் கீழ் கற்றல் செழித்தோங்கியது. விஜயநகர ஆட்சியாளர்களின் ஆதரவால் பல கல்வி நிறுவனங்கள் ஏற்ப்படுத்தப்பட்டன. நாயக்கர்களின் ஆட்சியில் திண்ணைப் பள்ளிக்கூடம் நிறுவப்பட்டது.

**தமிழகத்தில் நவீன கால கல்வி:**

வீரப்ப நாயக்கர் காலத்தில் மதுரைக்கு வருகை புரிந்த பெர்னாண்டஸ், அங்கு ஒரு தொடக்கப் பள்ளியை நிறுவினார். மராத்திய ஆட்சியாளர் இரண்டாம் சரபோஜி பண்டைய ஆவணங்களை சேகரித்து அவற்றை தஞ்சை சரஸ்வதி மகால் நூலகத்தில் பாதுகாத்தார். அவர் தஞ்சாவூரில் தேவநாகரி எழுத்து முறையிலான அச்சுக்கூடத்தை அமைத்திருந்தார். பிரதான்(Pradran) நாட்டின் உயர் கல்வியின் முக்கிய மையமாக விளங்கியது.

மதராஸ் மாகாணத்தில் மேற்கத்திய கல்வியை அறிமுகப்படுத்தியதில் மிகப்பெரிய பங்கு மதராஸ் மாகாண ஆளுநர் சர் தாமஸ் மன்றோவையேச்(1820-27) சாரும். அவர் கல்வியின் நிலை குறித்து அறிய புள்ளிவிவரக் கணக்கெடுப்பு நடத்த ஒரு குழுவை நியமித்தார். மன்றோவின் கல்விக்குழு ஒவ்வொரு மாவட்டத்திலும் இரண்டு முதன்மைப் பள்ளிகளை உருவாக்க பரிந்துரைத்தது.

(மாவட்ட ஆட்சியர் மற்றும் தாசில்தார் பள்ளிகள்). 1835ஆம் ஆண்டு வில்லியம் பெண்டிங் பிரபு மேற்கத்திய கல்வி முறையை அறிமுகப்படுத்துவதற்கு ஆதரவாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினார். 1854ஆம் ஆண்டின் சர் சார்லஸ் வுட் கல்வி அறிக்கை மதராஸ் மாகாணத்தில் பொது வழிகாட்டும் துறையை (Department of Public instruction) ஏற்படுத்தியது. அனைத்து பள்ளிகளுக்கும் கல்வி மானியம் வழங்கப்பட்டன. 1857இல் சென்னை பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது. இதுவே ஆங்கிலேயே ஆட்சியின் போது தமிழகத்தில் அமைக்கப்பட்ட முதல் பல்கலைக்கழகமாகும். 1882ஆம் ஆண்டு உள்ளூர் வாரியச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அதன் மூலம் புதிய பள்ளிகளைத் திறக்கவும், அரசாங்கத்திடமிருந்து மானியங்களைப் பெறவும் வாரியத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டது. 1938 வாக்கில் பள்ளிகளில் ஆங்கில மொழிப் பாடம் தவிர அனைத்து பாடங்களும் தமிழ் மொழியிலேயே கற்பிக்கப்பட்டன.

1929ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகம் சிதம்பரத்தில் அமைக்கப்பட்டது. இது உயர் கல்வியின் வளர்ச்சியின் அடுத்த கட்டமாகும்.

**சுதந்திரத்திற்குப் பின் தமிழகக் கல்வி:**

**1964-65** இல் இடைநிலைக் கல்வி அளவில் இலவச கல்வி அறிமுகப்படுத்தப்பட்டது. 1975இல் காந்திகிராம கிராமிய கல்லூரி ஏற்படுத்தப்பட்டது. கல்லூரி சென்று படிக்க முடியாதவர்களுக்காக தொலைதூரக் கல்வியும் அறிமுகப்படுத்தப்பட்டது.

1956இல் பள்ளிகளில் மதிய உணவுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. பின்னர் இது பள்ளிகளில் இடை நிற்றலைத் தவிர்க்கும் பொருட்டு 1982இல் சத்துணவுத் திட்டமாக விரிவுபடுத்தப்பட்டது. 1986இல் உருவாக்கப்பட்ட தேசியக் கல்விக் கொள்கை 1992இல் திருத்தி அமைக்கப்பட்டது. அதன் பின்னர் சமூகத்தில் மாறிவரும் சூழ்நிலைகளை எதிர்கொள்ளத் தேவையான பல மாற்றங்கள் செய்யப்பட்டன.

### அலகு-2

## இந்தியாவில் தொழிலகங்களின் வளர்ச்சி

**அறிமுகம்:**

இந்திய தொழில்களின் வரலாறு மனிதகுல வரலாற்றிலிருந்த தொடங்குகிறது. விவசாயமும் கைவினைப் பொருட்கள் கலந்த கலவையாகவே இந்திய பாரம்பரிய பொருளாதாரம் காணப்பட்டது. எட்வர்ட் பெயின்ஸ் என்பவர் "பருத்தி உற்பத்தியின் பிறப்பிடம் இந்தியா என்றும் அது உண்மையான வரலாற்று காலத்திற்கு முன்பே செழித்தோங்கி இருந்தது". என்றும் குறிப்பிடுகிறார். முகலாய பேரரசர் ஷாஜகான் ஆட்சியின்போது இந்தியாவிற்கு வருகை தந்த பெர்னியர், இந்தியாவில் நம்பமுடியாத எண்ணிக்கையில் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டதைக் கண்டு வியப்படைந்தார். பிரெஞ்சு நாட்டு பயணி டவேர்னியர் இந்தியாவில் உள்ள மயிலாசனம், பட்டு மற்றும் தங்கத்திலான தரைவிரிப்புகள், சிறிய அளவிலான சிற்ப வேலைபாடுகளையும் கண்டு வியப்படைந்தார்.

**இந்தியாவின் பாரம்பரிய கைவினைப் பொருட்கள்:**

இந்தியாவின் கைவினைப் பொருட்கள் ஒரு சிறந்த வரலாற்றைக் கொண்டுள்ளன. கைவினைப் பொருட்கள் இந்திய மக்களின் வாழ்க்கையில் ஒருங்கிணைந்த ஒரு பகுதியாக இருந்தன. இயந்திரமாக்கப்பட்ட தொழிற்சாலைகள் வருவதற்கு முன்னர், இந்திய கிராமங்களில் விவசாயத்திற்கு அடுத்த நிலையில் கைவினைத் தொழில் பெரிய வேலை வாய்ப்பாக இருந்தது. நெசவு, மரவேலை, தந்தவேலை, மதிப்புமிக்க கற்களை வெட்டுதல், தோல், வாசனை மரங்களில் வேலைப்பாடுகள் செய்தல், உலோக வேலை மற்றும் நகைகள் செய்தல் ஆகிய பாரம்பரிய தொழில்களில் இந்தியா மிகவும் புகழ்பெற்று விளங்கியது. கிராமப்புற கைவினைஞர்களான பானைத் தயாரிப்பாளர்கள், நெசவாளர்கள், உலோக வேலை செய்வோர் ஆகியோர் வீட்டுப் பொருட்களையும் பயன்பாட்டிற்கான பொருட்களையும் பாத்திரங்களையும் உற்பத்தி செய்தனர். ஆனால் சில சிறப்பு வாய்ந்த பொருட்கள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளுக்காக உற்பத்தி செய்யப்பட்டன. அவைகள் பருத்தித் துணிகள், மஸ்லின் துணிகள், கம்பளி, பட்டு மற்றும் உலோகப் பொருட்கள் ஆகியனவாகும். பருத்தி மற்றும் பட்டு ஆடைகளின் சிறந்த தரத்திற்கு இந்தியா பிரபலமானது. நெசவாளர்கள், தையல்காரர்கள் மற்றும் சாய தொழிலாளர்கள் ஆகியோரைப் பற்றி பல அறிவார்ந்த படைப்புகளில் குறிப்புகள் காணப்படுகின்றன. குறிப்பிட்ட சில உலோகத் தொழிற்சாலைகளுக்கான மையங்கள் நன்கு பிரபலமானவை. உதாரணமாக வெண்கலத்துக்கு சௌராஷ்டிரா பெயர் பெற்றது. தகர தொழிற்சாலைக்கு வங்காளம் புகழ்பெற்றது. மஸ்லின் ஆடைகளுக்கு டாக்கா புகழ்பெற்றது.

**டாக்காவின் மஸ்லின் ஆடைகள்:**
**கி.மு.(பொ.ஆ.மு) 2000ஆம் ஆண்டுகள் பழமையான எகிப்திய கல்லறைகளில் உள்ள மம்மிகள் மிகச் சிறந்த தரம் வாய்ந்த இந்திய மஸ்லின் ஆடைகள் கொண்டு சுற்றப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.**

**50 மீட்டர் அளவு கொண்ட மெல்லிய இந்த மஸ்லின் துணியை ஒரு தீப்பெட்டிக்குள் அடக்கிவிடலாம்.**

**இந்தியத் தொழிலகங்களின் வீழ்ச்சி:**

**அ. ஆட்சியாளர்களின் ஆதரவின்மை:**

இந்தியாவில் பிரிட்டிஷாரின் வெற்றியானது சுயச்சார்புடன் இருந்த இந்திய பொருளாதாரத்தை காலனித்துவ பொருளாதாரமாக மாற்றியது. பிரிட்டிஷார் இந்திய நிலப்பகுதிகளை ஒன்றன்பின் ஒன்றாக வெற்றி கொண்டதால், பூர்வீக ஆட்சியாளர்கள், உயர்குடியினர் மற்றும் நிலக்கிழார்கள் ஆகியோர் தங்கள் அதிகாரத்தையும் செல்வவளத்தையும் இழந்தனர். அரசவையில் நுண்ணிய வேலைப்பாடுகளைக் கொண்ட பொருட்களை காட்சிப்படுத்துவதும் பிற சடங்கு சம்பிரதாயங்களும் மறைந்தன. இதன் விளைவாக பூர்வீக ஆட்சியாளர்களால் ஆதரிக்கப்பட்ட கைவினைஞர்கள் தங்கள்

முக்கியத்துவத்தை இழந்து ஏழைகளாயினர். பல தலைமுறைகளாக தங்கள் கைவினைத் தொழிலை மட்டுமே மேற்கொண்ட இந்திய கைவினைஞர்கள் மற்ற தொழில்களுக்கான திறமைகளை கொண்டிருக்கவில்லை. எனவே அவர்கள் அன்றாட தேவைகளை பூர்த்தி செய்ய வயல்வெளிகளில் தொழிலாளர்களாக வேலை செய்ய வேண்டியதாயிற்று. இந்த மாற்றம் விவசாயத்தின் மீது அதிக அழுத்தத்தை ஏற்படுத்தியது மற்றும் தகுதிக்கேற்ற வேலையின்மை அதிக அளவில் விவசாயத் தொழிலில் ஏற்பட்டது, விவசாயமும் வணிக பயிர்களுக்கு மாறியதால், இந்திய வேளாண் சார்ந்த தொழிலகங்கள் அழிவை நோக்கிச் சென்றன. இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் கிழக்கிந்திய கம்பெனியின் அரசியல் செல்வாக்கு பரவியதால் உள்நாட்டு கைத்தொழில்களின் சிறப்பான காலம் முடிவுக்கு வந்தது எனலாம்.

**ஆ. உற்பத்தியாளர், மூலப்பொருட்களின் ஏற்றுமதியாளராக மாறுதல்:**

நாட்டை புகழ்பெறச் செய்த இந்திய கைவினைப் பொருள்கள் காலனித்துவ ஆட்சியின் கீழ் சரிவைச் சந்தித்தன. பிரிட்டிஷ் ஆட்சியாளர்களால் பிரிட்டனில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட இயந்திரத்தால் தயாரிக்கப்பட்ட பொருட்களின் போட்டியே இதற்கு முக்கிய காரணமாக அமைந்தது. பிரிட்டிஷ் ஆட்சியானது, இந்தியாவை தங்கள் தொழில்களுக்கான மூலப்பொருள்களின் உற்பத்தியாளராகவும், தங்களால் தயாரித்து முடிக்கப்பட்ட பொருட்களுக்கான சந்தையாகவும் மாற்றியது. மேலும் பிரிட்டிஷாரால் அறிமுகப்படுத்தப்பட்ட ரயில்வே மற்றும் சாலைகளானது முடிவுற்ற பொருட்களை இந்தியாவின் தொலைதூர பகுதிகளுக்கு கொண்டு செல்லவும் பல்வேறு பகுதிகளிலிருந்து மூலப்பொருட்களை கொள்முதல் செய்யவும் வாய்ப்பை ஏற்படுத்தியது.

**இ. இயந்திரத்தால் தயாரிக்கப்பட்ட பொருட்களின் போட்டி:**

இந்தியாவின் பழமையான தொழில் நெசவுத் தொழிலாகும். இந்திய நெசவாளர்களின் மிகவும் சிறப்பு வாய்ந்த திறன்கள் மற்றும் குறைந்த உற்பத்தி செலவு ஆகியவை ஐரோப்பிய உற்பத்தியாளர்களுக்கு கடுமையான போட்டியை அளித்தன. இப்போட்டி இங்கிலாந்தில் காட்டன் ஜின், பறக்கும் எறிநாடா, நூற்கும் ஜென்னி மற்றும் நீராவி இயந்திரம் ஆகியவை கண்டுபிடிப்பதற்கும், அவை நெசவு உற்பத்தியை பெரிய அளவில் உருவாக்கவும் உதவியது. பிரிட்டனில் உற்பத்தியான பொருட்களின் சந்தையாக இந்தியா மாறியது, இதன் விளைவாக பகுதிநேர வேலையாக நூற்பு மற்றும் நெசவு மூலம் தங்கள் வருமானத்தை ஈடுசெய்த விவசாயிகள் தற்போது பயிரிடுவதை மட்டுமே சார்ந்திருக்க வேண்டியதாயிற்று. அதனால் அவர்கள் தங்கள் வாழ்வாதாரத்தை இழந்தனர். மேலும் பழமையான தொழில்நுட்பங்களுடன் தயாரிக்கப்பட்ட இந்தியப் பொருட்கள் இங்கிலாந்தில் இயந்திரங்களால் முடிக்கப்பட்ட பொருட்களுடன் போட்டியிட முடியவில்லை.

**தாதாபாய் நௌரோஜியின் செல்வச் சுரண்டல் கோட்பாடு**
**ஆங்கிலேயர்கள் இந்தியாவின் வளங்களை சுரண்டுவதும் இந்தியாவின் செல்வங்களை பிரிட்டனுக்கு கொண்டு செல்வதுமே இந்திய மக்களின் வறுமைக்கு காரணம் என்பதை முதலில் ஏற்றுக் கொண்டவர் தாதாபாய் நௌரோஜி ஆவார்.**

**ஈ. ஆங்கிலேயர்களின் வர்த்தகக் கொள்கை:**

இந்தியாவில் பிரிட்டிஷ் அரசாங்கத்தால் செயல்படுத்தப்பட்ட அனைத்து கொள்கைகளும் இந்திய உள்நாட்டு தொழில்களின் மீது மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தின. கிழக்கிந்திய கம்பெனியால் பின்பற்றப்பட்ட தடையில்லா வாணிபக் கொள்கைச, இந்திய வர்த்தகர்கள் தங்கள் பொருட்களை சந்தை விலைக்கு குறைவாக விற்க கட்டாயப்படுத்தியது. இது பல கைவினைஞர்கள் தங்கள் மூதாதையர்களிடம் இருந்து கற்றுக் கொண்ட கைவினைத் திறமைகளை கைவிடவும் கட்டாயப்படுத்தியது. கிழக்கிந்தியக் கம்பெனியின் நோக்கமானது மலிவான விலையில் இந்திய தயாரிப்பு பொருட்களை பெருமளவிற்கு வாங்கி மற்ற ஐரோப்பிய நாடுகளுக்கு பெரும் லாபத்திற்கு விற்க வேண்டும் என்பதாகும். இது இந்தியப் பாரம்பரிய தொழில்களை வெகுவாக பாதித்தது. இந்தியாவின் வர்த்தக நலன்களுக்கெதிரான பாதுகாப்பு கட்டணங்களின் கொள்கையை ஆங்கிலேயர்கள் பின்பற்றினர். பிரிட்டனுக்கு கொண்டு செல்லப்பட்ட இந்திய பொருட்களுக்கு கடுமையான வரி விதிக்கப்பட்டன. அதே நேரத்தில் இந்தியாவுக்கு கொண்டுவரப்பட்ட ஆங்கிலேய பொருட்களுக்கு பெயரளவில் மட்டுமே வரி விதிக்கப்பட்டன.

**உ. தொழில்மயமாதல்:**

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முதல் பாதியில் மேற்கத்திய நாடுகள் தொழில்மயமாக்கலை அனுபவித்து வந்த அதே வேளையில் இந்தியத் தொழிற்துறையானது வீழ்ச்சியின் காலத்தைச் சந்தித்தது. பாரம்பரிய இந்திய கைவினை தொழிலுக்கு இடையூறு ஏற்படுத்தும் செயல்பாடு மற்றும் தேசிய வருமானத்தின் விழ்ச்சி ஆகியன தொழில்மயமாதல் என குறிப்பிடப்படுகிறது.

ஒரு சக்திவாய்ந்த தொழிற்துறை அமைப்பு, மிகப்பெரிய இயந்திரங்கள், பெரிய அளவிலான உற்பத்தி ஆகியவற்றை பின்புலமாகக் கொண்ட வெளிநாட்டு தொழிலகங்களுடன் இந்திய உள்நாட்டு தொழிலகங்கள் போட்டியிட முடியவில்லை. சூயஸ் கால்வாய் கட்டுமானத்திற்கு பின்பு இந்தியத் தொழிற்துறை மேலும் சிக்கலைச் சந்தித்தது. ஏனென்றால் இது போக்குவரத்து செலவினை குறைத்ததுடன் இந்தியாவில் பிரிட்டிஷ் பொருட்களை மலிவானதாக மாற்றியது. நவீன தொழிற்சாலையின் அதிகமான வேலைவாய்ப்புகளும் வருமானம் ஈட்டும் விளைவுகளும் கைவினைத் தொழில் வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாக அமைந்தது.

**நவீன தொழிலகங்களின் தொடக்கம்:**

பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இந்தியாவில் தொழில் மயமாக்கலின் செயல்பாடு தொடங்கியது. நவீனத் தொழிற்துறையின் தொடக்கமானது முக்கியமாக சணல், பருத்தி மற்றும் எ∴கு தொழில்களின் வளர்ச்சியுடன் தொடர்புடையது எனலாம். நிலக்கரி சுரங்கத் தொழில் வளர்ச்சி குறிப்பிட்ட அளவில் தான் இருந்தது. ரயில்வே மற்றும் சாலைகளின் வளர்ச்சி துரிதப்படுத்தப்பட்டவுடன் தொழில்மயமாக்கல் தொடங்கியது இந்த வளர்ச்சி நாட்டு மக்களின் சமூக மற்றும் பொருளாதார வாழ்க்கையைப் பெரிதும் பாதித்தது. இரசாயனம், இரும்பு மற்றும் எ∴கு, சர்க்கரை, சிமெண்ட், கண்ணாடி மற்றும் மற்ற நுகர்வோர் பொருட்கள் போன்ற தொழில்களின் வளர்ச்சிக்கு இரண்டு உலகப் போர்களும் ஒரு உத்வேகத்தை அளித்தன. பெரும்பாலான ஆலைகள் பணக்கார இந்திய வணிகர்களால் அமைக்கப்பட்டன. தொடக்கத்தில் இந்த வளர்ச்சி பருத்தி மற்றும் சணல் ஆலைகள் அமைப்பதில் மட்டுமே இருந்தது.

**அ) தோட்டத் தொழில்கள்:**

தோட்டத் தொழில் முதன் முதலில் ஐரோப்பியர்களை ஈர்த்தது. பெருந்தோட்டத் தொழில் பெரிய அளவில் வேலைகளை வழங்க முடிந்ததென்றாலும், உண்மையில் இது பிரிட்டிஷ் சமுதாயத்தால் அதிகரித்து வரும் தேநீர், காபி மற்றும் கருநீலச்சாயம்(இண்டிகோ) ஆகியவற்றிற்கான தேவைகளை பூர்த்தி செய்ய முடிந்தது, எனவே தான் தோட்டத்தொழில் ஆரம்பத்திலேயே தொடங்கப்பட்டது. அஸ்ஸாம் தேயிலை நிறுவனம் 1839ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. அதே நேரத்தில் காபி தோட்டமும் தொடங்கப்பட்டது. தேயிலைத் தோட்டம் கிழக்கிந்திய பகுதிகளில் மிக முக்கியமான தொழிலாக இருந்தது போலவே காபி தோட்டமும் தென்னிந்தியாவின் நடவடிக்கைகளின் மையமாக மாறியது. மூன்றாவது முக்கிய தோட்டத் தொழிலான சணல் பல தொழிற்சாலைகள் உருவாக வழிவகுத்தது. இந்த தொழில்கள் அனைத்தும் பிரிட்டிஷ் கிழக்கிந்திய நிறுவனத்தின் முன்னாள் ஊழியர்கள் பலரால் கட்டுப்படுத்தப்பட்டன.

**ஆ. இயந்திர அடிப்படையிலான தொழில்கள்:**

இந்தியாவில் 1854ஆம் ஆண்டு பம்பாயில் பருத்தி நூற்பு ஆலை நிறுவியதுடன் ஒரு ஒருங்கமைக்கப்பட்ட வடிவிலான நவீன தொழில்துறைப் பிரிவு தொடங்கப்பட்டது. 1855ஆம் ஆண்டு கல்கத்தாவிற்கு அருகில் ரிஷ்ரா என்ற இடத்தில் ஹுக்ளி பள்ளத்தாக்கில் சணல் தொழிற்சாலை தொடங்கப்பட்டது. 1870ஆம் ஆண்டு முதல் காகித ஆலை கல்கத்தாவுக்கு அருகில் பாலிகன்ஜ் என்ற இடத்தில் துவங்கப்பட்டது. பருத்தி ஆலைகள் இந்திய நிறுவனங்களால் ஆதிக்கம் செலுத்தப்பட்டன. மற்றும் சணல் ஆலைகள் பிரிட்டிஷ் முதலாளிகளுக்கு சொந்தமானவையாக இருந்தன. பம்பாய் மற்றும் அகமதாபாத்தில் பருத்தி ஆலைகள் ஏற்படுத்தப்பட்டன மற்றும் ஹுக்ளி ஆற்றங்கரையில் சணல் ஆலைகள் பல்கிப் பெருகின. கான்பூரில் கம்பளி மற்றும் தோல் தொழிற்சாலைகள் முக்கியத்துவம் பெற்றன.

### இ. கனரக தொழில்கள்:

கனரக தொழில்களில் இரும்பு மற்றும் எ∴கு தொழில் அடங்கும். 1874ஆம் ஆண்டு குல்டி என்ற இடத்தில் முதன்முறையாக நவீன முறையில் எ∴கு தயாரிக்கப்பட்டது. 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இரும்பு மற்றும் எ∴கு தொழில்கள் இந்திய மண்ணில் வேரூன்ற தொடங்கின. இருப்பினும் இந்தியாவில் மிகப்பெரிய அளவிலான எ∴கு உற்பத்தியை மேம்படுத்திய பெருமை ஜாம்ஷெட்ஜி டாடா என்பவரையேச் சாரும். 1907ஆம் ஆண்டு ஜாம்ஜஷெட்பூர் என்ற இடத்தில் டாட்டா இரும்பு மற்றும் எ∴கு நிறுவனம் (TISCO) அமைக்கப்பட்டது. இந்நிறுவனம் 1911ஆம் ஆண்டு உலோக வார்ப்பு கட்டிகளையும் உற்பத்தி செய்தது.

### நவீன தொழிலகங்களின் வளர்ச்சி:

1861ஆம் ஆண்டு 2,573 கிலோமீட்டர் ஆக இருந்த ரயில்வேயின் நீளம் 1914ஆம் ஆண்டு 55,773 கிலோ மிட்டர்களாக அதிகரித்தது. சூயஸ் கால்வாய் திறப்பு ஐரோப்பாவிற்கும் இந்தியாவிற்குமான தூரத்தை சுமார் 4,830 கிலோ மீட்டர் தூரமாக குறைந்தது. இந்த குறைக்கப்பட்ட தூரம் இந்தியாவின் தொழில்மயமாக்கலுக்கு மேலும் உதவியது. சுதேசி இயக்கத்தின் விளைவாக பருத்தி ஆலைகள் 194லிருந்து 273ஆகவும் சணல் ஆலைகள் 36லிருந்து 64ஆகவும் அதிகரித்தன. ஆங்கிலேயர்கள் இந்தியாவில் அதிகாரத்தை பலப்படுத்தி அதன் மூலம் ஏராளமான வெளிநாட்டு தொழில் முனைவோர்களையும் வெளிநாட்டு மூலதனத்தையும் குறிப்பாக இங்கிலாந்தில் இருந்து ஈர்த்தனர். அதிக லாபம் ஈட்டும் இந்திய தொழில்துறைகள் வெளிநாட்டு முதலாளிகளை மிகவும் கவர்ந்திழுத்தது. ஏனென்றால் வேலையாட்களும் மூலப்பொருட்களும் மிகவும் மலிவாக கிடைத்தன. மேலும் இந்தியாவும் அதன் அண்டை நாடுகளும் ஒரு சந்தையை வழங்க தயாராக இருந்தன.

### இந்திய தொழிற்துறை கூட்டமைப்பு (CII) (Confederation of Indian Industry):

இந்திய தொழிற்துறை கூட்டமைப்பு என்பது இந்தியாவில் உள்ள ஒரு வணிக சங்கம் ஆகும். இது ஒரு அரசு சாரா, இலாப நோக்கமற்ற, தொழிற்துறை வழிநடத்துதல் மற்றும் தொழிற்துறையை நிர்வகிக்கும் ஒரு அமைப்பாகும். இது 1985இல் நிறுவப்பட்டது. தனியார் மற்றும் பொதுத் துறைகளை உள்ளடக்கிய சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களில் (SME) இருந்தும் மற்றும் பன்னாட்டு நிறுவனங்களில் (MNC) இருந்தும் 9,000 உறுப்பினர்களைக் கொண்டு உருவாக்கப்பட்டதாகும்.

### இந்தியாவில் தொழிலக வளர்ச்சி:

தொழிலக வளர்ச்சியின் கனவை நனவாக்கும் விதமாக இந்திய அரசு சில தொழிற்துறை கொள்கைகளையும், ஐந்தாண்டு திட்டங்களையும் ஏற்றுக்கொண்டுள்ளது. சுதந்திரத்திற்கு பிறகு தொழில்துறையில் ஏற்பட்ட மிக முக்கியமான புதுமைகளுள் ஒன்று ஐந்தாண்டு திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டதாகும். மேலும் 1948ஆம் ஆண்டு தொழில்துறை கொள்கை தீர்மானத்தினால் அரசாங்கம் தொழில்துறையில் நேரடியாக பங்களிப்பினை வெளிப்படுத்துகிறது. இந்த தீர்மானம் தொழிற்துறை வளர்ச்சியில் ஒரு தொழில் முனைவோராகவும் அதிகார மையமாகவும் அரசின் பங்கினை வரையறுத்தது. 1956ஆம் ஆண்டு தொழிற்துறை கொள்கை தீர்மானத்தின்படி தொழிற்துறையானது மூனறு வகைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

**அட்டவணை: 1**

இவ்வகையான தொழிற்துறைகளை அரசாங்கம் மட்டுமே நிர்வகிக்கும். அவற்றுள் சில அணுசக்தி மட்டுமே நிர்வகிக்கும். அவற்றுள் சில அணுசக்தி, மின்னணு, இரும்பு மற்றும் எ∴கு ஆகியவை அடங்கும்.

**அட்டவணை: 2**

இவைகள் சாலைகள் மற்றும் கடல் போக்குவரத்து, இயந்திரக் கருவிகள், அலுமினியம், நெகிழி மற்றும் உரங்கள் உள்ளிட்ட ரசாயனங்கள், இரும்பு கலவை மற்றும் குறிப்பிட்ட வகையான சுரங்கங்கள் ஆகியவை அடங்கும்.

**அட்டவணை: 3**

இந்த வகையின் கீழ் மீதமுள்ள தொழில்கள் மற்றும் தனியாருக்கு விடப்பட்ட துறைகள் ஆகியவை அடங்கும்.

**தொழிலக வகைபாடு:**

- **மூலப்பொருட்களின் அடிப்படையில் தொழில்களை வேளாண் அடிப்படையானவை மற்றும் கனிம அடிப்படையிலானவை என வகைப்படுத்தலாம்.**
- **தொழிலகங்கள் அவைகளின் பங்களிப்பின்படி அடிப்படை தொழில்கள் மற்றும் முக்கிய தொழில்கள் எனவும் வகைப்படுத்தலாம்.**
- **தொழில் உரிமத்தின் அடிப்படையில் பொதுத்துறை, தனியார் துறை மற்றும் கூட்டுறவுத் துறை என தொழிலகங்களை வகைப்படுத்தலாம்.**

**இந்தியாவில் தொழிற்துறை வளர்ச்சியின் பல்வேறு கட்டங்கள்:**

**அ. தொழிற்துறை வளர்ச்சி(1950 – 1965):**

இந்த காலகட்டத்தில் பெரும்பான்மையான நுகர்வோர் பொருட்கள் இந்தியாவில் உற்பத்தி செய்யப்பட்டன. தொழிற்துறை பலவீனமான உள்கட்டமைப்புடன் வளர்ச்சியடையாமல் இருந்தது. தொழில்நுட்ப திறன்கள் குறைந்த அளவிலேயே கிடைத்தன. முதல் மூன்று ஐந்தாண்டு திட்டங்கள் மிகவும் முக்கியமானவை ஏனெனில் அவைகளின் நோக்கம் சுதந்திர இந்தியாவில் ஒரு வலுவான தொழிற்துறை தளத்தை உருவாக்குவதே ஆகம். இந்த ஐந்தாண்டுத் திட்டங்கள் பெரும்பாலும் மூலதனப் பொருட்களின் வளர்ச்சியில் கவனம் செலுத்தின. இதன் விளைவாக இக்காலக் கட்டத்தில் உற்பத்தி வளர்ச்சி விகிதம் ஒரு துரிதமான வளர்ச்சியைக் கண்டது.

**ஆ. தொழிற்துறை வளர்ச்சி (1965-1980):**

முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் பெரும்பாலும் மூலதனப் பொருட்கள் துறையின் வளர்ச்சியில் கவனம் செலுத்தியதால், நுகர்வோர் பொருட்களின் துறை புறக்கணிக்கப்பட்டது. நுகர்வோர் பொருட்களின் துறையே கிராமப்புற பொருளாதாரத்தின் முதுகெலும்பாகும். இதன் விளைவாக தொழிற்துறை உற்பத்தி வளர்ச்சி விகிதம் வீழ்ச்சி அடைந்தது. எனவே இந்த காலகட்டம் பின்னடைவு காலமாக கருதப்படுகிறது.

**இ. தொழிற்துறை வளர்ச்சி (1980-1991):**

1980 களின் காலகட்டத்தை தொழிற்துறையின் மீட்பு காலமாகக் கருதலாம். ஏனெனில் இந்தக் காலத்தில் தொழிற்துறை மிகவும் வளமான வளர்ச்சியைக் கண்டது.

ஈ.1991 ஆம் ஆண்டு பொருளாதார தாராளமயமாக்கல் ஒரு புதிய சகாப்தத்தை உருவாக்கியது. தொழிற்துறையின் செயல்திறனை மேம்படுத்த இந்தியா ஒரு முக்கியமான முடிவை எடுத்தது. பத்தாவது மற்றும் பதினொன்றாவது ஐந்தாண்டுத் திட்டங்கள் தொழிற்துறை உற்பத்தியில் உயர் வளர்ச்சி விகிதத்தைக் கண்டன. தொழிற்துறை உரிமத்தை ஒழித்தல், விலைக் கட்டுப்பாடுகளை நீக்குதல், சிறு தொழில்களுக்கான கொள்கைகளை நீர்த்து போகச் செய்தல் மற்றும் ஏகபோக சட்டத்தின் மாயையை ஒழித்தல் ஆகியவை இந்தியத் தொழிற்துறை செழிக்க உதவியது. புதிய பொருளாதார கொள்கை வெளிநாட்டு முதலீடுகளை வரவேற்கிறது.

**நவீனமயமாக்கல்:**

இந்தியா தற்போது பல்வேறு வகையான இயல்பினைக் கொண்ட பொருட்களை உற்பத்தி செய்வதே அதிக அளவு நவீனமயமாக்கலைக் காட்டுகிறது. சில நவீன தொழில்கள் உண்மையில் வளர்ச்சி அடைந்து வெளி உலகத்துடன் திறம்பட போட்டியிடுகின்றன. இது வெளிநாட்டு வல்லுநர்கள் மற்றும் தொழில்நுட்பவியலாளர்களை சார்ந்து இருப்பதை பெரிதும் குறைத்துள்ளது. மாறாக, ஒப்பீட்டளவில் குறைந்த வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு பயிற்சி பெற்ற பணியாளர்களை இந்தியா அனுப்புகிறது.

தகவல் தொழில்நுட்பம் என்ற சொல் மென்பொருளுடன் கணினி மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தையும் உள்ளடக்கியது ஆகும். முதல்நிலை, இரண்டாம்நிலை மற்றும் மூன்றாம் நிலைத் தொழில்களுடன் நான்காம் தொழிற்துறையாக தகவல் தொடர்பான தொழில்கள் உருவாகியுள்ளது. அறிவு சார்ந்த பொருளாதாரமானது இயந்திரமயமான உழைப்பாளரின் தீவிர உற்பத்தி மற்றும் சேவை நடவடிக்கைகள், சுகாதாரம், தொலைதூர கல்வி, மென்பொருள் உற்பத்தி மற்றும் பல்லூடகம் (மல்டிமீடியா), பொழுதுபோக்கு ஆகியவை புதிய சேவை தொழில்களின் வளர்ச்சியை சித்தரிக்கின்றது.

**தற்சார்புடைமை:**

தற்சார்பு இலக்கை அடைந்திருப்பது தொழிற்துறை வளர்ச்சியின் மற்றொரு சாதகமான அம்சமாகும். இயந்திரங்கள், ஆலைகள் மற்றும் இதர தளவாடங்கள் உற்பத்தியில் நாம் தற்சார்பினை அடைந்துள்ளோம். தற்போது, தொழிற்துறை மற்றும் உள்கட்டமைப்பு வளர்ச்சிக்கு தேவையான தளவாடங்களின் பெரும்பகுதி இந்தியாவிலேயே உற்பத்தி செய்யப்படுகிறது.

இந்தியாவின் சாலைப் போக்குவரத்தானது உலகின் மிகப்பெரிய போக்குவரத்தகளுள் ஒன்றாகும். அரசாங்கத்தின் முயற்சிகளானது, தேசிய நெடுஞ்சாலைகள், மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் முக்கிய மாவட்ட சாலைகளின் அமைப்பினை விரிவாக்க வழிவகுத்தன. இது தொழிற்துறை வளர்ச்சிக்கு நேரடியான பங்களிப்பை அளித்தது.

இந்தியாவிற்கு அதன் வளர்ச்சி இயந்திரத்தை இயக்க சக்தி தேவைப்படுவதால் ஆற்றல் கிடைப்பதற்கான குறிப்பிடத்தக்க முயற்சிகளை தூண்டிவிட்டுள்ளது. சுதந்திரத்திற்கு பின்னர் ஏறக்குறைய எழுபது ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியா மின்சார உற்பத்தியில் ஆசிய நாடுகளில் மூன்றாவது மிகப் பெரிய நாடாக உருவாகியுள்ளது.

**முடிவுரை:**

தொழில்மயமாக்கல் என்பது பொருளாதார வளர்ச்சியின் ஒரு முக்கிய அங்கமாகும். திட்ட காலத்தில் இந்தியாவின் தொழிற்துறை விரிவாக்கமானது கலப்புப் பொருளாதாரம் ஏற்பட வழிவகை செய்தது. சுதந்திரத்திற்கு முன் இருந்த தொழிற்துறை வளர்ச்சியைக் காட்டிலும் ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலம் தொழில் வளர்ச்சி தனித்துவம் பெற்று விளங்கியது.

8வா தொகுதி- 3

## அலகு – 1 ஆங்கிலேயர்கள் ஆட்சியில் நகர்ப்புற மாற்றங்கள்

**அறிமுகம்**

நகரங்களின் பரிணாமம் (நகர்ப்புற குடியேற்றங்கள்) பல்வேறு வழிகளில், பல்வேறு கட்டங்களில் நிகழ்ந்துள்ளது. இந்தியாவில் வரலாற்றுக்கு முந்தைய காலத்திலிருந்தே நகரங்கள் செழித்து வளர்ந்தன. இந்தியாவில் உள்ள நகரங்களை பண்டைய கால நகரங்கள், மற்றும் நவீன கால நகரங்கள் என வகைப்படுத்தலாம்.

**பண்டைய கால நகரங்கள்**

பண்டைய காலங்களில் மன்னரின் குடியிருப்புப் பகுதிகள் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் நகரங்கள் தோன்றியதோடு, அவற்றின் அமைப்பு வர்த்தகத்திற்கு ஏற்றார்போல் கடல் மற்றும் ஆறுகளை அடைவதற்கு ஏற்றதாக இருந்தது. பெரும்பாலானவை நிர்வாக, சமய மற்றும் பண்பாட்டு மையங்களாக வளர்ந்தன. ஹரப்பா, மொகஞ்சதாரோ, வாரணாசி, அலகாபாத் மற்றும் மதுரை ஆகியவை புகழ்பெற்ற பண்டைய கால நகரங்கள் ஆகும்.

**இடைக்கால நகரங்கள்**

இடைக்காலத்தில் பெரும்பாலான நகரங்கள் மாநிலம் மற்றும் நாட்டின் தலைநகரங்களாக வளர்ந்தன. அவை கோட்டை நகரமாகவோ அல்லது துறைமுக நகரமாகவோ செயல்பட்டன. அவற்றில் முக்கியமானவை டெல்லி, ஹைதராபாத், ஜெய்ப்பூர், லக்னோ, ஆக்ரா மற்றும் நாக்பூர்.

**நவீன கால நகரங்கள்**

ஐரோப்பியர்களின் வருகை நகரங்களின் வளர்ச்சியில் புதிய மாற்றங்களைக் கொண்டு வந்தது. அவர்கள் முதலில் சூரத், டாமன், கோவா மற்றும் பாண்டிச்சேரி போன்ற சில கடலோர நகரங்களை உருவாக்கினர். இந்தியாவில் தங்களை நன்கு நிலைநிறுத்திக் கொண்ட பிரிட்டிஷார் மும்பை, சென்னை, கொல்கத்தா ஆகிய மூன்று நகரங்களை நிர்வாகத் தலைவராகவும் வணிக மையங்களாகவும் வளர்த்தனர். ஆளுமையின் பரப்பு விரிவடைய, பல புதிய நகரங்களை அதன் அமைவிடத்திற்காகவும் தேவைக்காகவும் வளங்களுக்காகவும் உருவாக்கினர். புதிதாக வளர்ச்சிபெற்ற நகரங்கள், மலை நகரங்கள் தொழில் நகரங்கள், நீதிமன்ற நகரங்கள், இருப்புப்பாதை நகரங்கள், இராணுவ குடியிருப்புகள் மற்றும் நிர்வாக நகரங்களாக விளங்கின.

**ஆங்கிலேயரின் ஆட்சியில் நகரமயமாக்கலின் தனித்துவங்கள்**

**1. தொழில் முடக்கப்படுதல்**

18 தொழில் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆங்கிலேயர்களின் கொள்கைகள் நகரமயமாக்கலுக்கு எதிராக இருந்தது நிரூபணமானது. பின்னர் ஆங்கிலேயர்கள் பின்பற்றிய பொருளாதாரத்தை விரைவாக ஒரு காலனித்துவப் பொருளாதாரமாக மாற்றுவதற்கும் நகரங்களின் வளர்ச்சிக்கும் வழிவகுத்தன.

பிரிட்டிஷாரின் ஒரு வழியிலான சுதந்திரமான வர்த்தகத்தின் விளைவாக இந்திய உற்பத்தித் தொழில்கள் அழிக்கப்பட்டன. இந்திய உற்பத்தித் தொழில்களின் மொத்த அழிவின் விளைவாக லட்சக்கணக்கான கலைஞர்கள் மற்றும் கைவினைஞர்கள் நசிந்து போயினர். பல நூற்றாண்டுகளாக நாகரிக உலகின் சந்தைகளில் கோலோச்சியிருந்த இந்தியாவின் நகர்ப்புற கைவினைத் தொழில்களில் திடீர் சரிவு ஏற்பட்டது.

நீண்ட காலமாக சிறப்பான உற்பத்தி பொருளுக்காகப் புகழ்பெற்ற நகர்ப்புற சந்தைகள் தொடர்ந்து குறையலாயின. இதன் விளைவாக புகழ்பெற்ற பழைய உற்பத்தி நகரங்களான டாக்கா, மூர்ஷிதாபாத், சூரத் மற்றும் லக்னோ போன்றவை முந்தைய முக்கியத்துவத்தை இழந்தன.

இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் கடுமையான போட்டியினால் ஒட்டுமொத்த தொழில்துறை கட்டமைப்பும் செயலிழந்து போயின.

பாரம்பரியத் தொழில்களை அடிப்படையாகக் கொண்டிருந்த இந்திய கைவினைத் தொழில் பொருட்கள், உற்பத்தி செய்யும் நகரங்கள் தொழிற்புரட்சியின் விளைவாக அழிந்தன. அதிகப்படியான இறக்குமதி வரி மற்றும் ஏற்றுமதி சார்ந்த பிற கட்டுப்பாடுகள் காரணமாக இந்தியப் பொருட்கள் பிரிட்டன் மற்றும் ஐரோப்பிய நாடுகளில் இறக்குமதி செய்யப்படுவது குறையலாயின இவ்வாறு இந்தியா, பிரிட்டனின் வேளாண்மை குடியேற்றமாக மாறியது.


II. இந்தியப் பொருளாதாரம் காலனிய பொருளாதாரமாக மாறியதால் உற்பத்தியாளர்களின் சந்தையாகவும் தொழிற்சாலைகளுக்கு கச்சாப் பொருட்களை வழங்குமிடமாகவும் மாறியதோடு பல நகரங்களில் உள்ள தொழிற்சாலைகள் மற்றும் வணிகத்தளத்தை கடுமையாக பாதித்தது.

மன்னர்களின் அதிகாரங்கள் படிப்படியாக சரியத் தொடங்கியதால் அவர்களது ஆட்சியுடன் தொடர்புடைய நகரங்களின் அழிவுக்கு அது வழிவகுத்தது. ஒரு காலத்தில் ஏகாதிபத்திய நகரமாக இருந்த ஆக்ரா 19ஆம் நூற்றாண்டின் முதல் காலாண்டில் அதனை பெரும் அழிவு சூழ்ந்தது. ஏகாதிபத்தியத்தின் பல்வேறு கொள்கையின் விளைவாக சுதேச அரசர்கள் தங்களது அரசை ஆங்கிலேயர்களிடம் இழந்தனர்.

பிரிட்டிஷ் காலத்திற்கு முந்தைய நகர்ப்புற மையங்களின் வீழ்ச்சிக்கு பங்களித்த மற்றொரு காரணி 1853ஆம் ஆண்டு இந்தியாவில் இருப்புப் பாதைகளை அறிமுகப்படுத்தியதாகும். இரயில்வே அறிமுகப்படுத்தப்பட்டதன் விளைவாக வர்த்தகப் பாதைகள் திசைதிருப்பப்பட்டு ஒவ்வொரு ரயில் நிலையமும் மூலப்பொருள்களை ஏற்றுமதி செய்யும் மையமாக மாறியது. பிரிட்டிஷ் உற்பத்தியாளர்கள் நாட்டின் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் சென்றடைய இரயில்வே வழிவகுத்ததால் நாட்டின் கிராமங்களிலுள்ள பாரம்பரிய தொழில்கள் அடியோடு நசிந்தன.

**III.புதிய நகர மையங்களின் வளர்ச்சி**

கிழக்கு மற்றும் மேற்கு கடலோரப் பகுதிகளிலுள்ள கல்கத்தா, மதராஸ் மற்றும் பம்பாய் போன்ற இடங்களில் பிரிட்டிஷ் புதிய வர்த்தக மையங்களை உருவாக்கியது. மதராஸ்(1639), பம்பாய்(1661) மற்றும் கல்கத்தா(1690) போன்ற நகரங்களை உருவாக்கி




பிரிட்டிஷார் வலுப்படுத்தினர். இவை அனைத்தும் முன்னர் மீன்பிடித்தல் மற்றும் நெசவு தொழில் செய்யும் கிராமங்களாகும். இங்கு அவர்கள் வீடுகள், கடைகள் மற்றும் தேவாலயங்களைக் கட்டியதோடு வணிக மற்றும் நிர்வாக தலைமையத்தையும் அமைத்தனர்.

18ஆம் நூற்றாண்டின் மையப்பகுதியில் மாற்றத்தின் ஒரு புதிய காலகட்டம் தோன்றியது. 1757ஆம் ஆண்டு பிளாசிப் போருக்குப் பின்னர் ஆங்கிலேயர்கள் படிப்படியாக அரசயில் ஆதிக்கம் பெற்றதால் ஆங்கில கிழக்கிந்திய நிறுவனத்தின் வர்த்தகம் விரிவடைந்தது.

18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கல்கத்தா, பம்பாய், மற்றும் மதராஸ் ஆகியவை பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் மாகாண நகரங்களாக (நிர்வாக நோக்கத்திற்காக காலனித்துவ இந்தியா மூன்று மாகாணங்களாக பிரிக்கப்பட்டன) முக்கியத்துவம் பெற்றன.

சூயஸ் கால்வாய் திறப்பு, நீராவிப் போக்குவரத்து அறிமுகம், ரயில்வே சாலைகள் அமைத்தல், கால்வாய்கள், துறைமுகங்கள், தொழிற்சாலைகள் வளர்ச்சி, நிலக்கரி சுரங்கம், தேயிலைத் தொட்டம், வங்கிப்பணி, கப்பல் போக்குவரத்து மற்றும் காப்பீடு வளர்ச்சியினால் 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நகரமயமாக்கலில் புதிய போக்கு தொடங்கியது. வர்த்தக பிணைப்புகளில் ஏற்பட்ட மாற்றம் நகர்ப்புற மையங்களின் வளர்ச்சியில் பிரதிபலித்தது.

ஒரு நகர்ப்புற பகுதி என்பது அதிக மக்கள் தொகை அடர்த்தியோடு உணவு உற்பத்தியல்லாத தொழில்களில் ஈடுபடுவதும் நன்கு கட்டமைக்கப்பட்ட சூழலில் வாழ்வதும் ஆகும்.

**அ. துறைமுக நகரங்கள்**

ஆங்கிலேயர்கள் வர்த்தகத்திற்காக இந்தியா வந்தனர். மதராஸ், கல்கத்தா மற்றும் பம்பாய் ஆகியவை முக்கிய துறைமுகங்களாக மாறின. இவை வர்த்தகத்தில் முக்கிய பங்கு வகித்தன. ஐரோப்பிய பாணியிலான உயரமான கட்டடங்களுடன் இந்த நகரங்கள் முக்கிய வணிகப் பகுதிகளாக மாறின. ஆங்கில கிழக்கிந்திய நிறுவனம் அதன் தொழிற்சாலைகளைக் அமைத்ததோடு குடியேற்றத்தினை பாதுகாப்பிற்காக கோட்டைகளையும் அமைத்தனர்.

சென்னையில் புனித ஜார்ஜ் கோட்டையும் கல்கத்தாவில் புனித வில்லியம் கோட்டையும் இதற்கு சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

**ஆ. இராணுவக் குடியிருப்பு நகரங்கள்**

ஆங்கிலேயர் தங்கள் இராணுவ பலத்தால் இந்தியப் பகுதிகளையும், அரசியல் ஆதிகாரத்தையும் கைப்பற்றினர். எனவே வலுவான இராணுவ முகாம்கள் தேவைப்பட்டதால் இராணுவக் குடியிருப்புகளை ஏற்படுத்தினர். இராணுவக் குடியிருப்புகள் முற்றிலும் புதிய நகர்ப்புற மையங்களாக இருந்தன. இராணுவ வீரர்கள் இந்த பகுதிகளில் வசிக்கத் தொடங்கினர். மேலும் இப்பகுதிகள் படிப்படியாக நகரங்களாக வளர்ந்தன. எடுத்துக்காட்டு: கான்பூர், லாகூர்.

**இ. மலைவாழிடங்கள்**

காலனித்துவ நகர்ப்புற வளர்ச்சியில் மலைவாழிடங்கள் பற்றி அறியப்படவில்லை. அவை சிலவாக இருந்ததோடு குறைந்த மக்கள்தொகையைக் கொண்டிருந்தன. அவர்களும் குறிப்பிட்ட தேவைகளுக்காகவே அடிக்கடி வருகை புரிந்தனர். எடுத்துக்காட்டாக ஸ்ரீநகர் ஒரு முகலாய பொழுதுபோக்கு மையமாகவும் கேதர்நாத் மற்றும் பத்ரிநாத் ஆகியவை இந்து சமய மையங்களாகவும் விளங்கின. குளிர்ந்த கால நிலையிலிருந்து வந்த ஆங்கிலேயர்கள் இந்தியாவில் கோடைகாலத்தில் வாழ்வது கடினம் என உணர்ந்தனர். அவர்களுக்கு இந்திய மலைகளின் குளிர்ந்த காலநிலை பாதுகாப்பானதாக மற்றும் நன்மை அளிப்பதாக இருந்தது. இது வெப்பமான வானிலையிலிருந்தும் தொற்று நோயிலிருந்தும் ஐரோப்பியர்களைப் பாதுகாத்தது. ஆகையால் அவர்கள் மாற்றுத் தலைநகரங்களை குளிர்ந்த பகுதிகளில் கல்கத்தாவுக்கு மாற்றாக டார்ஜிலிங்கிலும் டெல்லிக்கு மாற்றாக டேராடூனிலும் ஏற்படுத்தினர். மலைப்பிரதேசங்கள் படைகள் தாக்குதலை தொடங்கும் இடமாகவும் இருந்தன. மலைவாழிடங்கள் வட மற்றும் தென் இந்தியாவில் வளர்ச்சி பெற்றன. எ.கா. சிம்லா, நைனிடால், டார்ஜிலிங், உதகமண்டலம், கொடைக்கானல். கூர்க்கர்களுடன் (1814-16) நடைபெற்ற போரின்போது சிம்லா நிறுவப்பட்டது. டார்ஜிலிங் பகுதியானது சிக்கிம் ஆட்சியாளர்களிடமிருந்து 1835இல் கைப்பற்றப்பட்டது. இம்மலைப்பிரதேசங்கள் சுகாதார மையமாக வளர்ச்சி பெற்றன (படையினர் ஓய்வெடுப்பதற்கும், நோய்களிலிருந்து மீள்வதற்குமான இடங்கள்). ரயில்வேயின் அறிமுகம் மலைவாழிடங்களை எளிதில் சென்றடைய வழிவகுத்தது.

## ஈ. இரயில்வே நகரங்கள்

ஆங்கிலேயர்களால் இரயில்வே 1853இல் அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு இரயில்வே நகரங்களும் ஒருவகை நகர்ப்புற குடியேற்றங்களாக ஏற்படுத்தப்பட்டன. இரயில் போக்குவரத்தின் இயல்பினால் அனைத்து நகரங்களும் சமவெளியில் அமைந்திருந்தன.

## நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் தோற்றுவிக்கப்படுதல்

இந்தியாவில் ஆங்கிலேயர்கள் ஆட்சியில் உள்ளாட்சி மன்றத்தின் வளர்ச்சியினை மூன்று வெவ்வேறு நிலைகளில் அறியலாம்.

### அ. முதல் கட்டம் (1688-1882)

இந்தியாவில் நகராட்சி அரசாங்கம் 1688இல் மதராஸ் மாநகராட்சி ஒரு மேயருடன் ஏற்பட்டதிலிருந்து உருவானது. கிழக்கிந்திய கம்பெனியின் இயக்குநர்களில் ஒருவரான சர் ஜோசியா சைல்டு மாநகராட்சி உருவானதற்கு காரணமாக இருந்தார். மூன்று மாகாண நகரங்களில் 1793ஆம் ஆண்டின் பட்டயச் சட்டம் நகராட்சி நிர்வாகத்தை நிறுவியது. வடமேற்கு எல்லைப்புற மாகாணங்கள், அயோத்தி மற்றும் பம்பாயில் நகராட்சிகள் 1850ஆம் ஆண்டு சட்டப்படி அமைக்கப்பட்டன. மேயோ பிரபுவின் 1870ஆம் ஆண்டின் புகழ்பெற்ற தீர்மானம் உள்ளாட்சி வழங்குவதை நோக்கமாகக் கொண்டிருந்தது.

### ஆ. இரண்டாம் கட்டம் (1882-1920)

உள்ளாட்சி அரசாங்கம் தொடர்பான ரிப்பன் பிரபுவின் தீர்மானம் உள்ளாட்சி அரசாங்கத்தின வரலாற்றில் ஒரு மைல்கல்லாக விளங்கியது. எனவே ரிப்பன் பிரபு இந்தியாவின் ‘உள்ளாட்சி அமைப்பின் தந்தை’ என்று அழைக்கப்படுவது பொருத்தமானதாகவும் அவரது தீர்மானம் ‘உள்ளாட்சி அரசாங்கத்தின் மகாசாசனம்’ எனவும் கருதப்படுகிறது.

### இ. மூன்றாம் கட்டம் (1920-1950)

மாகாணங்களில் இரட்டை ஆட்சியை 1919ஆம் ஆண்டு இந்திய அரசு சட்டம் அறிமுகப்படுத்தியது. மாகாண சுயாட்சியை 1935ஆம் ஆண்டு இந்திய அரசு சட்டம் அறிமுகப்படுத்தியது. 1947இல் சுதந்திரம் அடைந்தவுடன் சுதந்திர இந்தியாவின் தேவைகளைப் பூர்த்தி செய்ய உள்ளாட்சி அரசாங்கத்தை உருவாக்கி வடிவமைப்பதற்கான சிறப்பான வாய்ப்பை இந்தியா பெற்றது.

### ஈ. மாகாண நகரங்களின் நிர்வாகம்

18ஆம் நூற்றாண்டின் முடிவில் நாடாளுமன்றத்தின் ஒரு சட்டம் தலைமை ஆளுநருக்கு மாகாண நகரங்களில் அமைதியை ஏற்படுத்த நீதிபதிகளை நியமிக்கும் அதிகாரத்தை அளித்தது. பல்வேறு முயற்சிகளுக்குப் பிறகு மூன்று மாகாண நகரங்களில் அரசாங்க அமைப்பு உருவாக்கப்பட்டது. அது பெரிய மாநகராட்சிகள் போல தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், சுதந்திரமான வலிமை பெற்ற நிர்வாக அமைப்பு, கணக்குகளை சரிபார்க்கப் போதுமான ஏற்பாடுகள், பாதுகாப்பு மற்றும் செயல்திறனுக்கான சட்டப்பூர்வ பாதுகாப்புகள், சுகாதாரம், நீர் வழங்கல் மற்றும் வருவாய் வசூல் போன்ற முக்கிய அம்சங்களைக் கொண்டுள்ளது.

## மதராஸின் தோற்றம் மற்றும் வளர்ச்சி

மதராஸ் நகரத்தின் தொடக்கம் இந்தியாவில் பிரிட்டிஷ் வணிக நிறுவனத்திற்கு முன்பிருந்தே உள்ளது. ஆங்கில கிழக்கிந்திய வணிகக்குழு கி.பி (பொ.ஆ) 1660இல் தொடங்கப்பட்டது. பன்னிரெண்டு ஆண்டுகளுக்குப் கம்பெனியின் பிரான்சிஸ் டே அவர்களால் 1639ஆம் ஆண்டில் கையெழுத்திடப்பட்டபோது அவருடன் மொழிப்பெயர்ப்பாளரான பெரிதிம்மப்பா மற்றும் உயர் அலுவலர் ஆண்ட்ரு கோகன் (மசூலிப்பட்டினம் தொழிற்சாலையின் தலைவர்) உடனிருந்தனர். பிரான்சிஸ் டே

மற்றும் ஆண்ட்ரு கோகன் ஆகியோருக்கு வணிகத்தளத்துடன் கூடிய தொழிற்சாலைக்கும் மதராசபட்டினத்தில் ஒரு கோட்டையை அமைப்பதற்கும் 1639ஆம் ஆண்டில் அனுமதி வழங்கப்பட்டது. இக்கோட்டைகுடியிருப்பு பின்னர் புனித ஜார்ஜ் குடியிருப்பு எனப் பெயர் பெற்றது. இது வெள்ளை நகரம் எனவும் குறிப்பிடப்படுகிறது. இதன் அருகாமையில் உள்ள கிராமங்களில் மக்கள் வசித்த பகுதி கருப்பு நகரம் எனவும் அழைக்கப்பட்டது. மதராஸ் வெள்ளை நகரம் மற்றும் கருப்பு நகரம் எனவும் சேர்த்து அழைக்கப்பட்டது.

**மதராசபட்டினம்**

தர்மலா வெங்கடபதி ஆங்கிலேயருக்கு மதராசபட்டினத்தை மானியமாக வழங்கினார். இவர் சந்திரகிரியின் அரசரான வெங்கடபதி ராயலுவின் கட்டுப்பாட்டில் இருந்தார். வெங்கடபதியை தொடர்ந்து 1642இல் ஸ்ரீரங்கராயலு பதவிக்கு வந்தார். அவர் ஆங்கிலேயருக்கு 1645இல் ஸ்ரீரங்கராயபட்டினம் என்று அழைக்கப்பட வேண்டும் என விரும்பினார். ஆனால் ஆங்கிலேயர் இரண்டு ஐக்கிய நகரங்களையும் மதராசபட்டினம்என்று அழைக்க விரும்பினார்கள்.

**சென்னை உருவாதல்**

இரண்டு ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி வணிகர்கள் வருகை புரியும் வரை கிராமங்களின் தொகுப்பாகவும் பனைமரங்கள் மற்றும் நெல் வயல்களுக்கிடையேயும் சென்னை அமைந்திருந்தது. சந்திரகிரியின் ராஜா மஹால் அரண்மனையால் கிழக்கிந்திய கம்பெனியை சேர்ந்த சர் பிரான்சிஸ் டேவிற்கு 1639இல் தொழிற்சாலை கட்டுவதற்காக நிலம் மானியமாக வழங்கப்பட்டது.

கோட்டைக்குள் கடல் நுழைவாயில் வழியாக நுழைந்தால் முதலில் காணப்படும் கட்டடம் தமிழக அரசின் இருக்கையாகும். இந்த சுவாரசியமான கட்டடம் 1694 மற்றும் 1732க்கு இடையில் கட்டப்பட்டதோடு இது இந்தியாவில் ஆங்கிலேயர்களால் கட்டப்பட்ட மிகப் பழமையான கட்டுமானங்களில் ஒன்று என கூறப்படுகிறது.

மானியமாக வழங்கப்பட்டு, அது பின்னர் மதராஸ் என பெயரிடப்பட்டது. புனித ஜார்ஜின் தினமான ஏப்ரல் 23, 1640 அன்று இதன் முதல் தொழிற்சாலை கட்டிமுடிக்கப்பட்டு அதற்கு புனித ஜார்ஜ் கோட்டை என்று பெயரிடப்பட்டது. புனித ஜார்ஜ் கோட்டையை கட்டப்பட்டதற்கு டே மற்றும் கோகன் ஆகிய இரவரும் கூட்டாக பொறுப்பாவார்கள். இது 1774வரை கிழக்கிந்திய கம்பெனியின் முதன்மை குடியிருப்பாக இருந்தது.

மதராஸ் மாகாணம் ஒரு நிரிவாக துணைப்பிரிவாகும். இது மெட்ராஸ் மாகாணம் என்று குறிப்பிடப்படுகிறது. சென்னை மாகாணம் என்பது பிரிட்டிஸ் ஆட்சிக்காலத்தில் இந்தியாவின் தெற்குப் பகுதியில் பெரிய நிலப்பகுதிகளை உள்ளடக்கி தற்போதைய தமிழ்நாடு, லட்சத்தீவு, வடக்கு கேரளா, ராயலசீமா, கடலோர ஆந்திரா, கர்நாடக மாவட்டங்கள் மற்றும் தெற்கு ஒரிசாவின் பல்வேறு மாவட்டங்களை கொண்டிருந்தது.

கல்கத்தாவில் உள்ள டல்ஹொசி சதுக்கம் மற்றும் மதராஸில் உள்ள புனித ஜார்ஜ் கோட்டை ஆகியவை மத்திய வணிகப் பகுதிக்கு அருகில் இருந்தன. மேலும் பிரம்மாண்டமான கட்டடங்களை கொண்டிருந்தன. அவை பிரிட்டிஷ் வகையிலான ரோமானிய பாணிகளில் அமைந்திருந்தன.

1947ஆம் ஆண்டு சுதந்திரத்திற்குப் பிறகு மதராஸ் மாகாணமானது மதராஸ் மாநிலமாக மாறியது மற்றும் முந்தைய மாகாணத்தின் ஒரு பகுதியாக இருந்த பிற பகுதிகளும் 1956ம் ஆண்டு மாநில மறுசீரமைப்புச் சட்டத்தின் கீழ் ஆந்திரா, கேரளா மற்றும் மைசூர் மாநிலங்களாக என அமைக்கப்பட்டன. பின்னர் 1969இல் மதராஸ் மாநிலம் தமிழ்நாடு என மறுபெயரிடப்பட்டது. ஜூலை 17,1996இல் மதராஸ் அதிகாரப்பூர்வமாக சென்னை என மறுபெயரிடப்பட்டது.

**பம்பாய்**

பம்பாய் ஏழு தீவுகளைக் கொண்டதாகும். இது 1534லிருந்து போர்த்துக்கீசியர்களின் கட்டுப்பாட்டில் இருந்தது. இங்கிலாந்து மன்னர் இரண்டாம் சார்லஸ் போர்த்துக்கீசிய மன்னரின்

சகோதரியை திருமணம் செய்து கொண்டதற்கு பம்பாய் பகுதியை 1661இல் சீதனமாகப் பெற்றார். மன்னர் அப்பகுதியை கிழக்கிந்திய வணிகக்குழுவிற்கு குத்தகைக்கு அளித்தார். கிழக்கிந்திய கம்பெனி மேற்கிந்தியாவில் அதன் முக்கிய துறைமுகமாக பம்பாயை பயன்படுத்தத் தொடங்கியபோது பம்பாய் நகரம் வளரத் தொடங்கியது. ஆங்கில கிழக்கிந்திய நிறுவனம் 1687ஆம் ஆண்டு அதன் தலைமையகத்தை சூரத்திலிருந்து பம்பாய்க்கு மாற்றியது.

**கல்கத்தா**

ஆங்கில வணிகர்கள் சுதநூதியில் 1690ஆம் ஆண்டு ஒரு குடியேற்றத்தை நிறுவினர். அவர்கள் சுதநூதி, கல்கத்தா மற்றும் கோவிந்தபூர் மீது ஜாமீன்தாரி உரிமைகளைப் 1698ஆம் ஆண்டில் பெற்றனர். ஆங்கிலேய கிழக்கிந்திய நிறுவனம் கல்கத்தாவில் வில்லியம் கோட்டையை நிறுவியது. கல்கத்தா மாகாணமாக மாறியதோடு அதன் அலுவல்களை நிர்வகிக்க ஆளுநர் மற்றும் குழு இருந்தது.

**முடிவுரை**

பிரிட்டிஷ் பேரரசு படிப்படியாக நிலைநிறுத்தப்பட்டு நிர்வாகத்தில் இடம்சார்ந்த கட்டமைப்பை ஒருங்கிணைத்து சாம்ராஜ்யத்தின் தலைநகரம், மாநில தலைநகரம் மற்றும் மாவட்ட தலைநகரங்களை உருவாக்கியது. புதிய ஆட்சியாளர்கள், புதிய அலுவலர்களையும், புதிய நிறுவனங்கள் மற்றும் புதிய கட்டமைப்பை கொண்ட நகரங்கள் இராணுவ குடியிருப்பு, காவல்நிலையம், சிறை, கருவூலம், பொதுத் தோட்டம், அஞ்சல் அலுவலகம், பள்ளிகள், சிகிச்சை மையங்கள் கொண்டு வந்தனர். எல்லாவற்றுக்கும் மேலாக நகராட்சிக்குழு ஒன்றையும் கொண்டிருந்தது.

இவ்வாறு காலப்போக்கில் நிர்வாக தலைமையகம் நாட்டின் மிக முக்கியமான நகரங்கள் மற்றும் மாநகரங்களாகவும் உருவெடுத்தன. உதாரணமாக இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கல்கத்தா, பம்பாய் மற்றும் மதராஸ் இந்தியாவின் முதன்மை நிர்வாக, வணிக மற்றும் தொழில்துறை நகரங்களாக மாறியிருந்தன. இந்நகரங்கள் ஐரோப்பிய பாணியிலான கட்டடங்களுடன் வணிக மையமாக மாறின. துணை நகர்ப்புற இரயில்வே டிராம் வண்டி நகரப்பேருந்துகள் குடியேற்ற நகரங்களுக்கு புதிய தோற்றத்தையும் மதிப்பையும் அளித்தன.

# அலகு – 2

## காலங்கள்தோறும் இந்தியப் பெண்களின் நிலை

### அறிமுகம்

பொதுவாக மனித சமூகமானது தனக்குள்ளிருந்தும் வெளியிலிருந்தும் மாற்றங்களை உட்கிரகித்தும் வெளிப்படுத்தியும் நீக்கியும் தொடர்ந்து மாறிக்கொண்டே இருக்கிறது. மக்கள் தொகையில் சரிபாதியாக பெண்கள் உள்ளனர். இதனால் பல்வேறு காலங்களில் பெண்களின் நிலையை வரலாற்றுரீதியாக புரிந்து கொள்ளுதல் தவிர்க்க இயலாததாகிறது.

பெண்களின் நிலை அனைத்து காலகட்டங்களிலும் ஒரே மாதிரியாக இருந்ததில்லை. மேலும் வட்டார அளவிலும் கூட வேறுபட்டிருந்தன. பண்டைய இந்தியாவில் அதிலும் குறிப்பாக முந்தைய வேதகாலத்தில் பெண்கள் சமமான உரிமைகளை பெற்று மதிக்கப்பட்டனர். ஆனால் தொடர்ச்சியான வெளிநாட்டு படையெடுப்புகளின் விளைவாக சமூகத்தில் அவர்களின் நிலை மோசமடைந்தது. அவர்கள் அடக்கப்பட்டு இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட்டனர். புதிய சமூக நடைமுறைகள், பழக்கவழக்கங்கள் சமூகத்திற்குள் நுழைந்து பெண்களின் சுதந்திரத்திற்கு சில வரம்புகள் மற்றும் கட்டுப்பாடுகளை விதித்தன.

பிரிட்டிஷ் ஆட்சியின் போது ராஜா ராம்மோகன்ராய், தயானந்த சரஸ்வதி, கேசவ சந்திர சென்,ஈஸ்வர சந்திர வித்யாசாகர், பண்டித ரமாபாய், டாக்டர். முத்துலட்சுமி அம்மையார், ஜோதிராவ்பூலே, பெரியார் ஈ.வெ.ரா, டாக்டர் தர்மாம்பாள் போன்ற பல முக்கிய சமூக சீர்திருத்தவாதிகள் பெண்களின் மேம்பாட்டிற்காக போராடினர். ராஜாராம் மோகன்ராயின் முயற்சியினால் 1829ஆம் ஆண்டு சதி ஒழிப்புச் சட்டம் இயற்றப்பட்டது. வித்யாசாகரின் அயராத முயற்சியால் விதவைப் பெண்களின் நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டதுடன் 1856இல் விதவை மறுமண சட்டம் கொண்டு வருவதற்கும் வழிவகுத்தது. பெண்கள் கல்வி கற்பதன் மூலமே சமூக தீமைகளை ஒழிக்க முடியும் என்பதை சீர்திருத்தவாதிகள் உணர்ந்தனர். ஆகையால் அவர்கள் பெண்களுக்கான பள்ளிகளை நாட்டின் பல பகுதிகளிலும் தொடங்கினார். அதுவே பெண்களின் வாழ்க்கையில் குறிப்பிடத் தகுந்த மாற்றங்களை கொண்டுவந்தன.

இந்திய சுதந்திர போராட்டத்தில் பெண்கள் முக்கிய பங்கு வகித்தனர். சுதந்திரம் பெறும்வரை பெண்களின் நிலையில் பெரும் மாற்றங்கள் ஏற்படவில்லை. இந்தியா சுதந்திரம் பெற்ற பின்னர் பெண்கள் அனைத்து துறைகளிலும் வளர்ச்சியடைந்துள்ளனர். பெண்கள் தற்பொழுது வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் தங்களது பங்களிப்பை உறுதிப்படுத்துகின்றனர்.

### பெண்களின் நிலை

#### அ) பண்டைய காலம்

பண்டைய இந்தியாவின் சிந்துவெளி நாகரிகத்தில் தாய் கடவுளை வணங்கியதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. அச்சான்றுகளிலிருந்து அந்தக் காலகட்டத்தில் பெண்கள் மதிக்கப்பட்டிருந்தனர் என தெளிவாகத் தெரிகிறது. ரிக்வேத காலத்தில் மனைவியின் நிலை போற்றுதலுக்குரியதாக இருந்தது. குறிப்பாக மதச் சடங்குகளில் பெண்கள் பங்கெடுத்துக் கொள்வது ஏற்றுக்கொள்ளப்பட்டன.

பின்வேதகாலத்தில் பெண்களின் நிலையில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. சமய வேள்வி செயல்பாடுகளைத் தவிர்த்து, அவர்களின் சமூக மற்றும் அரசியல் சுதந்திரம் கட்டுப்படுத்தப்பட்டது. பின்வேதகாலத்தின் போது சதி எனும் பழக்கம் பிரபலமானது. விதவைகள் தாங்களாகவோ அல்லது கட்டாயத்தின் பேரிலோ கணவரின் சிதையோடு சேர்த்து எரிக்கப்பட்டனர். தந்தை வழி முறை கடுமையானதாக மாறியது. பெண்கள் வேதாமங்களைப் படிக்க மறுக்கப்பட்டனர்.

## ஆ. இடைக்காலம்

இடைக்கால சமூகத்தில் பெண்களின் நிலை மேலும் மோசமடைந்தது. சதி, குழந்தை திருமணங்கள், பெண்சிசுக்கொலை, பர்தா முறை மற்றும் அடிமைத்தனம் போன்ற பல சமூக தீமைகளால் அவர்கள் பாதிக்கப்பட்டனர். பொதுவாக ஒருதார மணமே இருந்தது. ஆனால் செல்வந்த மக்களிடையே பலதாரமணமும் நிலவியது. குறிப்பாக அரச மற்றும் உயர்தர சமூகத்தினரிடையே சதி எனும் பழக்கம் நடைமுறையில் இருந்தது. ஆனால் முகலாய ஆட்சியாளர் அக்பர் சதி முறையினை ஒழிக்க முயன்றார் என்ற உண்மையை நாம் மறுக்க இயலாது. விதவை மறுமணம் அரிதாகவே காணப்பட்டது. இந்தியாவின் சில பகுதிகளில் தேவதாசி முறை நடைமுறையில் இருந்தது. ராஜஸ்தானில் உள்ள ராஜபுத்திரர்களிடையே ஜவ்கார் எனும் பழக்கம் நடைமுறையில் இருந்தது. முஸ்லீம் படையெடுப்பின் விளைவாக பர்தா முறை பிரபலமானது. இடைக்காலத்தில் விதவையின் நிலை பரிதாபமாக மாறியது பெண்கல்விக்கு சிறிதளவே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.

ஜவ்கார் என்பது அந்நியர்களால் தாங்கள் கைப்பற்றப்படுவதையும், அவமதிக்கப்படுவதையும் தவிர்ப்பதற்காக தோற்கடிக்கப்பட்ட ராஜபுத்திர போர்வீரர்களின் மனைவிகள் மற்றும் மகள்களின் கூட்டு தன்னார்வ தற்கொலை நடைமுறையை குறிப்பிடுகிறது.

பொதுவாக பெண்களின் நிலை மோசமடைந்திருந்தபோதிலும், ரசியா சுல்தானா, ராணி துர்காவதி, சாந்த் பீபி, நூர்ஜஹான், ஜஹனாரா, ஜீஜாபாய் மற்றும் மீராபாய் போன்ற சில விதிவிலக்குகளையும் நாம் காணலாம்.

இடைக்காலத்தில் கல்விமுறை ஆரம்ப கட்டத்தில்தான் இருந்தது. பெண்களின் கல்வி முற்றிலும் பெண்களுக்கென தனியாக பள்ளிகள் எதுவும் காணப்படவில்லை. பெண்கல்வி முறையாக இல்லை. பெண்கள் பொதுவாக குழந்தை பருவத்தில் பெற்றோரிடமிருந்து தங்கள் பாடங்களைக் கற்றுக்கொண்டனர். ஆனால் செல்வந்தர்கள் தங்கள் மகள்களுக்கு வீட்டிலேயே பாடம் கற்பிக்க ஆசிரியர்களை நியமித்தனர். ராஜபுத்திர தலைவர்கள் மற்றும் ஜமீன்தார்களின் மகள்கள் இலக்கியம் , தத்துவம் ஆகியவற்றைக் கற்றனர்.

## இ. ஆங்கிலேயர்கள் காலம்

இந்தியாவில் பல நூற்றாண்டுகளாக பெண்கள் ஆண்களுக்கு அடிபணிந்திருந்ததோடு சமூகரீதியாகவும் ஒடுக்கப்பட்டிருந்தனர். 19ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட தேசிய விழிப்புணர்வின் விளைவாக சமூகத்தில் சீர்திருத்தம் ஏற்பட்டது. கடுமையான சமூக தீமைகள் மற்றும் காலாவதியான பழக்கவழக்கங்களுக்கு எதிராக அறிவார்ந்த மக்கள் பெருமளவில் கிளர்ச்சி செய்தனர். ஏராளமான தனிநபர்கள், சீர்திருத்த சங்கங்கள் மற்றும் சமய அமைப்புகள் பெண் கல்வியைப் பரப்ப கடுமையாக உழைத்தன. விதவை மறுமணத்தை ஊக்குவித்தல், குழந்தை திருமணத்தை தடுத்தல், பெண்களை பர்தா அணியும் முறையிலிருந்து வெளியே கொண்டுவருதல், ஒருதார மணத்தை நடைமுறைப்படுத்துதல் மற்றும் நடுத்தரவர்க்க பெண்கள், தொழில்கள் அல்லது பொது வேலைவாய்ப்புகளை மேற்கொள்ள உதவுதல் போன்ற செயல்பாடுகளில் ஈடுபட்டன.

19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆண் கல்வியறிவுடன் ஒப்பிடும்போது பெண் கல்வியறிவு மிகக்குறைவாகவே இருந்தது. கிறித்துவ அமைப்புகள் 1819ஆம் ஆண்டு கல்கத்தாவில் முதன் முதலில் பெண் சிறார் சங்கத்தை அமைத்தன. கல்கத்தாவில் கல்வி கழகத்தின் தலைவராக இருந்த J.E.D. பெதுன் என்பவர் 1849ஆம் ஆண்டு பெதுன் பள்ளியை நிறுவினார்.

1854 ஆம் ஆண்டின் சார்லஸ் வுட் கல்வி அறிக்கை பெண் கல்விக்கு அதிக முக்கியத்துவம் அளித்தது. 1882ஆம் ஆண்டில் இந்திய கல்விக்(ஹண்டர்) குழு சிறுமிகளுக்கான தொடக்கப் பள்ளியையும் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களையும் தொடங்க பரிந்துரைத்தது. மேலும், சிறுமிகளுக்கு சிறப்பு உதவித்தொகை மற்றும் பரிசுகளை வழங்க பரிந்துரைத்தது. இந்தியப் பெண்கள் 1880களில் பல்கலைக்கழகங்களில் நுழையத் தொடங்கினர். அவர்கள் மருத்துவர்களாகவும் ஆசிரியர்களாகவும் பயிற்சி பெற்றனர். மேலும் அவர்கள் புத்தகங்களையும் பத்திரிக்கைகளையும் எழுத தொடங்கினர். 1914இல் மகளிர் மருத்துவ சேவை அமைப்பு

செவிலியர்களுக்கு பயிற்சி அளிப்பதில் பெரும்பங்காற்றியது. 1890களில் D.K.கார்வே என்பவர் பூனாவில் ஏராளமான பெண் பள்ளிகளை நிறுவினார். பேராசிரியர் D.K.கார்வே பண்டித ராமாபாய் ஆகியோர் கல்வியறிவின் மூலம் பெண்கள் விடுதலை பெற தீவிர முயற்சி எடுத்தது. உண்மையிலேயே குறிப்பிடத்தக்கது. 1916இல் இந்திய மகளிர் பல்கலைக்கழகம் பேராசிரியர் D.K.கார்வேவால் தொடங்கப்பட்டது. இது பெண்களுக்கு கல்வியை வழங்குவதில் சிறந்த நிறுவனமாக விளங்கியது. அதே ஆண்டில் லேடி ஹார்டிங் மருத்துவக் கல்லூரியும் டெல்லியில் தொடங்கப்பட்டது.

**முக்கிய சமூக தீமைகள்**

**அ. பெண்சிசுக்கொலை**

பெண்சிசுக்கொலை என்பது 19ஆம் நூற்றாண்டில் இந்திய சமுதாயத்தை பாதித்த ஒரு மனிதாபிமானமற்ற நடைமுறையாகும். இது குறிப்பாக ராஜபுதனம், பஞ்சாப் மற்றும் வடமேற்கு மாகாணங்களில் நடைமுறையில் இருந்தது. இப்பெண்சிசுக்கொலையானது பொருளாதார சுமையைத் தவிர்ப்பதற்காக மேற்கொள்ளப்பட்டன. குடும்பப் பெருமை, சமூக பாதுகாப்பு, பெண் குழந்தைக்கு பொருத்தமான வரனை கண்டுபிடிக்க முடியாது என்ற பயம் போன்ற காரணிகளே இந்த நடைமுறைக்கு முக்கிய காரணங்கள் ஆகும். எனவே, பிறந்த உடனேயே பெண் கைக்குழந்தைகள் கொல்லப்பட்டனர்.

கிழக்கிந்திய கம்பெனி நிர்வாகம் இந்த நடைமுறையை தடைசெய்ய நடவடிக்கை மேற்கொண்டது. 1795ஆம் ஆண்டின் வங்காள ஒழுங்காற்றுச்சட்டம் XXI, 1802ஆம் ஆண்டின் ஒழுங்குமுறைச்சட்டம் மற்றும் 1870ஆம் ஆண்டின் பெண் சிசுக்கொலை தடைச்சட்டம் ஆகிய சட்டங்களை நிறைவேற்றி பெண்சிசுக்கொலை நடைமுறையை தடைசெய்தது.

**ஆ.பெண்சிசு கருக்கொலை**

பெண்சிசு கருக்கொலை என்பது சாதி, சமய, வர்க்கம், மற்றும் பிராந்திய எல்லைகளை கடந்த மற்றொரு என்பது சாதி, சமய, வர்க்கம் மற்றும் பிராந்திய எல்லைகளை கடந்த மற்றொரு மனிதாபிமானமற்ற நடைமுறையாகும். பெண்சிசுக்கொலை அல்லது பெண்சிசு கருக்கொலை எதுவாக இருந்தாலும் நோக்கம் ஒன்றே. பெண்சிசு கருக்கலை மற்றும் கருவிலேயே பாலினம் அறிதல் ஆகியவற்றை தடை செய்வதற்காக மத்திய அரசு பல்வேறு சட்டங்களை நிறைவேற்றி உள்ளது.

**இ. குழந்தைத் திருமணம்**

குழந்தைத் திருமணமானது நடைமுறையில் பெண்களுக்கெதிரான மற்றொரு சமூக தீமையாக காணப்பட்டது. குழந்தைத் திருமணம் பழங்குடியினரிடையே வழக்கத்தில் இருந்தது.

1846ஆம் ஆண்டில் பெண்களுக்கான குறைந்தபட்ச திருமண வயது 10 என இருந்தது. 1872இல் நிறைவேற்றப்பட்ட உள்நாட்டு திருமணச்சட்டம் மூலம் பெண்களின் குறைந்தபட்ச திருமண வயது 14 ஆகவும், ஆண்களுக்கு 18 ஆகவும் நிர்ணயிக்கப்பட்டது.

**அக்பர் குழந்தை திருமணத்தை தடுத்ததுடன் திருமணத்திற்கு முன் மணமகன் மற்றும் மணமகளின் ஒப்புதலை பெற்றோர்கள் கட்டாயமாக பெற்றுக்கொள்ள வேண்டும் என்று உத்தரவிட்டார். அவர் பெண்ணிற்கான திருமணவயது 14 எனவும் ஆண்களுக்கான திருமண வயது 16 எனவும் நிர்ணயித்தார்.**

1930இல் மத்திய சட்டப்பேரவையில் ராய்சாகிப் ஹர்பிலாஸ் சாரதா குழந்தை திருமண மசோதா கொண்டுவரப்பட்டது. இச்சட்டம் ஆண்களுக்கான குறைந்தபட்ச திருமணவயது 18 எனவும் பெண்களுக்கான குறைந்தபட்ச திருமணவயது 14 ஆகவும் நிர்ணயித்தது. பின்னர் இது

ஆண்களுக்கான குறைந்தபட்ச திருமணவயது 21 ஆகவும் பெண்களுக்கான குறைந்தபட்ச திருமணவயது 18 எனவும் திருத்தப்பட்டது.

**ஈ. சதி**

இந்திய சமூகத்தில் நிலவிய மற்றொரு சமூகதீமை சதி ஆகும். குறிப்பாக ராஜபுத்திரர்களிடையே இப்பழக்கம் காணப்பட்டது. அப்போதிருந்த நிலப்பிரபுத்துவ சமூகம் சதி எனம் சடங்கை ஆதரித்தது. இதன் பொருள் 'கணவனின் சிதையில் தானாக முன்வந்து விதவைகள் எரித்துக்கொள்ளுதல்' ஆகும். ஆரம்ப காலத்தில் தாமாகவே முன்வந்து செய்துகொண்டனர். ஆனால் பின்னர் உறவினர்களின் வற்புறுத்தலால் சிதையில் அமர்ந்திருந்தனர். கி.பி(பொ.ஆ) 1420இல் விஜயநகருக்கு வருகைபுரிந்த இத்தாலிய பயணி நிக்கோலோ கோண்டி தனது குறிப்புகளில் 'அந்தப்பகுதியில் வாழ்ந்தவர்கள் தங்கள் விருப்பத்தின் பேரில் பல பெண்களை திருமணம் செய்து கொண்டனர் என்றும் பெண்கள் இறந்த தன் கணவருடன் எரிக்கப்பட்டனர்' என்றும் குறிப்பிடுகிறார்.

19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சதி என்னும் பழக்கம் வங்காளத்தின் பல பகுதிகளிலும் மேற்கு இந்தியா மற்றும் தென் இந்தியாவிலும் நடைமுறையில் இருந்தது. 1811ஆம் ஆண்டில், ராம்மோகன் ராயின் சகோதரர் ஜெகன்மோகன் ராய் காலமானதால் அவருடன் அவரது மனைவியும் எரிக்கப்பட்டார். ராம்மோகன்ராய் அதைப்பார்த்த போது மிகவும் அதிர்ச்சியடைந்தார். இந்த கொடூரமான நடைமுறையை சட்டத்தின் மூலம் ஒழிப்பேன் என்று சபதம் செய்தார். அவர் சதியை ஒழிப்பதற்காக தொடர்ச்சியான போராட்டத்தை பத்திரிக்கை மூலமாகவும் மேடைகளில் பேசுவதன் மூலமாகவும் மேற்கொண்டார்.

ராஜா ராம்மோகன் ராய் 1818-20இல் பல கட்டுரைகளை வெளியிட்டார். அதில் சதி எனும் சடங்கு சாஸ்திரங்களால் கட்டளையிடப்படவில்லை என்பதைக் குறிப்பிட்டார். சதி எனும் சடங்கு இந்து மதத்தின் ஒரு அங்கம் என்று பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்தை சிதைக்க செராம்பூர் சமயப் பரப்புக் குழுக்களில் இந்த கருத்துகள் பயன்படுத்தப்பட்டது. பழமையான இந்து பழக்கமான சதி ஒழிப்புக்கு எதிராக ராதாகந்த் தேப் மற்றும் பவானி சரண் பானர்ஜி ஆகியோர் தங்களது கருத்துகளை வெளியிட்டனர்.

வில்லியம் பெண்டிங் பிரப குற்றவியல் நீதிமன்றங்களின் நீதிபதிகளால் சதி எனம் பழக்கம் ரத்து செய்யப்படுவது பரிந்துரைக்கப்பட்டிருப்பதை கண்டார். எனவே அவர் டிசம்பர்ச, 1829இல் விதிமுறை XVII என்ற சட்டத்தை நிறைவேற்றினார். இச்சட்டத்தின் மூலம் சதியில் ஈடுபடுவது அல்லது எரித்தல் அல்லது இந்து விதவைகளை உயிருடன் புதைத்தல் ஆகியவை சட்டத்திற்கு புறம்பானது மற்றம் குற்றவியல் நீதிமன்றங்களால் தண்டிக்கக்கூடியவை எனவும் அறிவித்தார். அதே போன்ற நடவடிக்கைகள் பம்பாய் மற்றும் சென்னையிலும் உடனடியாக சட்டமாக்கப்பட்டது.

**உ. தேவதாசிமுறை**

தேவதாசி (சமஸ்கிருதம்) அல்லது தேவர் அடியாள் (தமிழ்) என்ற வார்த்தையின் பொருள் "கடவுளின் சேவகர்" என்பதாகும். பெண் குழந்தையை கோவிலுக்கு நேர்த்தி கடனாக அர்ப்பணிக்கும் வழக்கம் இருந்தது. அவர்கள் கோயிலைக் கவனித்துக்கொள்வதோடு மட்டுமல்லாமல், பரத நாட்டியம் மற்றும் பிற பாரம்பரிய இந்திய கலைகளையும் கற்றுக் கொண்டனர். அவர்கள் சமூகத்தில் உயர்ந்த நிலையையும் அனுபவித்தனர்.

பிற்காலங்களில் அவர்கள் மோசமாக நடத்தப்பட்டு அவமானப்படுத்தப்பட்டனர். மேலும் தேவதாசிகள் தங்கள் கண்ணியம், பெருமை உணர்வு, சுயமரியாதை மற்றும் கௌரவம் ஆகியவற்றை இழந்தனர். அதைத் தொடர்ந்து தேசதாசி முறை ஒரு சமூக தீமையாக மாறியது.

இந்தியாவின் முதல் பெண் மருத்துவரான டாக்டர் முத்துலட்சுமி அம்மையார், கொடுமையான தேவதாசி முறையை தமிழ்நாட்டிலிருந்து ஒழிப்பதற்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். தேவதாசி முறைக்கு எதிரான அவரது போராட்டத்தை பாராட்டும் வகையில் 1929இல் அவர் சென்னை சட்டமன்றத்திற்கு பரிந்துரைக்கப்பட்டார். பெரியார் ஈ.வெ.ரா "தேவதாசி ஒழிப்பு மசோதாவை"

நிறைவேற்றுவதில் முக்கிய கருவியாக செயல்பட்டார். 1930இல் டாக்டர் முத்துலட்சுமி அம்மையார் இம்மசோதாவை சென்னை சட்டமன்றத்தில் முன்மொழிந்தார்.

தேவதாசிகளின் விடுதலைக்காக போராடிய மற்றொரு பெண்மணி மூவலூர் ராமாமிர்தம் ஆவார். ராஜாஜி, பெரியார் மற்றும் திரு.வி.க ஆகியோரின் தொடர்ச்சியான தார்மீக ஆதரவுடன் இந்த கொடுமையான இந்த கொடுமையான முறைக்கு எதிராக அவர் முழக்கம் எழுப்பினார். இதன் விளைவாக அரசாங்கம் "தேவதாசி ஒழிப்புச் சட்டத்தை" நிறைவேற்றியது.

சாதி முறையின் இறுக்கமான தன்மையை நீக்குவது மற்றும் ஒடுக்கப்பட்ட வகுப்பை சமத்துவநிலைக்கு உயர்த்துதல் ஆகியவற்றின் மூலம் பெண்களின் முன்னேற்றத்தை ஊக்கவிக்க முயன்றது. இவ்வியக்கங்களை வழிநடத்திய சீர்திருத்தவாதிகளே நவீன முன்னொடிகள் ஆவர்.

**அ. ராஜாராம்மோகன் ராய்**

இந்தியாவில் காணப்பட்ட சமூக அடக்குமுறைகளை சீர்திருத்த முயன்ற பிரிட்டிஷாரின் முயற்சியை ஆதரித்த சில அறிவார்ந்த இந்தியர்கள் இருந்தனர். அவர்களில் மிக முக்கியமானவர் ராஜாராம் மோகன்ராய் ஆவார். இந்திய சமூக சீர்திருத்த இயக்கத்தின் முன்னோடியான ராஜாராம் மோகன்ராய், தனது உடன் பிறந்த சகோதரரின் வாழ்க்கையில் இந்த நடைமுறையைக் கண்டபின்னர் சாதிகளுக்கு அப்பால் சதி எதிர்ப்பு போராளியானார். மனிதத்தன்மையன்ற இத்தீய பழக்கத்திற்கு எதிரான இயக்கத்தை தொடங்கினார். இரக்கமற்ற கொடிய இப்பழக்கத்தினால் பாதிக்கப்பட்ட ராம்மோகன் ராய் தலைமையிலான இயக்கத்தின் செல்வாக்கினால்,பிரிட்டிஸ் அரசாங்கம் இந்தச் செயலை "சார்ந்த குற்றம் கொலை" என்று அறிவித்தது. 1829 இல் சதி எனும் உடன்கட்டை ஏறுதல் தண்டனைக்குரிய குற்றம் என வில்லியம் பெண்டிங் பிரபு அறிவித்தார். இந்த தடைச்செயலுக்கு உதவியதற்காக ராஜா ராம்மோகன் ராய் மிகவும் நினைவு கூறப்படுகிறார். மேலும் குழந்தைத் திருமணம் மற்றும் பெண்சிசுக்கொலை ஆகியவற்றையும் அவர் எதிர்த்தார். விதவை மறுமணம், பெண்கல்வி மற்றும் பெண்களின் சொத்துரிமை ஆகியவற்றை ஆதரித்தார். இவ்வாறாக சதி என்னும் தீய பழக்கம் சமூகத்திலிருந்து ஒழிக்கப்பட்டது.

**ஆ. ஈஸ்வர சந்திர வித்யாசாகர்**

ஈஸ்வர சந்திர வித்யாசாகர் பெண் கல்வி, விதவை மறுமணம் ஆகியவற்றை ஆதரிக்கவும் பலதார மணத்தை ஒழிப்பதற்காகவும் வங்காளத்தில் ஒரு இயக்கத்தை மேற்கொண்டார். 1856இல் இந்து விதவை மறுமணச் சட்டத்தை நிறைவேற்றுபவதற்காக இந்திய சட்டமன்றத்திற்கு அவர் பல மனுக்களை சமர்ப்பித்தார். மற்றவர்களுக்கு முன்மாதிரியாக அவரது மகன் நாராயணச்சந்திரா, ஒரு விதவையை திருமணம் செய்து கொண்டார். வித்யாசாகர் பெண் கல்வியை மேம்படுத்துவதற்காக வங்காளத்தில் நாடியா, மிட்னாபூர், ஹூக்ளி மற்றும் பரத்வான் ஆகிய மாவட்டங்களில் பல பெண்கள் பள்ளியை நிறுவினார்.

**இ. கந்துகூரி வீரேசலிங்கம்**

கந்துகூரி வீரேசலிங்கும் பந்துலு தென்னிந்தியாவில் மகளிர் விடுதலைக்காக போராடிய ஆரம்பகால போராளி ஆவார். அவர் விவேகவர்தினி என்ற பத்திரிகையை வெளியிட்டார். மேலும் அவர் 1874இல் தனது முதல் பெண்கள் பள்ளியை திறந்தார். விதவை மறுமணம் மற்றும் பெண்கல்வி ஆகியவற்றை சமூக சீர்திருத்தத்திற்கான தனது திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகக் கொண்டார்.

**ஈ. எம்.ஜி.ரானடி மற்றும் பி.எம்.மலபாரி**

எம்.ஜி.ரானடே மற்றும் பி.எம்.மலபாரி ஆகியோர் பம்பாயில் பெண்கள் முன்னேற்றத்திற்கான இயக்கத்தை நடத்தினார். 1869ஆம் ஆண்டில், ரானடே விதவை மறுமணம் மற்றும் பெண் கல்வியை ஊக்குவித்ததுடன் குழந்தை திருமணத்தை எதிர்த்தார். 1887இல் இந்திய தேசிய சமூக மாநாட்டை தொடங்கினார். அது சமூக சீர்திருத்தத்திற்கான ஒப்புயர்வற்ற நிறுவனமாக உருவானது. ஒரு பத்திரிக்கையாளரான பி.எம்.மலபாரி 1884இல் குழந்தை திருமணத்தை ஒழிப்பதற்கான ஒரு

இயக்கத்தைத் தொடங்கினார். துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டு நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்தார்.

**உ. கோபல கிருஷ்ண கோகலே**

கோபால கிருஷ்ண கோகலே 1905ஆம் ஆண்டில் இந்திய ஊழியர் சங்கத்தை தொடங்கினர். அது தொடக்கக் கல்வி, பெண் கல்வி மற்றும் ஒடுக்கப்பட்ட வகுப்பினரின் மேம்பாடு ஆகியவற்றில் சீர்திருத்தங்களைக் கொண்டுவந்தது. பெண் கல்வியின் பரவலானது. பர்தாவை ஒழிப்பது போன்ற பல பெரிய சமூக சீர்திருத்திங்களுக்கு வழிவகுத்ததோடு, சுதந்திர போராட்டத்தில் பெண்கள் போராட்டத்தில் பெண்கள் பங்கேற்கவும் வழிவகுத்தது.

**ஊ. பெரியார் ஈ.வெ.ரா**

பெரியார் ஈ.வெ.ரா. தமிழ்நாட்டின் மிகச் சிறந்த சமூக சீர்திருத்தவாதிகளில் ஒருவராவார் இவர் பெண்கல்வி, விதவை மறுமணம் மற்றும் கலப்பு திருமணம் ஆகியவற்றை ஆதரித்தார். மேலும் குழந்தை திருமணத்தை எதிர்த்தார்.

**எ. பெண் சீர்திருத்தவாதிகள்**

பெரும்பாலான சீர்திருத்த இயக்கங்களான பிரம்ம சமாஜம்(1828), பிரார்த்தனை சமாஜம்(1867) மற்றும் ஆரிய சமாஜம்(1875) போன்றவை ஆண் சீர்திருத்தவாதிகளால் வழிநடத்தப்பட்டன. அவர்கள் பெண்கள் சுதந்திரம் மற்றும் வளர்ச்சியில் ஒரு எல்லையை நிர்ணயித்தனர். பண்டித ரமாபாய், ருக்மாபாய் மற்றும் தாராபாய் ஷிண்டே போன்ற பெண் சீர்திருத்தவாதிகள் மேலும் அதை விரிவுபடுத்த முயற்சித்தனர். 1889இல் இந்து விதவைகளுக்காக சாரதா சதன் (கற்றல் இல்லம்) எனும் அமைப்பினை பண்டித ரமாபாய் பம்பாயில் திறந்தார். பின்னர் அது பூனாவுக்கு மாற்றப்பட்டது. அவரது முயற்சிகளிலே மகத்தானது இந்தியாவில் விதவைகளுக்கு முதன்முதலில் கல்வி புகட்ட மேற்கொண்டதாகும். மேலும் சென்னையில் பிரம்மஞான சபை (தியோசோபிகல் சங்கம்) நிறுவப்பட்டது. டாக்டர் அன்னிபெசன்ட் அம்மையார் ஐரோப்பாவிலிருந்து வருகை தந்து அவற்றில் இணைந்தார். இச்சங்கமும் பொது சமூக சீர்திருத்த திட்டத்தை உருவாக்கியது.

பெரியாரின் கருத்துக்களால் மிகவும் கவரப்பட்ட மற்றொரு சீர்திருத்தவாதி டாக்டர் S.தருமாம்பாள் ஆவார். அவர் விதவை மறுமணத்தை செயல்படுத்துவதிலும் பெண்கல்வியிலும் மிகுந்த ஆர்வம் காட்டினார். சீர்திருத்தவாதியான டாக்டர் முத்துலட்சுமி அம்மையாருடன் இணைந்து தேசதாசி முறைக்கு எதிராக மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் குரல் எழுப்பினார். அம்மையார் அவர்களது நினைவாக தமிழக அரசு ‘மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவி’ திட்டத்தை தொடங்கியது. இந்த சமூக நலத்திட்டம் மூலம் ஏழைப்பெண்களுக்கு நிதி உதவி வழங்கப்படுகிறது. இவ்வாறாக தங்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக பெண் சீர்திருத்தவாதிகளும் பெரும் பங்காற்றியுள்ளனர்.

தங்களின் நலன்களை பாதுகாத்துக் கொள்வதற்காக தங்களுக்கெனதொரு சங்கம் நிறுவப்படுவதன் அவசியத்தை புகழ்பெற்ற பெண்கள் உணர்ந்தனர். அதன் விளைவாக, இந்தியாவில் இந்திய பெண்கள் சங்கம், தேசிய பெண்கள் ஆணையம் மற்றும் அனைத்து இந்திய பெண்கள் மாநாடு போன்ற மூன்று மிகப்பெரிய பெண்கள் அமைப்புகள் நிறுவப்பட்டது.

தங்களின் நலன்களை பாதுகாத்துக் கொள்வதற்காக தங்களுக்கானதொரு சங்கம் நிறுவப்படுவதன் அவசியத்தை புகழ்பெற்ற பெண்கள் உணர்ந்தனர். அதன் விளைவாக, இந்தியாவில் இந்திய பெண்கள் சங்கம், தேசிய பெண்கள் ஆணையம் மற்றும் அனைத்து இந்திய பெண்கள் மாநாடு போன்ற மூன்று மிகப்பெரிய பெண்கள் அமைப்புகள் நிறுவப்பட்டது.

**விடுதலை இயக்கத்தில் பெண்கள்**

தொடக்க கால காலனிய எதிர்ப்பு போராட்டத்தில் பெண்கள் பல்வேறு வகைகளில் முக்கிய பங்காற்றினர். சிவகங்கையின் வேலுநாச்சியார் ஆங்கிலேயருக்கு எதிராக வீரதீரமாக போரிட்டு சிவகங்கையில் தனது ஆட்சியை மீட்டெடுத்தார். 1857ஆம் ஆண்டு ஆங்கிலேயருக்கு எதிரான

போராட்டத்தில் பேகம் ஹஸ்ரத் மஹால், ஜான்சியின் ராணி லட்சுமி பாய் போன்றோர் ஆயுதமேந்தி போராடினர்.

விடுதலைப் போராட்டத்தில் ஆயிரக்கணக்கான பெண்கள் அயல்நாட்டு பொருட்களை புறக்கணித்தல், ஊர்வலங்களில் கலந்துகொள்வது, சட்டங்களை மீறுதல் மூலம் தடியடி பெற்று சிறைக்கு சென்றனர். விடுதலைப் போராட்டத்தில் அவர்களது பங்களிப்பு வெகுஜன தன்மையில் புதிய பரிணாமத்தை சேர்த்தது.

**சீர்திருத்த இயக்கத்தின் தாக்கம்**

- பெண்களின் விடுதலையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை ஏற்படுத்தியது.
- இது மக்களிடையே தேசிய விழிப்புணர்வை உருவாக்கியது.
- தியாகம், சேவை மற்றும் பகுத்தறிவு உணர்வு ஆகியவற்றை உருவாக்கியது.
- சதி மற்றும் பெண்சிசுக்கொலை ஆகியவை சட்டவிரோதமாக்கப்பட்டது.
- விதவை மறுமணம் செய்ய அனுமதிக்கப்பட்டனர்.

| **முக்கிய சட்டவிதிகள்** | **முக்கிய பிரிவுகள்** |
|---|---|
| வங்காள ஒழுங்குமுறைச் சட்டம் XXI, 1804 | பெண்சிசுக்கொலை சட்டவிரோதமானது என அறிவிக்கப்பட்டது. |
| ஒழுங்குமுறை XVI, 1829 | சதி எனும் பழக்கம் சட்டவிரோதமானது என்று அறிவிக்கப்பட்டது. |
| இந்து விதவைகள் மறுமணச்சட்டம், 1856 | விதவைகளை மறுமணம் செய்ய அனுமதித்தது |
| உள்நாட்டு திருமணச்சட்டம், 1872 | குழந்தை திருமணம் தடை செய்யப்பட்டது. |
| சாரதா சட்டம், 1930 | சிறுவர்கள் சிறுமிகளுக்கான திருமணவயது உயர்த்தப்பட்டது. |
| தேவதாசி ஒழிப்புச் சட்டம், 1947 | தேவதாசி முறையை ஒழித்தது. |

**சுதந்திர இந்தியாவில் பெண்கள்**

இந்தியாவில் பெண்கள் தற்போது கல்வி, அரசியல், மருத்துவம், கலாச்சாரம், சேவைத்துறைகள், அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் உட்பட அனைத்து துறைகளிலும் பங்கேற்கின்றனர்.

இந்திய அரசியலமைப்பு (பிரிவு-14) சமவாய்ப்பு மற்றும் சம வேலைக்கு சம ஊதியம் என உத்திரவாதமளிக்கிறது.

பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதற்கான தேசிய கொள்கையானது, தேசிய கல்விக்கொள்கை (1986) கீழ் நிறைவேற்றப்பட்டது.

புதிதாக தொடங்கப்பட்ட ‘மஹிளா சமக்யா’ எனும் திட்டமானது பெண்களுக்கு அதிகாரமளிப்பதில் முக்கிய கவனம் செலுத்துகிறது. பெண்களுக்கு 33 சதவீத இடத்தை ஒதுக்கியது. பெண்களின் சமூக-அரசியல் செல்வாக்கில் முன்னேற்றத்தை ஏற்படுத்தியது.

ஜனவரி 1992இல் பெண்களுக்கான தேசிய ஆணையம் அமைக்கப்பட்டது. பெண்கள் தொடர்பான சட்டங்களை மறுஆய்வு செய்வது. பெண்களுக்கு எதிரான அநீதிகள் மற்றும் உரிமைகள் மறுப்பு குறித்த தனிப்பட்ட புகார்களில் தலையிடுவது இதன் முக்கிய பணிகள் ஆகும்.

10ம் வகுப்பு

## அலகு 2- இரு உலகப்போர்களுக்கு இடையில் உலகம்

### ஆசியாவில் காலனிய எதிர்ப்பியக்கங்களும், காலனிய நீக்கச் செயல்பாடுகளும்:

- காலனிய நீக்கம் என்பது காலனியாதிக்க சக்திகள் காலனிகள் மீது கொண்டுள்ள நிறுவனம் மற்றும் சட்ட சார்ந்த கட்டுப்பாடுகளைச் சொந்த தேசிய அரசுகளிடம் வழங்குவதாகும்.

**பிரெஞ்சு இந்தோ – சீனா**
**காலனிய எதிர்ப்புணர்வின் எழுச்சி:**

- 1887 பிரான்சால் கைப்பற்றப்பட்டதிலிருந்து இந்தோ – சீனா (இன்றைய கம்போடியா, லாவோஸ், வியட்நாம்) தனது எதிர்ப்பைக்காட்டி வந்தது. இந்தோ – சீனர்கள் பிரெஞ்சு மொழியும் பண்பாடும் தங்கள் மீது திணிக்கப்படுவதை எதிர்த்தபோதும் புரட்சி பற்றிய சிந்தனைகளை பிரெஞ்சுக்காரர்களிடமிருந்து கற்றுக்கொண்டனர். முதல் உலகப்போரின் போது ஒரு லட்சம் இந்தோ – சீனர்கள் பிரான்சில் போரிட்டனர். போரின்போது பிரெஞ்சுக்காரார்கள் எவ்வாறு போரிட்டனர், எவ்வாறு எவ்வாறு துன்புற்றனர் என்பது குறித்த நேரடி அனுபவ அறிவோடு திரும்பினர். மேலும் சீனத் தலைநிலப்பகுதியிலிருந்து பரவிய கம்யூனிசச் சிந்தனைகளும் தாக்கத்தை ஏற்படுத்தியதிலிருந்து இந்தோ-சீனாவின் கணிசமான செல்வம் காலனியாதிக்க சக்திக்கே பயன்படுவதை பலர் உணர்ந்தனர். இருப்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் வளர்ந்து வந்த தேசியம் சிலசமயங்களில் அங்குமிங்குமாக வன்முறைச் சமயங்கள் வெடிப்பதற்கு வழிகோலியது. 1916 இல் மிகப்பெரும் காலனிய எதிர்ப்புப்புரட்சி நடைபெற்றது. ஆனால் அது கொடூரமாக நசுக்கப்பட்டது. சில சமயங்களில் அங்குமிங்குமாக வன்முறைச் சம்பவங்கள் வெடிப்பதற்கு வழிகோலியது. 1915 இல் மிகப்பெரும் காலனிய எதிர்ப்புப்புரட்சி நடைபெற்றது. ஆனால் அது கொடூரமாக நச்சுக்கப்பட்டது. டோங்கிங் பகுதியில் சில கொரில்லா நடவடிக்கைகளுக்கு மேற்கொள்ளப்பட்டன. இந்த டோங்கிங் பகுதியிலிருந்துதான் இந்தோ – சீனர்களின் எதிர்காலத் தலைவரான ஹோ சி மின் வரவிருந்தார்.

### வியட் மின் கட்சியின் உதயம்:

- இந்தோ – சீனாவில் இருந்த வியட்நாம் தேசியக் கட்சியே முக்கியமானது. 1927 இல் உருவாக்கப்பட்ட இக்கட்சி மக்கள் தொகையில் பணக்காரர்களையும் நடுத்தரப்பிரிவு மக்களையும் கொண்டிருந்தது. 1929 இல் வியட்நாம் வீரர்கள் ராணுவப்புரட்சி செய்தனர். பிரெஞ்சு கவர்னர் ஜெனரலைக் கொலைசெய்வதற்கான முயற்சியும் தோல்வி அடைந்தது. இதனைத் தொடர்ந்து கம்யூனிஸ்ட்களின் தலைமையில் மிகப்பெரும் விவசாயிகளின்

  புரட்சியும் நடைபெற்றது. இப்புரட்சி ஒடுக்கப்பட்டதைத் தொடர்ந்து “வெள்ளை பயங்கரவாதம் (White Terror)" என்பது அரங்கேறியது. புரட்சியாளர்கள் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டனர். வெள்ளை பயங்கரவாதத்திற்குப் பின்னர் ஹோ சி மின் மாஸ்கோ சென்றார். 1930 களை மாஸ்கோவிலும் சீனாவிலும் கழித்தார். இரண்டாவது உலகப்போரின் தொடக்கத்தில் பிரான்ஸ் ஜெர்மனியால் தோற்கடிக்கப்பட்டது. ஹோ சி மின்னும் அவருடைய தோழர்களும் இச்சூழலைப் பயன்படுத்தி வியட்நாமின் விடுதலையை முன்னெடுத்தனர். 1941 ஜனவரி திங்கள் எல்லையைக் கடந்து வியட்நாம் வந்த அவர்கள் “வியட்நாம் விடுதலை சங்கம்“ அல்லது வியட்மின் எனும் அமைப்பை நிறுவினார். இது தனித்தன்மை வாய்ந்த வியட்நாமிய தேசியத்திற்குப் புதிய அழுத்தத்தைக் கொடுத்தது.

**இந்தியாவில் காலனியாதிக்க நீக்கம்**
**மாகாணங்களில் இரட்டையாட்சி:**

இந்தியாவில் காலனிய நீக்கச் செயல்பாடானது இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், 1905 இல் சுதேசி இயக்கத்தோடுத் துவங்கியது. முதல் உலகப்போரானது விரைவான அரசியல் பொருளாதார மாற்றங்களை ஏற்படுத்தியது. 1919 இல் இந்திய அரசுச்சட்டம் இரட்டையாட்சி முறையை அறிமுகம் செய்தது. அச்சட்டம் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட மாகாண சட்டசபைகளுக்கும் மாற்று அதிகாரங்களின் பட்டியலின் கீழ்வரும் சிலதுறைகளை இந்திய அமைச்சர்களே நிர்வகிக்கவும் வழிவகை செய்தது. மாண்டேகு அறிவிப்பு கூறுவதாவது: "ஆங்கிலப்பேரரசின் ஒருங்கிணைந்த ஒரு பகுதியாக இந்தியாவின் நிர்வாகத்தில் அதிகப்படியான இந்தியர்கள் பங்கேற்கும் ஒவ்வொரு

ஹோசி மின் 1890 இல் டோங்கிங்கில் பிறந்தார். தனது 21 ஆவது வயதில் அவர் ஐரோப்பா சென்றர். லண்டன் உணவுவிடுதியொன்றில் சமையல்கலைஞராய்ப் பணியாற்றியபின் அவர் பாரிஸ் சென்றார். பாரிஸ் அமைதி மாநாட்டில் வியட்நாமின் சுதந்திரத்திற்காக ஆதரவு திரட்டினார். தினசரிகளில் அவர் எழுதிய கட்டுரைகளும் குறிப்பாக "விசாரணையில் பிரெஞ்சு காலனியாதிக்கம்" எனும் சிற்றேடு அவரை நன்கறியப்பட்ட வியட்நாமிய தேசியவாதி ஆக்கியது. 1921 இல் ஹோ சி மின் பிரெஞ்சு கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்கியவர்களில் ஒருவராக இருந்தார். இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் அவர் மாஸ்கோ சென்று புரட்சியின் நுட்பங்களைக் கற்றார். 1925 இல் "புரட்சிகர இளைஞர் இயக்கம்" எனும் அமைப்பை நிறுவினார். 1930 இல் இவர் தலைமையேற்ற விவசாயிகளின் புரட்சி நசுக்கப்பட்ட பின்னர் இவர் மீண்டும் மாஸ்கோ சென்றார். மா சே துங்கினால் எழுச்சியூட்டப்பட்ட இவர் இந்தோ சீனாவின் மீது ஜப்பானியர் படையெடுத்த பின்னர் இந்தோசீனா திரும்பி கமியூனிஸ்டுகளை ஒருங்கிணைத்துத் தனது காலனிய எதிர்ப்புப் போராட்டத்தை நடத்தினார். அமெரிக்காவிற்கு எதிராகப் போருக்குத் தலைமை ஏற்று எழுச்சியூட்டும் பாத்திரத்தை வகித்தார்.

துறையிலும் படிப்படியாக சுயாட்சி வளர்ச்சிபெறும்". ஆங்கில அரசின் இந்நடவடிக்கையின் நோக்கம் "வரிகளின் அடித்தளத்தை விரிவுபடுத்துவதற்குத் தேவைப்படும் அரசியல் அமைதியை பெறுவதற்காக" எனக் கூறப்பட்டது. இந்திய தேசிய காங்கிரஸ் இரட்டையாட்சி தொடர்பான ஏற்பாடுகளை மறுத்ததோடு சட்டசபைகளைப் புறக்கணிக்க முடிவு செய்தது.

**இந்தியாவைத் தொழில்மயமாக்குவதில் நடவடிக்கைக் குறைபாடுகள்:**

சர்க்கரை, சிமெண்ட், சில வேதியியல் பொருட்களுக்கு எதிர்மறையான பாகுபாட்டு மனப்பான்மையோடு வழங்கப்பட்ட பாதுகாப்பைத் தவிர காலனியப் பொருளாதாரக் கொள்கையில் மாற்றமேதுமில்லை. ஆங்கிலேய இரும்பு எ.்.குத் தொழில் நிறுவனங்களுக்கு ஆங்கிலேய இந்திய அரசாங்கம் தொழில் சார்ந்த ஒப்பந்தங்கள் வழங்கப்படும் என உறுதி அளித்ததன் மூலம் ஊக்கமளித்தது. ஆனால் உள்நாட்டுத் தொழில்களைப் பொறுத்தமட்டில் தொழில்நுட்பம் சார்ந்த அறிவுரைகளும் கல்வியும் வழங்குதல் புதிய துறைகள் தொடர்பாக முன்னோடித் தொழில் கூடங்களை அரசு தொடங்குதல் போன்ற வடிவங்களில் மட்டுமே அரசு உதவிகள் செய்தது. ஆனால் ஆங்கிலேய நிறுவனங்கள் அரசின் தலையீட்டை எதிர்த்ததால் வெகுவிரைவில் இக்கொள்கையும் கைவிடப்பட்டது.

**பொருளாதாரப் பெருமந்தத்தின் போது இந்தியா:**

1929 ஆம் ஆண்டுப் பொருளாதாரப் பெருமந்தம் ஆங்கிலேயே வணிக வர்த்தக நடவடிக்கைகளுக்குப் பெரும்சேதத்தை உண்டாக்கும் தாக்கத்தை ஏற்படுத்தியது. அந்நியமுதலீடு குறிப்பாக இருப்புப்பாதை அமைப்பது போன்ற கனரக தொழில்துறைகளில் குறிந்தது. இது ஆங்கில காலனியத்தின்

இருப்புக்குத் தீங்கு விளைவிப்பதாகும். வணிகத்துறையின் விரிவாக்கமே சிறப்பான பொருளாதார நடைமுறையாகும். ஏனெனில் இது மறைமுக வரிகளையும் (எ.கா. சுங்க வரிகள்) அயல்நாட்டுப் பணத்தையும் பெறுவதற்கான எளிய வழியாகும்.

இங்கிலாந்து பெருமந்தத்தின் தீயவிளைவுகளைத் தனது காலனிய நாடுகளின் தோள்களுக்கு மாற்றியது. இங்கிலாந்திற்கும் ஆங்கிலப் பேரரசின் உறுப்பு நாடுகளுக்கும் 1932 இல் நடைபெற்ற ஒட்டாவா பொருளாதார உச்சி மாநாட்டில் இருதரப்பு ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின. இம்மாநாட்டில் பங்கேற்றநாடுகள் (இந்தியா உட்பட) ஏனைய நாட்டு பொருள்களைக் காட்டிலும் இங்கிலாந்து பொருட்களுக்கு முன்னுரிமை வழங்க ஒத்துக்கொண்டன.

**ஒட்டாவா மாநாட்டின் பங்கேற்பாளர்கள் 1932:**

வரவுசெலவுக் கணக்குகளைச் சமன்படுத்தும் கொள்கையைப் பின்பற்ற இந்தியா கட்டாயப்படுத்தப்பட்டது. பெருமந்த காலத்தில் அந்நியநாட்டுச் செலாவணிகளை பெறும்பொருட்டு ஆங்கிலேய - இந்திய அரசு சுங்கவரிகளை அதிகரித்தது. நெருக்கடியான நேரங்களில் இங்கிலாந்திற்குத் தேவைப்பட்ட தங்கம் இந்தியாவிலிருந்து ஏற்றுமதியானது. இந்தியக் காகிதப் பணத்தின் மதிப்பைக் கூட்டியதன் மூலம் ஆங்கிலேயர்கள் இறக்குமதியை மலிவாக்கினர். இந்திய அரசு பின்பற்றிய அந்நியச் செலாவணி மாற்றுக்கொள்கை காலனி அரசுக்கும் மக்களுக்குமிடையே பதற்றமான நிலையை ஏற்படுத்தியதோடு ஆங்கில அரசுக்கு எதிரான அரசியல் போராட்டங்களைத் தீவிரப்படுத்தியது.

**இந்திய வேளாண்மையின் மீது பெருமந்தம் ஏற்படுத்தியத் தாக்கம்:**

பொருளாதாரப் பெருமந்தம் இந்திய வேளாண்மைக்கும் உள்நாட்டு உற்பத்தித் தொழில்களுக்கும் மரண அடியைக் கொடுத்தது. எடுத்துக்காட்டாக வேளாண் உற்பத்திப் பொருட்களின் விலை பாதியாகக் குறைந்தது. ஆனால் விவசாயி, நிலத்திற்குக் கொடுக்க வேண்டிய குத்தகைத் தொகையில் மாற்றமேதுமில்லை. விவசாய விளைபொருட்களின் விலையைப் பொறுத்தமட்டிலும் அரசுக்கு விவசாயிகள் செலுத்த வேண்டியப்பணம் இரண்டு மடங்காகிறது. இந்திய விவசாயிகளும் பொருள் உற்பத்தியாளர்களும் உயிர் பிழைப்பதற்காகத் தங்களிடம் இருந்த தங்கம், வெள்ளி ஆகியவற்றை விற்கும் நிலை எற்பட்டது. விலைவாசியில் ஏற்பட்ட மிகப்பெரும் வீழ்ச்சி இந்திய தேசியவாதிகளை உள்நாட்டுப் பொருளாதாரத்தைப் பாதுகாக்கும் கோரிக்கையை வைக்கத் தூண்டியது. 1930 களில் இந்திய தேசிய காங்கிரஸ் ஒரு போராடும் குணம் மிக்க மாபெரும் மக்கள் இயக்கமாக எழுச்சி பெற்றது. சட்டமறுப்பு இயக்கத்தில் அனைவரும் சேருமாறு காங்கிரஸ் விடுத்த அழைப்பு கிராமப்புற இந்தியாவில் மிகப்பெரும் வரவேற்பைப் பெற்றது. இடது சாரித் தீவிரவாதத்தையும் நன்றாகவே காணமுடிந்தது.

**1935 ஆம் ஆண்டு இந்திய அரசியமைப்புச் சட்டம்:**

ஆங்கிலேயர்களுக்கு இந்திய தேசியவாதிகளைச் சமாதானம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதன் வெளிப்பாடே 1935 இந்திய அரசியலமைப்புச் சட்டம். இச்சட்டம் உள்ளாட்சி அரசு நிறுவனங்களுக்கு அதிக அதிகாரம் வழங்கியதோடு நேரடித் தேர்தலையும் அறிமுகம் செய்தது. இச்சட்டத்தின் அடிப்படையில் நடத்தப்பட்ட தேர்தல்களில் பெரும்பாலான மாகாணங்களில் அகில இந்திய தேசிய காங்கிரஸ் அதிர்வை ஏற்படுத்தும் வெற்றியைப் பெற்றது. இருந்தபோதிலும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட காங்கிரஸ் அமைச்சரவைகளை கலந்தாலோசிக்காமல் ஆங்கில அரசு இந்தியாவை இரண்டாம் உலகப்போரில் ஈடுபடுத்தியதால் காங்கிரஸ் அமைச்சரவை ராஜினாமா செய்யும் கட்டாயத்திற்கு உள்ளாக்கப்பட்டது.

## அலகு – 3 இரண்டாம் உலகப்போர்

**அறிமுகம்:**

இருபதாம் நூற்றாண்டின் முதல் பாதி இவ்வுலகை நிலைகுலையச் செய்து, பெரும்சேதங்களை ஏற்படுத்திய இரண்டு மாபெரும் போர்களைச் சந்தித்தது. முதல் உலகப்போர் 1914 இல் தொடங்கி 1918 வரையும் இரண்டாம் உலகப்போர் 1939 இல் தொடங்கி 1945 வரையும் நடைபெற்றது. உலகம் ஏற்கனவே பல போர்களைச் சந்தித்திருந்தாலும் இவ்விரு போர்கள் மட்டுமே உலகப்போர்கள் எனக் குறிப்பிடப்படுகின்றன. ஏனெனில் இவ்விரு போர்களிலும் மோதல்கள் நடைபெற்ற பகுதிகள் பரந்துவிரிந்ததாக இருந்தன. மேலும் இப்போர்களினால் உயிரிழந்த ஆயுதம் ஏந்திப் போரிட்டோர், பொதுமக்கள் ஆகியோரின் இறப்பு எண்ணிக்கை மிக அதிகமாக இருந்தது. மேலும் இவ்விரு போர்களும் ஐரோப்பிய, ஆசிய, ஆப்பிரிக்கக் கண்டங்களில் பல முனைகளில் நடைபெற்றன.

இவ்விரு போர்களிலும் பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா, அமெரிக்கா ஆகிய நேச, நட்பு நாடுகளின் கூட்டுப்படைகள் ஜெர்மனியின் தலைமையிலான மைய, அச்சு நாடுகளுக்கு எதிராகப் போரிட்டன. இரண்டாம் உலகப்போரில் ஜெர்மனியின் நட்பு நாடுகளாக இத்தாலி மற்றும் ஜப்பான் விளங்கின.

**இரண்டாம் உலகப் போருக்கான காரணங்கள், போரின் போக்கு, விளைவுகள்:**

**காரணங்கள்:**

முதலாம் உலகப்போர், மாபெரும் போர் என்றும் அனைத்துப் போர்களையும் முடித்துவைக்கும் போர் எனவும் குறிப்பிடப்பட்டது. பகை நாடுகளில், குறிப்பாக நேச நாடுகள் மீண்டும் ஒரு நீண்ட மோதலுக்கான எண்ணத்தைக் கொண்டிருக்கவில்லை, இதுவே முதல் உலகப் போருக்குப் பின் இந்நாடுகளின் செயல்பாடுகளை இயக்கும் சக்தியாய்த் திகழ்ந்தது. எழுச்சி பெற்ற ஜெர்மனி மேற்கொண்ட ஆக்கிரமிப்பு இராணுவ நடவடிக்கைகளும். ஜப்பானின் விரைவான வளர்ச்சியுமே இரண்டாம் உலகப்போருக்கான உடனடி மற்றும் அடிப்படைக் காரணங்களாகும்.

**ஜெர்மனியும், வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையும் 1919:**

1919 ஜுனில் கையெழுத்தான வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையோடு முதல் உலகப்போர் முடிவுற்றது. அதன் சரத்துக்களில் மூன்று அம்சங்கள் ஜெர்மனி மக்களிடையே பெரும் அதிருப்பதியை ஏற்படுத்தின.

1. ஜெர்மனி தனது மேற்கு, வடக்கு, கிழக்கு ஆகிய எல்லைகளில் பல பகுதிகளை விட்டுத்தரக் கட்டாயப்படுத்தப்பட்டது.

2. ஜெர்மனி ஆயுதக்குறைப்புக்கு உள்ளாக்கப்பட்டு மிகக் குறைந்த அளவிலான படைகளை மட்டுமே வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டது.

3. போரினால் நேச நாடுகளுக்கு ஏற்பட்ட இராணுவ வீரர்கள் மற்றும் பொதுமக்களின் உயிர் இழப்பிற்காக ஜெர்மனி இழப்பீடு வழங்க வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது.

**பன்னாட்டுச் சங்கத்தின் தோல்வி:**

அமெரிக்க அதிபர் உட்ரோ வில்சனின் முயற்சியால் பன்னாட்டுச் சங்கம் உருவானது இச்சங்கம் நாடுகளிடையே பிரச்சனை ஏற்படும் போது நடுவராக இருந்து பிரச்சனைகளைத் தீர்க்கும் என்றும் இராணுவ ஆக்கிரமிப்பை மேற்கொள்ளும் நாடுகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் எனவும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அமெரிக்கா இவ்வமைப்பில் உறுப்புநாடாகச் சேரவில்லை. ஏனெனில் போருக்குப்பின்னர் அமெரிக்காவின் பொதுவான மனோநிலை மரபான தனித்திருக்கும் கொள்கைக்கு ஆதரவாக இருந்தது. ஏனைய நேசநாடுகளும் தலையிடாக்கொள்கை மனநிலையில் உறுதியாக இருந்தன. இதன் விளைவாக பன்னாட்டுச் சங்கம் ஒரு பயனற்ற பன்னாட்டுச் சங்கமாக இருந்தது.

**முதல் உலகப்போருக்குப் பின் ஏற்பட்ட சிக்கலும், ஜெர்மனியும் :**

மேற்குறிப்பிட்டவாறு வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் முக்கியமான மூன்று சரத்துக்கள், குறிப்பாக போர் இழப்பீடு தொடர்பான சரத்து ஜெர்மனியில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தின. முதல் உலகப்போருக்குப் பின் பத்தாண்டுகளில் பலநாடுகள் எதிர்கொண்ட பிரச்சனைகள் இத்தாலி (முசோலினி), ஜெர்மனி (ஹிட்லர்), ஸ்பெயின் (பிராங்கோ) ஆகிய நாடுகளில் தீவிர வலதுசாரி சர்வாதிகார ஆட்சி எழுச்சி பெறுவதற்கு இட்டுச் சென்றன.

முதல் உலகப்போருக்குப் பின்னர் ஜெர்மனி பெருமளவிலான வேலையில்லாத் திண்டாட்டத்தையும் கடுமையான பணவீக்கத்தையும் அனுபவிக்க நேர்ந்தது. மேலும் அதனுடைய காகிதச் செலாவணி முழுமையாக மதிப்பிழந்தது. சாதாரண மக்கள் ரொட்டி வாங்குவதற்காக வண்டிநிறைய பணத்தை எடுத்துச்செல்வது போன்ற பல படங்கள் 1920 களில் வெளியாயின. பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளுக்குப் பின்னர் ஜெர்மனி வழங்கவேண்டிய போர் இழப்பீட்டுத் தொகை குறைக்கப்பட்டாலும் மேற்சொல்லப்பட்ட துயரங்களுக்கு ஜெர்மனியின் மீது கட்டாயமாகச் சுமத்தப்பட்ட போர் இழப்பீடே காரணம் எனக் குற்றம் சாட்டப்பட்டது.

**அடால்ப் ஹிட்லரின் எழுச்சி:**

ஜெர்மனி பெருமளவு அவமானப் படுத்தப்பட்டதாக நிலவிய கருத்தைப் பயன்படுத்தி, தனது வல்லமை மிக்க சொற்பொழிவாற்றும் திறமையாலும் உணர்ச்சிமிக்கப் பேச்சுக்களாலும் ஜெர்மனியை அதன் இராணுவப் புகழ்மிக்க முந்தைய காலத்திற்கு மீண்டும் அழைத்துச் செல்வதாக அடால்ப் ஹிட்லர் மக்களைத் தனபக்கம் ஈர்த்தார். தேசிய சமதர்வாதிகள் கட்சியை நிறுவினர். இது நாசிக் கட்சி என்று அழைக்கப்பட்டது. இரண்டு அடிப்படைக் கருத்துகளை அடித்தளமாகக் கொண்டு ஹிட்லர் ஆதரவைத் திரட்டினார். ஒன்று ஜெர்மனியரே சுத்தமான ஆரிய 'இனத்தவர்' எனும் இன உயர்வு மனப்பாங்கு மற்றொன்று மிக ஆழமான யூத வெறுப்பு. 1933 இல் ஆட்சிக்கு வந்த அவர் 1945 வரை ஜெர்மனியை ஆட்சி செய்தார்.

வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் சரத்துக்களுக்கு நேரெதிராக ஹிட்லர் ஜெர்மனியின் இராணுவத்தையும் ஆயுதங்களையும் அதிகரிக்க துவங்கினார். ஆயுதப் படைகளுக்கான ஆள்சேர்ப்பு, அரசாங்கத்தின் செலவில் நிறுவப்பட்ட, இராணுவத்திற்குத் தேவைப்படும் ஆயுதங்களையும் ஏனைய இயந்திரங்களையும் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் நிறுவப்படுதல் போன்றவற்றால் ஜெர்மனியின் பொருளாதாரம் புத்துயிர் பெற்றதோடு, வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்சனையும் தீர்த்து வைக்கப்பட்டது.

எழுச்சிமிக்க முசோலினியின் எத்தியோப்பியப் படையெடுப்பினால் இத்தாலியுடன் கொண்டிருந்த உறவினை பிரிட்டனும் பிரான்சும் முறித்துக்கொண்ட அதேவேளையில் ஜெர்மனியும் இத்தாலியும் நட்புகொண்டன. ஹட்லர் படைநீக்கம் செய்யப்பட்ட மண்டலமாகக் கருதப்பட்ட ரைன்லாந்தின் மீது 1936 இல் படையெடுத்தார். இத்தாலியும் ஜெர்மனியும் இணைந்து ரோம் - பெர்லின் உடன்படிக்கையை ஏற்படுத்தின. பின்னர் இதில் ஜப்பான் இணைந்தவுடன்ரோம் - பெர்லின் - டோக்கியோ அச்சு உடன்படிக்கை உருவானது. 1938 இல் ஹட்லர் ஆஸ்திரியா, செக்கோஸ்லோவாக்கியா ஆகிய நாடுகளைத் தாக்கிக் கைப்பற்றினார். செக்கோஸ்லோவாக்கியாவின் ஒரு பகுதியான சூடட்டன்லாந்தில் ஜெர்மன் மொழி பேசும் மக்கள் வாழ்ந்து வந்தனர். ஜெர்மன் மொழி பேசும் மக்கள் வாழ்கின்ற பகுதிகள் அனைத்தும் ஒரே நாடாக இணைக்கப்பட வேண்டும் என ஹிட்லர் உரிமை கோரினார்.

**நேசநாடுகளும் தலையிடாக் கொள்கையும்:**

இதே சமயத்தில் இத்தாலியும் ஜப்பானும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டன. இத்தாலி 1935இல் எத்தியோபியா மீதும், 1939 இல் அல்பேனியா மீதும் படையெடுத்தது. எத்தியோப்பியப் பேரரசர் ஹெய்லி செலாஸ்ஸி பன்னாட்டுச் சங்கத்திடம் முறையிட்டார். ஆனால் அவருக்கு எவ்வித உதவியும் கிடைக்கவில்லை. கிழக்குப் பகுதிகளில் ஜப்பான் இராணுவ விரிவாக்க நடவடிக்கைகளை மேற்கொண்டது. 1931 இல் ஜப்பான் மஞ்சூரியாவின் மீது படையெடுத்தது. 1937 இல் சீனாவைத் தாக்கி பெய்ஜிங்கை முற்றுகையிட்டது. இந்நடவடிக்கைகளை எல்லாம் நேசநாடுகளால்

கண்டுகொள்ளாமல் இருந்தன. பன்னாட்டுச் சங்கத்தால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள இயலவில்லை.

இவ்வாறு ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகியவை இராணுவரீதியான நடவடிக்கைகளை மேற்கொண்டபோதும் பிரிட்டனும் பிரான்சும் எதிலும் தலையிடாமலேயே இருந்தன. பிரிட்டனின் பொது மனநிலை மற்றுமொரு போரைத் தொடங்குவதற்கு ஆதரவாக இல்லை. பிரிட்டனின் பிரதமர்கள் பால்டுவின், சேம்பர்லின் ஆகியோரும் அதிகாரபூர்வமாக தங்களின் நலன்சாரா பகுதிகளில் நடைபெறும் நிகழ்வுகளில் தலையிடுவது நியாயமற்றது என நினைத்தனர். அமெரிக்காவோ வெளியுலகை பற்றிச் சற்றேனும் அக்கறை கொள்ளாமல் பொருளாதாரப் பெருமந்தத்தின் பின்னர் தனது பொருளாதாரத்தை மீட்டு எடுப்பதில் மட்டும் கவனத்தைச் செலுத்தியது.

**மியூனிச் உடன்படிக்கை:**

சோவியத் ரஷ்யாவும் மேற்கத்திய நாடுகளும் ஒன்றின்மீது மற்றொன்று அவநம்பிக்கை கொண்டிருந்தன. 1938 இல் பிரிட்டன் பிரதமர் சேம்பர்லின் ஜெர்மனியோடு மியூனிச் உடன்படிக்கையை மேற்கொண்டார். இது செக்கோஸ்லோவாக்கியாவின் மீது படையெடுத்து அதன் ஜெர்மன் மொழி பேசும் பகுதியான சூடட்டன்லாந்தை ஜெர்மனி இணைத்துக்கொண்டதை ஏற்றுக்கொள்வதாக அமைந்தது. இருந்தபோதிலும் 1939 இல் சோவியத் யூனியன் ஜெர்மனியுடன் ஒருவர்மீது மற்றொருவர் படையெடுப்பதில்லை என ஒப்பந்தம் செய்துகொண்டது. நேசநாடுகளின் செயலற்ற இத்தன்மையும் படைகளைப் பெருக்கிக் கொள்வதில் அவை காட்டிய தயக்கமும் இரண்டாம் உலகப்போருக்குக் காரணங்களாக அமைந்தன.

வேறு எந்த ஒரு நாட்டையும் தான் தாக்கப்போவதில்லை என ஹிட்லர் மியூனிச் உடன்படிக்கையில் உறுதியளித்திருந்தாலும் அது உடனடியாக மீறப்பட்டது. 1939 இல் ஹிட்லர் செக்கோஸ்லோவாக்கியாவின் மீது படையெடுத்தார். அடுத்து போலந்து தாக்கப்பட்டது. இதுவே ஜெர்மனிக்கு எதிராக பிரிட்டனும் பிரான்சும் போர்ப்பிரகடனம் செய்வதற்கு இட்டுச்சென்ற இறுதிநடவடிக்கைகளாக அமைந்தன. பிரிட்டன் பிரதமர் சேம்பர்லின் 1930 இல் பதவிவிலகினார். ஹிட்லரைப் பற்றியும் அவருடைய இராணுவ நோக்கங்களைப் பற்றியும் எப்போதும் எச்சரித்து வந்த வின்ஸ்டன் சர்ச்சில் பிரதமரானார்.

**இரண்டாம் உலகப்போரின் போக்கு**
**போரின் தன்மை**

இரண்டாம் உலகப்போர் ஐரோப்பா, ஆசியா. பசிபிக் எனும் இருவேறு முனைகளில் நடைபெற்றது. ஐரோப்பாவில் நேசநாடுகள் ஜெர்மனிக்கும் இத்தாலிக்கும் எதிராகப் போரிட்டன. ஆசிய பசிபிக் பகுதிகளில் நேசநாடுகள் ஜப்பானுக்கு எதிராக போர் செய்தன.

இரண்டாம் உலகப்போர் நவீனப் போராகும். டாங்குகள், போர்க்கப்பல்கள், விமானம் தாங்கிக் கப்பல்கள், நீர்மூழ்கிகள், போர்விமானங்கள், குண்டுவீசும் விமானங்கள், கனரக இராணுவ தளவாடங்களைக் கொண்டு போர்கள் நடத்தப்பட்டன. இவையனைத்தையும் உற்பத்தி செய்வதற்குப் பெருமளவிலான வளங்கள் தேவைப்பட்டன. இராணுவ உபகரணங்களை நவீனப்படுத்துவதற்கு தேவையான கச்சாப்பொருள்கள். உற்பத்தித்திறன், தொழிற்நுட்பம் ஆகியவையும் தேவைப்பட்டன. பின்னர் நினைத்து வருந்தும் அளவிற்கு பெரும் பொருட்செலவை ஏற்படுத்திய, நீண்ட காலப் போராக இப்போர் அமைந்தது.

**போரின் தொடக்கம்**

பிரிட்டனும் பிரான்சும் 1939 செப்டம்பரில் ஜெர்மனியின் மீது போர்ப் பிரகடனம் செய்தன. இத்தாலி 1940 ஜூனில் ஜெர்மனியோடு சேர்ந்தது. 1940 செப்டம்பரில் ஜப்பான் அச்சு நாடுகளுடன் கை கோர்த்தது.

போர் அறிவிப்பு செய்யப்பட்டவுடன் சிறிய அளவிலான செயல்பாடுகளே காணப்பட்டன. பிரிட்டன் ஏற்கனவே தனது இராணுவ வலிமையை அதிகரிக்கத் தொடங்கிவிட்டது. இளைஞர்கள் அனைவரும் கட்டாய இராணுவச் சேவைக்கு அழைக்கப்பட்டனர். போரின் தொடக்க ஆண்டுகள் ஜெர்மன்

படையினரின் பிரமிக்கவைக்கும் வெற்றியாண்டுகளாகத் திகழ்ந்தன. டென்மார்க், நார்வே பின்னர் பிரான்ஸ் ஆகிய நாடுகளை ஜெர்மானிய ராணுவம் கைப்பற்றியது. 1941 இல் ரஷ்யாவின் எல்லை வரையிலான ஐரோப்பாவின் முக்கியநிலப் பகுதிகள் அனைத்தும் அச்சு நாடுகளின் கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டுவரப்பட்டன. திடீரென, மிக வலுவான நாடுகளைத் தாக்கிக் கைப்பற்ற ஜெர்மானியப் படைகள் பிளிட்ஸ்கிரிக் எனும் மின்னல் வேகத்தாக்குதல் (Lightning strike, ஜெர்மன் மொழியில் Blitzkrieg) போர்த்தந்திரத்தைக் கடைப்பிடித்தன.

ஐரோப்பிய நாடுகளின் கப்பற்படைகளில் 'தி பிரிட்டிஷ் ராயல் நேவி' என்றழைக்கப்பட்ட பிரிட்டனின் கப்பற்படையே தொடர்ந்து மிக வலுவானதாகத் திகழ்ந்தது. கடல்வழித் தாக்குதல் நடத்தி பிரிட்டனை கைப்பற்றுவது இயலாது என்பதை அது உறுதிப்படுத்தியது. இருந்தபோதிலும் பிரிட்டன் தனது பேரரசின் ஏனைய பகுதிகளில் இருந்தும், அமெரிக்காவிலிருந்தும் கடல்வழியாக இறக்குமதி செய்யப்படும் உணவுப்பண்டங்கள், கச்சாப் பொருள்கள், தொழிற்சாலை உற்பத்திப் பொருள்கள் ஆகியவற்றையே பெரிதும் சார்ந்திருந்தது. இதனைத் தாக்குவதற்காக ஜெர்மனி நீர்மூழ்கிக் கப்பற்படையை அனுப்பிப் பெரும்சேதத்தை ஏற்படுத்தியது. குறிப்பாக அட்லாண்டிக் பெருங்கடலில் பிரிட்டனுக்குத் தேவையானப் பொருள்களை ஏற்றிவரும் பயணியர் கப்பல்களை அவை மூழ்கடித்தன.

**முக்கிய நிகழ்வுகள்:**

டன்கிர்க் - 1940 மே மாதத்தில் சுமார் 3 லட்சம் பிரிட்டன், பிரான்சு நாடுகளின் கூட்டுப்படை வீரர்களுக்கு டன்கிர்க் நகரின் கடற்கரைப் பகுதிக்குப் பின்வாங்கும் கட்டாயம் ஏற்பட்டது. ருெமளவிலான தனது வீரர்களை பிரிட்டன் டன்கிர்க்கில் இழந்திருந்தால் மீண்டும் இது போன்றதொரு படையை அணிதிரட்டுவது பிரிட்டனுக்கு இடர்ப்பாடு மிகுந்ததாக இருந்திருக்கும்.

பிரிட்டன் போர் - 1940 ஜூலையில் பிரிட்டனின் மீது ஜெர்மனி படையெடுக்கும் எனும் அச்சம் ஏற்பட்டது. நீண்ட நெடிய ஆகாய விமானக் குண்டுத் தாக்குதல்களின் மூலம் தனது திட்டங்களை ஏற்றுக்கொள்ளுமாறு பிரிட்டனை வற்புறுத்த ஹிட்லர் விரும்பினார். ஜெர்மனியின் விமானப்படைகள் குறிப்பிட்ட இலக்குகளை, மிகக் குறிப்பாகத் துறைமுகங்கள், விமானத்தளங்கள், தொழிற்சாலைகள் ஆகியவற்றைத் தாக்கத் தொடங்கின. 1940 செப்டம்பரில் லண்டன் நகரம் இரக்கமற்ற குண்டுவீச்சுக்கு இலக்கானது. இந்நடவடிக்கை மின்னல் (Blitz) என்றழைக்கப்பட்டது. 1940 அக்டோபரில் லண்டன் மற்றும் ஏனைய தொழில் நகரங்களின் மீது இரவு நேரத்தில் குண்டு வீச்சுத் தாக்குதல் தொடங்கிற்று. ஆனால் இது தோல்வியில் முடிந்தது. ஜெர்மனியின் போர் விமானங்கள் சற்று தொலைவில் வரும்போதே அவற்றைக் கண்டறியும் திறன்பெற்ற, புதிதாகக் கண்டறியப்பட்ட, மிக ரகசியமாக வைக்கப்பட்டிருந்த கண்டறி கருவியெனும் ரேடாரைப் பயன்படுத்தி பிரிட்டனின் ராயல் ஏர்போர்ஸ் போர் விமானங்கள் (சிடுமூஞ்சிகள், சூறாவளிகள் எனப் பெயரிடப்பட்டவை) ஜெர்மனியின் குண்டுவீச்சு விமானங்களைத் தாக்கிப் பேரிழப்பை விளைவித்தன. விமானத் தாக்குதல்கள் 1940 அக்டோபர் மாதத்தோடு நின்று போனது. விமானப்போரில் ஏற்பட்ட இத்தோல்வியால் பிரிட்டனின் மீது படையெடுக்கும் திட்டத்தை ஜெர்மனி கைவிட்டது.

**கடன் குத்தகைத் திட்டம் (1941 – 1945) :**

அமெரிக்கக் குடியரசுத்தலைவர் ரூஸ்வெல்ட், தனிமைப்பட்டிருத்தல் கொள்கையிலிருந்து மாற வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தார். ஆனால் ஐரோப்பியப் போர்களில் நேரடியாகத் தலையிடுவது சாத்தியமில்லாமல் இருந்தது. எனவே 1941 மார்ச்சில் கடன் குத்தகை திட்டத்தைத் (Lend lease) தொடங்கினார். அதன்படி 'கடன்' எனும் பெயரில் ஆயுதம், உணவுப் பண்டம், இராணுவத் தளவாடம், ஏனைய பொருள்கள் பிரிட்டனுக்கு அனுப்பி வைக்கப்படும். அவை பயன்படுத்திய பின்னர் திருப்பிக் கொடுக்கப்பட்டுவிடும். இத்திட்டம் மிகப்பெருமளவிற்கு பிரிட்டனின் வளங்களைப் பெருக்கியது. 1941- 1945 இடைப்பட்ட ஆண்டுகளில் இத்திட்டத்தின் கீழ் பெறப்பட்ட உதவியின் மதிப்பு 46.5 பில்லியன் டாலராகும்.

**ரஷ்யப் படையெடுப்பு (1941 – 1942):**

1941 ஜுனில் ஜெர்மனி படைகள் ரஷ்யாவின் மீது படையெடுத்தன. ஜெர்மனி மக்களைக் குடியேற்றுவதற்குத் தேவையான முக்கிய நிலப்பகுதிகளைப் பெறுதல், கம்யூனிச ஆட்சியை ஒழிப்பது ரஷ்யாவின் இயற்கை வளங்களைக் குறிப்பாக எண்ணெய் வளங்களைக் கைப்பற்றுவது போன்ற நீண்டகால நோக்கங்களுடன் இப்படையெடுப்பு மேற்கொள்ளப்பட்டது. ஜெர்மன் படைகளின் தாக்குதல் தந்திரமான 'மின்னல் வேகத் தாக்குதல்'' தொடக்கத்தில் வெற்றிகளை நல்கியது. மிக விரைவில் ரஷ்யாவிற்குள் 1000 மைல்கள் வரை ஜெர்மனி படைகள் ஊடுருவின. பின்னர் ஜெர்மன் படைகள் மாஸ்கோவை நோக்கி முன்னேறின. ஆனால் இறுதியில் சோவியத் படைகளின் வலுவான எதிர்ப்பு, ரஷ்யாவின் கடுமையான குளிர் ஆகிய காரணங்களால் ஜெர்மனி படை தோல்வியுற்றது.

**ஸ்டாலின்கிரேடு போர் (1942 ஜுலை 17 முதல் 1943 பிப்ரவரி 2 வரை):**

1942 ஆகஸ்ட்டில் ஜெர்மானியர் ஸ்டாலின்கிரேடு நகரைத் தாக்கினர். வோல்கா நதிக்கரையில், 30 மைல் (50 கி.மீ) பரப்பளவில் அமைந்திருந்த ஸ்டாலின்கிரேடு ஆயுதங்களையும் டிராக்டர்களையும் உற்பத்தி செய்யும் முக்கியத் தொழில் நகரமாகும். அந்நகரைக் கைப்பற்றிவிட்டால் தெற்கு ரஷ்யாவுடனான சோவியத்தின் போக்குவரத்துத் தொடர்புகள் துண்டிக்கப்பட்டுவிடும். மேலும் காகஸஸ் பகுதிகளிலுள்ள எண்ணெய் வயல்களைச் சென்றடைவதற்கு ஜெர்மன் படைகளுக்கு ஸ்டாலின் கிரேடு வசதியாக இருக்கும். மேலும் சோவியத்தின் தலைவர் ஸ்டாலினின் பெயரைத்தாங்கிய இந்நகரைக் கைப்பற்றுதல் ஹிட்லரின் தனிப்பட்ட வெற்றியாகவும் அவரது பிரச்சாரத்திற்குக் கிடைத்த வெற்றியாகவும் கருதப்படும். ஜெர்மனியின் போர்த் திட்டமிடல் வல்லுநர்கள் '∴பால் புளூ'(Operation Blue)எனும் திட்டத்தின்படி இந்நகரைக் கைப்பற்றிவிடலாம் என நம்பினர். 1942 ஜுன் 28 இல் ஜெர்மனி படைகள் குறிப்பிடத் தகுந்த வெற்றிகளோடு போர் நடவடிக்கைகளைத் தொடங்கின.

ஜெர்மன் படைகள் கைப்பற்றிய பகுதிகளில் வாழ்ந்த ரஷ்ய மக்கள் மோசமான பணியிட, வாழ்க்கைச் சூழல்களால் மட்டுமே துன்பங்களை அனுபவிக்கவில்லை. அவர்கள் ஜெர்மன் படைகளாலும் மிகவும் மோசமாகவும் நடத்தப்பட்டனர். போரின்போது 15 மில்லியன் பொதுமக்கள் உயிரிழந்தனர். 10 மில்லியன் படை வீரர்களும் பலியாயினர். மொத்தத்தில் ரஷ்யாவின் மக்கள்தொகையில் பத்தில் ஒரு பகுதியினர் மரணத்தைத் தழுவினர். இருந்த போதிலும் ரஷ்ய மக்கள், ஸ்டாலினுக்கு எதிராகப் புரட்சி ஏற்படும் என்ற ஹிட்லரின் நம்பிக்கைக்கு நேர்மாறாக சோவியத் அரசுக்கு ஆதரவாக இருந்தனர்.

**எல் அலாமெய்ன் போர் (1942):**

போரின் தொடக்க ஆண்டுகளில் ஜெனரல் ரோம்மெல் தலைமையிலான ஜெர்மன் படைகள் வட ஆப்பிரிக்காவை விரைந்து கைப்பற்றுவதில் வியத்தகு வெற்றிகளைப் பெற்றன. எகிப்து மட்டுமே இங்கிலாந்தின் கைவசமிருந்தது. ஜெனரல் மாண்ட்கோமரியின் தலைமையிலான நேசநாட்டுப் படைகள் எதிர்த்தாக்குதல் நடத்தி வட ஆப்பிரிக்காவில் எல் அலாமெய்ன் என்ற இடத்தில் ஜெர்மனி, இத்தாலியப் படைகளைத் தோற்கடித்தன. பாலைவனத்தின் வழியாகத் துரத்தப்பட்ட ஜெர்மனி படைகள் வட ஆப்பிரிக்காவிலிருந்து வெளியேற்றப்பட்டன. இதனால் இத்தாலியின் மீது படையெடுப்பதற்கு வசதியான தளம் நேச நாடுகளுக்குக் கிடைத்தது.

**இத்தாலி சரணடைதல் (1943):**

இத்தாலியில் முசோலினியின் சர்வாதிகார ஆட்சி தூக்கியெறியப்பட்டது. புதிய இத்தாலி அரசு 1943 இல்நேச நாடுகளிடம் சரணடைந்தது. இருந்தபோதிலும் ஜெர்மனி வடக்கே ஒரு பொம்மை அரசை நிறுவி அதில் முசோலினியை அமரவைத்தது. 1945 ஏப்ரலில், முசோலினி இத்தாலியக் கிளர்ச்சியாளர்களால் கொல்லப்பட்டார்.

**ஹிட்லரின் முடிவு:**

ஜெனரல் ஐசனோவரின் தலைமையிலான நேசநாட்டுப் படைகள் பிரான்ஸ் நாட்டின் நார்மண்டியின் மீது படையெடுத்தன. ஜெர்மானியப் படைகள் மெதுவாகப் பின்னுக்குத் தள்ளப்பட்டன. ஆனால்

ஜெர்மனி படைகள் தொடர்ந்து எதிர்த்துப் போரிட்டதால் போர் ஓராண்டுக்கும் மேலாக நீடித்து இறுதியில் 1945 மே மாதத்தில் முடிவுற்றது. ஹிட்லர் 1945 ஏப்ரலில் தற்கொலை செய்து கொண்டார்.

1944 இலிருந்து ரஷ்யப் படைகள் கிழக்குப்புறத்தில் ஜெர்மனியைத் தாக்கி கிழக்கு ஐரோப்பாவின் பெரும்பகுதியையும், போலந்தையும் கைப்பற்றியது. 1945 இல் பெர்லின் நகரின் சில பகுதிகளையும் ரஷ்யப்படைகள் கைப்பற்றின. இதனால் போருக்குப் பின்னர் ஜெர்மனி இருபிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது.

**ஆசியா – பசிபிக் பகுதிகளில் நடைபெற்ற போர்:**

ஹிட்லரைப் போலவே ஜப்பானும் பேரரசுக் கனவில் இருந்தது. 1931 இல் ஜப்பானியப் படைகள் மஞ்சூரியா மீது படையெடுத்தன. சீனா இதுகுறித்து பன்னாட்டுச் சங்கத்தில் முறையிட்டது. இந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கை பிரிட்டன் அல்லது அமெரிக்காவின் கவனத்தை ஈர்க்கவில்லை. 1937 இல் ஜப்பான் சீனாவின் மீது படையெடுத்து அதன் பாரம்பரியமிக்கத் தலைநகரான பெய்ஜிங் நகரை (பீகிங்) முற்றுகையிட்டது. ஷாங்காயைச் சுற்றியிருந்தப் பகுதிகளும் அப்பகுதியின் தலைநகரான நான்சிங் (நான்கிங்) நகரமும் அவ்வாண்டின் இறுதியில் கைப்பற்றப்பட்டன. இதனைத் தொடர்ந்து வரலாறு காணாத மனித படுகொலையை ஜப்பான் நான்கிங்கில் அரங்கேற்றியது. விளையாட்டு போல் பொதுமக்கள் மொத்தமாகக் கொல்லப்பட்டனர். பெண்கள், குழந்தைகள் முதல் வயது முதிர்ந்தோர் வரை பல்வேறு சித்தரவதைக்கு உள்ளாக்கப்பட்டு கொல்லப்பட்டனர். குவாங்சூவும் (கேன்டன்) சீனாவின் வேறுபல பகுதிகளும் ஆக்கிரமிக்கப்பட்டன. சியாங்-கே-ஷேக்கின் தலைமையிலான சீனப்படைகள் மேற்கேயிருந்த மலைப் பகுதிகளுக்குப் பின்வாங்கி அங்கிருந்தபடியே ஜப்பானியருக்கு எதிரானப் போரைத் தொடர்ந்தனர்.

**முத்துத் துறைமுகம் (Pearl Harbour) (1941):**

1941 டிசம்பரில் ஹவாயிலுள்ள அமெரிக்கக் கப்பற்படைத் தளமான முத்துத் துறைமுகத்தின் மீது ஜப்பானிய விமானப்படைகள் முன்னறிவிப்பின்றி பெரும்தாக்குதலைத் தொடுத்தன. அமெரிக்காவின் பசிபிக் கப்பற்படையை முடக்கிவிட்டால் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் மீது படையெடுக்கும் போது எதிர்ப்பேதும் இருக்காது என ஜப்பான் நினைத்ததே இதற்குக் காரணமாகும். இத்தாக்குதலில் பல போர்க்கப்பல்களும் போர்விமானங்களும் அழிக்கப்பட்டன. அமெரிக்க வீரர்கள் பலர் கொல்லப்பட்டனர். இதனைத் தொடர்ந்து அமெரிக்கா ஜப்பான் மீது போர்ப் பிரகடனம் செய்தது. சீனாவும் பிரிட்டனும் அமெரிக்காவுடன் இணைந்தன. இதனால் ஆசிய பசிபிக் போரும் ஐரோப்பியப் போரும் ஒன்றிணைந்து ஒரு பொதுக் காரணத்திற்கான போராக மாறியது. மிக முக்கியமாக இத்தாக்குதல் பெருமளவிலான வளங்களைக் கொண்டிருந்த அமெரிக்க நாட்டை நேசநாடுகளின் அணியில் இப்போரில் பங்கேற்க வைத்தது.

**தென்கிழக்கு ஆசியாவில் ஜப்பானின் ஆக்கிரமிப்புகள்:**

ஹாங்காங், சிங்கப்பூர், மலேயா, டச்சு கிழக்கிந்தியா (இந்தோனேசியா), பர்மா ஆகிய அனைத்தும் ஜப்பானிடம் வீழ்ந்தன.

**மிட்வே போரும் க்வாடல்கெனால் போரும் (1942):**

மிட்வே போரில் அமெரிக்கக் கப்பற்படை ஜப்பானின் கப்பற்படையைத் தோற்கடித்தது. இது போரின் போக்கை நேசநாடுகளுக்குச் சாதகமாக மாற்றியது. சாலமோன் தீவுகளிலுள்ள க்வாடல்கெனால் போரில் காலாட்படையும் கப்பற்படையும் இணைந்து தாக்குதலை மேற்கொண்டன. இப்போர் பல மாதங்கள் நீடித்தது. இவ்விரு போர்களுமே ஜப்பானுக்குப் படுதோல்விகளாய் அமைந்தன.

இதன் பின்னர் அமெரிக்கப் படைகள் பிலிப்பைன்ஸை மீட்டது. படிப்படியாக ஜப்பானியர் தாங்கள் கைப்பற்றிய பகுதிகளிலிருந்து வெளியேற்றப்பட்டனர். 1944இல் இந்தியாவின் வடகிழக்குப் பகுதி மீது படையெடுக்க முயன்ற ஜப்பானியரை இந்தியப் படைகளும் ஆங்கிலேயப் படைகளும் இணைந்து எதிர்கொண்டு பின்னுக்குத் தள்ளினர். பின்னர் சீனப் படைகளோடு சேர்ந்து ஜப்பானியரை பர்மாவை விட்டு வெளியேற்றினர். மலேயாவையும் சிங்கப்பூரையும் விடுவித்தனர்.

**ஹிரோஷிமா, நாகசாகி (ஆகஸ்ட் 1945)**

இதனிடையே நவீன அறிவியல் வளர்ச்சியைப் பயன்படுத்தி ரகசியத் திட்டத்தின் மூலம் அமெரிக்கா அணுகுண்டுகளைத் தயாரித்திருந்தது. வழக்கமான வெடிமருந்து குண்டைக்காட்டிலும் பெருமளவிலான சக்தி கொண்டனவாக இக்குண்டுகள் விளங்கின. ஜப்பானியப் படைத்தளபதிகள் சரணடைய மறுத்தபோது அமெரிக்கா ஜப்பானின் ஹிரோஷிமா நகர்மீது ஒரு அணுகுண்டை வீசியது. இதன் பின்னரும் ஜப்பானியர் சரணடைய மறுத்ததால் மற்றொரு அணுகுண்டு நாகசாகியின் மீது வீசப்பட்டது. இறுதியாக ஜப்பான் ஆகஸ்ட் 15, 1945 இல் தங்களது சரணடைதலை அறிவித்தபின், செப்டம்பர் 2, 1945 இல் முறையாகக் கையெழுத்திட்டதும் இரண்டாம் உலகப்போர் ஓர் முடிவுக்கு வந்தது.

**போரின் விளைவுகள்:**

உலகம் இரு அணிகளாகப் பிரிதல்: இரண்டாவது உலகப்போர் உலகில் அடிப்படையானது முக்கியமானதுமான பல மாற்றங்களை ஏற்படுத்தியது. வல்லரசுகள் தலைமையிலான அணிகளைக் கொண்ட உலகம் இரு துருவங்களானது. ஒரு அணி கம்யூனிச எதிர்ப்புக் கருத்துக்களைக் கொண்ட அமெரிக்காவால் தலைமையேற்கப்பட்டது. மற்றொரு அணிக்கு சோவியத் யூனியன் தலைமை தாங்கியது. கம்யூனிச நாடுகள், கம்யூனிசமல்லாத நாடுகள் என ஐரோப்பா இரண்டாகப் பிரிக்கப்பட்டது.

**அணு ஆயுதப் பரவல்:**

அமெரிக்க ஐக்கிய நாடுகளும் சோவியத் யூனியனும் அணு ஆயுதங்களை அதிகரிக்கும் போட்டியில் இறங்கி, ஆயுதங்களைப் பெருக்கிக் குவித்தன. பல நாடுகளில் இராணுவத்திற்கான செலவினங்கள் உச்சத்தை எட்டின.

**பன்னாட்டு முகமைகள்:**

பல பன்னாட்டு முகமைகள் குறிப்பாக ஐக்கிய நாடுகள் சபை, உலக வங்கி. பன்னாட்டு நிதியம் (International Monetary Fund) போன்ற அமைப்புகள் உருவாக்கப்பட்டன.

காலனி நீக்கச் செயல்பாட்டின் அடிப்படையில் காலனியாதிக்கச் சக்திகள் தங்களது காலனிகளுக்கு விடுதலை வழங்கவேண்டிய கட்டாயத்திற்குள்ளாயினர். அதில் இந்தியா முதலாவதாய் சுதந்திரம் பெற்றது.

**பேரழிவும் பின்விளைவும்:**

ஹிட்லர் ஆட்சிப்பொறுப்பேற்ற பின்னர் யூதர்கள் பலவழிகளில் கொடுமைப்படுத்தப்பட்டனர். அவர்களுக்கான சமூக உரிமைகள் மறுக்கப்பட்டன. அவர்களின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டன. அவர்கள் ‘கெட்டோக்கள்’ எனப்படும் ஒதுக்குபுறமான பகுதிகளில் வாழ வற்புறுத்தப்பட்டனர். இவற்றைத் தொடர்ந்து நாசிகள் யூதர்களை முற்றிலுமாகக் கொன்று குவிப்பதற்காக ‘இறுதித் தீர்வு’ எனும் கருத்தை முன்வைத்தனர்.

இரண்டாவது உலகப் போரின் போது ஜெர்மானியர்களால் ஆறு மில்லியன் யூத மக்கள் கொல்லப்பட்ட இன அழிப்பை விளக்குவதற்கு பேரழிவுப்படுகொலை (Holocaust) என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. ஹிட்லர் மற்றும் நாசிகளுடைய அரசியல் நிகழ்ச்சி நிரலின் முக்கிய அம்சங்களின் ஒன்று யூதர்களை அழிப்பதாகும். ஜெர்மனியில் சாதாரணமாகவும் சொல்லப்போனால் ஐரோப்பா முழுவதும் ஏற்கனவே நிலவிவந்த யூத எதிர்ப்பு உணர்வுகளை ஹிட்லர் பயன்படுத்திக் கொண்டார். யூதர்கள் ஐரோப்பா முழுவதிலும் சிதறிக்கிடந்தனர். அவர்களில் பலர் வணிகத்துறையிலும் கலைகளிலும் தொழிற்துறைகளிலும் புகழ்பெற்று விளங்கினர். வட்டித்தொழில் யூதர்களிடையே முக்கிய வணிக நடவடிக்கையாக இருந்தது. இது அவர்களுக்கு எதிரான வெறுப்பை மேலும் வலுவடையச் செய்தது. ஷேக்ஸ்பியரின் வெனிஸ் நகர வணிகர் (Merchant of Venice)

எனும் நாடகம் மக்களிடையே யூதர்களின் மீதிருந்த வெறுப்பையும் அவநம்பிக்கையையும் பிடித்துக் காட்டியது.

**மனித உரிமைப் பிரகடனம்:**

இத்தகையப் பேரழிவு நடைபெற்றபின், ஐக்கிய நாடுகள் சபை தன்னுடைய மனித உரிமை சாசனத்தில் இனம், பால், மொழி, மதம் ஆகிய வேறுபாடுகளின்றி அடிப்படைச் சுதந்திரமும் மனித உரிமைகளும் உலகளாவிய முறையில் கடைபிடிக்கப்படுவதை ஊக்குவிக்கப்போவதாக உறுதிமொழி மேற்கொண்டது. உலகளாவிய முறையில் மனித உரிமைகளைக் காப்பதற்காக ஐக்கிய நாடுகள் சபை மேற்கொண்ட முயற்சிகளின் விளைவாக மனித உரிமைகள் ஆணையம் உருவாக்கப்பட்டது. இவ்வமைப்பால் உருவாக்கப்பட்ட குழு ஒன்றுக்கு மறைந்த குடியசுத் தலைவர் பிராங்கிளின் ரூஸ்வெல்ட்டின் மனைவியார் எலினார் ரூஸ்வெல்ட் தலைமை வகித்தார். ஆணையக் குழுவில் உறுப்பினர்களாக சார்லஸ் மாலிக் (லெபனான்),P.C. சாங் (தேசியவாத சீனா), ஜான் ஹம்ப்ரி (கனடா), ரெனே காசின் (பிரான்ஸ்), ஆகியோர் இருந்தனர். மனித உரிமைகளின் உலகளாவிய பிரகடனம் 30 கட்டுரைகளில் அடிப்படை மனித உரிமைகளை முன் வைக்கிறது. 1948 டிசம்பர் 10 இல் ஐ.நா. சபை இந்த வரலாற்று சாசனத்தை ஏற்றுக் கொண்டது. இந்த நாள் (டிசம்பர் 10) உலகம் முழுவதும் மனித உரிமைகள் தினமாக கொண்டாடப்படுகிறது. இப்பிரகடனத்தைப் பின்பற்றி 1948 இல் தொடங்கி சுமார் 90 நாடுகளின் அரசியல் அமைப்புகளில் மனித உரிமைகள் தொடர்பான சரத்துக்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளதாக நியூயார்க்கிலுள்ள 'பிராங்கிளின் எலினார் ரூஸ்வெல்ட்' நிறுவனம் கூறுகிறது.

**இஸ்ரேல் நாட்டின் பிறப்பு:**

மேற்சொல்லப்பட்ட பேரழிவின் முக்கிய விளைவு யூத இன மக்களுக்கென இஸ்ரேல் எனும் நாடு உருவாக்கப்பட்டதாகும். வரலாற்று ரீதியாக, ரோமர்கள் காலத்திலிருந்து இதுவே இவர்களின் தாயகமாகும்.

**புதிய பன்னாட்டு ஒழுங்கமைவு:**

1941 இல் சுதந்திரமான அனைத்து உலக நாடுகளிடையே நிரந்தரமான அமைதியைப் பேணத் தேவைப்படும் பன்னாட்டு ஒத்துழைப்பு குறித்து அமெரிக்க ஐக்கிய நாடுகளும் பிரிட்டனும் தீவிர கவனம் செலுத்தத் தொடங்கின. பன்னாட்டுப் பொருளாதாரம். நிதி ஆகியவற்றின் நிலைத்த தன்மையும் முக்கிய நோக்கங்களாக இருந்தன. இப்பொது நோக்கங்களுக்கு, உலகத்தின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் இணைந்து செயல்படும் பன்னாட்டு அமைப்பு தேவைப்பட்டது. இம்முயற்சியின் இறுதியாக ஐக்கிய நாடுகள் சபை, உலக வங்கி. பன்னாட்டு நிதி அமைப்பு போன்றவையும் அனைத்து நாடுகள், சமூகங்கள் ஆகியவற்றின் முக்கிய அடிப்படை அம்சங்கள் குறித்து நடவடிக்கை மேற்கொள்ள, அவற்றின் துணை அமைப்புகளும் நிறுவப்பட்டன.

**ஐக்கிய நாடுகள் சபை:**

ஐக்கிய நாடுகள் சபை நிறுவப்படுவதற்கான முதல் முயற்சியை அமெரிக்க ஐக்கிய நாடுகளும் பிரிட்டனும் 1941 இல் அட்லாண்டிக் சாசனத்தின் வழியே வெளியிட்டன. ஐக்கிய நாடுகள் சபையின் பிரகடனம் 1942 இல் புத்தாண்டு தினத்தன்று, அச்சு நாடுகளுக்கு எதிராக (ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான்) போர் செய்துவந்த 26 நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஐக்கிய நாடுகள் சபையின் சாசனத்தில் 1945 ஆம் ஆண்டு, ஜூன் 26 ஆம் நாள் 51 நாடுகள் கையெழுத்திட்டன. இந்தியா அப்போது சுதந்திர நாடாக இல்லையென்பதால் சாசனத்தில் கையெழுத்திடவில்லை. தற்போது ஐக்கிய நாடுகள் சபை 193 உறுப்பு நாடுகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு நாடும் சிறியதோ அல்லது பெரியதோ, ஐக்கிய நாடுகள் சபையில் சமமான வாக்குகளை பெற்றுள்ளது.

"ஐக்கிய நாடுகள் சபையின் மக்களாகிய நாங்கள் எதிர்கால சந்ததியினரை போரின் துயரங்களிலிருந்துக் காப்போம் என உறுதி கூறுகிறோம். அது நம்முடைய வாழ்நாளில் இருமுறை மனிதகுலத்திற்குச் சொல்லமுடியாத துயரங்களைக் கொண்டுவந்துள்ளது. மேலும் அடிப்படை மனித உரிமைகள், மனிதப் பண்புகளைப் பெற்றுள்ள தனிநபர்களின் கண்ணியம், மதிப்பு, ஆணுக்கும் பெண்ணுக்கும், சிறிய நாட்டிற்கும் பெரிய நாட்டிற்கும் சம உரிமை ஆகியவற்றின் மீதான நம்பிக்கையை மீண்டும் உறுதி செய்வோம்" ஐக்கிய

நாடுகள் சபையின் முகவுரையிலிருந்து

**பொதுச்சபையும் பாதுகாப்பு அவையும் :**

ஐக்கிய நாடுகள் சபை ஏறத்தாழ ஏனைய அரசுகளைப் போலவே, அரசுக்குரிய சட்டமியற்றுதல், நிர்வகித்தல், நீதித்துறை போன்றவற்றிற்கு நிகரான அமைப்புகளோடு செயல்படுகிறது. பொதுச்சபை எனும் அமைப்பில் ஒவ்வொரு நாடும் பிரதிநிதித்துவப் படுத்தப்படுகின்றன. ஆண்டுக்கொருமுறை கூடும் இவ்வமைப்பில் நாடுகளின் நலன்சார்ந்த அம்சங்களும் முரண்பாடுகளுக்கான காரணங்களும் விவாதிக்கப்படுகின்றன.

பாதுகாப்பு சபையானது பதினைந்து உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. அமெரிக்க ஐக்கிய நாடுகள், பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா, சீனா ஆகிய நாடுகள் இச்சபையின் நிரந்தர உறுப்பினர்களாவர். ஏனைய பத்து உறுப்பினர்கள் சுழற்சி முறையில் தேர்ந்தெடுக்கப்படுவர். இவ்விரு சபைகளுமே ஒரு சட்டமன்றத்தைப் போலச் செயல்படுகின்றன. ஒவ்வொரு நிரந்தர உறுப்பினருக்கும் மறுப்பாணை அதிகாரம் உண்டு. எடுக்கும் எந்த முடிவையும் இதன் மூலம் தடுத்துவிடலாம். இவ்வதிகாரம் வல்லரசுகளால் குறிப்பாக அமெரிக்காவாலும் ரஷ்யாவாலும் முக்கிய முடிவுகளைத் தடுப்பதற்காகப் பயன்படுத்தப்படுகின்றது. மிக முக்கியமான அம்சங்களும் முரண்பாடுகளும் பாதுகாப்பு சபையில் விவாதிக்கப்படுகின்றன.

**நிர்வாக அமைப்பு:**

ஐக்கிய நாடுகள் சபையின் செயல்பாட்டு அங்கமாகத் திகழ்வது செயலகம் ஆகும். இதன் பொதுச் செயலாளர் பொதுச்சபையில், பாதுகாப்புச்சபையின் பரிந்துரையின்படி தேர்ந்தெடுக்கப்படுகிறார். பொதுச் செயலாளர் தனது காபினெட் உறுப்பினர்கள், ஏனைய அதிகாரிகள் ஆகியோரின் துணையோடு ஐக்கிய நாடுகள் சபையை நடத்துகிறார். பன்னாட்டு நீதிமன்றம் ஐக்கிய நாடுகள் சபையின் நீதி நிர்வாகக் கிளையாகும். இது நெதர்லாந்திலுள்ள தி ஹேக்கில் அமைந்துள்ளது. பொருளாதார மற்றும் சமூக மன்றம் (Economic and Social Council - ECOSOC) ஐக்கிய நாடுகள் சபையின் ஐந்தாவது அங்கமாகும். ஐக்கிய நாடுகள் சபை மேற்கொள்ளும் அனைத்துப் பொருளாதாரச் சமூகப் பணிகளை ஒருங்கிணைப்பது இவ்வமைப்பின் பணியாகும். உலகின் பல்வேறு பகுதிகளில் வட்டாரங்களின் வளர்ச்சிக்காக (ஆசியா பசிபிக், மேற்கு ஆசியா, ஐரோப்பா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்கா) பல வட்டார பொருளாதார ஆணையங்கள் செயல்படுகின்றன. அவைப் பொருளாதார மற்றும் சமூக மன்றத்தின் (ECOSOC) துணையமைப்புகளாகும். மிக வெற்றிகரமாகச் செயல்படும் இவற்றுக்கு பொருளாதார வல்லுநரான குன்னார் மிர்தால் போன்றோர் தலைமை ஏற்றிருக்கின்றனர்.

**ஐ.நா.வின் இதர முக்கியத் துணை அமைப்புகள்:**

ஐ.நாவின் துணை அமைப்புகள் உலகில் மிகவும் அக்கறை செலுத்தப்படவேண்டிய துறைகளான உணவு, சுகாதாரம், கல்வி, பண்பாடு ஆகியக் களங்களில் செயல்படுகின்றன. அவை உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (Food and Agricultural Organisation - FAO), உலக சுகாதார நிறுவனம் (World Health Organisation – WHO)ஐ.நா. கல்வி, அறிவியல் மற்றும் பண்பாட்டு அமைப்பு (UN Educational Scientific and Cultural Organisation – UNESCO) என்பனவாகும். இவை தவிர்த்து வேறுசில சிறப்பு நிறுவனங்கள் உறுப்புநாடுகளின் நிதி உதவியுடன் செயல்படுகின்றன. அவற்றில் நன்கு

அறியப்பட்ட இரண்டு அமைப்புகளில் முதலாவது ஐ.நா. குழந்தைகள் நிதி நிறுவனம் (United Nations Children's Fund - UNICEF) இது உலகம் முழுவதிலும் குழந்தைகளின் உடல் ஆரோக்கியத்தையும் ஏனைய நலன்களையும் முன்னெடுக்கப்பணிசெய்கிறது. மற்றொன்று ஐ.நா. வளர்ச்சி திட்டம் (United Nations Development Plan – UNDP). இது வளர்ச்சித் திட்டங்களில் கவனம் செலுத்துகிறது.

**ஐ.நா. வின் செயல்பாடுகள்:**

கடந்த பல பத்தாண்டுகளில் உலகம் எதிர்கொண்ட, மாறிவரும் பிரச்சனைகளுக்கு ஏற்றவாறு ஐக்கிய நாடுகள் சபை தனது செயல்பாடுகளை விரிவாக்கம் செய்துள்ளது. 1960 களில் காலனியாதிக்க நீக்கம் முக்கியப் பிரச்சனையாகும். மனித உரிமைகள், அகதிகள் பிரச்சனை, பருவகாலமாற்றம், பாலினச் சமத்துவம் ஆகியன தற்போது ஐக்கிய நாடுகள் சபையின் செயல்பாட்டு வளையத்தினுள் உள்ளன. மிகச்சிறப்பாகக் கட்டாயம் குறிப்பிடப்பட வேண்டியது ஐ.நா.வின் அமைதிப்படை உலகம் முழுவதிலும் மோதல்கள் அரங்கேறியப் பல்வேறு பகுதிகளில் அப்படை பணி செய்துள்ளது. அதன் முக்கியப் பகுதியாக உள்ள இந்திய இராணுவம் உலகின் பல்வேறு பகுதிகளில் பணியமர்த்தப்பட்டுள்ளது.

**உலக வங்கி:**

“பிரெட்டன் உட்ஸ் இரட்டையர்கள்” எனக் குறிக்கப்படும் உலக வங்கி, பன்னாட்டு நிதி அமைப்பு ஆகிய இரண்டும் 1944 இல் நடைபெற்ற பிரெட்டன் உட்ஸ் மாநாட்டிற்குப் பின் 1945 இல் நிறுவப்பட்டன. இவ்விரு நிறுவனங்களும் அமெரிக்காவில் வாஷிங்டன் நகரில் அமைந்துள்ளன. இரண்டுமே சம எண்ணிக்கையிலான உறுப்பினர்களைக் கொண்டுள்ளன. ஏனெனில் ஒரு நாடு பன்னாட்டு நிதிஅமைப்பில் உறுப்பினர் ஆகாமல் உலக வங்கியில் உறுப்பினராக முடியாது.

உலக வங்கியின் இரு முக்கிய அங்கங்கள் புனரமைப்பு மற்றும் வளர்ச்சிக்கானப் பன்னாட்டு வங்கி (International Bank for Reconstruction and Development - IBRD), மற்றொன்று பன்னாட்டு வளர்ச்சி முகமை (International Development Agency - IDA) ஆகும். இவையிரண்டுமே உலகவங்கி என்ற பெயரிலேயே குறிப்பிடப்படுகிறது. தொடக்க ஆண்டுகளில் IBRD யின் பணியானது போரினால் சீர்குலைந்துபோன ஐரோப்பிய நாடுகளில் புனரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்ட மார்ஷல் திட்டத்திற்கு நிதி வழங்குவதாய் அமைந்தது. பின்னர் இதன் செயல்பாடுகள் ஏழை நாடுகளின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவது, பல்வேறு நாடுகளின் வளர்ச்சித் திட்டங்களுக்கு கடன் வழங்குவது என விரிவடைந்தது. மேலும் பன்னாட்டு வளர்ச்சி முகமை வளர்ச்சிப் பணிகளுக்குத் தேவைப்படும் நிதியை அரசுகளுக்குக் கடனாக வழங்கியது. மிகக் குறைந்த வட்டிக்கு 50 ஆண்டு கால அளவிற்கு வழங்கப்பட்ட இக்கடன்கள் “மென் கடன்கள்”(Soft loans) என்றழைக்கப்பட்டன. பன்னாட்டு நிதி வாரியம் (International Finance Corporation – IFC) எனும் மற்றொரு அமைப்பு வளரும் நாடுகளிலுள்ள தனியார் நிறுவனங்களுடன் செயல்படுகிறது.

அண்மைக்காலங்களில் இவ்வங்கி ஆயிரமாண்டு வளர்ச்சி இலக்குகளை அடையும் சாதனைக்கான ஊக்குவிப்பை வழங்கிவருகிறது. மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துதல், கல்லாமையை இல்லாமலாக்குவது, பெண்களை வலிமையுள்ளவர்களாக ஆக்குதல், தாய் சேய் நல மேம்பாடு, சூழலியல் மேம்பாடு, எய்ட்ஸ் ஒழிப்பு ஆகியவையே இதன் வளர்ச்சி இலக்குகளாகும்.

**பன்னாட்டு நிதியமைப்பு (International Monetary Fund – IMF)**

பன்னாட்டு நிதியமைப்பானது அடிப்படையில் ஹேரி டேக்ஸ்டர் ஒயிட், ஜான் மேனார்டு கெய்ன்ஸ் எனும் புகழ்பெற்றப் பொருளாதார நிபுணர்களின் மூளையில் உதித்த குழந்தையாகும். இவ்வமைப்பு 1945 இல் 29 உறுப்புநாடுகளைக் கொண்டு முறையாக தொடங்கப்பெற்றது. தற்போது 189 நாடுகள் உறுப்புநாடுகளாக உள்ளன. இதனுடைய அடிப்படை நோக்கம் உலகம் முழுவதிலும் நிதி மற்றும் வளர்ச்சியின் நிலைத்த தன்மையை உறுதிப்படுத்துவதாகும். இதனுடைய முக்கிய நிகழ்ச்சிநிரல் பன்னாட்டளவில் நிதி சார்ந்த ஒத்துழைப்பை மேம்படுத்துவது, பன்னாட்டு வணிகத்தையும் நாணயச் செலாவணியையும் உறுதியாக வைத்திருத்தல் ஆகியவையாகும். இவ்வமைப்பு பணம் செலுத்துவதில் சமநிலைப் பிரச்சனைகளை (ஏனெனில் இந்நாடுகளால் தங்கள் இறக்குமதிகளுக்கு பணம் செலுத்த முடியவில்லை) சந்திக்கும் நாடுகளுக்குக் கடன் வழங்கும். ஆனால் கடன் வாங்கும் நாடுகள் மீது இவ்வமைப்பு வரவு செலவுத்திட்டங்களைச் சுருக்குதல், செலவுகளைச்

**பன்னாட்டு நிதியமைப்பின் (IMF) நோக்கங்கள்:**
உலக அளவில் நிதி சார்ந்த ஒத்துழைப்பைப் பேணுவது, நிதி நிலையை உறுதியானதாக

வைத்திருத்தல், பன்னாட்டு வணிகத்திற்கு வசதிகள் ஏற்படுத்திக் கொடுப்பது, வேலை வாய்ப்பினைப் பெருக்குவது, நீடித்தப் பொருளாதார வளர்ச்சி, உலகம் முழுவதிலும் வறுமையை ஒழிப்பது என்பனவாகும்.

சுருக்குதல் போன்ற கடுமையான நிபந்தனைகளைச் சுமத்துகிறது. இந்நடவடிக்கைகள் பெரும்பாலும் வளரும் நாடுகளால் விரும்பப்படுவதில்லை. ஏனெனில் மக்களுக்கு மானியம் வழங்கும் பல்வேறு திட்டங்களைக் கைவிட வேண்டிய சூழல் உருவாகிறது.

**போருக்குப்பின் ஐரோப்பாவில் மக்கள் நல அரசுகள்:**

மக்கள் நலஅரசு (Welfare State) எனும் சொற்றொடர், அரசாங்கமே மக்களின் சமூகப் பொருளாதார நலன்களுக்குப் பொறுப்பு என்ற கோட்பாட்டைக், குறிப்பதாகும். இவ்வாறு மக்களுக்குப் பாதுகாப்பு வழங்குவது, சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பது என்பதோடு இல்லாமல் அரசாங்கத்தின் பொறுப்பை மேலும் விரிவுபடுத்துவதாகும்.

1942 இல் பிரிட்டன் பொதுவாக பெவரிட்ஜ் அறிக்கை (Beveridge Report) என்றழைக்கப்பட்ட அறிக்கையை வெளியிட்டது. அவ்வறிக்கையில், பொது நலனுக்குப் பெருந்தடைகளாக உள்ள வறுமை, நோய் ஆகியவற்றை வெற்றிகொள்ள, பொதுமக்களுக்கு அதிக வருமானத்தை அளிப்பது, உடல் நலப்பாதுகாப்பு, கல்வி, வீட்டுவசதி, வேலைவாய்ப்பு ஆகியவற்றை வழங்கும் பல திட்டங்கள் தொகுப்பாக இடம் பெற்றிருந்தன.

போருக்குப் பின்னர் பிரிட்டனில் தொழிலாளர் கட்சி ஆட்சியமைத்தது. "தொட்டிலிலிருந்து கல்லறை வரை" மக்களைக் கவனித்துக்கொள்ளும் திட்டங்களை மேற்கொள்ளப்போவதாக அவ்வரசு உறுதியளித்தது. மக்களுக்கு விரிவான அளவில் தேசிய நலச் சேவையின் மூலம் இலவச மருத்துவ வசதி, முதியோர்க்கு ஓய்வூதியம், வேலையற்றோர்க்கு உதவித்தொகை போன்ற நிதியுதவிகள் குழந்தை நல சேவைகள், குடும்பநலச்சேவைகள் ஆகியவற்றை வழங்குவதற்காகப் பல சட்டங்கள் இயற்றப்பட்டன. அனைவருக்குமான இலவசப் பள்ளிக் கல்வி என்பதற்கு மேலாக இவையனைத்தும் அளிக்கப்பட்டன.

இத்திட்டங்களின் பலன்கள் முதியோர் ஓய்வூதியம், வேலையற்றோர்க்கான உதவித்தொகை ஆகியவற்றைப் பொறுத்த அளவில் பணப் பரிமாற்றத்தின் மூலமாகவும் ஏனைய நலன்கள், இலவசச் சேவைகள் மூலமாகவும் மக்களைச் சென்றடைந்தன. இவற்றிற்கு மேலாக இந்நாடுகளில் பொருளாதார ஏற்றதாழ்வுகளை குறைப்பதற்காக முற்போக்கு வரிவிதித்தலின் மூலம் அதிகமாக வருமானம் ஈட்டுவோர் மீது அதிகவரி விதிக்கப்பட்டது.

10ம் வகுப்பு

அலகு – 5

# 19ஆம் நூற்றாண்டில் சமூக, சமய சீர்திருத்த இயக்கங்கள்

**அறிமுகம்**

எழுத்தர்களை உருவாக்கும் நோக்கில் அறிமுகம் செய்யப்பட்ட ஆங்கிவக் கல்வி ஒரு புதிய ஆங்கிலக் கல்வி பயின்ற நடுத்தரவர்க்கத்தை உருவாக்கியது. இவ்வர்க்கம் மேற்கத்தியக் கருத்துக்களின், சிந்தனைகளின் தாக்கங்களுக்குள்ளானது. கல்வியறிவு பெற்ற இந்நடுத்தர வர்க்கம் எண்ணிக்கையில் சிறிதாக இருந்தாலும் அரசியலிலும், சீர்திருத்த இயக்கங்களிலும் தலைமைவகிக்கத் தொடங்கியது. இருந்தபோதிலும் இந்தியச் சீர்திருத்தவாதிகள் தங்களுடையப் பழைய கருத்துக்களையும் பழக்கவழக்கங்களையும் விமர்சனபூர்வமான ஆய்வுக்கு உட்படுத்தப் பெரிதும் தயங்கினர். அதற்குப்பதிலாக அவர்கள் இந்தியப் பண்பாட்டிற்கும் மேலைப் பண்பாடுகளுக்குமிடையே இணக்கத்தை ஏற்படுத்த முயன்றனர். இருந்தபோதிலும் அவர்களுடைய கருத்துகளும் செயல்பாடுகளும் உடன்கட்டை ஏறுதல் (சதி) பெண் சிசுக்கொலை, குழந்தைத் திருமணம் போன்ற அனைத்து வகையான கண்மூடித்தனமான மதநம்பிக்கைகள் மற்றும் சமூகத்தீமைகளை கட்டுப்படுத்த உதவியது. புத்தொன்பதாம் நூற்றாண்டின் சமயம் சார்ந்த சீர்திருத்த இயக்கங்களை இரண்டாக வகைப்படுத்தலாம். பிரம்ம சமாஜம், பிரார்த்தனை சமாஜம், அலிகார் இயக்கம் போன்ற சீர்திருத்த இயக்கங்கள் ஒருவகை, ஆரியசமாஜம், ராமகிருஷ்ணா மிஷன், தியோபந்த் இயக்கம் போன்ற சமயப் புத்தெழுச்சி மீட்டெடுப்பு இயக்கங்கள் மற்றொருவகை. இவைகளைத்தவிர ஒடுக்குமுறைப்பாங்குடைய சமூகக்கட்டமைப்பை எதிர்க்கும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. புனேயில் ஜோதிபா பூலே, கேரளாவில் நாராயணகுரு, அய்யங்காளி, தமிழகத்தில் ராமலிங்க அடிகள், வைகுண்ட சுவாமிகள், அயோத்திதாசர் ஆகியோர் இவ்வகைப்பட்டோராவர்.

**வங்காளத்தில் தொடக்கக் கால சீர்திருத்த இயக்கங்கள்**

**(அ) ராஜா ராம்மோகன் ராய், பிரம்ம சமாஜம்**

ராஜா ராம்மோகன் ராய் (1772-1833) மேலைநாட்டுக் கருத்துக்களால் கவரப்பட்டு, சீர்திருத்தப்பணிகளை முன்னெடுத்த தொடக்ககாலச் சீர்திருத்தப்பணிகளை முன்னெடுத்த தொடக்ககாலச் சீர்திருத்த வாதிகளில் ஒருவராவார். பெரும் அறிஞரான அவர், தனதுத் தாய்மொழியான வங்காள மொழியில் புலமை பெற்றிருந்ததோடு சமஸ்கிருதம், அரபி, பாரசீகம், ஆங்கிலம் ஆகிய மொழிகளிலும் புலமை பெற்றிருந்தார். ராஜா ராம்மோகன் ராய் பொருளற்றற சமயச்சடங்குகளையும், கேடுகளை விளைவிக்கும் சமூக மரபுகளையும் எதிர்த்தார். இருந்த போதிலும் கடந்த காலத்துடனான தொடர்பை அவர் பாதுகாக்க விரும்பினார். தன்னுடைய சமய, தத்துவ சமூகப்பார்வையில் அவர் ஒருகடவுள் கோட்பாடு, உருவவழிபாடு எதிர்ப்பு போன்ற கருத்துக்களின் தாக்கத்தைப் பெற்றிருந்தார். உபநிடதங்களுக்குத் தான்கொடுத்த விளக்கங்களின் அடிப்படையில் இந்துக்களின், மறைநூல்கள் அனைத்தும் ஒருகடவுள் கோட்பாட்டை அல்லது ஒரு கடவுளை வணங்குவதை உபதேசிப்பதாகக் கூறினார்.

சமூகத்தில் நிலவிவரும் உடன்கட்டை ஏறுதல் (சதி) குழந்தைத் திருமணம், பலதார மணம் போன்ற மரபு சார்நத பழக்கங்கள் குறித்து பெரிதும் கவலை கொண்ட அவர், அவற்றிற்கு எதிராகச் சட்டங்கள் இயற்றும்படி ஆங்கில அரசாங்கத்திற்கு விண்ணப்பித்தார். விதவைப்பெண்கள் மறுமணம் செய்துகொள்ள உரிமை உடையவர்கள் எனும் கருத்தை முன்வைத்தார். பலதார மணத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டுமென்றார். அவருடைய கருத்துகளைப் பழமைவாத இந்துக்கள் எதிர்த்தனர். மக்களைப் பகுத்தறிவோடும், பரிவோடும், மனிதப் பண்போடும் இருக்கும்படி

வேண்டுகோள்விடுத்தார். கல்கத்தாவின் இடுகாடுகளுக்குச் சென்று விதவைகளின் உறவினர்களிடம் உடன்கட்டை ஏறும் வழக்கத்தைக் கைவிடும்படி வேண்டிக் கேட்டுக்கொண்டார். 1829இல் தலைமை ஆளுநர் வில்லியம் பெண்டிங் 'சதி' எனும் உடன்கட்டையேறும் பழக்கத்தை ஒழித்துச் சட்டம் இயற்றியதில் ராஜாராம் மோகன் ராய் முக்கிய பங்கு வகித்தார்.

ராம்மோகன் ராய் பெண்ணடிமைத்தனத்தைக் கண்டனம் செய்தார். ஆண்களை பெண்களை கீழானவர்களாக நடத்தும் அன்றையகால நடைமுறையை எதிர்த்தார். பெண்களுக்குக் கல்வி வழங்கப்படவேண்டும் எனும் கருத்தை வலுவாக முன்வைத்தார். பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் ஆங்கிலக்கல்வியும் மேலை நாட்டு அறிவியலும் அறிமுகம் செய்யப்படுவதை முழுமையாக ஆதரித்தார். உபநிடதங்கள் எல்லையற்ற ஆதி அந்தமில்லாத தெய்வீகமான பிரம்மம் குறித்த செய்திகளைப் பேசுகையில், தனது அன்றாட வாழ்வில், தம்மைச் சுற்றித் தான்பார்க்கும் இந்துமதம் உபநிடதங்களின் போதனைகளிலிருந்து முரண்பட்டிருப்பதை அவர் உணர்ந்தார்.

ராஜா ராம்மோகன் ராய் 1828 பிரம்ம சமாஜத்தை நிறுவி ஆகஸ்டு 20ஆம் நாள் கல்கத்தாவில் ஒரு கோவிலை நிறுவினார். அக்கோவிலில் திருவுருவச் சிலைகள் எதுவும் வைக்கப்படவில்லை. இங்கு எந்த ஒரு மதத்தையும் ஏளனமாகவோ, அவமானமாகவோப் பேசக்கூடாது அல்லது மறைமுகமாகக் குறிப்பிடப்படலாகாது என எழுதிவைத்தார். பிரம்ம சமாஜம் உருவவழிபாட்டை தவர்த்ததோடு பொருளற்ற சமயச் சடங்குகளையும் சம்பிரதாயங்களையும் எதிர்த்தது. இருந்தபோதிலும் தொடக்கம் முதலாக பிரம்ம சமாஜத்தின் கருத்துக்கள் கற்றறிந்த மேதைகள், கல்வியறிவு பெற்ற வங்காளிகள் என்ற அளவில் மட்டுமே செயல்பட்டது. சமூகத்தின் கீழ்த்தட்டு மக்களைத் தன்பால் ஈர்ப்பதில் சமாஜம் தோல்வியடைந்தாலும், நவீன வங்காளப் பண்பாட்டு மற்றும் நடுத்தர வர்க்கத்தின் மீதான அதனுடைய தாக்கம் மிகவும் போற்றுதலுக்குரியதாகும்.

**(ஆ) மகரிஷி தேவேந்திரநாத் தாகூர்**

ராஜா ராம்மோகன் ராய் 1833 இல் இயற்கையெய்திய பின்னர் அவர் விட்டுச்சென்றப் பணிகளை, கவிஞர் ரவீந்திரநாத் தாகூரின் தந்தையரான தேவேந்திரநாத் தாகூர் (1817-1905) தொடர்ந்தார். அவர் நம்பிக்கை பற்றிய நான்கு கொள்கைக்கூறுகளை முன்வைத்தார்.

1. தொடக்கத்தில் எதுவுமில்லை, எல்லாம் வல்ல ஒரு கடவுள் மட்டுமே உள்ளார். அவரே இவ்வுலகத்தைப் படைத்தார்.
2. அவர் ஒருவரே உண்மையின், எல்லையற்ற ஞானத்தின், நற்பண்பின், சக்தியின் கடவுளாவார். அவரே நிலையானவர், எங்கும் நிறைந்திருப்பவர். அவருக்கிணையாருமில்லை.
3. நம்முடைய வீடுபேறு, இப்பிறவியிலும் அடுத்தபிறவியிலும் அவரை நம்புபவரையும் அவரை வணங்குவதையும் சார்ந்துள்ளது.
4. அவரை நம்புவதன்பது, நேசிப்பதிலும் அவர் விருப்பத்தைச் செயல்படுத்துவதிலும் அடங்கியுள்ளது.

**(இ) கேசவ் சந்திர சென்னும் இந்தியாவின் பிரம்ம சமாஜமும்**

தேவேந்திரநாத் மிதவாதச் சீர்திருத்தவாதியாவார். ஆனால் சமாஜத்தில் அவருடன் பணியாற்றிய இளையவர்கள் விரைவான மாற்றங்களையே விரும்பினர். அவர்களுள் மிக முக்கியமானவரான கேசவ் சந்திர சென் (1838-84), 1857 இல் சபையில் இணைந்தார். கிறித்தவமதத்தால் பெருமளவில் கவரப்பட்ட அவர் கிறித்தவமதத்தின் சாரத்தை நம்பினார். 1886இல் பிரம்மசமாஜத்தின் உறுப்பினர்களிடையே பிளவு ஏற்பட்டதால் கேசவ் சந்திர சென் சமாஜத்திலிருந்து விலகி புதிய அமைப்பொன்றை உருவாக்கினார். இதன்பின்னர் தேவேந்திரநாத் தாகூரின் அமைப்பு

‘ஆதி பிரம்ம சமாஜம்’ என அழைக்கப்படலாயிற்று. குழந்தைத் திருமணத்தை சமாஜம் கண்டனம் செய்திருந்தபோதும் அதற்குமாறாக கேசவ் சந்திர சென் தனது பதினான்குவயது மகளை இந்திய இளவரசன் ஒருவருக்குத் திருமணம் செய்தி கொடுத்தபோது, குழந்தைத் திருமணத்தை எதிர்தோர் இந்தியாவின் பிரம்ம சமாஜத்திலிருந்து விலகி சாதாரண சமாஜ் எனும் அமைப்பை நிறுவினர். இவ்வமைப்பு கிறித்தவ எதிர்ப்பு மனப்பாங்கினை வளர்த்தது.

**(ஈ) ஈஸ்வர் சந்திர வித்யாசாகர்**

வங்காளத்தைச் சேர்ந்த மற்றொரு முதன்மையான சீர்திருத்தவாதி ஈஸ்வரி சந்திர வித்யாசாகர் (1820-1891) ஆவார். ராஜா ராம்மோகன் ராயும் மற்றவர்களும் சமூகத்தைத் திருத்தவதற்கு மேலைநாட்டுப் பகுத்தறிவுச் சிந்தனைகளின் துணையை நாடியபோது வித்யாசாகர் இந்து மறை நூல்களே முற்போக்கானவை என வாதிட்டார். விதவைகளை எரிப்பதும் விதவை மறுமணத்தைத் தடைசெய்வதும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்பதற்கு மறை நூல்களிலிருந்தே சான்றுகளை முன்வைத்தார். அவர் தனது கருத்துக்களுக்கு ஆதரவான வாதங்களைக் கொண்ட சிறுநூலடகளை வெளியிட்டார். அவர் நவீன வங்காள உரைநடையின் முன்னோடியாவார். பெண்கல்வியை மேம்படுத்துவதில் முக்கியப்பங்காற்றிய அவர் பெண்களுக்கான பள்ளிகள் நிறுவப்பட உதவிகள் செய்தார். இந்து சமூகத்தில் குழந்தைப் பருவத்திலேயே விதவைகளான சிறுமிகளின் வாழ்வை மேம்படுத்துவதற்காகவே தனது முழுவாழ்வையும் அர்பணித்தார். பண்டித ஈஸ்வர் சந்திர வித்யாசாகர் தலைமையேற்ற இயக்கத்தின் விளைவாய் 1856இல் மறுமண சீர்திருத்தச் சட்டம் (விதவைகள் மறுமணச் சட்டம்) இயற்றப்பட்டது. இச்சட்டம் குழந்தை விதவைகளின் நிலையை மேம்படுத்துவதையும் நிரந்தரமாக விதவையாய் இருக்கவேண்டிய ஆபத்திலிருந்து அவர்களைக் காப்பாற்றுவதையும் நோக்கமாகக் கொண்டிருந்தது.

1860இல் முதல்முறை திருமண வயதுச் சட்டம் இயற்றப்பட்டது. அப்பெருமை ஈஸ்வர் சந்திர வித்யாசாகரையேச் சாரும். திருமணத்திற்கான வயது பத்து என்று நிர்ணயம் செய்யப்பட்டது. அது 1891இல் பன்னிரெண்டாகவும், 1925இல் பதிமூன்றாகவும் உயர்த்தப்பட்டது. ஆனால் கவலைக்குரிய விதத்தில் திருமண வயது ஒப்புதல் கமிட்டி (1929) கூறியபடி இச்சட்டம் காகிதத்தில் மட்டுமேயிருந்தது. நீதிபதிகளும், வழக்கறிஞர்களும் ஒருசில படித்த மனிதர்களுமே அதனைப்பற்றிய அறிவைப் பெற்றிருந்தனர்.

**(உ) பிரார்த்தனை சமாஜம்**

மகாராஷ்டிரப் பகுதியானது சீர்திருத்த நடவடிக்கைகளுக்கு ஆதரவு கிடைக்கப்பெற்ற மற்றொரு பகுதியாகும். பிரம்ம சமாஜத்துக்கிணையாக பம்பாயில் 1867இல் நிறுவப்பட்ட அமைப்பே பிரார்த்தனை சமாஜம். இதனை நிறுவியவர் ஆத்மராம் பாண்டுரங் (1825-1898) ஆவார். இந்த சமாஜத்தின் இரண்டு மேன்மைமிக்க உறுப்பினர்கள் R.C பண்டர்கர், நீதிபதி மகாதேவ் கோவிந்த் ரானடே ஆகிய இருவருமாவர். இவ்விருவரும் சாதிமறுப்பு, சம்பந்தி, சாதிமறுப்புத் திருமணம், விதவை மறுமணம், பெண்கள் மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களின் முன்னேற்றம் போன்ற நடவடிக்கைகளுக்காகத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்களாவர். மகாதேவ் கோவிந்த் ரானடே (1842-1901) விதவை மறுமணச் சங்கம் (1861) புனே சர்வஜனிக் சபா (1870) தக்காணக் கல்விக்கழகம் (1884) ஆகிய அமைப்புகளை நிறுவினார்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள சீர்திருத்தவாதிகள் மேல்சாதியினர்க்கிடையேப் பணியாற்றிய அதேவேளையில் ஜோதிபா பூலே ஒடுக்கப்பட்ட மக்களின், பெண்களின் மேம்பாட்டிற்காகப் பணியாற்றினார். அவருடைய புத்தகமான குலாம்கிரி (அடிமைத்தனம்) ஒரு முக்கிய நூலாகும். அந்நூல் சாதிய ஏற்றதாழ்வுகளைக் கண்டனம் செய்தது.

## இந்து புத்தெழுச்சி இயக்கம்

### (அ) சுவாமி தயானந்த சரஸ்வதி மற்றும் ஆரியசமாஜம் 1875

பஞ்சாபில், ஆரியசமாஜம் சீர்திருத்த இயக்கங்களுக்குத் தலைமையேற்றது. இவ்வமைப்பு மேலைகங்கைச்சமவெளியில் அலைந்துதிரிந்து கொண்டிருந்த சுவாமி தயானந்த சரஸ்வதி (1824-83) என்பவரால் நிறுவப்பட்டது. சுவாமி தயானந்தர் பின்னர் தனது கருத்துகளைப் போதிப்பதற்காகப் பஞ்சாபில் தங்கினார். அவருடைய நூலான ‘சத்யார்த்தபிரகாஷ்’ பெரும்பாலோரால் படிக்கப்பட்டது. குழந்தைத் திருமணம், விதவை மறுமணத்திற்கு மறுப்பு போன்ற பழக்கங்களும் அயல்நாடு சென்றால் தீட்டு என்று சொல்லப்படுதலும் மறைநூல்களால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என அறிவித்தார். அவர் முன்வைத்த நேர்மறையான கொள்கைகள் கட்டுப்பாடான ஒருகடவுள் வழிபாடு, உருவ வழிபாட்டை நிராகரித்தல், பிராமணர் மேலாதிக்கம் செலுத்தும் சடங்குகள், சமூகநடைமுறைகள் ஆகியவற்றை மறுத்தல் என்பனவாகும். ஆரியசமாஜம் இந்து மதத்திலிருந்த மூடநம்பிக்கைகளைக் குறிப்பாகப் புராண இலக்கியங்களை மறுத்தது. அதனுடைய முழக்கம் ‘வேதங்களுக்குத் திரும்புவோம்’ என்பதாகும்.

ஆரியசமாஜம் பிரிட்டிஷ் இந்தியாவில் நடைபெற்றுக் கொண்டிருந்த மதமாற்ற நடவடிக்கைகளை நிறுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டது. அதன் முக்கியக் குறிக்கோள் ‘எதிர்மத மாற்றம் என்பதாகும்’. ஏற்கனவே இஸ்லாமுக்கும் கிறித்தவ மதத்திற்கும் மாறிய இந்துக்களை மீண்டும் இந்துக்களாக மாற்ற ‘சுத்தி (Suddhi)’ எனும் சுத்திகரிப்புச் சடங்கை சமாஜம் வகுத்துக்கொடுத்தது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கப்பகுதியும் பிரிக்கப்படாத பஞ்சாபில் குழப்பமான இந்து, இஸ்லாம் கிறித்தவ சமயங்களிடையேத் தீவிரமான சர்ச்சைகள் நடந்த காலப்பகுதியாக விளங்கியது.

ஆரியசமாஜம் சமூக சீர்திருத்தக்களத்திலும் கல்வியைப்பரப்பும் பணியிலும் முக்கிய சாதனைகள் புரிந்தது. சமாஜம் பல தயானந்தா ஆங்கிலோ-வேதப் பள்ளிகளையும் கல்லூரிகளையும் உருவாக்கியது.

1983இல் இவ்வியக்கம் தூய்மைக்கோட்பாடு குறித்தக் கருத்து முரண்பாட்டால் இரண்டாகப் பிரிந்தது. தயானந்த சரஸ்வதிக்குப் பின்னர் பொறுப்பேற்ற வசீகர ஆளுமை கொண்ட சுவாமி ஸ்ரத்தானந்தா (1857-1926) DAV பள்ளிகளை நடத்திக்கொண்டிருந்த குழுவினரை நிறுவினரின் தத்துவத்தைப் புறக்கணித்து மிக அதிகமான அளவில் மேற்கத்திய சிந்தனைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதாகக் குற்றம்சாட்டினார். 1900 முதலாக அவரேப் பல பள்ளிகளை (குருகுலம்) நிறுவினார். வெளித்தோற்றத்தில் அவை பண்டைய இந்துக்கல்விக்கூட பாணியில் இருந்தன. அங்கு வேதக்கல்விக்கு முக்கியத்தவம் வழங்கப்பட்டது.

### (ஆ) இராமகிருஷ்ண பரமஹம்சர்

நாம் ஏற்கனவே பார்த்தவாறு, கிறித்தவர்களின், பகுத்தறிவுவாதிகளின் விமர்சனங்களுக்குப் பதிலளிக்கும் விதமாக பிரம்ம சமாஜம் உருவ வழிபாட்டையும் இந்துக்களின் ஏனையப் பழமையான நடைமுறைகளையும் விமர்சனம் செய்தது. கல்கத்தாவுக்கு அருகேயிருந்த தட்சிணேசுவரம் என்னும் ஊரைச்சார்ந்த எளிய அர்ச்சகரான ராமகிருஷ்ண பரமஹம்சர் (1836-1886) பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் பெற்ற புகழ் இதற்கான மனமுருகிப் பாடுவதைப்போன்ற வழிமுறைகள்

மூலம் பேரின்ப நிலையை அடைந்து அந்நிலையில் ஆன்மரீதியாக கடவுளோடு ஒன்றிணைவதற்கு அவர் முக்கியத்தவம் கொடுத்தார். புனிதத்தாயான கடவுள் காளியின் தீவிர பக்தரான அவர் அக்கடவுளின் திருவிளையாடல்கள் முடிவற்றவை என அறிவித்தார். அவருடைய கருத்தின்படி அனைத்து மதங்களும் உலகாளவிய, எல்லோருக்குமான மூலக்கூறுகளைக் கொண்டுள்ளன. அவற்றைப் பின்பற்றினால் அவை வீடபேற்றுக்கு இட்டுச்செல்லும். 'ஜீவன்' என்பதே 'சிவன்' எனவும் அவர் கூறினார் (வாழ்கின்ற அனைத்து உயிர்களும் இறைவனே). பின்னர் அவைகளின் மேல் இரக்கம் காட்டுங்கள் என யார் சொல்வது? இரக்கம் தேவையில்லை; சேவையே தேவை; மனதிர்களுக்குச் செய்யப்படும் சேவையே கடவுளுக்குச் செய்யப்படும் சேவையாகும் என்றார்.

**ராமகிருஷ்ணா மிஷன்**

ராமகிருஷணருடைய முதன்மையான சாதனையே, பிரம்மசமாஜம் போன்ற சீர்திருத்த அமைப்புகள் முன்வைத்தப் பகுத்தறிவுக் கருத்துகளின்பால் அதிருப்தியுற்ற கல்வியறிவு பெற்ற இளைஞர்களைத் தன்பால் ஈர்த்ததுதான். 1886இல் அவர் இயற்கை எய்திய பின்னர் அவருடைய சீடர்கள் தங்களை ஒரு மதம்சார்ந்த சமூகமாக அமைத்துக்கொண்டு ராமகிருஷ்ணரையும் அவரின் போதனைகளையும் இந்தியாவிலும் உலகின் ஏனைய பகுதிகளிலும் பரப்பும் பெரும்பணியை மேற்கொண்டனர். இப்பெரும்பணியின் பின்புலமாய் இருந்தவர் சுவாமி விவேகானந்தர். கிறித்தவசமயப் பரப்பு நிறுவனங்களின் நிர்வாகக் கட்டமைப்பைப் பின்பற்றி விவேகானந்தர் ராமகிருஷ்ணா மிஷனை நிறுவினார். ராமகிருஷ்ணா மிஷன் சமயச் செயல்பாடுகளோடு மட்டும் தனதுப்பணிகளை நிறுத்திக்கொள்ளவில்லை. மக்களுக்குக் கல்வியறிவு வழங்குவது. மருத்துவ உதவி, இயற்கைச் சீற்றங்களின்போது நிவாரணப்பணிகளை மேற்கொள்வது போன்ற சமூகப்பணிகளிலும் செயலூக்கத்துடன் ஈடுபட்டது.

**(இ) சுவாமி விவேகானந்தர்**

பின்னாளில் சுவாமி விவேகானந்தர் என்றழைக்கப்பட்ட நரேந்திரநாத் தத்தா (1863-1902) ராமகிருஷ்ண பரமஹம்சருடைய முதன்மைச்சீடராவார். புடித்த இளைஞரான அவர் ராமகிருஷ்ணரின் கருத்துகளால் கவரப்பட்டார். மரபுசார்ந்த தத்துவ நிலைப்பாடுகளில் மனநிறைவு பெறாத அவர், நடைமுறை வேதாந்தமான மனிதகுலத்திற்குத் தொண்டுசெய்தல் எனும் கோட்பாட்டைப் பரிந்துரைத்தார். மதத்தோடு தொடர்புடையது எனும் ஒரே காரணத்திற்காக அனைத்து நிறுவனங்களையும் பாதுகாக்கும் மனப்பாங்கினை அவர் கண்டனம் செய்தார். பண்பாட்டுத் தேசியத்திற்கு முக்கியத்துவம் கொடுத்த அவர் இந்து சமூகத்திற்குப் புத்துயிரளிக்க இந்திய இளைஞர்களுக்கு அறைகூவல் விடுத்தார். அவருடைய சிந்தனைகள், பொருள் உற்பத்தியில் மேலைநாடுகள் செய்திருந்த சாதனைகளைக் கண்டு தாழ்வுமனப்பான்மை கொண்டிருந்த இந்தியர்களுக்கு தன்னம்பிக்கையூட்டுவதாய் அமைந்தது. 1893இல் சிகாகோவில் நடைபெற்ற உலக சமய மாநாட்டில் இந்து சமயம் பற்றியும் பக்திமார்க்கத் தத்துவம் குறித்தும் அவராற்றிய சொற்பொழிவுகள் அவருக்குப் பெரும்புகழ் சேர்த்தது. இந்து சமயச்சடங்குகளில் கலந்துகொள்ளக்கூடாதென ஒதுக்கிவைக்கப்பட்டிருந்த ஒடுக்கப்பட்ட மக்களும் அதுபோன்ற சடங்குகளில் கலந்துகொள்ளக்கூடாதென ஒதுக்கிவைக்கப்பட்டிருந்த ஒடுக்கப்பட்ட மக்களும் அதுபோன்ற சடங்குகளில் கலந்துகொள்ளக் கட்டாயம் அனுமதிக்கப்பட வேண்டும் என்றார். விவேகானந்தரின் செயலாக்கமிக்க கருத்துகள் மேற்கத்தியக் கல்வி பயின்ற வங்காள இளைஞர்களிடையே அரசியல் மாற்றங்களுக்கான நாட்டத்தை ஏற்படுத்தியது. வங்கப்பிரிவினையைத் தொடர்ந்து நடைபெற்ற சுதேசி இயக்கத்தின் போது இளைஞர்களில் பலர் விவேகானந்தரால் ஊக்கம் பெற்றனர்.

**(ஈ) பிரம்மஞான இயக்கம்**

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்துசமயமும் பண்பாடும், குறிப்பாகக் கிறித்துவ சமயப்பரப்பு நிறுவனங்களின் பரப்புரைகளால் ஐரோப்பாவில் மதிப்பிழந்து கொண்டிருந்தன. இச்சந்தர்ப்பத்தில் ஒருசில மேலைநாட்டு அறிவுஜீவிகள் பொருள் சார்ந்த மேலை உலக வாழ்க்கைக்குத் தீர்வாக ஆன்மீக முக்திக்காகக் கிழக்கை எதிர்நோக்கினார். இதில் மேடம் H.P. பிளாவட்ஸ்கி (1831-1891) மற்றும் கர்னல் H.S. ஆல்காட் (1832-1907) ஆகியோரால் நிறுவப்பெற்ற பிரம்மஞானசபை முக்கியப்பங்கு வகித்தது. 1857இல் அமெரிக்காவில் நிறுவப்பட்ட இவ்வமைப்புப் பின்னர் 1886இல் இந்தியாவில் சென்னை அடையாறுக்கு மாற்றப்பட்டது.

பிரம்மஞானசபை இந்து செவ்வியல் நூல்களைக் குறிப்பாக உபநிடதங்கள், பகவத்கீதை ஆகியவற்றைப் படிப்பதற்கு உற்சாகமூட்டியது. இந்தியாவில் பௌத்தம் புத்துயிர் பெறுவதில் பிரம்மஞானசபை முக்கியப் பங்காற்றியது. இந்து மறைநூல்களின் மீது மேலைநாட்டவர் காட்டிய ஆர்வம், படித்த இந்தியர்களிடையே தங்கள் பாரம்பரியம், பண்பாடு குறித்த அளப்பரியப் பெருமிதத்தை ஏற்படுத்தியது.

**அன்னிபெசன்ட்டின் பங்களிப்பு**

ஆல்காட்டின் மறைவுக்குப் பின்னர் இவ்வமைப்பின் தலைவராக அன்னி பெசன்ட் (1847-1933) தேர்ந்தெடுக்கப்பட்டதைத் தொடர்ந்து இவ்வியக்கம் மேலும் செல்வாக்குப் பெற்றது. இந்திய தேசிய அரசியலில் முக்கியத்தவம் பெற்ற அவர் தன்னாட்சி இயக்கச் சங்கத்தை அமைத்து அயர்லாந்திற்கு வழங்கப்பட்டதைப் போல இந்தியாவிற்கும் தன்னாட்சி வழங்கப்பட வேண்டுமென்று கோரிக்கை வைத்தார் அன்னிபெசன்ட் பிரம்மஞானக் கருத்துக்களைத் தன்னுடைய நியூ இந்தியா (New India), காமன்வீல் (Commonweal) எனும் செய்தித்தாள்களின் மூலம் பரப்பினார்.

**சாதி எதிர்ப்பு இயக்கங்கள்**
**(அ) ஜோதிபா பூலே**

ஜோதிபா பூலே 1827இல் மகாராஷ்டிராவில் பிறந்தார். முக்கியமாக அவர் பிராமண எதிர்ப்பியக்கத்தின் தொடக்ககாலத் தலைவரென்றே அறியப்படுகிறார். அவர் 1852ஆம் ஆண்டு ஒடுக்கப்பட்டோருக்கான முதல் பள்ளியை புகேயில் திறந்தார். சத்தியசோதக் சமாஜ் (உண்மையை நாடுவோர் சங்கம்,Truth Seekers Society) எனும் அமைப்பை, பிராமணரல்லாத மக்களும் சுயமரியாதையோடும், குறிக்கோளோடும் வாழத் தூண்டுவதற்காய் நிறுவினார். பூலே குழந்தைத் திருமணத்தை எதிர்த்தார். விதவை மறுமணைத்தைக் குறிப்பாக மறுமணம் மறுக்கப்பட்ட உயர்சாதி இந்துக்களின் மறுமணத்தை ஆதரித்தார். ஜோதிபாவும் அவருடைய மனைவி சாவித்திரிபாயும் ஒடுக்கப்பட்ட மக்களின், பெண்களின் முன்னேற்றத்திற்காகத் தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்தனர். ஜோதிபா பெற்றோரில்லா குழந்தைகளுக்கென்று விடுதிகளையும் விதவைகளுக்கென காப்பகங்களையும் உருவாக்கினார். தன்னுடைய சமகால தேசியவாதிகளைப் போலல்லாமல் பூலே ஆங்கிலேய ஆட்சியையும் சமயப் பரப்பாளர்களின் செயல்பாடுகளையும் ஆதரித்தார். அவை ஒடுக்கப்பட்ட சாதியினரைப் பிராமணர்களின் மேலாதிக்கத்தை எதிர்க்கத் துணைநிற்கும் எனும் நிலைப்பாட்டை வரவேற்றார். மிக முக்கியமாக அவர் எழுதிய நூலான ‘குலாம்கிரி’ (அடிமைத்தனம்) அவருடையப் பெரும்பாலான தீவிரக்கருத்துக்களைச் சுருக்கிக் கூறுகிறது.

### (ஆ) நாராயண குரு

1854இல் கேரளாவில் ஏழைப்பெற்றோர்க்கு மகனாகப் பிறந்த நாராயண குரு (1854-1928) மலையாளம், சமஸ்கிருதம், தமிழ் ஆகிய மொழிகளில் அறிஞராகவும் கவிஞராகவும் திகழ்ந்தார். அந்நாட்களில் ஒடுக்கப்பட்ட மக்கள் கோவில்களுக்கும் உயர்சாதி மக்கள்வாழும் தெருக்களுக்கும் செல்லமுடியாது. பொது நீர்நிலைகளிலோ, கிணறுகளிலோ நீரெடுக்க முடியாது. ஒடுக்கப்பட்ட சாதிகளைச்சேர்ந்த ஆண்களும் பெண்களும் மேலாடையணிய அனுமதிக்கப்படவில்லை. பயங்கரமான சாதிக் கொடுமைகளையும், ஒடுக்கப்பட்ட மக்கள்படும் துயரங்களையும் கண்டு மனம்வெதும்பிய அவர் அம்மக்களின் மேம்பாட்டிற்காகத் தனது வாழ்க்கை முழுவதையும் அர்ப்பணித்தார். அவர்களின் மேம்பாட்டிற்குப் பணியாற்றுவதற்காக ஸ்ரீ நாராயண தர்ம பரிபாலன யோகம் எனும் அமைப்பை உருவாக்கினார். அருவிபுரம் எனும் ஊரில் ஒரு பெரிய கோவிலைக்கட்டிய அவர் அதை அனைவருக்கும் அர்ப்பணித்தார். அவருடைய இயக்கம் கேரள சமூகத்தில் குறிப்பாக ஈழவர்களுக்கிடையில் பெரும்மாற்றங்கள் நிகழ உந்து சக்தியாய்த் திகழ்ந்தது. குமாரன் ஆசான், டாக்டர் பால்பு போன்ற சிந்தனையாளர்களும் கவிஞர்களும் இவருடைய சிந்தனைகளால் தூண்டப்பெற்று இயக்கத்தை முன்னெடுத்துச் சென்றனர்.

### (இ) அய்யன்காளி

பத்தொன்பதாம் நூற்றாண்டில் கேரளம் படுமோசமான சாதியப்பாகுபாடுகளால் பீடிக்கப்பட்டிருந்தது. ஒரு சில சமூகக்குழுக்கள் தீண்டத்தகாதவராகவும் காணத்தகாதவராகவும் கூறி ஒடுக்கப்பட்டனர். இந்நிலையில் நாராயணகுரு, அய்யன்காளி (1863-1941) போன்ற சிந்தனையாளர்களால், பெருமளவில் அரசியல், பொருளாதார மாற்றங்கள் ஏற்பட்டுக்கொண்டிருந்த நேரத்தில், அவர்களால் நடத்தப்பட்ட வலுவான இயக்கங்கள் வியப்பூட்டும் சமூக மாற்றங்களைக் குறிப்பாகக் கட்டமைப்பில் ஏற்படுத்தியது.

அய்யன்காளி 1863இல் திருவனந்தபுரத்திலுள்ள வெங்கனூரில் பிறந்தார். அப்போது அப்பகுதி திருவிதாங்கூர் அரசரின் ஆட்சிப்பகுதியாகும். குழந்தையாய் இருக்கும்போதே அவர் சந்தித்த சாதியப்பாகுபாடு அவரை சாதி எதிர்ப்பியக்கத்தின் தலைவராக மாற்றியது. பின்னர் அவர் பொது இடங்களுக்குச் செல்லுதல், பள்ளிகளில் கல்வி கற்க இடம்பெறுதல் போன்ற அடிப்படை உரிமைகளுக்காகப் போராடினார். ஆடை அணிவது உட்பட, பல மரபுசார்ந்த பழக்கங்களை அவர் எதிர்த்தார். ஒடுக்கப்பட்ட சாதியனருக்கு மட்டும் மறுக்கப்பட்ட, உயர்சாதியினர் மட்டுமே அணியும் ஆடைகளை இவர் அணிந்தார். உயர்சாதியினர் பயன்படுத்தியதும் ஒடுக்கப்பட்ட சாதியினருக்கு மறுக்கப்பட்டிருந்ததுமான பொதுச் சாலைகளில், சவால்விடும் வகையில் காளைகள் பூட்டப்பெற்ற வண்டியில் அவர் பயணம் செய்தார்.

ஸ்ரீநாராயணகுருவால் ஊக்கம்பெற்ற அய்யன்காளி 1907இல் சாது ஜன பரிபாலன சங்கம் (ஏழை மக்கள் பாதுகாப்புச் சங்கம் - Association for the protection of Poor) எனும் அமைப்பை நிறுவினார். கீழ்சாதியாகக் கருதி ஒடுக்கப்பட்ட புலையர் சமூகமக்களின் கல்விக்காக இவ்வமைப்பு இயக்கம் நடத்தி நிதிதிரட்டியது.

### இஸ்லாமிய சீர்திருத்தங்கள்

1857ஆம் ஆண்டு பெரும்புரட்சி ஒடுக்கப்பட்ட பின்னர் இந்திய முஸ்லீம்கள் மேற்கத்தியப் பண்பாட்டைச் சந்தேகக் கண்கொண்டு பார்த்தனர். மேற்கத்தியக் கல்வி,பண்பாடு, மேற்கத்திய சிந்தனைகள் ஆகியவை தங்கள் மதத்திற்கு ஆபத்தாய் அமையுமோ என அச்சமூகம் அஞ்சியது. ஆகையால் முஸ்லீம்களில் ஒரு சிறிய பிரிவினரே மேற்கத்தியக் கல்வி பயில முன்வந்தனர். இதன்

விளைவாக இந்திய முஸ்லீம்கள், ஒப்பீட்டளவில் இந்தியாவின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த செல்வாக்குப் பெற்றிருந்த இந்துக்களைவிட ஒரு சமூகம் என்றளவில் பின்தங்கியிருந்தனர்.

**சர் சையத் அகமத்கான்**

கல்வி, அரசுப்பணிகள், தேசிய அளவில் தலைமைவகித்தல் ஆகியவற்றில் தங்கள் இடங்களைப்பெரிதும் இழந்துவிட்ட இந்திய முஸ்லீம்கள் தங்கள் சமூகம் முன்னேற்றப் பாதையில் செல்ல வேண்டுமானால் ஆங்கிலக்கல்வியை ஏற்றுக்கொள்வதைத் தவிர வேறு மாற்று இல்லை என்று புரிந்துகொண்டனர். இப்புரிதலுக்கு உயிரும் உணர்வும் கொடுத்தவரே சர் சையத் அகமத்கான் (1817-1898). டெல்லியில் உயர்குடி முஸலீம் குடும்பத்தில் பிறந்த சையத் அகமத்கான் படிப்பறிவின்மையே குறிப்பாக, நவீன கல்வியறிவின்மையே இஸ்லாமியர்களுக்குப் பெருந்தீங்கு விளைவித்து, அவர்களைக் கீழ்நிலையில் வைத்துவிட்டது எனக்கருதினார். மேலைநாட்டு அறிவியலையும், அரசுப்பணிகளையும் ஏற்றுக்கொள்ளும்படி அவர் இஸ்லாமியர்களை வற்புறுத்தினார். அறிவியல்கழகமொன்றை நிறுவிய அவர் ஆங்கிலநூல்களை உருதுமொழியில் மொழியாக்கம் செய்தார். மேலெழுந்துவரும் தேசிய இயக்கத்தில் இணைவதைக் காட்டிலும் ஆங்கில அரசுடன் நல்லுறவு மேற்கொண்டால் இஸ்லாமியர் நலன்கள் பேணப்படும் என அவர் நம்பினார். எனவே அவர் இஸ்லாமியருக்கு ஆங்கிலக்கல்வியைப் பயிலும்படியும் அதில் கவனம் செலுத்தும்படியும் அறிவுரை கூறினார்.

**அலிகார் இயக்கம்**

சர் சையத் அகமத்கான் 1875-ஆம் ஆண்டு அலிகார் நகரில் அலிகார் முகமதிய ஆங்கிலோ-ஓரியண்டல் கல்லூரியை (Aligarh Mohammedan Anglo-Oriental College) நிறுவினார். ‘அலிகார் இயக்கம்’ எனப்பட்ட அவரது இயக்கம் இக்கல்லூரியை மையப்படுத்தி நடைபெற்றதால் அப்பெயரைப் பெற்றது. இந்தியமுஸ்லீம்களின் கல்விவரலாற்றில் இக்கல்லூரி ஒரு மைல் கல்லாகும். 1920இல் இக்கல்லூரி தரம் உயர்த்தப்பட்டு பல்கலைக்கழகமானது. அலிகார் பல்கலைக்கழகம் தொடர்ந்துவந்த சந்ததியினரைச் சேர்ந்தோரை ஒரு கற்றறிந்த மேதைகளின் கூட்டமாக உருவாக்கியது. அவர்களனைவரும் பொதுவாழ்க்கையில் முக்கியப் பங்கு வகித்தனர்.

**தியோபந்த் இயக்கம்**

தியோபந்த் இயக்கம் ஒரு மீட்பியக்கமாகும். இவ்வியக்கம் பழதைவாத முஸ்லீம் உலேமாக்களால், இரு முக்கியக் குறிக்கோள்களுடன் தொடங்கப்பெற்றது. அக்குறிக்கோள்கள், குரான் மற்றும் ஷரியத்தின் உண்மையான போதனைகனைப் பரப்புரை செய்தல், இஸ்லாமல்லாத அயல்கூறுகளுக்கு எதிராகப் புனிதப்போர் செய்யும் உணர்வுகளை ஊக்குவித்தல் என்பனவாகும். இவ்வுலேமாக்கள் முகமது குவாசிம் நானோதவி (1832-1880), ரஷித் அகமத் கங்கோத்ரி (1826-1905) ஆகியோரின் தலைமையில் 1866இல் உத்தரப்பிரதேசத்தில் சகரன்பூரில் ஒரு பள்ளியை நிறுவினார். இப்பள்ளியின் பாடத்திட்டம் ஆங்கிலக்கல்வியையும் மேலைநாட்டுப் பண்பாட்டையும் புறக்கணித்தது. உண்மையான இஸ்லாமியமதம் இப்பள்ளியில் கற்றுத்தரப்பட்டது. இதன் நோக்கம் இஸ்லாமிய சமூகத்தின் ஒழுக்கத்தையும் மதத்தையும் மீட்டெடுப்பதாய் அமைந்தது. தியோபந்த் பள்ளி தனது மாணவர்களை அரசுப்பணிகளுக்குத் தயார் செய்யவில்லை. மாறாக இஸ்லாம் மத நம்பிக்கையைப் பரப்புரை செய்யத் தயார்செய்தது.

அரசியல் களத்தில், தியோபந்த் பள்ளி 1885 இல் அகில இந்திய தேசியக் காங்கிரஸ் உருவாக்கப்பட்டதை வரவேற்றது. 1888இல் தியோபந்த் உலேமா, சையத் அகமத்கானுடைய அமைப்புகளான ‘தி யுனைடெட் பேட்ரியாட்டிக் அசோசியேசன்’ (The United Patriotic

Association), முகமதன் ஆங்கிலோ – ஓரியண்டல் அசோசியேஷன்' (The Mohammedan Anglo-Oriental Association) ஆகியவற்றிற்கு எதிராக சமயஆணையைப் (fatwa) பிறப்பித்தது. சர் சையத் அகமத்கானுடைய நடவடிக்கைகளை எதிர்ப்பது என்ற அவர்களின் உறுதிப்பாடே தியோபந்த் உலேமாக்களை இயக்கியது எனச் சொல்லப்பட்டது.

மௌலானா முகமத்-உல்-ஹசன் தியோபந்தின் புதிய தலைவரானார். அவரின் தலைமையில் இயங்கிய ஜமைத்-உல்-உலோமா (இறையியலாளர்களின் அவை) ஹசனுடைய கருத்துக்களான, இந்திய ஒற்றுமை எனும் ஒட்டுமொத்தச் சூழலில் முஸ்லீம்களின் அரசியல், சமய உரிமைகளின் பாதுகாப்பு என்பது குறித்த உறுதியான வடிவத்தை முன்வைத்தது.

**பார்சி சீர்திருத்த இயக்கம்**

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் படிப்பறிவு பெற்றிருந்த பார்சிகளின் (சமயக்கொடுமைகளிலிருந்து தப்பிக்கும் பொருட்டு இரானிலிருந்து பத்தாம் நூற்றாண்டில் குடிபெயர்ந்து வந்த ஜொராஸ்டிரியர்கள்) சீர்திருத்த இயக்கம் பம்பாயில் தொடங்கப்பட்டது. 1851இல் பர்துன்ஜி நௌரொஜி என்பார் ''ரஹனுமாய் மஜ்தயாஸ்னன் சபா'' (பார்சிகளின் சீர்திருத்தச் சங்கம்) எனும் அமைப்பை ஏற்படுத்தினார். ராஸ்ட் கோப்தார் (உண்மை விளம்பி) என்பதே அதன் தாரகமந்திரமாக இருந்தது. இவ்வமைப்பின் தலைவர்கள் திருமண நிச்சயம், திருமணம், இறந்துபோதல் ஆகிய சந்தர்ப்பங்களில் செய்யப்படும் விரிவான சடங்குகளை விமர்சனம் செய்தனர். குழந்தைத் திருமணம், சோதிடத்தைப் பயன்படுத்துதல் ஆகிய இரண்டையும் எதிர்த்தனர். பம்பாய் பார்ச்சி சமூகத்தைச் சேர்ந்த பெர்ரம்ஜி மல்பாரி என்பார் குழந்தைத் திருமணப் பழக்கத்திற்கு எதிரான சட்டம் இயற்றப்பட வேண்டுமென இயக்கம் நடத்தினார். இச்சமூகம் பெரோசா மேத்தா, தீன்சா வாச்சா போன்ற சிறந்த தலைவர்களை உருவாக்கியது. அவர்கள் தொடக்ககால காங்கிரசில் முக்கியப் பங்குபணியாற்றினார்.

**சீக்கியர் சீர்திருத்த இயக்கம் (நிரங்கரிகள், நாம்தாரிகள்)**

சீர்திருத்த இயக்கத்தின் அலைகள் எந்தச் சமூகத்தையும் நனைக்காமல் விட்டுவைக்கவில்லை. பஞ்சாப் சீக்கியச் சமூகத்திலும் சீர்திருத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. நிரங்கரி இயக்கத்தின் நிறுவனரான பாபா தயாள்தாஸ் நிரங்கரி (உருவமற்ற) இறைவனை வழிபட வேண்டுமென வலியுறுத்தினார். சிலைவழிபாடு, சிலைவழிபாட்டோடு தொடர்புடைய சடங்குகள் ஆகியவற்றை மறுத்தல், குருநானக்கின் தலைமையையும் ஆதிகரந்தத்தையும் மதித்தல் ஆகியன அவருடைய போதனைகளின் சாரமாக விளங்கின. மது அருந்துவதையும், மாமிசம் உண்பதையும் கைவிடும்படி வலியுறுத்திக் கூறினார்.

பாபாராம் சிங் என்பவரால் தொடங்கப் பெற்ற நாம்தாரி இயக்கம் சீக்கியரிடையே நடைபெற்ற மற்றமொரு சமூக, சமயச் சீர்திருத்த இயக்கமாகும். நாம்தாரி இயக்கம் சீக்கியர்களின் அடையாளங்களை (வாளைத் தவிர) அணிய வற்புறுத்தியது. வாளுக்குப் பதிலாகத் தனது சீடர்களை லத்தியை வைத்துக் கொள்ளும்படி ராம்சிங் கூறினார். இவ்வியக்கம் ஆணும் பெண்ணும் சமம் எனக் கருதியது. விதவை மறுமணத்தை ஆதரித்தது. வரதட்சணை முறையையும் குழந்தைத் திருமணத்தையும் தடைசெய்தது.

ஆரிசயசமாஜம், கிறித்தவ சமயப்பரப்பு நிறுவனங்கள் ஆகியவற்றின் செல்வாக்கு வளர்ந்து கொண்டிருந்த ஒரு சூழலில் சிங்சபா எனும் அமைப்பு அமிர்தசரசில் நிறுவப்பட்டது. சீக்கியமதத்தின் புனதத்தை மீட்டெடுப்பதே சபாவின் முக்கியக் குறிக்கோளாக அமைந்தது. ஆங்கிலேயரின்

ஆதரவுடன் அமிர்தரஸில் சீக்கியர்களுக்கென கால்சா கல்லூரி உருவாக்கப்பட்டது. சிங்சபாவே அகாலி இயக்கத்தின் முன்னோடி அமைப்பாகும்.

**தமிழ்நாட்டின் சமூக சீர்திருத்தவாதிகள்**
**(அ) இராமலிங்க சுவாமிகள்**

வள்ளலார் எனப் பிரபலமாக அறியப்பட்ட, ராமலிங்க சுவாமிகள் அல்லது ராமலிங்க அடிகள் (1823-1874) சிதம்பரத்திற்கு அருகேயுள்ள மருதூர் எனும் கிராமத்தில் பிறந்தார். தந்தையாரின் மறைவுக்குப்பின்னர் அவரது குடும்பம் சென்னையிலிருந்த அவருடைய சகோதரரின் இல்லத்திற்குக் குடிபெயர்ந்தது. முறையான கல்வியை அவர் பெற்றிராவிட்டாலும் அளப்பரியப் புலமையைப் பெற்றிருந்தார். உயிர்களிடையே நம்பிக்கை, இரக்கம் எனும் பிணைப்புகள் இருக்கவேண்டுமென்றார். “துயரப்படும் உயிரினங்களைப் பார்த்து இரக்கம் கொள்ளாதாவர்கள் கல் நெஞ்சக்கார்கள், அவர்களின் ஞானம் மேகங்களால் மூடப்பட்டிருக்கும்” எனும் கருத்தினை முன்வைத்தார். அவர் தன்னுடைய அன்பையும் இரக்கத்தையும் செடிகொடிகள் உட்பட அனைத்து உயிரினங்களிடமும் காட்டினார். இதை அவர் ஜீவகாருண்யம் என்றார். 1856இல் சமரச வேத சன்மார்க்க சங்கம் எனும் அமைப்பை நிறுவினார். பின்னர் அது சமரசசுத்த சன்மார்க்க சத்ய சங்கம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. 1866இல் தென்னிந்தியாவில் ஏற்பட்ட கொடிய பஞ்சத்தைக் கணக்கில் கொண்டு 1867இல் சாதி எல்லைகளைத் தாண்டி அனைத்து மக்களுக்குமான இலவச உணவகத்தை வடலூரில் நிறுவினார். அவர் இயற்றிய ஏராளமான பாடல்கள் திருவருட்பா என்ற தலைப்பில் தொகுக்கப்பட்டன. அவருடைய தீவிரமான சிந்தனைகள் பழமைவாத சைவர்களை ஆழமாகப் புண்படுத்தியதால் அவர்கள் வள்ளலாரின் பாடல்களை ‘மருட்பா’ (அறியாமையின் பாடல்கள்) எனக் கண்டனம் செய்தனர்.

**நாட்டில் நிலவிய பசிக்கும் வறுமைக்கும் ராமலிங்கர் சாட்சியாய் இருந்தார். “பசியினால் இளைத்துப்போன, மிகவும் சோர்வுற்ற ஏழைமக்கள் ஒவ்வொரு வீட்டிற்கும் செல்லுவதை நான் பார்த்தேன். இருந்தும் அவர்களின் பசி போக்கப்படவில்லை என் இதயம் கடுமையாக வேதனைப்படுகிறது. கடுமையான நோயினாவல் வேதனைப்படுபவர்களை எனக்கு முன்பாகப் பார்க்கிறேன். எனது இதயம் நடுங்குகிறது. ஏழைகளாகவும் இணையில்லா நன்மதிப்பையும் களைப்படைந்த இதயத்தையும் கொண்டுள்ள அம்மக்களை நான் பார்க்கிறேன், நான் பலவீனம் அடைகிறேன்.”**

**(ஆ) வைகுண்ட சுவாமிகள்**

தென்னிந்தியாவின் தொடக்கக்காலச் சமூகத்தின் போராளிகளில் ஒருவரான வைகுண்ட சுவாமிகள் (1809-1851) கன்னியாகுமரிக்கு அருகில், இன்று சாமித்தோப்பு என்றழைக்கப்படும் சாஸ்தாகோவில்விளை எனும் கிராமத்தில் பிறந்தார். அவருடைய இயற்பெயர் முடிசூடும் பெருமாள். இப்பெயருக்கு உயர்சாதி இந்துக்கள் எதிர்ப்புத் தெரிவித்ததால் அவரின் பெற்றோர் அவருடைய பெயரை முத்துக்குட்டி என மாற்றினார். முத்துக்குட்டிக்கு முறையான பள்ளிக் கல்வியைப் பெறும் வாய்ப்புக் கிட்டவில்லை. ஆனாலும் பல சமயநூல்கள் குறித்த புலமையை அவர் பெற்றிருந்தார். திருவிதாங்கூர் அரசின், உயர்சாதியினரின் கடுமையான எதிர்ப்புகளிடையே அனைவரும் சமம் எனும் கருத்தினைப் போதித்தார். அடித்தட்டு மக்களின் உரிமைகளை ஆதரித்தார்.

**வைகுண்டசுவாமிகள் ஆங்கில ஆட்சியையும் திருவிதாங்கூர் அரசரின் ஆட்சியையும் முறையே “வெள்ளைப் பிசாசுகளின் ஆட்சியென்றும்” கறுப்புப் பிசாசுகளின் ஆட்சியென்றும்” விமர்சித்தார்.**

திருச்செந்தூர் கோவிலுக்குச் சென்றிருந்த அவர் தெய்வீக அனுபவம் ஒன்றைப்பெற்றார். வைகுண்டர் என தன்னை அழைத்துக் கொண்ட அவர் வழிபாட்டின் போது பின்பற்றும் தேவையற்ற சடங்கு சம்பிரதாயங்களைக் கைவிடும்படி மக்களைக் கேட்டுக்கொண்டார். நடைமுறையிலுள்ள சமயநெறிமுறைகளுக்கு எதிரான அவருடைய போதனைகள், ஒடுக்கப்பட்ட மக்களின் நடவடிக்கைகளில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. 1833ஆம் ஆண்டு சாதிவேற்றுமைகளை ஒழிப்பதற்காகவும் சமூக ஒருங்கிணைப்புக்காகவும் சாமித்தோப்பில் தனது தியானத்தைத் துவக்கினார். அந்நாட்களில் துறவியைப் போன்றதொரு வாழ்க்கைய வாழ்ந்தார்.

தெற்கு திருவிதாங்கூரிவ் ஒடுக்கப்பட்ட மக்கள் எவற்றை அணியலாம்; எவற்றை அணியக் கூடாது என்பது உட்பட பல கட்டுப்பாடுகளுக்கு உள்ளாகியிருந்தனர். சமூகத்தின் சில குறிப்பிட்டப் பிரிவுகளைச் சேர்ந்து மக்கள் தலைப்பாகை அணியக்கூடாது என்றிருந்த நிலையில் வைகுண்டர் எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில் அம்மக்களைத் தலைப்பாகை அணியும்படி கூறினார். இது ஒடுக்கப்பட்ட மக்களுக்கு சுதந்திர உணர்வை வழங்கியதோடு அவர்களுக்குச் சுயமரியாதை சார்ந்த ஊக்கத்தையும் கொடுத்தது. அவரைப் பின்பற்றுவோரின் மனங்களில் புதிய நம்பிக்கை ஊன்றப்பட்டது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் அரங்கேறிய ஏனைய சமகாலச் சீர்திருத்த இயக்கங்களைப் போலவே வைகுண்டசுவாமிகளும் உருவவழிபாட்டை எதிர்த்தார். ஒடுக்கப்பட்ட மக்கள் தங்கள் தெய்வங்களுக்கெனக் கோவில்களைப் பெற்றிருக்கவில்லை. தங்கள் தெய்வங்களை மேன்மைப்படுத்தும் பொருட்டு களிமண்ணால் அல்லது செங்கல்லால் சிறியப் பிரமிடுகளைக்கட்டி அவற்றுக்குச் சாந்துபூசி வெள்ளையடித்து வைத்திருந்தனர். அவ்வடிவங்களை வழிபடுவது அநாகரிகமான பழக்கம் என வைகுண்டர் கருதினார். விலங்குகளை வணங்குவதையும் அவர் நிராகரித்தார். வழிபாட்டின்போது மக்கள் ஆடுகள், சேவல்கள், கோழிகள் ஆகியவற்றை பலி கொடுக்கும் சமயச்சடங்குகளைக் கண்டனம் செய்த வைகுண்டசுவாமிகள் விலங்குகளைப் பலியிடுவதற்கு எதிராக இயக்கம் நடத்தினார்.

பல்வேறு சாதிகளைச்சேர்ந்த மக்களை ஒருங்கிணைப்பதற்காக வைகுண்டசுவாமிகள் சமத்துவ சமாஜம் எனும் அமைப்பை நிறுவினார். அந்நோக்கத்தில் வெற்றிபெறுவதற்காக அனைத்துச் சாதிமக்களும் சேர்ந்துண்ணும் சமபந்தி விருந்துகளை நடத்தினார். திருவிதாங்கூர் அரசரால் சிறையில் அடைக்கப்பட்ட போதும் அவர் தனது கொள்கைகளை விட்டுத்தரவில்லை. அவரைப் பின்பற்றியவர்கள் அவரை மிக்க மரியாதையுடன் ‘அய்யா’ (தந்தை) என அழைத்தனர். அவருடைய சமயவழிபாட்டு முறை ‘அய்யாவழி’ என்றறியப்பட்டது. அவருடைய அறிவுரைகள் நீதிக்குப்புறம்பான சமூகப்பழக்க வழக்கங்களிலிருந்தும் மூடநம்பிக்கைகளிலிருந்தும் மக்களை விடுவித்தது. அவருடைய கருத்துக்கள் ஒரு நூலாகத் திரட்டப்பட்டுள்ளது. அந்நூலின் பெயர் ‘அகிலத்திரட்டு’ என்பதாகும்.

**இ) அயோத்தி தாசர்**

பண்டிதர் அயோத்தி தாசர் (1845-1914) ஒரு தீவரத் தமிழ்அறிஞரும் சித்தமருத்துவரும் பத்திரிக்கையாளரும் சமூக அரசியல் செயல்பாட்டாளரும் ஆவார். சென்னையில் பிறந்த அவர் தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம், பாலி ஆகிய மொழிகளில் புலமை பெற்றவர். சரளமாக பேசக் கூடியவர். அது வரையிலும் உயர் சாதியிளரின் ராஜ்ஜியமாக விளங்கிய அச்சிட்டு வெளியிடும் இதழியலைத் தனது கருவியாகக் கொண்டு இதழியலைத் தனது கருவியாகக் கொண்டு அயோத்திதாசர் ஒரு புதிய அறிவைப்பரப்பும் முறையை முன்னெடுத்தார். சமூகநீதிக்காக இயக்கம் நடத்திய அவர், சாதியத்தின் கொடிய பிடியிலிருந்து ஒடுக்கப்பட்டோர் விடுதலைபெறப் பாடுபட்டார். சாதிகளற்ற அடையாளத்தை நிறுவமுயன்ற அவர் சாதிய மேலாதிக்கத்திற்கும் தீண்டாமைக்கும் எதிராகக் கண்டனக்குரல்

எழுப்பினார். கல்வியை வலிமை பெறுவதற்கான கருவியாகக் கருதிய அவர் தமிழகத்தில் ஒடுக்கப்பட்டோருக்கென பல பள்ளிகள் உருவாக்கப்படுவதற்கு உந்துசக்தியாகத் திகழ்ந்தார்.

ஒடுக்கப்பட்டோரின் கோவில்நுழைவுக்கு ஆதரவாகக் குரல் எழுப்புவதற்காகப் பண்டிதர் அயோத்திதாசர் அத்வைதானந்தா சபா எனும் அமைப்பை நிறுவினார் 1882இல் அயோத்தி தாசரும் ஜான் திரவியம் என்பவரும் ''திராவிடர்க் கழகம்'' எனும் அமைப்பை நிறுவினர். மேலும் 1885இல் ''திராவிட பாண்டியன்'' எனும் இதழையும் தொடங்கினார். ''திராவிட மகாஜனசபை'' என்ற அமைப்பை 1891இல் நிறுவிய அவர் அவ்வமைப்பின் முதல் மாநாட்டை நீலகரியில் நடத்தினார். 1907இல் ''ஒரு பைசா தமிழன்'' என்ற பெயரில் வாராந்திரப் பத்திரிகையைத் தொடங்கி அதை 1914இல் அவர் காலமாகும் வரையிலும் தொடர்ந்து வெளியிட்டார்.

பண்டிதர் அயோத்திதாசர் சாதியத்தைப் பரப்புரை செய்யவும் அதை நியாயப்படுத்தவும் அடித்தளமாக விளங்கிய இந்துதர்மத்தின்பால் மனக்கசப்புற்றார். பிரம்மஞான சபையை நிறுவியவர்களில் ஒருவரான கர்னல் ஆல்காட் ஏற்படுத்தியத் தாக்கத்தின் விளைவாக 1898இல் இலங்கை சென்ற அவர் அங்கே பௌத்தமதத்தின் வழியே பகுத்தறிவின் அடிப்படையிலான சமயத்தத்துவத்தைக் கட்டமைப்பதற்காக ''சாக்கிய பௌத்த சங்கம்'' எனும் அமைப்பை சென்னையில் நிறுவினார். பிராமணியத்தால் ஒடுக்கப்பட்டவர்களே உண்மையான பௌத்தர்கள என அவர் வாதிட்டார். பௌத்தசமய நிலைப்பாட்டிலிருந்து இலக்கியங்களுக்கும் நாட்டார் வழக்காற்றியல் மரபுக்கும் புதிய விளக்கங்கள் கொடுத்த அவர் ஒரு மாற்று வரலாற்றைக் கட்டமைத்தார். மேலும் பௌத்தசமய மீட்பின் வழியாக இந்துசமயத்தைப் பிடித்திருக்கும் சாதியக்கொடுமைகளிலிருந்து மக்களை விடுவிக்க இயலுமென உழைத்தார். ஒடுக்கப்பட்டவர்களை சாதி பேதமற்ற திராவிடர் என அழைத்த அவர் மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்போது அவர்களைச் சாதியற்ற திராவிடர்கள் எனப் பதிவுசெய்யுமாறு வற்புறுத்தினார்.

---

# History Vol – 2

## அலகு – 6 - ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக தமிழகத்தில் நிகழ்ந்த தொடக்ககால கிளர்ச்சிகள்

**அறிமுகம்**

பிரெஞ்சுப் படைகளையும், அதோடு தோழமை கொண்டிருந்த இந்திய ஆட்சியாளர்களையும் மூன்று கர்நாடகப் போர்களில் தோற்கடித்திருந்த கிழக்கிந்திய கம்பெனி தனது அதிகாரத்தையும், செல்வாக்கையும் விரிவாக்கி ஒருங்கிணைக்கத் தொடங்கியது. எனினும் உள்ளூர் ஆட்சியாளர்களும் நிலக்கிழார்களும் இதனை எதிர்த்தனர். நாடுபிடிக்கும் அவர்களின் நோக்கத்திற்கு முதல் எதிர்வினை திருநெல்வேலிப் பகுதியின் நெற்கட்டும்செவலில் ஆட்சிபுரிந்து வந்த புலித்தேவரிடமிருந்து வெளிப்பட்டது. இதைத் தொடர்ந்து வேலுநாச்சியார், வீரபாண்டிய கட்டபொம்மன், மருது சகோதரர்கள், தீரன் சின்னமலை போன்ற தமிழகத்தின் பிற பகுதிகளை ஆட்சி புரிந்து வந்தோரும் எதிர்த்தனர். பாளையக்காரர் போர் என அறியப்படும் இது 1806இல் நிகழ்ந்த வேலூர் புரட்சிக்கு இட்டுச் சென்றது. தமிழ்நாட்டில் பிரிட்டிஷாருக்கு எதிராகத் தோனறிய இத்தொடக்கக்கால எதிர்ப்புப் பற்றி இப்பாடத்தில் காணலாம்.

**ஆங்கிலேயருக்கு எதிரான மண்டல சக்திகளின் எதிர்ப்பு**
**அ. பாளையங்களும் பாளையக்காரர்களும்**

பாளையம் என்ற சொல் ஒரு பகுதியையோ, ஒரு இராணுவ முகாமையோ அல்லது ஒரு சிற்றரசையோ குறிப்பதாகும். பாளையக்காரர்கள் (இவர்களை ஆங்கிலேயர்கள்

‘போலிகார்’(Poligar)என்று குறிப்பிட்டனர்) என்ற தமிழ்ச்சொல் இறையாண்மை கொண்ட ஒரு பேரரசுக்குக் கப்பம்பட்டும் குறுநில அரசைக் குறிக்கிறது. இவ்வமைப்பின் கீழ் தனிநபர் ஒருவர் ஆற்றிய சீரிய இராணுவ சேவைக்காக அவரின் கட்டுப்பாட்டின்கீழ் பாளையம் கொடுக்கப்பட்டது. வாரங்கல்லை சார்ந்த பிரதாபருத்ரனின் ஆட்சிக்காலத்தில் காகதீய அரசில் இப்பாளையக்காரர் முறை நடைமுறைப்படுத்தப்பட்டது. மதுரை நாயக்கராக 1529இல் பதவியேற்ற விஸ்வநாத நாயக்கர் அவர்தம் அமைச்சரான அரியநாதரின் உதவியோடு தமிழகத்தில் இம்முறையை அறிமுகப்படுத்தினார். பரம்பரை பரம்பரையாக 72 பாளையக்காரர்கள் இருந்திருக்கக்கூடும்.

பாளையக்காரார்களால் வரிவசூலிப்பதிலும், நிலப்பகுதிகளை நிர்வகிப்பதிலும், வழக்குகளை விசாரிப்பதிலும், சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பதிலும் தன்னிச்சையாகச் செயல்பட முடிந்தது. அவர்களது காவல் காக்கும் கடமை படிக்காவல் என்றும் அரசுக்காவல் என்றும் அழைக்கப்பட்டது. பல்வேறு சந்தர்ப்பங்களில் நாயக்க ஆட்சியாளர்கள் தங்கள் அதிகாரத்தைத் தக்க வைத்துக்கொள்ள பாளையக்காரர்கள் உதவிபுரிந்தனர். பாளையக்காரர்களுக்கும், அரசர்களுக்கும் இடையேயான தனிப்பட்ட உறவு மற்றும் புரிதல் மதுரை நாயக்கர்களால் இம்முறை நிறுவப்பட்டதிலிருந்து இருநூறு ஆண்டுகளுக்கும் மேலாக அதாவது ஆங்கிலேயர் இந்நிலப்பகுதிகளைத் தங்கள் வசம் கொண்டுவரும்வரை நீடித்திருந்தது.

**கிழக்கு மற்றும் மேற்குப் பாளையங்கள்**

நாயக்க மன்னர்களால் உருவாக்கப்பட்ட 72 பாளையங்களும் கிழக்கு மற்றும் மேற்கு என்ற இரு தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்த பாளையங்களே முக்கியத்துவம் பெற்றவையாகக் கருதப்பட்டன. கிழக்கில் அமையப்பெற்ற பாளையங்கள், சாத்தூர், நாகலாபுரம், எட்டையபுரம் மற்றும் பாஞ்சாலங்குறிச்சி ஆகியனவும் மேற்கில் அமையப்பெற்ற முக்கியமான பாளையங்கள் ஊத்துமலை, தலைவன்கோட்டை, நடுவக்குறிச்சி, சிங்கம்பட்டி, சேத்தூர் ஆகியனவாகும். பதினேழு மற்றும் பதினெட்டாம் நூற்றாண்டுகளின் தமிழக அரசியலில் பாளையக்காரர்களின் செல்வாக்கு விஞ்சி நின்றது. அவர்கள் தங்களுக்கென ஒதுக்கப்பட்ட பாளையங்களின் எல்லைக்குள் சுதந்திரமும், இறையாண்மையும் பெற்று செயல்பட்டார்கள்.

**வரிவசூலிப்பு அதிகாரம் கம்பெனி ஆட்சிக்கு வழங்கப்படுதல்**

ஆற்காட்டு நவாப் கர்நாடகப் போர்களில் ஈடுபட்டிருந்தபோது ஏற்பட்ட செலவினங்களுக்காக கிழக்கிந்திய கம்பெனியிடமிருந்து கடன் பெற்றிருந்தார். அவர் கடனைத் திரும்ப செலுத்தக்கூடிய நிலையை கடந்தபோது, தெற்கத்தியப் பாளையக்காரர்களிடமிருந்து வரிவசூல் செய்யும் அதிகாரம் கிழக்கிந்திய கம்பெனிக்கு வழங்கப்பட்டது. அறுபது தலைமுறையாக நிலத்தின் மீது கொண்டிருந்த உரிமையை முன்வைத்து பல பாளையக்காரர்கள் கம்பெனி அதிகாரிகளுக்கு வரிசெலுத்த மறுத்தார்கள். கம்பெனியின் அதிகாரத்தை ஏற்க மறுத்தப் பாளையக்காரர்களை கிளர்ச்சிக்காரர்கள் என்று முத்திரையிட்ட கம்பெனியார், நாட்டின் அமைதிக்கும் ஒழுங்கிற்கும் அவர்கள் பங்கம் விளைவிப்பார்கள் என்று குற்றம் சுமத்தினர். இதுவே கிழக்கிந்திய கம்பெனிக்கும், பாளையக்காரர்களுக்கும் மோதல் போக்கை உருவாக்கியது என்பது பின்வருமாறு விவரிக்கப்படுகிறது.

**பாளையக்காரர்களின் புரட்சி (1755-1801)**
**அ. பூலித்தேவரின் புரட்சி (1755-1767)**

கர்னல் ஹெரான் தலைமையிலான கம்பெனியின் படை ஒன்றை அழைத்துக் கொண்டு மார்ச் 1755இல் மாபூஸ்கான் (ஆற்காட்டு நவாபின் சகோதரர்) திருநெல்வேலிக்குச் சென்றார். மதுரை எளிதில் அவர்களது கையில் வீழ்ந்தது. அதன்பின் தொடர்ந்து கம்பெனிக்குக் கீழ்ப்படிய மறுத்துவந்த பூலித்தேவரை அடக்க கர்னல் ஹெரான் பணிக்கப்பட்டார். மேற்குப் பகுதியில் இருந்த பாளையக்காரர்களிடம் பூலித்தேவர் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தார். பீரங்கிகளின் தேவையும் துணைக்கலப்பொருட்கள் மற்றும் படைவீரர்களின் ஊதியம் உள்ளிட்ட காரணங்களினால் ஹெரான் தனது திட்டத்தைக் கைவிட்டு மதுரைக்கு திரும்பினார். கம்பெனி நிர்வாகம் அவரைத் திரும்ப அழைத்ததோடு நிரந்தர பணிநீக்கம் செய்தும் உத்தரவிட்டது.

## பிரிட்டிஷ் எதிர்ப்பாளர்களின் கூட்டமைப்பும், நட்புக் கூட்டணியும்

நவாப் சந்தாசாகிப்பின் முகவர்களாக செயல்பட்டு வந்த மியானா, முடிமையா, நபீகான் கட்டாக் எனும் மூன்று பத்தாணிய அதிகாரிகள் மதுரை மற்றும் திருநெல்வேலிப் பகுதிகளில் பொறுப்பு வகித்தனர். அவர்கள் ஆற்காட்டு நவாபான முகமது அலிக்கு எதிராக மேற்கு பாளையக்காரர்களுக்கு ஆதரவளித்தனர். அவர்களோடு பூலித்தேவர் நெருக்கமான நட்புறவை ஏற்படுத்திக் கொண்டிருந்தார். மேலும் பூலித்தேவர் ஆங்கிலேயர்களுக்கு எதிராகப் போரிட பாளையக்காரர்களின் கூட்டமைப்பு ஒன்றையும் ஏற்படுத்தினர். சிவகிரிப் பாளையக்காரர் நீங்கலாகப் பிற மறவர் பாளையங்கள் யாவும் அவரை ஆதரித்தன. எட்டையபுரமும் பாஞ்சாலங்குறிச்சியும் கூட இக்கூட்டமைப்பில் இணையவில்லை. மேலும் ஆங்கிலேயர்கள் இராமநாதபுரம் மற்றும் புதுக்கோட்டை மன்னர்களின் ஆதரவைப் பெற்றனர். பூலித்தேவர் மைசூரின் ஹைதர் அலி மற்றும் பிரெஞ்சுக்காரர்களது ஆதரவினைப் பெற முயன்றார். ஏற்கனவே மராத்தியர்களோடு கடுமையான மோதலில் ஈடுப்பட்டிருந்த ஹைதர் அலியால் பூலித்தேவருக்கு உதவி இயலவில்லை.

## களக்காடு போர்

நவாப் கூடுதல் படைகளை மாபூஸ்கானுக்கு அனுப்பி திருநெல்வேலிக்குச் செல்லும் படையை பலப்படுத்தினார். மேலும் கம்பெனியின் 1000 சிப்பாய்களோடு நவாபால் அனுப்பப்பட்ட 600க்கும் மேற்பட்ட படைவீரர்களையும் மாபூஸ்கான் பெற்றார். மேலும் அவருக்கு கர்நாடகப் பகுதியிலிருந்த குதிரைப் படை மற்றும் காலாட்படையின் ஆதரவும் இருந்தது. மாபூஸ்கான் களக்காடு பகுதியில் தனது படைகளை நிலைநிறுத்தும் முன்பாக திருவிதாங்கூரின் 2000 வீரர்கள் பூலித்தேவரின் படைகளோடு இணைந்தனர். களக்காட்டில் நடைபெற்றப் போரில் மாபூஸ்கானின் படைகள் தோற்கடிக்கப்பட்டன.

## யூசுப்கானும், பூலித்தேவரும்

பூலித்தேவர் தலைமையில் ஒருங்கிணைக்கப்பட்ட பாளையக்காரர்கள் எதிர்ப்பு திருநெல்வேலிப் பகுதியில் ஆங்கிலேயர் நேரடியாகத் தலையிடுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது. திருவிதாங்கூர் மன்னரின் ஆதரவோடு 1756 முதல் 1763 வரையிலான காலத்தில் பூலித்தேவர் தலைமையிலான திருநெல்வேலி பாளையக்காரர்கள் நவாபின் அதிகாரத்தை எதிர்ப்பதையே முழு நோக்கமாகக் கொண்டிருந்தனர். கம்பெனியாரால் அனுப்பப்பட்ட யூசுப்கான் (கான்சாகிப் என்றும் தனமு மதமாற்றத்திற்கு முன்பு மருதுநாயகம் என்றும் அழைக்கப்பட்டவர்), திருச்சிராப்பள்ளியில் இருந்து தான் எதிர்பார்த்த பெரும்பீரங்கிகள் மற்றும் வெடிபொருட்கள் வந்து சேரும் வரை பூலித்தேவர் மீது தாக்குதல் தொடுக்க அவர் ஆயத்தமாகவில்லை. பிரெஞ்சுப் படைகளோடு ஒருபுறமும், ஹைதர் அலி மற்றும் மராத்தியோடு மறுபுறமும் ஆங்கிலேயர் போரில் ஈடுபட்டுக் கொண்டிருந்ததால் பீரங்கிப்படைகள் செப்டம்பர் 1760இல் தான் வந்து சேர்ந்தன. யூசுப்கான் நெற்கட்டும் செவலில் கோட்டையை முற்றுகையிடுவதற்காக நடத்திய இத்தாக்குதல் இரண்டு மாதங்கள் நீடித்தது. 1761 மே 16இல் பூலித்தேவரின் மூன்று முக்கியக் கோட்டைகள் (நெற்கட்டும்செவல், வாசுதேவநல்லூர் மற்றும் பனையூர்) யூசுப்கானின் கட்டுப்பாட்டிற்குள் வந்தன.

இதற்கிடையே பாண்டிச்சேரியைக் கைப்பற்றிய ஆங்கிலேயர்கள் பிரெஞ்சுக்காரர்களின் முக்கியத்துவத்தை முழுவதுமாக குறைத்திருந்தனர். இதன் விளைவாக பிரெஞ்சுக்காரர்களின் உதவி கிடைக்காது என்றுணர்ந்த பாளையக்காரர்களின் ஒற்றுமை உடையத்துவங்கியது. இதையடுத்து திருவிதாங்கூர், சேத்தூர், ஊத்துமலை மற்றும் சுரண்டை ஆகிய பகுதிகள் எதிரணியினருக்கு தங்கள் ஆதரவை அளிக்கத் தொடங்கின. கம்பெனியின் நிர்வாகத்திற்கு முறையான தகவல் அளிக்காமல் பாளையக்காரர்களோடு பேச்சுவார்த்தை நடத்திய யூசுப்கான் மீது நம்பிக்கை துரோகக் குற்றம் சுமத்தப்பட்டு 1764இல் தூக்கிலிடப்பட்டார்.

## பூலித்தேவரின் வீழ்ச்சி

கான்சாகிப் காலமானதைத் தொடர்ந்து நாடிழந்த நிலையில் சுற்றிவந்த பூலித்தேவர் திரும்பி வந்து 1764-இல் நெற்கட்டும்செவலை மீண்டும் கைப்பற்றினார். எனினும் 1767இல் கேப்டன் கேம்ப்பெல் என்பவரால் தோற்கடிக்கப்பட்டார். தப்பிச்சென்ற அவர் நாடிழந்த நிலையிலேயே காலமானார்.

**ஒண்டிவீரன்**
**ஒண்டிவீரன் பூலித்தேவரின் படைப்பிரிவுகளில் ஒன்றனுக்குத் தலைமையேற்றிருந்தார். பூலித்தேவரோடு இணைந்து போரிட்ட அவர் கம்பெனிப் படைகளுக்கு பெரும் சேதங்களை ஏற்படுத்தினார். செவிவழிச் செய்தியின்படி ஒரு போரில் அவரது கை துண்டிக்கப்பட்டதாகவும், அதனால் பூலித்தேவர் பெரிதும் வருந்தியதாகவும் தெரிகிறது. ஆனால் ஒண்டிவீரன், எதிரியின் கோட்டையில் தான் நுழைந்து பல தலைகளைக் கொய்தமைக்காகத் தமக்கு கிடைத்தப் பரிசு என்று கூறியுள்ளார்.**

**ஆ. வேலுநாச்சியார் (1730-1796)**

இராமநாதபுரத்தின் அரசர் செல்லமுத்து சேதுபதிக்கு 1730-இல் அரசகுடும்பத்தின் ஒரே பெண் வாரிசாக வேலுநாச்சியார் பிறந்தார். மன்னருக்கு ஆண் வாரிசு இல்லை. அரச குடும்பத்தால் வளரி, சிலம்பம் போன்ற தற்காப்புக் கலைகளிலும், போர்க் கலைகளைக் கையாள்வதற்கும் பயிற்சி அளிக்கப்பட்டு வளர்க்கப்பட்டார். மேலும் அவர் ஆங்கிலம், பிரெஞ்சு, உருது போன்ற மொழிகளில் வல்லமை பெற்றிருந்ததோடு குதிரையேற்றத்திலும், வில்வித்தையிலும் திறமையானவராக விளங்கினார்.

தனது 16வது வயதில் வேலுநாச்சியார் சிவகங்கை மன்னரான முத்துவடுகநாதரை மணந்து வெள்ளாச்சி நாச்சியார் என்ற பெண் மகவையும் பெற்றெடுத்தார். 1772இல் ஆற்காட்டு நவாபும் லெப்டினன்ட் கர்னல் பான் ஜோர் தலைமையிலான கம்பெனி படைகளும் இணைந்து காளையார்கோவில் அரண்மனையைத் தாக்கினார். இதனால் மூண்ட போரில் முத்துவடுகநாதர் கொல்லப்பட்டார். தனது மகளோடு தப்பிச்சென்ற வேலுநாச்சியார் கோபால நாயக்கரின் பாதுகாப்பில் திண்டுக்கல் அருகே உள்ள விருப்பாட்சியில் எட்டு ஆண்டுகள் வாழ்ந்தார்.

மறைந்து வாழந்த காலத்தில் வேலுநாச்சியார் ஒரு படைப்பிரிவை உருவாக்கியதோடு கோபால நாயக்கர் மட்டுமல்லாமல் ஹைதர் அலியோடும் கூட்டணியை ஏற்படுத்திக்கொண்டார். வெலுநாச்சியாரின் சார்பில் ஹைதர் அலிக்கு, தளவாய்(இராணுவத்தலைவர்) தாண்டவராயனார் எழுதிய கடிதத்தில் ஆங்கிலேயரைத் தோற்கடிக்கும் பொருட்டு 5000 காலாட்படைகளும், 5000 குதிரைப்படைகளும் அனுப்பும்படி அவரிடம் கோரினார். வேலுநாச்சியார் உருது மொழியில் தனக்கு கிழக்கிந்திய கம்பெனியோடு இருந்த பிணக்குகளை கடிதத்தில் விவரித்திருந்தார். மேலும் தான் ஆங்கிலேயரோடு மோதுவதில் தீவிரமாக இருப்பதைத் தெளிவுபடுத்தினார். அவரது மனவுறுதியைப் பார்த்து வியந்த ஹைதர் அலி தனது திண்டுக்கல் கோட்டை படைத்தலைவரான சையதிடம் அவருக்கு வேண்டிய இராணுவ உதவிகளை வழங்குமாறு ஆணையிட்டார்.

**விருப்பாட்சியின் பாளையக்காரரான கோபால நாயக்கர்**
**கோபால நாயக்கரைத் தலைவராகக் கொண்ட திண்டுக்கல் கூட்டமைப்பில் (Dindigul League) மணப்பாறையின் லெட்சுமி நாயக்கரும், தேவதானப்பட்டியின் பூஜை நாயக்கரும் இடம் பெற்றிருந்தனர். தனது நட்பை வெளிப்படுத்தும் விதமாக ஒரு நல்லுறவுக் குழுவை அனுப்பிவைத்த திப்பு சுல்தானால் கோபால நாயக்கர் ஈர்க்கப்பட்டார். கோயம்புத்தூரை மையமாகக் கொண்டு பிரிட்டிஷாரை எதிர்த்த அவர், பின்னாட்களில் கட்டபொம்மனின் சகோதரரான ஊமைத்துரையோடு இணைந்தார். அவர் உள்ளூர் விவசாயிகளின் ஆதரவுடன் ஆனைமலையில் கடும் போர் புரிந்தார். ஆயினும் பிரிட்டிஷ் படைகளால் அவர் 1801இல் வெற்றி கொள்ளப்பட்டார்.**

வேலுநாச்சியார் பிரிட்டிஷாரின் ஆயுதங்கள் குவிக்கப்பட்டிருக்கும் இடத்தை அறிந்துகொள்ள உளவாளிகளை நியமித்தார். கோபால நாயக்கர் மற்றும் ஹைதர் அலியின் இராணுவ உதவியோடு அவர் சிவகங்கையை மீண்டும் கைப்பற்றினார். மருது சகோதரர்களின் உதவியினால் அவர் அரசியாக முடிசூட்டிக்கொண்டார். இந்திய நாட்டில் பிரிடடிஷ் காலனியாதிக்க அதிகாரத்தை எதிர்த்த முதல் பெண் ஆடசியாளர் அல்லது அரசி என்ற பெருமை அவருக்கே உரித்தானதாகும்.

**வேலுநாச்சியரின் நம்பிக்கைக்குரிய தோழியாகக் திகழ்ந்த குயிலி, உடையாள் என்ற பெண்களின் படைப்பிரிவைத் தலைமையேற்று வழிநடத்தினார். உடையாள் என்பது குயிலி பற்றி உளவு**

**கூறமறுத்ததால் கொல்லப்பட்ட மேய்த்தல் தொழில்புரிந்த பெண்ணின் பெயராகும். குயிலி தனக்குத்தானே நெருப்பு வைத்துக்கொண்டு (1780) அப்படியே சென்று பிரிட்டிஷாரின் ஆயுதக்கிடங்கிலிருந்த அனைத்துக் தளவாடங்களையும் அழித்தார்.**

**இ. வீரபாண்டிய கட்டபொம்மனின் கலகம் (1790-1799)**

தனது தந்தையாரான ஜெகவீர பாண்டிய கட்டபொம்மனின் இறப்பிற்குப் பின் பாளையக்காரராக தனது முப்பதாவது வயதில் வீரபாண்டிய கட்டபொம்மன் பொறுப்பேற்றார். கம்பெனி நிர்வாகிகளான ஜேம்ஸ் லண்டன் மற்றும் காலின் ஜாக்சன் என்போர் இவரை அமைதியை விரும்பும் மனம் கொண்டவராகவே கருதினர். எனினும் தொடர்ந்து நடந்த சம்பவங்கள் கட்டபொம்மனுக்கும், கிழக்கிந்தியக் கம்பெனிக்கும் மோதல்போக்கை ஏற்படுத்தின. 1781இல் கம்பெனியாருடன் நவாப் ஏற்படுத்திக்கொண்ட உடன்படிக்கையின்படி, மைசூரின் திப்பு சுல்தானுடன் ஆற்காட்டு நவாப் போர்புரிந்து கொண்டிருந்தபோது, கர்நாடகப்பகுதியில் வரி மேலாண்மையும், நிர்வாகமும் கம்பெனியின் முழுக்கட்டுப்பாட்டின் கீழ் செல்லும்நிலை ஏற்பட்டது. வசூலிக்கப்பட்ட வரியில் ஆறில் ஒரு பங்கு நவாபிற்கும் அவர் குடும்ப பராமரிப்பிற்குமென ஒதுக்கப்பட்டது.

இவ்வாறு பாஞ்சாலங்குறிச்சியிடமிருந்து வரி வசூலிக்கும் உரிமையை கம்பெனி பெற்றிருந்தது. அனைத்துப் பாளையங்களிலிருந்தும் வரிகளை வசூலிக்க கம்பெனி அதன் ஆட்சியாளர்களை நியமித்தது. ஆட்சியாளர்கள் பாளையக்காரர்களை அவமானப்படுத்தியதோடு வரிகளை வசூலிக்க படையினைப் பயன்படுத்தினர். இதுவே கட்டபொம்மனுக்கும் ஆங்கிலேயருக்கும் இடையே பெரும் பகை ஏற்பட அடிப்படையானது.

**ஜாக்சனோடு ஏற்பட்ட மோதல்**

கட்டபொம்மனிடமிருந்து வசூலிக்க வேண்டிய நிலவரி நிலுவையானது 1798ஆம் ஆண்டு வாக்கில் 3310 பகோடாக்களாக இருந்தது. இவற்றை வசூலிப்பதற்காக ஜாக்சன் என்ற கர்வமுள்ள ஆட்சியாளர் இராணுவத்தை அனுப்ப முனைந்தபோது மதராஸ் அரசாங்கம் அதற்கு அனுமதியளிக்க மறுத்தது. 1798 ஆகஸ்ட் 18இல் இராமநாதபுரத்தில் வந்து தன்மைச் சந்திக்குமாறு கட்டபொம்மனுக்கு அவர் ஆணை பிறப்பித்தார். ஆனால் கட்டபொம்மன் மேற்கொண்ட முயற்சி பலனளிக்காததோடு குற்றாலம் மற்றும் ஸ்ரீவில்லிப்புத்தூர் ஆகிய இடங்களிலும் ஜாக்சன் அவரை சந்திக்க மறுத்தார். இறுதியாக 1798 செப்டம்பர்19 அன்று அனுமதியளித்ததன் பேரில் கட்டபொம்மன் இராமநாதபுரத்தில் ஜாக்சனைச் சந்தித்தார். ஆணவத்தின் மொத்த உருவமாகத் திகழ்ந்த ஜாக்சனின் முன்பு கட்டபொம்மன் மூன்று மணி நேரம் நிற்க வைக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. ஆபத்தை உணர்ந்த கட்டபொம்மன் தனது அமைச்சரான சிவசுப்ரமணியனாருடன் தப்பிச் செல்ல முயன்றார். உடனடியாக ஊமைத்துரை தனது ஆட்களோடு கோட்டைக்குள் நுழைந்து கட்டபொம்மன் தப்ப உதவினார். இராமநாதபுரம் கோட்டை வாசலில் நடந்த மோதலில் லெப்டினெண்ட் க்ளார்க் உள்ளிட்ட சிலர் கொல்லப்பட்டனர். சிவசுப்ரமணியனார் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டார்.

**மதராஸ் ஆட்சிக்குழுவின் முன்பாக ஆஜராதல்**

பாஞ்சாலங்குறிச்சிக்குத் திரும்பிய கட்டபொம்மன் ஆட்சியர் ஜாக்சன் தன்னை எவ்வாறெல்லாம் அவமானப்படுத்தினார் என்பதை மதராஸ் ஆட்சிக் குழுவிற்குத் தெரியப்படுத்தினார். அக்குழு வில்லியம் ப்ரெளன், வில்லியம் ஓரம், ஜான் காஸாமேஜர் ஆகியோர் அடங்கிய குழுவின் முன்பாக ஆஜராகும்படி கட்டபொம்மனைப் பணித்தது. இதற்கிடையே சிவசுப்ரமணியனாரை சிறையிலிருந்து விடுவித்தும், கலெக்டர் ஜாக்சனைப் பணி இடைநீக்கம் செய்தும் ஆளுநர் எட்வர்ட் கிளைவ் உத்தரவிட்டார். குழுவின் முன்பாக 1798 டிசம்பர் 15 அன்று கட்டபொம்மன் ஆஜராகி இராமநாதபுரத்தில் நிகழ்ந்தவற்றை விளக்கினார். கட்டபொம்மன் குற்றவாளி அல்ல என்று குழு முடிவு செய்தது. ஜாக்சன் நிரந்தரப் பணிநீக்கம் செய்யப்பட்டு அவரது இடத்தில் புதிய ஆட்சியராக எஸ். ஆர். லூஷிங்டன் என்பவர் நியமிக்கப்பட்டார். கட்டபொம்மனும் நிலுவைத் தொகையில் 1080 பகோடாக்கள் நீங்களாக பிற நிலுவைத் தொகையினைச் செலுத்தினார்.

**கட்டபொம்மனும் பாளையக்காரர்களின் கூட்டமைப்பும்**

இதற்கிடையே, திண்டுக்கல்லின் கோபால நாயக்கர், ஆனைமலையின் யதுல் நாயக்கர் போன்ற அருகாமையிலிருந்த பாளையங்களை உள்ளடக்கிய தென்னிந்தியக் கூட்டமைப்பை சிவகங்கையின் மருதுபாண்டியர் ஏற்படுத்தினார். மருதுபாண்டியர் அதன் தலைவராகச் செயல்பட்டார். திருச்சிராப்பள்ளி அறிக்கை தயாரிக்கப்பட்டது. இக்கூட்டமைப்பு கட்டபொம்மனின் ஆர்வத்தைத் தூண்டியது. மருது சகோதரர்களை கட்டபொம்மன் சந்திப்பதை ஆட்சியர் லூஷிங்டன் தடுக்க முயன்றார். ஆனால் மருது சகோதரர்களும், கட்டபொம்மனும் இணைந்து ஆங்கிலேயரை எதிர்ப்பது என்று முடிவெடுத்தார்கள். கட்டபொம்மன் தனது செல்வாக்கைப் பயன்படுத்தி சிவகிரி பாளையக்காரரைத் தங்களோடு இணைக்க முயன்றார், அவர் அதற்கு மறுத்தார். அதனால் சிவகிரியை நோக்கி கட்டபொம்மன் முன்னேறினார். ஆனால் சிவகிரி பாளையத்தினர் கம்பெனிக்குத் கப்பம் கட்டிவந்தனர். அதனால் கட்டபொம்மனின் சிவகிரி நோக்கியப் படைநகர்வை தங்களுக்கு விடப்பட்ட சவாலாகவே கம்பெனியார் கம்பெனியார் கருதினர். கம்பெனி தனது படைகளை திருநெல்வேலி நோக்கிச் செல்ல உத்தரவிட்டது.

**பாஞ்சாலங்குறிச்சி முற்றுகை**

மே 1799இல் மதராஸில் இருந்த வெல்லஸ்லி பிரபு திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் மற்றும் மதுரை ஆகிய பகுதிகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த படைகளை திருநெல்வேலி நோக்கிச் செல்ல உத்தரவிட்டார். படைகளுக்கு மேஜர் பானெர்மென் தலைமையேற்றார். திருவிதாங்கூர் படைகளும் பிரிட்டிஷ் படைகளோடு இணைந்தன. கட்டபொம்மனைச் சரணடையக் கோரிய நிபந்தனையொன்று 1799 செப்டம்பர் 1 அன்று வழங்கப்பட்டது. கட்டபொம்மனின் பிடிகொடுக்காத பதிலால் மேஜர் பானெர்மென் கோட்டையைத் தாக்கினார். பானெர்மென் செப்டம்பர் 5 அன்று முழுப் படைகளையும் பாஞ்சாலங்குறிச்சியில் கொண்டுவந்து நிறுத்தினார். அவர்கள் கோட்டையின் அனைத்துத் தொடர்புகளையும் துண்டித்தனர். பானெர்மென் இராமலிங்கரை தூதனுப்பி கட்டபொம்மனைச் சரணடையுமாறு கேட்டுக்கொண்டார். கட்டபொம்மன் மறுத்தார். கோட்டையின் இரகசியங்கள் அனைத்தையும் இராமலிங்கர் சேகரித்தார். அவரது அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு பானெர்மென் தாக்குதல் உத்திகளை வடிவமைத்தார். கள்ளர்பட்டியில் நடைபெற்ற மோதலில் சிவசுப்ரமணியனார் கைது செய்யப்பட்டார்.

**கட்டபொம்மன் தூக்கிலிடப்படல்**

கட்டபொம்மன் புதுக்கோட்டைக்கு தப்பிச் சென்றார். பிரிட்டிஷார் அவரது தலைக்கு ஒரு வெகுமதியை நிர்ணயித்தார். எட்டையபுரம் மற்றும் புதுக்கோட்டை அரசர்களால் துரோகமிழைக்கப்பட்ட கட்டபொம்மன் இறுதியில் பிடிபட்டார். சிவசுப்ரமணியனார் நாகலாபுரத்தில் செப்டம்பர் 13 அன்று தூக்கிலிடப்பட்டார். பானெர்மென் விசாரணை என்ற பெயரில் ஒரு கேலிக்கூத்தை பாளையக்காரர்களின் முன்பாக அக்டோபர் 16 அன்று அரங்கேற்றினார். விசாரணையின்போது கட்டபொம்மன் தன்மீது சுமத்தப்பட்ட அனைத்துக் குற்றச்சாட்டுகளையும் ஏற்றுக்கொண்டார். திருநெல்வேலிக்கு மிக அருகேயுள்ள கயத்தாறின் பழையகோட்டைக்கு முன்பாக இருந்த புளியமரத்தில் சகப் பாளையக்காரர்களின் முன்னிலையில் கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்டார். இவ்வாறு போற்றுதலுக்குரியவராகத் திகழ்ந்த பாஞ்சாலங்குறிச்சியின் பாளையக்காரர் கட்டபொம்மனின் வாழ்க்கை முடிவுற்றது. அவர் மீது புனையப்பட்ட நாட்டுப்புறப்பாடல்கள் பலவும் அவரது நினைவை மக்களிடையே உயிர்ப்புடன் தக்கவைத்துக் கொள்ள உதவுகின்றன.

**ஈ. மருது சகோதரர்கள்**

பேரிய மருது என்ற வெள்ள மருது (1748-1801) மற்றும் அவரது தம்பியான சின்ன மருது (1753-1801) ஆகிய இருவரும் சிவகங்கையின் முத்துவடுகநாதரின் திறமையான படைத்தளபதிகளாவர். காளையார்கோவில் போரில் முத்துவடுகநாதர் இறப்பின் வேலுநாச்சியாருக்கு அரசுரிமையை மீட்டுக்கொடுக்க மருது சகோதரர்கள் அரும்பாடுபட்டனர். பதினெட்டாம் நூற்றாண்டின் கடைசி ஆண்டுகளில் மருது சகோதரர்கள் பிரிட்டிஷாரை எதிர்க்கத் திட்டமிட்டனர். கட்டபொம்மனின் இறப்பிற்குப் பின்னர் அவரது சகோதரர் ஊமைத்துரையோடு இணைந்து பணியாற்றினர். அவர்கள்

நவாபுக்குச் சொந்தமான களஞ்சியங்களைக் கொள்ளையிட்டதோடு கம்பெனியின் படைகளுக்குப் பெரும்சேதத்தையும், அழிவையும் ஏற்படுத்தினர்.

**மருது சகோதரர்களின் கலகம் (1800-1801)**

கட்டபொம்மனின் கலகம் 1799இல் ஒடுக்கப்பட்டபோதும், 1800இல் மீண்டும் கலகம் வெடித்தது. பிரிட்டிஷாரின் குறிப்புகளில் இது இரண்டாவது பாளையக்காரர் போர் என்று குறிப்பிடப்படுகிறது. இப்போரானது சிவகங்கையின் மருது பாண்டியர், திண்டுக்கல்லின் கோபால நாயக்கர், மலபாரின் கேரள வர்மா, மைசூரின் கிருஷ்ணப்பா மற்றும் தூண்டாஜி ஆகியோர் அடங்கிய கூட்டமைப்பால் வழிநடத்தப்பட்டது. விருப்பாட்சியில் ஏப்ரல் 18000இல் சந்தித்த அவர்கள் கம்பெனியாருக்கு எதிராகத் கிளர்ந்தெழ முடிவெடுத்தார்கள். கோயம்புத்தூரில் ஜூன் 1800ல் ஏற்பட்ட எழுச்சி அதிவேகமாக இராமநாதபுரத்திற்கும், மதுரைக்கும் பரவியது. நிலைமையைப் புரிந்துகொண்ட கம்பெனியார் மைசூரின் கிருஷ்ணப்பா மீதும், மலபாரின் கேரளவர்மா மீதும் இன்ன பிறர் மீதும் போர் தொடுக்கப்போவதாக அறிவித்தார்கள். கோயம்புத்தூர், சத்தியமங்கலம் மற்றும் தாராபுரம் ஆகிய பகுதிகளின் பாளையக்காரர்கள் பிடிக்கப்பட்டு தூக்கிலிடப்பட்டார்கள்.

கட்டபொம்மனின் சகோதரர்களான ஊமைத்துரையும், செவத்தையாவும் பிப்ரவரி 1801இல் பாளையங்கோட்டைச் சிறையிலிருந்து தப்பி கமுதியில் பதுங்கியிருப்பதை அறிந்த சின்னமருது அவர்களைத் தமது தலைமையிடமான சிறுவயலுக்கு அழைத்துச் சென்றார். பாஞ்சாலங்குறிச்சி கோட்டை மிக குறைந்த காலத்தில் மீண்டும் கட்டி முடிக்கப்பட்டது. காலின் மெக்கலே தலைமையிலான பிரிட்டிஷ் படைகள் ஏப்ரலில் மீண்டும் கோட்டையை முற்றுகையிட்டதால் அவர்கள் மருது சகோதரர்களிடம் சிவகங்கையில் அடைக்கலம் கோரினர். தப்பியோடியவர்களை (ஊமைத்துரையும், செவத்தையாவும்) ஒப்படைக்கும்படி மருது சகோரர்கள் வலியுறுத்தப்பட்டனர். ஆனால் அவர்கள் மறுத்துவிட்டார்கள். இதையடுத்து கர்னல் அக்னியூவும், கர்னல் இன்னஸும் சிவகங்கையை நோக்கி படை நடத்திச் சென்றனர். மருது சகோதரர்கள் ஜூன் 1801இல் நாட்டின் விடுதலையை முன்னிறுத்திய ஒரு பிரகடனத்தை வெளியிட்டனர் இதுவே 'திருச்சிராப்பள்ளி பேறறிக்கை' என்றழைக்கப்படுகிறது.

**1801ஆம் ஆண்டு பேறறிக்கை (திருச்சிராப்பள்ளி பேறறிக்கை)**

பிரிட்டிஷாருக்கு எதிராக மண்டல, சாதி, சமய, இன வேறுபாடுகளைக் கடந்து நிற்பதற்காக முதலில் விடுக்கப்பட்ட அறைகூவலே 1801ஆம் ஆண்டின் பேறறிக்கை ஆகும். இப்பேறறிக்கை திருச்சியில் அமையப்பெற்ற நவாபின் கோட்டையின் முன்சுவரிலும், ஸ்ரீரங்கம் கோவிலின் சுற்றுச் சுவரிலும் ஒட்டப்பட்டது. ஆங்கிலேயருக்கு எதிராகச் செயல்பட விழைந்த தமிழகப் பாளையக்காரர்கள் பலரும் ஒன்று திரண்டனர். சின்ன மருது ஏறத்தாழ 20,000 ஆட்களை ஆங்கிலேயர்களுக்கு எதிராகத் திரட்டினார். வங்காளம், சிலோன், மலேயா ஆகிய இடங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பிரிட்டிஷ் படைகள் விரைந்து வந்தன. புதுக்கோட்டை, எட்டையபுரம் மற்றும் தஞ்சாவூரின் அரசர்கள் பிரிட்டிஷாருடன் கைகோர்த்தார்கள். ஆங்கிலேயரின் பிரித்தாளும் கொள்கை என்ற உத்தி விரைவில் பாளையக்காரர்களின் படைகளில் பிரிவினையை ஏற்படுத்தியது.

**சிவகங்கையின் வீழ்ச்சி**

ஆங்கிலேயர்கள் மே 1801இல் தஞ்சாவூரிலும் திருச்சியிலும் இருந்த கலகக்காரர்களைத் தாக்கினார்கள். கலகக்காரர்கள் பிரான்மலையிலும், காளையார் கோவிலிலும் தஞ்சம் புகுந்தனர். அவர்கள் பிரிட்டிஷ் படைகளால் மீண்டும் தோற்கடிக்கப்பட்டனர். இறுதியாக வலுவான இராணுவமும், சிறப்பான தலைமைத்துவமும் கொண்ட ஆங்கிலேய கம்பெனியே விஞ்சி நின்றது. கலகம் தோற்றதால் 1801இல் சிவகங்கை இணைக்கப்பட்டது. இராமநாதபுரத்தின் அருகே அமைந்த திருப்பத்தூர் கோட்டையில் 1801 அக்டோபர் 24 அன்று மருது சகோதரர்கள் தூக்கிலிடப்பட்டனர். ஊமைத்துரையும், செவத்தையாவும் பிடிக்கப்பட்டு 1801 நவம்பர் 16இல் பாஞ்சாலங்குறிச்சியில் தலை துண்டிக்கப்பட்டனர். கலகக் காரர்களில் 73பேர் பிடிக்கப்பட்டு மலேயாவின் பினாங்கிற்கு நாடு கடத்தப்பட்டார்கள். பாளையக்காரர்கள் வீழ்ச்சியடைந்தாலும் அவர்களது வீரமும், தியாகமும் எதிர்காலச் சந்ததிகளை ஈர்ப்பதாக அமைந்தது. இதனால் மருது சகோதரர்களின் கலகம்

‘தென்னிந்தியப் புரட்சி’ என்று அழைக்கப்படுவதோடு தமிழக வரலாற்றில் தனித்துவம் பெற்றதாகவும் கருதப்படுகிறது.

**கர்நாடக உடன்படிக்கை-1801**

1799 மற்றும் 1800-1801ஆம் ஆண்டு பாளையக்காரர்களின் கலகம் அடக்கப்பட்டதன் விளைவு தமிழகத்திலிருந்த அனைத்து உள்ளூர் குடித்தலைமையினரின் எண்ணங ்களையும் நீர்த்துப் போகச் செய்தது. 1801 ஜூலை 31இல் ஏற்பட்ட கர்நாடக உடன்படிக்கையின் விதிகளின்படி, பிரிட்டிஷார் நேரடியாக தமிழகத்தின்மீது தங்கள் கட்டுப்பாட்டை ஏற்படுத்தியதோடு பாளையக்காரர் முறையும் முடிவுக்கு வந்ததுடன் அனைத்துக் கோட்டைகளும் இடிக்கப்பட்டு அவர்களது படைகளும் கலைக்கப்பட்டன.

**உ. தீரன் சின்னமலை (1756-1805)**

தீர்த்தகிரி என்ற பெயரோடு பழையக்கோட்டை மன்றாடியார் பட்டம் பெற்ற மதிப்புமிகு குடும்பத்தில் 1756இல் பிறந்த தீரன் சிலம்பு, வில்வித்தை, குதிரையேற்றம் மட்டுமல்லாமல் நவீன போர் முறைகளையும் கற்றுத் தேர்ந்தார். கொங்குப் பகுதியில் குடும்ப மற்றும் நிலப்பிரச்சனைகளுக்குத் தீர்வு வழங்குதல் போன்ற செயல்களில் ஈடுபட்டுவந்தார். அப்பகுதி மைசூர் சுல்தானின் கட்டுப்பாட்டில் இருந்தது, திப்புவின் திவான் முகம்மது அலி என்பவரால் வரி வசூலிக்கப்பட்டது. ஒருமுறை திவான் வசூலிக்கப்பட்ட வரிப்பணத்தோடு மைசூருக்குத் திரும்பிக்கொண்டிருந்த போது, தீர்த்தகிரி அவரை வழிமறித்து பரிப்பணம் முழுவதையும் பறித்துக்கொண்டார். இவர் முகம்மது அலியிடம் சிவமலைக்கும், சென்னிமலைக்கு இடையே இருந்த ‘சின்னமலையே’ வரிப்பணத்தைப் பிடுங்கிக்கொண்டதாக சுல்தானுக்குப் போய்ச் சொல் என்று அறிவுறுத்தினார். அதன்பிறகே ‘தீரன் சின்னமலை’ என்று அவர் அழைக்கப்படலானார். அவமதிப்புக்குள்ளான திவான் சின்னமலையைத் தாக்க படை அனுப்பினார். இருபடைகளும் நொய்யல் ஆற்றங்கரையில் மோதிக்கொண்டன. அதில் சின்னமலையே வெற்றிபெற்றார்.

பிரெஞ்சுக்காரர்களால் பயிற்சியளிக்கப்பட்ட தீரன் கொங்குமண்டலத்தைச் சார்ந்த ஆயிரக்கணக்கான இளைஞர்களோடு திப்புவுடன் இணைந்து பிரிட்டிஷாருக்கு எதிராகச் சண்டையிட்டார். திப்புவின் இறப்பிற்குப் பிறகு ஒரு கோட்டையை எழுப்பிய தீரன் சின்னமலை அவ்விடத்தைவிட்டு வெளியேறாமல் ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடினார். எனவே அவ்விடம் ‘ஓடாநிலை’ என்றழைக்கப்படுகிறது. அவர் பிடிபடாமலிருப்பதற்காக கொரில்லாப் போர் முறைகளைக் கையாண்டார். இறுதியாக அவரையும் அவர் சகோதரர்களையும் கைது செய்த ஆங்கிலேயர்கள் அவர்களை சங்ககிரியில் சிறைவைத்தனர். ஆங்கிலேய ஆட்சியை ஏற்க வறுபுறுத்தப்பட்டபோது அவர்கள் அதற்கு இணங்க மறுத்தனர். அதனால் 1805 ஜூலை 31 அன்று சங்ககிரி கோட்டையின் உச்சியில் அவர்கள் தூக்கிலிடப்பட்டனர்.

**வேலூர் புரட்சி-1806**

தேன்தமிழகத்தின் பாளையக்காரர்கள் அனைவரையும், ஒடுக்குவதற்கு முன்பாகவே கிழக்கிந்திய கம்பெனி 1792இல் திப்புவோடு ஏற்பட்ட போரின் முடிவில் சேலம் மற்றும் திண்டுக்கல் வருவாய் மாவட்டங்களைப் பெற்றுக்கொண்டது. 1799இல் நடந்த ஆங்கிலேய-மைசூர் போரின் முடிவில் கோயம்புத்தூர் இணைக்கப்பட்டது. 1798ஆம் ஆண்டு தஞ்சாவூரின் அரசர் அப்பகுதயின் இறையாண்மை உரிமையை ஆங்கிலேயருக்கு விட்டுக்கொடுத்து அதே ஆண்டு கப்பம்கட்டும் நிலைக்கும் தள்ளப்பட்டார். கட்டபொம்மன் எதிர்ப்பு(1799), மருது சகோதரர்களின் எதிர்ப்பு(1801) ஆகியவற்றை ஒடுக்கியப் பின்பு, பிரிட்டிஷார் ஆற்காட்டு நவாபை விசுவாசமற்றவர் என்று குற்றம்சுமத்தி அவர்மீது கட்டாயப்படுத்தி ஒரு ஒப்பந்தத்தைத் திணித்தனர். 1801இல் ஏற்பட்ட இவ்வொப்பந்தத்தின்படி, ஆற்காட்டு நவாப் வட ஆற்காடு, தென் ஆற்காடு, திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களை அவற்றை நிர்வகிக்கும் அதிகாரத்தோடு ஒப்படைத்துவிட வேண்டும் என்றானது.

## அ. இந்திய வீரர்களின் மனக்குறை

ஆனாலும் எதிர்ப்பு அடங்கவிடவில்லை. வெளியேற்றப்பட்ட சிற்றரசர்களும், நிலச்சுவான்களும் கம்பெனி அரசுக்கு எதிராக எதிர்காலத்திட்டம் குறித்து நிதானமாக சிந்தித்துக் கொண்டே இருந்தார்கள். இதன் விளைவாக வெளிப்பட்டதே 1806ஆம் ஆண்டு வேலூர் புரட்சியாகும். புரட்சியின் இறுதி நிகழ்வு அந்நிய ஆட்சியை தூக்கி எறிவதை நோக்கமாகக் கொண்டிருந்தது. பிரிட்டிஷாரின் இராணுவத்தில் சிப்பாயாகப் பணியாற்றியவர்களுக்கு குறைவான ஊதியமே வழங்கப்பட்டது. பதவி உயர்வுக்கான வாயப்புகள் குறைவாகவே இருப்பது ஆகியவற்றை நினைத்து கடுமையான கோபத்துடனே பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். தங்களின் சமூக மற்றும் சமய நம்பிக்கைகளுக்கு ஆங்கிலேய அதிகாரிகள் குறைவான மதிப்பளித்ததும், மேலும் அவர்களின் கோபத்தை வலுப்படுத்தியது. விவசாயப் பின்னணிகொண்ட வீரர்களின் வேளாண் சிக்கலும் அவர்களை மேலும் சிரமப்படுத்தியது. சோதனை அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்பட்ட நிலக்குத்தகை முறையில் ஒரு நிலையற்றதன்மைக் காணப்பட்டதாலும் 1805இல் பஞ்சம் ஏற்பட்டதாலும் பல சிப்பாய்களின் குடும்பங்கள் கடும் பொருளாதார நெருக்கடியைச் சந்தித்தன. திப்புவின் மகன்களும் அவர்தம் குடும்பத்தினரும் வேலூர் கோட்டையில் சிறைவைக்கப்பட வேளையில் தங்கள் அதிருப்தியை வெளிப்படுத்தும் அந்த வாய்ப்பு கூடிவந்தது. புரட்சி ஏற்படுவதற்கான இயக்க சக்தியாக தலைமைத்தளபதி (Commander-in-chief) சர் ஜான் கிரடாக் வெளியிட்ட புதிய இராணுவ விதிமுறை அமைந்தது.

புதிய விதிமுறைகளின்படி, இந்திய வீரர்கள் சீருடையிலிருக்கும்போது சாதி அடையாளங்களையோ, காதனிகளையோ அணியக்கூடாது என்று கேட்டுக்கொள்ளப்பட்டனர். அவர்கள் தாடையை முழுமையாகச் சவரம் செய்யவும் மீசையை ஒரே பாணியில் வைத்துக்கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டார்கள். புதிய வகை தலைப்பாகை எரிகிற தீயில் எண்ணெய் சேர்ப்பது போலானது. மிகவும் ஆட்சேபனைக்குரிய செயலாகக் கருதப்பட்டது. தலைப்பாகையில் வைக்கப்படும் விலங்கு தோலினால் ஆன இலட்சினையாகும். புதிய தலைப்பாகையை அணிவதில் தங்களுக்கு உடன்பாடில்லை என்று இந்திய சிப்பாய்கள் போதுமான முன்னெச்சரிக்கை விடுத்தனர். ஆனால் கம்பெனி நிர்வாகம் அதனை கவனத்தில் கொள்ளவில்லை.

## ஆ. புரட்சி வெடித்தல்

1806 ஜுலை 10 அன்று அதிகாலையிலேயே முதல் மற்றும் இருபத்தி மூன்றாம் படைப்பிரிவுகளின் இந்திய சிப்பாய்கள் துப்பாக்கிகளின் முழக்கத்தோடு புரட்சியில் இறங்கினர். கோட்டைக் காவற்படையின் உயர் பொறுப்புவகித்த கர்னல் பேன்கோர்ட் என்பவர்தான் முதல் பலியானார். அடுத்ததாக இருபத்தி மூன்றாம் படைப்பிரிவைச் சேர்ந்த கர்னல் மீக்காரஸ் கொல்லப்பட்டார். கோட்டையைக் கடந்து சென்று கொண்டிருந்த மேஜர் ஆர்ம்ஸ்ட்ராங் துப்பாக்கிகளின் முழக்கத்தைக் கேட்டார். சூழலை விசாரித்தறிய முற்பட்ட அவரது உடல் தோட்டாக்களால் துளைக்கப்பட்டது. ஏறத்தாழ பனிரெண்டுக்கும் அதிகமான அதிகாரிகள் அடுத்த ஒரு மணிநேரத்திற்குள் கொல்லப்பட்டார்கள். அவர்களில் லெப்டினென்ட் எல்லியும், லெப்டினென்ட் பாப்ஹாமும் பிரிட்டிஷ் மன்னரின் படைப்பிரிவைச் (Battalion) சேர்ந்தவர்களாவர்.

## ஜில்லஸ்பியின் கொடுங்கோன்மை

கோட்டைக்கு வெளியேயிருந்த மேஜர் கூட்ஸ் ஆற்காட்டின் குதிரைப்படைத் தளபதியாக இருந்த கர்னல் ஜில்லஸ்பிக்கு தகவல் கொடுத்தார். கேப்டன் யங்கின் தலைமையிலான குதிரைப் படைப்பிரிவுடன் காலை 9 மணியளவில் கர்னல் ஜில்லஸ்பி கோட்டையை வந்தடைந்தார். இதற்கிடையே புரட்சியாளர்கள் திப்புவின் மூத்த மகனான ஃபதே ஹைதரை புதிய மன்னராகப் பிரகடனம் செய்து மைசூர் சுல்தானின் புலி கொடியை கோட்டையில் ஏற்றியிருந்தனர். போர்விதிமுறைகள் எதையும் பொருட்படுத்தாத ஜில்லஸ்பி வீரர்களின் புரட்சியை வன்மையாக ஒடுக்கினார். நேரில் கண்ட ஒருவரின் வாக்குமூலப்படி, கோட்டையில் மட்டும் எண்ணூறு வீரர்கள் பிணமாகக் கிடந்ததாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. திருச்சிராப்பள்ளியிலும், வேலூரிலும் அறுநூறு வீரர்கள் விசாரணையை எதிர்நோக்கி சிறையிலடைக்கப்பட்டார்கள்.

### இ. புரட்சியின் பின்விளைவுகள்

நீதிமன்ற விசாரணைக்குப்பின் குற்றவாளிகள் என்று நிரூபிக்கப்பட்ட ஆறு நபர்கள் பீரங்கியில் கட்டியநிலையில் சுடப்பட்டும், ஐந்து நபர்கள் துப்பாக்கியால் சுடப்பட்டும், எட்டு நபர்கள் தூக்கிலிடப்பட்டும் கொல்லப்பட்டார்கள். திப்புவின் மகன்களை கல்கத்தாவுக்கு அனுப்ப உத்தரவிடப்பட்டது.இ கலவரத்தை அடக்குவதில் ஈடுபட்ட அதிகாரிகளுக்குப் பரிசுத்தொகையும் பதவி உயர்வும் வழங்கப்பட்டது. கர்னல் ஜில்லஸ்பிக்கு 7,000 பகோடாக்கள் வெகுமதியாக அளிக்கப்பட்டது. எனினும், தலைமைத் தளபதி ஜான் கிரடாக்கும், உதவித் தளபதி (Adjutant General) அக்னியூவும், ஆளுநர் வில்லியம் பெண்டிங்கும் புரட்சி நடக்கக் காரணமானவர்கள் என்று கருதப்பட்டு அவர்களைப் பணிநீக்கம் என்று கருதப்பட்டு அவர்களைப் பணிநீக்கம் செய்ததோடு, அவர்கள் இங்கிலாந்துக்கு திருப்பியழைத்துக் கொள்ளப்பட்டார்கள். புதிய இராணுவ விதிமுறைகள் திரும்பப் பெறப்பட்டது.

### ஈ. புரட்சியைப் பற்றிய மதிப்பீடு

வெளியிலிருந்து உடனடியாக எந்தவொரு உதவியும் கிடைக்காத காரணத்தினாலேயே வேலூர் புரட்சி தோல்வியுற்றது. சமீபகால ஆய்வுகளின் வழியாக நாம் அறிந்துகொள்வது யாதெனில் புரட்சிக்கான ஏற்பாடுகளை 23ஆம் படைப்பிரிவின் 2வது பட்டாளத்தைச் சேர்ந்த சுபேதார்களான ஷேக் ஆடமும், ஷேக் ஹமீதும், ஜமேதாரான ஷேக் ஹுஸைனும், 1ஆம் படைப்பிரிவின் 1ஆம் பட்டாளத்தைச் சேர்ந்த இரு சுபேதார்களும், ஜமேதார் ஷேக் காஸிமும் சிறப்பாகச் செய்திருந்ததாகத் தெரிகிறது. 1857ஆம் ஆண்டு பெரும் கலகத்திற்கான அனைத்து முன் அறிகுறிகளையும், எச்சரிக்கைகளையும் வேலூர் புரட்சி கொண்டிருந்தது. ஒரே வித்தியாசம் என்னவென்றால், கலகத்தைத் தொடர்ந்து எந்த உள்நாட்டுக் கிளர்ச்சியும் ஏற்படவில்லை. 1806ஆம் ஆண்டு புரட்சியானது வேலூர் கோட்டையுடன் முடிந்துவிடவில்லை. பெல்லாரி, வாலாஜாபாத், ஹைதிராபாத், பெங்களூரு, நந்திதுர்க்கம், சங்கரிதுர்க்கம் ஆகிய இடங்களிலும் அது எதிரொளித்தது.

## அலகு – 7

## காலனியத்துக்கு எதிரான இயக்கங்களும் தேசியத்தின் தோற்றமும்

**அறிமுகம்:**

1757 ஜுன் 23இல் நடைபெற்ற பிளாசிப் போரில் வங்காள நபாபான சிராஜ் - உத்-தௌலா ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனியால் தோற்கடிக்கப்பட்டார். ஆங்கிலேயப் படையின் தலைமைத் தளபதியான ராபர்ட் கிளைவ், வங்காளத்தின் நவாப் படைக்கு தலைமையேற்றிருந்தவரும் சிராஜ்-உத்-தௌலாவின் சித்தப்பாவுமான மீர் ஜாபரின் இரகசிய ஆதரவைப் பெற்று, பிளாசிப் போருக்கு வித்திட்டார். சிராஜ்-உத்0தௌலாவின் அடக்குமுறைக் கொள்கைகளால் அவதிப்பட்ட ஜகத் சேத்துகள் (வங்காளத்திலிருந்த வட்டிக்கு பணம் கொடுப்போர்) கிளைவுக்கு உதவினார்கள். பிளாசிப் போருக்குப் பிறகு வங்காளம் கொள்ளையடிக்கப்பட்டது. வங்காளத்தின் புதிய நவாபாக நியமிக்கப்பட்ட மீர் ஜபாரிடம் இருந்து கிழக்கிந்திய கம்பெனி 2 கோடியே 25 லட்சம் ரூபாயை 1757 மற்றும் 1760-க்கு இடைப்பட்ட காலகட்டத்தில் பெற்றது. இந்தத் தொகை பின்னர் ஆங்கிலேயர்களின் ஜவுளித்துறையை அதிவேகமாக இயந்திரமயமாக்க உதவிய பிரிட்டனின் தொழில் புரட்சிக்கு பயன்படுத்தப்பட்டது. அதே நேரத்தில் இந்தியாவில் தொழில்கள் முடங்கவும் பிரிட்டனில் தயாரிக்கப்பட்ட பொருட்களுக்கான சந்தையை இந்தியாவில் உருவாக்கவும் வழி வகுத்தது. இந்தியா, கிழக்கிந்திய கம்பெனியால் கொள்ளையடிக்கப்படும் செயலானது மேலும் 190 ஆண்டுகளுக்கு நீடித்தது.

பிளாசிப் போருக்குப் பிறகு எல்லையை விரிவாக்கும் கொள்கையை ஆங்கிலேயர் பின்பற்றினர். வெகு விரைவில் இந்திய துணைக்கண்டத்தின் எஞ்சிய பகுதிகள் அவர்களின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது. நில வருவாய் நிர்வாகம், இராணுவம், காவல்துறை, நீதிமுறை மற்றும் ஆட்சி சார்ந்த இதர நிறுவனங்களில் ஆங்கிலேயர் முறையான மாற்றங்களைக் கொண்டு வந்தனர்.

காலனி ஆதிக்கச் சுரண்டல் மற்றும் காலனிய அரசியல் மற்றும் பொருளாதார ஆதிக்கத்துக்கு எதிரான இந்திய நிலைப்பாடு இரண்டு கூறுகளைக் கொண்டிருந்தது. 18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி மற்றும் 19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இருந்த இந்திய நிலைப்பாடு சீரமைக்கப்படும் இயல்பைப் பெற்றிருந்தது. பழங்குடியினர் புரட்சி மற்றும் விவசாயிகளின் கிளர்ச்சி இரண்டுமே பழைய முறைமையை நிலைநிறுத்தும் முயற்சியாகவே இருந்தது. இரண்டாவது நிலைப்பாடு 19 ஆம் நூற்றாண்டின் இரண்டாவது பாதியில் இந்திய தேசியவாதத்தின் வடிவத்தில் தோன்றியது. இந்த தேசியவாதமானது இந்தியாவை ஒரே நாடாக உருவகம் செய்துகொண்டு ஒற்றுமை உணர்வையும் தேசிய ஆர்வத்தையும் வலியுறுத்தியது.

இந்திய துணைக் கண்டத்தில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கம் மற்றும் மத்தியிலும் தொடர்ந்து இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக நடந்த பல்வேறு போராட்டங்கள் மற்றும் நிலைப்பாடுகளை விளக்குவதாக இந்தப் பாடம் அமைந்துள்ளது. மேலும் இதில் ஆங்கிலேய ஆட்சியின் தன்மை, அதன் கொள்கைகளும் நிர்வாக முறைகளும் அவற்றால் இந்தச் சமூகத்தின் பல்வேறு பிரிவுகளுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் ஆகியன பற்றி விரிவாகப் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

**விவசாயிகள் மற்றும் பழங்குடியினரின் எதிர்ப்பு:**

பல்வேறு சமூக – சமய சீர்திருத்த இயக்கங்களில் ஈடுபட்டு மேற்கத்திய நவீன கருத்துகள் மற்றும் பகுத்தறிவுவாதம் ஆகியவை குறித்து இந்தியாவின் நகர்ப்புற உயர்குடி மக்கள் முனைப்பாக இருந்த காலகட்டத்தில் ஊரகப்பகுதிகளில் ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக மிக வலுவுடைய மற்றும் தீவிரமான போக்கு நிலவியது. பாரம்பரியமான உயர்குடி மக்களும் விவசாயிகளும் பழங்குடியின மக்களுடன் இணைந்து கிளர்ச்சி செய்தனர். இந்தியாவிலிருந்து ஆங்கிலேயர்களை வெளியேற்றுவதை அவர்கள் கோராமல் காலனியாதிக்கத்திற்கு முன்னிருந்த நிலையை மீண்டும் நிலைநிறுத்துவதை வலியுறுத்தினார்கள்.

நிலம் தொடர்பான தனிச்சொத்துரிமைகள் பற்றிய கொள்கை, நில வருவாயை தீவிரமாக வசூல் செய்வது, பழங்குடியினர் அல்லாதவர்கள் பழங்குடியினரின் நிலத்தை ஆக்கிரமிப்பு செய்வது, உள்ளூர் மக்களின் சமூக – சமய வாழ்க்கையில் கிறித்துவ சமயப்பரப்பாளர்களின் தலையீடு ஆகிய பல பிரச்சனைகள் ஆங்கிலேயருக்கு எதிராக அமைதியின்மை உருவாக வழிவகுத்தன. பழங்குடி மக்கள் குறிப்பாக அவர்களை படையெடுப்பாளர்களாகவும், ஆக்கிமிப்பாளர்களாகவும் காணத் தொடங்கினார்கள். பல்வேறு பழங்குடியின மற்றும் விவசாயிகளின் கிளர்ச்சிகளுக்கான அடிப்படையாக இருந்தது என்னவெனில் அவர்கள் அனைவரும் தங்கள் வேதனைகளுக்குக் காரணமான மற்றும் கண்ணுக்குத் தெரியும் காரணியை உடனடியாக அகற்றத் துடித்ததேயாகும். ஆங்கிலேய ஆட்சியில் கிட்டத்தட்ட ஒரு நூறுக்கும் குறையாத எண்ணிக்கையில் விவசாயிகளின் கிளர்ச்சிகள் நடந்தன. அவற்றைக் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம்.

1. **மறு சீரமைத்தலுக்கான கிளர்ச்சிகள்**:

   இந்த வகையான போராட்டம் பழைய முறைமைகள் மற்றும் பழைய சமூக உறவுகளை நிலைநிறுத்தும் முயற்சிகள் தொடர்புடையவை ஆகும்.

2. **சமய இயக்கங்கள்**:

   இத்தகைய இயக்கங்களுக்கு தலைமையேற்ற சமயத்தலைவர்கள் சமயச் சிந்தனைகளின் அடிப்படையில் சமூகத்தை சீரமைப்பதன் மூலம் உள்ளூர் மக்களின் விடுதலைக்காகப் போராடினார்கள்.

3. **சமூகக் கொள்ளை**:

   இத்தகைய இயக்கங்களின் தலைவர்கள் ஆங்கிலேயர்களாலும் பாரம்பரிய உயர்குடியினராலும் குற்றவாளிகளாகக் கருதப்பட்டனர். ஆனால் அச்சமூகத்தைச் சார்ந்த மக்கள் அவர்களைத் தங்களுடைய மேம்பாட்டுக்காக உழைத்த நாயகர்களாகவும், சாதனையாளர்களாகவும் கண்டனர்.

4. **மக்களின் கிளர்ச்சி:**

   பொதுவாக இவை தலைவர்கள் இல்லாமலும் திடீரெனவும் எழுந்த புரட்சி இயக்கங்களாகும்.

**வருவாய் முறையில் மாற்றங்கள்:**

இந்தியா முழுவதிலும் செயல்பாட்டில் இருந்த முகலாய வருவாய் அமைப்பை கிழக்கிந்திய கம்பெனி மறுசீரமைத்ததையடுத்து விவசாயிகளின் நிதிச்சுமைகள் பெரிதும் அதிகரித்தன. ஆங்கிலேய ஆட்சிக்கு முன் இந்தியாவில் தனிச்சொத்துரிமை பற்றிய எந்த விரிவான திட்டமும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. அதே போன்று வருவாயை வசூலித்து அரசிடம் செலுத்த வேண்டியவர்களாக விளங்கிய ஜமீன்தார்களும் வேறு பலரும் எப்போதுமே நிலத்துக்கான சொத்துரிமையைப் பெற்றிருக்கவில்லை. எனவே நிலம் பற்றிய காலப்பகுப்புக்கு ஆங்கிலேயர் அறிமுகம் செய்த மாற்றங்கள், விவசாயிகளின் உறவுகளில் முக்கிய விளைவுகளை ஏற்படுத்தியது.

**நிலத்தைக் கீழ்க்குத்தகைக்கு விடுவது:**

நிலத்தைக் குத்தகைக்கு விடுவதும் கீழ்க்குத்தகைக்கு (Subletting) விடுவதும் விவசாய உறவுகளைப் பெரிதும் சிக்கலாக்கியது. ஜமீன்தாரர் தன்னிடம் இருந்த நிலத்தைப் பெரும்பாலும் தன்னைச் சார்ந்திருந்த நிலப்பிரிவுக்களுக்கு கீழ்க்குத்தகைக்கு விட்டார். பதிலுக்கு நிலப்பிரபு, விவசாயிகளிடமிருந்து ஒரு குறிப்பிட்ட தொகையை வசூலித்துக் கொடுப்பார். இதனால் விவசாயிகள் மீதான வரிச்சுமை அதிகரித்தது.

**விவசாயிகளின் கிளர்ச்சி:**

19 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வெடிக்கத் தொடங்கிய விவசாயிகளின் கிளர்ச்சிகள் இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சி முடிவுக்கு வரும்வரை தொடர்ந்தன. இவற்றில் இந்திய மக்களின்

சமூக-சமய வாழ்க்கையில் ஆங்கிலேய ஆட்சியை ஒரு அத்துமீறலாகக் கருதிய சமயத்தலைவர்களே பெரும்பான்மையான கிளர்ச்சிகளுக்குத் தலைமையேற்றனர்.

**ஃபராசி இயக்கம்:**

ஹாஜி ஷரியத்துல்லா என்பவரால் 1818 ஆம் ஆண்டு ஃபராசி இயக்கம் தொடங்கப்பட்டது. வங்காளத்தின் கிழக்குப் பகுதிகளில் தொடங்கப்பட்ட இவ்வமைப்பின் உறுப்பினர்களை இஸ்லாத்துக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டாம் என்று கேட்டுக்கொண்டார். இதனால் அவர் ஜமீன்தார்களுடனும், அடுத்து விவசாயிகள் கிளர்ச்சியை ஒடுக்க முயன்ற ஜமீன்தார்களுக்கு சலுகை காட்டிய ஆங்கிலேயருடனும் நேரடிமோதலை மேற்கொள்ள வழிவகுத்தது. 1839 இல் ஷரியத்துல்லா மறைந்த பிறகு இந்த கிளர்ச்சிக்கு அவரது மகன் டுடு மியான் தலைமை ஏற்றார். அவர் வரி செலுத்த வேண்டாம் என்று விவசாயிகளை கேட்டுக்கொண்டார். பொதுமக்கள் நிலத்தையும் அனைத்து வளத்தையும் சரிசமமாக அனுபவிக்கவேண்டும் என்ற எளிய கொள்கையில் இந்த அறிவிப்பு பிரபலமடைந்தது. சமத்துவ இயல்பிலான மதம் குறித்து வலியுறுத்திய டுடு மியான், “நிலம் கடவுளுக்குச் சொந்தமானது“ என்று அறிவித்தார். எனவே வாடகை வசூலிப்பது அல்லது வரி விதிப்பது ஆகியன இறைச்சட்டத்துக்கு எதிரானது என்றார். கிராம அமைப்புகளின் கட்டமைப்பு மூலமாக பெரும் எண்ணிக்கையிலான விவசாயிகள் ஒன்றுதிரட்டப்பட்டனர். 1840 கள் மற்றும் 1850 கள் முழுவதும் ஜமீன்தாரர்கள் மற்றும் பயிரிடுவோர் மத்தியில் கடுமையான மோதல்கள் நிலவின. 1862 இல் டுடு மியான் மறைந்தபிறகு 1870 களில் நோவா மியான் என்பவரால் இந்த இயக்கம் மீண்டும் உயிர்பெற்றது.

**பரசத்தில் வஹாபி கிளர்ச்சி:**

வஹாபி கிளர்ச்சி என்பது ஆங்கிலேய ஆட்சிக்கும் நிலப்பிரபுக்களுக்கும் எதிராக துவங்கப்பட்டதாகும். வங்காளத்தில் பரசத் பகுதியில் 1827 வாக்கில் தோன்றியது. வஹாபி போதனைகளால் பெரிதும் ஆழமாக ஈர்க்கப்பட்டவராக திகழ்ந்த இசுலாமிய மதபோதகர் டிடு மீர் என்பவர் இந்தக் கிளர்ச்சிக்குத் தலைமையேற்றார். ஜமீன்தாரி முறையால் ஒடுக்கப்பட்ட குறிப்பாக இசுலாமிய விவசாயிகள் மத்தியில் அவர் செல்வாக்குமிக்க நபராகத் திகழ்ந்தார். எனினும் பெரும்பான்மையான ஜமீன்தாரர்கள் இந்துக்களாக இருந்ததால் இந்தக் கிளர்ச்சிக்கு இந்த எதிர்ப்புச் சாயம் பூசப்பட்டது.

1831 நவம்பர் 6 இல் புர்னியா நகரில் முதல் பெரும் தாக்குதல் நடத்தப்பட்டது. டிடு மீர் உடனடியாக ஆங்கிலேய ஆட்சியில் இருந்து விடுதலை பெற்றதாக அறிவித்தார். உடனடியாக ஆங்கிலேயப் படையிடம் இருந்து பதிலடி கிடைத்தது. பெரும் எண்ணிக்கையிலான துருப்புகள் நர்கெல்பேரியாவுக்கு அனுப்பப்பட்டன. இப்போராட்டத்தில் ஐம்பது வீரர்களுடன் டிடு மீர் கொல்லப்பட்டார்.

இறுதியில் கிராமப்பகுதி சமூகத்தில் விவசாயிகள் கிளர்ச்சி மூலமாக அதிகார கட்டமைப்பு பற்றிய தெளிவான விழிப்புணர்வும் அதிகாரத்தை மறுசீரமைப்பு செய்ய வேண்டிய மனதிடமும் வெளிப்பட்டது. அடக்குமுறையின் அரசியல் மூலம் பற்றி கிளர்ச்சியாளர்கள் ஓரளவு அறிந்திருந்தனர். ஜமீன்தாரர் வீடுகள், அவர்களின் தானியக் கிடங்குகள், வட்டிக்குப் பணம் கொடுப்போர் மற்றும் வர்த்தகர்கள் ஆகியோருக்கெதிரான நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபட்டனர். சில நேரங்களில் இத்தகைய அடக்குமுறையில் ஈடுபட்ட உள்ளூர் முகவர்களைப் பாதுகாக்க முனைந்த ஆங்கிலேய அரசு நிர்வாகமும் தாக்குதலுக்கு உள்ளானது. இந்த பண்புகளே 20 ஆம் நூற்றாண்டின் விவசாய இயக்கத்திலும் பிரதிபலித்தன.

**பழங்குடியினர் கிளர்ச்சி:**

காலனி ஆட்சியின் கீழ் முதன் முறையாக இந்திய வரலாற்றில் அரசு வனங்கள் குறித்த நேரடித் தனியுரிமை வேண்டும் என்று கோரியது. வனங்களை வர்த்தகமயமாக்கும் நடவடிக்கைகளுக்கு ஆங்கிலேய ஆட்சியில் ஊக்கம் கிடைத்ததன் காரணமாகப் பாரம்பரிய பழங்குடியின நடைமுறை தனது கட்டுக்கோப்பை இழந்தது. இதனால் பழங்குடியினப் பகுதிகளில் பழங்குடியினரல்லாதோரான வட்டிக்குப்பணம் கொடுப்போர், வர்த்தகர்கள், நில ஆக்கிரமிப்பாளர்கள், மற்றும் ஒப்பந்ததாரர்கள் போன்றோர் ஊடுருவுவதற்கு அது ஊக்கம் தந்தது. இதனால் ஆதிவாசி நிலத்தின் பெரும்பகுதி

இழக்கப்பட்டு அவர்கள் தாங்கள் பாரம்பரியமாகக் குடியிருந்து வந்த பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து வாழநேர்ந்தது.

எனவே அமைதியான பழங்குடியினர் வாழ்க்கையில் மாற்றங்களை அறிமுகம் செய்தோர் அல்லது பழங்குடியின மக்களின் அப்பாவித்தனத்தைத் தேவையின்றி தங்களுக்குச் சாதகமாக பயன்படுத்தியோருக்கு எதிரானதொரு பதில் நடவடிக்கையே பழங்குடியினக் கிளர்ச்சியாகும்.

**பழங்குடியினர்**

**இந்தியாவில் "பழங்குடியினர்" என்ற வார்த்தையின் நவீனப் பயன்பாடு சாதிய அடிப்படையில் வகுக்கப்பட்ட எஞ்சிய இந்திய சமூகத்தை விடுத்து அவர்களின் அடையாளத்தை விவரிப்பதைக் கட்டுப்படுத்துகிறது. அவ்வப்போது தனிப்பட்ட குழுக்களைக் குறிப்பதற்காக இந்த வார்த்தைப் பெரிதும் தவறாகப் பயன்படுத்தப்படுகிறது. இந்தியாவில் உள்ள பழங்குடியினர் இந்திய சமூகத்தின் ஒரு பகுதியாக இருந்தனர். இந்திய வேளாண்மைச் சூழலுக்கு ஏற்றவாறு அவர்கள் இடம்பெயர் வேளாண்மை முறையைப் பின்பற்றினர்.**

**கோல் கிளர்ச்சி:**

ஜார்க்கண்ட் மற்றும் ஒடிஷா ஆகிய பகுதிகளிலுள்ள சோட்டா நாக்பூர் மற்றும் சிங்பும் ஆகிய இடங்களில் 1831 – 32 ஆம் ஆண்டுகளில் நடந்த மிகப்பெரிய பழங்குடியின கிளர்ச்சி கோல் கிளர்ச்சியாகும். இது பிந்த்ராய் மற்றும் சிங்ராய் தலைமையில் நடந்தது. சோட்டா நாக்பூர் பகுதியின் அரசர் வருவாய் வசூலிக்கும் பணியை வட்டிக்குப் பணம்கொடுப்போரிடம் குத்தகைக்கு விட்டிருந்தார். அதிக வட்டிக்கு கடன்கொடுத்தல் மற்றும் பழங்குடியினரைக் கட்டாயப்படுத்தி அவர்களின் பகுதிகளிலிருந்து வெளியேற்றுதல் போன்றவை கோல் இனத்தவரிடையே கோபத்தை ஏற்படுத்தியது. வெளியாட்களின் சொத்துக்கள் மீது தாக்குதல்கள் நடத்துதல், கொள்ளையடித்தல், கலவரம் செய்தல் ஆகிய வழிகளில் கோல்களின் தொடக்ககாலப் போராட்டம் மற்றும் எதிர்ப்புகள் அமைந்தன. அதனை அடுத்து வட்டிக்குப் பணம் கொடுப்போர் மற்றும் வர்த்தகர்கள் ஆகியோர் கொல்லப்பட்டனர். மேளங்களை முழுங்கியும் அம்புகளை எய்தும் வெளியாட்களை வெளியேறச் செய்யும் எச்சரிக்கைகளை செய்தும் பல வகைகளில் பழங்குடியினத் தலைவர்கள் தங்கள் கிளர்ச்சி பற்றிய செய்தியைப் பரப்பினர்.

1831 – 32 ஆம் ஆண்டில் கோல் இனத்தவர்கள், அரசு அதிகாரிகள் மற்றும் வட்டிக்குப் பணம் கொடுப்போருக்கு எதிரான கிளர்ச்சியை நடத்தினர். கோல் கிளர்ச்சியாளர்கள் அரசரின் அரண்மனையை தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர். அங்கு தங்களின் சுதந்திர அரசை உருவாக்கும் முயற்சியிலும் அவர்கள் வெற்றி பெற்றனர். ஆங்கிலேய அரசு பெரிய அளவிலான வன்முறை மூலம் இந்தக் கிளர்ச்சியை அடக்கியது.

**சாந்தலர்களின் கிளர்ச்சி:**

இந்தியாவின் கிழக்குப் பகுதிகளில் பரவலாக வாழ்ந்துவந்த சாந்தலர்கள் நிரந்தர குடியிருப்புகளின் கீழ் ஜமீன்களை உருவாக்குவதற்காக தங்கள் பூர்வீக இடத்தை விட்டு இடம்டபெயரவேண்டிய நிர்ப்பந்திக்கப்பட்டதால் ராஜ்மஹால் மலையைச் சுற்றிலும் இருந்த வனப்பகுதியைவிட்டு கட்டாயப்படுத்தி வெளியேற்றப்பட்டனர். ரயில்வே கட்டுமானப் பணியில் ஈடுபட்டிருந்த ஐரோப்பிய அதிகாரிகள் மற்றும் உள்ளூர் காவலர்களால் அவர்கள் ஒடுக்கப்பட்டனர். வெளியாட்களால் வாழ்விடங்களை விட்டு வெளியேற்றப்பட்ட சாந்தலர்கள் தங்கள் வாழ்வாதாரத்துக்காக வட்டிக்குப்பணம் கொடுப்போரைச் சார்ந்துவாழ நிர்பந்திக்கப்பட்டனர். விரைவில் கடன் மற்றும் பணம் பறித்தல் ஆகிய தீய வலையில் அவர்கள் சிக்கத்தொடங்கினர். மேலும், ஊழல்கறைபடிந்த ஆங்கிலேய நிர்வாகத்தின் கீழ் தங்களின் நியாயமான குறைகளுக்கு நீதி கிடைக்கமுடியாத சூழலில் தாங்கள் புறக்கணிக்கப்பட்டதாக சாந்தலர்கள் உணர்ந்தனர்.

**வெளிப்பாடு:**

1854 ஆம் ஆண்டு வாக்கில் பல இடங்களில் சமூகக் கொள்ளை நடவடிக்கைகள் பீர் சிங் என்பவரின் தலைமையில் நடந்தன. மகாஜன்கள் மற்றும் வர்த்தகர்களுக்கு எதிராகக் குறிவைத்து

இவை நடந்தன. ஜமீன்தாரி நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்ட பீர் சிங் அங்கு அடித்துத் துன்புறுத்தப்பட்டு அவமானப்படுத்தப்பட்டார். மகாஜன்கள் மற்றும் வர்த்தகர்களைக் குறிவைத்து மேலும் பல கொள்ளைச் சம்பவங்களை அரங்கேற்றி பீர் சிங்கும் அவரது நண்பர்களும் இதற்கு பதிலடி கொடுத்தனர். அடக்குமுறை நடவடிக்கைகள் சாந்தலர்களை மேலும் ஆத்திரமூட்டியது.

1855 இல் சித்து மற்றும் கனு ஆகிய இரண்டு சாந்தலர் சகோதரர்கள் கிளர்ச்சியைத் தலைமையேற்று நடத்தவேண்டி தங்களுக்கு கடவுளிடமிருந்து தேவசெய்தி கிடத்ததாக அறிவித்தனர். அவர்கள் மகாஜன்கள் மற்றும் தரோகாக்களை (காவல்துறை அதிகாரிகளை) முற்றிலுமாக கொன்றுகுவிக்கவும், நாட்டில் வசதிபடைத்த பெங்காலிகளையும் ஜமீன்தாரர்கள் மற்றும் வர்த்தகர்களை அழித்தொழிக்கவும், அவர்களை அழிக்க முயன்ற அனைவரையும் அழிக்கவும், அவர்களின் எதிரிகளின் குண்டுகள் நீராக மாறிவிடும்" என்று கடவுள் உத்தரவிட்டதாக 1855 ஜூன் 30 இல் அவர்கள் தெரிவித்தனர். சாந்தலர்களின் கூட்டத்தால் இரண்டு தரோகாக்கள் (காவல்துறை அதிகாரிகள்) கொல்லப்பட்டனர்.

1855 ஆம் ஆண்டு ஜுலை மாதத்தில் இந்தக் கிளர்ச்சி மகாஜன்கள், ஜமீன்தாரர்கள், ஆங்கிலேய அதிகாரிகள் ஆகியோருக்கு எதிரான வெளிப்படையான கிளர்ச்சியாக உருவெடுத்தது. வில் மற்றும் விஷம் தடவிய அம்புகளை ஏந்தியவாறும், கோடரிகள், கத்திகள் ஆகியவற்றுடனும் ராஜ்மகால் மற்றும் பாகல்பூர் நோக்கி கம்பெனி ஆட்சிக்கு முடிவு கட்டப்போவதாக முழக்கமிட்டபடி பேரணியாகச் சென்றனர். இதனையடுத்து கிராமங்கள் மீது அதிரடி நடவடிக்கை எடுத்த ஆங்கிலேயர் சொத்துக்களைச் சூறையாடினார்கள். இறுதியாக கிளர்ச்சி முழுமையாக ஒடுக்கப்படும் முன் கிட்டத்தட்ட 15 முதல் 25 ஆயிரம் கிளர்ச்சியாளர்கள் படுகொலை செய்யப்பட்டனர். இந்த நிகழ்வுகளையடுத்து பழங்குடியின மக்கள் பற்றிய தங்கள் கொள்கைகளை ஆங்கிலேய அரசு மறுசீரமைப்புச் செய்தது. 1855 இல் சாந்தலர்கள் வசமிருந்த பகுதிகளை ஒழுங்குமுறைப்படுத்துவது பற்றிய சட்டம் நிறைவேற்றப்பட்டது. சாந்தல் பர்கானா மண்டலம் என்ற தனி மண்டலத்தை உருவாக்கும் வகையில் இந்தச் சட்டம் நிறைவேறியது.

**முண்டா கிளர்ச்சி:**

ராஞ்சியில் இக்காலக்கட்டத்தில் நடைபெற்ற
உலுகுலன் கிளர்ச்சி (பெரிய கலகம்) பழங்குடியினக் கிளர்ச்சிகளில் மிக முக்கியமானதாக அறியப்படுகிறது. கூட்டாக நிலத்தை வைத்துக்கொண்டு குண்ட்கட்டி என்ற முறையில் விவசாயம் செய்வதில் முண்டா மக்கள் பெயர்பெற்றவர்கள். நிலத்துக்கான தனிச்சொத்துரிமையின் அறிமுகம் வர்த்தகர்கள் மற்றும் வட்டிக்குப்பணம் கொடுப்போரின் ஊடுருவல் ஆகியவற்றின் காரணமாக இந்த நடைமுறை முற்றிலும் சிதைந்தது. தோட்டங்களில் வேலைசெய்ய முண்டா இனமக்கள் கொத்தடிமைகளாக வலுக்கட்டாயமாக பணியில் அமர்த்தப்பட்டனர். ஊழல்கறைபடிந்த காவல்துறையினர், நீதி கிடைப்பதில் சிக்கல், கிறித்தவ சமயப்பரப்பாளர்கள் தொடர்பான மாயை ஆகியன முண்டா இன மக்களின் துயரங்களை மேலும் அதிகரித்தது. 1890 களில் பங்குடியின மக்களை அவர்கள் வாழும் பகுதிகளிலிருந்து இடம்பெயரச் செய்வது மற்றும் அவர்களைக் கட்டாயத் தொழிலாளிகளாக உருவாக்குவது ஆகியவற்றை பழங்குடியினத் தலைவர்கள் எதிர்த்தனர்.

பிர்சா முண்டா தம்மை கடவுளின் தூதர் என்று அறிவித்த உடன் இந்த இயக்கத்துக்கு ஊக்கம் கிடைத்தது. தமக்கு இறைத் தொடர்பு இருப்பதாகக் கூடிய பிர்சா அண்டவெளியின் அதீத சக்திகளின் மூலமாக முண்டா இன மக்களின் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணப்போவதாகவும் மக்களின் அரசை நிறுவப்போவதாகவும் பிர்சா உறுதியளித்தார். பிர்சா முண்டாவின் பிரபலத்தைப் பயன்படுத்தி மேலும் அதிக எண்ணிக்கையில் பிர்சா இன மக்களை இந்த நோக்கத்துக்காக ஒன்றிணைக்க முண்டா தலைவர்கள் முயன்றனர். இரவுக் கூட்டங்கள் பல நடத்தப்பட்டு கிளர்ச்சி ஒன்றுக்கு திட்டமிடப்பட்டது. 1889 ஆம் ஆண்டு கிறிஸ்துமஸ் நாளில் அவர்கள் வன்முறையை கையில் எடுத்தனர். கட்டடங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. கிறித்தவ தூதுக்குழுக்கள் மற்றும் கிறித்தவர்களாக மதம் மாறிய முண்டாக்கள் மீது அம்பு எறிந்து தாக்குதல்கள் நடந்தன. அதன் பின் காவல் நிலையங்களும் தாக்கப்பட்டன. அரசு அதிகாரிகளும் தாக்கப்பட்டனர். அடுத்த சில மாதங்களுக்கு இதுபோன்ற தாக்குதல்கள் தொடர்ந்து நடத்தப்பட்டன. இறுதியாக இந்த கிளர்ச்சி முடக்கப்பட்டது. 1900-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் கைது செய்யப்பட்ட பிர்சா முண்டா பின்னர் சிறையில் உயிர்நீத்தார். பழங்குடியினரின் தலைவராக அறியப்பட்ட பிர்சா முண்டா இன்றளவும் பல நாட்டுப்புறப் பாடல்களில் போற்றப்படுகிறார். இந்த முண்டா கிளர்ச்சியை அடுத்து ஆங்கிலேய அரசு

பழங்குடியின நிலம் பற்றிய கொள்கையை வகுக்க முனைந்தது. 1908 இல் சோட்டா நாக்பூர் குத்தகைச் சட்டம் நிறைவேற்றப்பட்டு பழங்குடியினர் நிலத்தில் பழங்குடியினரல்லாதோர் நுழைவது தடுக்கப்பட்டது.

**1857 ஆம் ஆண்டின் பெருங்கலகம்:**

1857 ஆம் ஆண்டில் ஆங்கிலேய ஆட்சிக்கு பெரும் சவால் ஏற்பட்டது. தொடக்கத்தில் வங்காள மாகாணத்தில் சிப்பாய் கலகமாக உருவெடுத்த இந்த கலகம் பின்னர் குறிப்பாக விவசாயிகள் உள்ளிட்ட பெரும் எண்ணிக்கையிலான மக்கள் பங்கேற்றதை அடுத்து நாட்டின் இதர பகுதிகளுக்கும் பரவியது. 1857 – 58 ஆம் ஆண்டுகளில் நடந்த நிகழ்வுகள் கீழ்க்கண்ட காரணங்களால் முக்கியத்துவம் பெற்றன.

1. இராணுவ வீரர்களுடன் ஆயுதமேந்திய படைகளும் இணைந்து நடந்த முதல் மாபெரும் புரட்சி இதுவேயாகும்.

2. இராணுவ வீரர்களுடன் ஆயுதமேந்திய படைகளும் இணைந்து நடந்த முதல் மாபெரும் புரட்சி இதுவேயாகும்.

3. இருதரப்புகளிலும் தூண்டப்பட்டதால் முன்னெப்பொழுதும் இல்லாத அளவுக்கு கிளர்ச்சியில் வன்முறை வெடித்தது.

4. கிழக்கிந்திய கம்பெனியின் பணியினை புரட்சி முடிவுக்குக் கொண்டுவந்ததுடன் இந்திய துணைக் கண்டத்தை நிர்வகிக்கும் பொறுப்பை பிரிட்டிஷ் அரசு கையில் எடுத்தது.

**காரணங்கள்:**

**ஆங்கிலேய இந்தியாவின் இணைப்புக் கொள்கை:**

1840 மற்றும் 1850 களில் இரண்டு முக்கியக் கொள்கைகளின் மூலம் அதிக நிலப்பகுதிகள் இணைத்துக் கொள்ளப்பட்டன.

**மேலதிகாரக் கொள்கை:**

ஆங்கிலேயர் தங்களை வானளாகிய அதிகாரங்கள் கொண்ட உயர் அதிகார அமைப்பாக கருதினார்கள். உள்நாட்டு ஆட்சியாளர்கள் ஊழல்வாதிகள் மற்றும் திறனற்றவர்கள் என்ற அடிப்படையில் புதிய நிலப்பகுதிகள் இணைக்கப்பட்டன.

**வாரிசு இழப்புக்கொள்கை:**

அரசுக்கட்டிலில் அரியணை ஏற தமக்கு ஆண்வாரிசைப் பெற்றெடுக்க உள்நாட்டு ஆட்சியாளர்கள் தவறினால் அந்த ஆட்சியாளரது இறப்புக்குப்பின் அந்தப்பகுதி ஆங்கிலேயர்களின் ஆட்சியின் கீழ் கொண்டுவரப்படும். சதாரா, சம்பல்பூர், பஞ்சாபின் சில பகுதிகள், ஜான்சி மற்றும் நாக்பூர் ஆகியன இந்த வாரிசு இழப்புக் கொள்கையின் அடிப்படையில் ஆங்கிலேய ஆட்சியின் கீழ் கொண்டுவரப்பட்டன.

**இந்திய கலாச்சார உணர்வுகள் பற்றி தீவிரத்தன்மை இல்லாதது:**

ஆங்கிலேயர்களின் உள்ளார்ந்த உணர்வுகள் குறித்து மக்களுக்கு எப்போதும் சந்தேகம் இருந்துவந்தது. 1806 ஆம் ஆண்டில் வேலூரில் சிப்பாய்கள் சமயக்குறியீடுகளை நெற்றியில் அணிவதற்கும், தாடி வைத்துக் கொள்வதற்கும், தடைவிதிக்கப்பட்டதோடு தலைப்பாகைகளுக்கு பதிலான வட்ட வடிவிலான தொப்பிகளை அணியுமாறும் பணிக்கப்பட்டனர். அதனை எதிர்த்து அவர்கள் கிளர்ச்சி செய்தனர். இத்தகைய ஆடைக் கட்டுப்பாடுகள் சிப்பாய்களை கிறித்துவ மதத்துக்கு மாறச் செய்வதற்கான ஒரு முயற்சியாக அவர்கள் அஞ்சினார்கள்.

அதேபோன்று 1824 ஆம் ஆண்டு கல்கத்தா அருகே பாரக்பூரில் சிப்பாய்கள் கடல்வழியாக பர்மா செல்ல மறுத்தனர். கடல் கடந்து சென்றால் தங்களது சாதியை இழக்க நேரிடும் என்று அவர்கள் நம்பினார்கள்.

ஊதியம் மற்றும் பதவி உயர்வில் பாரபட்சம் காட்டப்படுவது குறித்தும் சிப்பாய்கள் கவலை அடைந்தனர். ஐரோப்பிய சிப்பாய்களுடன் ஒப்பிடுகையில் இந்திய சிப்பாய்களுக்கு மிகக் குறைந்த அளவில் ஊதியம் வழங்கப்பட்டது. அவர்கள் தரக்குறைவாக நடத்தப்பட்டதோடு மூத்த படையினரால் இனக் குறியிடப்பட்டு அவமதிக்கப்பட்டார்கள்.

**கலகம்:**

புதிய என்.்.பீல்டு துப்பாக்கிக்கு வழங்கப்பட்ட தோட்டாக்கள் பற்றிய வதந்திகள் புரட்சிக்கு வித்திட்டது. பசு மற்றும பன்றிக் கொழுப்பில் இருந்து தயாரிக்கப்பட்ட பசை (கிரீஸ்) இத்தகைய புதிய குண்டு பொதியுறையில் (காட்ரிட்ஜ்களில்) பயன்படுத்தப்பட்டதாக சிப்பாய்கள் பெரிதும் சந்தேகம் கொண்டனர். அவற்றை நிரப்பும் முன் அதை வாயால் கடிக்கவேண்டி இருந்தது (இந்துக்களில் பெரும்பான்மையானவர்களுக்கு பசு புனிதம் வாய்ந்ததாகவும், முஸ்லிம்களுக்கு பன்றி இறைச்சி தடை செய்யப்பட்ட உணவாகவும் இருந்தது).

மார்ச் 29 ஆம் தேதி மங்கள் பாண்டே என்ற பெயர் கொண்ட சிப்பாய் தனது ஐரோப்பிய அதிகாரியைத் தாக்கினார். கைது செய்ய உத்தரவிட்டும் அவரது சக சிப்பாய்கள் மங்கள் பாண்டேவை கைது செய்ய மறுத்துவிட்டனர். மங்கள் பாண்டேயும் வேறு பலரும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு தூக்கிலிடப்பட்டனர். இதனால் ஆத்திரம் அதிகரித்து அதனையடுத்து வந்த நாட்களில் கீழ்ப்படிய மறுத்தல் போன்ற பல நிகழ்வுகள் அதிகரித்தன. கலவரம், பொருட்களை தீயிட்டுக் கொளுத்துவது ஆகியன அம்பாலா, லக்னோ, மீரட் ஆகிய ராணுவக் குடியிருப்புப் பகுதிகளில் நிகழ்ந்ததாக தகவல்கள் வெளியாயின.

**இந்துஸ்தானத்தின் மாமன்னராக பகதூர் ஷா் அறிவிக்கப்படுதல்:**

1857 மே மாதம் 11 இல் மீரட்டில் இருந்து தில்லி செங்கோட்டை நோக்கி ஒரு குழுவாக சிப்பாய்கள் அணிவகுத்துச் சென்றனர். சிப்பாய்கள் போன்றும் அதே அளவு ஆர்வமிக்க கூட்டமும் முகலாய மாமன்னர் இரண்டாம் பகதூர் ஷா தங்கள் தலைவராக வேண்டும் என்று கோருவதற்காக அங்கு குழுமியது. பெரும் தயக்கங்களுக்குப் பிறகு இரண்டாம் பகதூர் ஷா இந்துஸ்தானத்தின் (ஷாஹின்ஷா இ-ஹிந்துஸ்தான்) மாமன்னராக பதவியேற்றார். அதனை அடுத்து விரைவாக வடமேற்கு மாகாணம் மற்றும் அயோத்தி பகுதிகளைக் கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றினார்கள். தில்லி வீழ்ச்சி அடைந்தது பற்றிய செய்தி கங்கை நதிப்பள்ளத்தாக்கை எட்டியவுடன், ஜூன் மாதத் தொடக்கம் வரை ஒவ்வொரு இராணுவக் குடியிருப்பு பகுதியிலும் கிளர்ச்சிகள் நடந்தன. வட இந்தியாவில் குறிப்பாக பஞ்சாப் மற்றும் வங்காளத்தைத் தவிர ஆங்கிலேய ஆட்சி காணாமல் போனது.

**உள்நாட்டு கிளர்ச்சி:**

வட இந்தியாவின் பாதிக்கப்பட்ட கிராம சமூகத்தில் வாழ்ந்த மக்களும் இந்தக் கிளர்ச்சிக்கு சரிசமமாக ஆதரவு தெரிவித்தனர். ஆங்கிலேய ராணுவத்தில் வேலை பார்த்த சிப்பாய்கள் உண்மையில் சீருடையில் இருந்த விவசாயிகள் ஆவர். வருவாய் நிர்வாகம் மறுசீரமைப்பு செய்யப்பட்டதில் அவர்களும் சமமான பாதிப்புகளை அடைந்தனர். சிப்பாய் கலகமும் அதனை அடுத்து இந்தியாவின் பல பகுதிகளில் நடந்த உள்நாட்டு கிளர்ச்சியும் ஊரகப் பகுதிகளுடன் இணைப்பைக் கொண்டவையாகும். வடமேற்கு மாகாணங்கள் மற்றும் அயோத்தியின் பகுதிகளில் இந்த முதலாவது உள்நாட்டு கிளர்ச்சி வெடித்தது. இந்த இரண்டு பகுதிகளில் இருந்துதான் சிப்பாய்கள் முக்கியமாகப் பணியில் சேர்க்கப்பட்டனர். பெரும் எண்ணிக்கையிலான ஜமீன்தாரர்களும் பெரும் எண்ணிக்கையிலான ஜமீன்தாரர்களும் தாலுக்தார்களும் ஆங்கிலேய அரசின் கீழ் பல சலுகைகளை இழந்த காரணத்தால் கிளர்ச்சி நோக்கி ஈர்க்கப்பட்டனர். தாலுக்தார்-விவசாயக் கூட்டணி என்பது தாங்கள் இழந்ததை மீட்கும் ஒரு பொது முயற்சியாகக் கருதப்பட்டது. அதேபோன்று, பல இந்திய மாநிலங்களில் ஆட்சியாளர்கள் பட்டத்தைத் துறக்க நேரிட்டதால் அவர்களால் ஆதரிக்கப்பட்ட கைவினைக்கலைஞர்களும் சரிசமமாக அவதியுற்றனர். ஆங்கிலேயப் பொருட்களால்

இந்திய கைவினைப் பொருட்கள் பாதிக்கப்பட்டு ஆயிரக்கணக்கான நெசவாளர்கள் வேலை இழந்தனர். ஆங்கிலேயர்களுக்கு எதிரான ஒட்டுமொத்த ஆத்திரம் கிளர்ச்சியாக வெடித்தது.

**பிரிட்டிஷாருக்கு எதிராகப் போராடிய முக்கியப் போராட்ட வீரர்கள்:**

பாதிக்கப்பட்ட அரசர்கள், நவாபுகள், அரசிகள், ஜமீன்தாரர்கள், ஆகியோர் ஆங்கிலேயர்களுக்கு எதிரான தங்கள் ஆத்திரத்தைப் பயன்படுத்திக்கொள்ள இந்தக் கிளர்ச்சி ஒரு மேடையை அமைத்துக்கொடுத்தது. கடைசி பேஷ்வா மன்னரான இரண்டாவது பாஜிராவின் தத்துப்பிள்ளையான நானா சாகிப், கான்பூர் பகுதியில் இந்த கிளர்ச்சிக்குத் தலைமைதாங்கினார். அவருக்கு ஒய்வூதியம் தர கம்பெனி மறுத்துவிட்டது. அதேபோன்று, லக்னோவில் பேகம் ஹஸ்ரத் மகால், பரேலியில் கான் பகதூர் ஆகியோர் தத்துமது பகுதிகளில் பொறுப்பை ஏற்றுக்கொண்டனர். ஒருகாலத்தில் இந்தப் பகுதிகள் அவர்களாலோ அல்லது அவர்களுடைய மூதாதையர்களாலோ ஆளப்பட்டவையாகும்.

1857 ஆம் ஆண்டு கிளர்ச்சியின் முக்கிய அத்தியாயமாக இருப்பது கான்பூர் முற்றுகையாகும். கான்பூரில் சுற்றிவளைக்கப்பட்ட கம்பெனிப் படைகளும் இராணுவ வீரர்களும் நீட்டிக்கப்பட்ட சுற்றிவளைப்புக்குத் தயாராக இல்லாததால் நானாசாகிப் தலைமையிலான கிளர்ச்சிப் படைகளின் கீழ் சரணடைந்தனர். அவர்கள் அலகாபாத்துக்கு திரும்பிச்செல்ல பாதுகாப்பான வழி அமைக்கப்பட்டது. அவர்கள் பயணம் செய்த படகுகள் தீயிடப்பட்டு எரிக்கப்பட்டு அதனை அடுத்து கான்பூர் தளபதி மேஜர் ஜெனரல் ஹக் வீலர் உள்பட பெரும்பாலும் அதில் பயணித்த அனைவரும் உயிரிழந்தனர்.

இந்தக் கிளர்ச்சியின் மற்றொரு முக்கிய தலைவராக ஜான்சியின் ராணி லட்சுமிபாய் திகழ்ந்தார். அவரது விஷயத்தில், வங்காளத்தின் தலைமை ஆளுநரான டல்ஹௌசி பிரபு, லட்சுமிபாயின் கணவர் மறைந்தபிறகு அவரது வாரிசாக ஒரு ஆண்பிள்ளையை தத்து எடுத்துக்கொள்ள அனுமதி தர மறுத்துவிட்டதால் வாரிசு இழப்புக் கொள்கையின் அடிப்படையில் அவரது அரசு ஆங்கிலேய அரசுடன் இணைக்கப்பட்டது. சக்திவாய்ந்த ஆங்கிலேயர்களுக்கு எதிராக போரைத் துவக்கிய ராணி லட்சுமிராய் தாம் வீழும் வரை ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடினார்.

பகதூர் ஷா ஜாபர், கன்வர் சிங், கான் பகதூர், ராணி லட்சுமிபாய் மற்றும் தங்கள் சுயதேவைக்காக பலரும், ஆங்கிலேய ஆட்சியை ஏற்கமறுத்த சிப்பாய்களின் வீரதீரத்தால் நிர்ப்பந்திக்கப்பட்ட பலரும் இவர்களில் அடங்குவர்.

**கிளர்ச்சி அடக்கப்படுதல்:**

1857 ஆம் ஆண்டு ஜூன் மாத தொடக்கத்தில் தில்லி, மீரட், ரோகில்கண்ட், ஆக்ரா, அலகாபாத் மற்றும் பனாரஸ் ஆகிய மண்டலங்களின் படைகள் ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டு கடுமையான ராணுவச்சட்டம் அமல்படுத்தப்பட்டது. சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்காமல் இந்தியர்களின் வாழ்க்கை பற்றி முடிவெடுத்து அவர்களின் வாழ்வைப் பறிக்கும் அதிகாரம் ஆங்கிலேய அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டது.

1858 ஆம் ஆண்டு இந்தியாவில் இருந்த லண்டன் டைம்ஸ் பத்திரிக்கையின் செய்தியாளர் வில்லியம் ஹோவர்ட் ரஸ்ஸல், அலகாபாத்திலிருந்து கான்பூர் வரை கர்னல் நீலின் ஆணைகளின்படி சென்ற படையின் ஒரு பகுதியாகத் திகழ்ந்த ஒரு அதிகாரியை சந்தித்துப் பேசினார். இந்தப் 12 நபர்களைக் கொண்ட குழுவினரின் முகபாவம் ஏளனத்தையும், வெறுப்பையும் காட்டுவதாக இருந்ததால் அவர்களும் கொல்லப்பட்டனர். விளையாட்டாக கலகக்காரர்களின் கொடிகளை அசைத்தும், தமுக்கடித்தும் சிறுவர்களைக் கூட விட்டுவைக்கவில்லை என அதிகாரி எடுத்துரைத்தார். கண்ணில் தென்பட்ட ஒவ்வொரு இந்தியரும் சுடப்பட்டு அல்லது சாலையோரம் வரிசையாக நடப்படிருந்த மரங்களில் தூக்கிலிடப்பட்டனர். கிராமங்கள் தீக்கிரையாகின.

**தோல்விக்கான காரணங்கள்:**

1857 ஆம் ஆண்டு நடந்த கிளர்ச்சி ஒருங்கிணைக்கப்பட்டது மற்றும் திட்டமிடப்பட்டது என்பதை நிரூபிக்க எந்தவித ஆதாரமும் இல்லை. அது தானாக நடந்தது. ஆனால் தில்லி முற்றுகை இடப்பட்ட பிறகு அண்டை மாநிலங்களின் ஆதரவைப்பெற முயற்சி மேற்கொள்ளப்பட்டது. மேலும்

ஒருசில இந்திய மாநிலங்களைத் தவிர, இந்தக் கிளர்ச்சியில் பங்கேற்க இந்திய இளவரசர்களிடம் பொதுவாக ஆர்வம் குறைந்து காணப்பட்டது. காலனி அரசுக்கு விசுவாசமாக அல்லது ஆங்கிலேய அதிகாரத்தை அறிந்து அச்சப்பட்டு இந்திய அரசர்களும் ஜமீன்தாரர்களும் ஒதுங்கியிருந்தனர். பெரும்பாலும் அவர்கள் ஐந்தாம் படையாக செயல்ப்பட்டனர். கிளர்ச்சியில் ஈடுபட்டவர்களும் குறைந்த அளவே ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்கள் கிடைத்தோ அல்லது கிடைக்காமலோ இருந்தனர். ஆங்கில அறிவு பெற்ற நடுத்தர வகுப்பும் கிளர்ச்சிக்கு ஆதரவு தெரிவிக்கவில்லை.

மத்திய தலைமை இல்லாததும் கிளர்ச்சி தோல்வியடைய முக்கிய காரணமாக அமைந்தது. தனிநபர்கள், இந்திய அரசர்கள் மற்றும் ஆங்கிலேய அரசுக்கு எதிராக சண்டையிட்ட பல்வேறு சக்திகளை ஒன்றிணைக்கப் பொதுவான செயல்திட்டம் ஏதுமில்லாமல் போனது.

இறுதியில் ஆங்கிலேய ராணுவம் கிளர்ச்சியை கடுமையாக ஒடுக்கியது. ஆயுதங்கள் கிடைக்கப்பெறாமை, அமைப்பாற்றல் இன்மை, ஒழுக்கமின்மை, உதவியாளர்களால் காட்டிக்கொடுக்கப்பட்டது ஆகிய காரணங்களால் கிளர்ச்சித் தலைவர்கள் தோல்வி அடைந்தனர். 1857 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் தில்லி ஆங்கிலேய துருப்புகளால் கைப்பற்றப்பட்டது. சிறைபிடிக்கப்பட்ட பகதூர் ஷா பர்மாவுக்கு கொண்டு செல்லப்பட்டார்.

**இந்தியா ஆங்கிலேய அரசுக் காலனியாக மாறுதல்:**

1857 ஆம் ஆண்டின் நிகழ்வுகளை அறிந்து ஆங்கிலேயர் அதிர்ந்தனர். 1858 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இந்திய அரசு சட்டம் பிரிட்டிஷ் நாடாளுமன்றம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, நாடாளுமன்றத்தால் நேரடியாக ஆட்சி அதிகாரம் செலுத்தப்படும் ஆங்கிலேய அரசின் காலனிகளில் ஒன்றாக இந்தியா அறிவிக்கப்பட்டது. அமைச்சரவை உறுப்பினர் ஒருவரிடம் பொறுப்பு வழங்கப்பட்டது. அவர் இந்தியாவுக்கான அரசுச் செயலராக பதவி வகிப்பார். கிழக்கு இந்திய கம்பெனியிடம் இருந்து பிரிட்டிஷ் அர குடும்பத்திற்கான அதிகாரப்பகிர்வு, இந்திய விவகாரங்கள் குறித்து நாடாளுமன்ற கண்காணிப்பு நிரந்தரமாக இருந்ததை வெளிப்படுத்தியது.

**நிர்வாகத்தில் செய்யப்பட்ட மாற்றங்கள்:**

1857 ஆம் ஆண்டுக்குப் பிறகு பிரிட்டிஷ் ஆட்சியும் அதன் கொள்கைகளும் பெரிய அளவில் மாற்றங்களைச் சந்தித்தன. சமூக சீர்திருத்தம் தொடர்பான விஷயத்தில் பிரிட்டிஷ் அரசு எச்சரிக்கை மிகுந்த அணுகுமுறையைக் கையாண்டது. இந்திய மக்களுக்கு விக்டோரியா அரசியார் செய்த அறிவிப்பில், பாரம்பரிய நிறுவனங்கள் மற்றும் மதம் தொடர்பான விஷயங்களில் ஆங்கிலேய அரசு தலையிடாது என்று தெரிவித்தார். அரசுப்பணிகளில் இந்தியர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள் என்றும் உறுதிமொழி கூறப்பட்டது. இந்திய ராணுவத்தின் கட்டமைப்பில் இரண்டு முக்கிய மாற்றங்கள் செய்யப்பட்டன. இந்தியர்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைக்கப்பட்டது. முக்கியமான பதவிகள் மற்றும் பொறுப்புகள் வகிப்பதிலிருந்து இந்தியர்கள் விலக்கி வைக்கப்பட்டனர். காலாட்படையின் கட்டுப்பாட்டை எடுத்துக்கொண்ட ஆங்கிலேயர், அவற்றுக்கு ஆளெடுக்கும் முயற்சியை இதர பகுதிகளுக்கும் 1857 ஆம் ஆண்டின் கிளர்ச்சியின்போது ஆங்கிலேயருக்கு விசுவாசமாக இருந்த சமூகங்களுக்கும் மாற்றினார்கள். உதாரணமாக ராஜபுத்திரர்கள், பிராமணர்கள், வட இந்திய முஸ்லிம்கள் ஆகியோரை விலக்கி வைத்த ஆங்கிலேயர் கூர்க்காக்கள், சீக்கியர்கள், பதான்கள் போன்ற இந்து அல்லாத குழுக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தனர். இவற்றுடன், இந்திய சமூகத்தின் சாதி, மதம், மொழிய மற்றும் மண்டலம் ஆகியன சார்ந்த வேறுபாடுகளை ஆங்கிலேயர்கள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டதையடுத்தும் அது “பரித்தாளும் கொள்கை“ என்று அறியப்பட்டது.

**பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் விவசாயிகளின் கிளர்ச்சிகள்**
**கருநீலச்சாய (இண்டிகோ) கிளர்ச்சி 1859 – 1860):**

செயற்கை நீலச்சாயம் உருவாக்கப்படும் முன் இயற்கையான கருநீலச்சாயம் உலகம் முழுவதும் இருந்த ஆடை தயாரிப்பாளர்களால் பெரிதும் மதித்துப் போற்றப்பட்டது. பல ஐரோப்பியர்கள் இந்தியாவில் இண்டிகோ தோட்டக்காரர்களாக மாறுவதன் மூலம் தங்கள் செல்வத்தை ஈட்ட முயன்றனர். அவர்கள் இண்டிகோ பயிரிட இந்திய விவசாயிகளை பணியில் அமர்த்தினார்கள். பின்னர் அது சாயமாக தொழிற்சாலைகளில் உருவாக்கப்பட்டது. அதன் பிறகு

அந்த சாயம் ஐரோப்பாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்தியா பிரிட்டனுக்கு அதிக அளவில் பெரும்பான்மையாக நிலச்சாயத்தை அனுப்பிவைத்தது. இந்த முறையானது அடக்குமுறை சார்ந்ததாக இருந்தது. விவசாயிகள் இந்தப் பயிரை பயிரிடுமாறு நிர்பந்திக்கப்பட்டனர். ஆங்கிலேய முகவர்கள் பயிரிடுவோருக்கு நிலத்துக்கான வாடகை மற்றும் இதர செலவுகளை சமாளிப்பதற்காக, ரொக்கப்பணத்தை முன்பணமாகக் கொடுத்து உதவினார். ஆனால் இந்த முன்பணம் வட்டியுடன் திரும்பச் செலுத்தப்பட வேண்டும். உணவு தானியப்பயிர்களுக்குப் பதிலாக இண்டிகோ பயிரைப் பயிரிட விவசாயிகள் வற்புறுத்தப்பட்டனர். பருவத்தின் இறுதியில் இண்டிகோ பயிருக்கு மிகக்குறைந்த விலையையோ விவசாயிகளுக்கு ஆங்கிலேய முகவர்கள் கொடுத்தனர். இந்த குறைந்த தொகையைக் கொண்டு தாங்கள் வாங்கிய முன்பணத்தைத் திரும்பச் செலுத்த முடியாது என்பதால் அவர்கள் கடனில் மூழ்கினர். எனினும், லாபம் கிடைக்காத நிலையிலும், மீண்டும் இண்டிகோ பயிரை பயிரிடும் மற்றொரு ஒப்பந்தத்தை மேற்கொள்ளுமாறு விவசாயிகள் மீண்டும் நிர்பந்திக்கப்பட்டனர். விவசாயிகளால் தாங்கள் வாங்கிய கடனை திரும்பச் செலுத்த முடியவே இல்லை. தந்தை வாங்கிய கடன்கள் அவரது மகன் மீதும் சுமத்தப்பட்டன.

இண்டிகோ கிளர்ச்சி 1859 ஆம் ஆண்டு தொடங்கியது. இந்தக் கிளர்ச்சி ஒரு வேலைநிறுத்த வடிவில் தொடங்கியது. வங்காளத்தின் நடியா மாவட்டத்தின் ஒரு கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகள் இனி இண்டிகோபயிரிடப்போவதில்லை என மறுத்து இண்டிகோ பயிரிடப்பட்ட வங்காளத்தின் இதர மாவட்டங்களுக்கும் பரவியது. இந்தக் கிளர்ச்சி பின்னர் வன்முறையாக வெடித்தது. இந்து மற்றும் முஸ்லிம் விவசாயிகள் இந்தக் கிளர்ச்சியில் பங்கேற்றனர். குடங்கள் மற்றும் உலோகத்தட்டுக்களை ஆயுதங்களாக எந்தியபடி பெண்களும் ஆடவரோடு இந்தப் போராட்டத்தில் பங்கேற்றனர். ஆங்கிலேய முகவர்களின் கொடுமைகள் குறித்து கல்கத்தாவில் வாழந்த அப்போதைய இந்திய பத்திரிக்கையாளர்கள் எழுதினார்கள். நீல் தர்ப்பன் (இண்டிகோவின் கண்ணாடி) என்ற தலைப்பில் ஒரு நாடகத்தை தீன பந்து மித்ரா எழுதினார். இந்தியாவிலும் ஐரோப்பாவிலும் வாழ்ந்த மக்களிடையே இண்டிகோ விவசாயிகள் குறித்த பிரச்சனைகளை கவனத்தில் கொண்டுவர இந்த நாடகம் பயன்பட்டது.

இண்டிகோ விவசாயம் வங்காளத்தில் பெரும் வீழ்ச்சி கண்டது. 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் இயற்கையான இண்டிகோ சாயத்துக்கான தேவைகள் சரிந்து உலகம் முழுவதும் செயற்கையான நவீன நீலச்சாயங்கள் பயன்பாட்டுக்கு வந்தன.

**தக்காண கலவரங்கள் (1875):**

பிரிட்டனின் அரச குடும்பத்துக்கு அதிகாரங்கள் மாற்றம் பெற்ற பிறகு தொழில்களின் சரிவு காரணமாக தொழிலாளர்கள் நிலத்தை இழக்க நேரிட்டது. அதிக அளவிலான வரி விதிப்பு வேளாண்மையைப் பாதித்தது. பஞ்சத்தால் ஏற்படும் உயிரிழப்புகள் அதிகரித்தன. 1875 ஆம் ஆண்டு மே மாதத்தில் தக்காணத்தில் வட்டிக்குப் பணம் வழங்குவோருக்கு எதிரான கலவரங்கள் பூனா அருகே உள்ள சூபா என்ற கிராமத்தில் முதன் முதலாக வெடித்ததாகப் பதிவாகியுள்ளது. பூனா மற்றும் அகமதுநகர் ஆகிய பகுதிகளில் சுமார் 30 கிராமங்களில் இதே போன்ற கலவரங்கள் ஏற்பட்டதாகப் பதிவாகியது. குஜராத்தில் வட்டிக்குப் பணம் வழங்குவோரை குறிவைத்துதான் இந்த கலவரங்கள் பெரும்பாலும் அரங்கேறின. ஆங்கிலேய ஆட்சியின் கீழ் விவசாயிகள் நேரடியாக வருவாயை அரசுக்கு செலுத்த நிர்ப்பந்திக்கப்பட்டனர். மேலும் புதிய சட்டப்படி எந்த நிலத்தை அடமானம் வைத்து கடன் வாங்கப்பட்டதோ அந்த நிலத்தை எடுத்துக்கொண்டு ஏலம் விட்டு கடன் தொகையை எடுத்துக்கொள்ள கடன்வழங்கியோருக்கு அனுமதி கிடைத்திருந்தது. இதன் விளைவாக உழும் வர்க்கத்திடமிருந்து நிலம் உழாத வர்க்கத்திடம் கைமாறத் தொடங்கியது.

**மானிடவியலாளர் கேத்லீன் கௌ கூறும் தகவலின்படி, ஆங்கிலேய ஆட்சி விவசாயிகள் மத்தியில் முகலாயர்களின் காலத்தில் இருந்ததை விட வேதனை மற்றும் இடர்ப்பாடுகளைக் கொண்டுவந்தது.**

**விவசாயிகளின் பிரச்சனைகள் பல வகைகளில் பல அளவுகளில் உள்ளூர் கலவரங்களில் தொடங்கி போர் போன்ற நிலவரங்கள் வரை பல மாவட்டங்களில் பரவி ஆங்கிலேய ஆட்சியின் முதல் காலாண்டுகளில் கடும் விளைவுகளைச் சந்தித்துப் பின்னர் 19 ஆம் நூற்றாண்டின் இறுதி வரை நீடித்தது என ரனஜித் குகா குறிப்பிடுகின்றார்.**

கடன் என்னும் மாய வலையில் சிக்கிய விவசாயிகள் நிலுவைத் தொகையைச் செலுத்த இயலாமல் பயிரிடுதலையும் விவசாயத்தையும் கைவிட வேண்டிய அவல நிலைக்குத் தள்ளப்பட்டனர்

**இந்திய தேசிய காங்கிரஸ் நிறுவப்படுதல் (1870 – 1885)**
**தேசியத்தின் எழுச்சி:**

19 ஆம் நூற்றாண்டின் இரண்டாவது பாதியில் ஆங்கிலக் கல்வி பெற்ற இந்தியர்களின் புதிய சமூக வகுப்பினர் மத்தியில் தேசிய அரசியல் குறித்த விழிப்புணர்வு ஏற்பட்டது. பல்வேறு பிரச்சாரங்கள் மூலமாக தேசம், தேசியம் மற்றும் பல்வேறு மக்களாட்சியின் உயர்ந்த இலட்சியங்கள் பற்றிய கருத்துக்களை அதிக எண்ணிக்கையிலான மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் முக்கிய பணியை இந்திய அறிவாளர்கள் மேற்கொண்டனர். குடியுரிமை, நாடுபற்றிய கருத்து, குடியியல், சமூகம், மனித உரிமைகள், சட்டத்துக்கு முன் சமம், சுதந்திரம், அரசு மற்றும் தனியார் பற்றிய புரிதல், இறையாண்மை, மக்களாட்சி மற்றும் இதர விஷயங்களின் நவீன எண்ணங்களை அவர்கள் தெளிவுபடுத்தினர். வட்டார மொழி மற்றும் ஆங்கில அச்சு ஊடகங்களின் வளர்ச்சி இது போன்ற கருத்துகளைப் பரப்புவதில் முக்கியப் பங்காற்றியது.

எண்ணிக்கையில் அவர்கள் குறைவாக இருந்தாலும் தேசிய அளவிலான வீச்சைக் கொண்டு அகில இந்தியா முழுதும் தொடர்புகளை உருவாக்கும் திறன் பெற்றிருந்தனர். அவர்கள் வழக்கறிஞர்கள், பத்திரிகையாளர்கள், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் அல்லது மருத்துவர்களாக பணியாற்றினார்கள். சென்னைவாசிகள் சங்கம் (1852), கிழக்கிந்திய அமைப்பு (1866), சென்னை மகாஜன சபை (1884), பூனா சர்வஜனிக் சபை (1870), பம்பாய் மாகாண சங்கம் (1885) மற்றும் பல அரசியல் அமைப்புகளைத் தொடங்குவதில் அவர்கள் முனைப்பு காட்டினார்கள்.

ஆங்கிலக் கல்வி பயின்று மேற்கத்தியக் கருத்துகள் பற்றிய சிந்தனையும் நவீன மதிப்புகள் மற்றும் நிறுவனங்களில் வலுவான நம்பிக்கையும் கொண்ட இந்தியர்களின் கனவுகளை நசுக்கும் வகையில் தங்கள் கொள்கைகளை ஆங்கிலேயர் நடைமுறைப்படுத்தினார்கள். எனினும் 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஏற்பட்ட தேசிய எழுச்சி மக்களிடையே இந்தியாவின் கடந்த கால சிறப்புகளையும் பெருமைகளையும் கொண்டாடும் நோக்கில் ஆழமாக வேரூன்றவும் மக்களிடையே தேசப்பற்றை உருவாக்கவும் பல்வேறு சமய மற்றும் கலாச்சார அடையாளங்கள் அதற்காகப் பயன்படுத்தப்பட்டன.

**காலனி ஆட்சி பற்றிய பொருளாதார விமர்சனம்:**

காலனி ஆட்சி பற்றிய பொருளாதார விமர்சனத்தை உருவாக்குவதே தொடக்ககால இந்திய தேசியவாதிகளின் பங்களிப்புகளில் முக்கியமான ஒன்றாக இருந்தது. இந்தியா பொருளாதார ரீதியாக கட்டுப்படுத்தப்பட்டதோடு பிரிட்டனின் தொழிற்சாலைகளுக்கு மூலப்பொருட்களை அனுப்பும் ஒரு அனுப்புனராக இந்தியா மாற்றம் பெற்றது. ஒரே நேரத்தில் பிரிட்டிஷாரின் மூலதனத்தை முதலீடு செய்யவும், ஆங்கிலேய உற்பத்திப் பொருட்களை கொண்டுசேர்க்கும் ஒரு சந்தையாகவும் இந்தியா உருவானது. இந்தியாவுக்கு எந்தவித ஆதாயமுமின்றி இந்தியாவில் இருந்து பிரிட்டனுக்குத் தொடர்ந்து வளங்களைப் பரிமாற்றம் செய்யும் விதமாக காலனி ஆட்சியின் கீழ் பொருளாதாரம் அமைந்தது. இதுவே வளங்களின் சுரண்டலாக (செல்வச் சுரண்டல்) அறியப்பட்டது.

தாதாபாய் நௌரோஜி, நீதிபதி ரானடே மற்றும் ரொமேஷ் சந்திர தத் ஆகியோர் காலனி ஆட்சியின் பொருளாதாரம் பற்றிய இந்த விமர்சனத்தைச் செய்வதில் முக்கியப் பங்காற்றினார்கள். இந்தியாவை அரசியல் மற்றும் பொருளாதார ரீதியாக அடக்கி ஆள்வதுதான் பிரிட்டிஷாரின் வளத்துக்கு அடிப்படையானது என்பதை அவர்கள் தெளிவாக உணர்ந்தனர். இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு காலனி ஆதிக்கமே முக்கியத் தடையாக உள்ளதென்று அவர்கள் முடிவு செய்தனர்.

**குறிக்கோள்கள் மற்றும் வழிமுறைகள்:**

ஒரு அகில இந்திய அமைப்பை உருவாக்க முனைந்ததன் விளைவாக 1885 ஆம் ஆண்டில் இந்திய தேசிய காங்கிரஸ் உருவானது. பம்பாய், மதராஸ், கல்கத்தா ஆகிய மூன்று மாகாணங்களிலும் அரசியல் ரீதியாக தீவிரம் காட்டிய கல்வி அறிவு பெற்ற இந்தியர்களின் குழுக்கள் மேற்கொண்ட முயற்சிகளின் விளைவாக இந்திய தேசிய காங்கிரஸ் அமைப்பை உருவாக்க A.O. ஹியூம் தமது சேவைகளை வழங்கினார். இந்திய தேசிய காங்கிரசின் முதல் (1885) தலைவராக உமேஷ் சந்திர பானர்ஜி இருந்தார்.

1885 டிசம்பர் 28 இல் இந்திய தேசிய காங்கிரசின் முதல் அமர்வு நடைபெற்றது. தேசிய ஒற்றுமை குறித்த உணர்வுகளை ஒருங்கிணைப்பதே காங்கிரஸின் ஆரம்பகால முக்கிய குறிக்கோள்களில் ஒன்றாக இருந்தாலும் பிரிட்டனுக்கு விசுவாசமாக நடந்துகொள்ளவும் உறுதி மேற்கொண்டது. பிரிட்டனிடம் மேல்முறையீடுகள் செய்வது, மனுக்களைக் கொடுப்பது, அதிகாரப் பகிர்வு, ஆகியவற்றை ஆங்கிலேய அரசு உருவாக்கிய அரசியல்சாசன கட்டமைப்பிற்குள் செய்வது உள்ளிட்ட வழிமுறைகளை காங்கிரஸ் பின்பற்றியது. கீழ்க்கண்டவை சில முக்கிய கோரிக்கைகள் ஆகும்.

- மாகாண மற்றும் மத்திய அளவில் சட்டமேலவைகளை உருவாக்குவது
- சட்டமேலவைகளுக்கு தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது.
- நிர்வாகத்துறையிலிருந்து நீதித்துறையைப் பிரிப்பது.
- இராணுவச்செலவுகளைக் குறைப்பது.
- உள்நாட்டு வரிகளைக் குறைப்பது
- நீதிபதி மூலமாக விசாரணையை விரிவுசெய்வது.
- ஒரே நேரத்தில் இந்தியாவிலும் இங்கிலாந்திலும் ஆட்சிப்பணித் தேர்வுகளை நடத்துவது.
- காவல்துறை சீர்திருத்தங்கள்
- வனச்சட்டத்தை மறுபரிசீலனை செய்தல்
- இந்தியத் தொழிற்சாலைகளின் மேம்பாடு மற்றும் முறையற்ற கட்டணங்கள் மற்றும் கலால் வரிகளை முடிவுக்குக் கொண்டுவருவது.

இந்திய சமூகத்தின் உயரடுக்குகள் மற்றும் பெருமளவிலான பொதுமக்களிடையே உள்ள ஆர்வங்களில் இடைவெளி அதிகமாக இருப்பதை இவை காட்டுகின்றன.

**வறுமை பற்றிய கேள்வி:**

இந்தியாவில் வளர்ச்சி குறைவாக இருப்பதற்கும் வறுமை அதிகரிப்பதற்கும் பொருளாதாரச் சுரண்டலே முக்கியக் காரணம் என்று தொடக்ககால காங்கிரஸ் தலைவர்கள் நம்பினார்கள். இந்தியாவில் தொழில்மயமாக்கல் நிகழவேண்டுமென்று தொடக்ககால இந்திய தேசியவாதிகள் அறிவுறுத்தினார்கள்

**தீவிர தேசிய வாதம்:**

தொடக்ககால இந்திய தேசியவாதிகளின் மிதவாத கோரிக்கைகள் தொடர்பான ஆங்கிலேயர்களின் அணுகுமுறை குறிப்பிடத்தக்க அளவில் மாறவில்லை என்பதால் மித தேசியவாத தலைவர்களின் திட்டங்கள் தோல்விகண்டன. "தீவிர தேசியவாதிகள்" என்று அழைக்கப்பட்ட தலைவர்களின் குழுவால் இவர்கள் விமர்சிக்கப்பட்டனர். மனுக்கள் மற்றும் கோரிக்கைகள் கொடுப்பதை விட, உயரடுக்கு மக்கள் மற்றும் பொதுமக்களிடையே இருந்த இடைவெளியைக் குறைப்பதற்கு இந்தத் தீவிர தேசியவாதிகள் சுய உதவியில் அதிக கவனம் செலுத்தியதோடு சமய அடையாளங்களையும் பயன்படுத்தினர். சுரண்டல்வாத ஆங்கிலேயக் கொள்கைகளை எதிர்த்துப் போராடுவதற்கு தீவிரத்தன்மைகொண்ட நேரடி செயல்திட்டங்கள் தேவை என்று பிரச்சாரம் செய்தவர்களுக்கு வங்கப் பிரிவினை ஒரு உந்துதலாக அமைந்தது.

**வங்கப் பிரிவினை:**

1899 இல் இந்தியாவின் அரசப் பிரதிநிதியாக (வைஸ்ராய்) கர்சன் பிரபு நியமிக்கப்பட்டார். இந்திய அறிவாளர்கள் மூலமாக பஞ்சம் மற்றும் பிளேக் பிரச்சனைகளைக் கையாள்வதை விடுத்து உள்ளாட்சி அமைப்பு, உயர் கல்வி நிறுவனங்களின் தன்னாட்சி ஆகியவற்றைக் குறைத்து மதிப்பிடுவது மற்றும் பத்திரிக்கைச் சுதந்திரத்தைத் தடுப்பது ஆகிய அடக்கி ஆளும் நடவடிக்கைகளை கர்சன் பிரபு கையாண்டார். 1905 ஆம் ஆண்டின் வங்கப் பிரிவினை மிகவும் அதிருப்தியைச் சம்பாதித்த நிகழ்வாகும். இந்தியா முழுவதும் விரிவான போராட்டங்கள் பரவ இந்தப் பிரிவினை வழிவகுத்ததன் மூலம் இந்திய தேசிய இயக்கத்துக்கு புதிய அத்தியாயத்தை உருவாக்கியது.

இந்துக்கள், முஸ்லிம்கள் இடையே பிளவை உருவாக்கி வங்காளத்தில் ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக நடந்த அரசியல் நடவடிக்கைகளை அடக்க வங்கப்பிரிவினை வகுக்கப்பட்டது.

**இந்து – முஸ்லிம் பிரிவினை:**

வங்காளிகளின் ஆதிக்கத்தை கட்டுப்படுத்தி தேசியவாத இயக்கத்தை வலுவிழக்கச் செய்வதே வங்கப் பிரிவினைக்கான நோக்கம் என்று வெளிப்படையாக தெரிவிக்கப்பட்டது. வங்காளத்தைப் பிரித்து இரண்டு நிர்வாகப் பிரிவுகளின் கீழ் வைத்ததன் மூலம் வங்காள மொழி பேசும் மக்களை ஒரு மொழிசிறுபான்மையினர் என்ற தகுதிக்கு கர்சன் பிரபு குறைத்துவிட்டார். முகலாயர்களின் ஆட்சிக்காலங்களில் கூட அனுபவிக்காத ஒற்றுமையை முஸ்லிம்கள் கிழக்கு வங்காளம் என்ற புதிய மாகாணத்தில் அனுபவிப்பார்கள் என்று கர்சன் உறுதியளித்தார்.

மத அடிப்படையில் வங்காள மக்களைப் பிரிக்க நினைத்த பிரிவினைச் செயலானது அவர்களைப் பிரிப்பதற்குப் பதிலாக ஒன்றிணைத்தது. வங்காள அடையாளத்தை உணர்வுப் பெருமையுடன் உருவாக்க வட்டார மொழிப் பத்திரிக்கைகளின் வளர்ச்சி பெரும் பங்காற்றியது.

**பிரிவினைக்கு எதிரான இயக்கம்:**

பிரிவினை பற்றி யோசனை கூறப்பட்ட நிலையிலேயே அதனை மித தேசியவாதிகள், தீவிர தேசியவாதிகள் ஆகிய இரு பிரிவு தலைவர்கள் குழுக்களும் விமர்சனம் செய்தன. ஆரம்பகாலப் பிரிவினைவாத எதிர்ப்பு பிரச்சாரம் இங்கிலாந்தில் பொதுக்கருத்தை மாற்றும் குறிக்கோளில் மட்டுமே பயன்படுத்தப்பட்டது. அதனால் வேண்டுகோள்கள், செய்திப்பிரச்சாரங்கள், மனுக்கள், பொதுக்கூட்டங்கள், ஆகியவற்றின் மூலமாகப் பிரிவினைக்கு எதிராக அவர்கள் போராட்டம் நடத்தினார்கள். எனினும் விரிவான ஆர்ப்பாட்டங்கள் நடந்தபோதிலும் 1905 ஜுலை 19 இல் வங்கப் பிரிவினை அறிவிக்கப்பட்டது.

வங்கப் பிரிவினையை தடுக்கத் தவறிய மித தேசியவாதத் தலைவர்கள், தங்களுடைய உத்திகள் பற்றி மறு சிந்தனைக்கு நிர்பந்திக்கப்பட்டார்கள். ஆர்ப்பாட்டங்களுக்கு புதிய வழிமுறையையும் அவர்கள் தேடத் தொடங்கினார்கள். பிரிட்டிஷ் பொருட்களை புறக்கணிப்பது அவற்றில் ஒரு முறையாகும். எனினும் சுதேசி இயக்கத்தின் கொள்கை வங்கப் பிரிவினையைத் திரும்பப் பெறுவதை உறுதி செய்வதில் இன்னமும் கட்டுப்பட்டிருந்தது. முழுமையான மறைமுக எதிர்ப்பைத் துவங்குவதற்கு பிரச்சாரத்தைப் பயன்படுத்த மித தேசியவாதிகள் ஆதரவாக இல்லை. மற்றொருபுறம் தீவிர தேசியவாதிகள் வங்காளத்தை தாண்டி இந்த இயக்கத்தை விரிவு செய்வதற்கு மிகப்பெரிய அளவில் பொதுமக்கள் போராட்டத்தைத் துவங்க ஆதரவாக இருந்தனர்.

1905 அக்டோபர் 16 இல் வங்காளம் அதிகாரப்பூர்வமாகப் பிரிவினையானபோது அந்தநாள் துக்கநாளாக அறிவிக்கப்பட்டது. ஆயிரக்கணக்கானவர்கள் கங்கை நதியில் புனித நீராடியதோடு வந்தே மாதரம் பாடலை பாடியபடி கல்கத்தாவின் சாலைகளில் அணிவகுத்துச் சென்றார்கள்.

**வங்காளத்தில் புறக்கணிப்பும் சுதேசி இயககககமும் (1905 – 1911)**

புறக்கணிப்பும் சுதேசி இயக்கமும் இந்தியாவைத் தற்சார்பு அடையச் செய்யும் விரிவான திட்டத்தின் ஒரு பகுதியாக எப்போதும் ஒன்றுடன் ஒன்று இணைந்தே இருந்தன. வங்களாத்தில் சுதேசி இயக்கத்தின் போது நான்கு முக்கியப் போக்குகள் காணப்பட்டன.

1. **மிதவாதப் போக்கு**: ஆங்கிலேய ஆட்சி, அவர்களின் நீதி பரிபாலன உணர்வு, மக்களாட்சி நடைமுறை ஆகியவற்றின் மீது நம்பிக்கை. ஒரு தனிப்பட்ட இயக்கத்தின் மூலமாக மட்டுமே பிரிட்டிஷாரிடம் இருந்து அதிகாரத்தை மீட்டெடுக்க மித தேசியவாத தலைவர்கள் ஆயத்தமாக இல்லை. அவர்களுக்கு புறக்கணிப்பு மற்றும் சுதேசி இயக்கம் இரண்டுமே குறைந்த அளவு முக்கியத்துவம் உடையவையாக இருந்தன.

2. **ஆக்கபூர்வ சுதேசி**: மித தேசியவாதிகளின் சுயதோல்வியையும் சாதாரண அணுகுமுறையையும் நிராகரித்ததுடன், சுதேசி தொழில்கள், தேசிய பள்ளிகள், நடுவர் நீதிமன்றங்கள் மற்றும் கிராமங்களில் ஆக்கபூர்வமான திட்டங்கள் மூலம் சுய உதவியில் கவனம் செலுத்தியது. இவை பெரும்பாலும் அரசியல் சாராமல் இருந்தன.

3. **தீவிர தேசியவாதம்**: அரசியல் சாராத ஆக்கபூர்வ திட்டங்களில் இந்திய தேசியவாதிகளின் ஒரு பிரிவினர் ஓரளவு பொறுமை மட்டுமே கொண்டிருந்தனர். சுயஉதவி என்ற யோசனையை வேடிக்கையானதாகப் புறந்தள்ளிய அவர்கள் அந்நியப் பொருட்களை புறக்கணிப்பதில் கவனம் செலுத்தினார்கள்.

4. **புரட்சிகர தேசியவாதம்**: இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சி குறிதபிரிட்டிஷாரை எதிர்த்து தீவிரவாத முறைகள் மூலமாக சண்டையிடுவதாகும். சுதேசிக்கு எதிரான அல்லது நாட்டின் மைந்தர்களுக்கு எதிரான அடக்குமுறைப்போக்கு கொண்ட பிரிட்டிஷ் அதிகாரிகளைக் குறிவைத்து இந்த வன்முறைகள் நடந்தேறின. பொதுமக்கள் இயக்கத்திலிருந்து தனிநபர் செயல்பாட்டுக்கு மாற்றம் பெறுவதைக் குறிப்பதாகவும் அது அமைந்தது.

**ஆக்கபூர்வ சுதேசி:**

ஆக்கபூர்வ திட்டங்கள் அனைத்தும் பெரும்பாலும் சுய உதவியையே வலியுறுத்தின. ஆங்கிலேய ஆட்சியின் கட்டுப்பாட்டில் சிக்காமல் சுதந்திரமாகச் செயல்படக்கூடிய உள்ளாட்சி அமைப்புகளை மாற்றாக உருவாக்குவது குறித்து அது கவனம் செலுத்தியது. மக்களை சுயமாக வலுவாக்க வேண்டிய அவசியம் குறித்து அது வலியுறுத்தியது. அதனால் அரசியல் ஆர்ப்பாட்டம் நடைபெறுவதற்கு முன் ஒரு மதிப்பு வாய்ந்த குடிமகனை உருவாக்க முடியும். துணிகள், கைத்தறி ஆடைகள். சவக்காரம் (சோப்புகள்), மண்பாண்டங்கள், தீப்பெட்டி, தோல்பொருட்கள் ஆகியன எங்கும் பரவியிருந்த சுதேசி கடைகளில் விற்கப்பட்டன.

**மறைமுக எதிர்ப்பு:**

வங்கப் பிரிவினையைத் திரும்பப் பெறுவது அதற்குமேலும் கருப்பொருளாக இல்லாத காரணத்தால் 1906 இல் சுதேசி இயக்கம் மாற்றுப்பாதையில் செல்லத் துவங்கியது. அரசியல் சுதந்திரம் அல்லது இந்தியாவில் தன்னாட்சி பற்றிய சிந்தனையை பிரச்சாரப்படுத்த இந்த இயக்கத்தை பல தலைவர்கள் பயனடுத்திக் கொண்டனர். இந்த புதிய திசையில் சுதேசி இயக்கம் நான்கு அம்சங்களைக் கொண்டிருந்தது. அந்நியப் பொருட்களைப் புறக்கணிப்பது, அரசுப்பள்ளிகள் கல்லூரிகளைப் புறக்கணிப்பது, நீதிமன்றங்கள், பட்டயங்கள் மற்றும் அரசு சேவைகளை புறக்கணிப்பது, சுதேசி தொழிற்சாலைகளை மேம்படுத்துவது, சுதேசி தொழிற்சாலைகளை மேம்படுத்துவது, பொறுத்துக்கொள்ளும் அளவைத் தாண்டி ஆங்கிலேயர்களின் அடக்குமுறை இருக்குமானால் ஆயுதமேந்திய போராட்டத்துக்கு ஆயத்தமாவது என நான்கு அம்சங்கள் பின்பற்றப்பட்டன.

எதேச்சதிகார வலுவான நிர்வாகம் ஒருபக்கமும் மற்றொரு பக்கம் இராணுவ வலுவில்லாத மக்களும் இருந்த நிலைமையில் மறைமுக எதிர்ப்புமுறைக்கு எந்தவித நடைமுறைப் பயன்பாடும்

இல்லாமல் விளங்கியது. இடைவிடாத ஒத்துழையாமை மற்றும் கீழ்ப்படியாத நிலைமை ஆகியவற்றின் மூலமாக எதிர்ப்பை அது போன்ற நிலையில் தெரிவிக்க இயலும்.

**தீவிர தேசியவாதம்:**

பஞ்சாபின் லாலா லஜ்பதி ராய், மகாராஷ்டிராவின் பால கங்காதர திலகர், வங்காளத்தின் பிபின் சந்திர பால், ஆகிய மூன்று முக்கிய தலைவர்களும் சுதேசி காலத்தில் எப்போதும் லால்-பால்-பால் (Lal-Bal-Pal) மூவர் என்று குறிக்கப்பட்டனர். சுதேசி இயக்கத்தின் போது தீவிர தேசியவாதத்தின் இயங்கு தளமாக பஞ்சாப், மகாராஷ்டிரா, வங்காளம் ஆகியன உருவெடுத்தன. தென்னிந்தியாவில் வ.உ. சிதம்பரனார் சுதேசி கப்பல் நிறுவனத்தை தொடங்கியதை அடுத்து தூத்துக்குடி சுதேசி இயக்கத்தின் மிகமுக்கியத் தளமாக விளங்கியது.

**சுயராஜ்ஜியம் அல்லது அரசியல் சுதந்திரம்:**

சுயராஜ்ஜியம் அல்லது தன்னாட்சி அடைவதே தீவிரவாதத் தன்மை கொண்ட தலைவர்களின் பொதுக் குறிக்கோள்களில் ஒன்றாக இருந்தன. எனினும் சுயராஜ்ஜியம் என்ற வார்த்தையின் பொருளில் தலைவர்கள் வேறுபட்டனர். திலகரைப் பொறுத்தவரை சுயராஜ்ஜியம் என்பது, முழுமையான தன்னாட்சி மற்றும் அந்நிய ஆட்சியில் இருந்து முழுமையான விடுதலை பெறுவதாக இருந்தது. புரட்சிகர தேசியவாதிகள் மீது விமர்சனப் பார்வைகளைக் கொண்ட மித தேசியவாதிகள் போன்று இல்லாமல், அவர்கள் மீத தீவிர தேசியவாதிகள் இரக்கம் கொண்டிருந்தனர். எனினும் அரசியல் படுகொலைகள் மற்றும் தனிநபர்களின் தீவிரவாதச் செயல்களை தீவிரத் தேசியவாதத் தலைவர்கள் ஏற்கவில்லை.

சுதேசி இயக்கத்தை இரும்புக்கரம் கொண்டு ஆங்கிலேய ஆட்சி அடக்கியது. முக்கிய தலைவர்கள் சிறைகளில் நீண்ட காலத்துக்கு அடைபட்டார்கள். புரட்சியாளர்கள் தூக்கில் தொங்கவிடப்பட்டனர். பத்திரிகை சுதந்திரம் முடக்கப்பட்டது.

**தன்னாட்சி (ஹோம் ரூல்) இயக்கம் (1916 – 18)**

லோகமான்ய பாலகங்காதர திலகர், அன்னிபெசன்ட் அம்மையார் ஆகியோர் தலைமையிலான தன்னாட்சி (1916 – 1918) இயக்கத்தின் போது இந்திய தேசிய இயக்கம் பத்துயிரூட்டப்பட்டு தீவிரப்படுத்தப்பட்டது. முதல் உலகப் போரும், இந்தியா அந்தப் போரில் பங்கேற்றதும் தான் தன்னாட்சி இயக்கத்துக்கான பின்னணியாகும். 1914ஆம் ஆண்டில் ஜெர்மனிக்கு எதிராக பிரிட்டன் போர் அறிவித்த நிலையில் மித தேசியவாத மற்றும் தாராளமய தலைமை பிரிட்டிஷாருக்காக ஆதரவைத் தந்தது. அதற்குப் பதில் பிரிட்டிஷ் அரசு போருக்குப் பிறகு தன்னாட்சியை இந்தியாவிற்கு வழங்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. உலகப் போரின் பல அரங்குகளுக்கு இந்தியத் துருப்புகள் அனுப்பப்பட்டன. ஆனால் இந்தக் குறிக்கோள்கள் குறித்து பிரிட்டிஷ் அரசுக்கு எந்தவித உறுதிப்பாடும் இல்லை. இந்தியாவின் தன்னாட்சிக்கு வழிவகுக்கும் காரணத்துக்கு உதவாமல் ஆங்கிலேய அரசு ஏமாற்றியதால் ஆங்கிலேய அரசுக்கு நெருக்கடி தரும் புதிய மக்கள் இயக்கத்துக்கான அழைப்பாக இது உருவேடுத்தது.

**பொதுப்பாதையை வகுப்பதற்கான முயற்சியை நோக்கி:**

காங்கிரசின் 1916 ஆம் ஆண்டு வருடாந்திர அமர்வு இரண்டு முக்கிய மாற்றங்களுடன் தொடங்கியது. ஒன்று, தீவிரத்தன்மைகொண்ட குழுவிற்கு எதிரான குரலில் மிக முக்கியமானவர்களாகக் கருதப்பட்ட மித தேசியவாதத் தலைவர்களான ஃபிரோஸ் ஷா மேத்தா, கோகலே ஆகிய இருவரின் மறைவு (1915). காலனித்துவ அரசாங்கத்திற்கு எதிராக ஒரு பொதுவான முன்னணியை வைக்க மித தேசியவாதிகளை கட்டாயப்படுத்திய அன்னிபெசன்டின் அதிகரித்துவரும் புகழ் மற்றொரு காரணியாகும். லக்னோவில் நடந்த காங்கிரஸ் (1916) அமர்வில் தீவிர தேசிவாத குழுவினரையும் கட்சியில் சேர்க்க அனுமதி வழங்கப்பட்டது.

1916 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் திலகர் முதலாவது தன்னாட்சி இயக்கத்தை நிறுவினார். 1916 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் பொறுமையற்ற தமது ஆதரவாளர்களின்

தொடர்கோரிக்கைகளை அடுத்து அன்னிபெசன்ட் அம்மையார் காங்கிரஸ் கட்சியின் ஆதரவின்றி தன்னாட்சி இயக்கத்தை ஆரம்பிக்க முடிவுசெய்தார். இரண்டு அமைப்புகளும் சுதந்திரமாகச் செயல்பட்டன. பத்திரிகை, உரைகள், பொதுக்கூட்டங்கள், விரிவுரைகள், விவாதங்கள் மற்றும் தன்னாட்சிக்கு ஆதரவான சுற்றுப்பயணம் ஆகியவை மூலமாகத் தீவிரப் பிரச்சார இயக்கத்தை நடத்த தன்னாட்சி இயக்கங்கள் பயன்பட்டன. இளைஞர்களை அதிக எண்ணிக்கையில் சேர்ப்பதிலும் இவ்வியக்கங்களை ஊரகப் பகுதிகளுக்கு கொண்டு சேர்ப்பதிலும் இரண்டு அமைப்புகளுமே வெற்றிபெற்றன. இந்தியாவின் தன்னாட்சி (ஹோம் ரூல்) இயக்கம் தனது பெரும்பான்மையான கொள்கைகளை அயர்லாந்தின் தன்னாட்சி இயக்கத்தில் இருந்து பெற்றது.

**தன்னாட்சி இயக்கத்தின் குறிக்கோள்கள்:**

- **அரசியலமைப்பு வழிகளைப் பயன்படுத்தி பிரிட்டிஷ் பேரரசிற்குள் தன்னாட்சியை அடைவது.**
- **தன்னாட்சிப் பகுதி (டொமினியன்) என்ற தகுதியை அடைவது, ஆஸ்திரேலியா, கனடா, தென்னாப்பிரிக்கா மற்றும் நியூசிலாந்து ஆகியவற்றுக்குப் பின்னர் இந்த அரசாட்சி சாராத நிலை வழங்கப்பட்டது.**
- **அவர்களின் இலக்குகளை அடைய வன்முறையல்லாத அரசியல்சாசன வழிமுறைகளைக் கையாள்வது.**

---

**தன்னாட்சி மூலம் இந்த நாடு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சபைகளைக் கொண்ட அரசை கொள்ளலாம் என்று நான் கருதுகிறேன். கருவூலத்தை செலவு செய்யும் அதிகாரம் கொண்ட தேர்ந்தெடுக்கப்பட்ட சபையும், அந்தச் சபைக்கு கட்டுப்படும் அரசும், அமையும் பிரிட்டிஷ் அரசுக்கு உள்ள விசுவாசத்தை அடிப்படையாகக் கொண்டிருக்காமல் அல்லது போரின்போது இந்தியா செய்த சேவைகளுக்கு விருதாகவோ இல்லாமல் தேசிய தன்னுறுதி அடிப்படையில் தன்னாட்சியை இந்தியா கோரவேண்டும் (அன்னிபெசன்ட்) (1915 ஆம் ஆண்டு செப்டம்பரில்)**

---

**லக்னோ ஒப்பந்தம் (1916):**

தன்னாட்சி இயக்கமும் அதனையடுத்து மித தேசியவாதிகள் மற்றும் தீவிர தேசியவாதிகளின் மறு இணைப்பு காரணமாக முஸ்லிம்களுடன் புதிய பேச்சுகளுக்கான சாத்தியக்கூறு லக்னோ ஒப்பந்தத்தின்போது ஏற்பட்டது. லக்னோ ஒப்பந்தத்தின் (1916) போது காங்கிரஸ் கட்சியும் முஸ்லிம் லீக்கும் இந்தியாவில் விரைவில் தன்னாட்சி வேண்டுமென்பதை ஏற்றுக்கொண்டது. இதற்கு பதிலாக முஸ்லிம்களுக்கு தனித் தொகுதிகளை வழங்கும் திட்டத்தை காங்கிரஸ் தலைமை ஏற்றது.

**பிரிட்டிஷாரின் பதில் நடவடிக்கை:**

தன்னாட்சி இயக்கத்துக்கான ஆங்கிலேயரின் பதில் நடவடிக்கை நிரந்தர நிலைப்பாட்டில் இல்லை. உள்ளாட்சி அமைப்புகளில் இந்தியர்களை பெரும் எண்ணிக்கையில் இடம்பெறச் செய்ய சீர்திருத்தம் தேவை என்று முதலில் தெரிவிக்கப்பட்டது. சுயராஜ்ஜியத்துக்கான கோரிக்கையை திலகரும் அன்னிபெசன்ட் அம்மையாரும் எழுப்பியது பிரபலமானதைத் தொடர்ந்து தலைவர்களை தனிமைப்படுத்தி அவர்களின் செயல்பாடுகளை முடக்கும் அதே பழைய திட்டத்தை அரசு பயன்படுத்தியது.

1919 இல் - மாண்டேகு – செம்ஸ்ஃபோர்ட் சீர்திருத்தங்களை ஆங்கிலேய அரசு அறிவித்தது. இதன் மூலம் இந்தியா தன்னாட்சி நோக்கி படிப்படியாக முன்னேற உறுதி கூறப்பட்டது. இந்திய தேசியவாதிகள் இடையே இது மிகப்பெரிய ஏமாற்றத்தை ஏற்படுத்தியது. மேலும் ஒரு பேரிடியாக, தன்னிச்சையான கைது மற்றும் கடும் தண்டனைகளுடன் கூடிய ரௌலட் சட்டத்தை அரசு இயற்றியது.

---

# அலகு – 8 - தேசியம் காந்திய காலகட்டம்

**அறிமுகம்:**

மகாத்மா காந்தி, தென்னாப்பிரிக்காவில் வாழ்ந்த இந்தியர்களின் சமூக உரிமைகளுக்காக சுமார் 20 ஆண்டுகள் பேராடிய பிறகு 1915 இல் தாயகம் திரும்பினார். இந்திய அரசியலுக்கு புதிய எழுச்சியை அவர் ஏற்படுத்தினார். தென்னாப்பிரிக்காவில் அவர் கையாண்டு பண்படுத்திய ஆண்கள், பெண்கள், இளைஞர்கள், முதியோர் என அனைவரும் பின்பற்றத்தக்க "சத்தியாகிரகம்" என்ற புதிய வழிமுறையை அவர் அறிமுகம் செய்தார். அடித்தட்டு வறியவர்களின் மேன்மைக்காக உறுதிபூண்ட அவரால் மக்களின் நல்லெண்ணத்தை எளிதில் பெறமுடிந்தது. காந்தியடிகளுக்கு முன் இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த அரசமைப்புவாதிகள் பிரிட்டிஷாரின் நீதி மற்றும் நியாய முறையை வேண்டி நின்றனர். காலனி ஆதிக்க ஆட்சியின் அடக்குமுறையை வன்முறையான வழியில் தீவிரதேசியவாத எண்ணம் கொண்ட தலைவர்கள் எதிர்கொண்டனர். மாறாக மக்கள் கூட்டத்தைக் கூட்டவும் ஆங்கிலேய ஆட்சிக்கு அழுத்தம் கொடுக்கவும் காந்தி வன்முறையல்லாத வழிகளைப் பின்பற்றினார். இந்திய தேசிய இயக்கத்தை காந்தியடிகள் எவ்வாறு மடைமாற்றம் பெறவைத்தார் என்பதை இந்திப் பாடத்தில் நாம் காண்போம்.

**காந்தியடிகளும் மக்கள் தேசியமும்**
**காந்தியடியகள் உருவாகிறார்**

குஜராத்தின் போர்பந்தரில் ஒரு வசதியான குடும்பத்தில் 1869 அக்டோபர் 2 ஆம் நாள் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி பிறந்தார். அவரது தந்தையார் காபா காந்தி, போர்பந்தரின் திவானாகவும் பின்னர் ராஜ்கோட்டின் திவானாகவும் பொறுப்பு வகித்தார். தீவிர வைணவ பக்தையான அவரது தாயார் புத்லிபாயின் தாக்கம் இளையவரான காந்தியின் நடவடிக்கைகளில் பெரிதும் இருந்தது. பதின்ம பள்ளிப் (மெட்ரிகுலேசன்) படிப்பை முடித்த காந்தியடிகள் சட்டம் பயில்வதற்காக 1888 இல் இங்கிலாந்துக்குக் கடல்பயணம் மேற்கொண்டார். 1891 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வழக்கறிஞர் பட்டம் பெற்ற பின்பு அவர் பிரிட்டிஷாரின் நீதி மற்றும் நியாய முறையில் நம்பிக்கை கொண்டவராக இந்தியாவுக்குத் திரும்பினார். லண்டனில் அவருக்கு கிடைத்த அனுபவங்கள் தென்னாப்பிரிக்காவில் அவர் எதிர்கொள்ளவிருந்த இனவேறுபாட்டுக்கு அவரைத் தயார்படுத்தியிருக்கவில்லை.

இந்தியா திரும்பியவுடன் பம்பாயில் வழக்குரைஞராக பணியாற்ற காந்திடிகள் மேற்கொண்ட முயற்சி தோல்வியடைந்தது. அந்த காலகட்டத்தில்தான் தென்னாப்பிரிக்காவில் இருந்த குஜராத்தி நிறுவனம் ஒன்று சட்ட உரிமை வழக்குகள் தொடர்பாக காந்தியடிகளின் சேவையை நாடியது. இந்த வாய்ப்பை ஏற்றுக்கொண்ட காந்திடியகள் 1893 ஏப்ரல் மாதம் தென்னாப்பிரிக்காவுக்குப் புறப்பட்டுச் சென்றார். தென்னாப்பிரிக்காவில்தான் முதன் முறையாக அவர் இனவெறியை எதிர்கொண்டார். டர்பனில் இருந்து பிரிட்டோரியாவுக்கு ரயில்பயணம் மேற்கொண்டபோது பீட்டர்மாரிட்ஸ்பர்க் ரயில் நிலையத்தில் முதல் வகுப்புப் பெட்டியிலிருந்து வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டார். கூலிகளைப் போன்றுதான் இந்தியர்கள் நடத்தப்பட்டனர். ஆனால் காந்திடியகள் இதை எதிர்த்துப்போராட உறுதி பூண்டார்.

காந்தியடிகள் டிரான்ஸ்வாலில் உள்ள இந்தியர்களின் கூட்டத்தைக் கூட்டி அவர்கள் தங்களுடைய குறைகளை உறுதியுடன் வெளிப்படுத்தி களைவதற்காக ஒர அமைப்பை ஏற்படுத்தவேண்டும் என்று அறிவுறுத்தினார். இது போன்ற கூட்டங்களைத் தொடர்ந்து நடத்திய அவர், அந்த நாட்டின் சட்டங்களை மீறும் விதமாக நடந்த அநீதிகள் தொடர்பாக நிர்வாகத்தினருக்கு மனுக்களை அளித்தார். டிரான்ஸ்வாலில் வசித்த இந்தியர்கள் தலை வரியாக 3 பவுண்டுகளை செலுத்த வேண்டியிருந்தது. அவர்களுக்கென குறிக்கப்பட்ட பகுதிகளை விடுத்து வேறு இடங்களில் அவர்கள் நிலத்தை சொந்தமாக வைத்துக்கொள்ள முடியாதநிலை இருந்தது. இரவு 9 மணிக்குப் பிறகு அனுமதியின்றி வெளியிடங்களுக்கு செல்லமுடியாத நிலையும் இருந்தது. இத்தகைய நியாயமற்ற சட்டங்களை எதிர்த்து அவர் போராட்டத்தைத் தொடங்கினார்.

காந்தியடிகளுக்கு டால்ஸ்டாய், ஜான் ரஸ்கின் ஆகியோரின் எழுத்துக்களுடன் அறிமுகம் கிடைத்தது. "கடவுளின் அரசாங்கம் உன்னில் உள்ளது (The Kingdom of God is within you)

என்ற டால்ஸ்டாயின் புத்தகம், “அண்டு திஸ்லாஸ்ட்“ (undo this Last) என்ற ஜான் ரஸ்கின் எழுதிய புத்தகம் தாரோவின் “சட்டமறுப்பு“ (Civil Disobedience0 ஆகிய புத்தகங்களால் காந்தியடிகள் பெரும் தாக்கத்திற்குள்ளானார். இந்திய மற்றும் மேற்கித்திய சிந்தனையாளர்களின் கலவையாக காந்தியடிகளின் சிந்தனைகள் உருவாகின. மேற்கத்திய சிந்தனையாளர்களால் பெரிதும் காந்தியடிகள் ஈர்க்கப்பட்டாலும் மேற்கத்திய நாகரிகம் மற்றும் தொழில்மயமாக்கல் ஆகியவை குறித்து அவர் அதிதீவிரமாக விமர்சித்தார். ரஸ்கின் அவர்களால் பெரிதும் ஈர்க்கப்பட்ட காந்தியடிகள் ∴பீனிக்ஸ் குடியிருப்பையும் (1905) டால்ஸ்டாய் பண்ணையையும்ட (1910) நிறுவினார். சமத்துவம், சமூக வாழ்க்கை, தொழில் மீது மரியாதை ஆகிய நற்பண்புகள் இந்தக் குடியிருப்புகளில் ஊக்கப்படுத்தப்பட்டன. சத்தியாகிரகிகளுக்கு இவை பயிற்சிகளங்களாகத் திகழ்ந்தன.

**தென்னாப்பிரிக்காவில் ஒரு செயல் உத்தியாக சத்தியாகிரகம்:**

சத்தியாகிரகத்தை மேம்படுத்தினார். நியாயமற்ற சட்டங்களுக்கு எதிராக அமைதிப் பேரணிகளை நடத்திய பரப்புரையாளர்கள் எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக தாங்களாகவே முன்வந்து கைதானார்கள். குடியேற்றம் மற்றும் இனவேறுபாடு ஆகிய பிரச்சனைகளுக்காகப் போராட அவர் சத்தியாகிரக சோதனைகளை மேற்கொண்டார். குடிப்பெயர்ந்தோரை பதிவு செய்யும் அலுவலகங்கள் முன் கூட்டங்களும் ஆர்ப்பாட்டங்களும் நடத்தப்பட்டன. காவல்துறையினர் வன்முறையை கட்டவீழ்த்துவிட்டபோதிலும் சத்தியாகிரகிகள் எந்தவித எதிர்ப்பையும் காட்டவில்லை. காந்தியடிகளும் இதர தலைவர்களும் கைதானார்கள். பெரும்பாலும், ஒப்பந்த தொழிலாளர்களாக இருந்து தெருவோர வியாபாரிகளாக மாறிய இந்தியர்கள், காவல்துறையினரின் கடுமையான நடவடிக்கையையும் பொருட்படுத்தாமல் போராட்டத்தைத் தொடர்ந்தனர். இறுதியாக ஒப்பந்த தொழிலாளர்கள் மீது விதிக்கப்பட்ட தலைவரி ஸ்மட்ஸ்-காந்தி ஒப்பந்தத்தின்படி ரத்துசெய்யப்பட்டது. தென்னாப்பிரிக்காவில் காந்தியடிகள் தங்கியிருந்த காலகட்டத்தில் அவர் பலவற்றை அனுபவபூர்வமாகக் கற்றுக்கொண்டார். பல்வேறு மதங்களையும் பகுதிகளையும் மொழிக் குழுக்களையும் சுரண்டலுக்கு எதிரான போராட்டத்தில் ஒன்றிணைக்க முடியும் என்று காந்தியடிகள் உணர்ந்து கொண்டார். முதல் உலகப்போர் வெடித்த பிறகு காந்தியடிகள் இந்தியா திரும்பினார்.

**இந்தியாவில் காந்தியடிகள் நடத்திய தொடக்ககால சத்தியாகிரகங்கள்**

முந்தைய இந்திய வருகைகளின் போது காந்தியடிகள் தான் சந்தித்த கோபால கிருஷ்ண கோகலே மீது பெரும் மரியாதை கொண்டு அவரையே தமது அரசியல் குருவாக ஏற்றார். அவரது அறிவுரையின்படி, அரசியலில் ஈடுபடுமுன் நாட்டின் அனைத்துப் பகுதிகளுக்கும் காந்தியடிகள் பயணம் மேற்கொண்டார். இதனால் மக்களின் நிலையை அவர் அறிந்துகொள்ள வழிபிறந்தது. இதுபோன்ற ஒரு பயணத்தின்போதுதான் தமிழகத்தில் தமது வழக்கமான ஆடைகளை விடுத்து சாதாரண வேட்டிக்கு அவர் மாறினார். இந்தியா திரும்பும் முன் இங்கிலாந்துக்குச் சென்ற காந்தியடிகள் அங்கு போரில் பயன்படுத்தப்படுவதற்காக அவசர ஊர்தி சேவைகளை வழங்க உறுதியேற்றார். ஆங்கிலேய அரசின் பொறுப்புமிகுந்த குடிமகனாக தம்மைக் கருதிய அவர் இங்கிலாந்தை அதன் சோதனையான காலகட்டத்தில் ஆதரிப்பதைத் தமது கடமையாக நம்பியதோடு, ராணுவத்தில் இந்தியர்களைச் சேர்ப்பதற்கான பிரச்சாரத்திலும் ஈடுபட்டார். எனினும் அவரது கருத்துகள் பிந்தைய ஆண்டுகளில் மாறிப்போனது.

**சம்பரான் சத்தியாகிரகம்:**

பீகாரில் உள்ள சம்பரானில் “தீன் காதியா“ முறை பின்பற்றப்பட்டது. இந்த சுரண்டல் முறையில் இந்திய விவசாயிகள் தங்களின் நிலத்தின் இருபதில் மூன்று பங்கு பகுதியில் அவுரி (இண்டிகோ) பயிரிட வேண்டும் என்று ஐரோப்பியப் பண்ணையாளர்கள் அவர்களைக் கட்டாயப்படுத்தினர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைசியில் ஜெர்மானிய செயற்கை சாயங்களால், இண்டிகோ எனப்படும் நீலச்சாயம் சந்தையில் விற்கப்படுவது குறைந்தது. சம்பரானில் இண்டிகோ பயிரிட்ட ஐரோப்பியப் பண்ணையாளர்கள் நீலச்சாயம் பயிரிடும் கடமையிலிருந்து விவசாயிகளை விடுவிக்கும் தேவையை உணர்ந்து அந்த நிலைமையை தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள விரும்பினார்கள். இந்தக் கடமையிலிருந்து விவசாயிகளை விடுவிக்கும்பொருட்டு சட்டத்துக்கு புறம்பான நிலுவைத்தொகைகளை வசூலித்ததோடு

வாடகையையும், அதிகரித்தார்கள். எதிர்ப்பு வெடித்தது. இந்த வகையில் சிரம்பங்களைச் சந்தித்த சம்பரானைச் சேர்ந்த விவசாயியான ராஜ்குமார் சுக்லா, சம்பரானுக்கு வருகை புரியுமாறு காந்தியடிகளைக் கேட்டுக்கொண்டார். சம்பரானை காந்தியடிகள் சென்று சேர்ந்தவுடன், அங்கிருந்து உடனடியாக வெளியேறுமாறு காவல்துறையினர் அவரைக் கேட்டுக்கொண்டனர். அதற்கு அவர் மறுத்ததையடுத்து வழக்கைச் சந்திக்குமாறு பணிக்கப்பட்டார். இந்தச் செய்தி காட்டுத்தீ போன்று பரவியதை அடுத்து ஆயிரக்கணக்கானோர் அந்த இடத்தில் காந்தியடிகளுக்கு ஆதரவாகக் கூடினர். உத்தரவுக்குக் கீழ்ப்படிய மறுத்தது குறித்து காந்தியடிகள் மன்னிப்புக் கோரியதை அடுத்து வழக்கு திரும்பப் பெறப்பட்டது. "நாடு முதன் முதலாக ஒத்துழையாமை இயக்கச் செயல்முறைப் பாடத்தைக் கற்றுக்கொண்டதாக" காந்தியடிகள் தெரிவித்தார். இந்தியாவின் முதலாவது குடியரசுத்தலைவராக பின்னாளில் பொறுப்பேற்ற ராஜேந்திர பிரசாத்தும் வழக்குரைஞராக தொழில் செய்த பிரஜ்கிஷோர் பிரசாத்தும் காந்தியடிகளுக்குத் துணையாக செயல்பட்டனர். அதன்பிறகு துணைநிலை ஆளுநர் ஒரு குழுவை உருவாக்கினார் காந்தியடிகள் அக்குழுவில் ஒரு உறுப்பினர் ஆனார். இண்டிகோ பண்ணையாளர்கள் விவசாயிகள் மீது நடத்திய அடக்குமுறையை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் "தீன் காதியா" முறையை ரத்து செய்ய அந்தக் குழு பரிந்துரைத்தது.

சம்பரான் சத்தியாகிரகத்தின் வெற்றியை அடுத்து 1918 இல் அகமதாபாத் மில் வேலைநிறுத்தம், 1918 இல் கேதா சத்தியாகிரகம் ஆகியன காந்தியடிகளை ஒரு மக்கள் தலைவராக உருவாக்கின. முந்தைய தலைவர்களைப் போலல்லாமல் நாட்டு மக்களை ஒன்றுதிரட்டும் பணியில் காந்தியடிகள் தம் திறமையை வெளிப்படுத்தினார்.

**ரௌலட் சத்தியாகிரகமும் ஜாலியன்வாலா பாக் படுகொலையும்:**

முதல் உலகப்போருக்கு பிறகு ஆங்கிலேயர்களிடம் இருந்து மக்கள் தாராளமான அரசியல் சீர்திருத்தங்களை எதிர்பார்த்தனர். இந்தியர்களுக்கு உண்மையில் அதிகாரங்களை பரிமாற்றம் செய்யாததால் 1919 ஆம் ஆண்டின் இந்திய அரசுச்சட்டம் ஏமாற்றத்தை அளித்தது. மேலும், அரசானது போர்க்காலக் கட்டுப்பாடுகளை நிரந்தரமாக விரிவுபடுத்தி அமல்படுத்தத் தொடங்கியது. பிடிஉத்தரவு இல்லாமல் கை நடவடிக்கை, விசாரணை இல்லாமல் சிறையிலடைப்பது என காவல் துறையினருக்கு அதீத அதிகாரங்களை ரௌலட் சட்டம் வழங்கியது. இந்ச் சட்டத்தை "கருப்புச் சட்டம்" என்றழைத்த காந்தியடிகள் அதனை எதிர்த்து நாடு தழுவிய சத்தியாகிரகப் போராட்டத்துக்கு 1919 ஏப்ரல் 6இல் அழைப்புவிடுத்தார். இது உண்ணாவிரதமிருத்தல் மற்றும் பிரார்த்தனையுடன் கூடிய ஒரு அகிம்சை போராட்டமாக இருத்தல் வேண்டும். இது நாடு முழுவதும் பரவிய தொடக்ககால காலனிய எதிர்ப்பு போராட்டமாகும். ரௌலட் சட்டத்துக்கு எதிரான போராட்டம் பஞ்சாபில் குறிப்பாக அமிர்தசராஸ் மற்றும் லாகூரில் தீவிரமடைந்தது. காந்தியடிகள் கைது செய்யப்பட்டதுடன் பஞ்சாபிற்குள் நுழையவிடாமலும் தடுக்கப்பட்டார். ஏப்ரல் 9ஆம் நாள் டாக்டர் சை.ஃபுதீன் கிச்லு, டாக்டர். சத்யபால் என்ற இரண்டு முக்கிய உள்ளூர் தலைவர்கள் போராட்டத்திற்கு தலைமையேற்றதால் அமிர்தசரஸில் கைது செய்யப்பட்டனர். அதனையடுத்து நடந்த போராட்டங்களில் சில ஐரோப்பியர்கள் கொல்லப்பட்டனர். படைத்துறைச் சட்டம் அறிவிக்கப்பட்டது.

**ஜெனரல் டயரின் கொடுங்கோன்மை:**

அமிர்தசரஸில் உள்ள ஜாலியன்வாலா பாக்கில் 1919 ஏப்ரல் 13 ஆம் நாள் ஒரு பொதுக்கூட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பைசாகி திருநாளில் (சீக்கியர்களின் அறுவடைத்திருநாள்) இந்தக்கூட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்ட்டிருந்தது. ஆயிரக்கணக்கான கிராம மக்கள் அங்கு கூடியிருந்தனர். இந்தக்கூட்டம் பற்றி அறிந்தவுடன் அந்த இடத்தை பீரங்கி வண்டி மற்றும் ஆயுதமேந்திய வீரர்களுடன் ஜெனரல் ரெஜினால்டு டயர் சுற்றி வளைத்தார். உயர்ந்த மதில்களுடன் அமைந்த அந்த மைதானத்துக்கு இருந்த ஒரே வாயில் பகுதியை ஆக்ரமித்த ஆயுதமேந்தியவீரர்கள் எந்தவித முன்னெச்சரிக்கையுமின்றி கண்மூடித்தனமாக சுடத்தொடங்கினார்கள். துப்பாக்கிகளில் குண்டுகள் தீரும் வரை தொடர்ந்து 10 மணித்துளிகளுக்கு இந்தத் துப்பாக்கிச்சூடு நிகழ்ந்தது. அதிகாரப்பூர்வ அரசு தகவல்களின் படி 379 பேர் இந்தத் துப்பாக்கிச்சூட்டில் கொல்லப்பட்டனர். ஓராயிரத்துக்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர். ஆனால் அதிகாரப்பூர்வமற்ற தகவல்கள் இந்தத் தாக்குதலில் உயிரிழந்தோர் எண்ணிக்கையை ஓராயிரத்துக்கும் அதிகம் என்று தெரிவித்தது. இந்தச் சம்பவத்துக்குப் பிறகு படைத்துறைச்சட்டம் அறிவிக்கப்பட்டு பஞ்சாப் குறிப்பாக, அமிர்தசரஸ் மக்கள் சவுக்கடி கொடுக்கப்பட்டு தெருக்களில் தவழவிடப்பட்டார்கள். இந்தக் கொடுமைகள் இந்தியர்களை கொதித்தெழச் செய்தது. இரபீந்திரநாத் தாகூர் வீரத்திருமகன்

(Knighthood) என்ற அரசுப் பட்டத்தை திருப்பிக் கொடுத்தார். கெய்சர்-இ-ஹிந்த் பதக்கத்தை காந்தியடிகள் திருப்பிக்கொடுத்தார்.

**கிலாபத் இயக்கம்:**

1918 இல் முதலாவது உலகப்போர் முடிவுக்கு வந்தது. இசுலாமிய மதத்தலைவர் என உலகம் முழுவதும் போற்றப்பட்ட துருக்கியின் கலிபா கடுமையாக நடத்தப்பட்டார். அவருக்கு ஆதரவாக தோற்றுவிக்கப்பட்ட இயக்கமே கிலாபத் இயக்கம் என்றழைக்கப்பட்டது. கலிபா அகத்துக்கு இருந்த அதிகாரம் மற்றும் பெருமைகளை நிலைநிறுத்தும் குறிக்கோளுடன் மௌலானா முகமது அலி மற்றும் மௌலானா சௌகத் அலி எனும் அலி சகோதரர்கள் தலைமையில் இவ்வியக்கம் நடந்தது. இந்த இயக்கத்துக்கு ஆதரவளித்த காந்தியடிகள் இந்த இயக்கத்தை இந்து முஸ்லிம்களை இணைக்க ஒரு வாய்ப்பாகக் கருதினார். 1919 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தில்லியில் நடைபெற்ற அகில இந்திய கிலாபத் இயக்க மாநாட்டிற்கு அவர் தலைமையேற்றார். அல்லாஹு அக்பர், வந்தே மாதரம், இந்து – முஸ்லிம் வாழ்க ஆகிய மூன்று தேசிய முழக்கங்களை முன்மொழிந்த சௌகத் அலியின் யோசனையை காந்தியடிகள் ஆதரித்தார். 1920 ஜுன் 9 இல் அலகாபாத்தில் கூடிய கிலாபத் குழுவின் கூட்டம் காந்தியடிகளின் அகிம்சை மற்றும் ஒத்துழையாமை இயக்கத்தை ஏற்றுக்கொண்டது. ஒத்துழையாமை இயக்கம் 1920 ஆகஸ்டு முதல் நாள் தொடங்கியது.

**ஒத்துழையாமை இயக்கமும் அதன் வீழ்ச்சியும்:**

1920 செப்டம்பர் மாதம் கல்கத்தாவில் நடைபெற்ற சிறப்பு கூட்டத்தில் (அமர்வில்) இந்திய தேசிய காங்கிரஸ் ஒத்துழையாமை இயக்கத்துக்கு அனுமதி வழங்கியது. பின்னர் 1920 டிசம்பர் மாதம் சேலம் ஊ. விஜயராகவாச்சாரியாரின் தலைமையில் நாக்பூரில் நடந்த அமர்வில் இந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஒத்துழையாமை இயக்கத் திட்டத்தின் கூறுகளாவன.

1. **பட்டங்கள் மற்றும் மரியாதை நிமித்தமான பதவிகள் அனைத்தையும் திரும்ப ஒப்படைப்பது.**
2. **அரசின் செயல்பாடுகளில் ஒத்துழைக்காமலிருப்பது.**
3. **நீதிமன்ற வழக்குகளில் வழக்குரைஞர்கள் ஆஜராகாமல் இருப்பது. நீதிமன்றத்தில் இருந்த வழக்குகளுக்கு தனியார் மத்தியஸ்தம் மூலமாகத் தீர்வு காண்பது.**
4. **அரசுப் பள்ளிகளை குழந்தைகளும் அவற்றின் பெற்றோர்களும் புறக்கணிப்பது.**
5. **1919 ஆம் ஆண்டு சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட சட்டப்பேரவைகளை புறக்கணிப்பது.**
6. **அரசு விருந்து நிகழ்ச்சிகள் மற்றும் இதர அரசு விழாக்களில் பங்கேற்பதில்லை என்ற முடிவு**
7. **குடிமைப்பணி (சிவில்) அல்லது ராணுவப் பதவிகளை ஏற்க மறுப்பது.**
8. **அந்நியப் பொருட்களின் புறக்கணிப்பு மற்றும் உள்ளூர் பொருட்களுக்கு ஊக்கம் தரும் சுதேசி இயக்கத்தின் கொள்கைகளைப் பரப்புவது.**

**வரிகொடா இயக்கம் மற்றும் சௌரி சௌரா சம்பவம்:**

வரிகொடா இயக்கம் போன்ற பிரச்சாரத் திட்டங்கள் விவசாயிகளின் கவனத்தைக் கவர்ந்தன. 1922 பிப்ரவரி மாதம் பர்தோலியில் வரிகொடா இயக்க பிரச்சாரத்தை காந்தியடிகள் அறிவித்தார். இந்த இயக்கங்கள் ஒரு தேசியத் தலைவராக காந்தியடிகளின் நற்பெயரைப் பெரிதும் மேம்படுத்தின, குறிப்பாக விவசாயிகள் மத்தியில் ஒரு மாபெரும் தலைவராக அவரது மரியாதையை உயர்த்தின. காந்தியடிகள் நாடுதழுவிய சுற்றுப்பயணத்தை மேற்கொண்டார். அவர் பயணம் மேற்கொண்ட இடங்களில் எல்லாம் அந்நியத் துணிகள் குவிக்கப்பட்டு தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. ஆயிரக்கணக்கானவர்கள் அரசு வேலைகளைத் துறந்தனர். மாணவர்கள் பெரும் எண்ணிக்கையில் தங்கள் கல்வியைக் கைவிட்டனர். பெருமளவிலான வழக்குரைஞர்கள் தங்கள் தொழில் பயிற்சியைக் கைவிட்டனர். ஆங்கிலேயப் பொருட்கள் மற்றும் நிறுவனங்கள் புறக்கணிப்புத் தீவிரமாக நடந்தது. வேல்ஸ் இளவரசரின் இந்தியப் பயணத்தை புறக்கணிப்பது வெற்றிகரமாக நடந்துமுடிந்தது. இந்தப் புறக்கணிப்பில் தொழிற்சங்கங்களும் தொழிலாளர்களும் தீவிரமாகப் பங்கேற்றனர். எனினும் சௌரி சௌரா நிகழ்வைத் தொடர்ந்து காந்தியடிகள் உடனடியாக இந்த இயக்கத்தைத் திரும்பப் பெற்றார்.

1922 பிப்ரவரி 5 ஆம் நாள் தற்போதைய உத்தரப்பிரதேசத்தில் உள்ள கோரக்பூர் அருகே சௌரி சௌரா என்ற கிராமத்தில் தேசியவாதிகள் நடத்தியப் பேரணி காவல்துறையினரின் தூண்டுதலில் வன்முறையாக மாறியது. தாம் குறைந்த எண்ணிக்கையில் இருப்பதை உணர்ந்த

காவல்துறையினர் பாதுகாப்புக்காக தங்களை காவல்நிலையத்துக்குள் அடைத்துக் கொண்டனர். அனால் ஆத்திரம்கொண்ட கூட்டத்தினர் 22 காவலருடன் காவல்நிலையத்தை தீயிட்டுக் கொளுத்தினர். இதில் 22 காவலர்களும் உயிரிழந்தனர். காந்தியடிகள் உடனடியாக இயக்கத்தை திரும்பப்பெற்றார். இயக்கம் ஊக்கம் பெறுவதாகக் கருதிய ஜவகர்லால் நேரு, சுபாஷ் சந்திரபோஸ் போன்ற இளைய தலைவர்கள் உள்ளிட்ட காங்கிரஸ் தலைவர்களின் விருப்பத்துக்கு மாறாக இந்த இயக்கம் திரும்பப் பெறப்பட்டது. அப்போது கைது செய்யப்பட்ட காந்தியடிகள் பின்னர் 1924 ஆம் ஆண்டு தான் விடுதலை செய்யப்பட்டார். அகிம்சை மற்றும் ஒத்துழையாமை ஆகிய காரணங்களால் இயக்கம் தோல்வி காணவில்லை மாறாக போதுமான எண்ணிக்கையில் அவற்றில் பயிற்சி பெற்ற தலைவர்களும் தொண்டர்களும் இல்லாமல் போனதே காரணம் என்று காந்தியடிகள் நம்பினார். அதன் பிறகு விரைவில் துருக்கியில் இருந்த கலிபா அலுவலகம் மூடப்பட்டதையடுத்து கிலாபத் இயக்கமும் முடிவுக்கு வந்தது.

**சுய ராஜ்ஜியக் கட்சியினர்:**

இதனிடையே காங்கிரஸ் கட்சி இரண்டாகப் பிளவுபட்டது. அவையாவன, மாற்றத்தை விரும்பாதவர்கள் என இரண்டு பிரிவுகள் ஆகும். மோதிலால் நேரு, சி.ஆர். தாஸ் ஆகியோர் தலைமையிலான காங்கிரசார் தேர்தலில் போட்டியிட்டு சட்டப்பேரவைக்குள் நுழைய வேண்டும் என்று விரும்பினார்கள். சட்டப் பேரவைகளில் பங்கேற்று பணியாற்றுவதன் மூலம் மட்டுமே தேசநலன்கள் மேம்படும் என்றும் இரட்டை ஆட்சியில் பங்கேற்பதன் மூலம்தான் காலனி ஆதிக்க அரசை பாதிப்படைய வைக்க முடியும் என்றும் அவர்கள் வாதிட்டனர். அவர்களே மாற்றத்தை விரும்புவோர்கள் என்று அழைக்கப்பட்டனர். வல்லபாய் பட்டேல், சி. ராஜாஜி உள்ளிட்ட காந்தியடிகளைத் தீவிரமாகப் பின்பற்றிய பலர் மாற்றத்தை விரும்பாதவர்களாக அரசுடன் ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடர விரும்பினார்கள். எதிர்ப்புக்கு இடையே மோதிலால் நேருவும் சி.ஆர். தாஸும் 1923 ஜனவரி முதல் நாள் சுயராஜ்ஜியக் கட்சியை தொடங்கினார்கள். இந்தக் கட்சி பின்னர் காங்கிரஸ் கட்சியின் சிறப்பு அமர்வில் அங்கீகரிக்கப்பட்டது. ஆங்கிலேய இந்தியாவின் பேரரசு (இம்பீரியல்) சட்டப் பேரவை மற்றும் பல்வேறு மாகாண சட்டப்பேரவைகளுக்கு பெரும் எண்ணிக்கையில் சுயராஜ்ஜிய கட்சி உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தேசியவாதக் கருத்துக்களை முன்னெடுத்துச் செல்ல அவர்கள் சட்டப்பேரவையை ஒரு மேடையாகப் பயன்படுத்தினார்கள். வங்காளத்தில் அரசுடன் ஒத்துழைக்க விரும்பாததால் இந்தியர்களுக்கு என மாற்றப்பட்ட துறைகளில் பொறுப்பேற்க அவர்கள் மறுத்துவிட்டனர். காலனி அரசின் உண்மையான இயல்பை அவர்கள் வெளிக்கொணர்ந்தனர். எனினும் 1925 இல் அக்கட்சியின் தலைவர் சி.ஆர். தாஸ் மறைந்த பிறகு சுயராஜ்ஜிய கட்சி வீழ்ச்சி காணத் தொடங்கியது. சுயராஜ்ஜிய கட்சி உறுப்பினர்கள் சிலர் அரசுப் பதவிகளை ஏற்கத் தொடங்கினர். 1926 இல் சட்டப்பேரவைகளில் இருந்து சுயராஜ்ஜிய கட்சி விலககிக் கொண்டது.

1919 ஆம் ஆண்டின் இந்திய அரசுச் சட்டம் மூலமாக இரட்டை ஆட்சி என்பது அறிமுகம் செய்யப்பட்டது. இதன் மூலம் மாகாண அரசின் அதிகாரங்கள் ஒதுக்கப்பட்ட மற்றும் மாற்றப்பட்ட துறைகள் என இரண்டு வகைகளாகப் பிரிக்கப்பட்டது. நிதி, பாதுகாப்பு, காவல்துறை, நீதித்துறை, நிலவருவாய், மற்றும் நீர்ப்பாசனம் ஆகிய துறைகள் ஆங்கிலேயர்கள் வசம் ஒதுக்கப்பட்டன. மாற்றப்பட்ட துறைகளில் உள்ளாட்சி, கல்வி, பொதுசுகாதாரம், பொதுப்பணி, வேளாண்மை, வனங்கள், மற்றும் மீன்வளத்துறை ஆகியன இந்திய அமைச்சர்களின் கட்டுப்பாட்டின் கீழ் விடப்பட்டன. 1935 ஆம் ஆண்டு மாகாண சுயாட்சி அறிமுகம் செய்யப்பட்ட பிறகு இந்த முறை முடிவுக்கு வந்தது.

**காந்தியடிகளின் ஆக்கப்பூர்வத் திட்டம்:**

சௌரி சௌரா நிகழ்வுக்குப் பிறகு ஆர்வலர்களும் மக்களும் அகிம்சை போராட்டம் குறித்த பயிற்சியை மேற்கொள்ள வேண்டும் என்று காந்தியடிகள் உணர்ந்தார். அதன் ஒரு பகுதியாக காதி இயக்க மேம்பாடு, இந்து – முஸ்லிம் ஒற்றுமை, தீண்டாமை ஒழிப்பு ஆகியவற்றில் அவர் கவனம் செலுத்தினார். "உங்கள் மாவட்டங்களுக்குச் செல்லுங்கள். கதர், இந்து - முஸ்லிம் ஒற்றுமை, தீண்டாமை ஒழிப்பு ஆகியன பற்றிய செய்திகளைப் பரப்புங்கள். இளைஞர்களை ஒன்றுதிரட்டி அவர்களை சுயராஜ்யத்தின் உண்மையான வீரர்களாக உருமாற்றுங்கள்" என்று காந்தியடிகள் காங்கிரசாருக்கு அறிவுறுத்தினார். காங்கிரஸ் உறுப்பினர்கள் கதர் உடுப்பதை அவர் கட்டாயமாக்கினார். அகில இந்திய நெசவாளர் அமைப்பு உருவாக்கப்பட்டது. இந்தக்

குறிக்கோள்களை அடையாமல் சுயராஜ்ஜியத்தை அடைய முடியாது என்று காந்தியடிகள் உறுதியாக நம்பினார்.

கிலாபத் இயக்கம், ஒத்துழையாமை இயக்கம் ஆகியவற்றின் போது, இந்துக்கள் மற்றும் முஸ்லிம்களின் ஒத்துழைப்பு இருந்தபோதிலும் அந்த ஒற்றுமை விரிசலடையக் கூடியதாகவே இருந்தது. 1920 களின் காலம் இந்துகள் மற்றும் முஸ்லிம்கள் இடையே தொடர்ச்சியான வகுப்பு மோதல்களை கண்ட காலகட்டமாகவே இருந்தது. இந்து மகாசபை பண்டித மதன் மோகன் மாளவியா தலைமையிலும், முஸ்லிம் லீக் அலி சகோதரர்கள் தலைமையிலும் பிரபலம் அடைந்து கொண்டிருந்தன.

வகுப்புவாத அரசியலில் ஈடுபட்ட இந்துக்கள் மற்றும் முஸ்லிம்களின் இதயங்களை ஈர்க்கும் வகையில் காந்தியடிகள் 1924 இல் 21 நாள் உண்ணாவிரதத்தை மேற்கொண்டார்.

இந்து முஸ்லிம் ஒற்றுமையின் மூலமாக மட்டுமே சுயராஜ்யம் சாத்தியப்படும் என்று அப்போதைக்கு நம்பிய முகம்மது அலி ஜின்னாவும் காந்தியடிகளும் மேற்கொண்ட தீவிரமுயற்சிகள் வகுப்புவாத கலவரங்களை அடியோடு அழிக்கத் தவறிவிட்டன.

**சைமன் குழு புறக்கணிப்பு:**

1927 நவம்பர் 8 ஆம் நாள் இந்திய அரசியல் சாசன சீர்திருத்தங்களுக்கான இந்திய சட்டபூர்வ ஆணையத்தை (Indian Statutory Commision) நியமிப்பதாக ஆங்கிலேய அரசு அறிவித்தது. சர் ஜான் சைமன் தலைமையிலான இந்தக் குழுவில் ஏழு உறுப்பினர்கள் இடம்பெற்றனர். இது “சைமன் குழு“ என்றே அழைக்கப்பட்டது. இந்தியர்கள் எவரும் இடம்பெறாமல் அனைவரும் வெள்ளையர்களாக இந்தக் குழுவில் இடம்பெற்றனர். இந்தியர் ஒருவர் கூட உறுப்பினராக இல்லாத காரணத்தால் இந்தியர்கள் ஆத்திரமும் அவமானமும் அடைந்தனர். தங்கள் அரசியல் சாசனத்தை நிர்ணயிக்க தங்களுக்கு உரிமை இல்லாத நிலைகண்டு கொதித்தனர். காங்கிரஸ் மற்றும் முஸ்லிம் லீக் உள்ளிட்ட அனைத்து இந்திய பிரிவுகளும் இந்த சைமன் குழுவினைப் புறக்கணிப்பது என முடிவு செய்தன. இந்தக் குழு சென்ற இடங்களில் எல்லாம் ஆர்ப்பாட்டங்களும், கருப்புக்கொடி ஏந்தியபடி “சைமனே திரும்பிப் போ“ எனும் முழக்கங்களும் இடம்பெற்றன. போராட்டக்காரர்கள் காவல் துறையினரால் கொடூரமாக தாக்கப்பட்டனர். அவ்வாறு நடந்த ஒரு கடுமையான தாக்குதலில் லால லஜ்பத் ராய் மிக மோசமாக காயமடைந்து பின்னர் சில நாட்களில் உயிரிழந்தார்.

**நேரு அறிக்கை:**

இந்தியாவில் இருந்த பல்வேறு அரசியல் கட்சிகளை சைமன் குழு புறக்கணிப்பு ஒன்றிணைத்தது. சைமன் குழு முன்மொழிவுகளுக்கு மாற்றாக இந்தியாவுக்கு அரசியல் சாசனம் உருவாக்குவதை குறிக்கோளாகக் கொண்டு 1928 இல் அனைத்துக் கட்சி மாநாடு நடைபெற்றது. இந்த கொள்கைகளின் அடிப்படையில் அரசியல் சாசன வரைவுக்காக திட்டம் வகுக்க மோதிலால் நேரு தலைமையிலான கமிட்டி அமைக்கப்பட்டது. அந்தக் கமிட்டியின் அறிக்கை “நேரு அறிக்கை“ என்று அழைக்கப்பட்டது. அதில் பரிந்துரை செய்யப்பட்டவை.

- **இந்தியாவுக்கு தன்னாட்சிப் பகுதி என்ற டொமினியன் தகுதி.**
- **மத்திய சட்டப் பேரவை மற்றும் மாகாண சட்டப் பேரவைகளுக்கு கூட்டு மற்றும் கலவையான வாக்காளர் தொகுதிகளுடன் தேர்தல் நடைபெறுவது.**
- **மத்திய சட்டப் பேரவை மற்றும் முஸ்லிம்கள் சிறுபான்மையினராக உள்ள மாகாண சட்ட பேரவைகளில் முஸ்லிம்களுக்கு இட ஒதுக்கீடு அதேபோல் இந்துக்களுக்கு அவர்கள் சிறுபான்மையினராக உள்ள வடமேற்கு எல்லை மாகாணத்தில் இடஒதுக்கீடு.**
- **பொது வாக்களிப்பு முறையும் அடிப்படை உரிமைகளும் வழங்கப்படுவது.**

மத்திய சட்டப்பேரவையில் இடஒதுக்கீடு வழங்குவது குறித்து ஜின்னா சட்டத்திருத்தத்தைக் கொண்டு வந்தார். மூன்றில் ஒருபங்கு இடங்கள் முஸ்லிம்களுக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்று அவர் கோரினார். அவரை ஆதரித்த தேஜ் பஹதூர் சாப்ரூ இது பெரும் மாற்றத்தைத் தராது என்று வேண்டினார். எனினும், அனைத்துக் கட்சி மாநாட்டில் இவை அனைத்தும் தோல்வி கண்டன. பின்னர், ஜின்னாவின் 14 அம்சங்கள் என்று அழைக்கப்பட்ட தீர்மானத்தை அவர் முன்மொழிந்தார். எனினும் அதுவும் நிராகரிக்கப்பட்டது. இந்து-முஸ்லிம் ஒற்றுமையின் தூதராக பாராட்டப்பட்ட ஜின்னா பின்னர் தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டு முஸ்லிம்களுக்கு தனிநாடு என வலியுறுத்த ஆரம்பித்தார்.

**முழுமையான சுயராஜ்ஜியத்துக்கான போராட்டமம் மற்றும் சட்டமறுப்பு இயக்கத் தொடக்கம்:**

இதனிடையே டொமினியன் எனப்படும் தன்னாட்சிப் பகுதி தகுதி குறித்து திருப்தி அடையாத காங்கிரசார் சிலர், முழுமையான சுதந்திரம் வேண்டி கோரிக்கை வைத்தனர். 1929 இல் டிசம்பர் மாதம் லாகூரில் ஜவகர்லால் நேரு தலைமையில் காங்கிரஸ் அமர்வு நடந்தது. அதில் முழுமையான சுதந்திரம் என்பது இலக்காக அறிவிக்கப்பட்டது. வட்டமேசை மாநாட்டை புறக்கணிப்பது என்று முடிவு செய்யப்பட்டதுடன், சட்டமறுப்பு இயக்கத்தை தொடங்கவும் முடிவு செய்யப்பட்டது. 1930 ஜனவரி 26 ஆம் நாள் சுதந்திரத் திருநாளாக அறிவிக்கப்பட்டு வரிகொடா இயக்கம் உள்ளிட்ட சட்டமறுப்பு இயக்கம் மூலமாகவும் வன்முறையற்ற முறையில் முழுமையான சுதந்திரத்தை அடைவது குறித்தும் நாடு முழுவதும் உறுதிமொழி ஏற்கப்பட்டது. இந்த இயக்கத்தைத் தொடங்க இந்திய தேசிய காங்கிரஸ் காந்தியடிகளுக்கு அங்கீகாரம் அளித்தது.

**உப்பு சத்தியாகிரகம்:**

1930 ஜனவரி 31 ஆம் நாளுக்குள் நிறைவேற்ற வேண்டும் என்ற காலக்கெடுவுடன் அரசப்பிரதிநிதி (வைசிராய்) இர்வின் பிரவுவிடம் கோரிக்கைகள் அடங்கிய மனு கொடுக்கப்பட்டது. அவை கீழ்க்கண்டவையாகும்.

- ராணுவம் மற்றும் ஆட்சிப்பணி சேவைகளுக்கான செலவுகளை 50 சதவிகிதம் வரை குறைப்பது.
- முழுமையான புறக்கணிப்பை அறிமுகம் செய்வது.
- அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய்வது.
- நிலவருவாயை 50 சதவிகிதமாக குறைப்பது.
- உப்பு வரியை ரத்துசெய்வது.

கோரிக்கை மனுவுக்கு அரசப்பிரதிநிதி பதில் தெரிவிக்காத நிலையில் காந்தியடிகள் சட்டமறுப்பு இயக்கத்தை தொடங்கினார். உப்பு மீதான வரியை ரத்து செய்ய வேண்டும் என்ற கோரிக்கை ஒரு அறிவுபூர்வமான முடிவாகும். சமூகத்தின் ஒவ்வொரு பிரிவினரையும் பாதிக்கும் விஷயமாக உப்பு இருந்தது. பெண்கள் உட்பட அனைத்துப் பிரிவு மக்களும் பங்கேற்று சட்டமறுப்பு இயக்கத்தை ஒரு மக்கள் இயக்கமாக மாற்றினர். காந்தியடிகள் 1930 மார்ச் மாதம் 12 ஆம் நாள் 78 பேர்களுடன் சபர்மதி ஆசிரமத்திலிருந்து தனது புகழ்பெற்ற தண்டி யாத்திரையைத் தொடங்கினார். இந்த யாத்திரையில் நூற்றுக்கணக்கானோர் சேரச்சேர அது நீண்டுகொண்டே போனது. காந்தியடிகள் தனது 61 ஆவது வயதில் 24 நாட்களில் 241 மைல் தொலைவு யாத்திரையாக நடந்து சென்று 1930 ஏப்ரல் 5 ஆம் நாள் மாலை தண்டி கடற்கரையை அடைந்தார். அடுத்த நாள் காலை ஒரு கைப்பிடி உப்பைக் கையில் எடுத்து உப்புச்சட்டத்தை மீறினார்.

**மாகாணங்களில் உப்பு சத்தியாகிரகம்:**

தமிழ்நாட்டில் திருச்சிராப்பள்ளியில் இருந்து வேதாரண்யம் வரை இதேபோன்ற ஒரு யாத்திரையை சி. ராஜாஜி மேற்கொண்டார். கேரளா, ஆந்திரா மற்றும் வங்காளத்திலும் உப்பு சத்தியாகிரக யாத்திரை நடந்தன. வடமேற்கு எல்லை மாகாணத்தில் கான் அப்துல் கஃபார்கன் என்பவர் இந்த இயக்கத்திற்குத் தலைமை ஏற்றார். செஞ்சட்டைகள் எனறழைக்கப்பட்ட ”குடைகிட்மட்கர்“ இயக்கத்தை அவர் நடத்தினார். இந்த இயக்கத்தை அரசு இரும்புக்கரம் கொண்டு ஒடுக்கியதில் பலர் பாதிப்படைந்தனர். ஆயுதம் ஏந்தாத சத்தியாகிரகிகள் மீது தாக்குதல் நடத்த கட்வாலி படையணியின் வீரர்கள் மறுத்துவிட்டனர்.

**ஆங்கிலேயர்கள் 1865 ஆம் ஆண்டு முதலாவது வனச்சட்டத்தை நிறைவேற்றினார்கள். சுள்ளி எடுப்பது, கால்நடைத் தீவனம் மற்றும் தேன், விதைகள், மருத்துவ மூலிகைகள். கொட்டைகள் ஆகிய சிறிய அளவிலான வன உற்பத்திப் பொருட்களையும் வனப்பகுதிகளில் இருந்து சேகரிக்க இந்தச் சட்டம் வனத்தில் வாழ்வோருக்கு தடை விதித்தது. 1878 ஆம் ஆண்டின் இந்திய வனங்கள் சட்டத்தின் படி வனங்களின் உரிமை அரசிடம் இருந்தது. நன்செய் மற்றும் தரிசு நிலங்களும் வனங்களாக கருதப்பட்டன. பழங்குடியினர் பயன்படுத்திய சுழற்சி முறை விவசாயம் தடைசெய்யப்பட்டது. உள்ளூர் மக்களின் கட்டுப்பாட்டில் இருந்து வனப்பகுதிகளை தள்ளி வைப்பதற்கு பாதிக்கப்பட்ட ஆதிவாசிகளும் தேசியவாதிகளும் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.**

**பழங்குடியினர் நடத்திய தொடர் ஆர்ப்பாட்டங்களுக்கு மிக முக்கிய ஆதாரமாக ராம்பாவில் அல்லாரி சீதாராமா ராஜு தலைமையிலான ஆர்ப்பாட்டத்தைக் குறிப்பிடலாம். கிழக்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளில் இருந்த (விசாகப்பட்டினம் மற்றும் கோதாவரி மாவட்டங்களைச் சேர்ந்த) ஆதிவாசி பகுதிகளை தனது இல்லமாக கருதிய அவர் அங்கிருந்து ஆதிவாசிகளுக்காக உழைத்தார். அல்லூரி சீதாராம ராஜு அவர்களால் ஒருங்கிணைக்கப்பட்ட ஆதிவாசிகள் கடுமையான வறுமையில் வாடினார்கள். மான்யம் (என்றழைக்கப்பட்ட வனப்பகுதியில்) காவல்துறை, வனத்துறை மற்றும் வருவாய் துறை அதிகாரிகளால் அவர்கள் துன்புறுத்தப்பட்டனர். ராம்பா பகுதி ஆதிவாசிகளின் நலன் காப்பதற்காக ஊழல் அதிகாரிகளுடன் அல்லூரி சீதாராம ராஜு போராடியதால் அவரது உயிரைக் குறிவைத்து ஆங்கிலேய அரசு நடவடிக்கை எடுக்கத் தொடங்கியது. ராம்பா ஆதிவாசிகளின் கிளர்ச்சியை அடக்குவதற்காக (1922 – 24) மலபார் காவல்துறையின் சிறப்புக்குழு அனுப்பி வைக்கப்பட்டது. வனவாசிகளின் நலனுக்காகப் போராடிய அல்லூரி சீதாராம ராஜு தியாகி ஆனார்.**

காந்தியடிகள் நள்ளிரவில கைது செய்யப்பட்டு எரவாடா சிறையில் அடைக்கப்பட்டார். ஜவகர்லால் நேரு, கான் அப்துல் க.்.பார் கான் மற்றும் இதர தலைவர்கள் விரைவாக கைதானார்கள். அந்நிய துணிகள் புறக்கணிப்பு, மதுக்கடைகள் முன் ஆர்ப்பாட்டங்கள், வரி கொடா இயக்கம், வனச்சட்டங்களை பின்பற்ற மறுப்பது ஆகியன உள்ளிட்ட பல ஆர்ப்பாட்ட வடிவங்கள் பின்பற்றப்பட்டன. பெண்கள், விவசாயிகள், பழங்குடியினர், மாணவர்கள் மற்றும் குழந்தைகளும் என சமூகத்தின் அனைத்து பிரிவு மக்களும் நாடு தழுவிய போராட்டத்தில் பங்கேற்றனர்.

காந்தியடிகள் நள்ளிரவில் கைது செய்யப்பட்டு எரவாடா சிறையில் அடைக்கப்பட்டார். ஜவகர்லால் நேரு, கான் அப்துல் க.்.பார் கான் மற்றும் இதர தலைவர்கள் விரைவாக கைதானார்கள். அந்நிய துணிகள் புறக்கணிப்பு, மதுக்கடைகள் முன் ஆர்ப்பாட்டங்கள், வரி கொடா இயக்கம், வனச்சட்டங்களை பின்பற்ற மறுப்பது ஆகியன உள்ளிட்ட பல ஆர்ப்பாட்ட வடிவங்கள் பின்பற்றப்பட்டன. பெண்கள், விவசாயிகள், பழங்குடியினர், மாணவர்கள் மற்றும் குழந்தைகளும் என சமூகத்தின் அனைத்து பிரிவு மக்களும் நாடு தழுவிய போராட்டத்தில் பங்கேற்றனர். இந்தியா சந்தித்த மக்கள் இயக்கங்களிலேயே இது மிகப் பெரியது. 90,000 க்கும் மேற்பட்டோர் கைதானார்கள்.

**வட்ட மேசை மாநாடு:**

இந்த இயக்கத்தின் மத்தியில் 1930 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் லண்டனில் முதலாவது வட மேசை மாநாடு நடந்தது. பிரிட்டிஷ் பிரதமர் ராம்சே மெக்டொனால்டு மாகாண சுயாட்சியுடன் கூடிய மத்திய அரசு பற்றிய யோசனையை அறிவித்தார். சிறுபான்மையினருக்கு தனித் தொகுதிகள் வழங்குவது குறித்த பிரச்சனையில் சிக்கல் நீடித்தது. காங்கிரசின் தலைவர்கள் சிறைகளில் அடைக்கப்பட்டிருந்ததால் இந்த வட்டமேசை மாநாட்டில் காங்கிரஸ் கட்சி கலந்து கொள்ளவில்லை. இந்தப் பிரச்சனை குறித்து எந்தவித முடிவும் எட்டப்படாமலேயே மாநாடு நிறைவடைந்தது. காங்கிரஸ் பங்கேற்பின்றி விவாதங்கள் நடத்துவதால் எந்தவொரு பயனும் இல்லை என்பது தெளிவானது. நிபந்தனையின்றி காந்தியடிகள் விடுதலை செய்யப்பட்டார்.

## காந்தி - இர்வின் ஒப்பந்தம்:

காந்தியடிகளுடன் அரசப்பிரதிநிதி இர்வின் பிரபு பேச்சுவார்த்தைகளை நடத்தியதையடுத்து 1931 மார்ச் 5 ஆம் நாள் காந்தி-இர்வின் ஒப்பந்தம் ஏற்பட்டது. வன்முறையில் ஈடுபடாத அனைத்து அரசியல் கைதிகளையும் உடனடியாக விடுதலை செய்வது, கைப்பற்றப்பட்ட நிலத்தைத் திரும்பத் தருவது, பதவி விலகிய அரசு ஊழியர்கள் விஷயத்தில் நீக்குபோக்காக நடந்துகொள்வது ஆகிய கோரிக்கைகளை ஆங்கிலேய தருவது, பதவி விலகிய அரசு ஊழியர்கள் விஷயத்தில் நீக்குபோக்காக நடந்து கொள்வது ஆகிய கோரிக்கைகளை ஆங்கிலேய அரசு ஏற்றுக்கொண்டது. கடலோர கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தங்கள் பயன்பாட்டுக்காக உப்புக் காய்ச்சவும் வன்முறை இல்லாமல் ஆர்ப்பாட்டங்கள் செய்யவும் இந்த ஒப்பந்தம் வகை செய்தது. சட்டமறுப்பு இயக்கத்தை ரத்து செய்துவிட்டு இரண்டாவது வட்டமேசை மாநாட்டில் கலந்துகொள்ள காங்கிரஸ் கட்சி ஒப்புக்கொண்டது. 1931 செப்டம்பர் 7 ஆம் நாள் நடந்த இரண்டாவது வட்டமேசை மாநாட்டில் காந்தியடிகள் கலந்துகொண்டார். சிறுபான்மையினருக்கு தனித்தொகுதிகள் வழங்குவதை காந்தியடிகள் ஏற்கவில்லை. இதன் விளைவாக, இரண்டாவது வட்டமேசை மாநாடு எந்தவித முடிவும் எட்டப்படாமல் முடிவடைந்தது.

## சட்டமறுப்பு இயக்கத்திற்கு புத்துயிரூட்டல்:

இந்தியா திரும்பியபிறகு காந்தியடிகள் சட்டமறுப்பு இயக்கத்திற்கு மீண்டும் புத்துயிரூட்டினார். இந்தமுறை அரசு எதிர்ப்பை சமாளிக்க ஆயத்தமாக இருந்தது. படைத்துறைச் சட்டம் அமல்படுத்தப்பட்டு 1932 ஜனவரி 4 ஆம் நாள் காந்தியடிகள் கைது செய்யப்பட்டார். விரைவில் அனைத்து காங்கிரஸ் தலைவர்களும் கைது செய்யப்பட்டனர். ஆர்ப்பாட்டங்கள் மற்றும் மறியல் செய்த மக்கள் படைகொண்டு அடக்கப்பட்டனர். நான்கு மாத காலத்துக்குள் சுமார் 80,000 மக்கள் கைது செய்யப்பட்டனர். தேசியவாத ஊடகம் முழுமையாக மூடப்பட்டது. அரசின் அடக்குமுறை நடவடிக்கைகளையும் மீறி இந்த இயக்கம் 1934 ஏப்ரல் மாதம் வரை நீடித்தது என்பதை இங்கு குறிப்பிட்டே ஆக வேண்டும்.

இதனிடையே, 1932 ஆம் ஆண்டு நவம்பர் 17 ஆம் நாள் முதல் டிசம்பர் 24 ஆம் நாள் வரை மூன்றாவது வட்டமேசை மாநாடு நடத்தப்பட்டது. சட்டமறுப்பு இயக்கத்திற்கு புத்துயிரூட்டியதால் காங்கிரஸ் கட்சி இந்த மாநாட்டில் பங்கேற்கவில்லை.

## வகுப்புவாரி ஒதுக்கீடு மற்றும் பூனா ஒப்பந்தம்:

1932 ஆகஸ்டு 16 ஆம் நாள் வகுப்புவாரி ஒதுக்கீட்டை ராம்சே மெக்டொனால்டு அறிவித்தார். முஸ்லிம்கள், சீக்கியர்கள், இந்திய கிறித்தவர்கள், ஆங்கிலோ இந்தியர்கள் மற்றும் பெண்கள் மற்றும் “ஒடுக்கப்பட்ட வகுப்பினர்“ என சிறுபான்மையினருக்கு தனித்தொகுதிகளை இது வழங்கியது. ஒடுக்கப்பட்ட வகுப்பினரை சிறுபான்மையினர் பட்டியலில் சேர்ப்பதை காந்தியடிகள் வலுவாக எதிர்த்தார். இது இந்துக்கள் இடையே பிளவை ஏற்படுத்துவதோடு, இந்துக்களை விட ஒடுக்கப்பட்ட வகுப்பினர் தனித்து அடையாளம் காணப்படுவதால் தீண்டாமைக்கு எதிரான பிரச்சாரத்தை அர்த்தமில்லாதது ஆக்கிவிடும் என்று காந்தியடிகள் வாதிட்டார் எனினும் தொகுதிகள் ஒதுக்கீட்டை அவர் ஆதரித்தார். ஒடுக்கப்பட்ட மக்களின் தலைவராகிய B.R. அம்பேத்கர், தமது கருத்துப்படி தனித்தொகுதிகள் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு அரசியல் பிரதிநிதித்துவம் மற்றும் அதிகாரத்தை வழங்கும் என்று வாதிட்டார். 1932 செப்டம்பர் 20 ஆம் நாள் காந்தியடிகள் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு தனித்தொகுதிகள் ஒதுக்கீட்டிற்கு எதிராக சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கும் போராட்டத்தை தொடங்கினார். மதன் மோகன் மாளவியா, ராஜேந்திர பிரசாத் மற்றும் பல தலைவர்கள் டீ.சு. அம்பேத்கர் மற்றும் ஆ.ஊ. ராஜா மற்றும் இதர ஒடுக்கப்பட்ட வகுப்பினரின் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தினர். தீவிரப் பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு காந்தியடிகள் மற்றும் அம்பேத்கர் இடையே ஒப்பந்தம் ஒன்று எட்டப்பட்டது. இதுவே பூனா ஒப்பந்தம் என்று அழைக்கப்பட்டது.

## அதன் முக்கிய விதிமுறைகள்:

- **தனித்தொகுதிகள் பற்றிய கொள்கைகள் கைவிடப்பட்டன. மாறாக, ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களுக்கு இடஒதுக்கீடு வழங்கும் கூட்டுத்தொகுதிகள் பற்றிய யோசனை ஏற்கப்பட்டது.**

➢ **ஒடுக்கப்பட்ட வகுப்பினருக்கான இடங்கள் 71 லிருந்து 148 ஆக அதிகரிக்கப்பட்டது. மத்திய சட்டப் பேரவையில் 18 சதவிகித இடங்கள் ஒதுக்கப்பட்டன.**

**தீண்டாமைக்கு எதிரான பிரச்சாரம்:**

அடுத்த சில ஆண்டுகள் திண்டாமையை ஒழிப்பதற்கு காந்தியடிகள் செலவிட்டார். அம்பேத்கர் உடனான அவரது தொடர்புகள் சாதி அமைப்புகள் பற்றிய காந்தியடிகளின் கருத்துக்களில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. அவர் தமது இருப்பிடத்தை வார்தாவில் இருந்த சத்தியாகிரக ஆசிரமத்துக்கு மாற்றினார். அரிஜனர்களுக்கான பயணம் என்ற நாடுதழுவிய பயணத்தை காந்தியடிகள் மேற்கொண்டார். அரிஜனர் சேவை சங்கத்தை அமைத்து சமூகத்தில் உள்ள பாரபட்சங்களை முழுமையாக அவர் அகற்றுவதற்குப் பணியாற்றத் தொடங்கினார். கல்வி, சுத்தம் மற்றும் சுகாதாரம் ஆகியவற்றை மேம்படுத்தவும் ஒடுக்கப்பட்ட மக்களிடையே மதுப் பழக்கத்தை கைவிடவும் அவர் பணியாற்றினார். இதற்காக 1922 இல் இரண்டு உண்ணாவிரதங்களை மேற்கொண்டார். கோயில் நுழைவுப் போராட்டம் என்பது இந்தப் பிரச்சாரத்தின் முக்கியமான பகுதியாகும். 1933 ஜனவரி 8 ஆம் நாள் "கோவில் நுழைவு நாள்" என அனுசரிக்கப்பட்டது. "கோவில் நுழைவு நாள்" என அனுசரிக்கப்பட்டது. அவரது பிரச்சாரம் ஆச்சாரமான இந்துக்களின் கோபத்தை ஈட்டியது அவரது வாழ்க்கையைக் குறிவைத்து உண்மையை மூடிமறைக்க உயர்வகுப்பு இந்துக்கள் முயற்சி மேற்கொண்டனர். ஆனால் அவரது இயக்கத்தை இந்த நடவடிக்கைகள் பாதிக்கவில்லை. ஒடுக்கப்பட்ட மக்கள் மற்றும் பழங்குடியினர் இடையேயான அவரது பணிகள் தேசியவாதமென்ற செய்தியை அடிமட்ட நிலைக்கு கொண்டு சென்றது.

**சமதர்மவாத (சோஷியலிஸ்ட்) இயக்ககங்களின் தொடக்கங்கள்:**

1917 ஆம் ஆண்டின் ரஷ்யப் புரட்சியால் ஈர்க்கப்பட்ட இந்திய பொதுவுடைமை (கம்யூனிஸ்டு) கட்சி (CPI), 1920 அக்டோபர் மாதம் உஸ்பெகிஸ்தானின் தாஷ்கண்டில் நிறுவப்பட்டது. M.N. ராய், அபானி முகர்ஜி M.P.T. ஆச்சார்யா ஆகியோர் அதன் நிறுவன உறுப்பினர்களாவர். 1920 களில் அடுத்தடுத்து வழக்குகளைத் தொடுத்து கம்யூனிச இயக்கத்தை அடக்குவதற்கு இந்தியாவில் இருந்த ஆங்கிலேய அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டது. மேலும் கம்யூனிசம் தொடர்பான அச்சுறுத்தலை அடக்கும் மற்றொரு முயற்சியாக M.N. ராய்,S.A. டாங்கே, முசா∴பர் அஹமது,M. சிங்காரவேலர் ஆகிய தலைவர்கள் கைது செய்யப்பட்டதோடு,1924 ஆம் ஆண்டின் கான்பூர் சதித்திட்ட வழக்கிலும் விசாரிக்கப்பட்டனர். "இந்தியாவை பிரிட்டனின் அரசாட்சியில் இருந்து முழுமையாகப் பிரித்து இந்தியாவின் மீதான தனது இறையாண்மையை பிரிட்டிஷ் மன்னர் கைவிடச் செய்யும்" பணிகளில் ஈடுபட்டதாக கம்யூனிசத் தலைவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

**பொதுவுடைமை (கம்யூனிச) கட்சி நிறுவப்படுதல்:**

தங்கள் கருத்துக்களை பரப்பவும், "இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சியின் உண்மையான முகத்தை" எடுத்துக்காட்டவும் பொதுவுடைமைவாதிகள் இதனை ஒரு மேடையாகப் பயன்படுத்திக் கொண்டனர். ஒரு கட்சியை ஆரம்பிக்கும் முயற்சியாக 1925 ஆம் ஆண்டு கான்பூரில் அகில இந்திய பொதுவுடைமை மாநாடு நடந்தது. அதில் சிங்காரவேலர் தலைமை உரையாற்றினார். இந்திய மண்ணில் இந்திய பொதுவுடைமை கட்சியை ஆரம்பிக்க அது வழியமைத்தது. "தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளின்" அமைப்புகளை இந்தியாவின் பலபகுதிகளில் பொதுவுடைமைவாதிகள் உருவாக்கினார்கள். 1920 களில் பல்வேறு போராட்டங்கள் நடத்தப்பட்டன. அவர்களது பல்வேறு முயற்சிகளின் பலனாக "அகில இந்திய தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் கட்சி" 1928 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. 1929 ஆம் ஆண்டு மீரட் சதித்திட்ட வழக்கு காரணமாக இந்த திசையில் முன்னேற்றம் தடைப்பட்டது. முசா∴பர் அஹமது,S.A. டாங்கே,S.V. காட்டே, டாக்டர் G. அதிகாரி, P.C. ஜோஷி,S.S. மிராஜ்கர், ஷௌகத் உஸ்மானி, பிலிப்

ஸ்டிராட் மற்றும் இதர இருபத்துமூன்று நபர்கள் ரயில்வே துறையில் வேலைநிறுத்தம் செய்ததற்காக கைது செய்யப்பட்டனர். இந்தியாவில் ஆங்கிலேய அரசைக் கவிழ்க்க சதித்திட்டம் தீட்டியதாக அவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டது.

**புரட்சிகர நடவடிக்கைகள்:**

ஒத்துழையாமை இயக்கத்தை காந்தியடிகள் திடீரென திரும்பப்பெற்றதால் குழப்பமடைந்த இளைஞர்கள் வன்முறையைக் கையில் எடுத்தனர். காலனி ஆட்சியை ஆயுதக்கிளர்ச்சி மூலம் அகற்றும் நோக்கில் 1924 இல் இந்துஸ்தான் குடியரசு ராணுவம் (HRA) கான்பூரில் உருவாக்கப்பட்டது. 1925 ஆம் ஆண்டு ராம்பிரசாத் பிஸ்மில், அஷ்ஃபாகுல்லா கான் மற்றும் பலர் லக்னோ அருகே காகோரி என்ற கிராமத்தில அரசுப்பணத்தை கொண்டுச்சென்ற ஒரு ரயில்வண்டியை நிறுத்திக் கொள்ளையடித்தனர். அவர்கள் காகோரி சதி வழக்கில் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டனர். அவர்களில் நான்கு பேருக்கு மரணதண்டனையும் மற்றவர்களுக்கு சிதைத்தண்டனையும் விதிக்கப்பட்டன.

பஞ்சாபில் பகத்சிங், சுக்தேவ், மற்றும் அவர்களது தோழர்கள் இந்துஸ்தான் குடியரசு ராணுவத்தை மீண்டும் அமைத்தனர். பொதுவுடைமை கருத்துக்களால் ஈர்க்கப்பட்டு அந்த அமைப்புக்கு இந்துஸ்தான் சமதர்மவாத குடியரசு அமைப்பு என்று 1928 இல் பெயர் மாற்றம் செய்தனர். லாலா லஜ்பதி ராயின் உயிரிழப்புக்குக் காரணமான தடியடியை நடத்திய ஆங்கிலேய காவல்துறை அதிகாரி சாண்டர்ஸ் படுகொலை செய்யப்பட்டார். 1929 இல் மத்திய சட்டப் பேரவையில் புகைக்குண்டு ஒன்றை பகத்சிங்கும் B.K. தத்தும் வீசினார்கள். எவரையும் காயப்படுத்தும் நோக்கில் அந்தகுண்டு ஏறியப்படவில்லை. துண்டுப்பிரசுரங்களை வீசிஎறிந்த அவர்கள் "இன்குலாப் ஜிந்தாபாத்" "பாட்டாளி வர்க்கம் வாழ்க" ஆகிய முழுக்கங்களை எழுப்பினார்கள்.

ராஜகுருவும் பகத்சிங்கும் கைது செய்யப்பட்டு மரணதண்டனை விதிக்கப்பட்டது. பகத்சிங்கின் அசாத்தியமான துணிச்சல் இந்தியா முழுவதும் வாழ்ந்த இளைஞர்களின் கவனத்தை ஈர்த்ததை அடுத்த அவர் இந்தியா முழுவதும் பிரபலம் அடைந்தார். காந்தி-இர்வின் பேச்சுக்களின் போது பகத்சிங் மற்றும் ராஜகுருவின் வழக்கையும் சேர்க்க வேண்டும் என்று விரிவான கோரிக்கை எழுந்தது. மரணதண்டனையைக் குறைக்க அரசப்பிரதிநிதி மறுத்து விட்டார்.

1930 ஏப்ரலில் சிட்டகாங் ஆயுதக்கிடங்கு மீதான தாக்குதல் சூர்யா சென் மற்றும் அவரது நண்பர்களால் மேற்கொள்ளப்பட்டது. சிட்டகாங்கில் இருந்த ஆயுதக் கிடங்குகளைக் கைப்பற்றிய அவர்கள் அங்கு புரட்சிகர அரசை நிறுவினார்கள். அரசு நிறுவனங்களைக் குறிவைத்து அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு அவர்கள் தாக்குதல்களை நடத்தினார்கள். 1933 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்ட சூர்யா சென் ஓராண்டுக்குப் பிறகு தூக்கிலிடப்பட்டார்.

**1930 களில் இடதுசாரி இயக்கங்கள்:**

உலகம் முழுவதும் நிலவிய பொருளாதார மந்தநிலை உருவாக்கிய பொருளாதார நெருக்கடிகளை அடுத்து, 1930 களில் இந்திய பொதுவுடைமை கட்சி வலுப்பெற்றது. பிரிட்டனில் இருந்த மந்தநிலை அதன்கீழ் இருந்த காலனிகளிலும் பாதிப்புக்களை ஏற்படுத்தியது. இந்த பொருளாதார வீழ்ச்சியின் விளைவாக வர்த்தக லாபங்களிலும் வேளாண் பொருட்களின் விலைகளிலும் சரிவு ஏற்பட்டன. ஏற்கனவே சரிந்திருந்த வேளாண் பொருட்களின் ஐம்பது சதவிகித விலை வீழ்ச்சி காரணமாக கட்டாயமாக செய்யப்பட்ட அரசின் நிலவருவாய் வசூல் இருமடங்காக அதிகரித்தது. புழக்கத்தில் இருந்த பணம் திரும்பபெறப்படுவது, வளர்ச்சிப் பணிகளுக்கான பணியாளர்கள் எண்ணிக்கையும் செலவுகளையும் குறைப்பது ஆகியன அரசின் இதர நடவடிக்கைகளாக இருந்தன.

இந்தச்சூழலில் வருவாய் மற்றும் ஊதியக்குறைபாட்டால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களின் நலன், வேலையில்லாத் திண்டாட்டம் ஆகியவற்றுக்காகப் போராடிய பொதுவுடைமை கட்சி முக்கியத்துவம் பெற்றதையடுத்து 1934 ஆம் ஆண்டு அக்கட்சி தடைசெய்யப்பட்டது. தீவிர இடதுசாரி ஆதரவு முதல் தீவிர வலதுசாரி ஆதரவு வரையான அகன்ற அரசியல் சார்பு பெற்ற ஓர் இயக்கமாக சுயராஜ்ஜியம் என்ற குறிக்கோளுடன் காங்கிரஸ் கட்சி வலுவான அமைப்பாக உருவெடுத்தது. 1930 களில் காங்கிரசில் இடது மற்றும் வலதுசாரி சிந்தாந்தங்கள் இடையே

எப்போதும் சண்டை இருந்துகொண்டே இருந்தது. 1934 ஆம் ஆண்டில் ஜெயப்பிரகாஷ் நாராயணன், ஆச்சார்ய நரேந்திரதேவ் மற்றும் மினுமசானி ஆகியோரின் முன்முயற்சியால் காங்கிரஸ் சமதர்ம (சோஷலிஷ) கட்சி உருவானது. தேசியவாதம் தான் சமதர்மத்தக்கான பாதை என்று நம்பிய அவர்கள் அதற்காக காங்கிரசுக்குள் இருந்து உழைக்க விரும்பினார்கள். விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களின் ஆதரவு கட்சியாக காங்கிரஸ் கட்சியை மாற்ற அவர்கள் பணியாற்றினார்கள்.

**ஒரு சிலர் அதிகாரத்துக்கு வருவதால் உண்மையான சுயராஜ்ஜியம் கிடைத்துவிடாது. ஆனால் தாங்கள் பெற்ற அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தப்படும்போதுநிர்வாகத்தினரை எதிர்க்கும் திறனை அனைவரும் பெறச்செய்வதே சுயராஜ்ஜியமாகும்.**

**- காந்தியடிகள்**

### 1935 ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தின் கீழ் அமைந்த முதல் காங்கிரஸ் அமைச்சரவைகள்:

சட்டமறுப்பு இயக்கத்தின் ஆக்கப்பூர்வ வெளிப்பாடுகளில் 1935 ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டமும் ஒன்றாகும். மாகாணங்களுக்கு தன்னாட்சி அதிகாரம், மத்தியில் இரட்டையாட்சி ஆகியன இந்தச்சட்டத்தின் முக்கிய அம்சங்களாகும். அகில இந்திய கூட்டமைப்பு ஏற்பட வேண்டும் என்று இந்த சட்டம் வலியுறுத்துகிறது. அதன்படி, 11 மாகாணங்கள், 6 தலைமை ஆணையரக மாகாணங்கள் மற்றும் இந்தக் கூட்டமைப்பில் சேர விரும்பிய அனைத்து சிற்றரசுகளும் இக்கூட்டமைப்பில் இடம்பெற்றன. மாகாணங்களின் தன்னாட்சிக்கும் இந்த சட்டம் வகைசெய்தது. அனைத்து துறைகளும் இந்திய அமைச்சர்களின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டன. மாகாணங்களில் நடைமுறையில் இருந்து வந்த இரட்டை ஆட்சி மத்திய அரசுக்கும் விரிவாக்கப்பட்டது. வாக்குரிமையானது சொத்தின் அடிப்படையில் நீட்டிக்கப்பட்டதால் மக்கள் தொகையில் பத்து சதவிகித மக்கள் மட்டுமே வாக்களிக்கும் தகுதிபெற்றனர். இந்தச் சட்டத்தின்படி, பர்மா இந்தியாவில் இருந்து பிரிக்கப்பட்டது.

### காங்கிரஸ் அமைச்சரவைகளும் அவற்றின் பணியும்:

1937 ஆம் ஆண்டு தேர்தல்கள் அறிவிக்கப்பட்டதுடன் 1935 ஆம் ஆண்டின் இந்திய அரசுச் சட்டம் அமல்படுத்தப்பட்டது. சட்டமறுப்பு இயக்கத்தால் காங்கிரஸ் பெரிதும் பலன்பெற்றது. சட்டப்பேரவை புறக்கணிப்பைக் கைவிட்ட காங்கிரஸ் தேர்தல்களில் போட்டியிட்டது. பதினோரு மாகாணங்களில் போட்டியிட்டு ஏழு மாகாணங்களில் காங்கிரஸ் வெற்றிபெற்றது. மதராஸ், பம்பாய், மத்திய மாகாணங்கள், ஒடிசா, பீகார், ஐக்கிய மாகாணங்கள், வடமேற்கு எல்லை மாகாணம், சர் மஹம்மது சாதுல்லா தலைமையிலான அசாம் பள்ளத்தாக்கு முஸ்லிம் கட்சியுடன் இணைந்து கூட்டணி அரசு உட்பட எட்டு மாகாணங்களில் அது ஆட்சி அமைத்தது. காங்கிரஸ் அரசுகள் பிரபலமான அரசுகளாக செயல்பட்டன. மக்களின் தேவைகளை அவை நிறைவேற்றின. அமைச்சர்களின் ஊதியம் மாதம் ஒன்றுக்கு 2 ஆயிரம் ரூபாயில் இருந்து 500 ரூபாயாக குறைக்கப்பட்டது. தேசியவாதிகளுக்கு எதிராக எடுக்கப்பட்ட முந்தைய நடவடிக்கைகள் ரத்துசெய்யப்பட்டன. அரசிடம் அவசரகால அதிகாரங்களை தந்த சட்டங்களை அவர்கள் திரும்பப்பெற்றனர். கம்யூனிஸ்ட் கட்சி தவிர இதர கட்சிகள் மீது விதிக்கப்பட்ட தடைகளை ரத்துசெய்தனர். தேச அளவில் பத்திரிகைகள் மீது விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளை அவர்கள் அகற்றிவிட்டனர். காவல்துறை அதிகாரங்கள் கட்டுப்படுத்தப்பட்டன. அரசியல் பேச்சுக்கள் பற்றி சி.ஐ.டி. சார்பாக அறிக்கை தருவது விலக்கிக் கொள்ளப்பட்டது. விவசாயிகளின் கடன்கள் குறையவும் தொழிலக தொழிலாளர்களின் பணிநிலைமை மேம்படவும் சட்டபூர்வ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. கோயில் நுழைவுச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. கல்வி மற்றும் பொது சுகாதாரத்துக்கு சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டது.

### காங்கிரஸ் அமைச்சரவையின் பதவி விலகல்:

1939 இல் இரண்டாம் உலகபோர் மூண்டது. காங்கிரஸ் அமைச்சரவைகளை ஆலோசிக்காமல் கூட்டணிப் படைகள் சார்பாக இந்த போரில் இந்தியாவின் காலனி ஆதிக்க அரசு நுழைந்தது. எனவே அதற்கு எதிர்ப்பு தெரிவித்து காங்கிரஸ் அமைச்சரவைகள் பதவி விலகின. முஸ்லிம்களுக்கு தனிநாடு வேண்டும் என்ற கோரிக்கையை உறுதியுடன் வலியுறுத்தியபடி லண்டனிலிருந்து இந்தியா திரும்பிய ஜின்னா 1934 ஆம் ஆண்டு முஸ்லிம் லீக்கிற்கு புத்துயிர் ஊட்டினார். காங்கிரஸ் அமைச்சரவைகளை

கடுமையாக விமர்சித்தவர்களில் ஜின்னாவும் ஒருவர். காங்கிரஸ் அமைச்சரவைகள் பதவி விலகிய நாளை "மீட்பு நாள்" என்று அறிவித்தார். சுதந்திர இந்தியாவில் தங்களது அனைத்து அரசியல் அதிகாரங்களையும் முஸ்லிம்கள் இந்துக்களிடம் இழந்துவிடுவர் என்ற வாதிட்ட அவர் 1940 ஆம் ஆண்டு வாக்கில் முஸ்லிம்களுக்கு தனிநாடு வேண்டும் என்று வலியுறுத்தினார்.

**இரண்டாம் உலக போரின் போது தேசிய இயக்கம், 1939 – 45:**

காந்தியடிகளின் வேட்பாளரான பட்டாபி சீதாராமய்யாவை வீழ்த்த 1939 இல் சுபாஷ் சந்திர போஸ் காங்கிரஸ் தலைவரானார். காந்தியடிகள் ஒத்துழைக்க மறுத்ததை அடுத்து, சுபாஷ் சந்திர போஸ் அப்பதவியிலிருந்து விலகி பார்வர்டு பிளாக் கட்சியைத் தொடங்கினார். இரண்டாம் உலகப்போரினை ஏகாதிபத்திய போர் என்று அழைத்த பொதுவுடைமைவாதிகள் ஆரம்பத்தில் அதை எதிர்த்தனர். எனினும் நாஜிக்கள் சோவியத் யூனியன் மீது தாக்குதல் நடத்தியதையடுத்து அதனை "மக்களின் போர்" என்று பொதுவுடைமைவாதிகள் அழைத்ததோடு பிரிட்டிஷாருக்கு ஒத்துழைப்பு நல்கினார்கள். அதன் முடிவாக, 1942 இல் பொதுவுடைமை கட்சி மீதான தடை விலக்கிக் கொள்ளப்பட்டது.

**இந்து வகுப்புவாதம், முஸ்லிம் வகுப்புவாதம் மற்றும் இந்திய தேசியம்:**

காங்கிரஸை ஒரு இந்து அமைப்பு என்று குறைகூறிய முஸ்லிம் லீக், இந்தியாவில் முஸ்லிம்களின் ஒரேயொரு பிரதிநிதியாக தாம்மட்டுமே விளங்குவதாக அது தெரிவித்தது. அதே போன்று இந்து மகா சபா மற்றும் ராஷ்டிரிய சுவயம் சேவக் சங் (R.S.S) ஆகியன முஸ்லிம்களுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்தன. இந்துக்கள் மற்றும் முஸ்லிம்களின் நலன்கள் ஒன்றுக்கொன்று வேறுபட்டவை மற்றும் எதிரானவை என்று இந்து மகா சபையும் முஸ்லிம் லீக்கும் கோரின. ஆங்கிலேயர்களின் பிரித்தாளும் கொள்கையின் சில நடவடிக்கைகளான வங்கப் பிரிவினை, தனித் தொகுதிகள் ஆகியவை மத வேறுபாடுகளைத் தூண்டி தங்கள் நலன்களைப் பாதுகாக்கும் செயல்களுக்கு ஊக்கம் கொடுத்தன. கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக மாணவரான ரஹ்மத் அலி 1933 இல் பஞ்சாப், காஷ்மீர், வடமேற்கு எல்லை மாகாணம், சிந்து மற்றும் பலுச்சிஸ்தான் ஆகிய மாகாணங்களை இணைத்து பாகிஸ்தானை உருவாக்கும் எண்ணத்தை வெளிப்படுத்தினார். இந்து – முஸ்லிம் ஒற்றுமையை வலியுறுத்தி வந்த முஹம்மது இக்பால் தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டு முஸ்லிம்களுக்கு தனிநாடு வேண்டும் என்ற கோரிக்கை குறித்து பிரச்சாரம் செய்ய ஆரம்பித்தார். இந்திய தேசியத்தை வலியுறுத்திவந்த காந்தியடிகள், நேரு, வல்லபாய் பட்டேல் மற்றும் இதர தலைவர்கள் நாட்டை இரண்டாகப் பிரிக்கும் கருத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தனர்.

**வெள்ளையனே வெளியேறு இயக்கத்துக்கு வழிவகுத்த நடவடிக்கைகள்:**

**தனி நபர் சத்தியாகிரகம்:**

1940 ஆகஸ்டு மாதம், காங்கிரஸ் இரண்டாம் உலகப்போரின் போது இந்தியர்களின் ஆதரவைப் பெறுவதற்காக அரசப்பிரதிநிதி லின்லித்கோ ஒரு சலுகையை வழங்க முன்வந்தார். எனினும் குறிப்பிடப்படாத எதிர்காலத்தில் தன்னாட்சி (டொமினியன்) தகுதி என்ற சலுகை, காங்கிரசுக்கு ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை. எனினும் ஜெர்மனி மற்றும் இத்தாலியின் பாசிச சக்திகளுக்கு எதிராகப் போராடிய பிரிட்டிஷ் அரசுக்கு இடையூறுகளை ஏற்படுத்த காங்கிரஸ் விரும்பவில்லை. எனவே வரையறைக்கு உட்பட்ட சத்தியாகிரகப் போராட்டத்தை காந்தியடிகள் அறிவித்தார்.

இதில் ஒருசிலர் மட்டுமே கலந்துகொண்டனர். இந்தியா நாசிசத்தை எதிர்த்த போதிலும் அது தானாகவே முன்வந்து போரில் இறங்காது என்பதை உலகுக்கு உணர்த்துவதே இதன் நோக்கமாகும். 1940 அக்டோபர் 17 ஆம் நாள் வினோபா பாவே சத்தியாகிரகப் போராட்டத்தை முதன் முதலாக ஆரம்பித்தார். அந்த ஆண்டின் இறுதிவரை சத்தியாகிரகம் தொடர்ந்தது. இந்த காலகட்டத்தில் 25,000 க்கும் அதிகமான மக்கள் கைது செய்யப்பட்டனர்.

## கிரிப்ஸ் தூதுக்குழு:

ஜப்பானியர்கள் இந்தியாவின் கதவுகளைத் தட்டிய நிலையில் 1942 மார்ச் 22 ஆம் நாள் அமைச்சரவை (காபினட்) அமைச்சர் சர் ஸ்ட்ரா.ஃ.போர்டு கிரிப்ஸ் தலைமையில் நிலையில் காங்கிரஸ் மற்றும் கிரிப்ஸ் தூதுக்குழு இடையேயான பேச்சுகள் தோல்வி அடைந்தன. கிரிப்ஸ் தூதுக்குழு கீழ்க்கண்டவற்றை வழங்க முன் வந்தது.

1. போருக்குப் பிறகு தன்னாட்சி (டொமினியன் தகுதி) வழங்குவது.
2. பாகிஸ்தான் உருவாக்க கோரிக்கையை ஏற்கும் விதமாக இந்திய இளவரசர்கள் பிரிட்டிஷாருடன் தனி ஒப்பந்தத்தைக் கையெழுத்திடலாம்.
3. போரின் போது பாதுகாப்புத் துறை பிரிட்டிஷாரின் கட்டுப்பாட்டில் இருப்பது.

காங்கிரஸ், முஸ்லிம் லீக் இரண்டுமே இந்தத் திட்ட அறிக்கையை நிராகரித்து விட்டன. திவாலாகும் வங்கியில் பின் தேதியிட்ட காசோலை என காந்தியடிகள் இந்த திட்டங்களை அழைத்தார்.

## காந்தியடிகளின் “செய் அல்லது செத்து மடி” முழக்கம்:

கிரிப்ஸ் தூதுக்குழுவின் வெளிப்பாடு மிகுந்த ஏமாற்றத்தைக் கொடுத்தது. போர்க்கால பாற்றாக்குறைகளினால் விலைகள் பெரிதும் அதிகரித்து அதிருப்தி தீவிரமடைந்தது. பம்பாயில் 1942 ஆகஸ்டு மாதம் 8 ஆம் நாள் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி வெள்ளையனே வெளியேறு தீர்மானத்திற்கு வித்திட்டதுடன் இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சிக்கு உடனடியாக முடிவு கட்ட கோரிக்கை வைத்தது. செய் அல்லது செத்து மடி என்ற முழுக்கத்தை காந்தியடிகள் வெளியிட்டார். ”நாம் நமது முயற்சியின் விளைவாக இந்தியாவுக்கு சுதந்திரம் பெற்றுத் தருவோம், அல்லது நாம் நமது அடிமைத்தனத்தைக் காண உயிருடன் இருக்கமாட்டோம்”, என்று காந்தியடிகள் கூறினார். காந்தியடிகளின் தலைமையின் கீழ் அகிம்சையான மக்கள் போராட்டம் தொடங்கப்பட்ட இருந்தது. ஆனால் அடுத்த நாள் காலை அதாவது 9 ஆகஸ்டு 1942 அன்று காந்தியடிகளும் காங்கிரஸ் தலைவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டனர்.

## சமதர்மவாத (சோஷலிச) தலைவர்களின் பங்குபணி:

காந்தியடிகள் மற்றும் இதர முக்கிய காங்கிரஸ் தலைவர்கள் சிறையில் அடைபட்டதையடுத்து இந்த இயக்கத்துக்கு சமதர்மவாதிகள் தலைமை தாங்கினார்கள். சிறையில் இருந்து தப்பிய ஜெயபிரகாஷ் நாராயணன், ராமாநந்த் மிஷ்ரா ஆகியோர் திரைமறைவு வேலைகளில் ஈடுபட்டனர். அருணா ஆசப் அலி போன்ற பெண் தலைவர்கள் முக்கியப் பணி ஆற்றினார்கள். உஷா மேத்தா நிறுவிய காங்கிரஸ் வானொலி திரைமறைவில் இருந்தபடியே 1942 நவம்பர் மாதம் வரை வெற்றிகரமாகச் செயல்பட்டது. இந்தக் கிளர்ச்சியை கட்டுப்படுத்த ஆங்கிலேய அரசு முழு பலத்தையும் பயன்படுத்தியது. இயந்திரத் துப்பாக்கிகளைக் கொண்டு சுட்டதில் ஆயிரக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டனர். சில இடங்களில் விமானங்கள் மூலமாகவும் குண்டுகள் விசப்பட்டன. மொத்தமாக அபராதங்கள் விதிக்கப்பட்டு அவை உரிய வேகத்தில் வசூலிக்கப்பட்டன. காந்தி 1943 பிப்ரவரி மாதம் இருபத்தோரு நாட்களுக்கான உண்ணாவிரதத்தைத் தொடங்கினார். இதனால் அவரது உயிருக்குப் பெரும் அச்சுறுத்தல் நிலவியது. இறுதியாக பிரிட்டிஷ் அரசு இறங்கி வந்தது. 1944 ஆம் ஆண்டு காந்தியடிகள் சிறையில் இருந்து விடுதலை செய்யப்பட்டார்.

## மக்களின் வெளிப்பாடு:

இந்தியாவின் பல பகுதிகளுக்கும் இந்தச் செய்தி பரவியதை அடுத்து அனைத்து இடங்களிலும் ஆங்காங்கே வன்முறை ஆர்ப்பாட்டங்கள் வெடித்தன. வேலைநிறுத்தங்கள், ஆர்ப்பாட்டங்கள் மறியல் என தாங்கள் அறிந்த வகைகளில் மக்கள் போராட்டங்களை நடத்தினார்கள். இரும்புக் கரம் கொண்டு அரசு இந்த இயக்கத்தைக் கட்டுப்படுத்தியது. அரசுக் கட்டடங்கள், ரயில் நிலையங்கள், தொலைபேசி மற்றும் தந்தி கம்பிகள்,மற்றும் பிரிட்டிஷ் அதிகாரத்தின் அடையாளங்களாக நின்ற அனைத்தின் மீதும் மக்கள் தாக்குதல்களை நடத்தினார்கள்.

மதராஸில் இது முக்கியமாக தீவிரமாகப் பிரவியது. சதாரா, ஒரிஸா, (தற்போதைய ஒடிசா), பீகார், ஐக்கிய மாகாணங்கள், வங்காளம் ஆகிய இடங்களில் இணைய அரசுகள் நிறுவப்பட்டன.

இந்த இயக்கத்தை முடக்கியபோதும், தேசியவாதம் ஆழமாக விவரிக்கப்பட்டதோடு மக்கள் அவற்றில் பங்கேற்று தியாகம் செய்ய ஆயத்தமாக இருப்பதும் தெரியவந்தது. சுமார் 7,000 பேர் கொல்லப்பட்டனர். 60,000 க்கும் அதிகமானோர் சிறையில் அடைக்கப்பட்டனர். காலனி ஏகாதிபத்திய அரசின் கட்டுப்பாடு, ஆட்சி அதிகாரத்தில் வலுவிழந்திருப்பதை இது முக்கியமாக விளக்கியது காவல் துறையினர் உட்பட பல அதிகாரிகள் தேசியவாதத் தலைவர்களுக்கு உதவினார்கள். ரயில் வண்டி இஞ்சின் ஓட்டுனர்களும் மற்றும் கப்பலோட்டிகளும் குண்டு வெடிப்புப் பொருட்களையும் இதரப் பொருட்களையும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்காக கடத்தினார்கள்.

**சுபாஷ் சந்திர போஸ் மற்றும் இந்திய தேசிய ராணுவம்:**

காங்கிரசை விட்டு விலகிய சுபாஷ் சந்திர போஸ் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டார். பிரிட்டிஷாரின் எதிரிகளோடு கைகோர்த்து பிரிட்டிஷ் அரசுக்கு எதிராக தாக்குதல் நடத்த அவர் விரும்பினார். 1941 மார்ச் மாதம், அவர் தனது இல்லத்தில் இருந்து நாடகத்தனமாக (மாறுவேடமணிந்து) தப்பித்து ஆப்கானிஸ்தான் சென்றடைந்தார். முதலில் அவர் சோவியத் யூனியனின் ஆதரவைப் பெற விரும்பினார். ஆனால் பிரிட்டன் உள்ளிட்ட கூட்டணிப் படைகளுடன் சோவியத் யூனியன் அரசு சேர்ந்ததால் அவர் ஜெர்மனிக்கு சென்றார். 1943 பிப்ரவரி மாதம், நீர்மூழ்கிக் கப்பல் மூலமாக ஜப்பான் சென்ற அவர், இந்திய தேசிய ராணுவத்தின் கட்டுப்பாட்டைக் கையில் எடுத்தார். இந்தியப் போர்க்கைதிகளைக் கொண்டு மலாயா மற்றும் பர்மாவில் இருந்த ஜப்பானியர்களின் ஆதரவோடு இந்திய தேசிய ராணுவத்தை (ஆசாத் ஹிந்த் ∴பாஜ்) ஜெனரல் மோகன் சிங் உருவாக்கினார், அதன்பிறகு இது கேப்டன் லட்சுமி செகல் என்பவரால் நடத்தப்பட்டது. இது காந்தி பிரிகேட், நேரு பிரிகேட், பெண்கள் பிரிவாக ராணி லமி பாய் பிரிகேட் என மூன்று படையணிகளாக சுபாஷ் சந்திர போஸ் மறுசீரமைத்தார். சுபாஷ் சந்திர போஸ், சிங்கப்பூரில் சுதந்திர இந்தியாவின் தற்காலிக அரசாங்கத்தை நிறுவினார். “தில்லிக்கு புறப்படு“ (தில்லி சலோ) என்ற முழக்கத்தை சுபாஷ் வெளியிட்டார். ஜப்பானிய படைகளின் ஒரு பகுதியாக இந்திய தேசிய ராணுவம் பணியில் ஈடுபடுத்தப்பட்டது. எனினும் ஜப்பான் தோல்வி அடைந்த பிறகு இந்திய தேசிய ராணுவம் முன்னேறுவது தடைபட்டது. சுபாஷ் சந்திர போஸ் பயணம் செய்த விமானம் விபத்துக்குள்ளானதால் சுதந்திரத்துக்காக போராடிய அவரது தீவிரப்பணிகள் முடிவுக்கு வந்தன.

**சுபாஷ் சந்திர போஸின் இந்திய தேசிய ராணுவம்:**

பிரிட்டிஷ் அரசு இந்திய தேசிய ராணுவ அதிகாரிகளை கைது செய்து செங்கோட்டையில் அவர்களை விசாரணைக்காக வைத்தது. தேசியவாத பிரச்சாரத்துக்கு ஒரு மேடையாக இந்த விசாரணை அமைந்தது. காங்கிரஸ் அமைத்த பாதுகாப்புத்துறை கமிட்டி ஜவகர்லால் நேரு, தேஜ் பஹதூர் சாப்ரு, புலாபாய் தேசாய், ஆசப் அலி ஆகியோரை உள்ளடக்கியதாக இருந்தது. இந்திய தேசிய ராணுவத்தின் அதிகாரிகளுக்கு எதிரான குற்றம் நிரூபிக்கப்பட்டாலும் பொதுமக்கள் அழுத்தம் கொடுத்ததன் காரணமாக அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். இந்திய தேசிய ராணுவத்தின் தாக்குதல்களும் அதனை அடுத்த வழக்கு விசாரணைகளும் இந்தியர்களுக்கு ஊக்கமாக அமைந்தது.

**விடுதலையை நோக்கி**
**ராயல் இந்திய கடற்படைக் கிளர்ச்சி:**

1946 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் பம்பாயில் ராயல் இந்திய கடற்படை மாலுமிகள் கிளர்ச்சி செய்தனர். விரைவில் அங்கிருந்து வேறு நிலையங்களுக்கும் பரவிய இந்த கிளர்ச்சியில் சுமார் 20,000 க்கும் மேற்பட்ட மாலுமிகள் ஈடுபட்டனர். இதேபோன்று ஜபல்பூரில் இருந்த இந்திய விமானப்படை, இந்திய சமிக்ஞை (சிக்னல்) படை ஆகியவற்றிலும் வேலைநிறுத்தங்கள் நடந்தன. இவ்வாறு ஆயுதப்படைகளிலும் கூட பிரிட்டிஷாரின் மேலாதிக்க கட்டுப்பாடு இல்லை. போரில் வெற்றிபெற்ற நிலையிலும் அது முற்றிலுமாக ஆங்கிலேயர்களை வலுவிழந்தவர்களாக ஆக்கியது. தென்கிழக்காசியாவில் ஜப்பானியர்களிடம் பிரிட்டிஷார் சரணடைந்தது ஏகாதிபத்திய ஆட்சிக்குப் பேரிடியாக அமைந்தது. அனைத்து அரசியல் தலைவர்களும் விடுதலை செய்யப்பட்டனர். காங்கிரஸ் மீதான தடை விலக்கிக் கொள்ளப்பட்டது.

**சுதந்திரம் பற்றிய பேச்சுவார்த்தை சிம்லா மாநாடு:**

1945 ஆம் ஆண்டு ஜுன் 14 ஆம் நாள் வேவல் திட்டம் அறிவிக்கப்பட்டது. இந்ததிட்டம் மூலமாக அரசப்பிரதிநிதியின் செயற்குழுவில் இந்துக்களும் முஸ்லிம்களும் சம எண்ணிக்கையில் இடம்பெற்ற ஓர் இடைக்கால அரசுக்கு வகை செய்யப்பட்டது. போர் தொடர்பான துறை தவிர்த்து அனைத்து இதர துறைகளும் இந்திய அமைச்சர்கள் வசம் கொடுக்கப்பட இருந்தன. எனினும் சிம்லா மாநாட்டில் காங்கிரசும் முஸ்லிம்லீக்கும் ஓர் ஒப்பந்தத்தை எட்டமுடியவில்லை. அனைத்து முஸ்லிம் உறுப்பினர்களும் முஸ்லிம் லீக்கில் இருந்துதான் இடம்பெற வேண்டும் மற்றும் அவர்கள் அனைத்து முக்கிய விஷயங்களிலும் வீட்டோ அதிகாரங்களையும் பெறவேண்டு என்று ஜின்னா கோரினார். 1946 ஆம் ஆண்டு தொடக்கத்தில் நடந்த மாகாணத் தேர்தல்களில் பொதுத்தொகுதிகளில் பெரும்பாலானவையை காங்கிரஸ் வென்றது. முஸ்லிம்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகுதிகளில் முஸ்லிம் லீக் வென்று தனது கோரிக்கைக்கு வலுசேர்த்தது.

**அமைச்சரவைத் தூதுக்குழு:**

பிரிட்டனில் தொழிற்கட்சி மிகப்பெரிய வெற்றியை பெற்று கிளெமன்ட் அட்லி பிரதம மந்திரியாகப் பொறுப்பேற்றார். உடனடியாக ஆட்சி மாற்றம் வேண்டும் என்று விரும்பினார். அவர் பெதிக் லாரன்ஸ், சர் ஸ்டரா∴போர்ட் கிரிப்ஸ்,A.V. அலெக்ஸாண்டர் ஆகியோர் அடங்கிய அமைச்சர்கள் தூதுக்குழுவை இந்தியாவுக்கு அனுப்பினார். பாகிஸ்தானை தனிநாடாக உருவாக்க வேண்டும் என்ற கோரிக்கையை நிராகரித்த அக்குழுவினர் பாதுகாப்பு, தகவல் தொடர்பு மற்றும் வெளியுறவு ஆகிய துறைகளில் கட்டுப்பாட்டுடன் கூடிய மத்திய அரசை நிறுவ வகை செய்தது. முஸ்லிம்கள் பெரும்பான்மையாக இல்லாத மாகாணங்கள், வடமேற்கில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக உள்ள மாகாணங்கள், மற்றும் வடகிழக்கில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக உள்ள மாகாணங்கள் என மூன்றுவகையாக மாகாணங்கள் பிரிக்கப்பட்டன. இந்திய அரசியல் சாசன நிர்ணயமன்றம் தேர்ந்தெடுக்கப்பட்டு அனைத்து சமூகங்களில் இருந்து பிரதிநிதித்துவம் கொண்ட இடைக்கால அரசு நிறுவப்பட வேண்டும். இந்த திட்டத்தை காங்கிரசும் முஸ்லிம் லீக்கும் ஏற்றுக்கொண்டன. எனினும் இரண்டு கட்சிகளுமே தங்களுக்கு சாதகமாக இந்த திட்டம் குறித்து விவரித்தன. மாகாணங்களைப் பிரிப்பது தற்காலிகமாக இருக்கவேண்டும் என்று காங்கிரஸ் கட்சி விரும்பிய போது முஸ்லிம் லீக் அது ஒரு நிரந்தர அமைப்பாக இருக்க வேண்டும் என்று விரும்பியது.

**நேரடி நடவடிக்கை நாளுக்கு முஸ்லிம் லீக் அழைப்பு விடுத்தல்:**

காங்கிரஸ் ஒரு முஸ்லிம் உறுப்பினரை நியமித்ததை அடுத்து காங்கிரஸ் மற்றும் முஸ்லிம் லீக் கட்சிகள் இடையே கருத்து வேறுபாடுகள் நிலவின. தான் மட்டுமே முஸ்லிம்களின் பிரதிநிதியாக இருக்க வேண்டும் என்று வாதிட்ட முஸ்லிம் லீக் தனது அனுமதியை விலக்கிக்கொண்டது. 1946 ஆம் ஆண்டு ஆகஸ்டு 16 ஆம் நாளை “நேரடி நடவடிக்கை நாளாக ஜின்னா அறிவித்தார். ஆர்ப்பாட்டங்களும் கடையடைப்பு போராட்டங்களும் நடந்தது விரைவில் அது இந்து – முஸ்லிம் மோதலாக உருவெடுத்தது. இது வங்காளத்தின் இதர மாவட்டங்களுக்கும் பரவியது. நவகாளி மாவட்டம் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டது. மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்குப் பயணம் மேற்கொண்ட காந்தியடிகள் காலணி அணியாமல் நடைபயணம் சென்று வகுப்புவாத மோதல்களை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்ததோடு அமைதி மற்றும் அகிம்சை பற்றிய செய்தியைப் பரப்பினார்.

**மவுண்ட்பேட்டன் திட்டம்:**

ஜவகர்லால் நேரு தலைமையில் இடைக்கால அரசு 1946 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் அமைக்கப்பட்டது. சில தயக்கங்களுக்குப் பிறகு முஸ்லிம் லீக் இந்த இடைக்கால அரசில் 1946 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் இணைந்தது. அதன் பிரதிநிதி லியாகத் அலிகான் நிதி உறுப்பினராக ஆக்கப்பட்டார். 1948 ஆம் ஆண்டு ஜுன் மாதவாக்கில் அதிகாரமாற்றம் ஏற்படும் என்று 1947 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் கிளெமன்ட் அட்லி அறிவித்தார். இந்த ஆட்சி மாற்றத்தை உறுதி செய்யும் பொறுப்புடன் மவுண்ட்பேட்டன் பிரபு இந்தியாவுக்கு அரசுப் பிரதிநிதியாக அனுப்பப்பட்டார். 1947 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 3 ஆம் நாள் மவுண்ட்பேட்டன் திட்டம் அறிவிக்கப்பட்டது. கீழ்க்கண்டவை அதில் கூறப்பட்ட அம்சங்கள்:

- இந்தியா மற்றும் பாகிஸ்தானுக்கு, பிரிட்டனின் தன்னாட்சிப் பகுதி (டொமினியன்) என்ற தகுதியுடன் அதிகாரமாற்றம் நடைபெறும்.

- சிற்றரசுகள் இந்தியா அல்லது பாகிஸ்தானில் சேர வேண்டும்.

- ராட்கிளி.ஃப் பிரவ்ன் தலைமையில் எல்லைகளை நிர்ணயிக்கும் ஆணையம் அமைக்கப்பட்டு அதிகாரமாற்றத்துக்குப் பிறகு இந்த ஆணையத்தின் முடிவு அறிவிக்கப்படும்.

- பஞ்சாப் மற்றும் வங்காள சட்டப்பேரவைகள் அவைகள் பிரிக்கப்பட வேண்டுமா என்பது பற்றி வாக்கெடுப்பு நடத்தும்.

**விடுதலையும் பிரிவினையும்:**

1947 ஆம் ஆண்டு ஜூலை 18 ஆம் நாள் பிரிட்டிஷ் நாடாளுமன்றம் இந்திய விடுதலைச் சட்டத்தை இயற்றியதையடுத்து மவுண்பேட்டன் திட்டத்துக்கு செயல்வடிவம் தரப்பட்டது. இந்தியாவின் மீதான ஆங்கில ஏகாதிபத்தியத்தின் இறையாண்மையை இந்தச் சட்டம் ரத்து செய்தது. இந்தியா மற்றும் பாகிஸ்தான் என இரண்டு பகுதிகளாக இந்தியா பிரிக்கப்பட்டது. 1947 ஆம் ஆண்டு ஆகஸ்டு 15 ஆம் நாள் இந்தியா விடுதலை அடைந்தது.

---

# 9. தமிழ்நாட்டில் விடுதலைப் போராட்டம்

**அறிமுகம்:**

காலனியாட்சியை எதிர்ப்பதில் தமிழ்நாடு முன்னோடியாகத் தகிழ்ந்தது. பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதிலேயே பாளையக்காரர்கள், தமிழ்நாட்டில் தங்கள் அரசியல் ஆதிக்கத்தை நிறுவயமுயன்ற ஆங்கிலேயர்களின் முயற்சிகளை எதிர்த்தனர். பாளையக்காரர்களின் தோல்விக்குப் பின்னரும் கூட 1806 இல் வேலூர் கோட்டையில் இந்திய வீரர்களும் அதிகாரிகளும் ஓர் எழுச்சியைத் திட்டமிட்டு நடத்தினர். அப்புரட்சி தென்னிந்தியாவின் பல இராணுவமுகாம்களிலும் எதிரொலித்தது. மேற்கத்திய கல்வி அறிமுகம் மற்றும் இறுதியில் தோன்றிய படித்த இந்திய நடுத்தர வர்கத்தின் தோற்றம் படித்த ஆகியவை ஆங்கிலேயருக்கு எதிரான போராட்த்ததை அரசமைப்புப் பாதையில் எடுத்து சென்றது. தமிழ்நாட்டில் நடைபெற்ற விடுதலைப் போராட்டம் தனித்தன்மை வாய்ந்ததாகும். ஏனெனில் தொடக்கத்திலிருந்தே அது ஆங்கிலேயரிடமிருந்து விடுதலை பெறுவதற்கான போராட்டமாக மட்டுமல்லாமல், தீங்கினை விளைவிக்கும் சாதிமுறை ஏற்படுத்தியிருந்த சமூகத் தடைகளிலிருந்து விடுதலை பெறுவதற்குமான போராட்டமாகவும் அமைந்தது. இப்பாடத்தில் தமிழ்நாட்டில் வெவ்வேறு கருத்தியல்களைப் பின்பற்றிய தேசியவாதிகள் வகித்த பாத்திரத்தை நாம் அறிந்து கொள்வோம்.

**தமிழ்நாட்டில் தொடக்கால தேசிய அதிர்வுகள்:**

பத்தொன்பதம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் சென்னையில் உருவான, நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த, கல்விகற்ற நபர்களைக் கொண்ட குழுக்கள் பொதுவிஷயங்களில் அக்கறை செலுத்தர் தொடங்கின. இந்தியவின் ஏனைய பகுதிகளில் நடந்ததைப் போலவே இவர்கள் தங்கள் குறைகளைத் தெரிவிக்க சென்னைவாசிகள் சங்கம், செ்னனை மகாஜன சங்கம் எனும் அரசியல் சார்ந்த அமைப்புகளை ஏற்படுத்தினர்.

**(அ) சென்னைவாசிகள் சங்கம்:**

சென்னைவாசிகள் சங்கம் (Madras native Association – (MNA)), தென்னிந்தியாவில், தொடங்கப்பெற்ற காலத்தால் முற்பட்ட அமைப்பான இவ்வமைப்பு தனிபட்ட குழுக்களின் விருப்பங்களைக் காட்டிலும் பொதுமக்களின் தேவைகளை அனைவருக்கும் தெரிவிப்பதை நோக்கமாகக் கொண்டு உருவானது. இவ்வமைப்பு 1852இல் கஜுலு லட்சுமிநரசு, சீனிவாகனார் மற்றும் அவர்களின் சேர்ந்தோர்களாலும் நிறுவப் பெற்றது. இவ்வமைப்பில் வணிகர்களே அதிக எண்ணிக்கையில் அங்கம் வகித்தனர். தனது உறுப்பினர்களின் நலன்களை முன்னெடுப்பது, வரிகளைக் குறைக்க கோரிக்கை வைப்பது போன்ற நோக்கங்களை இவ்வமைப்பு உள்ளடக்கி இருந்தது. மேலும் கிறித்தவ சமயப்பரப்பாளர்களின் செயல்பாடுகளுக்கு அரசு ஆதரவளித்ததை எதிர்த்தனர். மக்களின் நிலை அவர்களின் தேவைகள் ஆகியவற்றின் மீது அரசின் கவனத்தை திருப்பும் பணியை இவ்வமைப்பு மேற்கொண்டது. வருவாய்த்துறை அதிகாரிகளால் விவாசாயிகள் சித்திரவதைப்படுத்தப்டுவதற்கு எதிராக இவ்வமைப்பு (MNA) நடத்திய போராட்டம் முக்கியமான பங்களிப்பாகும். இவ்வமைப்பு மேற்கொண்ட முயற்சிகளால் சித்திரவதை ஆரணயம் (Torture Commission) நிறுவப்பட்டது. அதன் விளைவாகச் சித்தரவதை முறைகள் மூலம் கட்டாய வரிவசூல் முறையை நியாப்படுத்திய சித்திவதைச் சட்டம் (Torture Act) ஒழிக்கப்பட்டது. இருந்தபோதிலும் இவ்வமைப்பு 1862க்குப் பின்னர் செயலிழந்து இல்லாமாலானது.

**(ஆ) தேசியவாதப் பத்திரிகைகளின் தொடக்கங்கள்: தி இந்து மற்றும் சுதேசமித்திரன்**:

T.முத்துசாமி என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தின் முதல் இந்திய நீதிபதியாக 1877இல் நியமிக்கப்பட்டது சென்னை மாகாணத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. ஒரு இந்தியர் நீதிபதியாக பணியமர்த்தப்பட்டதை சென்னையைச் சேர்ந்த அனைத்து பத்துரிகைகளும் விமர்சனம் செய்தன. எதிர்ப்பு தெரிவித்த அனைத்துப் பத்திரிகைகளும் ஐரோப்பியர்களால் நடத்தப்படுவதை கல்விகற்ற இளைஞர்கள் உணர்ந்தனர். இது குறித்து இந்தியரின் எண்ணங்களை வெளிப்படுத்த ஒரு

செய்திப் பத்திரிக்கை தேவை என்பது உணரபப்பட்டது. G. சுப்பிரமணியம், ஆ. வீராகவாச்சாரி மற்றும் இவர்களின் 1878இல் அவவிதழ் நாளிதழாக மாறியது. தி இந்து, சுதேசமித்திரன் ஆகிய பத்திரிகைகள் தொடங்கப்பட்டது. இந்தியன் பேட்ரியாட் (Indian Patriot) சவுத் இந்தியன் மெயில் (South Indian Mail), மெட்ராஸ் ஸ்டாண்டர்ட் (Madras Standard), தேசபிமானி, விஜயா, சூர்யோதயம், இந்தியா போன்ற உள்நாட்டு பத்திரிகைகள் தொடங்கப்படுவதற்கு ஊக்கமளித்தது.

**(இ) சென்னை மகாஜன சபை:**

தென்னிந்தியவில் தெளிவான தேசிய நோக்கங்களுடன் துவங்கப்பெற்ற தொடக்கால அமைப்பு சென்னை மகாஜன சபையாகும். முதலாம் தலைமுறையைச் சேர்ந்த தேசியவாதிகளுக்கு இவ்வமைப்பு பியற்சிக் களமானது. 1884 மே 16இல் M. வீரராகவாச்சாரி,P. அனந்தாச்சார்லு இதன் செயர்பாடுகளில் பங்காற்றினார். அமைப்பின் உறுப்பினர்கள் குறிபிட்ட இடைவெளிகளில் ஒன்று கூடி தனிபட்ட விதத்திலுத் அறைக்கூட்டங்கள் நடத்தியும் பொதுபிரச்சனைகள் குறித்து விவாதித்து தங்கள் கருத்துகளை அரசுக்குத் தெரியப்படுத்தினர். மாகாணத்தில் பல பகுதிகளில் வாழும் மக்களிடையே பல பகுதிகளில் வாழும் மக்களிடைய பல்வேறு பொதுப்பிரச்சனைகள் குறித்த ஒருமித்த தெரியப்படுத்துவதே சென்னை மகாஜன சபையின் நோக்கமாக இருந்தது. குடிமைப் பணிகளுக்கான தேர்வுகள் இங்கிலாந்திலும் இந்தியவிலும் ஒரே சமயத்தில் நடத்தபட்ட வேண்டும். லண்டனிலுள்ள இந்திய கவுன்சிலை மூடுவது, வரிகளைக் குறைப்பது, இராணுவ குடியில் நிர்வாகச் செலவுகளைக் குறைப்பது ஆகியன இவ்வமைப்பின் கோரிக்கைளாகும். இவ்வமைப்பின் பல கோரிக்கைகள் பின்னர் காங்கிரசின் கோரிக்கைகளாயின.

**தமிழ்நாட்டின் முக்கிய தொடக்கால மிதவாத தேசியவாதிகள்:**

**தொடக்கால தேசியவாதிகள் அரசமைப்பு வழிமுறைகளின் மீது நம்பிக்கை கொண்டிருந்தனர். அறைக்கூட்டங்கள் நடத்துவதும் பிராச்சனைகள் குறித்து ஆங்கிலத்தில் கலந்துரையாடுவதும் அவர்களின் செயர்பாடுகளாக இருந்தன. தங்கள் கண்ணோட்டங்களைப் பெருந்தன்மை வாய்ந்த மொழிநடையில் வேண்டுகேள்களாகவும் இருந்தன. தங்கள் கண்ணோட்டங்களைப் பொருந்தன்மை வாய்ந்த மொழிநடையில் வேண்கோள்களாகவும், மனுச்செய்தல். இறைஞ்சுதல்,குறிப்பாணைகள் மூலமாக அரசுக்கு அவர்கள் சமர்ப்பித்து அரசு அமைத்த பல விசாரணைக் குழுக்களில் காணமுடிகின்றது. வங்கப் பிரிவினையின் போது திலகரும் ஏனைய தலைவர்களும் பெருவாரியான மக்கள் கலந்து கொண்ட பொதுக்கூட்டங்களை நடத்தியதாலும் மக்களை ஈடுபடச்செய்வதற்காக வட்டாரமெழியைப் பயன்படுத்தியதாலும் தொடக்கால தேசியவாதிகள் மிதவாதிகளென அழைக்கப்படலாயினர். சென்னையைச் சேர்ந்த புகழபெற்ற தமிழ்நாட்டு மிதவாதத் தலைவர்கள் V.S. சீனிவாச சாஸ்திரி, P.S. சிவகாமி,V. கிருஷ்ணசாமி, வுசு வெங்கட்ராமனார்,G.A நடேசன்,T.M மாதவராவ் மற்றும் S. சுப்பிரமணியனார் ஆகியோராவர். ஆங்கிலேயர்கள் தங்களை தாராளமானவர்கள் என உரிமை கொண்டாடியதில் உள்ள தவறுகளை அமல்ப்படுத்தியதே மிதவாதிகள் செய்த முக்கியப் பங்களிகப்பாகும். ஆங்கிலேயர் எவ்வாறு இந்தியாவைச் சுரண்டினாரக்ள் என்பதை அமல்படுத்தினர். இங்கிலாந்தில் ஜனநாயக் கொள்கைகளைப் பின்பற்றும் ஆங்கிலேயர் காரனிகளில் பிராதிநிதித்துவமற்ற அரசை எவ்வாறு திணித்து நாடகமாடுகின்றனர் என்பதையும் வெட்டவெளிச்சம் ஆக்கினர்.**

**(ஈ) மிதவாதக்க கட்டம்:**

சென்னை மகாஜன சபை போன்ற மாகாண அமைப்புகள் அகிலஇந்திய அளவிலான அமைப்பபுகள் நிறுவப்படுவதற்கு வழிபோலியது. இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்த இந்திய தேசிய காங்கிரஸ் தலைவர்கள் காங்கிரஸ் உருவாக்கப்படுவதற்கு முன்பாக பல கூட்டங்களில் கலந்து கொண்டனர். அவ்வாறான ஒரு கூட்டம் 1884 டிசம்பரில் பிரம்மஞான சபையில் கூடியது. தாதாபாய் நௌரோஜி,K.T. தெலாங், சுரேந்திரநாத் பானர்ஜி மற்றும் சில முக்கியத் தலைவர்களுடன், சென்னையிலிருந்து G. சுப்பிரமணியம்,P. ரங்கையா,P. அனநநதாச்சார்லு போன்றோரும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இந்திய தேசிய காங்கிரசின் முதற்கூட்டம் 1885இல் பம்பாயில் நடைபெற்றது. மொத்தம் கலந்து கொண்ட 72 பிரதிநிகளில் 22 பிரதிநிகள் சென்னையைச் சேர்ந்தோராவர். G. சுப்பிரமணியம் தனது எழுத்துக்களின் மூலமாக தேசியத்தை முன்னெடுத்தவர் ஆவார். இந்திய பொருளாதாரரீதியாக ஆங்கிலேயரகளால் சுரண்டப்படுவதைப் புரிந்துகொள்ள அவர் செய்த பங்களிப்புகள் அவர் நௌரோஜி மற்றும் கோகலே ஆகியோருக்கு இணையானவராவர்.

இந்திய தேசிய காங்கிரசின் இரண்டாவது மாநாடு 1866இல் கல்கத்தாவித் தாதாபாய் நௌரோஜியின் தலைமையில் நடைபெற்றது. காங்கிரசின் மூன்றாவது மாநாடு பத்ருதீன் தியாப்ஜியின் தலைமையில் 1887இல் சென்னையில் இன்று ஆயிரம் விளக்கு என்று அழைக்கப்படுகிற மக்கிஸ் தோட்டதில் (Makkies Garden) நடைபெற்றது. கலந்து கொண்ட 607 அகில இந்தியப் பிரதிநிதிகள் 362 பிரதிநிதிகள் சென்னை மாகாணத்தைப் சேர்ந்தவர்கள் ஆவர்.

**தமிழ்நாடு அன்றைய சென்னை மாகாணத்தில் ஒரு பகுதியாக இருந்து. சென்னை மாகாணம் என்பது இன்றைய ஆந்திரப் பிரதேசத்தின் பெரும் பகுதிகளையும் (கடற்கரை மாவட்டங்கள் மற்றும் ராயரலசீமா) கர்நாடகாவையும் (பெங்களூரு, பெல்லாரழ, தெற்கு கனரா) கேரளாவையும் (மலபார்) மற்றம் ஒடிசாவின் (கஞ்கம்) சிலபகுதியையும் உள்ளடக்கியாக** இருந்தது.

**சுதேசி இயக்கம்:**

வங்கப் பிரிவினை (1905) சுதேசி இயக்கத்திக்கு இட்டுச் சென்று விடுதலைப் போராட்டத்தின் போக்கை மாற்றியமைத்தது. இந்தியவின் பல பகுதிகளில் குறிகப்பாப வங்காளம், பஞ்சாப் மற்றும் மகாராஷ்டிரா ஆகிய பகுதிகளில் புகழ்பெற்ற தலைவர்கள் தோன்றினர். கல்கத்தா காங்கிரசில் மேற்கொள்ளப்பட்ட திட்டத்தின்படி சுதேசி நிறுவனங்களை ஊக்குவித்தல், அந்நியப் பண்டங்களைக் புங்கணித்தல், தேசியக் கல்வியை முன்னெடுத்தல் ஆகியவற்றை அவர்கள் நடைமுறைகப்படுத்தனர். சுதேசி இயக்கம் தமிழ்நாட்டில் ஒரு ஆழமான தாக்கத்தை ஏற்ப்டுத்தியது. அந்நியப் பண்டங்களைப் புறக்கணத்தல் தொடர்பாக காங்கிரஸ் தீவிரமான இயக்க நடவடிக்கைகளை மேற்கொண்டது.

**(அ) தமிழ்நாட்டின் எதிர்வினை:**

T. C. சிதம்பரனார்,V. சர்க்கரையார், சுப்பிரமணிய பாரதி, சுரேந்திரநாத் ஆரியா ஆகியோர் தமிழ்நாட்டைச் சேர்ந்த சிறந்த தலைவர்களாவர். தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஆயிரக்கணக்கில் பொதுமக்கள் கலந்து கொண்ட பொதுக்கூட்டங்கள் நடத்தப்பட்டன. மக்களைத் திரட்டுவதற்கு முதன்முதலாக தமிழ் பயன்படுத்தப்பட்டது. மக்களின் நாட்டுப்பற்று உணர்வுகளைத் தட்டி எழுப்பியதில் சுப்பிரமணிய பாரதியின் தேசபக்திப் பாடல்கள் மிக முக்கியமானவையாகும். சுதேசி கருத்துகளைப் பரப்புரை செய்ய பல இதழ்கள் தோன்றின. சுதேசமித்திரன், இந்திய ஆகிய இரண்டும் முக்கிய இதழ்களாகும். தீவிர தேசியவாதத் தலைவரான பிபின் சந்திரபால் சென்னையில் சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது ஆற்றிய சொற்பொழிவுகள் இளைஞர்களை கவர்ந்தன. சுதேசி இயக்கத்தில் மாணவர்களும் இளைஞர்களும் பெருமளவில் பங்கேற்றனர்.

**சுதேசி நீராவி கப்பல் நிறுவனம்:**

சுதேசியின் செயல்பாடுத்துவதில் மேற்கொள்ளப்பட்ட துணிகரமான நடவடிக்கைகளில் ஒன்று யாதெனில் தூத்துகுடியில் T.C. சிதம்பரனாரால் தொடங்கப்பட்ட சுதேசி நீராவி கப்பல் நிறுவனம் ஆகும். இவர் காவியா மற்றும் லாவோ எனும் இரு கப்பல்களை விலைக்கு வாறங்கி அவற்றை தூத்துக்குடிக்கும் கொழும்புக்குமிடையே ஓட்டினார். இருந்தபோதிலும் ஐரோப்பியக் கம்பெனியின் முறையற்ற கழுத்தறுப்பு போட்டியினாலும் அரசாங்கத்தின் ஒரு தலைப்பட்சமான போக்கினாலும் வ.உ.சி. யின் முயற்கிகள் தோல்வியில் முடிந்தன.

**திருநெல்வேலி எழுச்சி:**

திருநெல்வேலியியலும் தூத்துக்குடியிலும் நூற்பாலைத் தொழிலாளர்களை அணி திரட்டுவதில் வ.உ.சி., சுப்பிராமணிய சிவாவின் தோளோடுதோளட நின்றார். இவர் 1908 இல் ஐரேப்பியருக்குச் சொந்தமான கோரல் நூற்பாலையில் நடைபெற்ற வேலை நிறுத்ததிற்க்குத் தலைமையேற்றார். இந்நிகழ்வு நடைபெற்ற அதே சமயத்தில் பிபின் சந்திரபால் விடுதலை செய்யபபட்டார். பிபின் விடுதலை செய்யப்பட்டதைக் கொண்டுவதற்காகப் பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்ததற்காக வ.உ.வியும் சிவாவும் கைது செய்யப்பட்டனர். தலைவர்கள் இருவருத் அரசதுரோகக் குற்றம் சாட்டப்பட்டு கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டனர். தொடக்கத்தில் வ.உ.சிக்கு கொடுமையான வகையில் இரண்டு ஆயுள் தண்டனைகள் வழுங்கப்பட்டன. மக்கள் செல்வாக்கு பெற்ற இவ்விரு தலைவர்களும் கைது செய்யப்பட்டது செய்தி பரவியதில் திருநெல்வேலியில் கலகம் வெடித்தது. காவல்நிலைய, நீதிமன்ற, நகராட்சி அலுவலகக் கட்டங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. காவலர்கள் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் நான்கு நபர்கள் கொல்லப்பட்டனர். சிறையில் வ.உ.சி கடுமையாக நடத்தப்பட்டதோடு செக்கிழுக்க வைக்கப்பட்டார். கைது செய்யப்பட்ட வேண்டியவர்களில் G.சுப்பிமணியர், சுரேந்திரநாத் ஆர்யா ஆகியோர் இடம் பெற்றிருந்தனர். சிறைத்தண்டனையைத் தவிர்ப்பதற்காக சுப்பிரமணிய பாரதி பிரெஞ்சுக்காரர்களின் ஆதிக்கத்திலிருந்த பாண்டிச்சேரிக்கு இடம்பெயர்ந்தனர். பாரதியின் முன்னுதாரணத்தை அரவிந்தகோஷ் V.V. சுப்பிரமணியனார் போன்ற தேசியவாதிகளும் பின்பற்றினர் சுதேசி இயக்கத் தலைவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட கொடூரமான அடக்கமுறை தமிழ்நாட்டில் சுதேசி இயக்கத்தை ஓர் முடிவுக்குக் கொண்டு வந்தது.

**(ஆ) தமிழ்நாட்டில் புரடட்சிகர தேசியவாதிகளின் செயல்பாடுகள்:**

ஏனைய இடங்களில் நடந்ததைப் போலவே சுதேசி இயக்கம் இளைஞர்களுக்கு எழுச்சியூட்டியது. தலைவர்கள் இல்லாத சூழலில் அவர்கள் புரட்சிகர தேசியவாதிகளுக்குப் பாண்டிச்சேரி பாதுகாப்பான புகலிடமாயிற்று. தமிழ்நாட்டை சேர்ந்த இப்புரட்சிகர தேசியவாதிகள் பலருக்குப் புரட்சிகர தேசியவாதிகள் பலருக்குப் புரட்சிகர நடவடிக்கைகள் குறித்த அறிமுகமும் பயிற்சியும் லண்டனிலிருந்த இந்தியா ஹவுஸ் (India House) என்ற இடத்திலும் பாரிசிலும் வழங்கப்பெற்றது. அவர்களில் முக்கியமானவர்கள் ஆீவு ஆச்சாரியா,V.V. சுப்ரமணியனார் மற்றும் T.S.S. ராஜன் ஆகியோராவர். அவர்கள் புரட்சிகர நூல்களை பாண்டிச்சேரியின் வழியாக சென்னையில் விநியோகம் செய்தனர். புரட்சிவாதச் செய்தித்தாள்களான இந்திய, வீஜயா, சூர்யோதயம் ஆகியன பாண்டிச்சேரியிரிருந்து வெளிவந்தன. சில புரட்சிவாத செய்தித்தாள்களும் பாரதியின் பாடல்களும் அரசுக்கு எதிரானதெனத் தடைசெய்யப்பட்டன. 1901இல் அரவிந்த கோஷ்,V.V. சுப்ரமணியனார் ஆகியோரின் வருகைக்குப் பின்னர் பாண்டிச்சேரியில் புரட்சிகர நடவடிக்கைகள் தீவிராமடைந்தன. இத்தகைய நடவடிக்கைகள் முதல் உலகப்போர் வெடிக்கின்றவரை தொடர்ந்தன.

**ஆஷ் கொலை:**

1904இல் நீலகண்ட பிராம்மச்சாரியும் வேறு சிலரும் பாரத மாதா சங்கம் எனும் ரகசிய அமைப்பை உருவாக்கினர். ஆங்கில அதிகாரிகளைக் கொல்வதன் மூலம் மக்களிடைய நாட்டுப்பற்று உணர்வைத் தூண்டுவதே இவ்வமைப்பின் நோக்கமாகும்.

செங்கோட்டையைச் சேர்ந்த வாஞ்சிநாதன் இவ்வமைப்பால் உள்ளுணர்வு தூண்டப்பட்டார். அவர் 1911 ஜுன் 17 இல் திருநெல்வேலி மாவட்ட ஆட்சியரான ராபர்ட் W.D.E. ஆஷ் என்பவரை மணியாச்சி ரயில் சந்திரப்பில் சுட்டுக் கொன்றார். அதன் பின்னர் தன்னைத்தானே சுட்டு கொண்டார். மக்களிடமிருந்து பிரிந்துநின்ற இந்த இளம் புரட்சியாளர்கள் தேசபக்தி உடையவர்களாக இருந்தபோதிலும், மக்களை ஊக்கப்படுத்தவும் அணிதிரட்டவும் தவறிவிட்டனர்.

**அன்னிபெசன்ட் அம்மையாரும் தன்னாட்சி இயக்கமும்:**

தீவிர தேசியவாதிகளும் புரட்சிகர தேசியவாதிகளும் இரும்புக் கரம் கொண்டு அடக்கப்பட்ட நிலையில் மிதவாதி தேசியவாதிகள் சில அரசமைப்பு சீர்திருத்தங்கள் செய்யப்படலாம் என நம்பினர். இருந்தபோதிலும் மிண்டோ – மார்லி சீர்திருத்தங்கள் பொறுப்பாட்சியை வழங்கவில்லை என்பதால் அவர்கள் மனச்சோர்வடைந்தனர். இதன் பின்னரும் கூட மேலும் சில சீர்திருத்தங்களைப் பெறலாம் என்ற நம்பிக்கையில் காங்கிரஸ் ஆங்கிலேயரின் போர் முயற்சிகளுக்கு ஆதரவு நல்கியது.

இவ்வாறு தேசிய இயக்கம் தளர்வுற்று இருந்த நிலையில் பிரம்மஞான சபையின் தலைவரும், அயர்லாந்துப் பெண்மணியுமான அன்னிபெசன்ட் அயர்லாந்தின் தன்னாட்சி அமைப்புகளை அடியொற்றி தன்னாட்சி இயக்கத்தை முன்மொழிந்தார். 1916 இல் தன்னாட்சி இயக்கத்தை (Home Rule League) தொடங்கிய அவர் அகில இந்திய அளவில் தன்னாட்சி வழங்கப்பட வேண்டும் எனும் கோரிக்கையை முன்னெடுத்துச் சென்றார். இச்செயல் திட்டத்தில் G.S. அருண்டேல்,B.P. வாடியா மற்றும் C.P. ராமசாமி ஆகியோர் அவருக்குத் துணை நின்றனர். இவர்கள் கோரிய தன்னாட்சி ஆங்கில அரசிடம் ஓரளவிற்கான விசுவாசத்தையே கொண்டிருந்ததாக அமைந்தது. தன்னுடைய திட்டத்தை மக்களிடையே கொண்டு செல்வதற்காக அன்னிபெசன்ட் நியூ இந்தியா (New India), காமன் வீல் (Commonweal) எனும் இரண்டு செய்தித்தாள்களைத் தொடங்கினார். "அதிநவீன வசதிகளுடன் கூடிய ரயிலில் அடிமைகளாக இருப்பதைவிட சுதந்திரத்துடன் கூடிய மாட்டு வண்டியே சிறந்தது" என கூறினார். 1910 ஆம் ஆண்டு பத்திரிகைச் சட்டத்தின்படி அன்னிபெசன்ட் பிணைத் தொகையாக பெருமளவு பணத்தைச் செலுத்தும்படி அறிவுறுத்தப்பட்டார். அன்னி பெசன்ட் "விடுதலை பெற இந்தியா எப்படித் துயருற்றது" (How India wrought for Freedom') இந்தியா : ஒரு தேசம் (Indina : A Nation) எனும் இரண்டு புத்தகங்களையும் சுயாட்சி குறித்த துண்டுப்பிரசுரத்தையும் எழுதினார்.

பெரும் எண்ணிக்கையில் மாணவர்கள் இவ்வியக்கத்தில் சேர்ந்து தன்னாட்சி இயக்க வகுப்புகளில் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. அம்மாணவர்கள் சாரணர் இயக்கக் குழுக்களாகவும் (Scouts) தொண்டர் குழுக்களாகவும் மாற்றப்பட்டனர். அன்னிபெசன்ட்டும் அவருடன் பணியாற்றியோரும் பொதுமேடைகளில் பேசுவதும் எந்த ஒரு அரசியல் நடவடிக்கையில் ஈடுபடுவதும் தடை செய்யப்பட்டிருந்தது. 1917 இல் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டிற்கு அன்னிபெசன்ட் தலைவராகத் தேர்வுசெய்யப்பட்டார். தன்னாட்சி இயக்கத்தில் உறுப்பினர்களாக இருந்த இயக்கத்தில் உறுப்பினர்களாக இருந்த B.P. வாடியா போன்றோர் தொழிற்சங்கங்களை உருவாக்கி தொழிலாளர் வர்க்கத்தை அணி திரட்டுவதில் முக்கியப் பங்காற்றினர். இத்தலைவர்கள் தொழிலாளர்கள் வேலை பார்க்கும் இடங்களிலுள்ள நிலைகளை மேம்படுத்தியதோடல்லாமல், தொழிலாளர்களை விடுதலைப் போராட்டத்தின் பகுதியாக மாற்றுவதிலும் வெற்றி பெற்றனர். இருந்தபோதிலும் காந்தியடிகள் தேசியத் தலைவராக எழுச்சி பெற்ற நிலையில் அன்னிபெசன்டும் தன்னாட்சி இயக்கங்களும் ஒளிமங்கின.

**பிராமணர் அல்லாதோர் இயக்கமும் காங்கிரசிற்கு சவாலும்:**

இதே சமயத்தில் சென்னை மாகாணத்தில் கல்வி வேகமாக வளர்ந்தது. கல்வியறிவு பெற்ற பிராமணர் அல்லாதோரின் எண்ணிக்கை அதிகமானது. மேலே விவாதிக்கப்பட்ட தீவிர அரசியல் மற்றும் சமூக நடவடிக்கைகள் படித்த பிராமணரல்லாதவர்களை அரசியலில் ஈடுபடவைத்தது. பிராமணர்களின் மேலாதிக்கத்தில் இருந்த அரசுப் பணிகளிலும், தேர்வு செய்யப்பட்ட அமைப்புகளின் பிரதிநிதித்துவத்திலும், அரசு வாய்ப்புகளில் நிலவும் சமநிலையற்ற தன்மையும் சாதியப் பாகுபாடும் இருப்பது குறித்து அவர்கள் காங்கிரசிலும் பிராமணர்களே மிகப்பெரும் எண்ணிக்கையில் இருந்தனர்.

**தென்னிந்திய நலவுரிமைச் சங்கம்:**

பிராமணரல்லாதோர் தங்கள் நலன்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காகத் தங்களை ஒரு அரசியல் அமைப்பாக அணிதிரட்டிக் கொண்டனர். 1912 இல் சென்னை திராவிடர் கழகம் (Madras Dravidian Association) உருவாக்கப் பெற்றது. அதன் செயலராக C. நடேசனார் செயலூக்கமிக்க வகையில் பங்காற்றினார். 1916 ஜூன் மாதத்தில் அவர் பிராமணர் அல்லாத மாணவர்களுக்காக "திராவிடர் சங்க

தங்கும் விடுதி"யை நிறுவினார். மேலும் இக்காலப் பகுதியைச் சேர்ந்த இரு முக்கிய பிராமணர் அல்லாதோரின் தலைவர்களான T.M. நாயர்,P. தியாகராயர் ஆகிய இருவரிடையே நிலவிய கருத்து வேற்றுமையை சரிசெய்து இணக்கத்தை எற்படுத்தினார். இவ்விருவருமே தொடக்கத்தில் காங்கிரசில் அங்கம் வகித்தவர்களே காங்கிரஸ் அமைப்பினுள் பிராமணரல்லாதவர்கள் எவ்வாறு ஓரங்கட்டப்படுகிறார்கள் என்பதைப் பார்த்துத் தெளிவுபெற்றவர்களாவர். 1916 நவம்பர் 20 இல் P. தியாகராயர்,T.M. நாயர்,C. நடேசனார் ஆகியோர் தலைமையில் சுமார் முப்பது பிராமணரல்லாதவர்கள் சென்னை விக்டோரியா பொது அரங்கில் கூடினர். பிராமணரல்லாதோர்களின் நலன்களை மேம்படுத்துவதற்காகத் தென்னிந்திய நலவுரிமைச் சங்கம் (South Indian Liberal Federation – SILF) எனும் அமைப்பு உருவாக்கப்பட்டது. அவர்கள் ஆங்கிலத்தில் ஜஸ்டிஸ் (Justice– நீதி) தமிழில் திராவிடன், தெலுங்கில் ஆந்திர பிரகாசிகா எனும் மூன்று செய்தித்தாள்களையும் தொடங்கினர். விரைவில் இவ்வமைப்பு நடத்திய ஆங்கில நாளிதழின் பெயரான ஜஸ்டிஸ் என்பதே அவ்வமைப்பின் பெயராகி ஜஸ்டிஸ் கட்சி (நீதிக்கட்சி) என அழைக்கப்படலாயிற்று. அமைப்புக்கான கிளைகளை உருவாக்கும் முகமாக மாகாணம் முழுவதிலும் ஜஸ்டிஸ் கட்சி பல மாநாடுகளை நடத்தியது.

**இட ஒதுக்கீட்டுக்கான கோரிக்கை:**

நீதிக்கட்சி தனது நோக்கங்களை கோடிட்டுக் காட்டி பிராமணரல்லாதோரின் அறிக்கையை (Non-Brahmin Manifests) வெளியிட்டது. அவை: அரசுப் பணியிடங்களில் பிராமணரல்லாதோர்களுக்கு இட ஒதுக்கீடு மற்றும் பிரதிநிதித்துவ அமைப்புகளில் இட ஒதுக்கீடு என்பனவாகும். இவ்வமைப்பு தன்னாட்சி இயக்கத்தைப் பிராமணர்களின் இக்கம் என எதிர்த்தது. தன்னாட்சி இயக்கம் பிராமணர்களுக்கு அதிக அதிகாரங்களை வழங்கக் கூடுமென அஞ்சியது. இது காங்கிரசையும் பிராமணர்களின் கட்சியென விமர்சித்தது. பாராளுமன்ற அரசியல் சீர்திருத்தங்கள் குறித்து 1917 இல் மாண்டேகுவின் அறிவிப்பைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் அரசியல் விவாதங்கள் தீவிரமடைந்த நீதிக்கட்சி வகுப்புவாத பிரதிநதித்துவத்தைக் கோரியது (சமூகத்திலுள்ள பல்வேறு பிரிவினர்களுக்கும் பிரதிநிதித்துவம்). சென்னை அரசாங்கம் நீதிக் கட்சியை ஆதரித்தது. ஆங்கிலேயரின் ஆட்சி பிராமணர் அல்லாதோரின் முன்னேற்றத்திற்குத் துணைபுரியுமென நீதிக்கட்சி நம்பியது. 1919 ஆம் ஆண்டுச் சட்டம் பிராமணரல்லாதோர்களுக்குத் தேர்தலில் இடஒதுக்கீடு வழங்கியது. இந்நடவடிக்கையைக் காங்கிரஸ் கட்சி விமர்சனம் செய்தது ஆனால் நீதிக்கட்சியால் இது வரவேற்கப்பட்டது.

**நீதிக்கட்சி அமைச்சரவை:**

1920 இல் நடத்தப்பட்ட தேர்தல்களைக் காங்கிரஸ் புறக்கணித்தது. சட்டமன்றத்தில் மொத்தமிருந்த 98 இடங்களில் 63 இல் நீதிக்கட்சி வெற்றிபெற்றது. நீதிக்கட்சியின் A. சுப்பராயலு முதலாவது முதலமைச்சரானார். 1923இல் நடைபெற்ற தேர்தலுக்குப் பின்னர் நீதிக் கட்சியைச் சேர்ந்த பனகல் அரசர் அமைச்சரவையை அமைத்தார். பிராமணரல்லாதோரின் நலனுக்காக நீதிக் கட்சி பல்வேறு நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தியது. அவை வருமாறு: உள்ளாட்சித்துறைகளிலும் கல்வி நிலையங்களிலும் வேலைவாய்ப்பில் இடஒதுக்கீடு செய்யப்பட்டது. பணியாளர் தேர்வுக்குழு நிறுவப்பெற்றது. இது பின்னர் பொதுப் பணியாளர் தேர்வாணையமானது. இந்து சமய அறநிலையத்துறை சட்டமும் சென்னை அரசு தொழில் உதவிச் சட்டமும் இயற்றப்பட்டன. தேவதாசி முறை ஒழிக்கப்பட்டது. ஏழை எளிய மக்கள் வீடு கட்டிக் கொள்வதற்காகப் புறம்போக்கு நிலங்களை பட்டா செய்து வழங்கப்பட்டன. வசதியற்ற மக்கள் பிரிவினரிடையே கல்வி கற்பதை ஊக்குவிப்பதற்காக கல்வி கட்டணச் சலுகை, கல்வி உதவித்தொகை வழங்குதல், மதிய உணவுத் திட்டம் ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

**அரசின் அடக்குமுறை நடவடிக்கைகள்**
**ரௌலட் சட்டம்:**

முதல் உலகப்போரில் முக்கியப் பங்களிப்பை செய்ததனால் (குறிப்பாக ஆங்கிலப் பேரரசுக்காக இந்திய வீரர்கள் தொலைதூரப் பகுதிகளில் போரிட்டனர்) இந்தியர்கள் ஆங்கில அரசிடமிருந்து மேலும் பல சீர்திருத்தங்களை எதிர்நோக்கினர். ஆனால் ஆங்கில அரசு 1919 இல் கொடூரமான

குழப்பவாதி புரட்சிக் குற்றச் சட்டத்தை இயற்றியது. இச்சட்டத்தைப் பரிந்துரை செய்த குழுவினுடைய தலைவரின் பெயர் சர் சிட்னி ரௌலட் ஆவார். எனவே இச்சட்டம் பரவலாக ரௌலட்சட்டம் என அறியப்பட்டது. இச்சட்டத்தின் கீழ் முறையான நீதித்துறை சார்ந்த விசாரணைகள் இல்லாமலேயே யாரை வேண்டுமானாலும் பயங்கரவாதி எனக் குற்றம்சாட்டி அரசு சிறையில் அடைக்கலாம். இதைக் கண்டு இந்தியர்கள் திகிலடைந்தனர். மக்களின் கோபத்திற்குக் குரல்கொடுத்த காந்தியடிகள், தென்னாப்பிரிக்காவில் தான் பயன்படுத்திய போராட்ட வடிவமான சத்தியாகிரகத்தை மேற்கொண்டார்.

**ரௌலட் சத்தியாகிரகம்:**

1919 மார்ச் 18 இல் மெரினா கடற்கரையில் நடைபெற்ற கூட்டத்தில் காந்தியடிகள் உரையாற்றினார். 1919 ஏப்ரல் 6இல் "கருப்புச் சட்டத்தை" எதிர்க்கும் நோக்கில் கடையடைப்பும் வேலை நிறுத்தங்களும் நடத்தப்பட்டன. தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. சென்னை நகரின் பல பகுதிகளிலிருந்து தொடங்கிய ஊர்வலங்கள் மெரினா கடற்கரையில் ஒன்றிணைந்து பெரும் மக்கள் கூட்டமானது. அந்நாள் முழுவதும் உண்ணாவிரதமும் பிரார்த்தனைகளும் மேற்கொள்ளப்பட்டன. சென்னை சத்தியாகிரக சபை என்ற அமைப்பும் நிறுவப்பட்டது. ராஜாஜி, கஸ்தூரிரங்கர்,S. சத்தியமூர்த்தி, ஜார்ஜ் ஜோசப் ஆகியோர் கூட்டத்தில் உரை நிகழ்த்தினர். தொழிலாளர்களுக்கென தனியாக நடத்தப்பட்ட கூட்டமொன்றில் V. கல்யாணசுந்தரம் (திரு.வி.க) B.P. வாடியா, வ.உ.சி. ஆகியோர் உரையாற்றினர். தொழிலாளர்களும், மாணவர்களும், பெண்களும் பெருவாரியான எண்ணிகையில் பங்கேற்றதே இவ்வியக்கத்தின் முக்கிய அம்சமாகும்.

**ஜார்ஜ் ஜோசப்:**

**வழக்கறிஞரும் நன்கு சொற்பொழிவாற்றும் திறன் படைத்தவருமான ஜார்ஜ் ஜோசப் மதுரையில் தன்னாட்சி இயக்கத்தை ஏற்படுத்தியதிலும், அதன் நோக்கத்தை மக்களின் கவனத்திற்குக் கொண்டு சென்றதிலும் முக்கியப் பங்குவகித்தார். செங்கண்ணூரில் (இன்றைய கேரள மாநிலம் ஆலப்புழா மாவட்டம்) பிறந்திருந்தாலும் மதுரையில் வசிப்பதையே விரும்பி மக்களின் வழக்கறிஞராகப் பணி செய்தார். தனது நீண்ட பொது வாழ்வின் போது, அவர் கேரளாவில் வைக்கம் சத்தியாகிரகத்தை வழிநடத்தினார். ஏனெனில் இது இந்தியாவின் அனைத்து குடிமக்களுக்கும் சமூக உரிமைகள் தொடர்பான பிரச்சினையாக அவர் கருதினார். தமிழ்நாட்டில் குற்றப் பரம்பரைச் சமூகங்களின் பாதுகாவலராக விளங்கினார். பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு இவர் ஆற்றிய சேவையின் காரணமாக மதுரை மக்கள் இவரை "ரோசாப்பு துரை" என அன்புடன் அழைத்தனர். மதுரை தொழிலாளர் சங்கம் (Madurai Labour Union) (1918) எனும் அமைப்பை ஏற்படுத்துவதற்கு ஹார்வி மில் தொழிலாளர்களுக்கு உதவினார். இச்சங்கத்தின் தொடக்ககாலப் போராட்டங்கள் நூற்பாலைத் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வையும் வேலைநேரக் குறைப்பையும் பெற்றுத்தந்தன.**

**கிலாபத் இயக்கம்:**

ஜாலியன் வாலா பாக் படுகொலையைத் தொடர்ந்து அதற்குக் காரணமான ஜெனரல் டயர் அனைத்துக் குற்றச்சாட்டுகளில் இருந்தும் விடுக்கப்பட்டதோடல்லாமல் அவருக்குப் பரிசுகளும் வெகுமதியும் வழங்கப்பட்டன. முதல் உலகப் போருக்குப் பின்னர் துருக்கியின் கலீபா அவமரியாதை செய்யப்பட்டதுடன் அவரது அனைத்து அதிகாரங்களும் பறிக்கப்பட்டன. கலீபா பதவியை மீட்பதற்காக கிலாபத் இயக்கம் தொடங்கப் பெற்றது. பெரும்பாலும் தேசிய இயக்கத்திலிருந்து ஒதுங்கி இருந்த முஸ்லீம்கள் தற்போது பெரும் எண்ணிக்கையில் பங்கேற்கத் தொடங்கினர். தமிழ்நாட்டில் 1920 ஏப்ரல் 17 இல் மௌலானா சௌகத் அலி தலைமையேற்ற ஒரு பொதுக்கூட்டத்துடன் கிலாபத் நாள் கடைப்பிடிக்கப்பட்டது. இதைப்போன்ற ஒரு மாநாடு ஈரோட்டிலும் நடத்தப்படடது. வாணியம்பாடி, கிலாபத் எழுச்சி நடவடிக்கைகளின் முக்கிய மையமாகத் திகழ்ந்தது.

**ஒத்துழையாமை இயக்கம்:**

ஒத்துழையாமை இயக்கத்தின் போது தமிழ்நாடு செயல்துடிப்புடன் விளங்கியது. ஊ. ராஜாஜியும் ஈ.வெ. ராமசாமியும் (ஈ.வெ.ரா பின்னர் பெரியார் என அழைக்கப்பட்டார்) தலைமையேற்று நடத்தினர். முஸ்லிம் லீக்கின் சென்னைக் கிளையை நிறுவிய யாகுப் ஹசன் என்பாருடன் ராஜாஜி நெருக்கமாகச் செயல்பட்டார். இதன் காரணமாக தமிழநாட்டில் ஒத்துழையாமை இயக்கத்தின் போது இந்துக்களும் இஸ்லாமியரும் இணைந்து நெருக்கமாகச் செயல்பட்டனர். பொதுக்கூட்டங்களின் போது ஒழுங்கைப் பராமரிக்கவும் துண்டுப்பிரசுரங்களை விநியோகம் செய்யவும், கொடிகளை ஏந்திச் செல்லவும் காங்கிரஸ் தொண்டர்கள் அணி உருவாக்கப்பட்டது. அவர்களும் கள்ளுக்கடை மறியலில் முக்கியப் பங்காற்றினர்.

**வரிகொடா இயக்கமும் கள்ளுக்கடை மறியல் இயக்கமும்:**

ஒத்துழையாமை இயக்கத்தின் ஒரு பகுதியாக, பல இடங்களில் விவசாயிகள் வரிகொடுக்க மறுத்தனர். தஞ்சாவூரில் வரிகொடா இயக்கம் ஒன்று நடைபெற்றது. சட்டமன்றங்கள், பள்ளிகள் மற்றும் நீதிமன்றங்கள் ஆகியவை புறக்கணிக்கப்பட்டன. அந்நியப்பொருட்கள் புறக்கணிக்கப்பட்டன. பல பகுதிகளில் தொழிலாளர்களின் வேலை நிறுத்தங்கள் அதிக எண்ணிக்கையில் நடைபெற்றன அவற்றில் பல தேசியத் தலைவர்களால் வழிநடத்தப்பட்டது. தமிழ்நாட்டில் நடைபெற்ற ஒத்துழையாமை இயக்கத்தின் முக்கிய அம்சமாகத் திகழ்ந்தது கள்ளுக்கடைகளுக்கு எதிரான போராட்டங்களே. கள்ளுக்கடைகள் மறியல் செய்யப்பட்டன. மாகாணத்தின் அனைத்து பகுதிகளிலும் ஆர்ப்பாட்டங்களும் கடையடைப்புகளும் ஏற்பாடு செய்யப்பட்டன. குற்றப்பரம்பரைச் சமூக சட்டத்திற்கு எதிராகவும் கிளர்ச்சிகள் நடைபெற்றன. 1921 நவம்பரில் சட்ட மறுப்பு இயக்கத்தைத் தொடங்குவதென முடிவு செய்யப்பட்டது. ராஜாஜி, சுப்பிரமணிய சாஸ்திரி,ஈ.வெ.ரா. ஆகியோர் கைது செய்யப்பட்டனர். 1922 ஜனவரி 13இல் வேல்ஸ் இளவரசரின் வருகை புறக்கணிக்கப்பட்டது. காவல்துறையின் அடக்குமுறையில் இருவர் கொல்லப்பட்டனர் பலர் காயமுற்றனர். 1922இல் சௌரி சௌரா நிகழ்வில் 22 காவலர்கள் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து ஒத்துழையாமை இயக்கம் விலக்கிக் கொள்ளப்பட்டது.

**ஈ.வெ.ரா. வின் ஆக்கபூர்வச் செயல்பாடுகள்**

இக்காலகட்டத்தில் தமிழ்நாட்டு அரசியலில் ஈ.வெ.ரா. முக்கியப் பங்குவகித்தார். கதரின் பயன்பாட்டை மேம்படுத்தி அதன் விற்பனையை அதிகரிக்கத் தீவிரமாகச் செயல்பட்டார். கள்ளுண்பதற்கு தனது எதிர்ப்பைக் காட்டும் வகையில் தனக்குச் சொந்தமான தோப்பிலிருந்த தென்னை மரங்கள் அனைத்தையும் வெட்டி வீழ்த்தினார். திருவாங்கூர் அரசின் ஆட்சியிலிருந்த வைக்கம் எனும் ஊரில் நடைபெற்ற கோவில் நுழைவுக்கான சத்தியாகிரகத்திலும் முக்கியப்பங்கு வகித்தார். கோவிலைச் சுற்றியுள்ள வீதிகள் ஒடுக்கப்பட்ட வகுப்புகளைச் சார்ந்த மக்கள் நடமாடக்கூட முடியாத அல்லது உயர் சாதி மக்களிடமிருந்து குறிப்பிட்ட தூரம் விலகியே நின்றாக வேண்டிய காலகட்டமது. கேரளாவின் முக்கியத் தலைவர்கள் கைது செய்யப்பட்ட பின்னர் ஈ.வெ.ரா. அங்கு சென்று அவ்வியக்கத்திற்குப் புத்துயிர் ஊட்டினார். அவர் கைது செய்யப்பட்டு ஒரு மாத கால சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. விடுதலை செய்யப்பட்ட பின்னரும் வைக்கத்தை விட்டு வெளியேற மறுத்தார். எழுச்சியூட்டும் விதத்தில் உரைகள் நிகழ்த்தியதற்காக இரண்டாவது முறையாகக் கைது செய்யப்பட்டு ஆறுமாதகால கடுங்காவல் தண்டனை வழங்கப்பட்டது. விடுதலையாகி ஈரோடு திரும்பியபோது கதர் விற்பனையை முன்னேற்றுவது குறித்து பேசியதற்காகக் கைது செய்யப்பட்டார். 1925 ஜுன் மாதத்தில் வைக்கத்தில் கோவிலைச் சுற்றியிருந்த வீதிகளில் விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டது. சாதிப் பாகுபாட்டுக்கு எதிராகவும் கோவில் நுழைவுப் போராட்டத்திற்கு ஆதரவாகவும் அவர் செய்த பங்களிப்பிற்காக வைக்கம் வீரர் (Vaikom Hero) என பாராட்டப்பட்டார்.

**சேரன்மாதேவி குருகுலப் பிரச்சனை:**

ஆயினும் இக்காலகட்டத்தில் ஈ.வெ.ரா. காங்கிரசின் மீது மிகவும் அதிருப்தி கொண்டிருந்தார். அது பிராமணர்களின் நலன்களை மட்டுமே மேம்படுத்துவதாக உணர்ந்தார். சேரன்மாதேவி குருகுலப் பிரச்சனையும், வகுப்புவாரி பிரதிநிதித்துவம் தொடர்வாக காங்கிரசுக்குள்ளே ஏற்பட்ட கருத்து வேறுபாடும் ஈ.வெ.ரா.வை காங்கிரசை விட்டு வெளியேற வைத்தன.

தேசியக் கல்வியை முன்னெடுக்கும் பொருட்டு ஒரு குருகுலமானது V.V. சுப்பிரமணியனாரால் சேரன்மாதேவியில் நிறுவப்பெற்றது. இது காங்கிரசிடமிருந்து நிதியினைப் பெற்றது. இருந்தபோதிலும் இப்பள்ளியில் சாதியின் அடிப்படையில் மாணவர்கள் பாகுபடுத்தப்பட்டனர். பிராமண மாணவர்களுக்கும் பிராமணர் அல்லாத மாணவர்களுக்கும் தனித்தனியே உணவு பரிமாறப்பட்டது. உணவிலும் வேறுபாடுகள் இருந்தன. இது. ஈ.வெ.ரா.வின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்ட போது அவர் மற்றொரு தலைவரான P. வரதராஜுலுவுடன் இணைந்து இப்பழக்கத்தைக் கேள்விக்குள்ளாக்கி கடுமையாக விமர்சித்தார்.

1925 நவம்பர் 21 இல் காஞ்சிபுரத்தில் நடைபெற்ற காங்கிரஸ் கமிட்டி மாநாட்டில் அவர் சட்டசபையில் பிராமணரல்லாதோருக்கு பிரதிநிதித்துவம் வேண்டும் எனும் கோரிக்கையை முன் வைத்தார். இதன் பொருட்டு 1920 முதல் அவர் மேற்கொண்ட முயற்சிகளில் தோல்வியுற்றார். இவர் முன்மொழிந்த தீர்மானம் தோற்கடிக்கப்பட்டதால் வேறு சில பிராமணரல்லாத தலைவர்களுடன் மாநாட்டை விட்டு வெளியயேறினார். வெளிவந்தவர்கள் தனியே சந்தித்தனர். விரைவில் காங்கிரசிலிருந்து விலகிய ஈ.வெ.ரா. சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்கினார்.

**சுயராஜ்ஜிய கட்சியினர் - நீதிக்கட்சியினர் இடையேயான போட்டி:**

ஒத்துழையாமை இயக்கம் விலக்கி கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து காங்கிரஸ் மாற்றத்தை விரும்பாதோர்" "மாற்றத்தை விரும்புவோர்" எனப் பிரிந்தது. மாற்றத்தை விரும்பாதோர் சட்டமன்றப் புறக்கணிப்பைத் தொடர விரும்பினர். மாற்றத்தை விரும்பியோர் தேர்தலில் போட்டியிட்டுச் சட்டமன்றத்தினுள் செல்ல விரும்பினர். ராஜாஜியுடன் காந்தியத்தைத் தீவிரமாகப் பின்பற்றும் வேறு சிலர் இணைந்து சட்டமன்றத்திற்குச் செல்வதை எதர்த்தனர். கஸ்தூரிரங்கம், ஆ.யு. அன்சாரி ஆகியோருடன் சேர்ந்து கொண்ட ராஜாஜி சட்டமன்றத்தைப் புறக்கணிப்பது எனும் கருத்தை முன்வைத்தார். இக்கருத்துக்கு ஏற்பட்ட எதிர்ப்பு காங்கிரசுக்குள்ளேயே சித்தரஞ்சன் தாஸ், மோதிலால்நேரு ஆகியோரால் சுயராஜ்ஜியக் கட்சி உருவாக்கப்படுவதற்கு இட்டுச் சென்றது. தமிழ்நாட்டில் S. சீனிவாசனார் S. சத்தியமூர்த்தி ஆகியோர் சுயராஜ்ஜியக் கட்சியினருக்குத் தலைமை ஏற்றனர்.

**சுப்பராயன் அமைச்சரவை:**

1926 இல் நடைபெற்ற தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களில் சுயராஜ்ஜியக் கட்சியினர் பெரும்பான்மை இடங்களில் வெற்றி பெற்றனர். இருந்தபோதிலும் காங்கிரசின் கொள்கைக்கு இணங்க ஆட்சிப் பொறுப்பை ஏற்கமறுத்தது. மாறாக அவர்கள் சுயேட்சை வேட்பாளரான P. சுப்பராயனுக்கு

**நீல் சிலை அகற்றும் போராட்டம் (1927):**

**ஜேம்ஸ் நீல், மதராஸ் துப்பாக்கி ஏந்திய காலாட்படையைச் சேர்ந்தவர். 1857 பேரெழுச்சியின் போது நடைபெற்ற கான்பூர் படுகொலை என்றழைக்கப்படும் சம்பவத்தில் பல ஆங்கிலப் பெண்களும் குழந்தைகளும் கொல்லப்பட்டனர். இதற்கு வஞ்சம் தீர்க்கும் வகையில் நீல் கொடூரமாக நடந்து கொண்டார். பின்னர் நீல் இந்திய வீரர் ஒருவரால் கொல்லப்பட்டார். சென்னை மௌண்ட்ரோட்டில் ஆங்கிலேயர் அவருக்கு ஒரு சிலை வைத்தனர். இதை, இந்தியர்களின் உணர்வுகளுக்கு இழைக்கப்படும் அவமரியாதை எனக் கருதிய தேசியவாதிகள் சென்னையில் தொடர் போராட்டங்களை மேற்கொண்டனர். சென்னை மாகாணத்தின் பலபகுதிகளிலிருந்து வந்திருந்த போராட்டக்காரர்களுக்கு திருநெல்வேலியைச் சேர்ந்த S.N. சோமையாஜுலு தலைமையேற்றார். பலர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். அச்சமயம் சென்னைக்கு வந்த காந்தியடிகள் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தார். 1937 இல் ராஜாஜியின் தலைமையில் காங்கிரஸ் ஆட்சி அமைத்திருந்தபோது இச்சிலை அகற்றப்பட்டு சென்னை அருங்காட்சியகத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.**

அமைச்சரவை அமைக்க உதவினர். 1930 இல் நடைபெற்ற தேர்தலில் சுயராஜ்ஜியக் கட்சியனர் போட்டியிடாததால் நீதிக்கட்சி எளிதாக வெற்றி பெற்றது. அக்கட்சி தொடர்ந்து 1937 வரை ஆட்சி செய்தது.

**சைமன் குழுவைப் புறக்கணித்தல்:**

1919 ஆம் ஆண்டுச் சட்டத்தின் செயல்பாடுகளைப் பரிசீலனை செய்து சீர்திருத்தங்களைப் பரிந்துரை செய்ய 1927 இல் இந்திய சட்டப்பூர்வ ஆணையம் ஒன்று சர் ஜான் சைமனின் தலைமையில் அமைக்கப் பெற்றது. ஆனால் வெள்ளையர்களை மட்டுமே கொண்டிருந்த இக்குழுவில் ஒரு இந்தியர் கூட இடம்பெறாதது இந்தியர்களுக்கு மிகப்பெரும் மனச்சோர்வை ஏற்படுத்தியது, ஆகையால் காங்கிரஸ் சைமன் குழுவைப் புறக்கணித்து சென்னையில் S. சத்தியமூர்த்தி தலைமையில் சைமன் குழு எதிர்ப்பு பிரச்சாரக் குழுவொன்று உருவாக்கப்பட்டது. மாணவர்கள், கடைகள் வைத்திருப்போர், வழக்கறிஞர்கள், ரயில் பயணிகள் ஆகியோரிடையே விரிவான அளவில் புறக்கணிப்புப் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. 1929 பிப்ரவரி 18 இல் சைமன் குழு சென்னைக்கு வந்தபோது பொதுக்கூட்டங்கள், எதிர்ப்பு ஊர்வலங்கள், கடையடைப்பு போன்றவற்றால் வாழ்த்தப்பெற்றது. குழுவுக்கு எதிராகக் கறுப்புக்கொடி காட்டப்பட்டது. எதிர்ப்புகளை ஒடுக்க காவல்துறை படைப் பிரயோகம் செய்தது.

**சட்ட மறுப்பு இயக்கம்:**
**புரண சுயராஜ்ஜியத்தை நோக்கி:**

1920 களில் தமிழ்நாட்டில் காந்தியடிகள் தலைமையிலான காங்கிரஸ் விரிந்துபட்ட அடித்தளத்தைக் கொண்ட அமைப்பாக மாறிக் கொண்டிருந்தது. 1927 இல் இந்திய தேசிய காங்கிரசின் சென்னை மாநாடு முழுமையான சுதந்திரமே தனது இலக்கு என அறிவித்தது. சைமன் குழுவினை எதிர்த்து, அரசியல் அமைப்புச் சீர்திருத்தங்களை வடிவமைப்பதற்காக காங்கிரஸ் மோதலால் நேருவின் தலைமையில் ஒரு குழுவை அமைத்தது. 1929 இல் லாகூரில் கூடிய காங்கிரஸ் மாநாட்டில் பூரண சுயராஜ்ஜியம் (முழு சுதந்திரம்) என்பதை இலக்கு எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேலும் 1930 ஜனவரி 26 இல் ராவி நதியின் கரையில் சதந்திரத்தை அறிவிக்கும் விதமாக ஜவகர்லால் நேரு தேசியக் கொடியை ஏற்றினார்.

**வேதாரண்யம் உப்பு சத்தியாகிரகம்:**

காந்தியடிகள் முன்வைத்த கோரிக்கைகளை வைஸ்ராய் ஏற்றுக் கொள்ளாததைத் தொடர்ந்து அவர் சட்டமறுப்பு இயக்கத்தைத் தொடங்கினார். 1930 மார்ச் 12இல் தண்டியை நோக்கி உப்பு சத்தியாகிரக யாத்திரையைத் துவக்கினார். சட்டமறுப்பு இயக்கமானது மாணவர்கள், கடைகள் வைத்திருப்போர், தொழிலாளர், பெண்கள் ஆகியோரின் பங்கேற்புடன் மக்கள் பெருவாரியான எண்ணிக்கையில் கலந்து கொண்ட போராட்டமாகும். கிராமப்புறங்களிலும் நகரங்களிலும் பொதுக்கூட்டங்கள், ஊர்வலங்கள், கடையடைப்பு ஆகியனவும் சுதேசி நாடகங்களை மேடையேற்றுவது சுதேசிப் பாடல்கள் பாடுவது ஆகியனவும் அன்றாட நிகழ்வுகள் ஆயின. சென்னை நகரில் கடைகளுக்கு முன்பாக மறியல்கள் நடத்தப்பட்டதுடன் அந்நியப் பண்டங்கள் புறக்கணிக்கப்பட்டன. ராஜாஜி உப்பு சத்தியாகிரகம் ஒன்றினை ஏற்பாடுசெய்து தலைமையேற்று வேதாரண்யம் நோக்கி அணி வகுத்துச் சென்றார். தாங்களாக முன்வந்த ஆயிரம் தொண்டர்களில் நூறு தொண்டர்கள் மட்டுமே அணிவகுப்புக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 1930 ஏப்ரல் 13இல் திருச்சிராப்பள்ளியிலிருந்து தொடங்கி ஏப்ரல் 28 இல் தஞ்சாவூர் மாவட்டத்தின் வேதாரண்யத்தைச் சென்றடைந்தது. இவ்வணிவகுப்புக்கென்றே "கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது, சத்தியத்தின் நித்தியத்தை நம்பும் யாரும் சேருவீர்" எனும் சிறப்புப்பாடலை நாமக்கல் கவிஞர் ராமலிங்கனார் புனைந்திருந்தார். காவல்துறையின் கொடூரமான நடவடிக்கைகளைப் பொருட்படுத்தாமல் அணிவகுத்துச் சென்ற சத்தியாகிரகிகளுக்கு பயணித்த பாதையெங்கும் எழுச்சிமிகு வரவேற்பு அளிக்கப்பட்டது. வேதாரண்யம் சென்றடைந்த பின்னர் ராஜாஜியின் தலைமையில் 12 தொண்டர்கள் உப்புச் சட்டத்தை மீறி உப்பை அள்ளினர். உப்புச் சட்டத்தை மீறியதற்காக ராஜாஜி கைது செய்யப்பட்டார். T.S.S. ராஜன், திருமதி. ருக்மணி லட்சுமிபதி, சர்தார் வேதரத்தினம்,C. சாமிநாதர் மற்றும் K. சந்தானம் ஆகியோர் வேதாரண்யம் உப்புச் சத்தியாகிரகத்தில் பங்கேற்ற ஏனைய முக்கியத் தலைவர்களாவர்.

**தமிழக மாவட்டங்களில் பரவலான போராட்டங்கள்:**

வ். பிரகாசம், மு. நாகேஸ்வர ராவ் ஆகியோர் தலைமையில் சத்தியாகிரகிகள் சென்னைக்கு அருகேயுள்ள உதயவனம் என்ற இடத்தில் ஒரு முகாமை அமைத்திருந்தனர். ஆனால் அவர்கள் காவல் துறையால் கைது செய்யப்பட்டனர். இந்நிகழ்வு சென்னையில் கடையடைப்பிற்கு வழிகோலியது. 1930 ஏப்ரல் 27 இல் திருவல்லிக்கேணியில் காவல்துறையினருடன் மோதல் ஏற்பட்டது. மூன்று மணி நேரம் நடைபெற்ற இம்மோதலில் மூன்று நபர்கள் உயிரிழந்தனர். ராமேஸ்வரத்தில் உப்பு சத்தியாகிரகம் மேற்கொள்ள முயன்ற தொண்டர்கள் கைது செய்யப்பட்டனர். உவரி, அஞ்செங்கோ, வேப்பலோடை, தூத்துக்குடி மற்றும் தருவைக்குளம் ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட இதுபோன்ற முயற்சிகள் தடுத்து நிறுத்தப்பட்டன. மாகாணம் முழுவதிலும் நூற்பாலைத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். பெண்கள் மிகுந்த ஆர்வத்துடன் பங்கேற்றனர். உப்புச்சட்டங்களை மீறியதற்காக அபராதம் கட்டிய முதல் பெண்மணி ருக்மணி லட்சுமிபதியாவார். இயக்கத்தை நசுக்க காவல்துறை கொடுமையான படையைப் பயன்படுத்தியது. 1932 ஜனவரி 26இல், பரவலாக ஆரியா என அழைக்கப்பட்ட பாஷ்யம் புனித ஜார்ஜ் கோட்டையின் உச்சியில் தேசியக்கொடியை ஏற்றினார். சத்தியமூர்த்தி அந்நியத் துணிகளை விற்பனை செய்யும் கடைகளை மறியல் செய்தார். ஊர்வலங்களைத் திட்டமிட்டார். துண்டுப்பிரசுரங்களையும் விநியோகித்தார். N.M.R. சுப்பராமன் மற்றும் கு. காமராஜ் ஆகியோரும் முக்கியப் பங்கு வகித்தனர்.

**திருப்பூர் குமரனின் வீரமரணம்:**

1932 ஜனவரி 11 இல் திருப்பூரில் கொடிகளை ஏந்திய வண்ணம் நாட்டுப்பற்று மிகுந்த பாடல்களைப் பாடிச் சென்ற ஊர்வலத்தினர் காவல்துறையினரால் இரக்கமின்ற அடித்து உதைக்கப்பட்டனர். பரவலாக திருப்பூர் குமரன் என்றழைக்கப்படும் மு.மு.ளு.சு. குமாரசாமி தேசியக் கொடியை உயர்த்திப் பிடித்தவாறே விழுந்து இறந்தார். ஆகையால் இவர் கொடிகாத்த குமரன் என புகழப்படுகிறார். எனவே, ஒத்துழையாமை இயக்கம் சமுதாயத்தின் அனைத்து தரப்பு மக்களின் பங்களிப்புடன் நடைபெற்ற தமிழ்நாட்டின் மிகப்பெரிய மக்கள் இயக்கங்களில் ஒன்றாகும்.

**முதல் காங்கிரஸ் அமைச்சரவை:**

1935 இந்திய அரசாங்கச் சட்டம் மாநில சுயாட்சிக்கு வழி வகுத்தது. சட்டமன்றத்திற்குப் பொறுப்பான அமைச்சர்கள் குழு மாகாண அதிகாரங்களை நிர்வகித்தது. இருந்தபோதிலும் தேர்நதெடுக்கப்பட்ட அரசின் ஆலோசனைகளைப் புறக்கணிக்கும் அதிகாரத்தை ஆளுநர் பெற்றிருந்தார். 1937 ஆம் ஆண்டு தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்றது. நீதிக்கட்சி படுதோல்வி அடைந்தது. தேர்தல்களில் காங்கிரஸ் பெற்ற வெற்றியானது, மக்களிடையே அது பெற்றிருந்த செல்வாக்கைச் சுட்டிக்காட்டியது.

ராஜாஜி முதல் காங்கிரஸ் அமைச்சரவையை அமைத்தார். மது விலக்கைப் பரிசோதனை முயற்சியாக சேலத்தில் அறிமுகம் செய்தார். இதன் மூலம் ஏற்படும் வருவாய் இழப்பை ஈடு செய்ய விற்பனை வரியை அறிமுகப்படுத்தினார். சமூகத் தளத்தில் ஒடுக்கப்பட்டவர்களுக்கும் கோவில்களைத் திறந்து வைத்தார். T. பிரகாசம் மேற்கொண்ட முயற்சியினால் ஜமீன்தார்களின் பகுதிகளைச் சேர்ந்த குத்தகைதாரர்களின் நிலை குறித்து விசாரணை செய்ய விசாரணைக் குழுவொன்று அமைக்கப்பட்டது. இருந்தபோதிலும் கிராமப்புற கடன் பிரச்சனைகளை தீர்பதற்காக கடன் சமரச வாரியங்கள் அமைக்கப்பட்டதைத் தவிர வேறு நடவடிக்கைகள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை. தேர்தெடுக்கப்பட்ட இந்திய அமைச்சரவையைக் கலந்தாலோசிக்காமல் ஆங்கில அரசு இந்தியாவை இரண்டாம் உலகப்போரில் ஈடுபடுத்தியதால் காங்கிரஸ் அமைச்சரவை ராஜினாமா செய்தது.

**மதுரை ஹரிஜன சேவக் சங்கத்தின் தலைவர் வைத்தியநாதர், செயலர் L.N. கோபால்சாமி ஆகியோரால் 1939 ஜுலை 9 இல் மதுரை மீனாட்சியம்மன் கோவிலுக்குள் ஹரிஜன மக்களுடன் நுழையத் திட்டமிடப்பட்டது. ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எதிராக உள்ள குடிமை, சமூகக் குறைபாடுகளை அகற்றுவதற்காக 1939 இல் கோவில் நுழைவு அங்கீகார, இழப்பீட்டுச் சட்டம் இயற்றப்பட்டது.**

## இந்தி எதிர்ப்புப் போராட்டம்:

பள்ளிகளில் இந்தி மொழி கட்டாயப்பாடமாக அறிமுகம் செய்யப்பட்டது. இது ராஜாஜியால் மேற்கொள்ளப்பட்ட ஒரு சர்ச்சைக்குரிய நடவடிக்கையாகும். தமிழ் மொழிக்கும் பண்பாட்டிற்கும் தீங்கு விளைவிக்க, ஆரிய வட இந்தியர்களால் சுமத்தப்பட்ட ஏற்பாடாக இது கருதப்பட்டதால் மக்களிடையே பெரும் மனக்கசப்பை ஏற்படுத்தியது. இதற்கு எதிராக ஈ.வெ.ரா. மிகப்பெரிய பரப்புரையை மேற்கொண்டார். அவர் இந்தி எதிர்ப்பு மாநாடு ஒன்றினை சேலத்தில் நடத்தினார். உறுதியான செயல்பாட்டிற்கான திட்டத்தை இம்மாநாடு வடிவமைத்தது. இந்தி எதிர்ப்புப் போராட்டத்திற்கு ஒடுக்கப்பட்டோர் கூட்டமைப்பும், முஸ்லிம் லீக்கும் ஆதரவளித்தன. தாளமுத்து மற்றும் நடராஜன் எனும் இரண்டு ஆர்வமிக்க போராட்டக்காரர்கள் சிறையில் மரணமடைந்தனர். திருச்சியிலிருந்து சென்னைக்கு ஊர்வலமொன்று திட்டமிடப்பட்டது. பெரியார் உட்பட 1200 போராட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டனர். காங்கிரஸ் அரசு பதவி விலகியதைத் தொடர்ந்து நிர்வாகத்தைக் கைக்கொண்ட சென்னை மாகாண ஆளுநர் இந்தி கட்டாயப் பாடம் என்பதை நீக்கினார்.

## வெள்ளையனே வெளியேறு இயக்கம்:

கிரிப்ஸ் குழுவின் தோல்வியும், போர்க்கால பாற்றாக்குறைகளும், விலையேற்றமும் மக்களிடையே பெரும் மனநிறைவின்மையை ஏற்படுத்தியது. 1942 ஆகஸ்டு 8 இல் வெள்ளையனே வெளியேறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு காந்தியடிகள் ”செய் அல்லது செத்துமடி” எனும் முழுக்கத்தை வழங்கினார். ஒட்டு மொத்த காங்கிரஸ் தலைவர்களும் ஒரே நாள் இரவில் கைது செய்யப்பட்டனர். ஒவ்வொரு ரயில் நிலையத்திலும் காவலர்கள் உள்ளூர் தலைவர்களின் பெயர்ப் பட்டியலை வைத்துக் கொண்டு அவர்கள் ரயிலை விட்டு இறங்கியதும் கைது செய்ததை பாம்பாயிலிருந்து ஊர் திரும்பிக் கொண்டிருந்த கு. காமராஜர் கவனித்தார். காவல் துறையினரின் கண்களில் படாமல் அரக்கோணத்திலேயே இறங்கிவிட்டார். பின்னர் அவர் தலைமறைவாகி வெள்ளையனே வெளியேறு இயக்கத்திற்காக மக்களைத் திரட்டும் பணியை மேற்கொண்டார். துண்டுப்பிரசுரங்களை விநியோகம் செய்து கொண்டிருந்த போது ராஜாஜியும் சத்தியமூர்த்தியும் கைது செய்யப்பட்டனர். தமிழ் நாட்டில் இவ்வியக்கம் பரந்துபட்ட அளவில் நடைபெற்றது. மேலும் அஞ்சல் அலுவலகங்களை தீக்கிரையாக்குவது, தந்திக் கம்பங்களின் கம்பிகளை வெட்டி விடுவது, ரயில் போக்குவரத்திற்கு ஊறு விளைவிப்பது போன்ற வன்முறை நிகழ்வுகளும் அரங்கேறின.

## தீராத மக்கள் இயக்கம்:

இவ்வியக்கத்தில் சமூகத்தின் அனைத்துப் பிரிவினரும் பங்கேற்றனர். பங்கிங்காம் மற்றும் கர்நாட்டிக் மில், சென்னை துறைமுகம், சென்னை மாநகராட்சி மற்றும் மின்சார டிராம் போக்குவரத்து போன்ற இடங்களில் பெருமளவிலான தொழிலாளர் போராட்டங்கள் நடைபெற்றன. வேலூர் மற்றும் பணப்பாக்கம் ஆகிய ஊர்களில் தந்தி, தொலைபேசிக் கம்பிகள் வெட்டப்பட்டதுடன் பொதுக்கட்டங்களுக்கு தீ வைக்கப்பட்டன. பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்கள் இப்போராட்டத்தில் தவிரப் பங்கேற்றனர். சூலூர் விமானநிலையம் தாக்குதலுக்குள்ளானது கோயம்புத்தூரில் ரயில்கள் தடம்புரளச் செய்யப்பட்டன. மதுரையில் காங்கிரஸ் தொண்டர்கள் இராணுவத்துடன் மோதினர். ராஜபாளையம், காரைக்குடி மற்றும் தேவகோட்டை ஆகிய இடங்களில் காவல்துறையினரின் துப்பாக்கிச்சூடு நடைபெற்றது. பெரும் எண்ணிக்கையில் ஆண்களும் பெண்களும் இந்திய தேசிய ராணுவத்தில் (INA) சேர்ந்தனர். வெள்ளையனே வெளியேறு இயக்கம் இரக்கமற்ற முறையில் வன்முறை மூலம் ஒடுக்கப்பட்டது.

ராயல் இந்தியக் கப்பற்படைப் புரட்சியும், இங்கிலாந்தில் புதிதாக ஆட்சிப் பொறுப்பேற்ற தொழிலாளர் கட்சி அரசு தொடங்கிய பேச்சு வார்த்தைகளும் இந்திய விடுதலைக்கு வழிகோலின சோகம் யாதெனில் நாடு இந்தியா, பாகிஸ்தான் என இரண்டாகப் பிரிக்கப்பட்டதுதான். அது குறித்து எட்டாம் பாடத்தில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

# Unit - 10
## தமிழ்நாட்டில் சமூக மாற்றங்கள்

**அறிமுகம்:**

பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பாதியில் ஐரோப்பியர்கள் இந்தியத் துணைக் கண்டத்தின் மீது தங்கள் அரசியல் அதிகாரத்தை நிறுவினார். பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்தியாவை இணைப்பதில் அக்கறை செலுத்திய அவர்கள் இந்தியச் சமூகத்தை மறு ஒழுங்கமைவு செய்தனர். புதிய வருவாய் திட்டங்கள் உருவாக்கப்பட்டன. ஆங்கிலேயரின் பயன்பாட்டுக் கோட்பாடுகள், கிறித்தவ சமய நெறிகள் ஆகியவற்றின் செல்வாக்கிற்கு உட்பட்டிருந்த அவர்கள், இந்திய மக்களின் மீது தங்களது பண்பாட்டு மேலாதிக்கத்தைத் திணிக்கவும் முயன்றனர். இந்தியாவின் உள்நாட்டு மரபுகள், நாகரிகம் பழமையானவைகளாகக் கருதப்பட்டன. இந்தியச் சமூகமானது பழமையானதென்றும் அதில் மனிதர்கள் சாதி, பாலினம், மொழி, நம்பிக்கைகள் ஆகியவற்றின் அடிப்படையில் பாகுபடுத்தப்படுவதாகவும் சித்தரிக்கப்பட்டது.

இந்நிலை இந்தியர்களிடையே எதிர்விளைவினை ஏற்படுத்தியது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த கல்வியறிவு பெற்ற இந்தியர்கள் இந்த அவமானத்தை உணர்ந்தனர். இதற்குப் பதிலளிக்கும் வகையில் தங்கள் சமூகப் பண்பாட்டு அடையாளங்களைக் கடந்த காலத்தினுள் தேடினர். இருந்தபோதிலும் காலனிய விவாதங்களில் சில நியாயங்கள் இருப்பதை உணர்ந்த அவர்கள் சீர்திருத்திக் கொள்ளவும் தயாராயினர். இச்செயல்பாட்டின் முன்னோடிகளுள் ராஜராம் மோகன்ராயும் ஒருவராவார். ரூாய் மற்றும் அவரைப் போன்ற பலரும் சமூகச் சீர்திருத்தவாதிகள் என அறியப்பட்டனர். ஐரோப்பிய பண்பாட்டு மேலாதிக்கத்திற்கு எதிராக அவர்கள் ஒரு சமூகப் பண்பாட்டுச் செயற்களத்தை உருவாக்கிக் கொண்டிருந்தனர். இதன் விளைவே நவீன இந்தியாவின் சமய, சமூக சீர்திருத்த இயக்கங்களுக்கு வழிகோலியது. இக்குறிப்பிட்ட வரலாற்று வளர்ச்சி நிகழ்வு "இந்திய மறுமலர்ச்சி" என அடையாளப்படுத்தப்பட்டது.

மறுமலர்ச்சியானது ஒரு கருத்தியல் பண்பாட்டு நிகழ்வாகும். அது நவீனம், பகுத்தறிவு, சமூகத்தின் முற்போக்கான இயக்கம் ஆகியவற்றுடன் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ளது. திறனாய்வுச் சிந்தனை அதன் வேர்களில் உள்ளது. மானுடப் பகுத்தறிவுடைமையையும் சமத்துவத்தையும் மையமாகக் கொண்ட ஒரு தத்துவ மரபாக இருப்பது அதன் சிறப்பியல்பாகும். மனிதநேயமும், மனிதர்களுக்கு அவர்களின் கண்ணியத்தை மறுக்கிற அடிப்படைவாத மத நடவடிக்கைகளைக் கேள்விக்குள்ளாக்குவதும், மறுமலர்ச்சியின் அகத்தூண்டுதல்களாகும். மனிதநேயம் எனும் இச்சித்தாந்தம், சமூக வாழ்வு மற்றும் அறிவு ஆகிய துறைகளோடு மொழி, இலக்கியம், தத்துவம், இசை, ஓவியம், கட்டடக்கலை இன்னபிற போன்ற அனைத்துத் துறைகளிலும் படைப்பாற்றலைத் தூண்டி எழுப்பியது.

**தமிழ் மறுமலர்ச்சி:**

காலனியத்தின் பண்பாட்டு ஆதிக்கமும் மனிதநேயத்தின் எழுச்சியும் இந்தியத் துணைக்கண்டத்தின் சமூகப் - பண்பாட்டு வாழ்வில் பல மாற்றங்களைக் கொண்டு வந்தது. நவீன தமிழ்நாடும் அத்தகைய வரலாற்று மாற்றத்தை அனுபவித்தது. தமிழ் மொழி மற்றும்ட கலாச்சாரம் அவர்களின் அடையாள கட்டுமானத்தில் குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டிருந்தன. அச்சு இயந்திரத்தின் அறிமுகமும், திராவிட மொழிகளின் மீது மேற்கொள்ளப்பட்ட மொழியியல் ஆய்வுகளும் மற்றும் பலவும் தமிழ் மறுமலர்ச்சி செயல்பாடுகளுக்கு அடியுரமாய் விளங்கின. அச்சு இயந்திரத்தின் வருகைக்குப் பின்னர் வந்த தொடக்க ஆண்டுகளில் சமயம் சார்ந்த நூல்களை வெளியிடும் முயற்சிகளே பெருமளவில் மேற்கொள்ளப்பட்டன. நாளடைவில் படிப்படியாக நிலைமைகள் மாறின. சமயச்சார்பற்ற எனச் சொல்லத்தகுந்த நூல்களும் வெளியிடுவதற்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

**அச்சு தொழில்நுட்பத்தின் வருகை:**

ஐரோப்பிய மொழிகள், தவிர்த்து அச்சில் ஏறிய மொழிகளில் முதல் மொழி தமிழ் மொழியாகும். மிக முன்னதாக 1578 இல் தம்பிரான் வணக்கம் எனும் தமிழ் புத்தகம் கோவாவில் வெளியிடப்பட்டது. 1709-இல் முழுமையான அச்சகம் சீகன்பால்கு என்பவரால் தரங்கம்பாடியில்

நிறுவப்பட்டது. தொடக்ககால தமிழ் இலக்கிய நூல்களில் ஒன்றான திருக்குறள் 1812-ல் வெளியிடப்பட்டது. இதன் விளைவாக இக்காலப் பகுதியில் மிகவும் பழமையான செவ்வியல் தமிழ் இலக்கியங்களை வெளியிடுவதில் தமிழ் அறிஞர்களிடையே புத்தெழுச்சி ஏற்பட்டது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் அறிஞர்களான சி.வை.தாமோதரனார் (1832-1901) உ.வே.சாமிநாதர் (1855-1942) போன்றவர்கள் தமிழ்ச்செவ்வியல் இலக்கியங்களை மீண்டும் கண்டறிவதற்காகத் தங்கள் வாழ்நாள் முழுவதையும் செலவழித்தனர். சி.வை.தாமோதரனார் பனையோலைகளில் கையால் எழுதப் பெற்றிருந்த பல தமிழ் இலக்கண, இலக்கிய நூல்களைப் பதிப்பித்தார். அவர் பதிப்பித்த நூல்களில் தொல்காப்பியம், வீரசோழியம், இறையனார் அகப்பொருள், இலக்கண விளக்கம், கலித்தொகை மற்றும் சூளாமணி ஆகியவை அடங்கும். தமிழறிஞர் மீனாட்சி சுந்தரனாரின் மாணவரான உ.வே. சாமிநாதர் செவ்வியல் தமிழ் இலக்கிய நூல்களான சீவகசிந்தாமணி (1887), பத்துப்பாட்டு (1889), சிலப்பதிகாரம் (1892), புறநானூறு (1894), புறப்பொருள் வெண்பா மாலை (1895), மணிமேகலை (1898), ஐங்குறுநூறு (1903), பதிற்றுப்பத்து (1904) ஆகியவற்றை வெளியிடும் முயற்சிகளை மேற்கொண்டார். இது தமிழ் மக்களுக்கு தங்களது பாரம்பரியம் குறித்து வியப்பைத் தந்தது. ஆகவே பண்டைய செவ்வியல் இலக்கியங்கள் மீண்டும் கண்டறியப்பட்டதையும் அவை வெளியிடப்பட்டதையும் தமிழ் மறுமலர்ச்சியின் அடித்தளமாகக் கருதலாம்.

இவ்வாறு பழம்பெரும் நூல்கள் வெளியிடப்பட்டது தமிழ் மக்களிடையே தங்கள் வரலாறுமரபு, மொழி, இலக்கியம் மற்றும் சமயம் ஆகியவை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தியது. நவீனத் தமிழர்கள் தங்களது சமூகப் பண்பாட்டு அடையாளங்களை, பண்டைய தமிழ் செவ்வியல் இலக்கியங்கள் வாயிலாக கண்டறிந்தனர். அவை மொத்தத்தில் சங்க இலக்கியங்கள் என்றழைக்கப்படுகின்றன. மொழியியலாளர்களும், வரலாற்று அறிஞர்களும் தமிழ் அறிஞர்களும் தமிழ்ப் பண்பாட்டின் தனித்தன்மையை அங்கீகரித்துள்ளனர். அவை தமிழ் நிலப்பகுதிக்குள் ஆரியர்கள் வருவதற்கு முன்பாகவே ஒரு தனியான, சுதந்திரமான இருப்பைப் பெற்றிருந்தது.

1816-இல் புனித ஜார்ஜ் கோட்டையில் கல்லூரியினை நிறுவிய F.W. எல்லிஸ் (1777-1819), தென்னிந்திய மொழிகள் தனிப்பட்ட மொழிக்குடும்பத்தை சார்ந்தவை, அவை இந்தோ-ஆரியக்குடும்ப மொழிகளோடு தொடர்பில்லாதவை எனும் கோட்பாட்டை உருவாக்கினார். ராபர்ட் கால்டுவெல் (1814-1891) திராவிட அல்லது தென்னிந்திய மொழிகளின் ஒப்பீட்டு இலக்கணம் எனத் தலைப்பிடப்பட்ட நூலில் இக்கோட்பாட்டை 1856இல் விரிவுபடுத்தினார். திராவிட மொழிகளுக்கிடையில் நெருக்கமான ஒப்புமை இருப்பதையும் அடிப்படையான ஒப்புமை சமஸ்கிருதத்துடன் இல்லை என்பதையும் நிறுவினார். மேலும் தமிழின் தொன்மையையும் நிலைநாட்டினார்.

இக்காலகட்டத்தைச் சேர்ந்த அறிவார்ந்த தமிழர்கள் தமிழ் / திராவிட /சமஸ்கிருதம் /ஆரியம் / பிராமணியம் ஆகிய இரண்டுக்குமிடையேயுள்ள அடிப்படை வேறுபாடுகளை அடையாளம் கண்டுகொண்டனர். அவர்கள் தமிழ்மொழியே திராவிடர்களின் மொழியென்றும் தமிழர்கள் பிராமணர்கள் அல்ல என்றும்ட அவர்களின் சமூக வாழ்வில் சாதிகளில்லை, பாலின வேறுபாடில்லை, சமத்துவம் நிலவியது எனவும் வாதிட்டனர். தமிழ்நாட்டில் திராவிட உணர்வு தோன்றி வளர்வதற்கு தமிழ் மறுமலர்ச்சி பங்களிப்பைச் செய்தது. இச்சிந்தனைகள் பி.சுந்தரனாரால் (1855-1897) எழுதப்பெற்ற மனோன்மணியம் எனும் நாடக நூலில் இடம் பெற்றுள்ள தமிழ்மொழி வாழ்த்துப் பாடலில் மெய்பிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மறுமலர்ச்சி பிராமணியத்தின் பண்பாட்டு மேலாதிக்கத்தைக் கேள்விக்குள்ளாக்கியது. இப்போக்குகள் கலைகளிலும் இலக்கியங்களிலும் சமயத்திலும் பிரதிபலித்தது. வள்ளலார் எனப் பிரபலமாக அறியப்பட்ட ராமலிங்க அடிகள் (1823-1874) நடைமுறையிலிருந்த இந்து சமய பழமைவாதத்தை கேள்விக்குள்ளாக்கினார். ஆபிரகாம் பண்டிதர் (1859-1919) தமிழ் இசைக்குச் சிறப்புச் செய்ததோடு தமிழ் இசை வரலாறு குறித்து நூல்களையும் வெளியிட்டார். சி.வை.தாமோதரனார், உ.வே.சாமிநாதர், திரு.வி.கல்யாண சுந்தரம் (1883-1953), பரிதிமாற் கலைஞர் (1870-1903), மறைமலையடிகள் (1876-1950), சுப்பிரமணிய பாரதி (1882-1921), ச.வையாபுரி (1891-1956), கவிஞர் பாரதிதாசன் (1891-1964) ஆகியோர் தங்களுக்கே உரித்தான வழிகளில், தங்களின் எழுத்துக்கள் மூலம் தமிழ் இலக்கியத்தின் புத்தெழுச்சிக்குப் பங்களிப்பு செய்தனர். இதே சமயத்தில், பௌத்தத்திற்குப் புத்துயிரளித்த ஒரு தொடக்ககால முன்னோடியான M. சிங்காரவேலர்

(1860-1946) காலனிய சக்தியை எதிர்கொள்வதற்காக பொதுவுடமைவாதத்தையும் சமத்துவத்தையும் வளர்த்தார். பண்டிதர் அயோத்திதாசரும் (1845-1914) பெரியார் ஈ.வெ.ராமசாமியும் (1879-1973) சமூகநீதியாக உரிமைகள் மறுக்கப்பட்ட, ஒதுக்கப்பட்ட மக்கள் பிரிவினரின் உரிமைகளுக்காகப் பகுத்தறிவுச் சித்தாந்தத்தை உயர்த்திப் பிடித்தனர். இத்துடன் இருபதாம் நூற்றாண்டின் தமிழ்மொழி இயக்கங்களான தனித்தமிழ் இயக்கம் மற்றும் தமிழ் இசை இயக்கம் போன்றவைகள் சமஸ்கிருதத்தின் செல்வாக்கிற்கு ஆட்படாத தூய தமிழை உருவாக்குவதில் தாக்கத்தை ஏற்படுத்தின.

**பரிதிமாற் கலைஞர்: (வி.கோ.சூரிய நாராயண சாஸ்திரி)**

வி.கோ.சூரிய நாராயண சாஸ்திரி (1870-1903) மதுரை அருகே பிறந்தார். சென்னை கிறித்தவக் கல்லூரியில் தமிழ் பேராசிரியராகப் பணியாற்றினார். தமிழின் மீது சமஸ்கிருதம் கொண்டிருந்த செல்வாக்கை அடையாளம் கண்ட தொடக்க காலத் தமிழ் அறிஞர்களில் ஒருவர். ஆதனால் தனக்கே பரிதிமாற் கலைஞர் என தூய தமிழ்ப் பெயரைச் சூடிக் கொண்டவர். தமிழ் மொழி ஒரு செம்மொழி என்றும், எனவே சென்னைப் பல்கலைக்கழகம் தமிழை ஒரு வட்டாரமொழியென அழைக்கக் கூடாதென முதன்முதலாக வாதாடியவர் அவரே. மேற்கத்திய இலக்கிய மாதிரிகள் மீது இவர் கொண்டிருந்த தாக்கத்தின் விளைவாக 14 வரிச்செய்யுள் வடிவத்தை தமிழுக்கு அறிமுகம் செய்தார். மேலும் இவர் நாவல்களையும் நாடகங்களையும் அதிக எண்ணிக்கையிலான அறிவியல் கட்டுரைகளையும் எழுதினார். ஆனால் வருந்தத்தக்க முறையில் 33 ஆண்டுகளே நிறைவு பெற்றிருந்த அவர் இளம் வயதில் இயற்கை எய்தினார்.

**மறைமலை அடிகள்:**

மறைமலை அடிகள் (1876-1950) தமிழ் மொழியியல் தூய்மைவாதத்தின் தந்தை என்றும் தனித்தமிழ் இயக்கத்தை (தூய தமிழ் இயக்கம்) உருவாக்கியவர் எனவும் கருதப்படுகின்றார். சங்க இலக்கிய நூல்களான பட்டினப்பாலை, முல்லைப்பாட்டு ஆகியவற்றிற்கு விளக்கவுரை எழுதியுள்ளார். ஆவர் இளைஞராக இருந்த போது சித்தாந்த தீபிகா எனும் பத்திரிகையில் பணிபுரிந்தார். பின்னர் சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் தமிழாசிரியராகப் பல ஆண்டுகள் பணியாற்றினார். பிராமணர் அல்லாதோர் இயக்கத்தின் மீது பற்றுக் கொண்டார். அவருடைய ஆசிரியர்களான பி.சுந்தரனார், சோமசுந்தர நாயகர் ஆகிய இருவரும் அவருடைய வாழ்க்கையில் முக்கியச் செல்வாக்கு செலுத்தியோராவர்.

**தனித்தமிழ் இயக்கம்:**

தூய தமிழ் வார்த்தைகளைப் பயன்படுத்துவதையும் சமஸ்கிருதத்தின் செல்வாக்கு தமிழ் மொழியிலிருந்து அகற்றப்படுவதையும் மறைமலை அடிகள் ஊக்குவித்தார். இவ்வியக்கம் தமிழ்ப் பண்பாட்டின் மீது குறிப்பாக தமிழ் மொழி, இலக்கியம் ஆகியவை மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. தமிழ் மொழியின் மீது செல்வாக்குச் செலுத்தும் வேற்று மொழி வார்த்தைகளை அடையாளங்கண்டு அவற்றை அகற்றுகின்ற செயல்பாடு பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலேயே தொடங்கப்பட்டிருந்தாலும் தனித் தமிழ் இயக்கம் தொடங்கியது 1916 எனப் பொதுவாக் கூறப்படுகிறது. முறைமலை அடிகளாரின் மகள் நீலாம்பிகை இவ்வியக்கம் உருவாக்கப்பட்டதில் முக்கியப் பங்கு வகித்தார். வேதாச்சலம் என்ற தனது பெயரை அவர் தூய தமிழில் மறைமலை அடிகள் என மாற்றிக்கொண்டார். அவருடைய ஞானசாகரம் எனும் பத்திரிக்கை அறிவுக்கடல் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. அவருடைய சமரச சன்மார்க்க சங்கம் எனும் நிறுவனம் பொது நிலைக் கழகம் என்று பெயரிடப்பட்டது. இவ்வியக்கம் தமிழ் சமுதாயத்திலிருந்த இந்தி, சமஸ்கிருதம் மற்றும் பிராமண மேலாதிக்கத்தை விமர்சித்தது. தமிழ் சொற்களுக்குள் புகுந்துவிட்ட சமஸ்கிருதச் சொற்களுக்கு இணையான பொருள்தரக்கூடிய தமிழ்சொற்களடங்கிய அகராதி ஒன்றை நீலாம்பிகை தொகுத்தார். இவ்வியக்கம் பிற்காலத்தில் தமிழ் சமூகத்திலிருந்த பிராமணிய மற்றும் சமஸ்கிருத மரபுகளை எதிர்கொண்ட சமூக இயக்கங்களுக்கு வழிவகுத்தது.

**திராவிட இயக்கத்தின் எழுச்சி:**

இந்தியாவில் பிராமணயர்கள் தங்களது பிறப்பின் அடிப்படையில் சிறந்த சமூக அந்தஸ்தை அனுபவித்தனர் மேலும் மிகப்பெரும் சமூக முன்னுரிமைகளையும் பெற்றிருந்தனர். சென்னை

மாகாணத்தில் சமூகத்தின் அனைத்துத் துறைகளிலும் குறிப்பாக அரசியல், கல்வி மற்றும் அரசாங்க வேலைவாய்ப்புகளிலும் அவர்களே ஆதிக்கம் செலுத்தினார். 1911 ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி சென்னை மாகாண மக்கள்தொகையில் பிராமணர்களின் எண்ணிக்கை 3 விழுக்காட்டிற்கு சற்றே அதிகமாயும் பிராமணரல்லாதோரின் எண்ணிக்கை 90 விழுக்காடெனவும் காட்டியது. மேலும் 1901 முதல் 1911 வரையிலான பத்தாண்டுகளில் சென்னைப் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பு முடித்த பிராமணர் எண்ணிக்கை 4074 ஆகவும் அதே பிராமணரல்லாதோரின் எண்ணிக்கை 1035 ஆகவும் இருந்தது. அன்று எவ்வாறு மக்கள்தொகை வகைப்படுத்தப்பட்டிருந்ததோ அதனடிப்படையில் ஏனைய குழுக்களைச் சார்ந்த 306 இந்தியக் கிறித்தவர்களையும் 69 முகமதியர்களையும் 225 ஐரோப்பிய மற்றும் யூரேசியர்களையும் உள்ளடக்கியிருந்தது.

இத்தகைய சூழலில் திராவிட இயக்கம் பிராமண மேலாதிக்கத்திற்கு எதிராகப் பிராமணர் அல்லாதவர்களைப் பாதுகாக்கும் இயக்கமாக உதயமானது. 1909இல் பிராமணர் அல்லாத மாணவர்களுக்கு உதவி செய்வதற்காக மதராஸ் பிராமணரல்லாதோர் சங்கம் என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. 1912இல் டாக்டர் சி.நடேசனார் எனும் மருத்துவர் மதராஸ் ஐக்கிய கழகம் எனும் அமைப்பை உருவாக்கினார் இது பின்னாளில் மதராஸ் திராவிடர் சங்கம் என்று மாறியபின் திராவிடர்களின் மேம்பாட்டிற்கான உதவிகளைச் செய்தது. பிராமணர் அல்லாத பட்டதாரிகளுக்கு உதவுவது அவர்களைக் கற்கவைப்பது அகியவற்றோடு அவர்களது குறைபாடுகள் குறித்து விவாதிக்க முறையான கூட்டங்களையும் நடத்தியது. இதே சமயத்தில் நடேசனார் தங்கும் விடுதி வசதியில்லாததால் பிராமணரல்லாத மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டதால் அதைச் சரிசெய்யும் வகையில் திருவல்லிக்கேணியில் (சென்னை) ஜூலை 1916 இல் திராவிட இல்லம் என்ற பெயரில் ஒரு தங்கும் விடுதியை நிறுவினார். மேலும் பிராமணர் அல்லாத மாணவர்களின் நலன் கருதி இவ்வில்லம் ஒரு இலக்கிய அமைப்பையும் கொண்டிருந்தது.

**தென்னிந்திய நல உரிமைச்சங்கம் (நீதிக்கட்சி)**

முதல் உலகப்போர் நடந்து கொண்டிருந்த நிலையில் ஆங்கில அரசாங்கம் போருக்குப் பின்னர் இந்தியாவில் பிரதிநிதித்துவ அமைப்புகளை அறிமுகம் செய்வது குறித்து பரிசீலனை செய்து கொண்டிருந்தது. அப்படிப்பட்ட அரசயில் சீர்திருத்தங்கள் பிராமணர்களின் அரசியல் அதிகாரத்தை மேலும் வலுவடையச் செய்யும் என அஞ்சிய கல்வி கற்ற பிராமணர் அல்லாதவர்கள் தங்களை அரசியல் ரீதியாக அணிதிரட்டிக் கொள்ள முடிவு செய்தனர். 1916 நவம்பர் 20 இல் டாக்டர் நடேசனார், சர்.பிட்டி தியாகராயர், டி.எம்.நாயர் மற்றும் அலமேலுமங்கை தாயாரம்மாள் உட்பட 30 முக்கிய பிராமணர் அல்லா தலைவர்கள் தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தை (South Indian Liberal Federation) உருவாக்க ஒருங்கிணைந்தனர். இதே சமயம் 1916 டிசம்பரில், விக்டோரியா பொது அரசங்கில் நடைபெற்ற கூட்டமொன்றில் பிராமணரல்லாதோர் அறிக்கை வெளியிடப்பட்டது. இவ்வறிக்கை பிராமணரல்லாத சமூகங்களின் கருத்துகளைத் தெளிவுபடக்கூறியது. மேலும் சென்னை மாகாணத்தின் பிராமணரல்லாதோர்களின் பொதுவான நிலையை அளவீடு செய்தது.

இவ்வமைப்பு தொடங்கி வெளியிட்ட மூன்று செய்தித்தாள்களாவன: கட்சியின் கொள்கைகளைப் பரப்புரை செய்வதற்காகத் தமிழில் திராவிடன், ஆங்கிலத்தில் ஜஸ்டிஸ், தெலுங்கில் ஆந்திர பிரகாசிகா ஆகிய பத்திரிக்கைகளை வெளியிட்டது.

**பிராமணர் அல்லாதோர் அறிக்கையில் “சென்னை மாகாணத்திலுள்ள 4 கோடியே 1 ½ லட்சம் மக்களில் 4 கோடிகளுக்கு குறைவில்லாதவர்கள் பிராமணர் அல்லாதவர்களே, சென்னை மாகாணத்தின் அரசியல் சூழல் அவர்களை தங்களுக்கு உரிமையுள்ள பங்கினை எடுத்துக் கொள்ள இடமளிக்கவில்லை” என சுட்டிக் காட்டியது. மேலும் “ஆங்கில அரசின் உண்மையான நீதி மேலும் வாய்ப்புகளுக்கான சமத்துவம்” எனும் ஆங்கிலேயக் கொள்கைகளின்படி நடைபெறும் அரசே இந்தியர்களின் நலன்களுக்கு உகந்தது என வாதிட்டு “நாங்கள் ஆங்கிலேய அரசை ஆழமாக நேசிக்கிறோம் விசுவாதத்துடன் பற்றுக் கொண்டுள்ளோம்” என்று அறிவித்தது.**

மாகாண அரசுகளில் இரட்டையாட்சி முறையை அறிமுகம் செய்த பின்னர் மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தங்களின் அடிப்படையில் 1920இல் முதல் தேர்தல் நடைபெற்றது. நீதிக்கட்சி தேர்தலில்

பெற்றிபெற்று இந்தியாவின் முதல் அமைச்சரவையை சென்னையில் அமைத்தது. A. சுப்பராயலு சென்னை மாகாணத்தின் முதலமைச்சரானார். மேலும் நீதிக்கட்சி 1920-1923 மற்றும் 1923-1926 ஆகிய ஆண்டுகளில் அரமைத்தது. காங்கிரஸ் கட்சி சட்டமன்றத்தைப் புறக்கணித்த சூழலில் நீதிக்கட்சி 1937 இல் தேர்தல் நடைபெறும் வரை ஆட்சி தொடர்ந்து நீடித்தது. 1937 தேர்தல்களில், முதல்முதலாகப் பங்கேற்ற இந்திய தேசிய காங்கிரஸ் நீதிக்கட்சியை படுதோல்வி அடையச் செய்தது.

**திட்டங்களும் செயல்பாடுகளும்:**

நீதிக்கட்சியே நாட்டில் பிராமணர் அல்லாதவர்களின் மூலாதாரமாய் விளங்கிற்று. நீதிக்கட்சி அரசாங்கம் மக்கள்தொகையில் பெரும்பாலானவர்களுக்கு கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளை விரிவுபடுத்தி அரசியல் தளத்தில் அவர்களுக்கென அடத்தை உருவாக்கியது. தமிழ்நாட்டினுடைய சமூகநீதி மரபுத்தொடர்ச்சியானது தனது இருப்புக்கு, நீதிக்கட்சி உருவாகி வளர்ந்து ஆட்சியிலிருந்த ஆண்டுகளுக்குக் கடமைப்பட்டுள்ளது.

சாதி மறுப்புத் திருமணங்களைக் கட்டுப்படுத்திய சட்டச் சிக்கல்களை நீதிக் கட்சியினர் அகற்றியதோடு பொதுக் கிணறுகளையும் நீர் நிலைகளையும் ஒடுக்கப்பட்ட பிரிவு மக்கள் பயன்படுத்துவதை தடுத்த தடைகளைத் தகர்த்தனர். ஒடுக்கப்பட்ட பிரிவு குழந்தைகள் பொதுப்பள்ளிகளில் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டுமென நீதிக்கட்சியின் அரசு ஆணை பிறப்பித்தது. இச்சமூகக் குழுக்களைச் சேர்ந்த மாணவர்களுக்கென 1923இல் தங்கும் விடுதிகள் உருவாக்கப்பட்டன. நீதிக்கட்சியின் கீழிருந்த அம்மையார் சட்டமன்றம்தான் முதன் முதலாக தேர்தல் அரசியலில் பெண்கள் பங்கேற்பதை 1921-இல் அங்கீகரித்தது. இத்தீர்மானம் பெண்களுக்கென இடத்தை ஏற்படுததியதால் 1926-இல் முத்துலட்சுமி அம்மையார் இந்தியாவின் முதல் பெண் சட்டமன்ற உறுப்பினராக முடிந்தது.

பல்வேறு சமூகங்களுக்கான இட ஒதுக்கீட்டை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக நீதிக்கட்சி வகுப்புவாரி பிரதிநிதித்துவம் தொடர்பான சட்டங்களை இயற்றும் பணிகளை மேற்கொண்டது. சமூக நீதியை நிலைநாட்டுவதின் ஒரு பகுதியாக பல்வேறு சாதிகளையும் சமூகங்களையும் சார்ந்தவர்களுக்கு அரசுப் பணிகளில் சேர்வதற்கு சமமான வாய்ப்புகளை உறுதி செய்யும் பொருட்டு இரண்டு வகுப்புவாரி அரசாணைகள் (1921 செப்டம்பர் 16 மற்றும் 1922 ஆகஸ்ட் 15) இயற்றப்பட்டன. நிர்வாக அதிகாரங்களை அனைத்து சமூகத்தினரும் பங்கிட்டுக் கொள்வதை ஊக்குவிக்கும் வண்ணம், அரசு அதிகாரிகளைத் தேர்வு செய்ய 1924-இல் பணியாளர் தேர்வு வாரியத்தை நீதிக்கட்சி அமைத்தது. இம்முறையைப் பின்பற்றி பிரிட்டிஷ் இந்திய அரசு 1929 இல் பொதுப் பணியாளர் தேர்வாணையத்தை உருவாக்கியது.

இவைகள் தவிர சமய நிறுவனங்களை சீர்திருத்துவதிலும் நீதிக்கட்சி கவனம் செலுத்தியது. தமிழ்நாடு பெரும் எண்ணிக்கையிலான கோவில்களைக் கொண்டுள்ளது. அவை பெரும் செல்வவளத்தைப் பெற்றிருந்தன. பொதுவாக இச்சொத்துக்கள் அனைத்தும் சமூகத்தின் உயர்சாதியினரின் முற்றுரிமையில் சுரண்டப்பட்டன. மேலும் இது பொதுச்சொத்துக்கள் தவறாக நிர்வகிக்கப்படுவதற்கு வழி கோலியது. நீதிக்கட்சி 1926-இல் இந்து சமய அறநிலையச் சட்டத்தை இயற்றியது. அதன்படி எந்தவொரு தனிநபரும், சாதிவேறுபாடின்றி கோவில்களின் நிர்வாகக் குழுக்களில் உறுப்பினராகவும் கோவிலின் சொத்துக்களை நிர்வகிக்கவும் வழிவகை செய்யப்பட்டது.

**சுயமரியாதை இயக்கம்:**

சுயமரியாதை இயக்கம் (Self Respect Movement) அன்று நிலவிய சமூக, அரசியல் மற்றும் பொருளாதார உறவுகளில் இருந்த சீர்கேடுகளை விமர்சனம் செய்ததோடு தமிழ்நாட்டில் பிராமணர் அல்லாதவர்களின் மேம்பாட்டிற்கான ஒரு திட்டத்தையும் அறிமுகம் செய்தது. சமூகத்தின் ஒதுக்கப்பட்ட மக்கள் பிரிவினரின் மீது அக்கறை கொண்ட இவ்வியக்கம் பிராமணர்களையம் அவர்களின் பண்பாட்டு மேலாதிக்கத்தையும் விமர்சனம் செய்தது. சடங்குகளும் சம்பிரதாயங்களும் இல்லாத சாதிகளற்ற பிறப்பின் அடிப்படையிலான பாகுபாடற்ற ஒரு சமூகத்தை இவ்வியக்கம் ஆதரித்தது. பகுத்தறிவும் சுயமரியாதையும் அனைத்து மனிதர்களின் பிறப்புரிமை எனப் பிரகடனம் செய்த இவ்வியக்கம் சுயாட்சியைக் காட்டிலும் இவை முக்கியமானவை எனும் கருத்தை உயர்த்திப்

பிடித்தது. பெண்களின் தாழ்வான நிலைக்கு எழுத்தறிவின்மையே காரணம் என அறிவித்த அவ்வியக்கம் அனைவருக்கும் கட்டாயத் தொடக்கக் கல்வியை வழங்கும் பணிகளை மேற்கொண்டது. பெண்களை அதிகாரம் உள்ளவர்களாக மாற்றுவதற்கு இயக்கம் நடத்திய சுயமரியாதை இயக்கத்தினர் சமூகத்தில் நிலவிய மூடநம்பிக்கைகளைக் கேள்விகளுக்கு உட்படுத்தினர்.

இவ்வியக்கம் பெண் விடுதலை கோருதல், மூடநம்பிக்கைகளை நீக்குதல் மற்றும் பகுத்தறிவை வலியுறுத்துதல் போன்ற கோரிக்கைகளை கோரியது. மேலும் இவ்வியக்கம் சீர்திருத்தத் திருமணம் அல்லது சுயமரியாதைத் திருமணங்களை ஆதரித்தது. சுயமரியாதை இயக்கச் சொற்பொழிவுகளின் மையப் பொருளாக இருந்தது 'இனம்' ஆகும். திராவிட மக்களுடைய நீண்டகால வரலாற்றின் போக்கில் திராவிட மக்கள் ஆரிய பிராமணர்களால் திட்டமிட்டு ஒடுக்கப்பட்டதாக அச்சொற்பொழிவுகளில் விவாதிக்கப்பட்டன.

சுயமரியாதை இயக்கம் பிராமணர் அல்லாத இந்துக்களின் நலன்களுக்காக மட்டுமல்லாமல் இஸ்லாமியர்களின் நலனுக்காகவும் போராடியது. இஸ்லாமின் மேன்மை மிகுந்த கோட்பாடுகளான சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றை சுயமரியாதை இயக்கம் பாராட்டியது. இந்து சமூகத்தின் ஒடுக்கப்பட்ட பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் இஸ்லாத்தில் இணைவதன் மூலம் சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் அடைகிறார்கள் என்று கருதியது. முஸ்லீம் உயர்குடியினர் தமிழ்நாட்டு முஸ்லீம்களை திராவிடர்களாகவே கருதினர். இருந்தபோதிலும் முஸ்லீம் பெண்கள் பர்தா அணிவது போன்ற சில பழக்கங்களை பெரியார் விமர்சனம் செய்யத் தயங்கவில்லை. இஸ்லாம் சமூகத்தில் சீர்திருத்த முன்முயற்சிகள் மேற்கொண்ட துருக்கியைச் சேர்ந்த முஸ்தபா கமால் பாட்சா, ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த அமானுல்லா ஆகியோரை திராவிட முஸ்லீம்கள் பின்பற்ற வேண்டுமென பெரியார் கூறினார்.

**பெரியார் ஈ.வெ.ரா:**

பெரியார் ஈ.வெ. ராமசாமி (1879-1973) சுயமரியாதை இயக்கத்தை தோற்றுவித்தவர் ஆவார். இவர் ஈரோட்டை சேர்ந்த செல்வந்தரும் வணிகருமான வெங்கடப்பர் சின்னத்தாயம்மாள் ஆகியோரின் மகனாவார். ஓரளவு முறையான கல்வியைக் கற்றிருந்தாலும் தன் தந்தையால் ஆதரிக்கப்பட்ட அறிஞர்களுடன் விமர்சன விவாதங்களில் ஈடுபடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். இளைஞராக இருந்தபோது ஒருமுறை வீட்டைவிட்டு வெளியேறிய அவர் பல மாதங்கள் வாரணாசியிலும் ஏனைய சமயம் சார்ந்த மையங்களிலும் தங்கியிருந்தார். வைதீக இந்து சமயத்தின் மீது அவர் கொண்டிருந்த நம்பிக்கைகளைத் தகர்த்தன. வீடு திரும்பிய அவர் சில காலம் குடும்பத் தொழிலான வணிகத்தை கவனத்து வந்தார். அவருடைய சுயநலமற்ற பொதுச் சேவைகளும், தொலைநோக்குப் பார்வையும் அவரை புகழ்பெற்ற ஆளுமை ஆக்கன. ஈரோட்டின் நகரசபைத் தலைவர் பதவி (1918-1919) உட்பட பல பதவிகளையும் அவர் வகித்தார்.

1917 க்குப் பின்னர் பிராமணரல்லா நீதிக் கட்சியின் எழுச்சிக்குப் பின்னர் சி.ராஜாஜியின் முன் முயற்சியினால் பெரியார் மற்றும் பி.வரதராஜுலு போன்ற பிராமணரல்லாத தலைவர்களும் காங்கிரஸ் கட்சியில் சேர்க்கப்பட்டனர். ஒத்துழையாமை இயக்கத்திற்கு (1920-1922) ஆதரவாகத் தான் வகித்துவந்த அனைத்து அரசுப் பொறுப்புகளையும் அவர் ராஜினாமா செய்தார். லாபம் தரும் தனது வணிகத்தைக் கைவிட்டு செயலார்வமிக்க காங்கிரஸ் உறுப்பினர் ஆனார். காதிக்கு துணைநின்ற அவர் தமிழகத்தின் வீதிகளிலே கதர் விற்பனை செய்தார். மது விலக்கு இயக்கத்திற்கு ஆதரவாகத் தனது தோப்பிலிருந்து 500 தென்னை மரங்களை வெட்டினார். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் செயலராகவும் தலைவராகவும் பொறுப்பு வகித்தார்.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக பெரியார் பதவி வகித்தபோது ஒடுக்கப்பட்ட மக்களின் கோவில் நுழைவு உரிமை குறித்த தீர்மானம் ஒன்றை முன்மொழிந்தார். சாதி தர்மம் என்ற பெயரில் ஒடுக்கப்பட்ட பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் கோவிலுக்குள்ளும் அதைச்சுற்றியுள்ள வீதிகளிளும் நுழைவது மறுக்கப்பட்டிருந்தது. இப்படிப்பட்ட நடைமுறையினை வைக்கம் (திருவாங்கூர் சமஸ்தானத்தின் ஒரு சுதேசி அரசு, தற்போதைய கேரள மாநிலத்திலுள்ள ஒரு நகரம்) மக்கள் எதிர்த்தனர். எதிர்ப்பின் தொடக்கக் கட்டங்களில் மதுரையைச் சேர்ந்த ஜார்ஜ் ஜோசப் பெரும்பங்கு வகித்தார். உள்ளூர் தலைவர்கள் கைது செய்யப்பட்ட பின்னர் பெரியார் இந்த இயக்கத்திற்கு தலைமையேற்றதால் சிறையிலடைக்கப்பட்டார். மக்கள் அவரை வைக்கம் வீரர் எனப் பாராட்டினார். இதே சமயத்தில் சேரன்மாதேவி குருகுலப் பள்ளியில், உணவு உண்ணும் அறையில்

சாதி அடிப்படையிலான பாகுபாடு நிலவுவதைக் கேள்வியுற்று மனவருத்தமடைந்தார். இக்குருகுலம் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் நிதியுதவியில் வ.வே.சுப்பிரமணியம் எனும் காங்கிரஸ் தலைவரால் நடத்தப் பெற்றது. இதனைப் பெரியார் கண்டித்து எதிர்தத பின்னரும், குருகுலத்தில் நடைபெறும் சாதிப்பாகுபாட்டை காங்கிரஸ் தொடர்ந்து ஆதரித்ததால் மனமுடைந்தார்.

சட்டசபை போன்ற பிரதிநிதித்துவ அமைப்புகளில் பிராமணர் அல்லாதவர்களுக்கு இட ஒதுக்கீடு அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்பதில் பெரியார் முனைப்புடன் இருந்தார். இது தொடர்பான ஒரு தீர்மானத்தை 1925 இல் காஞ்சிபுரத்தில் நடைபெற்ற காங்கிரஸ் குழுவின் வருடாந்திர மாநாட்டில் நிறைவேற்ற முயற்சி செய்து தோல்வியடைந்தார். இது போன்ற பிரச்சனைகளால் 1925 இல் காங்கிரசை விட்டு வெளியேறினார். அந்த ஏமாற்றத்தைத் தொடர்ந்து, பெரியார் 1925இல் சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்கினார்.

பகுத்தறிவுக் கருத்துகளை மக்களிடையே பரப்புவதில் மக்கள் தொடர்புச் சாதனங்களின் முக்கியத்துவத்தைப் பெரியார் புரிந்து கொண்டார். குடியரசு (1925), ரிவோல்ட் (1928), புரட்சி (1933), பகுத்தறிவு (1934), விடுதலை (1935) போன்ற பல செய்தித்தாள்களையும் இதழ்களையும் பெரியார் தொடங்கினார். சுயமரியாதை இயக்கத்தின் அதிகாரபூர்வ செய்தித்தாள் குடி அரசு ஆகும். பிராமணரல்லாதோர், பெண்கள், சமயத்தில் சிறுபான்மையினர் ஆகியோரின் எண்ணங்களை அது வெளிக்கொணர்ந்தது, ஒவ்வொரு இதழிலும் சமூகம் பிச்சனைகள் தொடர்பான தனது கருத்துகளைப் பெரியார் வழக்கமான கட்டுரையாக எழுதினார். அவ்வப்போது சித்திரபுத்திரன் எனும் புனைப் பெயரில் கட்டுரைகளை எழுதினார்.

காலவோட்டத்தின் ஊடாகப் பெரியார் பல நாடுகளுக்குச் சென்றார். அந்நாடுகளைச் சேர்ந்த அறிவார்ந்த மக்களோடு உரையாடினார். சிங்கப்பூர், மலேசியா (1929-30, 1954) எகிப்து, சோவியத் ரஷ்ய குடியரசு (தற்போதைய ரஷ்யா), கிரீஸ், துருக்கி, ஜெர்மனி, இங்கிலாந்து, ஸ்பெயின், பிரான்ஸ் மற்றும் போர்த்துகல் (1931-1932) மற்றும் பர்மா (1954 இல் நடைபெற்ற புத்தரின் 2500 வது பிறந்த நாள் விழாவில் கலந்து கொள்ளச் சென்றார்) ஆகிய நாடுகளுக்குச் சென்று வந்தார். சோவியத் ரஷ்யாவிலும் ஐரோப்பாவிலும் அவர் பெற்ற பயண அனுபவங்கள் அவரை சமதர்மக் கருத்துக்களின்பால் நாட்டம்கொள்ள வைத்தன. பௌத்த சமய முன்னோடியும், தென்னிந்தியாவின் முதல் பொதுவுடைமைவாதியுமான சிங்காரவேலருடன் நெருக்கமான உறவு கொண்டிருந்தார். B.R.அம்பேத்கர் எழுதிய சாதி ஒழிப்பு (Annihilation of caste) எனும் நூலை, அந்நூல் வெளிவந்தவுடன் 1936இல் தமிழில் பதிப்பித்தார். B.R.அம்பேத்கர் அவர்களின் ஒடுக்கப்பட்ட மக்களுக்கான தனித்தேர்தல் தொகுதிக் கோரிக்கையை பெரியாரும் ஆதரித்தார்.

1937இல் ராஜாஜியின் தலைமையிலான அரசின் செயல்பாட்டினை எதிர்க்கும் விதமாக, பள்ளிகளில் இந்தியைக் கட்டாயப் பாடமாக அறிமுகம் செய்ததற்கு எதிராகப் பெரியார் மக்கள் செல்வாக்கு பெற்ற இயக்கத்தை நடத்தினார். இந்தி எதிர்ப்புப் போராட்டமானது (1937-1939) தமிழ்நாட்டு அரசியலில் மிக பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இந்தப் போராட்டத்துக்காக பெரியார் சிறையில் அடைக்கப்பட்டார். பெரியார் சிறையில் இருந்தபோதே நீதிக்கட்சியின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். இதன் பின்னர் நீதிக்கட்சி சுயமரியாதை இயக்கத்துடன் இணைந்தது. அதற்கு 1944இல் திராவிடர் கழகம் (திக) எனப் புதுப்பெயர் சூட்டப்பெற்றது.

சென்னை மாநிலத்தின் முதலமைச்சராக இருந்த ராஜாஜி (1952-54) பள்ளிக் குழந்தைகளுக்கு அறிமுகப்படுத்திய தொழில் கல்வி பயிற்சித் திட்டமானது, மாணவர்களுக்கு அவர்களின் தந்தையர்கள் செய்து வந்த தொழில்களில் பயிற்சியளிப்பதாக அமைந்தது. இதை குலக்கலிவத் திட்டம் (சாதியை அடிப்படையாகக் கொண்ட கல்வி முறை) என விமர்சித்த பெரியார் இத்திட்டத்தை முழுமையாக எதிர்த்தார். இதற்கு எதிராக பெரியார் மேற்கொண்ட போராட்டங்கள் ராஜாஜியின் பதவி விலகலுக்கு இட்டுச் சென்றது. கு.காமராஜ் சென்னை மாநிலத்தின் முதலமைச்சரானார். பெரியார் தன்னுடைய தொன்னூற்று நான்காவது வயதில் (1973) இயற்கை எய்தினார். அவரது உடல் சென்னையில் பெரியார் திடலில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

**பெரியாரின் இந்தி எதிர்ப்பு நிலைப்பாடு:**

தென்னிந்தியாவிலுள்ள சாதிமுறையானது வடஇந்தியப் பிராமணர்களின் வருகையோடு தொடர்புடையது என பெரியார் வலியுறுத்தினார். பண்டையத் தமிழ்ச் சமூகம் திணைகளை (நிலப்பகுதிகள்) அடிப்படையாகக் கொண்ட வேறுவகைப்பட்ட அடுக்கமைவைக் கொண்டிருந்ததாக அவர் கூறினார். அம்முறை சுற்றுச்சூழல், வாழ்வாதாரத்திற்கான வழிகள், மக்கள் மேற்கொண்ட தொழில் ஆகியவற்றால் தீர்மானிக்கப்பட்டிருந்தது என்றும் கூறினர். வட இந்திய எதிர்ப்பானது பெரியாரை இந்தி எதிர்ப்பு நிலைபாட்டை மேற்கொள்ள வைத்தது.

**சமயம் குறித்து பெரியார்:**

முன்னேற்றமும் நீதியும் வழங்கப்பட வேண்டுமாயின் சமயம் ஒழிக்கப்பட வேண்டியதன் தேவையைப் பெரியாரின் அனுபவங்கள் அவருக்குக் கற்றுக் கொடுத்தன. ஏற்கனவே நிறுவப்பட்டிருந்த நடைமுறைகளான, நம்பிக்கை பண்பாடு, மரவு போன்றவற்றை கட்டுடைப்பதற்குப் பெரியார் நாத்திகவாதத்தை (கடவுள் மறுப்பு) முன் வைத்தார். சமயததின் இடத்தில் பகுத்தறிவு வைக்கப்பட வேண்டுமென்றார். ‘‘சமயம் என்றால் நீங்கள் மூட நம்பிக்கைகளை எற்றுக் கொள்கிறீர்கள் என்று பொருள்’’ என உறுதிபடக் கூறினார். பெரியார் தன் வாழ்நாள் முழுவதையும் தான் நிறுவிய சிந்தனையாளர் அல்லது பகுத்தறிவாளர்கள் அமைப்புகள் மூலமாக மூடநம்பிக்கைகளுக்கு எதிராகப் பரப்புரை செய்வதில் செலவழித்தார். கோவில்களில் நிலவிய பரம்பரை அர்ச்சகர்கள் முறையை அவர் எதிர்த்தார். சாதி அடிப்படையில் இல்லாமல், முறையான சமய அறிவைப் பெற்றுள்ள தகுதியுடைய தனி நபர்களும் அர்ச்சகர் ஆகலாம் என அவர் வாதிட்டார். பிராமண அர்ச்சகர்களையும் வேதச் சடங்குகளையும் புறக்கணிக்கும்படி அவர் மக்களை ஊக்குவித்தார். சடங்குகளற்ற சாதிமறுப்பு, சுயமரியாதை திருமணங்களைப் பரிந்துரைத்தார்.

**பெரியார், ஒரு பெண்ணியவாதி:**

பெரியார் ஆணாதிக்க சமூகத்தை விமர்சித்தார். குழந்தைத் திருமணத்தையும் தேவதாசி முறையையும் கண்டனம் செய்தார். 1929 முமதல் சுயமரியாதை மாநாடுகளில், பெண்களின் மோசமான நிலை குறித்து குரல் கொடுக்கத் தொடங்கியதிலிருந்து, பெண்களுக்கு விவாகரத்து பெறுவதற்கம் சொத்தில் பங்கு பெறுவதற்கும் உரிமை உண்டு என ஆணித்தரமாக வலியுறுத்தினார். ‘‘திருமணம் செய்து கொடுப்பது’’ எனும் வார்த்தைகளை மறுத்த அவர் அவை பெண்களைப் பொருட்களாக நடத்துகின்றன என்றார். அவைகளுக்கு மாற்றாக திருக்குறளில் இருந்து எடுக்கப்பட்ட வாழ்க்கைத் துணை என்ற வார்த்தையைப் பயன்படுத்த வேண்டினார். பெண்ணியம் குறித்து பெரியார் எழுதிய மிக முக்கியமான நூல் பெண் ஏன் அடிமையாளாள்? என்பதாகும்.

பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கப்படுவது அவர்களுக்குச் சமூகத்தில் நன்மதிப்பையும், பாதுகாப்பையும் வழங்கும் என பெரியார் நம்பினார். சொத்துக்கள், பாதுகாவலர்களாக இருத்தல், மற்றும் தத்தெடுத்தல் ஆகியவற்றில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம உரிமை வேண்டுமென்றார். குடும்பக் கட்டுப்பாடு, கருத்தடை ஆகியவற்றை வலுவாக ஆதரித்த அவர் தாய்மை என்பது பெண்ணுக்கு பெருஞ்சுமையாக உள்ளது என்றார்.

1989 இல் தமிழக அரசு, மாற்றங்களை விரும்பிய சீர்த்திருத்தவாதிகளின் கனவை நனவாக்கும் வகையில் 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து வாரிசுரிமைச் சீர்திருத்தச் சட்டத்தை அறிமுகம் செய்தது. அச்சட்டம் முன்னோர்களின் சொத்துக்களை உடைமையாகப் பெறுவதில் பெண்களுக்குச் சமஉரிமை உண்டென்பதை உறுதிப்படுத்தியது. முன்மாதிரியாக அமைந்த இந்தச்சட்டம் தேசயி அளவிலும் இது போன்ற சட்டங்கள் இயற்றப்படுவதற்கு அடிப்படையாக அமைந்தது.

**இரட்டைமலை சீனிவாசன்:**

இரட்டைமலை சீனிவாசன் (1859-1945) தாத்தா எனப் பரவலாக அறியப்பட்ட இவர் 1859 ஆம் ஆண்டு காஞ்சிபுரத்தில் பிறந்தார். சாதிப்படிநிலைகளில் ஒடுக்கப்பட்ட மக்களின் சமூக நீதி, சமத்துவம், சமூக உரிமைகள் ஆகியவற்றுக்காகப் போராடினார். அவருடைய தன்னலமற்ற

சேவைக்காக ராவ்சாகிப் (1926), ராவ் பகதூர் (1930), திவான் பகதூர் (1936) ஆகிய பட்டங்களால் அவர் சிறப்புப் செய்யப்பட்டார். அவரது சுயசரிதையான ஜீவிய சரித சுருக்கம் 1939இல் வெளியிடப்பட்டது. இந்நூல் முதன்முதலாக எழுதப்பெற்ற சுயசரிதை நூல்களில் ஒன்றாகும்.

தீண்டாமையின் கொடுமைகளை அனுபவித்த இரட்டைமலை சீனிவாசன் உரிமைகள் மறுக்கப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காக உழைத்தார். 1893 இல் ஆதிதிராவிட மகாஜன சபை எனும் அமைப்பை உருவாக்கினார். ஒடுக்கப்பட்ட மக்களின் கூட்டமைப்பு மற்றும் சென்னை மாகாண ஒடுக்கப்பட்ட வகுப்பாரின் கூட்டமைப்பு ஆகிய அமைப்புகளின் தலைவராகப் பணியாற்றினார். ஒடுக்கப்பட்ட மக்களோடு தொடர்புடைய கேள்விகள், பிரச்சனைகள் குறித்து இந்திய தேசியக் காங்கிரஸ் மற்றும் நீதிக்கட்சி தலைவர்களுடன் தொடர்ந்து விவாதித்தார். தென்னாப்பிரிக்காவில் காந்தியடிகளைச் சந்தித்த இரட்டைமலை சீனிவாசன் அவருடன் நெருக்கமானார். 1923இல் சென்னை மாகாண சட்டசபை உறுப்பினரான அவர் நீதிக்கட்சியில் தனது செல்வாக்கினை ஏற்படுத்தி ஒடுக்கப்பட்ட, உரிமைகள் மறுக்கப்பட்ட சமூகப் பிரிவுகளைச் சேர்ந்த மக்களின் உரிமைகளையும் பாதுகாக்க உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளச் செய்தார்.

B.R.அம்பேத்காரின் நெருக்கமானவரான அவர், லண்டனில் (1930 மற்றும் 1931) நடைபெற்ற முதல், இரண்டாம் வட்டமேஜை மாநாடுகளில் கலந்து கொண்டு சமூகத்தின் விளிம்புநிலை மக்களின் கருத்துக்களுக்காகக் குரல் கொடுத்தார். 1932இல் செய்துகொள்ளப்பட்ட பூனா ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டவர்களுள் அவரும் ஒருவர்.

**மயிலை சின்னதம்பி ராஜா:**

மயிலை சின்னதம்பி ராஜா (1883-1943) மக்களால் எம்.சி.ராஜா என அழைக்கப்பட்ட அவர் ஒடுக்கப்பட்ட வகுப்பைச் சேர்ந்த தலைவர்களில் முக்கியமானவர். ஒரு ஆசிரியராகத் தனது பணியைத் தொடங்கிய அவர் பள்ளிகள், கல்லூரிகள் ஆகியவற்றுக்கான பல்வேறு பாடப்புத்தகங்களை எழுதினார். தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தை (நீதிக்கட்சி) உருவாக்கியவர்களில் ஒருவராவார். சென்னை மாகாணத்தில் ஒடுக்கப்பட்ட வகுப்பிலிருந்து சட்டமேலவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் உறுப்பினராவார் (1920-1926). சென்னை சட்ட சபையில் நீதிக்கட்சியின் துணைத் தலைவராகச் செயல்பட்டார்.

பின்னாளில் அவர் நீதிக்கட்சியிலிருந்து விலகினார். தீண்டாமை ஒழிக்கப்பட வேண்டும் எனக்கோரிய அவர் பொது நீர்நிலைகள், பாதைகள் முதல் இடுகாடுகள் வரைப் பயன்படுத்தும் எரிமை ஒடுக்கப்பட்ட பிரிவுகளைச் சேர்ந்தோருக்கும் வேண்டுமெனக் கோரி பல பொதுக் கூட்டங்களையும் மாநாடுகளையும் நடத்தினார். மேலும் ஆதிதிராவிடர், ஆதிஆந்திரர் எனும் வார்த்தைகளைப் பயன்படுத்துமாறு பரிந்துரைத்தார். 1928இல் அகில இந்திய ஒடுக்கப்பட்டோர் சங்கம் எனும் அமைப்பை உருவாக்கி அதன் தலைவராக நீண்டகாலம் பணியாற்றினார். தொடக்கத்தில் தனித்தேர்தல் தொகுதி வேண்டுமெனக் கோரிய அவர் பூனா உடன்படிக்கைக்குப் பின்னர் அந்நிலைப்பாட்டினை மாற்றிக்கொண்டு கூட்டுத்தொகுதி முறையை ஆதரித்தார்.

**தமிழ்நாட்டில் தொழிலாளர் இயக்கங்கள்:**

இந்தியாவில் தொழில்கள் வளர முதல் உலகப்போர் (1914-1918) உத்வேகம் அளித்தது. போர்க்காலத்தேவைகளை நிறைவு செய்துவந்த இத்தொழிற்சாலைகள் மிக அதிக எண்ணிக்கையில் தொழிலாளர்களைப் பணியில் அமர்த்தியிருந்தன. போர் முடிவடைந்ததால் போர்காலத் தேவைகளும் குறைந்தன. எனவே, அனைத்து தொழிற்சாலைகளிலும் ஆட்குறைப்பு செய்யப்பட்டன. இத்துடன் ஏற்பட்ட விலைவாசி ஏற்றமும் தொழிலாளர் இயக்கங்கள் தோன்றுவதற்கு உந்து சக்தியாக அமைந்தன. அணி திரட்டப்பட்டத் தொழிலாளர்களின் பலத்தை உணர்ந்திருந்த தேசியவாதிகள் தொழிலாளர்களின் கோரிக்கைகளுக்கு ஆதரவு நல்கத் தொடங்கினார். சென்னை மாகாணத்தில் பி.பி.வாடியா, ம.சிங்காரவேலர், திரு.வி.கல்யாணசுந்தரம் போன்றவர்கள் தொழிலாளர் சங்கங்களை அமைப்பதில் முன்முயற்சி மேற்கொண்டனர். 1918இல் இந்தியாவின் முதல் தொழில் சங்கமான சென்னை தொழிலாளர் சங்கம் (Madras Labour Union) உருவாக்கப்பட்டது.

அகில இந்திய தொழிலாளர் சங்கத்தின் முதல் மாநாடு 1920 அக்டோபர் 31இல் பம்பாயில் நடைபெற்றது. பல தீர்மானங்கள் குறித்து பிரதிநிதிகள் விவாதித்தனர். தொழிலாளர்களின் பிரச்சனைகளில் காவல்துறை தலையிடுவதிலிருந்து பாதுகாப்பு, வேலையில்லாதவர்களுக்கென ஒரு பதிவேட்டைப் பராமரித்தல், உணவுப் பண்டங்களின் ஏற்றுமதி மீதான கட்டுப்பாடு, காயமடைந்தோர்க்கு ஈட்டுத்தொகை மற்றும் உடல்நலக் காப்பீடு ஆகியவை இவற்றில் அடங்கும். இவைகளைத் தவிர தொழில் முதலாளிகளுக்கு சட்டமன்றத்தில் பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டிருப்பது போல தொழிலாளர்களுக்கும் அரசாங்கத்தில் பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டுமெனப் பிரதிநிதிகள் கோரினர்.

சென்னை மாகாண தொழிலாளர் இயக்க நடவடிக்கைகளில் ஒரு முன்னோடியாகத் திகழ்ந்தவர் ம.சிங்காரவேலர் (1860-1946) ஆவார். சென்னையில் பிறந்த அவர் சென்னைப் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த மாநிலக் கல்லூரியில் பயின்று பட்டம் பெற்றார். இளமைக் காலத்தில் பௌத்தத்தைப் பரிந்துரை செய்தார். அவர் தமிழ், ஆங்கிலம், உருது, இந்தி, ஜெர்மன், பிரெஞ்சு மற்றும் ரஷ்யன் என பலமொழிகள் அறிந்திருந்ததோடு காரல் மார்க்ஸ், சார்லஸ் டார்வின், ஹெர்பர்ட் ஸ்பென்சர், ஆல்பர்ட் ஐன்ஸ்டின் ஆகியோரின் கருத்துக்களைத் தமிழில் வடித்தவர். 1923இல் முதல் முதலாக மே தின விழாவை ஏற்பாடு செய்தவரும் அவரே. அவர் இந்திய பொதுவுடைமை (கம்யூனிஸ்ட்) கட்சியின் ஆரம்பகால தலைவர்களில் ஒருவராக இருந்தார். தொழிலாளி வர்க்கத்தின் பிரச்சனைகளை வெளிப்படுத்துவதற்காக தொழிலாளன் (Worker) என்ற பத்திரிக்கையை வெளியிட்டார். பெரியாரோடும் சுயமரியாதை இயக்கத்தோடும் நெருக்கமாக இருந்தார்.

**இந்திய விடுதலைக்கு முன்பு மொழிப் போராட்டம்:**

பொதுவாக, மொழி என்பது அடையாளத்தின் வலிமையான குறியீடாகும், மேலும் இது ஒரு சமூகத்தின் பண்பாடு மற்றும் உணர்வுகளுடன் இயைந்து நிற்பது. தமிழ்மொழி பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பாதியிலும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் தனது மேன்மையை மீட்டுப் பெற்றது. மறைமலை அடிகளின் தனித்தமிழ் இயக்கம், பெரியாரின் மொழிச் சீர்திருத்தம் மற்றும் தமிழிசை இயக்கம் ஆகியவை தமிழுக்கு வலுச்சேர்ந்தன. திராவிட உணர்வுக்கு இட்டுச் சென்ற தமிழ் மறுமலர்ச்சி நவீனத் தமிழ் மொழியின் வளர்ச்சியிலும் அதன் கலை வடிவங்களுகடைய வளர்ச்சியிலும் பெரும் பங்களிப்பைச் செய்தது. ஆகம கோவில்களில் செய்யப்படும் சடங்குகள் தமிழில் செய்யப்படுவதில்லை. இசை நிகழ்ச்சிகளிலும் தமிழ் பாடல்கள் ஓரளவிலான இடத்தையே பெற்றிருந்தன. ஆபிரகாம் பண்டிதர் தமிழ் இசை வரலாற்றை முறையாகக் கற்றாய்ந்து, பழந்தமிழர் இசை முறையை மீட்டுருவாக்கம் செய்ய முயன்றார். 1912இல் தஞ்சாவூர் ‘சங்கீத வித்யா மகாஜன சங்கம்’ என்ற அமைப்பை ஏற்படுத்தினார். அதுவே தமிழிசை இயக்கத்தின் கருமூலமானது. இசை நிகழ்வுகளில் தமிழில் பாடல்கள் பாடப்படுவதற்கு இவ்வியக்கம் முக்கியத்துவம் வழங்கியது. தமிழிசையின் நிலை குறித்து விவாதிக்க 1943-இல் முதல் தமிழிசை மாநாடு நடத்தப்பட்டது.

தமிழ்நாட்டில் வெவ்வேறு காலப்பகுதிகளில் இந்தி கட்டாயமொழியாக நடைமுறைப்படுத்தப்பட்டது. தமிழ்மொழிக்கும், பண்பாட்டிற்குமான அச்சுறுத்தலாகவே கருதப்பட்டது. சென்னை மாகாணத்தின் முதலமைச்சராக இருந்த ராஜாஜி இந்தி மொழியைப் பள்ளிகளில் கட்டாயப் பாடமாக அறிமுகம் செய்தார். இது சென்னை மாகாணத்தில் கடுமையான எதிர்ப்பை உருவாக்கியது. தமிழுக்கு மேலாக இந்தியை அறிமுகம் செய்வது திராவிடர்களுக்கான வேலைவாய்ப்புகளை மறுப்பதாக அமையுமென பெரியார் அறிவித்தார். இந்திமொழி அறிமுகம் செய்யப்பட்டால் தமிழ்மொழி பாதிப்புக்குள்ளாகும் என மறைமலை அடிகள் சுட்டிக் காட்டினார். இந்தி எதிர்ப்பு இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் தங்கள் போராட்டத்தை பிராமணியத்திற்கும் தமிழின் மீதான சமஸ்கிருதத்தின் ஆதிக்கத்திற்கும் எதிரான கருத்தியல் போராகவே கருதினார். பிராமணியத் தத்துவத்தைப் பரப்புவதற்கும் அதன்மூலம் சாதிப்படிநிலைகளையும், பாலின சமத்துவமின்மையையும் பாதுகாப்பதற்குமான வாகனமே சமஸ்கிருதம் என அவர்கள் கருதினர். போராட்டத்தின்போது பெருவாரியான மக்கள் கலந்துகொண்ட பொதுக்கூட்டங்களும், பேரணிகளும், உண்ணாவிரதங்களும் அரங்கேறின. பல்லாயிரக்கணக்கான மக்கள் இப்போராட்டங்களில் பங்கேற்றனர்.

**பெண்கள் இயக்கங்கள்:**

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சென்னை மாகாணத்தில் பெண்களை வலிமையுள்ளவர்களாக மாற்றுதல் எனும் நோக்கத்துடன் பல பெண்ணிய இயக்கங்கள் நிறுவப்பெற்றன. அவைகளுள் தமிழ் நாட்டில் உருவான இந்தியப் பெண்கள் சங்கம் (Women's India Association – WIA) அகில இந்தியப் பெண்கள் மாநாடு (All India Women's Conference – ALWC) ஆகியவை முக்கியமானவையாகும். இந்தியப் பெண்கள் சங்கம் (WIA) என்பது 1917இல் அன்னிபெசன்ட், டோரதி ஜினராஜதாசா, மார்கரெட் கசின்ஸ் ஆகியோர்களால் சென்னை அடையாறு பகுதியில் தொடங்கப்பெற்றது. இவ்வமைப்பு தனிநபர் சுகாதாரம், திருமணச் சட்டங்கள், வாக்குரிமை, குழந்தை வளர்ப்பு மற்றும் பொது வாழ்வில் பெண்களின் பங்கு ஆகியவை குறித்து பல்வேறு மொழிகளில் துண்டுப்பிரசுரங்களையும்ட செய்தி மடல்களையும் வெளியிட்டன. இதே சமயத்தில் இந்தியப் பெண்கள் சங்கம், பெண்கல்வி குறித்த பிரச்சனைகளைக் கையாள்வதற்காக 1927இல் அகில இந்திய பெண்கள் மாநாட்டை நிறுவியது. மேலும் அரசு பெண்களின் மேம்பாட்டிற்காகப் பல கொள்கைகளை நடைமுறைப்படுத்த வேண்டுமெனப் பரிந்துரை செய்தது.

பெண்களின் விடுதலை என்பது சுயமரியாதை இயக்கத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும். பெரியாரின் தலைமையிலான சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்தோர், பாலின சமத்துவம் மற்றும் பாலினம் குறித்த சமூகத்தின் உணர்வுகளை மேம்படுத்துதல் ஆகியவற்றுக்காகப் பணியாற்றினர். தங்களுடைய கருத்துகளைப் பங்கிட்டு கொள்வதற்கான ஒரு இடத்தை பெண்களுக்கு இவ்வியக்கம் ஏற்படுத்திக் கொடுத்தது. இவ்வியக்கத்தில் தீவிரமாகப் பணியாற்றிய பெண்கள் பலர் இருந்தனர். முத்துலட்சுமி அம்மையார், நாகம்மை, கண்ணம்மா, நீலாவதி, மூவலூர் இராமாமிர்தம், ருக்மணி அம்மாள், அலமேலு மங்கை தாயாரம்மாள், நீலாம்பிகை மற்றும் சிவகாமி சிதம்பரனார் ஆகியோர் அவர்களுள் முக்கியமானவர்கள் ஆவர்.

கடவுளுக்கு இறைப்பணி செய்யும் சேவகர்களாக இளம் பெண்களை இந்து கோவில்களுக்கு அர்ப்பணிக்கும் வழக்கம் இருந்தது அவ்வாறு அர்ப்பணிக்கப்பட்டோர் தேவதாசி என்று அறியப்பட்டனர். கடவுளுக்குச் செய்யப்படும் சேவை எனும் நோக்கில் அமைந்திருந்தாலும் நாளடைவில் இம்முறை பெரும் ஒழுக்கக்கோட்டிற்கும் பெண்களைத் தவறாகப் பயன்படுத்துவதற்கும் இட்டுச்சென்றது. இத்தேவதாசி முறையை ஒழிப்பதற்காகச் சட்டம் இயற்றப்பட வேண்டும் என்பதற்காக நடைபெற்ற இயக்கத்தில் டாக்டர்.முத்துலட்சுமி அம்மையார் முதலிடம் வகித்தார். மதராஸ் (அர்பணிப்பைத் தடுத்தல்) தேவதாசி சட்டம் 1947 எனும் சட்டம் அரசால் இயற்றப்பட்டது.